Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை



Acc. No. 46466

"தமிழ் வேத நாவலர்", "வைத்தியமணி"

சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை

(மூலமும் – உரையும்)

திருமகள் பதிகம் - ஞானசரஸ்வதி பதிகம்



KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46466

இஃது கனடா **டாக்டர் சித. ஏகப்பன் செட்டியார்** அவர்கள்
ஆர்வத்தினுலும் பேரன்பினுலும்

தேவகோட்டை
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி, வ.பெரி.மு. தெரு,
தேவகோட்டை - 630 302.

இந்நூல் ஆசிரியர்
"தமிழ் வேத நாவலர்"
"வைத்தியமணி"
சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
முத்தமிழ் வேதத் திருச்சபை
தேவகோட்டை

Koviloor Digital Library

நூலின் பெயர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த
திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை (மூலமும் - உரையும்)
திருமகள் பதிகம் - ஞானசரஸ்வதி பதிகம்

முதற்பதிப்பு : விய ஆண்டு (2006) மார்கழி மாதம்

நூலாசிரியர் : சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை

உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.

பக்கங்கள் :

வெளியீடு : முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.

தாள் : 21.3 கிலோ மேப்லித்தோ

நூலின் அளவு : டெமி 1/2

விலை : ரூ. 400 (ரூ. ச/ π)

எழுத்து : 14 புள்ளி

பைண்டிங் : லெட்ச்சர் பைண்டிங்

கிடைக்குமிடம் : Dr. SV. முருகேஷ் R.I.M.P.A.M.I.H.
முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர்
சித்த மருத்துவம்
கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை.

இராம. ஆதிரெத்தினம்
இணைச் செயலாளர், முத்தமிழ் வேதத் திருச்சபை
19, ரெகுநாதபுரம் மேற்கு, தேவகோட்டை.
போன் : 9486361107, 04561 - 270113

உபமன்னியன் நூலகம்
105/A1, கண்டதேவி ரோடு
தேவகோட்டை - 630 302.
போன் : 95+4561+309924

கணினி & அச்சு அமைப்பு : **ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்**
தேவகோட்டை - 630 302
போன் : 9361410269
email : swamirajbal@yahoo.com

Koviloor Digital Library

எம் ஞானத் தெளிவு குரு சிறுவயது முதல் இயம நியம நெறியில் நின்றதனல் திருவருள் கூட்டுவிக்க வாசிக்கலை பயின்று அக்கலையின் விளைவால் அமிர்தம் அருந்தி அதன் விளைவால் தன்னகத்தே தோன்றும் அகத்தீயை ஆராய்ந்து தெளிந்து அதன் மூலம் நூல்களை செய்துள்ளார்கள். அவர்கள் ஆக்கிய நூல்கள்

1. அகத்தியம்
2. உயிர்நிலைக் கலை இலக்கணம்
3. முத்திநெறி இலக்கணம்
4. கரண இலக்கணம்
5. பண்ணிலக்கணச் சூக்கம்
6. இலக்கிய இராமாயணம்
7. இரத்தினச் சுருக்க இராமாயணம்
8. திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்
9. திருமூலரின் சூனிய சம்பாதனை (உரை விளக்கம்)
10. திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை
11. திருமகள் திருப்பதிகம்
12. கலைஞானம்
13. இலிங்கபுராணம்
14. ஞான சரஸ்வதி பதிகம்
15. வைத்திய சாஸ்திரம்
16. திருஞானசம்பந்தர் திரு அவதாரச் சிறப்பின் விளக்கம்.
17. திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த இரண்டாம் திருமுறை பொருள் விளக்கம். பூர்வ மீமாம்சை. உத்தர மீமாம்சை.

கலியுகத்தில் கருணை கூர்ந்து நம் உயிருக்கு துணையான நூல்களை தந்திருக்கிருர்கள். நம் உயிர்த்தீயை இயக்கி ஒலி மூலம் ஒளியை உண்டாக்க அதன் மூலம் முத்தி அடைய ஆக்கிய நூல்கள். முதற்பொருளாகிய இறைவனுடைய கலையின் மூலம் ஆக்கியதால் இந்நூல்களுக்கு எல்லாம் அகவுரையாகவும் சாட்சியாகவும் அவனே இருப்பதால் கலியின் கொடுமை தீர ஒவ்வொரு நூலாக வெளி வந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் மிகவும் கருணை உள்ளம் கொண்டு முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் முத்தமிழ் வேதத் திருச்சபை நிறுவி பௌர்ணமி தோறும் திருமுறைப் பெருநூல் விளக்கமும் ஞாயிறு தோறும் இலக்கிய இராமாயணத்தையும் இயம்பி செவிக்கு பனிரெண்டு ஆண்டுகள் விருந்து படைத்தருளினுர்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் காட்டியருளிய நெறி வழியே 29 ஆவது ஆண்டு நிறைவை நோக்கி சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. முத்தி தரும் தெய்வ சபையைக் காண்பதற்கு சேரவாரும் செகத்தீரே என அன்போடு தெளிவு குருவின் ஆசியோடு அழைக்கின்ருேம்.

Koviloor Digital Library

அரி ஓம் நன்றுக குரு

முன்

ஓங்காரத்தின் உட்பொருளை ஓதி உணர்ந்த எம் ஞானத் தெளிவு குருவின் திருவடி என் உச்சிமேற் கொண்டு திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறைக்கு முன்னுரை எழுதுவோமாக.

தவமுதல்வர் திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத்திற்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு பிறகு சிவபுண்ணிய சீல மெய்யன்பர்களுக்காக இறைவன் கருணை காட்டி எம் ஞானத்தெளிவு குருவாகிய சித.வே. ஷண்முகநாத பிள்ளை அவர்களை தேவகோட்டையில் பிறப்பித்து எழுந்து நீர் பெய்யினும் எட்டுத் திசையும் செழுந்த நியமங்கள் செய்வித்து அவர்கள் மூலம் இக்கலியுகத்தின் கொடுமை தீரவும் சைவமும் தமிழும் தழைத்தோங்கவும் அருளிய நூல் தான் திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை.

திருமுறைப் பெருநூல் விளக்கத்தை திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீஸ்வரர் முன்னிலையில் அரங்கேற்றும் சமயம் திருஞான சம்பந்தப் பெருமான் அசரீரியாக ஆசீர்வாதம் அருளியதை அன்று இருந்த சிவபுண்ணியசீல மெய்யன்பர்கள் அனைவரும் அறிவார்கள். அவர்கள் அடைந்த அறம் பொருள் இன்பம் வீடுபேறுகிய பேரின்பத்தை யாவரும் அடைய இந்நூல் வெளிவர இறையருளும் குருவருளும் சாத்வீக குணம் படைத்த சிவனடியார் சிதம்பரம் செட்டியார் மகன் கனடாவில் வசிக்கும் உள்ளதை உள்ளபடி உரைக்கும் உத்தமர் சிவபுண்ணிய சீல மெய்யன்பர் சிரஞ்சீவி சித. ஏகப்பன் அவர்களுக்கு கூட்டுவிக்க இந்நூல் வெளிவருகிறது.

திருமுறைப்பெருநூல் இலக்கண விளக்கத்தில் திருமுறைக் குழுக்குறி விளக்க பஞ்சரத்திர வைகாநேய ஆகமமறை நுதலிப் புகுதலில் அடங்கலுந் தன்னுள்ளடக்கி யடங்கும் இயல்புள நாதத்தியைந்து விளங்க அமைதிருமுறையே அடங்கன்முறை என்றும் அம்பரம் என்னும் அகண்ட வெளியில் விளங்கும் சித்தெனும் விந்துவை நாதம் என்னுஞ் சத்தி இயைந்த நோக்க அச்சித்தம்பரத்தில் திருநடம் செய்யும் அசைவாற் பிறக்கும் ஆரவாரம் அத்தெய்வ ஆர வாரமே தேவாரம் என்றும் சத்து சித்து அனந்த நடனமாய சிற்றம்பலம் தான் எழுதாக்கிளவி எனும் முதன்மறையாக சுழல ஆரம்பிக்கின்றது என்கிறார்கள். சுழல ஆரம்பிக்கும் சுருதி உள்நாதமாய் சித்தத்தில் நடஞ் செய்யும் தேவாரமாய் இறையருட் குருவாய் இயைந்து கைகாட்டும் உபதசமான ஊமை எழுத்து என்றும், அகர உகரமாகிய லிங்கம் என்றும், எட்டும் இரண்டும் எனும் அத்துவிதம் என்றும், அண்டம் பிண்டம் அகண்ட சராசரத் தாதியும் அந்தமும் ஆகிய ஒன்ரும் இருசெனச் சித்துடன் இயைந்து சித்தர்கள் இருடிகள் பதந்தர ஏற்ற மோனம் சிதம்பர ரகசியம் திருச்சிற்றம்லம் என்கிறார்கள். சிற்றம்பலத்திற் திருநடம் செய்யும் பதத்தாற்றுலங்கும் பசுவிற்கு ஆதியும் அந்தமுமாக அமையும் சிற்றம்பலம். இவ்வாறு உள்நாதமாய் சித்துடன் இயைந்து அந்தமும் ஆதியும் ஆகி நின்ற பதியின் நடனம் பாசத்தியைந்த பசுவெளி முகமாய் பார்க்கும் காலை ஐவகை வேற்றுமையாகித் தோன்றும். அந்த ஐவகை வேற்றுமை என்பது செவி, கண், வாய், மூக்கு இந்த நான்கும், இந்த நான்கையும் சுமந்து இருக்கின்ற மெய் ஆகிய உடல் ஐந்து. ஐவகை வேற்றுமையாக இருந்தாலும் அதற்கு ஓர் தனிச்சிறப்பு உண்டு. அச்சிறப்புத் தான் தன்மை என்றும் அடுக்கு என்றும் கூறப்பெறும் பண்ணுகும். வேற்றுமை ஐந்தாக இருப்பதால் தான் வேதம் நான்கும் வேதாந்தம் ஒன்றும் ஆகிய ஐந்தாய் அமைவு பெறுகிறது. ஆகவே வேத வேதாந்தமாகிய பண் என்ற தனிச்சிறப்பைப் பெற்று பஞ்சபீடத்திற் பதிசெய் நடனப் பதச் சுவடானது பதிந்து தோன்ற எழுந்த எழுத்து ஏழேழிரண்டெனும் நாத ஒலியையும் நாதவிரியாம் ஐம்பத்தொன்றையும் அகத்தியம் ஆக்கும் ஐந்தாய் அஃதடங்கும் (ஃ) அக்கரம் ஒன்ருய் விந்தொலியாக விளங்கு தமிழையும் உடம்பாய்க் கொள்ளும் ஆரியத்தையும் எழுத்து முதல் பண்தார் ஈருக பிறக்கும் ஒன்பது பிறப்பை உடைய ஒன்ருய் மாலெனும் பசு

Koviloor Digital Library

னுரை

உருவாகித் தோன்றும். மாலெனும் பசு உருவாய பண்தோற்றத் திறத்திற் பண்ணவர் செனிக்க அப்பண்ணகத்தில் ஐந்துதலைக்கொள ஆதியாய் தோன்றி முடிவில் நான்கு முகமுள ஒன்ருய் வேதன் என்ன விளங்குந் தாளமும் சந்தம் பதமொடு சார்தருகானம் இவை லயம் ஒன்றுள் இயைந்து நான்காகிறது. ஐந்தாக நவிலும் பண்பாடதனிடை தோன்றும் அநேகம் சாகை. சாகைகள் அனைத்தினும் சார்ந்து பண்பாடாகிய மால்அயன் அரனடி தேடும். தேடிட நின்ற சிற்றம்பல நடம் ஐந்தெழுத்தாகி ஆன்ம ஞானம் தரும். ஐந்தெழுத்தோருருவாகிய மோன பூரணமாகப் பொலியும் ஒன்றின் அடிக்கீழாய்ச் சித்தாந்த பீடமாய் வேதச் சுருதியாய் வேத முடியிலும் வேத முடிவிலும் விளங்கும் பிரணவம். இவ்வகையாஞ் சிறப்பியைந்து விளங்குஞ் சூக்குமஞ் சேர்ந்தொரு தூலமாய்த் தோன்றித் திகழ வமைத்தது திருமுறையாகும். அத்திருமுறையின் அமைப்பில்தான் இந்த மானுட அமைப்பும் அமைந்திருக்கின்ற அதிநுட்பத்தை அறிந்து ஆக்கித் தந்தது தான் தேவாரம். ஆகவே தான் தேவாரத்திற்கு பொருள் கூறும் பழக்கம் தொன்று தொட்டு இருந்தது இல்லை. மேலும் ஓதக்கூடிய நூல்தான்தேவாரம் என்றும் அந்த சுருதிப் பொருள் தான் சுகம் தரும் மருந்து என்றும் இந்த சூட்சமம் அறியார் கூற்றுவன் விருந்து எனவும் வெட்ட வெளிச்சமாக தெரிகிறது. தேவாரத்தை ஓத கனரகம் பண்ணியல் கனரகம் வகுக்கப் பெற்றிருக்கிறது.

ஆதிநூல்,

அடங்கன்முறை தேவாரம், இருக்கு, எழுதாகேள்வி, எழுதாகிளவி, சுருதிநூல் எனபல பெயர்களால் அழைக்கும் நூல் தான் திருமுறைப்பெருநூல். தவமுதல்வர் திருஞானசம்பந்தர் இயற்றிய முதல் மூன்று திருமுறைகளில் முதல் திருமுறையில் ஏழு பண்கள் இயற்றியுள்ளார். இறையருளாலும் சற்குருவின் திருஅருளாலும் எம் ஞானத்தெளிவு குரு சிறுபிராயம் தொட்டு இயம நியம நெறி நின்று முயற்சி செய்து தேவாரத்தில் பண்ணிடை ஒன்பது ஆகிய எழுத்து, அசை, சீர், யாழ், யாப்பு, அடி, பண், திறம், பண்தார் ஆகிய வியாகரணம் கண்டு அதன் மூலம் அளத்தற்கரிய பொருள் இருப்பதை உணர்ந்து இம்மானிட உருவம் இயக்காயவர்க்கமதாக இருப்பதைக் கண்டு அதை இயக்குவதற்கு இயற்றியது தான் தேவாரம் எனத் தெளிந்து நம் உலக மக்கள் யாவரும் ஓதி உணர வேண்டும் என்ற பெருங்கருணையால் அதில் அடங்கி இருக்கும் சூட்சமத்தை நமக்கு துவித சித்தாந்தம், இருக்கு வேதம், இயற்சீர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், வேதாந்தம், அத்துவித சித்தாந்தம் என்ற வரிசையில் அமைத்து பாடிய பண்கள் தான் நட்டபாடைப் பண், தக்கராகப் பண், பழந்தக்கராகப் பண், தக்கேசிப் பண், குறிஞ்சிப் பண், வியாழக்குறிஞ்சிப் பண், மேகராகக்குறிஞ்சிப் பண் என தெளிவுபடுத்துகிருர்கள்.

இறைவனேடு ஒன்றி இருந்த நாம் வெளிமுகமாக பார்க்குங்கால் வினைக்கு ஈடாக விட்ட அணுவாகி பிறப்பெடுக்கும் பொழுது மீண்டும் இறைவனேடு ஒன்ற வழி வகுத்தது தான் நான்கு வேதம். நான்கு வேதம் என்பது செவியில் ஏற்படும் ஒலி இருக்கு என்றும் வாயில் ஏற்படும் ஒலி யசூர் ஆகிய இயற்சீர் வேதம் என்றும் மூக்கை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி சாமம் என்றும் கண்ணை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி அதர்வணம் என்றும் இந்த நான்கு இடங்களில் உயிர்ப்பொலி தோன்றும் உறுப்புகளை சுமந்து இருக்கும் மெய்யை வேதாந்தம் என்றும் அழைக்கின்ருர்கள். ஆகவே நாம் வேத வேதாந்தமாக பண்ணப்பட்டிருக்கின்ரேம். இந்த நான்கு வாயில்களில் தோன்றும் உயிர்ப்பு ஒலி தசவித நாதம் ஆக இருக்கின்றது. இந்த தசவித நாதமும் முறையாக அடங்கி இருக்கும் உருவமே மானிடன் என்பதை உணர்ந்த ஞானியர்கள் (பெரியவர்கள்) தசவித நாதத்தை உள்ளடக்கி ஆக்கி தந்தவை தான் நம் தேவாரப் பண்கள்.

Koviloor Digital Library

நாதம் தான் எல்லாவற்றையும் அடக்கி அடங்கும் என்னும் அதிநுட்பத்தை அறிந்து சுழலும் தன்மையில் நாதம் உண்டாகும் என்பதை உணர்த்தத் தான் பதிஅகம் ஆக பதிகம் ஆக பத்தும் ஒரே குறிப்பை உணர்த்துமாறு அமைத்து தந்துள்ளார்கள். புராணங்களில் எல்லாம் வியாதர் மாணுக்கர் என்ன பயிலர். இசைமேனி. விசும்பயணர். சுகர். சுமந்து என்று குறிப்பிட்டு இருக்கும். அதன் உட்பொருள் உயிர்ப்பொலியாகிய வியாதர் மேலும் மாணுக்கர் என்ன நவிலும் முன்தெரி காதை பயிலர் என்றும். பேச முற்படு நாவிந்திரியத்தை இசைமேனி என்றும் இரவிமதி உந்து துளையை விசும்பயணர் என்றும். ஓதும் சுகம் சேர் நயனஞ் (கண்) சுகரென்றும் இவை நான்கையும் சுமந்துள்ள மெய்யை சுமந்து என்றும் விளக்கி இருக்கும் பாங்கு நாம் எல்லோரும் இன்பம் அடைய வேண்டும் என்ற பெருங் கருணையினல் வெளிவந்தது என்றுல் அது தான் முற்றிலும் உண்மை. கட்டளை சார்கை செயும் செயற்பாடுடைக் காரணத்தால் இட்ட பெயர் சாகை ஆகும். அவ்வாறு அற்புத பதிகங்கள் பாடி கட்டளையிட்டு வெற்றி கிட்டச் செயங் கொண்டு உலகோர்க்கு எழுதாக் கிளவியதாய்த் திட்டமிட்டுத் தந்த சாகைச் சரியைத் திருமுறையே.

வேத அங்கம் ஆறு (1) சித்செய் (சிட்செய்) பனிரெண்டு ஓசை. பரிசம். உருவம். ரசம். கந்தம். புத்தி. மனம். அகங்காரம். கண். செவி. வாய். மூக்கு ஆகிய சிரம் (2) வியாகரணம் என்னும் மேற்கணக்கு ஒன்பதாகிய அத்தம்: சோதிடக் கலையை மேற்கணக்கு என்றும் அதை தமிழில் இணைத்து ஆராய்ந்து எழுதியிருப்பதை அறிஞர்கள் போற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. (3) சந்தசு என்னும் எழுதாக்கிளவி மூன்றுகிய தோள். (4) நிருத்தம் என்னும் ஒடுக்கம் ஐந்து ஆகிய தொடை. (5) சோ. ஓது இடம் என்னும் கீழ்கணக்கு ஒன்பதாகிய பாதம். (6) கற்பம் என்னும் மெய் வளம் எழுபத்திரண்டாகிய உடம்பும் கொண்டு ஒலி உருவாகிய வேதம் ஒரு புருஷாகிருதியாக நிற்கும். ஒலி வர்க்கமாகி உரு அமைத்த நமக்கும் தமிழ் மொழிக்கும் இணைந்த ஒப்புமையை நோக்கில் தமிழில் தான் வேதம் எழுத முடியும் தமிழில் தான் வேதம் நான்கிலும் மெய்ப் பெருளாகிய நாதன் நாமம் நமசிவய காட்ட முடியும் என்பதை இங்கு காட்டி அருளி செய்த பாங்கு தமிழ் தான் அமிழ்தம் அது தான் உயிருக்கு நேராக இருக்கிறது என்பதையும் காட்டிய தன்மை அற்புதத்திலும் அற்புதம். பிரமாதத்திலும் பிரமாதம் என அறிஞர்கள் உணர்வார்கள்.

நம் மூல முதல் குரு திருமூலர் திருமந்திரத்தில்

"கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணுக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
வண்ணுக்கி னுள்ளே யகண்ட வொளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மை பிழைப்பித்த வாறே"

என்று இயம்புகிருர். இதன் அடிப்படையில் ஆராய்ந்தால் நான்கு வேதமும் வேதாந்தமும் கூடிய ஒன்று தான் பண் என்பது வெட்ட வெளிச்சம். மேலும் குறிப்பில் குறிப்புணர வைக்கும் குறியறி சித்தராகிய திருமூலர்

"எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பறவாத வண்டு மணமுண்ட வாறே"

எனவும் இயம்புகிருர். இதன் பொருள் தான் திருமுறைப் பெருநூல் விளக்கம் ஆகும் என்பதை இந்நூலை வாசிப்போர் உணர்வார்கள். இன்னும் விரிவான ஆதாரமாக திருமூலர் தசவித நாதத்தை தெளிவாக நமக்கு காட்டியருளுகிருர்.

Koviloor Digital Library

"மணிகடல்	யானை	வளர்குழல்	மேகம்
மணிவண்டு	தும்பிவளை	பேரிகை	யாழ்
தணிந்தெழு	நாதங்	கடாமிவை	பத்தும்
பணிந்தவர்க்	கன்றிப்	பார்க்க	வென்றதே"

இங்கு செவியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி மேகம். கடல். பேரிகை இவை ஒவ்வொன்றின் ஒலிக்கதிர்கள் ஏழாக இருக்கும். ஆக மூவேழு இருபத்தி ஒரு ஒலிக்கதிர்கள் இருபத்தி ஒரு சாகை ரிக் வேதம்.

வாயை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி மணியும் குழலும் இவை தாளம் முப்பந்தைந்து ஒசை ஒன்று. மேளம் எழுபத்திரண்டு ஒலி ஒன்று ஆக நூற்றி ஒன்பது ஒலிக்கதிர்கள் யசூர் வேதம் என்னும் இயற்சீர் வேதசாகை நூற்றி ஒன்பது ஆகும்.

மூக்கை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி யானை. சங்கு. வண்டு. தும்பி இவற்றின் ஒலியாக முறையே பத்து நூறு ஆயிரம் ஒலிக்கதிர்கள். ஆயிரம் சாகை கொண்டது சாமவேதம்.

கண்களை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியாழ் அது ஏழேழ் நாற்பத்தொன்பது ஏழால் ஒன்று ஆக ஐம்பது ஆக அதர்வணச் சாகை இருக்கும். ஆக மொத்தம் ஓராயிரத்து நூற்றி எண்பது சாகை என்பதை தெளிவாக இந்நூலில் காட்டியருளி இருக்கின்றார்கள்.

முதலில் நட்டபாடைப் பண் விளக்கம் எழுதி திறங்களின் விளக்கம் எழுதி பாலைநெய்தல் பாடிய அதி சூட்சமத்தை உணர்த்திக் காட்டி இருக்கும் பாங்கு அதி அற்புதம் ஆகும். நட்டபாடை பண்ணில் துவித சித்தாந்தம் தோன்றும் அமைப்பை சுருதி மீச்சுருதி உபநிழலறம் மூலம் விரித்து காட்டியருளுகிறார்கள். நிறைவில் "அஉம" என ஓம் தோன்றும் என்றும் அதில் அகில கலைகளும் உண்டாகும் என இயம்புகிறார்கள்.

இரண்டாவது தக்கராகத்தில் இருக்கு வேதம் தவளாகரச் சுருதியில் வெளியில் தேடி தசவித நாதமாகிய தொகுதியில் ஒரு பகுதியாகிய ஒலி இருபத்தொரு சாகையும் தூக்கிய திருவடி என்னும் ஒரு பகுதியும் 'ந'காரமும் கிடைக்கிறது.

மூன்றுவதாகத் தொடர்ந்து தத்தவுரியனுகி வெளியில் இயக்கம் கொள்ளும் வளியில் தேடி எழுத்துக்கள் நூற்றி ஒன்பது சாகையும் ஊன்றிய திருவடி என்னும் ஒரு பகுதியும் மகாரமும் கிடைக்கிறது.

நான்காவதாகத் தொடர்ந்து பூவூடியனுகி வெளிவளியில் இயங்கும் தீயில் தேடி எல்லாவற்றிற்கும் நடுவாகி ஆயிரம் சாகையும் உதறிய கை என்னும் ஒரு பகுதியும் சிகாரமும் கிடைக்கிறது. ஐந்தாவதாக மேலும் தீவிரமாக நோக்கி அழுத்தி தேடும் தேட்டத்தில் பூவணனுகி தேடி ஐம்பது சார்கையும் ஆதரவு அளிக்கும் கை என்னும் ஒரு பகுதியும் 'வ' காரமும் கிடைக்கின்றது. ஆருவதாக இங்கு கிடைத்த வேதப் பகுதியை ஒன்று கூட்டிப் பார்க்கும் பொழுது தசவிதநாதத் தொகுதி ஆயிரத்து நூற்றி எண்பது சார்கை கிடைக்கிறது. இதை தத்துவம் தொண்ணூற்றி ஆறைக் கொண்டு பகுத்துப் பார்க்கும் பொழுது பாகை பனிரெண்டும் எஞ்சிய தொகை இருபத்தெட்டும் கிடைக்கிறது. தத்துவம் தொண்ணூற்றுறுடன் பாகை பனிரெண்டைக் கூட்ட நூற்றெட்டாகி வேத உரு கிடைக்கிறது. எஞ்சிய தொகையில் அவித்தையாகிய சாக்கிரம். சொப்பனம். சுழுத்தி. துரியம். துரியாதீதம் என்ன சாக்கிரத்தில் சாக்கிரம். சாக்கிரத்தில் சொப்பணம். சாக்கிரத்தில் சுழுத்தி. சாக்கிரத்தில் துரியம். சாக்கிரத்தில் துரியாதீதம் என்று முறையே ஐந்து ஐஐந்தாகிறது. ஆன்மா ஐஐந்துள் ஆழ்ந்து விடாமல் உய்வு பெற்று வாழ எஞ்சிய மூன்று ஆகிய திருப்பாதம் பராபரமாகிய வெளியை இறைவன் கொடுக்கும் நிலையில் ஏந்திய இருகை உருவமாகிய 'ய' காரம் தோன்றுகிறது.

Koviloor Digital Library

ஏழாவதாக மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் சகலமும் அடக்கி அடங்கும் ஒடுக்கத்தை அத்துவித சித்தாந்தம் என்னும் இறைவண்ண நிறைவென்னியற் சுருதியில் 'உஅம' என்னும் ஓம் கிடைக்கிறது.

இவ்வாறு தவமுதல்வர் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதல் திருமுறையில் "ஓம் நமசிவய ஓம்" என்னும் அமைப்புப்படி அமைத்து தந்திருக்கிறார்கள் அதில் தான் (அஉம) ஓம் துவித சித்தாந்தம். (ந) இருக்கு வேதம் (ம) இயற்சீர் வேதம் (சி) சாமவேதம் (வ) அதர்வண வேதம் (ய) வேதாந்தம் (உஅம) ஓம் அத்துவித சித்தாந்தம் தோன்றுகிறது என்பதை எம் ஞானத் தெளிவு குரு இங்கு எடுத்துக் காட்டியருளுகின்றார்.

அற்புத பதிகங்களின் ஆற்றலை எடுத்து இயம்பியுள்ளார். வேதநூலிற்கு பொருள் கூறும் நியதியின்படி அர்த்தபாகை கர்மபாகை ஞானபாகை என வகுத்து நமக்கு பொருள் தந்திருக்கின்றார்கள். தவமுதல்வர் திருஞானசம்பந்தர் இயற்றிய முதல் திருமுறை தேவாரம் அனைத்து பதிகங்களும் நம் முன்னோர்கள் ஞானியர்கள் ஆக்கித் தந்த தமிழ் எழுத்துக்களால் ஆக்கப்பட்டுள்ளது. எழுத்துக்களின் அதிநுட்பத்தை அறியாத பகுத்து அறிய முடியாத அன்பர்கள் சிலபேர் செய்த சதியால் கலியின் மிகுதியால் இப்பொழுது பின்பற்றும் எழுத்துக்கள் வெகு விரைவில் மறையவும் கலியின் கொடுமை தீரவும் தமிழும் சைவமும் தழைத்தோங்கவும் பொற்காலம் விரைவில் வருகிறது என்பதன் குறிப்புத் தான் எம் ஞானத் தெளிவு குருவின் திருமுறைப் பெருநூல் விளக்கம் வெளி வருகிறது என்பதை மனநிறைவுடன் எழுதுகின்றேன். எம் ஞானத் தெளிவு குருவின் நூல்கள் அனைத்தையும் சிவபுண்ணிய சீலர் நனிபள்ளி பதிகம் நாள்தோறும் ஓதும் பண்பாளர் சிரஞ்சீவி டாக்டர் கனடா சித. ஏகப்பன் அவர்களுக்கு உலகத்திற்கு ஒளி காட்டும் வாய்ப்பை திருஅருளும் குருஅருளும் கூட்டுவிக்க முழுதும் பயன்படுத்திக் கொண்ட முதன்மையாளர் நீடூழி வாழ்க. அவர்தம் பரம்பரை சகல செல்வங்களையும் பெற்று நோய்நொடியின்றி வாழ இறைவனையும் குருநாதரையும் வேண்டுகின்றோம்.

முத்தமிழ் வேதத்திருச்சபை நூல்கள் அனைத்தையும் நம் முன்னோர்கள் ஆகிய ஞானியர்கள் ஆக்கிய தமிழ் எழுத்துக்களைக் கொண்டு முழுமையான நூலாக்கி கணினி மூலம் அச்சு பதிப்பித்த ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் உரிமையாளர் "முருகன் உள்ளங் கவர்ந்த" தவத்திரு சுவாமிநாதன் அவர்களும் அவர்தம் குடும்பத்தார்களும் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்போடும் நீடூழி வாழ இறைவனையும் குருநாதரையும் வேண்டுகிறோம்.

நாத்திகம் வேரறச் செய்யவும் நம் முன்னோர்கள் அறிவு இயல் கண்டு வியக்கவும் திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை நூலை வாசிக்க வாசிக்க தெளியலாம். விஞ்ஞான வளர்ச்சி முகட்டின் உச்சியை தொடும் வேளையில் மெய்ஞான வளர்ச்சி சிகரமாக அமைத்துத் தந்த பாங்கை உணர்ந்து அழிவுக்குச் செல்லாமல் ஆக்கத்திற்கு இடந் தந்து நம் முன்னோர்கள் ஞானியர்கள் வாழ்ந்து காட்டிய பண்பாடாகிய நெறியில் வாழ்ந்து நம் சந்ததியினரை **சைவமும் தமிழும் உயிர்ப்புப்** போன்றது என்பதை உணர்ந்து செயல்படச் செய்ய வேணும் இப்பொழுது உள்ள ஆதீனப் பெரியவர்கள். அதற்காகவே வசிட்ட இருசி. விசுவாமித்திர இருசி. கோதம இருசி. கலைக்கோட்டு மாமுனிவர். அகத்திய மாமுனிவர். துருவாச முனிவர் விளக்கம் அறிவு இயலின் படி தந்துள்ளோம்.

திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை விய ஆண்டு மார்கழி மாதம் பன்னிரண்டாம் தேதி (27-12-2006) புதன்கிழமை அன்று சிவநேசச் செல்வர் சிரஞ்சீவி சித. ஏகப்பன் அவர்கள் தலைமையில் சாத்வீக குணம் அமைந்த சிதம்பரம் செட்டியார் நூலை வெளியிட முதல் பிரதியை உலகியல் வழிகாட்டி உன்னத உத்தமர் அழகப்பா பல்கலைக் கழக முதன்மையர் கல்லூரி வளர்ச்சி முது முனைவர் ச. மோகன் அவர்கள் பெற்று

Koviloor Digital Library

உ
(சி)வமயம்
(கு)ரு வாழ்க குருவே துணை

சிவபுண்ணியத்தையும் பெற்று நம் முன்னோர்கள் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளாக வேண்டியதை நிறைவு செய்யும் நன்னாளாக இறையருளும் குருவருளும் கூட்டுவித்ததை எண்ணி எண்ணி அக மகிழ்கின்றோம்.

இந்நூல் கிடைக்கும் சிவபுண்ணிய சீலமெய்யன்பர்கள் முற்பிறவியில் செய்த புண்ணியமும் இப்பிறவியில் நெறிவழியே நடந்ததினாலும் தான். இந்நூலை ஓதி ஓதி உணர்ந்தவர்கள் இயம நியம நெறியில் நிலையாக நிற்பார்கள். இந்நூல் சோரத சுகம் அடைய வழி வகுக்கும். கலியின் கொடுமை நீங்கும். நமனுக்கும் அஞ்சார். இம்மண்ணுலகில் பெற வேண்டிய சகல செல்வங்களும் பெற்று புருஷாகிருதியாகிய ஆள்வினை குறிக்கோளாகிய அறம் பொருள் இன்பம் வீடுபேறு அடையலாம் என்பது எம் ஞானத் தெளிவு குருவின் வாக்கு.

முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் தவத்திரு சித.வே. முருகேச பிள்ளை அவர்கள் முயற்சியால் இருபத்தெட்டு ஆண்டுகள் நிறைவடைந்து இருபத்தொன்பதாவது ஆண்டு முத்தமிழ் வேதத் திருச்சபை முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் பௌர்ணமி தோறும் மாலை 6-45 முதல் 7-45 வரை சீரும் சிறப்போடும் "வேதப் பொருள் விளக்கம்" நடைபெற்று வருகிறது.

எம் ஞானத் தெளிவு குரு திருமுறைப் பெருநூல் விளக்கம் கூற சிரமேற் கொண்டு தமிழ் அமிழ்தம் பருகி அடியேன் எழுத தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை என்று இயம்பிய மாணிக்கவாசகர் பெற்ற ஆனந்தம் அடைந்தேன். நிலைபெறுமான ஆனந்தம் அடைந்தவர் மாணிக்கவாசகப் பெருமான். அடியேனுக்கு அந்த முழுநூல் எழுதும் பாக்கியம் இல்லாமல் போனது முற்பிறவியில் செய்த பாவம் தான். எதுவரை எம் குருநாதர் சொன்னார்களோ அதுவரை தான் எழுதியுள்ளேன். காலம் கூட்டி வைக்கும் வரை பிறவி எடுத்து என்றும் எம் ஞானத் தெளிவு குருவின் திருவடியே தஞ்சம் எனத் தெளிந்து முத்தமிழ் வேதத் திருச்சபையின் அடிமையாகவே வாழ இறையருளும் குருஅருளும் திருஅருள் செய்ய வேணுமாய் வேண்டிக் கொண்டு திருமுறைப் பெருநூல் விளக்கம் முன்னுரை நிறைவு செய்கின்றேன்.

இங்ஙனம்
அடியார்க்கு அடியேன்
இராம. ஆதிரெத்தினம்
முத்தமிழ் வேதத் திருச்சபை இணைச் செயலாளர்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46466

Koviloor Digital Library

நூலைப்பற்றி சித.வே. ஷண்முகநாதபிள்ளை அவர்கள் விளக்கம்

க. மறைப் பொருள் விளக்கக் காரணம்

வேதம் என்ற சொல் கடவுட் கொள்கையை நிறுவிய பெரியோர்களின் பெயரால் விளங்கும் நூல்களுக்கெல்லாம் பொதுவாக வழங்கப் பெறுகிறது. ஆயினும் வேதம் என்ற சொல்லுக்கு ஒரு தனிப் பெருஞ்சிறப்பும் இலக்கண வரம்பும் நம் தமிழ் வேதத்திற்கு மட்டுமே உள்ளது அதை விரிப்போம்.

வேதம் என்ற சொற்பொருள்

வேதை வேற்றுமை வேதிந்தல் வேத்து என்பனவாகச் சொல்லப் பெறும் மாறுபாட்டு இயற்கைக் குறிப்பே வேதம் என்ற சொல்.

அது நான்மறையான காரண விளக்கம்

அந்த வேற்றுமை யாவன பூதம் ஐந்து என்ற ஒரு தொகுதி ஆகாயத்தினிடத்து ஒடுங்கி நான்காக இருப்பது போன்றும் அவ்வைம் பூதத்தினுடைய தன்மைத் திரத்தைக் கொண்ட மெய்வாய் கண் மூக்குச் செவி என்பனவற்றில் மெய்யினிடமாக வாய் கண் மூக்குச் செவியாகிய நான்கு வேற்றுமை உறுப்புக்கள் உள்ளன போன்றும் ஒரு அடிப்படையைக் கொண்டு உள்ள நான்கு வேறுபாட்டுத் தொகுதியாக அமைவதே நான்மறை என்றும் நாலு வேதம் என்றும் சொல்லப் பெறுகிறது.

நான்மறையன்றி மேன்மறையில்லை

எவ்வாறு மேற்கூறிய தொகுதியில் ஒன்றைக்கூட்டவோ குறைக்கவோ முடியாதோ அந்த இயற்கைத் தன்மையுள்ளன போன்று வேதம் என்றால் அது நான்காகவே தானிருக்கும். அந்நான்கும் ஒன்றற்கொன்று எதிர்மாறான தன்மையைப் பெற்றிருக்கும். அதற்காதியாகவுள்ள வொன்று எனக் கூறிய பூதாதியாகிய ஆகாயம் போன்றும் பூததத்துவாதியாகிய மெய்போன்றும் வேதாந்தம் விளங்கும் இவ்வைம் பூதங்களுக்கும் செயற்பாட்டுத்திரத்தை நல்க பூத நாயகன் ஒருவன் உள்ளது போன்று சித்தாந்தம் தோன்றும். இந்தத் தொகுதியினின்றும் பிறழ்ந்த எந்த நூல்களையும் வேதம் என்ற சொல்லால் அழைப்பது கொஞ்சமும் பொருந்தாது.

மறைப்பொருள் உணரும் வழி

இவ்வுண்மையை விவரமாயறிய வேண்டில் திருஞான சம்பந்தர் அருளிச் செய்த திருமுறையில் காணும் கட்டளைத்திறங்களின் அடிப்படையில் வியாகரணம் என்னும் மேற்கணக்கு ஒன்பதின் நியதிப்படி வகுக்கப் பெற்ற அடங்கன் முறை திருச்சிற்றம்பல தேவார இசை யொலியிற்றேன்றும் எழுதாக்கிளவியின் விளக்கமாக வகுத்துள்ள நான்மறை விளக்கத் திருமுறையிற் காண்க.

வார்த்தை மலைப்பைத் தருகிறதா விடை

ஈண்டு சொல்லியவற்றில் கட்டளைத்திறங்களென்றும் வியாகரண மென்னும் மேற்கணக்கென்றும் நூற்றலைப்பின் பெயராக வழக்கில் கொள்ளப் பெற்று வரும் அடங்கன் முறை திருச்சிற்றம்பலம் தேவாரம் இவைகளுக்கு வேறு ஏதோ ஒரு பொருள் இருப்பதாகக் குறித்தும் மேலும் இசையொலியில் எழுதாக் கிளவி என ஒன்று தோன்றுவதாகவும் நடைமுறை வழக்கத்திற்கு ஒத்துவராமல் எதையோ கூறுவதாகத் தோன்றுகிறது ஏன் ஒரு பொருள் விளக்கத்தைத் தருங்கால் எல்லா மக்களுக்கும் பயன் தரும்படியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூற வேண்டும் இதனுற்றான் நம் பெரியோருடைய நூற்கள் போற்றுவாரற்று இருப்பதாகப் பலரும் சொல்லுகின்றனர் என நினைக்க வேண்டாம்.அதற்குரிய விளக்கம் காட்டுகிறோம். (உலகியல் நூல் வேறு மறையியல் நூல் வேறு)

Koviloor Digital Library

உலக மக்களுக்கெல்லாம் புரியும் வண்ணம் ஞானியர்களாற் சொல்லப் பெற்ற நூற்கள் எண்ணற்றன இருந்து கொண்டிருக்கிறது. அவற்றுள் ஒன்றல்ல ஈண்டு கூறிய சிவகலையாகிய வேதநூல் அதை வகுத்தற்கும் ஒரு தனித்தகுதி வேண்டும். ஓதியுணர்வதற்கும் ஒரு தனிப் பெரும் பயிற்சி வேண்டும். காரணம் ஞானசிரியனுல் உணர்த்த பெற்ற ஞானநுபூதி சாதனவிளைவு பயன்தரு காட்சி இவற்றை நூல் முறையில் சித்திரித்துக் காட்டியதே நமது தேவாரமாகிய மறை நூல்.

அநுபூதியியலே மறையியல்

ஞானநுபூதியின் நாதம் எழுதியோ சொல்லியோ காட்ட முடியாததாக இருப்பதால் அதற்கு எழுதாக் கிளவியென்று பெயர் வந்தது அந்த நாதம் ஐம்பூதங்களுக்கும் ஆதியாகவும் முதற்பொருளுக்கு அண்மையாகவுமிருக்கும். அவ்வாறே நமது வேதமும் நாதத்தை அடிப்படையாகக் கொண்டு முதற்பொருளுடைய இயற்கைவிரியைப் பிரதிபலிப்பாகக் கொண்டு விளங்குகிறது. அவ்விளக்கமே தேவாரத்திற் காணப் பெறும் இறைவன்றிருவருட் குறிப்புச் சொற்கள் அந்த நாதமே எழுதாக்கிளவி அந்த எழுதாக்கிளவியின் பொருளே வேதம் இவ்வாருக இருப்பதாற்குன் மற்ற தோத்திரப் பாக்களுக்கு பதவுரை சொல்லுவ போன்று தேவாரத்திற்கு பதவுரை சொல்லுவது தேவாரத்தின் பொருளாக வமையாதென்றும் அதனுல் பதவுரை சொல்லக் கூடாதென்றும் ஒரு நியதி அறிஞர் பரம்பரையில் இருந்து வருகிறது.

தேவாரம் தோத்திரப்பாவல்ல

தேவாரம் அல்லாத மற்ற பாக்களுக்கெல்லாம் பாவும் அதையறிந்து பாடக்கூடிய இசையும் என்ற பகுப்புக்கள் மாத்திரம் உண்டு தேவாரத்திற்கு அப்பாவை இசைப்பதற்குப் பண்ணும் அப்பண்ணில் எழும் ஒலிக்குப் பொருள் விளக்கம் தரக்கட்டளைத் திறங்களும் உண்டு. அக்கட்டளைத் திறத்திற்குன் எழுதாக்கிளவியாக நான்மறை தோன்றும்.

(வேதமும் வேதச் சாகையும் வெவ்வேறல்ல)

நான்மறையானது அநுபூதி சாதனத்திற்ரேன்றும் தச வித நாதங்களின் வாயிலாகவுள்ள நான்கு இடங்களைக் கொண்டு நாலாகவும் அவ்வொலிக்கதிர்களைக் கொண்டு வேதச்சாகைகள் ஒவ்வொன்றிற்கும் இத்தனையென்றும் வகுக்கப் பெறுகிறது.

(வேதம் ஒரு புருஷாகிருதியாக உள்ளது)

தேவாரப்பாவும் அப்பாவிற்குச் சொல்லும் அதை இசைக்கப் பண்ணும் அப்பண்ணிற்குக் கட்டளைத் திறமும் அக்கட்டளைத் திறத்தில் எழுதாக்கிளவியாக நான்மறையும் தோன்றுவது உடம்பும் உடம்பிற்குக் கருவி கரணுதிகளும் அக்கருவி கரணுதிகளுக்கு ஆதியாக உயிர்க்கலையும் அவ்வுயிர்க்கலைக்குச் சஞ்சாரமும் அதற்கு வாயில்களும் அதன் சஞ்சார விரியும் தோன்றுவன போன்று எழுதாக்கிளவி தோன்ரு நிற்பதை அடங்கன்முறை திருச்சிற்றம்பல தேவாரப் பண்ணிசை தருகின்றது.

புருஷாகிருதிக் கூறு பாட்டியல்

தேவாரத்தில் உடம்பு அடங்கன்முறை அவ்வுடம்பில் உயிர்க்கலை நின்றிலங்கும் மேல்மூலம் கீழ் மூலம் இரண்டும் இரண்டு திருச்சிற்றம்பலம். இதற்கிடையிற்ரேன்றும் ஞானநுபூதியின் நாதவொலி தேவாரம் அவ்வொலி நின்றிலங்கும் வாயில்கள் நான்கு. நான்கு வேதம். அதில் வெளியின் தன்மையைப் பெற்ற தொன்று வளியின் தன்மையைப் பெற்ற தொன்று தீயின் தன்மையைப் பெற்ற தொன்று நீரமைந்த நிலத்தின்றன்மையைப் பெற்ற தொன்று ஆக நான்கு.

Koviloor Digital Library

நான்மறைப் பெயர்க்காரண விளக்கம்

நான்மறைத் தொகுதியில் ஆகாயத்தின் இயற்கூறு கொண்ட ஒலியை ருக்கு என்று கூறப் பெறுகிறது. ரு. என்ற எழுத்து தமிழில் ஐந்தைக் குறிக்கும் . ஐந்தாவது பூதம் ஆகாயம். இக்கு. என்பது மேல் தொடர்பின்மையைக் குறிக்கும். இது பற்றியே ருக்கு என்ற பெயர் வழாங்குகிறது. இவ்வொலியை ஒலிக்க எழுத்து அசை நிரம்பிய சீருக்கு வெளிற் சீராகிய வெண்சீர் என்றும் அதற்குரிய வேதத்திற்கு தவளாகரம் என்றும் நம் தமிழில் காணக்கிடக்கிறது. இதுவே ருக்வேதப் பெயர்க் காரணம்.

இரண்டாம் வேதப் பெயர்க் காரணம்

மேற்கூறிய வாறே வெளியினிடத்து இயக்கம் கொள்ளும். இயச் சீராகிய இயற்சீர் எசூர் வேதம் என்று வடமொழியிலும் நம் தமிழில் இயற்சீர் என்பதோடு தத்தவுரிய இயம் (தைத்ரீயம்) என்றும் சொல்லப் பெறும் வெளியில் இயக்கம் கொள்ளும் காற்ருகியதால் ஊன்றி இடைவிட்டு நடை கொள்ளாமல் தத்திச் செல்லும் இயற்கையுடையதாய் இருப்பதைக் குறிக்கும் சொல்லாகவே தத்தவுரியம் என்று பெயர் வந்தது. இதுவே எசூர் வேதப் பெயர்க் காரணம்.

மூன்றும் வேதப் பெயர்க் காரணம்

இவ்வாறே வெளியினிடத்து இயக்கங் கொள்ளும் வளியை யாதாரமாகக் கொண்டு தோன்றுந் தீயானது ஐம்பூதங்களுக்கும் நடுவாய் இருபாலும் சமம் நெடிதே நிலைபெறக் கொண்டு நிற்கும் இயல்புடைத்தாதலால் அத்தன்மையைக் கொண்டு விளங்கும் வலிமையுடைய சீருக்கு உரிய வேதத்தை சாம வேதமென்று வடமொழியிலும் நம் தமிழில் ஐம்பூதங்களுக்குரியதாகிய இயற்கைப் பொலிவுடைய தன்மையைக் கொண்ட ஒருமைப்பாடுள்ள குறிப்புச் சொல்லாகிய பூ என்ற சொல்லைக் கொண்டு அதற்கு நடுநிலை கொண்டு விளங்கும் இயற்கையைக் குறிக்க ஊடு இயம் என்னும் பூவூடியம் என்று கூறப் பெறும். அதற்குரிய சீரும் வன்சீராகிய வஞ்சிச்சீர். இதுவே சாமவேதப் பெயர்க் காரணம்.

நான்காம் வேதப் பெயர்க் காரணம்

முறையே வெளிவளி அங்கியை ஆதாரமாகக் கொண்டு தோன்றும் நீரமைந்த நிலத்தின் இயற்கைத் தன்மையுடைத்தாயுள்ள வேதத்தை அதர்வம் என்று வடமொழியிற் சொல்லப் பெறும். அதரத்திற் தோன்றும் வகரமானது ஆக்கத்தையும் அழிவையும் குறிப்பிடும் இயற்கையுடைத்தாதலால் ஆக்கத்தையும் அழிவையுந் தரும் நீரமை நிலனுக்குரிய குறியீட்டுச் சொல்லாக அதரவம் அல்லது அதர்வணம் என்று சொல்லப் பெறுகிறது. அதையே தெளிதமிழில் வகரத்தின் குறிப்பைக் கொண்டு வாமம் என்று சொல்லப் பெறும். இதற்குரிய சீரும் வானின் தன்மையைப் பெற்ற வெண்சீருக்கு எதிர்மறையாகிய கலிச்சீர் ஆகாயம் அருவம். அதற்கு எதிர்மறையாகிய உருவத்தைக் கொண்டது நீரமை நிலம் ஆனவாறு வெண்சீருக்கு எதிர்மறையாகக் கலிச் சீர் வந்தது. இதுவே அதர்வண வேதப் பெயர்க் காரணம்.

வேதப் பெயர்க்காரண மூலமும் இடுகுறிப் பெயரல்ல

மேற் கூறியவற்றுள் இடுகுறிப் பெயராக வேதவுரிமைப் பாட்டியிற்கைச் செய்யுள்களுக்குப் பெயர் கூறவில்லை. காரணம் உண்டு என்பதையுங் காட்டுகிறோம்.

வியன்சீர் இயல் விளக்கம் : ஆகாயம் ஒலித்தற்கிடமாகிய ஒரே தன்மைக் குணமுடையது விரிந்தது. இவ்வியல்புடையது வெண்சீர். அந்த வெண்சீர் நாள் பிறப்பு காசு மலர் என்னும் தனிச் சொல்லைக் கொண்டது. ஆகாயம் விரிவைக் கொண்ட தன்மையுடையது போன்று ஓரசைச் சொல்லில் மட்டும் வெண்சீர் அடங்காமல்

Koviloor Digital Library

விரிந்த பூச்சீரையும் உடையது.

இயற்சீரின் இயல் விளக்கம் : ஆசிரியச்சீர் என்னும் இயற்சீரும் ஒலியும் பரிசமுமாகிய இரண்டு குணத்தையுடைய காற்றென்ன ஒரு தனிச் சொல்லை முற்படக் கொண்டு விரிந்து இரண்டாக நிற்கும் சிறப்பையுடையது. மேலும் நெடிதே நடை கொள்ளல் சுழித்தல் மண்டலாகாரமாகச் சுழல்தல் ஆயதன்மைகளைக் கொண்டது.

வஞ்சிச் சீரின் இயல் விளக்கம் : தீயானது வெளியையும் வளியையும் ஆதாரமாகக் கொண்டு ஓசை பரிசம் உருவம் என்னும் முக்குணங்களைக் கொண்டு விளங்கும் நடுநிலைப் பாடுடையதாயிருக்கும். இதற்குரிய பாவும் ஆகாயத் தன்மை வாய்ந்த வெண்சீரையும் காற்றின் தன்மை வாய்ந்த இயற்சீரையும் இடனாகக் கொண்டு ஒன்றியும் வன்சீராகிய மாச்சீராய்த் தனித்து உருப் பெற்றும் விளங்கும். அன்றியும் சமநிலை கொண்டு பூச்சீராகவும் பகுப்புற்று காணும் இயற்கையுடையதாய் ஒரு சார்பு பற்றித் தளை கொள்ளாமல் தனித்து நடுநிலை கொள்வது வஞ்சிப்பா.

கலிச்சீரின் இயல் விளக்கம் : நீரமைந்த நிலம் வெளி வளி அங்கியை ஆதாரமாகக் கொண்டு முற் கூறிய பூதத் தன்மைக் குணங்களுடன் சுவையையும் கந்தத்தையும் பெற்று விளங்கும் இயல்புடையது. இவ்வாறே சீரின் வைப்பு முறைத் தொடரில் நான்காவதாகவும் சுவையைத் தரும் நீரின் தன்மையுடைய கனிச் சீராகவும் மேலும் அதினின்று நீட்சி கொள்ளும் தன்மையுடைய நிலத்தினியல்பு பற்றிய நிழற் சீராகவும் ஆகாயத்தின்றன்மை வாய்ந்த வெண்பாவிற்கு எதிர்மறையாகிய தளை கொண்ட கலிச் சீராகவும் கலிப்பா தன்னியற் சீரும் தளை கொண்ட சீராகவும் அமையும்.

வேதமொழி தமிழ்மொழியே

ஈண்டு கூறியவற்றுட் பூதவியல்பைப் பொருந்திச் சொல்லியலாக்கம் கொண்ட காரணப் பெயர் உடையதென்பதை விளக்கினேம். ஆகவே பொறிபுலன்களின் தன்மைகளென்ன இச்சொல்லாக்க இயல் வேதமொழிகளுக்கு ஆதாரமாய் இயங்குகிறதென்பதை நோக்கும் போது இவ்வியற்கையைத் தனதாய்க் கொண்ட தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழிக்கும் நான்மறையைச் சொல்லவியலா தென்பது தெளிவாகிறது.

பூதியந்தவிர்ந்த அநுபூதியொலியே வேதஒலி

மேற்கண்டவாறு கூறியவற்றைக் கொண்டு இந்த நால்வகைப் பாவே நான்கு வேதங்களென்று முடிவு செய்துவிட வேண்டாம் மேற்கூறியவாறு பொறியும் புலனும் போன்றதே நால்வகைப் பாவிற்குரிய சொல்லும் ஒலியும் ஆகிய சொல்லொலியைக் கடந்த ஞானநுபூதிச் சாதன வொலியே மறையொலியாகும். பொறி புலனிற் சஞ்சாரம் செய்து அலைவுறும் மனோவாயுப் பிராணகதியானது அலைவின்றியுட் செல்லச் சுழித்து எழுப்பும் ஒலியே நான்மறையொலி. அவ்வொலி உட்செல்லச் சுழித்து ஒலிக்கின்றபடியால் அதற்கு மறையென்று பெயர் வந்தது. ஆகவே நான்மறையைச் சொல்லுதற்குரிய வாயில்களாகக் கொள்ளப் பெறுவது தான் மேற்கூறிய நால்வகைப்பா. அதன் வாயிலாகத் தோன்றும் எழுதாக்கிளவியே நான்மறை.

உயிருணர்வுணர்வுக் காட்சியாகிய மறையையறியும் வழி

பொறிபுலன் பொருந்திய பூதிகாகாரமான இவ்வுடம்பைத் தானென்றிருப்பது வெளிற்றறிவு. அது நீயல்ல என்று ஞானசிரியன் ஞானநுபூதி தரப் பெற்றுச் சாதனம் செய்யுங்கால் பொறிபுலனாகிய ஐவகை கடந்த வியனாகிய கரணங்கள் என்னும் உயிர் உயிர்ப்புறு தொடர் நால்வகையைக் கொண்டு முன்கூறிய ஐந்துடன் ஒன்பதாக அருளுடம்பு கொண்டு விளங்கும் புரியட்ட சரீரமாகக் காண்பது ஆகிய காரணத்தால் அதற்கு வியாகரணமென்னும் மேற்கணக்கு ஒன்பதை ஆதியாகக் கொண்டு அறிய வேண்டும்.

Koviloor Digital Library

உயிர் வெளிப்படைக் காட்சிப் பொருளல்லாதது போன்றதே வேதமும்

மேற் கூறியவாறு அறியாமல் வெளிப்படையாகக் காணும் தன்மையுடையதாக வொன்றிருந்தால் அது வேதமாக இருக்க முடியாது. எவ்வாறு ஐம்பூதப் பேருருத்திரட்சி மட்டும் நாமில்லாமல் வேருயிருக்கின்ரேமோ அவ்வாறே தான் என்று அறிக.

வேதப்பாடலுக்கும் வெறும் பாடலுக்கும் உள்ள விளக்கம்

நடைமுறையிலுள்ள தோத்திரப் பாக்கள் அனைத்தும் ஐம்பூதப் பேருருத்திரட்சி மட்டுமே. இது மேற்கூறியவாறு ஞானசாதன அடிப்படையில் விளங்குவதால் சொல்லையும் பொருளையும் கடந்து வியாகரணத்தின் வாயிலாக அதை உணர வேண்டும்.

கையொப்பமும் முகக் குறிப்பும் போன்றது சித்செயும் வியாகரணமும்

ஞானுநுபூதி நாத அருட்சரீரம் கொண்ட வேத புருடனுக்கு சிரமாக விளங்கும் சித்செய் என்னும் சூக்கத்தைக் கொண்டும் வேத புருடனின் கரமாகிய வியாகரணமென்னும் மேற்கணக்கைக் கொண்டும் வேத புருடனின் செயலையுணர வேண்டும். எவ்வாறு ஒருவன் அடையாளக் குறிப்பிற்கு சிரசும் செயற்பாட்டுக் குறிப்பிற்குக் கரமும் அவசியமாகிறதோ அவ்வாறு தேவாரத்திற்ரேன்றும் வேதபுருடன் செயற்பாட்டைக் காண்பதற்கு அவனுடைய ஆறங்கங்களில் இவ்விரண்டும் முதன்மையுடையதாகும். இவ்வங்கங்கள் தேவாரத்திற்ரேன்றும் வேதவுருக் கொண்ட சரீரத்தையுடைய புருடனுடையதாகவேயிருக்கின்றதே தவிர தனித்தனி நூற்களாக இல்லை என்பதைத் தமிழ்மறை நியதியொழுங்கிளுல் உணரலாம்.

மறை வழங்கும் நியதியொழுங்கின் விளக்கம்

சிவகலையாகிய வேதத்தை சொல்லும் வரம்பு இதுவே தான் இதில் வெண்பா ஆசிரியப்பா வஞ்சிப்பா கலிப்பா என்பன சடப் பொருளாகிய ஐம்பூதத் தன்மை வாய்ந்தனவே யாதலால் இவைகள் தனித்த முறையில் மறை வழங்கும் பாவாகவமையாமல் ஐந்துங்கூடி யோருருக் கொண்ட சித்துருவாகச் சரீரம் உள்ளது போன்று மேற்கூறிய பாவின் இணைப்புத் திறத்தில் வேத நூற்பா தோன்றும்.

(பாவின் இணைப்புத் திறத்தின் விளக்கம்)

பாவின் இணைப்புத் திறம் என்பதே மேற்கணக்கு ஒன்பதென்னும் வியாகரணம் அதிற்பாவென்பது யாப்பிலக்கணப்படி சொல்லப்படும் பெயர் அப்பாவின் இணைப்பு என்பது எழுத்து அசை சீர்யாழ் என நான்காகும் அப்பாவிணைகின்றதே யாப்பு இணைந்த பின்னரும் மேலும் நால்வகையாக கொண்டு கட்டளைத்திறம் விளங்கும். இதுவே பாவின் இணைப்புத்திறம் என்றுணர்க.

(முக்கரண வொருமை கொண்ட இயலே)

இவ்வாருகத் தோன்றும் வேதநூற்பாவிற்கு ஒரு தனிப் பெருஞ் சிறப்புண்டு அவையாவன மனேவாக்குக் காயம் மூன்றும் ஒன்றுபடுவதே. முக்கரணங்களும் தூய்மை பெறுமியல் அவ்வியலின்படி காயம் நமது திருமுறைப் பாவிற்ரேன்றும் சொல் அச்சொல்லின் இசை வாக்கு அதிற்ரேன்றும் கட்டளைத்திறம் மனம் இவைகள் யாவும் ஒன்றுபட்டு எவ்வகை வேறுபாடுமின்றி நிற்கும் இயலில் தூய்மை பெறும் விளக்கத்திற்கு எடுத்துக்காட்டு வருமாறு.

(முக்கரண வொருமை விளக்கம்)

முதலாவதாக தோடுடைய செவி என்று துவங்கும் பண் நட்டபாடை. அந்தப் பண்ணிற்குரிய பா சித்செய் என்னும் நாதாந்தமாம் பண்ணிலக்கணச் சூக்கத்தின்படி ஆசிரிய வஞ்சி இயற்சீர் யாப்பு. இதில் நூல்யாத்த முதல்வர்

Koviloor Digital Library

கட்டளை இட்டருளிய பெயர் நட்டபாடை. நட்டபாடை என்பது கண்களிரண்டும் பொருள் நோக்கங் கொள்ளும் போது ஒன்றுதல் போல இரண்டு கூடியொன்றுபடும் இயலைக் குறிக்கும். நாட்டம் படு பாவின் அடைவைக் கொண்டதே முதல் குறுகி நாட்டம் என்றுள்ளது நட்டம் என்றும் பா அடைவு பாடை என்றும் ஆயிற்று. இப்பாவில் எதுகைத் தொடர் நான்கும் விளச்சீராகி மாச்சீர் மோனை கொள்ள நிற்பதுடன் அமையாது மீண்டுங் காய்ச்சீர் ஒன்றும் தோன்ற நிற்கும். இதில் விளச்சீரும் காய்ச்சீரும் ஒரே பாவிற்கு உரியசீர். ஆனால் இரண்டாகி மாச்சீரில் ஒன்றுபடுகிறது. இது மேற்கூறிய படி கண்களிரண்டும் பொருள் நோக்கம் கொள்ளுங்கால் ஒன்றும் தன்மையைக் காட்டுகிறது. இதிற்காயமாகிய சொல்லின்படி சொல்லிசையாகிய வாக்கு.

விளச்சீருக்கு விளரியும் காய்ச்சீருக்கு உழையும் ஆகிய இரண்டாய் மாச்சீருக்குரியதாரத்தில் ஒன்றுபடுவதாக அமைந்திருப்பதை நோக்குதல் காயமும் வாக்கும் ஒருமைப்பாடு பெற்றிருப்பதைக் காட்டுகிறது. மனம் காயத்தையும் வாக்கையும் போல வெளிப்படைத் தோற்றமாகக் காணும் இயலின் அமையாத போன்று எழுதாக் கிளவியாக நட்டபாடைப் பதிகங்கள் இந்நூல் முதல்வர் செய்தருளிய எட்டுக்கட்டளையாக நிற்கும்.

தேவாரப் பண்ணிசையில் எழுதாக்கிளவி தோன்றும் முறை

எட்டுக் கட்டளையாய்த் தோன்றும் மனமானது காயம் வாக்கு **ஆதியனவுடன்** ஒருமை கொள்ளும் இயலின் சொல்லும் சொல்லிசையுமாகிய நாட்டம் படுமியல்புடைத்தாம் நட்டபாடையைக் கூடும் போது அது இரண்டும் இது எட்டும் ஆகவமைந்து எட்டும் இரண்டுமாகிய அகாரம் உகாரம் என்னும் குறிப்பைத் தந்து ஒன்றுபடுத்தும் இயலில் மகாரத்தில் அமைவதால் ஓங்காரமாக வேதச்சுருதியாய் எழுதாக் கிளவியில் பிரணவம் தோன்றும் (இதிற் காயமும் வாக்கும் நாட்டம் படுமியல்புடைத்தான போன்று மனமும் அகார உகாரமென்னும் இரண்டு ஒன்று கூடி காயம் வாக்கு மனம் ஒருமித்து நிற்கும் இயல்பைக் காட்டுவது ஆழ்ந்து நோக்கத் தக்கது).

இராகப் பெயரும் காரணப் பெயரே காரண இலக்கியமும், தேவாரமே

மேற்கண்டவற்றோடு பண்ணிசைக்குரிய ராகம் தோன்றும் வரம்பும் இதற்குரிய கட்டளைத் திறத்தினின்று தோன்றுவதை இதற்குரிய ராகம் நாட்டை எனவமைவது காட்டுகிறது. நாட்டம் என்பது கண் அதன் இயைபு கொண்டதே நாட்டை. அதில் எட்டுக் கட்டளைத் திறங்களுக்கும் எட்டுவகை நாட்டை உண்டு. இந்த தோடுடைய என்று தொடங்கும் பதிகத்திற்கு உரிய கட்டளைத் திறம் நைவளம் நேய நயவளமே நைவளம் என்றாயிற்று. அந்தப் பதிகம் முழுவதிலும் ஒருமைப்பாடு பெற்றுக் காணப்படும் இயல் அந்த நைவளமேயாகும். நேயநயவளம் கொண்ட தன்மையால் புகழ்ந்து பிரதாபங் கூறப்படும் இயல்பு பற்றி இதற்குப் பிரதாப நாட்டையென்று காரணப் பெயர் அமைகிறது. இவ்வாறே திருமுறையிலுள்ள பண்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஒவ்வொரு பண்ணிற்கும் காரணப் பெயரும் அதிற்றோன்றும் கட்டளைத்திறங்களினின்று இராகமும் தோன்றுவதைக் காணலாம்.

மறைப் பொருள் விளக்கத் தொகுதி

இதுவரை சொல்லி வந்த தொகுப்பை ஒருங்கிணைத்து நோக்கில் வேதம் என்ற சொல்லிற்குரிய விளக்கமும் அது நால்வகைப் பாவின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதும் அவ்வடிப்படைக் குறிப்புச் சொல்லே ருக்கு. யசுர். சாமம். அதர்வணம் என்று வடமொழியிலும் தவளாகரம் தத்தவுரியம் பூவூடியம் வாமம் எனத் தமிழ் மொழியிலும் தோன்றியவாறும் நால்வகைப் பாக்களின் இலக்கணவரம்பு தமிழுக்கே உரியனவாக இருப்பதும் இந்த இலக்கண வரம்பில்லாத எந்த மொழியும் மறையைச் சொல்லுவதற்கு முடியாதென்ற விவரமும் இந்த நால்வகைப் பாவையும் புறப்புறமாக நீக்கிவிட்டு புறத்தைச் சார்ந்து வேத நூற்பா அமைக்கப் பெற்றிருக்கின்ற விவரமும் அதையும் நீக்கி அகப்புறத்தைச் சார்ந்து கட்டளைத்திறம் வகுக்கப் பெற்றிருக்கின்ற விவரமும் அதையும் நீக்கி வேதம் முடிந்த இடத்தில் புறப்புறம் புறம் அகப்புறம் நீங்கிய அகத்தில் எழுதாக்கிளவியாகிய மறை தோன்றும் விவரமும் கூறினோம். அதில் இந்த நட்டபாடைப் பண்ணிற்றோன்றிய எழுதாக்கிளவி பிரணவம்.

Koviloor Digital Library

மறைக்கு முதலிற்றேன்றும் பிரணவம் கூறும் மறைமொழி

மறையோதுமின்ற முறையில் முதற்றுவக்கமாக ஓங்காரத்தை யுச்சரிக்கும் வரம்பு நம் தமிழ்மறையில் நட்டபாடைப் பண்ணிற்குரிய இசையில் அதில் வரும் எட்டுக் கட்டளைகளையும் ஓதுவதேயாம் என்பது மேற் கூறிய விவரங்களால் தெளியத் தக்கதொன்று.

மறைமொழி ஓங்காரத் தோற்ற விரி

மேற்கூறியவாறு எழுதாக்கிளவியில் மொழியாமல் ஓம் என்று வாக்கினுற் சொல்லி மறையோதத் துவங்குவது அன்று பிரமன் மறையோதத் துவங்கியது போன்றதேயாம். வேதப் பொருட்டோற்றம் இந்த ஓங்காரம் தோன்றுவதோடு நின்றுவிடவில்லை. அநுபூதி சாதன நிகழ்ச்சியில் தத்துவரூபம் தத்துவ சுத்தி தத்துவ தரிசனம் ஆன்மரூபம் ஆன்மசுத்தி ஆன்ம தரிசனம் சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் எனப் பதிப்பொருட்டொகை தோன்றுவ போன்று இதிலும் பத்து வகைப் பொருட் பகுதி தோன்றும்.

திருமுறைப் பெயர்க்காரணம்

அப்படித் தோன்றுவதில் கூடி இலயாங் கொள்ளும் குடிலை என்னும் பிரணவத்தினின்று சகல கலைகளும் தோன்றும் அந்தக் கலைகளனைத்தையும் முறைப்படுத்தி வரம்பு செய்து நிறைவுபடுத்தியதே திருமுறையாகும்.

மறைவகுத்தற்குரியவர் தகுதி விளக்கம்

மேற்கூறியவாறுன விளக்கங்களை முறைப்படியுணர்ந்து கொள்ள அதற்குரிய முறையோடு பயிலல் வேண்டும். இந்த இலக்கண வரம்புணர்ந்த புலமையாளர் அப்புலமையின் காரணமாக மட்டும் வேதநூல் செய்ய முடியாது. அதற்குரிய தகுதி பூதத்திற்கு ஆதியாயுள்ள நாதத்தை வசப்படுத்தி அதனுல் பூதநாயகனையும் பூதங்களையும் செயல்படச் செய்யும் தன்மை வாய்ந்தவொருவருக்கேயாம் அவ்வாறுன தன்மைகளை தன்னுற்றல் கொண்டு செய்யாமல் வேதப் பாசுரங்களைக் கொண்டு செய்து காட்டியவர்கள் செய்த வேத நூற்பாடல்கள் தான் இப்பொழுது நாம் அடங்கன்முறை என்று கொண்டாடப் பெறும் திருமுறைத் தொகுதி.

முதல் திருமுறை ஏழு பண்கள் - விளக்கச் சுருக்கம்

திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரமாகிய திருமுறை பெருநூலிற்கு இலக்கண விளக்கம்/ பொருள் விளக்கம் எழுதும் பொழுது பஞ்சரத்திர வைகாநேய ஆகம மறைநுதலி புகுதலில் முதலாவது நட்டபாடைப் பண்ணின் எழுதாக்கிளவி துவிதசித்தாந்த சுருதி (அஉம(ஓம்)) இரண்டாவது தக்கராகப்பண்ணின் எழுதாக்கிளவி இருக்கு வேதம் என்னும் தவளாகரச் சருதி (ந). மூன்ருவது பழந்தக்கராகப்பண்ணின் எழுதாக்கிளவி இயற்சீர்வேதம் என்னும் தத்தவுரியச் சுருதி (ம). நான்காவது தக்கேசிப்பண்ணின் எழுதாக்கிளவி சாமவேதம் பூவுடியச் சுருதி (சி) ஐந்தாவது குறிஞ்சிப்பண்ணின் எழுதாக்கிளவி அதர்வண வேதம் என்னும் வாமநூற் சுருதி (வ) ஆருவது வியாழக்குறிஞ்சிப் பண்ணின் எழுதாக்கிளவி வேதாந்தம் என்னும் அறவண்ணச் சுருதி (ய) ஏழாவது மேகராகக் குறிஞ்சிப் பண்ணின் எழுதாக்கிளவி அத்துவித சித்தாந்தம் என்னும் இறைவண்ண நிறைவெள்ளியற்சுருதி (உஅம(ஓம்) ஆக வேதம் நான்கினும் மெய்பொருளாகிய நாதன் நாமம் ஓம் நமசிவய ஓம். இந்நூல் வெளிவரும் காலம் கலியின் கொடுமை தீரும். தமிழின் பொற்காலம் மலர்ந்து மணம் பெற்று இவ்விரிவுலகம் உய்யும்.

Koviloor Digital Library

உ
...மயம்
...வாழ்க குருவே துணை

எம் ஞானத் தெளிவு குரு இயற்றிய

ஞான சரஸ்வதி பதிகம்

பண் : பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சிரேஸ்டம் நிறைந்த தவளம் படர்ந்து திகழ்கின்ற துய்யஒளியின்
திரேளோ ருருக்கொண் டிலங்கின்ற போன்று திருமேனி கொண்டவிமலை
புரளோத மென்ன நிலநின்றெழுந்து பொங்கித் ததும்பு புனலால்
நிரலோங் குசாலி வயற்கோவில் வீடுநிலை பெற்றிருக்குமிடமே. க

சிரையஸ் ஸதான வொலி மல்குவீணை சிவஞான நல்குசுவடி
கரைகண்ட கோவை மணிமாலைகொண்டு கமலத்திருக்குமிறைவி
விரைகொண்ட வண்ண மலர்சிந்துசோலை விரிசுழியாறும் எழிலார்
திரைகொண்ட வாவி திகழ்கோவில்வீடு திகழத் துலங்குமிடமே. உ

சிரோஒண் மணியாய்த் தரிக்கின்ற தேவன்சிகுவை யஃதுண்மை மொழியும்
புரோவோதி யற்கையினர் நாவும் வீடாய்ப் பொருந்தித்துலங்கு மிறைவி
சரோ சத்தி லன்னம் தளிதன்னில் ஈசன் தமிழ் தன்னிலோது மறைபோல்
திரோதாயி யற்றோர் திகழ்கோவில் வீடு தெளிவுற்றிருக்குமிடமே. ௩

சிரஅவ்வு ஓதும் அறுபத்து நான்கு தெளிபோத நல்கு நோக்கும்
பிரவாக மாகக் கவிதாம் ருதஞ்சீர் பெறநல்கு துப்புமுடையாள்
வரவாக நல்ல வெனவைம் புலத்தார் மகிழ்வாக வேணதுதவித்
திரமாக வாழ்வோ ருடைக்கோவில் விடு திகழத் துலங்குமிடமே. ௪

உலகத்திலோங்கு பெருமக்களுற்ற வுயர்மேதை யென்று புகழப்
பலகற்ற பேரும்துதி செய்ய ஞானப்பனுவல் நுவலத்தருந்தாய்
நலகற் றுயர்ந்தோர் கதிவேண்டி நோற்றல் நயந்தோரிடமுமனையும்
திலகங் களென்ன வளர்கோவில் வீடு சிறப்புற்றிருக்குமிடமே. ௫

சவையோர் விரும்ப மதுரஞ் சிறந்து சதுரா யியம்பும் உரையும்
நவையற்ற ஓசை யெழிலுஞ் சமஸ்த நலமும் பெறச்செய் இறைவி
சுவைமிக்க சித்ரமணி மாடகூடச் சுடர்மாளிகைகள் நிதியக்
குவைகள் நிறையும் பதிக்கோவில் வீடு குலவிப் பொருந்துமிடமே. ௬

மொழிகின்ற ஆசுமதுரம் விசித்ர முயர்வாய வித்தாரமாம்பா
பொழிகின்ற காள முகிலென்ன வாக்கிற் பொருந்தத் தரிக்கும் இறைவி
கழிகின்ற நாட்கள் இழியாதறஞ் செய்கவின் மிக்க மக்கள் மறைநூல்
வழிநின்று காட்டும் உயர்கோவில் வீடு மகிழ்வா யிருக்குமிடமே. எ

Koviloor Digital Library

கலைஞானமான தறுபத்து நான்குங் கனிவாயுணர்த்தியருளி
நிலையான ஞான சிவபோத நல்கி நிறைவாய வின்பந்தருந்தாய்
குலையான தோங்கும் பலாமா நறும்பூங் குளிர்சோலை யெங்குமுளதாய்
தலையான வாழ்வு நிலைகோவில் வீடு சதுரா யிருக்குமிடமே. அ

நவமாம் வியாக ரணமோர்ந்து வேதம் நவில்கின்ற ஞானம்அருளி
பவமாயை நீக்கிச் சிவஞான மாக்குபவளாய் விளங்கு மிறைவி
தவராச யோகர் சதுர்வேதம் ஓது தமிழ்நன்குணர்ந்த பெரியோர்
சிவராச தானிஎனும் கோவில்வீடு சிறப்புற்றிருக்கு மிடமே. கூ

எழுகோணம் எட்டுள் நடுவிந்து வட்டம் இதழான தூடக்ஷரங்கள்
வழுவாதநதே சாட்சியாய்த் துலங்க வரை சக்கரத்தின் இறைவி
நழுவாத வாய்மை யுடையோர்கள் ஓதநல மல்கு வேதஒலியால்
எழுதாத கேள்வி தெளிகோவில் வீடு இசைவா யிருக்குமிடமே. ம

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

எம் ஞானத் தெளிவு குரு இயற்றிய

திருமகள் பதிகம்

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

திருமா மகளார் இருநால் வகையாம்
பெருமா பொருளும் பிரியா தருள்வாள்
மருவார் மலரீ ரிருநா லதுவாய்
திருவார் திரயன் சீர்தா டொழவே. க

சீர்தா டொழுது சிவமந் திரமாம்
பேர்பா சுபதம் பெருகத் திருநீ
றேர்பெற் றிடமெய் யெங்கும் அணிவோம்
சேர்வுற் றிடுவாள் திருவார் திரமே. உ

திரமா யொளிரத் தீபஞ் சிவனுர்க்
கரவோ மெனவே யன்போ டிடுவோம்
உரமாய்த் திருமா துறுவாள் நலமே
பரவா வருமா பலியோர் எலியே ௩

Koviloor Digital Library

ஏடார் மலராள் என்றும் பிரியாள்
வாடா நறுமா மலர்எட் டதனுல்
தோடார் செவியன் துணைதா டொழுவோம்
தேடா வருவாள் திருமா தவளே. ௪

அவளோ டவனு யமையும் ஒருவன்
சிவசங் கரனற் றிருவார் திரையன்
இவனே மலரெட் டிட்டுத் தொழுவோம்
நவமே தருவாள் நளினத் திருவே. ௫

நளினத் திருவென் னுளும் பிரியாள்
ஒளிசேர் மூர்த்தம் ஓரெட் டுடையோன்
தளிபோய் மூவர் தமிழ்ஆ ரணம்வாய்
குளிரப் பாடி குலவிப் பணிவோம். ௬

குலங்கொள் ளன்பிற் கூடாற் பணிசெய்
சிலந்தி யதுகோச் செங்கண் வேந்தாய்
நிலங்கா வலனும் நியதி யளித்தோன்
பொலந்தாள் பணிவோம் பொலியும் திருவே. ௭

திருநின் றதனுற் செம்மை செறியும்
உருவொன் ருய வொளியே சிவமாம்
அருணீள் சுடராம் அதனைப் பணிவோம்
பொருணீ டகமே பொலியுந் திருவே. ௮

பொலியும் மணிநெல் பொன்வாழ் கணம்ஆன்
வலிசேர் அரசு மக்கள் சுற்றம்
மலியெண் திருவும் வளரும் நலமே
பலிதம் சிவனுர் பதமே பணிவோம். ௯

பணியைப் பணிய பணியாய் யணிவோன்
மணியே மணியாய் மணிமந் திரமாம்
அணியை யணியாய் அணியிட் டணிவோம்
தணியா தணியெட் டணிமெய் திருவே. ௰

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

குருநாதர் குடும்பம்

"தமிழ் வேத நாவலர்"
"வைத்தியமணி"

சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை

குருநாதரின் தந்தையார் வேலாயுதம்பிள்ளை
தாயார் சாத்தாயி அம்மாள்

குருநாதரின் மனைவி
தெய்வானை அம்மாள்

குருநாதரின் சகோதரர்
சித.வே. முருகேஷ் பிள்ளை அவர்தம் மனைவி

குருநாதரின் மகள்
திருமதி. தொ. கௌரி அவர்தம்
கணவர் திரு. தொண்டிராஜ்

குருநாதரின் மகன்
திருமூலநாதன்

குருநாதரின் பேரன்
T. மகாலிங்கமூர்த்தி

குருநாதரின் பேரன்
T. சரவணன்

குருநாதரின் பேத்தி
R. சோலையம்மாள் - N. ராமசந்திரன்
R. தெய்வப்பிரியா R. கிருஷ்ணவேணி

Koviloor Digital Library

சற்குருவின் குறிப்பு

இந்த வுலகம் மக்கள் நலத்தையே எண்ணிக் கொண்டிருக்கின்ற சான்ருேர்களால் நிலைத்திருக்கின்றது. தகவுடைய சான்ருேர்களின் எண்ணத்தில் மாறுபாடு நிகழின் இவ்வுலகின் நிலையும் மாறுபடும் என்பது திருவள்ளுவப் பெருந்தகையார் போன்ருேர்களின் வாக்கால் உணரலாம்.

அருள்நலம் மலிந்த ஞானியார்களே சான்ருேர்கள் எனப் போற்றப்படுகின்ருர்கள். பலப்பல நூற்றாண்டுகள் இடையீடுபட்டே ஞானியர் இவ்வுலகில் தோன்றுகின்றார்கள். ஞானியர்களின் தோற்றம் மாந்தரின் நல்ல தவத்தால் நிகழ்கின்றது.

தேவகோட்டை மாநகர் தக்காராம் தாழ்விலாச் செல்வர் மிகுந்த பெருநகர் ஆகும். திருமுறைத் தொண்டும், திருக்கோயில் திருப்பணியும் இந்நகரத்தார்களின் செல்வப் பெருக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன.

சீவசமாதியடைந்த செல்வராம் சிதம்பரனுரின் முன்னேர்களில் பலரும், பின்னேர்களில் பலரும் ஞானியர்களாய் விளங்குதல் இவர்களின் மரபு வழிப் பட்டதாகும். சிதம்பரனாரின் குடி வழி வந்தவரே சித. வேலாயுதம் பிள்ளை ஆவர். இவர்களின் இல்லத் துணைவியார் சாத்தாயி அம்மை.

சாத்தாயி அம்மா என்றால் தேவகோட்டை மக்களுக்கும், அதன் அருகில் அமைந்த நாட்டுப்புற மக்களுக்கும் நன்ருக விளங்கும். அந்த அளவிற்குக் குழந்தை வைத்தியத்தில் கொடி கட்டிப் பறந்திருக்கிறது அம்மையாரின் புகழ்.

சாத்தாயி அம்மா கைபட்டாலே குழந்தைகள் பலரும் நலம் பெறுவர் என்பது பரவலாகப் பேசப் படுகின்றது இன்றும். சித. வேலாயுதம் பிள்ளைக்குச் சாத்தாயி அம்மை மணிவயிற்றில், இராட்சச ஆண்டு ஆவணித் திங்கள் உய ஆம் நாள் (20) ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தன்று நம் கலாநாயகர் தோற்றஞ் செய்திருக்கின்ருர்கள்.

நம் கலா நாயகரின் சாதக அமைப்பு மீன லக்கினம். மீனத்தில் குரு மிதுனத்தில் செவ்வாயும் சனியும், கடகத்தில் சந்திரனும் கேதுவும், சிம்மத்தில் சூரியனும், சுக்கிரனும், கன்னியில் புதன், துலாத்தில் மாந்தி, மகரத்தில் ராகு.

குரு, சந்திரன், சூரியன் ஆகிய மூவரும் ஆட்சிபெற்றவர்கள். புதன் ஆட்சியொடு உச்சமும் பெற்றவர். இத்தகைய சீரிய அமைப்பில் கோள்கள் நின்ற தன்மை பெருந்தகையார் அவர் தமிழ் நான்மறைகளிலும், வேதாந்த சித்தாந்த சாத்திரங்களிலும், மருத்துவம் சோதிடம் ஆகிய கலைகளிலும், அட்டாங்க யோக சித்தியில் முதிர்ந்த நிலைபெற உறுதுணையாய் அமைந்தது.

"மீனத்தானை விடேல் விடேல் என்று மோனத்தார் சொன்ன முறை" என மீன லக்கனத்தின் பெருமையைச் சான்ருேர்கள் கூறுவர்.

Koviloor Digital Library

நம் அகத்தில் ஒப்புமைப்படுத்திய நட்சத்திரம் - மூர்த்தி - ஸ்தலம்

	நம் உறுப்புக்கள் 32 முப்பத்திரண்டும் கூடிய ஒன்று மெய்	நட்சத்திரம் 28		சூக்கும்லிங்கம் ஆகிய வீரட்டம் அ(8), சத்தத்தானம்எ(7), வலியாதியர் (நவக்கோள்) கூ (9) நவநாயத்தலம் சந்தித்தானம் ங (3)
க.	குழல்	அச்வதி	வீரபத்திரன்	திருப்பறியல் வீரட்டம்
உ.	நெற்றி	பரணி	காலகாலன்	திருக்கடவூர் வீரட்டம்
ங.	பிடரி	ரோகிணி	சலந்தாரி	திருவிற்குடி வீரட்டம்
ச.	உச்சி	திருவாதிரை	அந்தகாரி	திருக்கோவலூர் வீரட்டம்
ரு.	புட்டம்	பூசம்	காமாரி	திருக்கொறுக்கை வீரட்டம்
சா.	இடை	ஆயில்யம்	கெஜாரி	திருப்பழுவூர் விரட்டம்
எ.	முதுகு	மகம்	புராரி	திருவதிகை வீரட்டம்
அ.	பின்தாரை	பூரம்	வைரவர்	திருக்கண்டியூர் வீரட்டம்
கூ.	கொப்பூழ்	அஸ்தம்	ஞாயிறு	திருவையாறு
௰.	மேல்வயிறு	சுவாதி	திங்கள்	திருப்பழனம்
௰க.	நெஞ்சு	அநுடம்	செவ்வாய்	திருச்சோற்றுத்துறை
௰உ.	மார்பு	கேட்டை	புதன்	திருவேதிகுடி
௰ங.	குதம்	மூலம்	வியாழன்	திருக்கண்டியூர்
௰ச.	குய்யம்	பூராடம்	வெள்ளி	திருப்பூந்துருத்தி
௰ரு.	உதரம்	திருவோணம்	சனி	திருநெய்த்தானம்
௰சா.	மெய்	கார்த்திகை	ரவி	திருத்தில்லை
௰எ.	புயம்	மிருகசீரிடம்	மதி	திருஆலவாய்
௰அ.	அங்கை	புனர்பூசம்	சேய்	திருஅண்ணாமலை
௰கூ.	விரல்	உத்தரம்	மால்	திருஆனைக்கா
உ௰.	கை	சித்திரை	பொன்	திருப்பெருந்துறை
உ௰க.	தொடை	விசாகம்	கவி	திருவாரூர்
உ௰உ.	பாதம்	உத்திராடம்	காரி	திருப்புள்ளிருக்கு வேளூர்
உ௰ங.	மோவாய்	அவிட்டம்	ராகு	திருஇராமேச்சுரம்
உ௰ச.	விரல்	பூரட்டாதி	கேது	திருகேதீச்சுரம்
உ௰ரு.	கபோலம்	சதயம்	சரம்	திருக்கடம்பர் கோயில்
உ௰சா.	குரல்வளை	உத்திரட்டாதி	திரம்	திருஐயடிகூர்மலை
உ௰எ.	கண்டம்	ரேவதி	உபயம்	திருஈங்கோய்மலை
உ௰அ.	மூக்கு	-	புதன்	-
உ௰கூ.	வாய்	-	செவ்வாய்	-
ங௰.	கண்	-	வெள்ளி	-
ங௰க.	காது	-	வியாழன்	-
ங௰உ.	கால்	-	சனி	-
ங௰ங.	கடிதடம்	அபிஜித்	-	

Koviloor Digital Library

ழ்க குருவே துணை

திருமூலர்

ஓவியம் "**வைத்தியமணி**", 1931

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

தேவகோட்டை முத்தமிழ் வேதத் திருச்சபையார்

ஞானத்தெளிவுகுரு. சித.வே. ஷண்முகநாதபிள்ளை (முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர்) சகோதரர் சித.வே. முருகேஷ் பிள்ளை அவர்தம் மனைவி.

திரு. அழ. மாணிக்கம்

திரு. கனகசுப்பிரமணியன்

செயலாளர் திரு. கா.சுப்பையா சேர்வை அவர்கள் மனைவி காளியம்மாள்

புலவர் கா. அப்பாராசன்

முத்தமிழ் வேதத்திருச்சபை இணைச் செயலாளர் ஆதிரெத்தினம் மனைவி திலகவதி.

திரு. சோம. சின்ன வள்ளியப்பன் மனைவி சௌந்தரம் தவப்புதல்வர்கள் கார்த்திக், மங்களேஸ்வரன்

திரு. உத்தமன் மனைவி திருமதி. ராஜேஸ்வரி

முத்தமிழ் வேதத்திருச்சபை இணைச் செயலாளர் இசக்கியப்பன் மனைவி

திரு. வெ. செல்வமணி

திரு. ச. ஜெயசக்திவேல்



திரு. காளீஸ்வரன்

திரு. கா. சிவலிங்கம்

திரு. கார்த்திகேயன்

திரு. கர்ணன்

திரு. இராம. ஞானசம்பந்தம்

திரு. சித. ஜம்புலிங்கம்

திரு. சோம. ராஜ்மோகன்

திரு. காளிமுத்து



திரு. கா. மீனாட்சிசுந்தரம்

பொருளாளர் திரு. வை. சுப்பையா மனைவி வசந்தா

Koviloor Digital Library

முத்தமிழ் வேதத் திருச்சபை ஆண்டு விழாத் தலைவராக
ஐந்து முறை பதவி வகித்த சிவபுண்ணிய சீல
தவப்புதல்வர் கைலாசநாதன் செட்டியார் அவர்கள்.

சிரஞ்சீவி டாக்டர் சித. ஏகப்பன் அவர்களின் தகப்பனார்
சாத்வீக குணம் படைத்த சிவபுண்ணிய
தவசீலர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

சிவபுண்ணிய சீல தவப்புதல்வர் டாக்டர் சித. ஏகப்ப செட்டியார் அவர்கள் மனைவி டாக்டர் முத்துலெட்சுமி ஏகப்பன்
தவப்புதல்வர் டாக்டர் செந்தில் ஏகப்பன் தவப்புதல்வி வள்ளி ஏகப்பன்

ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் புஷ்ப. சுவாமிநாதன் மனைவி அழகுமீனாள்
தவப்புதல்வர்கள் சுவாமிநாதன் புஷ்பநாதன்

Koviloor Digital Library

சிரஞ்சீவி டாக்டர் சித. ஏகப்பன் அவர்களின் தாயார்
சாத்வீக குணம் படைத்த சிவபுண்ணிய செய்த
சித. முத்துலெட்சுமி ஆச்சி அவர்கள்.



ஆண்டு விழாவில் கலந்து கொண்ட சிவபுண்ணிய
சீல மெய்யன்பர்கள்.



உலகில் சைவமும் தமிழும் தழைத்தோங்க
முத்தமிழ்வேதத் திருச்சபையின் 10 நூல்கள்
வெளியிட்ட பண்பாளர்

முத்தமிழ் வேதத் திருச்சபை துணைத் தலைவர்
புலவர். நல்லாசிரியர் க. அப்பாராசன் அவர்களுக்கு
பொன்னாடை அணிவித்தல்.

ஆண்டு விழாத் தலைவர் சாத்வீக குணம் படைத்த சிதம்பரம்
செட்டியார் மகன் சிரஞ்சீவி கனடா டாக்டர் ஏகப்பன் அவர்கள்
உரையாற்றும் நிகழ்ச்சி அருகில் சபைத்தலைவர்.

மாதவம் செய்த சிவபுண்ணிய சீல சிவனடியார்
எம். சிதம்பரம் செட்டியார் பண்ணிய பயிரில்
புண்ணியம் தெரியும் அற்புதக்காட்சி.

Koviloor Digital Library

அம்மையப்பன் துணையென வாழும் சாத்வீக குணம் படைத்த சிவனடியார் தவத்திரு எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் கலைஞானம் நூல் வெளியிட திருக்கானப்பேர் சிங்கம் சிவநெறிச் திருவாளர் சின்ன வள்ளியப்பன் செட்டியார் அவர்கள் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சி.

முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் உயர்திரு. சித.வே. முருகேஷ் பிள்ளை அவர்கள் சிவநேசச் செல்வர் சிரஞ்சீவி தேவகோட்டை முவீ. செம்பொன் (எ) அருணசலம் செட்டியார் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மகிழ்தல்.

பெத்தாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இருபத்தி நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் சித்தாந்த கலாநிதி முது முனைவர் உயர்திரு T.N. இராமச்சந்திரன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தும் நிகழ்ச்சி.

முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் சித்தாந்த கலாநிதி உயர்திரு T.N. இராமச்சந்திரன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மகிழ்தல்.

தேவாரம் ஓதிய இசைச் செம்மல் உயர்திரு எஸ். சோமசுந்தரம் அவர்களுக்கு முத்தமிழ் வேதத் திருச்சபை தலைவர் பொன்னாடை அணிவித்தல்.

முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் தவத்திரு சித.வே. முருகேஷ் பிள்ளை அவர்கள் உயர்திரு. செயலாளர் சுப்பையா அவர்கள்.

Koviloor Digital Library

முதல்முதலில் கரண இலக்கணம் உலகிற்கு கிடைக்கச் செய்த சிவபுண்ணிய சீல மெய்யன்பர் செம்பொன் அருணுசலம் செட்டியார் அவர்கள் நூல் வெளியிட டாக்டர் கு. வைத்தியநாதன் அவர்கள் முதல் பிரதியை வாங்கிய நிகழ்ச்சி.

எம் ஞானத் தெளிவு குரு நல் ஆசி பெற்ற தவச்செல்வர் சித. ஏகப்பன் அவர்கள் இரத்தினச் சுருக்க இராமாயணம் நூல் வெளியிட தேவகோட்டை தேவார தெய்வமணி முவீ. செம்பொன் (ஏ) அருணுசலம் செட்டியார் அவர்கள் முதல் பிரதி பெற்ற நிகழ்ச்சி.

சித்தாந்த கலாநிதி முது முனைவர் உயர்திரு. T.N. இராமச்சந்திரன் அவர்கள் "பண் முதலும் பாங்கார் திறமும்" நூலை வெளியிட முதல் பிரதியை சிவநேசச் செல்வர் உயர்திருவாளர் S.M.PL. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பெற்ற நிகழ்ச்சி

முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் 27ஆம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தும் நிகழ்ச்சி. சபைக்கு ஆண்டு விழாத் தலைவராகவும் சிறப்புச் சொற்பொழிவாளராகவும் பலமுறை வந்த தஞ்சாவூர் சித்தாந்த கலாநிதி முது முனைவர் உயர்திரு. T.N. இராமச்சந்திரன் அவர்கள்.

முத்தமிழ் வேதத்திருச்சபை பொருளாளர் உயர்திரு. வை. சுப்பையா அவர்கள் அறிக்கை வாசித்தல்.

உயர்திரு. இசக்கியப்பன் இணைச் செயலாளருக்கு பொன்னுடை அணிவித்தல்.

Koviloor Digital Library

முத்தமிழ் வேதத் திருச்சபைத் துணைத் தலைவர் அகத்திய நூலிற்கு பொருளுரை எழுதிய நல் மாணாக்கர் புலவர் நல்லாசிரியர் க. அப்பாராசன் அவர்களுக்கு தலைவர் சித.வே. முருகேஷ் பிள்ளை அவர்கள் பொன்னுடை போர்த்தி மகிழ்தல்.

முத்தமிழ் வேதத் திருச்சபை துணைத் தலைவர் புலவர் நல்லாசிரியர் க. அப்பாராசன் அவர்கள் சொற்பொழிவு ஆற்ற அருகில் திரு. K.R. முத்தையாச் செட்டியார் அவர்கள் தலைவருக்கு பொன்னுடை போர்த்தி மகிழ்தல்.

பண்ணிலக்கணச் சூக்கம் உலகிற்கு கிடைக்க உதவிய அ. இராமசாமி ஆசிரியர் அவர்கள் (ஆதிரெத்தினம் தகப்பனார்) நூல் வெளியிட முதல் பிரதியை சுவாமி அன்பிற்கரசு அவர்கள் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சி.

திரு. இராம. ஆதிரெத்தினம், மனைவி திலகவதி, குழந்தைகள் ஆ. ஜெயந்தி, ஆ. பத்மா, ஆ. தீபா, தாயார் மீனாள், பேத்தி கா. ஜீவசுதா, பேரன் கா. குமாரவேல்.

முத்தமிழ் வேதத் திருச்சபை ஆண்டுவிழா நிகழ்ச்சியில் சிவபுண்ணிய சில மெய்யன்பர்கள் அமர்ந்திருக்கும் காட்சி.

முத்தமிழ் வேதத்திருச்சபை இணைச் செயலாளர் அவர்தம் தாயார் மீனாள், மனைவி திலகவதி.

Koviloor Digital Library

ஆண்டுவிழாத் தலைவர் டாக்டர் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள் திரு. இசக்கியப்பன் அவர்களுக்கு வன்தொண்டர் என பாராட்டி வாழ்த்து மடல் வழங்கும் நிகழ்ச்சி.

இணைச் செயலாளருக்கு பொன்னுடை அணிவித்தல்.

உயர்திருவாளர் கரு. முத்தையா செட்டியார் அவர்களுக்கு முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் பொன்னுடை போர்த்தி மகிழ்தல்.

சுவாமி அன்பிற்கரசு அவர்களுக்கு பொன்னுடை அணிவித்தல்.

"பண் முதலும் பாங்கார் திறமும்" நூல் ஆசிரியர் புலவர் நல்லாசிரியர் களிமேடு அப்பர் அவைப் புலவர் க. அப்பாராசன் அவர்களுக்கு தஞ்சாவூர் ஒன்றியத் தலைவர் து. செல்வம் அவர்கள் பொன்னுடை போர்த்தி மகிழ்தல்.

உயர்திரு. கரு. முத்தையா செட்டியார் அவர்கள் இராமாயண இலக்கியம் நூல் வெளியிட கோயம்புத்தூர் சித்தர் அடிபொடி அவர்கள் முதல் பிரதியை பெற்ற நிகழ்ச்சி.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை

ஞானசம் பந்தர் நவின்ற தேவாரமாம்
மோனத் தமிழ்மறை முற்றிற்கும் - வானம்
புவிபுகழும் வேதபொருள் விளக்கம் செப்பும்
கவிசெய்ய வைங்கரன்றுள் காப்பு.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பதிக எண்	எட்டுக் கட்டளை யமைந்த நட்டபாடை பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம்									கனரகம் , பண்ணியல் கனரகம்
பண்தலைப்பு	௧ எழுத்து	௨ அசை	௩ சீர்	௪ யாழ்	௫ யாப்பு	௬ அடி	௭ பண்	௮ திறம்	௯ பண்தார்	
௧. தோடுடைய செவி	௰௮ ௰௯	நேர்நிரை	கூவிளச்சீர் நாலு	நெய்தல்	ஆசிரியவஞ்சி இயற்சீர்	அளவடி	நட்டபாடை (யாப்பு)	நைவளத்திறம்	௰௯ கணபதி	பிரதாபநாட்டை * லலிதக்கிரியா
௨. குறிகலந்த இசை	௰௮ ௰௯	நேர்நிரை	கூவிளச்சீர் நாலு	நெய்தல்	ஆசிரியவஞ்சி இயற்சீர்	அளவடி	நட்டபாடை (யாப்பு)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக்குறிஞ்சி
௩. பத்தரொடு பலரும்	௰௮ ௰௯	நேர்நிரை	கூவிளச்சீர் நாலு	நெய்தல்	ஆசிரியவஞ்சி இயற்சீர்	அளவடி	நட்டபாடை (யாப்பு)	செந்திறம்	௰௯ கணபதி	சுத்தநாட்டை
௪. மைம் மருபூங்குழல்	௨௰ ௨௰௧	நேர்நிரை	கூவிளச்சீர் இரண்டு	நெய்தல்	ஆசிரியக்கவி வெள்ளை நெடிற்றுறை	நெடிலடி	நட்டபாடை (அடி)	அயிர்ப்புத்திறம்	௰௯ கணபதி	சாய நாட்டை * தேசிய நாட்டக் குறிஞ்சி
௫. செய்யருகே புனல்	௨௰ ௨௰௧	நேர்நிரை	கூவிளச்சீர் இரண்டு	நெய்தல்	ஷ	நெடிலடி	நட்டபாடை (அடி)	செம்பாலைத்திறம்	௰௯ கணபதி	கேதார நாட்டை
௬. அங்கமும் வேதமும்	௨௰ ௨௰௧	நேர்நிரை	கூவிளச்சீர் இரண்டு	நெய்தல்	ஷ (மயக்கம்)	நெடிலடி	நட்டபாடை (அடி)	நவில்திறம்	௰௯ கணபதி	சாரங்க நாட்டை * தேசிய நாட்டக் குறிஞ்சி
௭. பாடகமெல்லடிப்பா	௨௰ ௨௰௧	நேர்நிரை	கூவிளச்சீர் இரண்டு	நெய்தல்	ஆசிரியக்கவி வெளி நெடிற்றுறை (மயக்கம்)	நெடிலடி	நட்டபாடை (அடி)	அயிர்ப்புத்திறம்	௰௯ கணபதி	சாய நாட்டை
௮. புண்ணியர் பூதியர்	௨௰ ௨௰௧	நேர்நிரை	கூவிளச்சீர் இரண்டு	நெய்தல்	ஷ (மயக்கம்)	நெடிலடி	நட்டபாடை (அடி)	ஆற்றுக்குறிச்சீர்திறம்	௰௯ கணபதி	சிந்து நாட்டக் குறிஞ்சி
௯. வண்டார்குழலரி	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰. உண்ணாமுலை	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	குறிச்சீர்ச்செந்திறம்	௰௯ கணபதி	கம்பீர நாட்டை
௰௧. சடையார்புனலு	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰௨. மத்தாவரைநிறு	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	ஆற்றுக்குறிச்சீர்திறம்	௰௯ கணபதி	சிந்து நாட்டக் குறிஞ்சி
௰௩. குரவங்கமழ்	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰௪. வானிற்பொலி	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰௫. மையாடியகண்டன்	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰௬. பாலுந்துறுதிரளா	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்) தலம்	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰௭. மனமார்தரு	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி
௰௮. ஆலைப்படை	௰௬ ௰௭	நேர்நிரை	மாங்கனிச்சீர் மூன்று	குறிஞ்சி	கலித்துறை வஞ்சி	அளவடி	நட்டபாடை (திறம்)	குறிச்சீர்ச்செந்திறம்	௰௯ கணபதி	கம்பீர நாட்டை
௰௯. பிறையணி படர் சடை	௨௰௪	நிரை	விளச்சீர் ஆறு திறம் நறுநிழல் மூன்று	நெய்தல் யாழ் திறம் குறிஞ்சி	ஆசிரிய அம்போதரங்க வண்ணக ஒத்த யாழிசை யாப்பு திறம் முதிர் கலித்துறை	முத்தக அளவடி	நட்டபாடை (யாழ், சீர் யாப்பு திறம்)	குறிச்சீர்ச்செந்திறம்	௰௯ கணபதி	கம்பீர நாட்டை * கமலாதரங்கணி
௨௰. நடநிலவிய மலை	௨௰௪	நிரை	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி * நாகதரங்கணி
௨௰௧. புவம்வளிகனல	௨௰௪	நிரை	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	குறிச்சீர்ச்செந்திறம்	௰௯ கணபதி	கம்பீர நாட்டை * கமலாதரங்கணி
௨௰௨. சிறைநின நடு	௨௰௪	நிரை	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	படுகுறிச்சீர்திறம்	௰௯ கணபதி	நாட்டக் குறிஞ்சி * நாகதரங்கணி

திருச்சிற்றம்பலம்

ஆக நட்டபாடைப்பண் பதிகம் ௨௰௨. (கட்டளைத் திறங்கள்) நைவளத்திறம். படுகுறிச்சீர்திறம். செந்திறம். அயிர்ப்புத்திறம். செம்பாலைத் திறம். நவில் திறம். ஆற்றுக்குறிச்சீர் திறம். குறிச்சீர்செந்திறம் ஆக எட்டுக் கட்டளைத்திறங்கள்.

நட்டபாடை என்பது

நாட்டம் இரண்டு நாடவொன் ருனபோல்
சீர்யாழ் யாப்புஅடி திறம்இவை நாட்டம்
படஇரண் டொன்றும் பண்நட்ட பாடை

௨

பாலை நெய்தல் பாடிய விளக்கம்

தோடுடைய எனத் தொடங்கும் பதிகம்
முதலை வாகிய மூன்று பதிகத்து
உள்ளுறு பொருளை ஊன்றி நோக்கில்
முன்னியை நெய்தல்யாழ் முதிர்ந்து பாலையாய்
யாப்பொடு சம்பந்த மாக வமைந்து
சம்பந்த முனிவன் சாற்றும் இயற்சீர்
வஞ்சி யாப்பென வாதல் தோன்றும்.

Koviloor Digital Library

தக்கராகப்பண் பதிகம் ௨௰௪, (கட்டளைத் திறங்கள்) செந்திறம், குறிச்சீர்திறம், ஆற்றுப்படுதிறம், படுதிறம், ஆற்றுத்திறம், மெய்த்திறம், அயிர்ப்புத்திறம், ஆக ஏழு கட்டளைத் திறங்கள் ஆம்

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அதில், செந்திறம் - ஏகதாளம்
குறிச்சீர்திறம் - ரூபக தாளம்
ஆற்றுப்படுதிறம் - திரிபுடை தாளம்
படுதிறம் - செயம்பை தாளம்
ஆற்றுத்திறம் - மட்டியதாளம்
மெய்த்திறம் - துருவதாளம்
அயிர்ப்புத்திறம் - அடதாளம், ஆக அமையும்.

பதிக எண் / பண்தலைப்பு	ஏழு கட்டளை யானமைந்த தக்கராக பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம் ௧ எழுத்து	௨ அசை	௩ சீர்	௪ யாழ்	௫ யாப்பு	௬ அடி	௭ பண்	௮ திறம்	௯ பண்தார்	கனரகம், பண்ணியல் கனரகம்
௧. மடையில வாளை	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	செந்திறம்	சத்தமாதர்	ஹரிப்பிரியா ஏகதாளம்
௨. பூவார் கொன்றை	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௩. மருவார் குழலி	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	செந்திறம்	சத்தமாதர்	ஹரிப்பிரியா ஏகதாளம்
௪. வெங்கள் விம்மு	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௫. முந்தி நின்ற	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௬. செப்ப நெஞ்சே	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	ஆற்றுப்படுதிறம்	சத்தமாதர்	ஷண்முகப்பிரியா திரிபுடைதாளம்
௭. ஊருலாவு பலி	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	படுதிறம்	சத்தமாதர்	சந்திரசூடப்பிரியா செயம்பைதாளம்
௮. விதியாய் விளைவாய்	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௯. விழு நீர் மழு	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	செந்திறம்	சத்தமாதர்	ஹரிப்பிரியா ஏகதாளம்
௰. ஓடே கலனுண்ப	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௰௧. கவினநீடெரி	௰௨ ௰௩	நேர் நிரை	மாச்சீர் நான்கு	மருதயாழ்	வஞ்சி வெளி விருத்தம்	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௰௨. அடலேறமரும்	௰	நிரை	மாச்சீர் மூன்று	மருதயாழ்	நிரையிசை வஞ்சி வெண்டுறை	அளவடி	தக்கராகம் (யாப்பு)	செந்திறம்	சத்தமாதர்	ஹரிப்பிரியா ஏகதாளம்
௰௩. அரையார் விரி	௰	நிரை	மாச்சீர் மூன்று	மருதயாழ்	நிரையிசை வஞ்சி வெண்டுறை	அளவடி	தக்கராகம் (யாப்பு)	செந்திறம்	சத்தமாதர்	ஹரிப்பிரியா ஏகதாளம்
௰௪. கலையார்மதி	௯ ௰	நேர் நிரை	மாச்சீர் மூன்று	மருதயாழ்	வஞ்சி வெண்டுறை	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௰௫. அரவச் சடை	௯ ௰	நேர் நிரை	மாச்சீர் மூன்று	மருதயாழ்	வஞ்சி வெண்டுறை	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௰௬. கரவின்றினன்மா	௯ ௰	நேர் நிரை	மாச்சீர் மூன்று	மருதயாழ்	வஞ்சி வெண்டுறை	அளவடி	தக்கராகம் (யாப்பு)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௰௭. அந்தமுமாதியுமா	௰௬ ௫ ௰௭௬	நேர் நிரை	விளச்சீர் நான்கு கழிநெடில் - ௨	நெய்தல்	நாற்சீர்க்கழி நெடிலாசிரிய வெண்கவி	கழிநெடிலிணை யாயடி	தக்கராகம் (யாழ்யாப்பிடையில்)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௰௮. பொடியுடை மார்பி	௰௬௩. ௰௭௩.	நேர் நிரை	விளச்சீர் ௨ கழிநெடில் ௧	நெய்தல்	இருசீர்க்கழில் ஆசிரிய வெண்டாழிசை	கழிநெடிற்ருழிசை	தக்கராகம் (யாப்பில்)	ஆற்றுத்திறம்	சத்தமாதர்	வருணப்பிரியா மட்டியதாளம்
௰௯. சீரணிதிகழ் திரு	௨௰௧ ௨௰௨	நேர் நிரை	விளச்சீர் ௫, ௩	நெய்தல்	ஆசிரிய வஞ்சித் தாழிசை	நெடிற்ருழிசை	தக்கராகம் (யாழ்யாப்பிடையில்)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௨௰. பைம்மா நாகம்	௰௭ ௰௮	நேர் நிரை	பூச்சீர் மூன்று	முல்லையாழ்	வெண்டுறைக் கோவை இயற்சீர் யாப்பு	நெடிலடி	தக்கராகம் (யாழில்)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௨௰௧. வடந்திகழ் மென்	௰௬ ௰௭	நேர் நிரை	விளச்சீர் (௨) நான்கு	நெய்தல்யாழ்	ஆசிரியக்கவி நெடுவஞ்சி	நெடிலடி	தக்கராகம் (யாழ்யாப்பிடையில்)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்
௨௰௨. துணிவளர் திங்கள்	௨௰ ௨௰௧	நேர் நிரை	பூச்சீர் மூன்று	முல்லையாழ்	வெண்டுறை இயற்சீர் யாப்பு	அளவடி	தக்கராகம் (யாழில்)	அயிர்ப்புத்திறம்	சத்தமாதர் வயிரவர்	பவப்பிரிய அடதாளம் ★
௨௰௩. தருசவரு வாருந்	௪ ௫, வழு விகல் வெள்ளை	நேர் நிரை	பூச்சீர் (௧) வழுவிகல்	முல்லையாழ்	கட்டல்யாழ் விகற்ப வெண்டுறை இயற்சீர்	அளவடி	தக்கராகம் (யாழ்யாப்பு எதிர்)	மெய்த்திறம்	சத்தமாதர்	ராமப்பிரியா துருவதாளம்
௨௰௪. குண்டைக் குறட்	௰௩ ௰௪	நேர் நிரை	கனிச்சீர் (௨) மருட்	குறிஞ்சியாழ் மருள்தீர் முல்லை	மருட்டும் வஞ்சிக்கலி தீர் பொற்பூவியற்பா	நெடிலடி	தக்கராகம் (யாழில்)	குறிச்சீர்திறம்	சத்தமாதர்	திரியம்பகப்பிரியா ரூபகதாளம்

திருச்சிற்றம்பலம்

தக்கராகப் பண்ணிலக்கணம் :

தக்கவ விராகத் தவள தளமடற்
குமரை என்னத் தருவெண் சீரடி
யாப்பில் யாழில் யாழ்யாப் பிடையில்
யாழ்யாப் பெதிர்வில் யாழி னிடையில்
தழுவி வந்தது தக்க ராகம்.
இவற்றுள் வந்த ஏழ்வகைத் திறத்தில்
செந்திறம் விளங்கச் செய்பொருள் ஏகமே
ஆதலால்
அப்பெயர்த் தாளம் அதற்குரி மைத்தாம். (௧)
குறியிடு முருவகங் கொள்குறிச் சீர்த்திறந்
தனிமை யுடையது ரூபக தாளம் (௨)
ஆற்றுப் படும்அத் தன்மை திரிபுடைத்
தாதலால் அத்திறம் அப்பெயர்த் தாளம் (௩)
படுகர் கொள்ளும் பயம்பிற் செயம்பு
திகழ்தலாற் படுதிறம் செயம்பை தாளம் (௪)
ஆற்றின் மாட்டயம் அமையும் ஆதலால்
அத்திறம் அப்பெயர்த் தாளம் ஆகும் (௫)
சற்றுஞ் சலிப்பில் தன்மை வாய்ந்த
மெய்த்திறத் துருவ மென்னுந் தாளம் (௬)
தெளியா தயிர்ப்புச் சேரல டாததால்
அயிர்ப்புத் திறமே அடஅ தாளம் (௭)
திறமிவ் வேழிற் செனித்த தாள
விளக்கம் உரைத்தனம் மெய்யறி ஞர்க்கே (௮)

௧

தக்கராகப் பண்ணிலக்கண அற்புதம் :

தாட்டா மரையுரை தாளப் பிரியச்
சத்தியை வேண்டியித் தக்கரா கப்பண்
ஓதிப் பொற்ருளம் ஓசை யுடைத்தாய்
அருளப் பெற்ற நல்வற்புதப் பதிகம்.

★ பவப்பிரி யத்தாற் பற்றுமு யலகன்
நோயிலிம் மங்கை நோதல் அடாதென
வேத சொரூபம் விளங்க வைரவர்க்
கியர்சீர் மறையினிசை தக்க ராகப்
பண்ணயிர்ப் புத்திறம் பாடியவ் வாறறம்
விளங்கச் செய்த மேன்மைச் சிறப்பஃ
தமைந்தது துணிவளர் அற்புதப் பதிகம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணே

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பதிக எண்	மூன்று கட்டளையின் அமைந்த பழந்தக்க ராகப் பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம்									கனரகம், பண்ணியல் கனரகம்
பண்தலைப்பு	௧ எழுத்து	௨ அசை	௩ சீர்	௪ யாழ்	௫ யாப்பு	௬ அடி	௭ பண்	௮ திறம்	௯ பண்தார்	
௧. பல்லடைந்தவெ	௰௫, ௰௬	நேர் நிரை	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறையாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	அயிர்ப்புத்திறம்	ஆதிசத்தி	மானதப்பிரியா
௨. நூலடைந்த கொள்	௰௫	நேர்	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறை நேரிசை யாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	அயிர்ப்புத்திறம்	ஆதிசத்தி	மானதப்பிரியா
௩. போகமார்த்த பூண்	௰௫	நேர்	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறை நேரிசை யாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	குறிச்சீர்திறம்	ஆதிசத்தி	நடனப்பிரியா
௪. ஒல்லை யாறி	௰௫, ௰௬	நேர் நிரை	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறையாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	செந்திறம்	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௫. வெங்கண் ஆனை	௰௫, ௰௬	நேர் நிரை	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறையாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	அயிர்ப்புத்திறம்	ஆதிசத்தி	மானதப்பிரியா
௬. மறையுடையாய்	௰௫, ௰௬	நேர் நிரை	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறையாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	செந்திறம்	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௭. தேவராயும் அசுரரா	௰௫, ௰௬	நேர் நிரை	பூச்சீர் (௩)	முல்லையாழ்	வெண்டுறையாசிரியக் கோவை	அளவடி	பழந்தக்கராகம் யாழில்	குறிச்சீர்திறம்	ஆதிசத்தி	நடனப்பிரியா
௮. பூத்தேர்ந்தாயன	௮, ௯ கழில்நெடில் ௩ ௪	நேர் நிரை	கட்டல் யாழ்த்தொகை (௩) கழிநெடில்	நெய்தல்	கட்டல்யாழ்த் தொகை யொத்தாழிசைக் கழிநெடிற்றுறை	கழிநெடிலடி	யாழ்த்தொகை பழந்தக்கராகம்	செந்திறம்	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௯. ஊறியார் தருநஞ்சி	௮, ௯ கழில்நெடில் ௩ ௪	நேர் நிரை	கட்டல் யாழ்த்தொகை இயற்சீர் (௩) கழிநெடில்	நெய்தல்	ஷ	ஷ	ஷ	ஷ	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௰. காரார் கொன்றை	ஷ	நேர்	ஷ	ஷ	ஷ நேரிசை	ஷ	ஷ	ஷ	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௰௧. ஒள்ளி துள்ளக்கதி	ஷ	நேர் நிரை	ஷ	ஷ	கட்டல்யாழ்த் தொகை யொத்தாழிசைக் கழிநெடிற்றுறை	ஷ	ஷ	ஷ	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௰௨. அரியும் நம்வினை	ஷ	நேர் நிரை	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௰௩. ஒடுங்கும் பிணி	௨௰௨, ௨௰௩	நேர் நிரை	இருசீர்க்கட்டல் யாழ்	கட்டல்யாழ்	நெடிலடிக் கட்டல்யாழ்க் கலிகவி	நெடிலடி	யாழ் பழந்தக்கராகம்	ஷ	ஆதிசத்தி	சாரசப்பிரியா
௰௪. வண்டராங்கப் புன	௰௭, ௰௮	நேர் நிரை	காய்ச்சீர் நான்கு	பாலையாழ்	நிலமண்டல ஆசிரிய ஒத்தாழிசை	அளவடி	முதிர்சீர் பழந்தக்கராகம்	குறிச்சீர்திறம்	ஆதிசத்தி	நடனப்பிரியா
௰௫. நறை கொண்ட	ஷ	நேர் நிரை	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	ஆதிசத்தி	நடனப்பிரியா
௰௬. நாளாய போகாமே	ஷ	நேர் நிரை	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	ஷ	ஆதிசத்தி	நடனப்பிரியா

திருச்சிற்றம்பலம்

ஆக பழந்தக்கராகப்பண் பதிகம் ௰௬, (கட்டளைத் திறங்கள்) அயிர்ப்புத்திறம், குறிச்சீர்த்திறம், செந்திறம்
ஆக மூன்று கட்டளைத்திறங்கள்.

பழந்தக்கராகப் பண்ணிலக்கணம் :

யாப்பு முன்னமை யாழிலி யாழ்முன்
யாழ்த்தொகை தன்னில் அடித்தொடர்ச் சீர்முன்
விலக்கணச் சீரின் இயைதக்க ராகம்
முன்னுற வந்த முறையாற் பழந்தக்க
இராக மென்ன இசைக்கப் பெற்றது.

கட்டல் யாழ் : மந்திரங்களால் கட்டிப் பாடியது.

அற்புத பதிகம் :

வன்சீர் இயற்கை மாறக் கட்டல்
யாழ்த்தொகை வைத்து வொத்தாழிசைக் கழிநெடிற்
றுறைநேர் காய்பூ தோன்ற வதனிற்
பழந்தக்க ராகப் பண்ணியல் காணும்
பழந்தக்க ராகப் பண்ணிசை பாடி
ஆண்பனே பெண்பனே யாகிக் காய்க்கும்
செந்திறம் விளங்கச் செய்தது பூத்தேர்ந்
தாயன வென்னும் அற்புதப் பதிகம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பதிக எண்	இரண்டு கட்டளையின் அமைந்த தக்கேசிப் பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம்									கனரகம் , பண்ணியல் கனரகம்
பண்தலைப்பு	௧ எழுத்து	௨ அசை	௩ சீர்	௪ யாழ்	௫ யாப்பு	௬ அடி	௭ பண்	௮ திறம்	௯ பண்தார்	
௧. எரியார் மழுவொ	௰௬, ௰௭	நேர் நிரை	மலர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்ப்பண்	அராகத்திறம்	நாரதர் தும்புரு	மோகன மல்லாரு
௨. அரையார் புன	௰௬, ௰௭	நேர் நிரை	மலர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௩. அடையார் தம்	௰௬, ௰௭	நேர் நிரை	மலர் அல்லது பூ (உ)	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௪. பாங்கமேறு மதி	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௫. வேதமோதி	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௬. பொடிகொளுருவ	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௭. பூவார் மலர்கொண்	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவியாசிரியத்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௮. வானத்துயர்தண்	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவிவஞ்சி இயற்சீர்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௯. பிறைகொள் சடை	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவிவஞ்சி இயற்சீர்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௰. வாரார் கொங்கை	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவிவஞ்சி இயற்சீர்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௰௧. வாளார் சோதி	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவிவஞ்சி இயற்சீர்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
௰௨. நறவநிறை வண்	௰௮, ௰௯	நேர் நிரை	பூச்சீர் இரண்டு	முல்லையாழ்	வெண்கவிவஞ்சி இயற்சீர்தரவு	அளவடி	தக்கியற்சீர்	குறிச்சீர்திறம்	நாரதர் தும்புரு	மல்லாரு
திருச்சிற்றம்பலம்										

ஆக தக்கேசிப்பண் பதிகம் ௰௨ , (கட்டளைத் திறங்கள்) அராகத்திறம், குறிச்சீர்த்திறம், ஆக 'உ' கட்டளைத்திறங்கள்.

தக்கேசிப் பண்ணிலக்கணம் :

தக்கசீர் எனச் சாற்றும் வெண்சீர்
யாழ்த்தொகை யாழின் அமையத் தரவாய்
இயைந்த யாப்பி லியற்சீர் பொருந்தும்
தன்மை யுடையது தக்கேசிப் பண்.

உ
சிவமயம்

Koviloor Digital Library

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பதிக எண்	ஐந்து கட்டளை யானமைந்த குறிஞ்சிப் பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம்									கனரகம் ★ பண்ணியல் கனரகம்
பண்தலைப்பு	௧ எழுத்து	௨ அசை	௩ சீர்	௪ யாழ்	௫ யாப்பு	௬ அடி	௭ பண்	௮ திறம்	௯ பண்தார்	
௧. காலை நன்மாமலர்	௨௰௫, ௨௰௫	நேர்நிரை மயக்கம்	நிழற்சீர்(௪) மயக்கம்	குறிஞ்சி	தூங்கிசையொத்தாழிசைக்கலி	அளவடி	குறிஞ்சிப்பண்	நேர்மைத்திறம்	ஈசன்	அம்ச காம்போதி
௨. மலையினார் பருப்பதம்	௨௰௫, ௨௰௬	ஷ	ஷ	குறிஞ்சி	தூங்கிசையொத்தாழிசைக்கலி	அளவடி	குறிஞ்சிப்பண்	ஆசான்திறம்	ஈசன்	கும்ப காம்போதி
௩. பொன்றிரண்டன்ன	௨௰௫, ௨௰௬	ஷ	ஷ	குறிஞ்சி	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண்	நைவளத்திறம்	ஈசன்	சஞ்சு காம்போதி
௪. வரிவளரவிரொளி	௨௰௫, ௨௰௬	ஷ	ஷ	குறிஞ்சி	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண்	நைவளத்திறம்	ஈசன்	சஞ்சு காம்போதி
௫. அயிலுறுபடை	௨௰௫, ௨௰௬	ஷ	ஷ	குறிஞ்சி	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண்	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௬. கற்றாங்கெரியோ	௰௩ ,௰௪ மயக்கம்	ஷ	கனிமறைநேர்பூ - ௨	முல்லைபடர் குறிஞ்சி	கலிவன்சீர் காணு நேர்பூவெண்கவி	அளவடி	குறிஞ்சிப்பண் யாழ்சீர் யாப்புக்கவி	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௭. நல்லார் தீ மேவும்	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் யாழ்சீர் யாப்புக்கவி	குறிச்சீர்திறம்	ஈசன்	அரி காம்போதி
௮. இரும்பொன்மலை	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	குறிச்சீர்திறம்	ஈசன்	அரி காம்போதி
௯. அடையார்புரம்	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௰. புனையும் விரிகொன்	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	நேர்மைத்திறம்	ஈசன்	அம்ச காம்போதி
௰௧. கல்லால் நிழல்மேய	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	நேர்மைத்திறம்	ஈசன்	அம்ச காம்போதி
௰௨. கொட்டும்பறை	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௰௩. சுடு கூரெரி	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	நேர்மைத்திறம்	ஈசன்	அம்ச காம்போதி
௰௪. முற்றுஞ்சடை	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௰௫. படையார்தரு	ஷ	ஷ	கனிமறைநேர்பூ - ௨	ஷ	ஷ	அளவடி	குறிஞ்சிப்பண் ஷ	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௰௬. அரனையுள்குவீர்	௫ ௬	நேர்நிரை மயக்கம்	நிழல்தூங்குநேர்பூ - ௧	முல்லைபடர் குறிஞ்சி	யாழ்சீர் யாப்பு இணைக்குறட் கவிதை (கலித்தீர் வெள்ளை இருக்கு)	அளவடி	குறிஞ்சிப்பண் சீர்	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௰௭. சித்தந்தெளிவீர்காள்	௬ ௭	நேர்நிரை மயக்கம்	கனிதூங்குநேர்பூ - ௧	ஷ	வெண்சீர்க் கட்டல் யாழ் ஷ கவிதை (கலித்தீர் இருக்கு குறள்)	அளவடி	யாப்பு. நேர்மை. குறிஞ்சி	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௰௮. வாசிதீரவே	௬ ௭	ஷ	நிழல்தூங்குநேர்பூ - ௧	ஷ	கலித்தீர் வெள்ளை இருக்குகுறள் கவிதை	அளவடி	குறிஞ்சிப்பண் சீர்	செந்திறம் ★	ஈசன்	குந்தள காம்போதி. சுத காம்போதி
௰௯. நின்றுமலர்தூவி	௬ ௭	ஷ	கனிதூங்குநேர்பூ - ௧	ஷ	வெண்சீர் கட்டல் யாழ் கவிதை கலித்தீர் வெள்ளை இருக்குகுறள்	அளவடி	யாப்பு. நேர்மை. குறிஞ்சி	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௨௰. நீலமாமிடற்றால	௫ ௬	ஷ	நிழல்தூங்குநேர்பூ - ௧	ஷ	யாழ்சீர் யாப்பு இணைகுறட் கவிதை (கலித்தீர் வெள்ளை இருக்கு)	அளவடி	குறிஞ்சிப்பண் சீர்	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௨௰௧. தோடொர்காதினன்	௬ ௭	ஷ	கனிதூங்குநேர்பூ - ௧	ஷ	வெண்சீர் கட்டல்யாழ் யாழ் யாப்பிணைக் குறட் கவிதை கலித்தீர் ஷ	அளவடி	யாப்பு. நேர்மை. குறிஞ்சி	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௨௰௨. மன்னியூரிறை	௫ ௬	ஷ	நிழல்தூங்குநேர்பூ - ௧	ஷ	ஷ கலித்தீர் வெள்ளை	அளவடி	குறிஞ்சிப்பண் சீர்	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௨௰௩. எய்யாவென்றித்	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	வெண்கவிக் கட்டல் யாழ்த்தொகை	அளவடி	மூய்வு இணையாப்பு குறிஞ்சி	குறிச்சீர்த்திறம்	ஈசன்	அரி காம்போதி
௨௰௪. நன்றுடையானை தீயதிலானை	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	கலித்தொகை மறை இருக்கியற்கவி	அளவடி	மூய்வு இணையாப்பு குறிஞ்சி	நேர்மைத்திறம்	ஈசன்	அம்ச காம்போதி
௨௰௫. வம்பார்குன்றம்	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	கலித்தொகை மறை இருக்கியற்கவி	அளவடி	மூய்வு இணை ாப்பு குறிஞ்சி	குறிச்சீர்த்திறம்	ஈசன்	அரி காம்போதி
௨௰௬. நீடலர்சோதி	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	ஷ	அளவடி	ஷ	குறிச்சீர்த்திறம்	ஈசன்	அரி காம்போதி
௨௰௭. தண்ணார் திங்கட்	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	ஷ	அளவடி	ஷ	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௨௰௮. உரவார்கலையின்	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	ஷ	அளவடி	ஷ	செந்திறம்	ஈசன்	குந்தள காம்போதி
௨௰௯. தோடுடையா	௰௩ ௰௪	ஷ	பூச்சீர் - ௨	முல்லையாழ்	ஷ	அளவடி	ஷ	குறிச்சீர்த்திறம்	ஈசன்	அரி காம்போதி

திருச்சிற்றம்பலம்

குறிஞ்சிப் பண்ணிலக்கணம் :

ஒன்றுயத் தனித்த வரிமையை மேற்கொண்
டபாங்கூறு தம்முள் ளாகுகு சிறப்புக்
துடைமையாற் கலியென் றேதுங் குறிஞ்சி
யாழ்சீர் யாப்பொத்த பாழிசைப் பண்ணில்
௬

யாழ்சீர் யாப்பொன் ருயக்கவி கவியில்
யாழ்சீர் யாப்பிணையாங் குறட் கவிதையில்
வியன்சீர் கட்டலயாழ் மேவி வந்த
யாப்பிணைக் குறளா கியக விதையில்
யாழின் மூய்விணை யாப்பின் வந்ததால்
குறிஞ்சிப் பண்ணெனக் கூறப் பெற்றது.

ஆகக் குறிஞ்சிப்பண் பதிகம் ௨௰௯, (கட்டளைத் திறங்கள்) நேர்மைத்திறம், ஆசான் திறம், நைவளத்திறம், செந்திறம், குறிச்சீர்திறம் ஆக ஐந்து (கட்டளை).

அற்புதப் பதிக விளக்கம் ★ :

பஞ்சம் நீங்கும் படிக்கா சளித்ததிற்
சுதங்காண் போதி துலங்குஞ் செந்திறம்
அமைய வருளென் றரனை வேண்டிக்
குறிஞ்சிப் பண்சீர் கொள்ள வமைந்த

கலித்தீர் இருக்குக் கவிதைக் குறட்பண்
வாசி தீரவே காசு நல்கென
வழுத்தியவ் வாறறம் வாய்க்கப் பெற்ற
அருமை யுடையதிவ் வற்புதப் பதிகம்.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பதிக எண்	ஆறு கட்டளையானமைந்த வியாழக்குறிஞ்சிப் பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம்									கனரகம் , பண்ணியல் கனரகம்
பண்தலைப்பு	௧ எழுத்து	௨ அசை	௩ சீர்	௪ யாழ்	௫ யாப்பு	௬ அடி	௭ பண்	௮ திறம்	௯ பண்தார்	
௧. ஆடலரவசைத்தான்	நாள் மலர் சுரிதகவு (௭)	நேர்	வியன்சீர் நிழல (௧)	வியாழக்குறிஞ்சி	நேரிசைவியன் கலித்தூக்கு	நெடிலடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௨. பாடல நான்மறை	ஷை	நேர்	வியன்சீர் நிழல் (௧)	வியாழக்குறிஞ்சி	நேரிசைவியன் கலித்தூக்கு	நெடிலடி	வியாழக்குறிஞ்சி	ஆற்றுத்திறம்	ஆதிசேடன்	சுர வராளி
௩. மாறிலவுணர்புர	௭, ௮	நேர் நிரை	வியன்சீர் நிழல் (௧)	வியாழக்குறிஞ்சி	வியன் கலித்தூக்கு	நெடிலடி	ஷை	படுகுறிச்சீர்திறம்	ஆதிசேடன்	புல்லக வராளி
௪. வெந்தவெண்பொடி	௭, ௮	நேர் நிரை	வியன்சீர் நிழல் (௧)	வியாழக்குறிஞ்சி	வியன் கலித்தூக்கு	நெடிலடி	ஷை	செந்திறம்	ஆதிசேடன்	சுத்த வராளி
௫. மின்னயல் செஞ்சடை	௭	நேர்	வியன்சீர் நிழல் (௧)	வியாழக்குறிஞ்சி	நேரிசைவியன் கலித்தூக்கு	நெடிலடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௬. வாருறு வனமுலைமங்	௰௧, ௰௨	நேர்நிரை மயக்கம்	நிழற் சீர் (௧)	குறிஞ்சி	கலிவெண்சீர் யாப்பு	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௭. மருந்தவன்வானவர்	௰௧, ௰௨	நேர்நிரை மயக்கம்	நிழற் சீர் (௧)	குறிஞ்சி	கலிவியன்சீர் யாப்பு	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௮. அருந்தவ										
௯. இன்குரலிசை										
௰. எரித்தவன் முப்பு	௰௧, ௰௨	நேர்நிரை மயக்கம்	நிழற் சீர் (௧)	குறிஞ்சி	கலிவியன்சீர் யாப்பு	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௰௧. குருந்தவன்										
௰௨. சங்கொளிர்										
௰௩. அவ்வினைக்கிவ்வினை	௰௬, ௰௭	நேர் நிரை	யாழ் சீர் (௩)	கட்டல்யாழ்	வியன்சீர்க் கட்டல்யாழ் கலித்துறை யாப்பு	அளவடி	வியாழக்குறிஞ்சி	ஆற்றுச்செந்திறம்	ஆதிசேடன்	சுத்தசுர வராளி * பிரணவாகாரி
௰௪. காடதணி கலங்	௰௬, ௰௭	நேர் நிரை	யாழ் சீர் (௩)	கட்டல்யாழ்	வியன்சீர்க் கட்டல்யாழ் கலித்துறை யாப்பு	அளவடி	வியாழக்குறிஞ்சி	இயையாமைத்திறம்	ஆதிசேடன்	சிம்மளவராளி * அம்சப்பிரமரி
௰௫. சுடுமணியுமிழ்	௰௫, ௰௬	நேர்நிரை மயக்கம்	நேர் பூ நிழல் (௧)	குறிஞ்சி	வியன்கலிக் கவிதை யாப்பு	நெடிலடி	வியாழக்குறிஞ்சி	ஆற்றுத்திறம்	ஆதிசேடன்	சுரவராளி
௰௬. முள்ளின்மேல்	௰௨, ௰௩	நேர் நிரை	காய்ச் சீர் (௨)	பாலையாழ்	யாழ்த் தொகைக் கட்டல் யாழ்க்கலி வெண்கவி	அளவடி	வியாழக்குறிஞ்சி	ஆற்றுத்திறம்	ஆதிசேடன்	சுரவராளி
௰௭. பணிந்தவர் அரு	௰௫, ௰௬	நேர் நிரை	நிழற் சீர் (௨)	குறிஞ்சி	ஒத்தயாழிசைக் கலிமுதிர் வெள்ளைக் கவி	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௰௮. நடைமருதிரிபுர	௰௫, ௰௬	நிரை	நிழற் சீர் (௨)	குறிஞ்சி	நிரையிசையொத்தாழிசைக் கலிமுதிர் வெள்ளைக் கவி	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௰௯. விரிதருபுலியூரி	௰௫, ௰௬	நிரை	நிழற் சீர் (௨)	குறிஞ்சி	நிரையிசையொத்தாழிசைக் கலிமுதிர் வெள்ளைக் கவி	அளவடி	வியாழக்குறிஞ்சி	செந்திறம்	ஆதிசேடன்	சுத்த வராளி
௨௰. புவியல்புரிகுழல்	௰௫, ௰௬	நேர் நிரை	நிழற் சீர் (௨)	குறிஞ்சி	ஒத்தயாழிசைக் கலிமுதிர் வெள்ளைக் கவி	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௨௰௧. அலர்மகள்மலி	௰௫, ௰௬	நேர் நிரை	நிழற் சீர் (௨)	குறிஞ்சி	ஷை	அளவடி	வியாழக்குறிஞ்சி	செந்திறம்	ஆதிசேடன்	சுத்த வராளி
௨௰௨. கலைமலியகலல்கு	௰௫, ௰௬	நேர் நிரை	நிழற் சீர் (௨)	குறிஞ்சி	ஷை	அளவடி	வியாழக்குறிஞ்சி	செந்திறம்	ஆதிசேடன்	சுத்த வராளி
௨௰௩. பந்தத்தால	௧௰	நேர்	காய்ச்சீர் (௨)	பாலையாழ் வட்டணைச்சதி	நிலமண்டல நேரிசை யாசிரியக் கலிப்பா	நெடிலடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி
௨௰௪. பிரமபுரத்துறை	௫, ௬	நேர்நிரை மயக்கம்	பூச்சீர் (௧)	முல்லையாழ்	வெண்கலிக் கோவை ஏகபாதம்	அளவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன்	வராளி, மலய மாநதம் இலயம்
௨௰௫. ஒருருவாயினை	௬, ௰௯ உள் ஆளணம்	நேர் நிரை	குளவளவெண்சீர்	மறுகுமுல்லை	அடிமறிமண்டல யாழ்சீர்க் கலிப்பா	குள அகவடி	வியாழக்குறிஞ்சி	குறிச்சீர்திறம்	ஆதிசேடன் சூரியன்	வராளி, பானு சூடாமணி கரணம்

திருவிராகம் (௰௮ – ௨௰௩)

திருச்சிற்றம்பலம்

ஆக வியாழக் குறிஞ்சியின் பதிகம் ௨௰௬. குறிச்சீர்திறம், ஆற்றுத்திறம், படுகுறிச்சீர்திறம், செந்திறம், இயையாமைத்திறம், ஆற்றுச் செந்திறம் என்ன ஆறு கட்டளைத் திறங்கள் ஆம்.

* அற்புதப் பதிக விளக்கம் :

விளசசுர	நோயிவ	விடமட	ராத	காரந்	துலங்க	ஆனை	மொழியாய்த்
செந்திறம்	ஆற்றெனச்	சேடனை	வேண்டிக்	திருநீ	லகண்டம்	செப்பியவ்	வாறே
கட்டல்	யாழ்வியன்	கவிந்துறை	மந்திரம்	என்றென்று	மாங்கண்	இயைவுறு	சிறப்பஃ
மேவி	விளங்கும்	வியாழக	குறிஞ்சிப்	துற்ற	நல்லறம்	உடையது	அவ்வினைக்
பண்ணில்	ஓங்காரம்	பயிலும்	பிரணவா	கிவ்வினை	என்னும்	அற்புதப்	பதிகம்.

வியாழக் குறிஞ்சிப் பண்ணின் இலக்கணம் :

அண்ணம்	அதில்நா	அடையப்	பிறக்கும்	யாழ்சீர்	வண்ணவொத்	தாழிசைக்	கவியில்
அமிழ்தென	அண்ணித்	தடங்கும்	ழகாரம்	யாழ்சீர்த்	தாழிசை	யராகத்	தரவுடைத்
என்ன	வயின்சீ	ரியைகுறிஞ்	சிப்பண்	தாளச்	சதிப்பண்	தன்னில்	ஒத்தில்
ஆகிய	வயின்கலி	யாழ்சீர்	தூக்கில்	அடிமறி	மண்டல	யாழ்சீர்	யாப்புக
யாழ்சீர்	யாப்பில்	யாழ்சீர்க்	கட்டலில்	குளகம்	அதின்மேற்	கொளலால்	வியாழக்
பாவின்	யாழ்த்தொகை	யாகிய	கட்டலில்	குறிஞ்சிப்	பண்ணெனக்	கூறப்	பெற்றது.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்குக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த

அடங்கன்முறை தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பதிக என்	இரண்டு கட்டளை யமைந்த மேகராகக் குறிஞ்சிப் பண்ணிற்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும் நவவியாகரண விளக்கம்								கனரகம் * பண்ணியல் கனரகம்
பண்தலைப்பு	க எழுத்து	உ அசை	ங சீர்	ச யாழ்	ரு யாப்பு	சா அடி	எ பண்	அ திறம்	கூ பண்தார்	
க. சேவுயருந்திண்	உ௰க, உ௰உ மயக்கம்	நேர் நிரை	காய்ச்சீர் (ச)	பாலை	இயற்சீர் வெள்ளை	அளவடி	மேகராகக் குறிஞ்சி யாப்பில்	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சினி
உ. புலனைந்தும் பொறி	உ௰க, உ௰உ மயக்கம்	நேர் நிரை	காய்ச்சீர் (ச)	பாலை	இயற்சீர் வெள்ளை	அளவடி	யாப்பில் மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சினி
ங. மெய்த்தாறு சுவையு	உ௰க, உ௰உ மயக்கம்	நேர் நிரை	காய்ச்சீர் (ச)	பாலை	இயற்சீர் வெள்ளை	அளவடி	யாப்பில் மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சினி
ச. ஏரிசையும் வடவாலி	உ௰க, உ௰உ மயக்கம்	நேர் நிரை	காய்ச்சீர் (ச)	பாலை	இயற்சீர் வெள்ளை	அளவடி	யாப்பில் மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சினி
ரு. வெந்தவெண்பொடி	௰எ, ௰அ	நேர் நிரை	நேர்பு, நிரைபு (உ)	முல்லை யாழ்	வெண்சீர் கவித்தொகை	அளவடி	யாழ்சீர் மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்செந்திறம்	வருணனிந்திரன்	சிந்து மந்தாரி
சா. கருத்தன் கடவுள்	௰உ	நிரை	யாழ் சீர் (ச)	கட்டல் யாழ்	நிரையிசை இயற்சீர் வெண்டளை யொத்தாழிசை	அளவடி	யாழிசை மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சினி
எ. நீறுசேர்வதொர்	அ, கூ, கழிநெடில் (க)	நேர் நிரை	விளச் சீர் (உ) கழிநெடில் (க)	கூன்றரு நெய்தல் யாழ்	இயற்சீர் வெண்டளைக் கூன் வஞ்சிக் கழிநெடிற்றுறை	கழிநெடிலடி	கூன்தொடர் மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சினி
அ. மாதர் மடப்பிடி	க௰	நேர்	காய்முதிர் மலர்ச்சீர் ரு, எ	பாலைதீர் மலர் முல்லை	நேரிசை இயற்சீர் வெண்டளை நிரையொன்றுசிரிய அம்போ தரங்க வொத்தாழிசை வஞ்சியாப்பு சீர்த்தாழிசையம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா கொச்சகம்	நெடிலடி	யாழ் ராகம் தாழிசை மேகம், கொச்சகம், குறிச்சீர் ஆக வந்த மேகராகக் குறிஞ்சி	குறிச்சீர்திறம்	வருணனிந்திரன்	மேகரஞ்சி * ஆகிரி
திருச்சிற்றம்பலம்										

<u>ஆக மேகராகக் குறிஞ்சிப்பண் பதிகம் எட்டிற்கு திறங்கள் :</u>

குறிச்சீர் திறம், குறிச்சீர் செந்திறம் (இரண்டு கட்டளை)

<u>மேகராகக் குறிஞ்சிப் பண்ணிலக்கனம் :</u>

யாப்புத் திறத்தில் யாழ்சீர்த் திறத்தில்
அடியின் திறத்தில் அமைசதிச் சீர்திறம்
தன்னில் மேகம் தழுவும் வெளியென
வியன் சிருநுகலி மேவலான மேக
இராகக் குறிஞ்சி யென்றிசைக் கப்பெற்றது.

<u>யாழ்முறிப் பண்ணியற் சதி</u>

டட்டட, டட்டட, டட்டட, டட்டட, டட்டட, டடுண், டடுண், டடுண்,
டடுண், டடுண், டடுண், டடுடுண்.

இயம்பொலி எவையும் இதிலாழ் வுற்றதே
என்ன வினிதெடுத் திசைத்தலால் யாழ்எனும்
சீர்ப்பெயர் பெற்ற சிறந்த கருவியும்
தமிழ்மறை முழக்கஞ் சாற்றும் அளவில்
எழுதா கிளவி என்பது மட்டுமோ
இசைக்கா கிளவியும் இதுவென வுடைபட்
டியாழ்முரி யாக எண்டிசை யதிர
விண்டலம் பிளக்கும் இடியொலிச் சதியில்

டட்டட டட்டடட்டட டட்டட டட்டட
டடுண்டடுண் டடுண்டடுண் டடுண்டடுண் டடுடுண்னென்னல்
கொண்டசீர்த் தாழிசை கொச்சக அம்போ
தரங்க வொத்த யாழிசைக் கலிப்பா
யாப்பில் மேக ராகக் குறிஞ்சி
யாழ்முரி யாக வமையும் வண்ணம்
வழுத்தி இசைத்தது மாதர் மடப்பிடி
என்னத் தொடங்கும் வன்மைப் பதிகம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46466

முதற்திரு முறைக்குரிய மேற்கணக்கு ஒன்பது என்னும்
நவவியாகரண விளக்கம் நிறைவு பெற்றது.
அடுத்தது திருமுறைப் பெருநூல் விளக்கம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருமுறைப் பெருநூல் விளக்கம்

காப்பு

ஓங்கார மூல முதலா யகில வுலகினுக்கும்
பாங்கான வான்ம விலிங்க மிராவணன் பாற்படுதல்
நீங்கி மகாபல லிங்க மதாகி நெகிழ்வுபெறத்
தாங்கிப் பெறத்திட்டித் தாளுங் கணபதி தாள் சரணே. (க)

அம்பிகை யாளகி லாண்டேச் வரியெமை யாளுடையாள்
வம்பவி ழும்போ ருகமலர் வாழுமனேன் மணித்தாய்
செம்ப வளவாய்க் கவுணியர் சேயைத் திருஞானநற்
சம்பந் தனைக்கத் திருமுலைப் பாலீந்த தாய் துணையே. (உ)

சற்குரு நாத னெனப்போற் றிசைப்பத் தழல்நயனத்
துற்பவித் தோரு ருவாகி யுமைதரு முக்கிரவேல்
பெற்றுக் கடல்மலை தூளெழ வெஞ்சூர் பிளந்தமரர்
பொற்பா ருறச்செய்த வீரன் றிருந்தாள் புகலெமக்கே. (௩)

மறையைத் தெளிய வவைபூசித் திட்டக வாடமதை
யறைபொய் மறைகள் திறக்க முயன்று காடாகி நிற்க
முறையே திறக்க வடைக்க விருக்கோது முத்தமிழ்நான்
மறைவல்ல ஞானசம் பந்தன்றி ருத்தாண் மலர்துணையே. (ச)

வாழ்த்து

திருநீ றெழுத்தைந் துருத்தி ரளக்கஞ் சிவகலைநூல்
அருணீர்மை மிக்க திருக்கூட்ட மாகம மாதிகலை
பெருநீர்மை பெற்று விளங்குக மும்மாரி பெய்திடுக
தருமந் தழைக்கச் செங்கோ லோங்க வோங்கசனுதனமே. (ரு)

வேத நிர்ணய விளக்கப் பாயிரம்

சித்தர் முனிவ ரிருடி தவத்தோர் திருப்பதத்தைப்
பத்தி யுடனே பரவித்துதித்துப் பணிந்து நின்று
அத்தன் றிருஞான சம்பந்த மூர்த்தி யளித்தமிழ்
வித்தக வேதச் சுருதி யுரைநூல் விளக்குதுமே. (சு)

விளங்கு மறைகளுன் கானதும் ஆறங்க மேவியதும்
களங்கறச் சொன்ன யெர்க்கா ரணங்களுங் காட்டியது
வளங்கொள் ளெழுதாக் கிளவியா தற்காம் வரன்முறையும்
உள்ளங்கொள முன்னோர் கள்சொன் மரபுப்படி யோதுவமே. (எ)

ஓதியிந் நூலை யுணர்ந்தோர் கலியாம் யுகக் கொடுமைத்
தீதினை வெல்வர் நமனுக்கு மஞ்சார் திரிபு சொல்லி
வாதினைச் செய்நாத் திகம்வே ரறச்செய்வர் மண்ணுலகை
மீதிலிம் மைப்பயன் பெற்று விண்ணுட்சி யுமெய்துவரே. (அ)

Koviloor Digital Library

ஆதன் வியாதனுய்ப் பிரமத்தை விட்டறு வானமைதீர்
சாதனமான சிவராஜ யோகந் தனினி லேத்துச்
சேதனு சேதன மானவை யாவுஞ் சிவமயமாய்
வேதனை தீர வருளிச் செயனுன்கு வேதமதே. (௯)

வேத நிர்ணய விளக்கப் பாயிரம்

வேதமிது வெனஞானு சிரியன் வியந் துணர்த்தும்
போதந் தருங்கலை யொன்றற் கொன்றென்றும் பொருத்தமிலாப்
பேதந் தருந்தலை வாயிலி லாடல்செய் பெற்றியதால்
வேதமெனப் பெயர் பெற்று நான்காக விளங்கிடுமே. (௰)

விளங்கும் பயிலருஞ் சைமினி யோடு விசும்பயணர்
அளவில் சுகரும் சுமந்தும் வியாதர் மாணுக்கரென
விளம்ப வுயிர்ப்பொலி காது நா மூக்கு கண் மெய்யிலை
வளவுந் தசவித நாதச் சரியை யிணைந்துருவே. (௰௧)

ஐந்துரு வாகிய வேத வேதாந்த மதிற் பயில
முன்தெரி காதைப் பயில ரென்றும் பேசமுற்படுநா
விந்திரி யத்தை யிசைமேனி யென்று மிரவிமதி
யுந்து துளையை விசும்பயணு ரென்று மோதுவரே. (௰௨)

ஓதுஞ் சுகஞ்சேர் நயனஞ் சுகரென்று முற்றதைத்தன்
மீது சுமந்துள்ள மெய்யைச் சுமந்தென்றுமே மொழிய
ரீது விளங்க இயக்கா யவர்க்க இயந்தெளியுந்
தோதுச் சரியையே யாக்குவர்க்கீ யராய்ச் சொல்லுவதே. (௰௩)

சொல்லுந் தவளா கரமிருக் கென்றுந் தொடர் நடையாய்ச்
செல்லுநற் றத்த வுரிய மியற்சீர தென்றுநடு
வில்லுள்ள பூவு டியச்சமஞ் சாம மெனவுமிகப்
புல்லு நன்வாம மதரவ மென்றும் புகலுவதே. (௰௪)

புகலிட மாய்நின்ற வண்டநா ளத்துட் பொருந்துமொலி
யகலிட மாதி யனவான நாலென்பது தெளிய
இகலிடப் பேரிட்டிசைக் குஞ்சரி யையிது கிரியை
பகலிடம் போனு லயண மெனும்பெயர்ப் பாங்குறுமே. (௰௫)

பாங்காக நால யணங்க டனிலும் பயில்வளியை
நீங்காதுண் ணின்று மறையாய்ச் சுழல நிலைநிறுத்து
மோங்கார ரூபச் சரியையே பத்துமொரு குறிப்பைத்
தாங்கிச் சுழலு மறையாய்ப் பதிகஞ் சமைப்பதுவே. (௰௬)

சமையுமோங் கார மறையிற் கலைகள் சகலமது
மமையுமதனு லோஅத் தெனவுஞ் சொல்வ ராரணமாய்த்
தமையுணர்த்தும் வாசி போன்றே சரியைச் சதுர்மறையு
மமையுநற் றேருத்திரத் தாரணமாய்க் கட்டளை யதினே. (௰௭)

கட்டளை சார்கை செயுஞ்செயற் பாடுடைக் காரணத்தால்
இட்ட பெயர்சாகை யவ்வாறு கட்டளை யிட்டுவெற்றி
கிட்டச் செயங்கொண் டுலகோர்க் கெழுதாக் கிளவியதாய்த்
திட்ட மிட்டுத் தந்தசாகைச் சரியைத் திருமுறையே. (௰௮)

Koviloor Digital Library

முறையே யியம நியம நெறிநிற்கு முத்தமருக்
கிறையே குருவா யெழுதாக் கிளவியினை யுணர்த்துந்
துறையே எழுத்தொடு சொல்லுங் கடந்ததிற் சூக்குமமாம்
மறையே இதுவென்றி சைக்குப் பொருள்காட்டு மாறதுவே. (மகூ)

மாறு மெழுதாக் கிளவி சுருதி மயமதனுற்
றேறுஞ் சுருதி எனவுமொரு பெயர்செப் பிடுவர்
கூறுமெய் ஞானத் தகிலகலையை யுங் கோத்து நிற்கு
நூறுமுன் சொன்னன வாதலினு லாதிநூ லென்பரே. (உம)

ஆதிநூ லாக வமைத்ததி னுலா மரியகலை
யாதினு முற்பட்ட வெள்ளிடையிற் றேன்று மாதலினல்
ஓதிடும் வேதநூ லிற்குமிருக் கென்றெரு பெயருஞ்
சாதித்திடப் பெறும்யோ காதி ஞானச் சரியையினே (உமக)

சரியை மறையை இயக்காய வர்க்க மதாயுணர்ந்து
விரிவற்ற சூக்கச்சித் . செய்மேற் கணக்காம் வியாகரணம்
முரியெழுதாக் கேள்விச் சந்த தொடுக்க முறுநிறுத்தம்
தெரிகீழ்க் கணக்குச் சோதிடச்ய மேளங் கற்பந் தேர்ந்திடவே.
(உமஉ)

தேர்ந்திட வேதமோ ராண்மக ருகித்திக முருவஞ்
சார்ந்திடை யீடின்றி மெய்பொரு டேடிடுந் தன்மையதி
னேர்ந்திடு மொவ்வொன் றையுமிது வில்லென நீக்கிமிக
வோர்ந்தோர்ந் தலுத்தோய்ந்து போவதன் காட்சி யுறவருமே. (உமங)

வருமா றுரைத்தவா றங்க மதிலுத்த மாங்கமதாயப்
பொருந்திடுஞ் சூக்கம் பனிரெண்டது வாம்புரி தலைமை
தருகர மேற்கணக் கொன்பது வாமெழு தாக்கிளவி
யொருமையே மூன்றுப் புயமாந் தொடைய தொடுக் கமைந்தே.
(உமச)

ஐந்தான கீழ்கணக் கொன்பான் பதமாமி தாருறதும்
எய்தி யுடம்பி லிணைந்திரட்டித் தெழுபத் திரண்டு
மெய்வள மாகுமி தெல்லாம் நூற்றெட்டாய் விளங்கி நிற்கும்
தெய்வீக முத்தமிழ் நான்மறை யைந்தருஞ் செய்யுளினே.
(உமரு)

செய்துள் ளுணர்ஞான பாகை யினேக்கத் திகழ்கலையும்
வைகறை யோடு கலைமுக் கலை யோக மாக்கு கலை
ஐங்கடிகைக் கலையட்டமா சித்திய தாதி யதாய்
எய்துமெட் டெட்டுக்கலை யுடம்பான தென்றேற் படுமே. (உமசா)

ஏற்படக்காண் கன்ம பாகையி லாயண ராசியதன்
மேற்படர் கோள்சா யணராசி கோள்கள் விளங்கடைவு
நாட்படர் கோசரம் ஆகவா ருறு நடப்பிரட்டிப்
பாற்பட ருந்திசா புத்தியு மாகப்பலஞ் செயுமே. (உமஎ)

பலஞ்செய் புரியட்ட காயத்தின் சூக்கமாம் பன்னிரண்டின்
நிலவுஞ் சுரமியாழ் தாளஞ் சரசம னேகபண்பூ
குலவுபண் பாடுபண் ணின்னிசை பண்டானங் கூர்கலிப்பா
வுலவுவெண் பாவக வல்வஞ்சி யுந்நிலை யுற்றிடுமே. (உமஅ)

Koviloor Digital Library

உற்றிடு மேற்கணக் கொன்பதி னின்னிறை வொன்றெழுத்த
தற்றி டிரண்டசை மூன்றுசீர் நான்கியாழ் ஐவிசிப்பும்
ஏற்றிடும் ஆறடி ஏழுபண் எண்திறம் யீதொருமை
பெற்றிடொன் பாஹகப் பண்நார் விளங்கிப் பிறங்கிடுமே.
(௨௱௯௯)

பிறங்குநா தத்திற் பிரதி பலித்துப் பிரமநிற்கப்
புறங்கொண்டு கீழ்ப்படிந் தைம்பூத நிற்றலைப் போற்சரியை
யறங்கினர் பாட்டத் திலீசஹர் தோன்று மமைவுபெற்றுத்
திறங்களி லைம்பூத மேவல்செய நிற்குஞ் சித்திபெற்றே. (௩௱)

சித்திபெற் றேங்குமெழு தாக்கிளவி யொன்றே சுருதி
யத்தகு மீச்சுரு தியுமுப நீழல றமதும்
முத்தக வாய்நின் றகில கலைகளு தவறரும்
வித்தக முத்தமிழ் நான்மறை யாராயுமெய்த் தவர்க்கே. (௩௱௧)

தவத்தோர் பயிலைந் தொடுக்கமெனு நிறுத்தத் தினிநற்
சுவமிகு தெய்வமாம் தேவர்ஒலியாஞ் சந்தோற் பவச்சீர்
சிவகலை யாம்புரா ணம்முருக் காயத்திரி தொழிலாய்
நுவல நுட்டிப்புமாம் நுண்மாண் நுழைபுல நோக்கதினே.
(௩௱௨)

நோக்கதிற் கீழ்க்கணக் காமிச்சை யோதிட நோட்டமுணர்ந்
தாக்கந் தரமேற் கணக்கெனக் கீழ்நின் றறிவித்ததை
யூக்கமுடன் பண்தார் செய்தற்புத சித்தி யுண்டாக்குவர்
பாக்களி லற்புதப் பண்ணென் றிதன்பேர் பகருவரே. (௩௱௩)

பகரு மிவைமூன்று பன்னிரண்டின் மேற்பட விரட்டித்
தகல்மெய் வளமான கற்பம தனி லடர்திறப்பண்
தொகை நேர்தல் நேர்திறத்தெட் டெட்டும்பண் பூத்துவறநிழல்
வகைநிறை பண்ணெட்டு மேழ்பத்திரண் டாகவா மிசையே. (௩௱௪)

இசையுரு வானதும் ஈண்டுரைத் திட்ட விலக்கணந்தன்
மிசைவரக் கொண்டதும் சித்தர் முனிவர்கள் மெய்ஞ்ஞானியர்
அசைவற் றிருந்து ணர்ந்துய்ய வுலகிற் கருளியதும்
விசையற் புதங்கண் டதுவுமா முத்தமிழ் வேதமதே. (௩௱௫)

முத்தமிழ் வேதந் திருமுறை யாகமுடிந் திருக்க
இத்தரை மீதெஃ தெதையோ மறையென் றியம்பிவெறும்
வித்தகம் பேசுதல் பொய்யென வெட்ட வெளிப்படையாம்
சுத்தமாய்த் தோன்ற வுரைத்தனம் ஞானச் சுருதியிதே. (௩௱௬)

சுருதி யுணரத் தருபண் ணிலக்கணச் சூக்கமதைக்
கருதி யுணர்ந்தடங் கன்முறைச் சூக்குமங் கண்டதனில்
வருகுட மாம்பஞ் சரத்திரம் அல்லியல் வைகுநயத்
திருகு நெறிக்கூற் றுரைப்படி மாமறை தேருகவே. (௩௱௭)

தேர்ந்த தென்னுத்தாள் சிறுபெண்ணும் வாலை சிறந்தவன்பு
கூர்ந்தருள் . செய்யக்குரு நாதனல்லருள் கூட்டு விக்க
நேர்ந்த வதனுற் றிருஞான சம்பந்தர் நேர்மைகண்டுள்
ளார்ந்த பொருளாம் எழுதாக் கிளவியமைத் தனமே. (௩௱௮)

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

அமைத்த வமைப் படியேபல் லாயிரம் ஆண்டுகளாய்ச்
சமையவா சாரியர் மூவருந் தந்த தமிழிருந்த
தெமையோர் பொருளாக்கி யநூற் குரைசெய் யிமையளித்த
வுமையொரு பாக நருளெண்ணி யென்னெஞ் சுருகிடுதே. (௩ ௱௯)

உருகிக் குழைந்துள்ள மோகை பெருகவுமை முலைப்பால்
அருந்திய பிள்ளையார் முன்னென் னுரையை யநுசரிப்புப்
பொருந்த வுரைப்பதல்லால் மற்றையோர் முன்புக லகில்லேன்
திருந்தச் செய்தேற்றுப் பயன்பெறச் செய்க திருவருளே. (௪௱)

செய்ய திருவருளோ ருருவான சிவக் கொழுந்தாம்
ஐய திருஞான சம்பந்த மூர்த்தி யடியவனுன்
உய்ய வுனது திருமுறைக்குப் பொருளோது கின்றேன்
தெய்வக் கழுக்குன்றி லீசன்முன் னுன்றன் றிருச்செவிக்கே.
(௪௱௧)

பரச மயகோ ளரியே யுமைமுலைப் பாலருந்தும்
அரசே திருஞான சம்பந்த மூர்த்தியே யாதரவுத்
தரவு பார்த்துன்றன் திருமுறைக்குப் பொருள் சாற்றுகின்றேன்
விரவு கழுக்குன்றி லீசன்றிரு முன்னுன் மெய்ச்செவிக்கே
(௪௱௨)

ஆல மமுதாக வுண்டோனிடப் பாங்கமர்ந் தவுமைப்
பாலரு வாயராய்க் காட்சி தரநின்ற பாலகனே
சாலச் சிறியேன் றிருமுறைக்குப் பொருள் சாற்றுகின்றேன்
கோலக் கழுக்குன்றி லீசன்முன் னின்னருள் கூர்ச்செவிக்கே.
(௪௱௩)

முன்ன நனிபள்ளி கற்றதை ஞானமுத முலைப்பால்
அன்னை தரவுண்டருந் தமிழாய்த் தந்த வாரியனே
சின்னஞ் சிறியேன் றிருமுறைக்குப் பொருள் செப்புகின்றேன்
மன்னு கழுக்குன்றி லீசன்முன் னுன்றன் மலர்ச்செவிக்கே. (௪௱௪)

ஏரார்பு கலிக்க வுணியர் தீபமாம் என்னரசே
நேரா யரனுமை யொன்றிரண்டாய் வந்து நின்றளித்த
ஆரா வமுதுண்ட வையா நின்பண் பொருளாற்றுகின்றேன்
சீரார் கழுக்குன்றி லீசன்முன் னுன்றன் திருச்செவிக்கே. (௪௱௫)

வித்தக மாமென்றுமை முலைப்பால் தரவேண்டி யுண்டு
முத்தமிழும் விரகங் கொண்டு மோகிக்க மோகனனும்
சித்த வுனது திருமுறைக்குப் பொருள் செப்புகின்றேன்
கத்தன் கழுகுன்றி லீசன்முன் னுன்றன் கவின்செவிக்கே. (௪௱௬)

மழலாய் அழாதே எனவுமைபால் தரவாங்கி யுண்ட
குழவியாய்ப் பாலைநெய் தல்பாடி நின்ற குருமணியே
பழகு தமிழ்ப்பண் திருமுறைக் கத்தம் பகருகின்றேன்
அழகார் கழுக்குன்றி லீசன்முன் னுன்றிருவார் செவிக்கே. (௪௱௭)

அப்பர்க் கமணர்கள் செய்பிழை தீர்க்க வவதரித்த

Koviloor Digital Library

ஒப்பிலா மாமணி யாய்ஞானப் பாலுண்ட வுத்தமனே
செப்பம் மிருமுன் றிருமுறைக்குப் பொருள் செப்புகின்றேன்
இப்பார் கழுக்குன்றி லீசன்றிரு முன்னுன் னின்செவிக்கே. (௧௦௮)

சிவபுண் ணியமோருருக் கொண்ட தென்னச் சிரபுரத்துற்
பவங்கொண் டழுது ஞானம்பிகை பாலுண்ட பாலகனே
தவத்தோர் புகழுந் திருமுறைக்குப் பொருள் சாற்றுகின்றேன்
அவந்தீர் கழுக்குன்றி லீசன்முன் னுன்றன் அருட்செவிக்கே.

(௧௦௯)

பிரம புரீசபால் தந்ததா ரென்று பிதாமுனியப்
பரமனே பிரம புரீசனுன் ஞானசம் பந்தனெனக்
கரமங் குநீட்டித் திருமுறை பாடுங் கவுணியவுத்
தரமரு ளீசன்முன் னுன்செவிக் கேறநான் சாற்றிதற்கே. (௱௰)

என்சொல் லியாதொன்று மில்லை எனையா னிழந்தநிலை
தன்னிலென் னுண்ணின் றுணர்த்த வுணர்ந்ததே சாற்றுகின்றேன்
சொன்னதைச் சொல்வதி லேதும்பிழை பாடு தோன்றிடுமேல்
பின்னுந் திருத்திக் கொளல்கடன் ஆளுடைப் பிள்ளையர்க்கே.

(௱௰௧)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

திருஞான சம்பந்தப் பெருமானின் தேவாரப் பதிக வமைப்பின் விளக்கம்

புகலிப் பூம்புனற் பொய்கையின் அரும்பும்
தோடுடை யமல ரேடனல் புனலையும்
வென்றம ணங்கெட விரிமண்ட லமெலாம்
பெருமணம் புக்கத் திருமறை முழங்க
ஆடல் காட்டும் அருள்விளை யாட்டாற்
கருவிற் புகுந்து கான்முளை யாகியத்
தாய்தனத் தூறும் சடப்பால் உண்டும்

முன்னை யறிவினிற் செய்த முதுதவப்
பேறுய்க் கிடைத்த பெருநெறித் திரு
ஞானசம் பந்த நலத்தால் நாடி
அழுதுண் ணுமுலை யமிதங் கொண்டு
சற்புத்திர மார்க்கச் சரியை யினின்ற
பாலரு வாயரைப் பார்த்துத் தாதை
அதட்டி கேட்க அதோளனச் சுட்டி
நைவளத் திறம்பயில் நட்டபா டைப்பண்
தோடுடை யசெவி யன்னெனச் சொல்லியும்
நிறைமொழி மாந்தர்க்கு ஆணையிற் கிளத்தும்
மறைமொழி மந்திரம் இதுளனத் தெளிய
நடுநின்ற அங்கியை நாடி நெடிதே

Koviloor Digital Library

நீரமை நிலனும் வளியமை வானும்
அகழ்ந்தும் கடந்தும் அடிமுடி இனும்சென்று
இருக்கிருக் கெனத்தே டியற்சீர் மறையின்
திருக்குறிப் பருளிச் செய்து காட்டியும்
அகண்ட மண்டலம் அளாவித் திரிந்துஆங்கு
எண்டிசை தன்னே ரிசைசா மத்தரைத்
தேடிக் காணு தெழுந்துயர் வானத்து
அதர்வணன் ஆக அதர்க்குத் தடையாய்
விளங்கா நின்ற வேத அண்டத்தைச்
சத்தி தனிக்கத் தலையிற் றூக்கி
சிவன்பாற் சத்தி சேரத் தாங்காது
அதர்வணன் சிக்கி அதரின் இடையில்
இராவணன் ஆகி எங்கோ சமத்தன்
எங்கோ சமத்தன் எனமறை கொண்டு
அதர்வணச் சமத்தர்க்கு அடங்காது அடக்கிச்
சாமான் னியன்னலாத் தன்மையாற் றேன்றி
வாணுள் கொடுத்த மறைக்குறிப் பருளியும்
புறச்சம யத்துப் பொய்மயக் கங்கொளா
வாறு மொழிந்தும் மறைப்பொருள் பதியே
ஆகலாற் பதிகம் ஆக அமைத்த
முத்தமிழ் நான்மறைச் சத்திய வேதம்
தேவாரப் பெயர்த்தெய் வீக மறையே.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருமுறைப் பெருநூல் இலக்கண விளக்கம்.

திருஞான சம்பந்தர் தெய்வச் சுருதி
தருஞான கர்மார்த்தச் சார்பி= னுருவாம்
எழுதாக் கிளவி இசைக்கக் கணேசன்
முழுதாள்கச் சிந்திப் பாம்முன்.

திருமுறைக் குழுக்குறி விளக்கப் பஞ்சரத்திர வைகாநேய ஆகம மறை நுதலிப் புகுதல்.

இதையே வேத சங்கேத பாஞ்சராத்திர வைகாநஸ ஆகமச் சுருதிச் சனுகிறகம் என்பர் வடநூலார்.

அடங்கலுந் தன்னுள் ளடக்கி யடங்கும்
இயல்புள நாதத் தியைந்து விளங்க
வமைதிரு முறையே யடங்கன் முறையாம். (௧)

அடங்கன் முறையாய் அடக்கி யடங்குந்
தன்மை யதனற் சபையெனும் அம்பரம். (௨)

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

அம்பரம் என்னும் அகண்ட வெளியில்
விளங்குஞ் சித்தெனும் விந்துவை நாதம்
என்னுஞ் சத்தி இயைந்து நோக்கஅச்
சித்தம் பரத்திற் றிருநடம் ஆகும் (௩)

சித்தம் பரத்திற் றிருநடஞ் செய்யும்
அசைவாற் பிறக்கும் ஆரவா ரம்அத்
தெய்வார வாரமே தேவாரம் என்ப (௪)

தேவார வாரமாய்த் திகழுஞ் சத்துசித்
தனந்த நடன மாயசிற் றம்பலம்
எழுதாக் கிளவி எனும்முதன் மறையாம் (௫)

(இவ்வைந்தும் பஞ்சரத்திரம்)

முதன்மறை யாக முழங்குஞ் சுருதி
அடங்கன் முறையாய் அசபை நாதமாய்
சித்தம் பரநடஞ் செயுஞ்தே வாரமாய்
இறையருட் குருவா யியைந்து கைகாட்டும்
உபதச மான ஊமை எழுத்தாய்
அகர உகர மாகிய லிங்கமாம்
எட்டும் இரண்டும் எனும்அத் துவிதமாய்
அண்டம் பிண்டம் அகண்ட சராசரத்
தாதியும் அந்தமும் ஆகிய ஒன்ரும்
இருசெனச் சித்துடன் இயைந்து சித்தர்கள்
இருடிகள் பதந்தர வேற்ற மோனம்
சிதம்பர ரகசியத் திருச்சிற் றம்பலம் (௬)

சிற்றம் பலத்திற் றிருநடஞ் செய்யும்
பதத்தாற் றுலங்கும் பசுவிற்கு ஆதியும்
அந்தமும் ஆக அமையுஞ் சிற்றம்பலம் (௭)

அந்தமும் ஆதியும் ஆகி நின்ற
பதியின் நடனம் பாசத் தியைந்த
பசுவெளி முகமாய்ப் பார்க்குங் காலை
ஐவகை வேற்றுமை யாகித் தோன்றும் (௮)

ஐவகை வேற்றுமை யதுதனிச் சிறப்புத்
தன்மை யடுக்கெனச் சாற்றும் பண்ணும் (௯)

அதுவே
வேற்றுமை ஐந்தாய் விளங்கப் பெற்றதால்
வேதம்நான் கொடு வேதாந்தம் ஒன்றும்
ஆகிய ஐந்தாய் அமைவு பெற்றது (௰)

Koviloor Digital Library

வேதவே தாந்தமாய் விளங்கும் பண்ணெனும்
தனிச்சிறப் புடைய தன்மை யடுக்குப்
பஞ்ச(பண்ச) பீடத்திற் பதிசெய் நடனப்
பதச்சுவ டானது பதிந்து தோன்ற
எழுந்த எழுத்து ஏழே ழிரண்டெனும்
நாத ஒலியையும் நாத விரியாம்
ஐம்பத் தொன்றையும் அகத்தியம் ஆக்கும்
ஐந்தாய் அஃதடங் கக்கர மொன்ருய்
விந்தொலி யாக விளங்கு தமிழையும்
உடம்பாய்க் கொள்ளும் உயரரி சித்தரி
எழுத்து முதற்பண் தாரீ ருகப்
பிறக்கு மொன்பான் பிறப்புடை யொன்ருய்
மாலெனும் பசுவுரு வாகித் தோன்றும் (௰௧)

மாலெனும் பசுவுரு வாயபண் தோற்றத்
திறத்திற் பண்ணவர் செனிக்கவப் பண்ணகத்
தைந்து தலைக்கொள லாதியாய்த் தோன்றி
முடிவில் நான்கு முகமுள வொன்ருய்
வேதன் என்ன விளங்குந் தாளமும்
சந்தம் பதமொடு சார்தரு கான
மிவைலய மொன்றுள் ளியைந்து நான்காம் (௰௨)

நான்கொன் ருக நவிலும் பண்பா
டதனிடை தோன்றும் அநேகம் சாகை (௰௩)

சாகைகள் அனைத்தினும் சார்ந்து பண்பா
டாகிய மால்அயன் அரனடி தேடும் (௰௪)

தேடிட நின்ற சிற்றம் பலநடம்
ஐந்தெழுத் தாகி ஆன்ம ஞானந்தரும் (௰௫)

ஐந்தெழுத் தோருரு வாகிய மோன
பூரண மாகப் பொலியும் ஒன்றின்
அடிக்கீ ழாய்ச்சித் தாந்த பீடமாய்
வேதச் சுருதியாய் வேத முடியிலும்
வேத முடிவிலும் விளங்கும் பிரணவம் (௰௬)

(இப்பதினொன்றும் வைகாநேயம்)

இவ்வகை யாஞ்சிறப் பியைந்து விளங்குஞ்
சூக்குமஞ் சேர்ந்தொரு தூலமாய்த் தோன்றித்
திகழ வமைத்தது திருமுறை யாகும் (௰௭)

திருமுறைப் பெருநூல் இலக்கண விளக்கம்
நிறைவு பெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

முதலாவது நட்டபாடைப் பண்ணின் எழுதாக் கிளவி

துவித சித்தாந்தச் சுருதி

எழுதாக் கிளவி எனுஞ்சிற் றம்பலம்
அந்தமும் ஆதியும் ஆகித் துலங்கத்
தோன்றும் பண்சூக் குமவிரி சொல்லுவோம். (க)

சுருதி

நட்டபா டையென நவிலும் முதற்பண்
மூலத் தாமரை முகையெட் டிதழ்என
எட்டுக் கட்டளை இயைய வதனுள்
அக்கர மான அஉம என
எட்டி லிரண்டும் இரண்டி லொன்றும்
துலங்க நட்ட பாடையின் தோற்றம்
விளங்க முதலாம் விளரி உழைஇசை
தாரங் கொள்ள நேருறு மொழியில் (உ)

மீச்சுருதி

அண்டத் துள்ளன அகச்சாய் பதிந்து
இலங்கியை புள்ள இலங்கை ஈசனும்
அவன்பெற் றேகும் ஆன்ம விலிங்கமும்
அதற்குக் காப்பாய் ஆதியாம் மூல
கணபதி நின்று கருணை பாலித்து
அதனை அராஉமா அயண மாக்க
எண்மூன் றென்றும் இதுஇக எச்ச
வடிவென் றகன்று வகுத்தல் செய்து
ஈரிரு வகையால் எய்தும் முட்டுப்
பாட்டுட் பட்டுப் பதிந்து பரவும்
துவித சித்தாந்தச் சுருதி முழங்கும்
பீடமு மாகப் பிரணவம் நிற்கும். (ந)

முண்டக வுபநிழலறம்

பிரணவ மான பெருநெறி நிலவும்
துவித சித்தாந்தச் சுருதி யகச்சு
நால்வகை யோனி எழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கு லக்கமாய் விரிந்து
காணப் பெறுவன வானவை யெல்லாம்
எட்டும் இரண்டுமாம் இராவ:ணு காரத்
தஞ்சு அதாகி யகன்ற பன்னவர்
மாயா வாத மமைந்த வுருவென
ஆரண மாயிரம் அரற்றி யொலிக்கக்

Koviloor Digital Library

காரார்த்த வீரிய மாருத முழக்கஞ்
செவிசா ரியைபாற் றிணறிப் பொதிர்ப்பாய்
அத்தன் அம்மான் இற்று ஐகுஅத்து
என்று நேசித் திணங்கி அகரம்
காரம் கரம்கான் தம்தில் திவாசி
மீஅய அல்அது இல்இடம் பூடு
இரஇல என்ன இதனின் வாக்கிய
அருத்த வேத மாம்அச் சுவத்த
இருக்கென விடுத்து ஏகி மேலாம்
கதிபெற் றுய்யக் காட்டுய் வேணியும். (ச)

முப்பத்து மூன்று கோடி தேவரும்
ஆறுபத் தாறு கோடி யசுரரும்
அமிதம் வேண்டி யாழி நடுவில்
ஒருங்கே கூடி யொலிக்கக் கடைந்து
அலுத்து மூர்ச்சை யடைய வாங்கண்
உருள்மே ரதனைப் புரன்மத் தாகப்
பிடித்துக் கடையும் பெருவலி யுடைமை
வாலி பெற்றது வாழ்நல் லிலிங்கம்
ஒன்றுல் யானே ஓரா யிரத்தெட்
டிலிங்க பூசை இயற்றுவன் முப்போ
ததனுல் யாவும் அருட்டிரு நீறும்
நீறே மெய்யை நிலைபே றுக்கி
வேதை செய்யும் மேன்மை மிக்க
எறுழ்பூத் திலங்கும் இயல்பை யுடையது
காயம் கற்ப காலம் நிலைக்க
ஆயுள் வேதிக்கும் அந்தர கவனமும்
ஆம்என் றுலகா யதம்வாய் பேசி
வாலிபின் சென்றவன் வாலிற் சிக்கி
எண்டிசை எல்லாம் இழுபட் டுலர்ந்து
காய்ந்தத மான கதியெய்தி ராவணன்
தொந்தங் கோடி துறையது கோடி
என்றென் றியற்சீர் இயம்புங் காலை
கதிபெற் றுய்யக் காட்டுய் வேணியும். (ரு)

சித்தின் அந்தமாம் செம்பொருள் யானே
யான்யென தென்னும் இரண்டாம் துவிதம்
அன்றி யொன்றிவ் வகிலத் தில்லை
எல்லாச் சத்தியும் இலங்கும் ஈசனுன்

Koviloor Digital Library

செயவி சயம்எண் டிக்கிலுஞ் செய்தவன்
ஆம்என் றோகா ஆன்ம வாதம்
இசைத்து நாப்பிளப் பெய்த வூதை
யசனம் பண்ணி யண்டவே தண்டம்
கான்தரு வாம்எனக் கையிற் பற்றி
யசையச் சத்தியால் ஆட்டித் தூக்கத்
தூக்கக் கலக்கம் தொடரத் தன்வயம்
இழக்கச் சத்திக யிலயப தியாகச்
சக்கிரி தலைக்கொள் சக்கிரி என்ன
மூக்கின் மூச்சு முட்டத் திணறுதல்
ஆக ஆண்டுகள் ஆயிரம் வரைகீழ்
இராவண னாகி இதுவிச யார்த்தம்
அதல விதல சுதல தராதல
இரசாதல மகாதல பாதல மேஎலாச்
சத்தியும் என்று சாமம் இசைத்துக்
கதிபெற் றுய்யக் காட்டுய் வேணியும். (சா)

முடிவில் லாத மூன்றரைக் கோடி
வாழ்நாள் பெற்றோம் மங்கல மங்கையைப்
பெற்றோம் குபேரன் பின்னிட் டோட
அவனது செல்வம் அனைத்தையும் கவர்ந்தோம்
நித்தி யத்துவம் நிலைக்கப் பெற்றோன்
துணைவ னானன் தூய புலத்தியன்
மரபிற் றோன்ற லாய்வந் தோம்என்று
எக்களிப் பாக இருக்குங் காலை
முயன்று பெற்ற மூன்றரைக் கோடி
வயதரைக் கோடி வாழ்வே என்றும்
மங்கல மங்கையோ மாண்டும் தரிக்கும்
மண்டோ தரியாம் மங்கையே என்றும்
குபேர செல்வமுங் குறைந்து பெயரும்
செல்வமே என்றுந் திறமை மிக்க
நித்தி யதத்துவம் நித்திரைத் தத்வமாய்
வாய்த்தத் துணைநலம் மாயும் என்றும்
புலத்தியன் மரபோ அகத்தியன் சீற்றத்து
அழிந்தரக் கர்குல மாயிற் றென்றும்
வேற்றுரு வாகி விளங்கும் மாதவன்
தானுரு வேதஞ் சாற்றத் தெளிந்த
இலங்கை வேந்தாம் இராவ ணேச்சுரன்
ஆழ்சுமை நரகத் தழுந்தா துயர்ந்த
வீடுபே றடைய வேண்டிச் சீதையைக்

Koviloor Digital Library

கவர்ந்து இலங்கையிற் காவல் செய்து
அவனை விடேன்என்று அதரவம் பேசி
இராம பாணத் திலக்காய்த் நான்நனது
எல்லாம் ஆக இசைவித் திராமன்
மனித வுருவாய் வந்து கண்காணத்
தோன்றி விளங்குந் தூய்மை மிக்க
துவித சித்தாந்தச் சுருதிப் பொருளின்
வடிவமே என்றறிந் மாழ்கி யுயர்ந்த
கதிபெற் றேகக் காட்டும் வேணியும். (ஏ)

அரனைப் பிரியா ஆத்தும லிங்கம்
தனதாய்ப் பெற்று தன்பதி நாடும்
இராவ ணேச்சுரன் எதிரில் வேற்றுருக்
கொண்டு தோன்றி நின்று சுசிகரம்
காரண மாய்அது கைவரப் பெற்று
வைதிக நான்மறைத் தெய்விகம் பேறு
பெறத்திட் டித்நதைப் பெயர்க்கு மிராவணன்
இனைத்து மகாபல இலிங்க மென்றேகக்
காப்புச் செய்யுங் கணபதி யருளால்
மாயா வாத மமைவுற்ற இருக்கும்
அர்த்த வேத மதூஉம் உலகாயதம்
அதினியற் சீர்பெறும் ஆயுள் வேதமும்
ஏகான்ம வாத மிசைபெறு சாம
கானம் பொலிகாந் தருவ வேதமும்
துவிதசித் தாந்தத் துடியதர் வத்தில்
தன்னிலை யுணர்த்துந் தனுறு வேதமும்
ஆய விவற்றின் அகச்சு எட்டும்
சுருதி நான்குந் தோன்றும அராஉமா
அயனமுங் கணபதி யருளுங் காப்பும்
மூலமும் முதலுமாய் முதற்பண் விரியும் (அ)

(அ.உ.ம.) ஓம்

அரும்பதவுரைக் குறிப்பு

அற்று	-	தோற்றம்	-	முற்கூர்அத்தம்
அன்	-	சீவன்	-	சரம்
அம்	-	சடம்	-	அசரம்
ஆன்	-	ஆன்நின்ற	-	எதிர்காலம்
இற்று ஐ கு மீ	} இற்றைக்கு		-	நிகழ்காலம்

Koviloor Digital Library

அத்து	-	நேத்து	-	இறந்தகாலம்
அகரம்	-	பிரபாகரம்	-	தாரகை - நட்சத்திரம்
காரம்	-	அதிகாரம்	-	சத்து
கரம்	-	மகரம்	-	சித்து
கான் / தம்	-	காந்தம்	-	சூரியன்
தில்	-	பதில்	-	சந்திரன்
தி	-	அக்கினி		
வாசி	-	தெற்கு		
மி	-	மேற்கு		
அயஅல்	-	வடக்கு		
அயஇல்	-	கிழக்கு		
ண்டம்	-	ஆகாயம்		
பூ	-	பூமி		
டு	-	தேயு		
ர	-	காற்று		
ல	-	நீர்		

❖❖❖❖❖❖❖❖❖❖

அறம் (ச) 4	சார்தரு அறணம் (ச) 4	துவஅறம் (ச) 4
ருக்கு	மாயாவாதம்	செவி
யசூர்	உலகாயதம்	வாய்
சாமம்	ஏகான்மவாதம்	நாசி
அதர்வணம்	துவிதசித்தாந்தம்	கண்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அறஅணம் (ச) 4	ஓதுஅறணம் (ச) 4	துவஅறஇனம் (ச) 4
அர்த்தவேதம்	கார்த்தவீரியன்	மரம்
ஆயுள்வேதம்	வாலி	எறும்பு
காந்தருவவேதம்	கயிலை	பாம்பு
தனுறுவேதம்	ராமன்	மனிதன்

(மறைநூல் அமைவு)

கட்டளை, தோற்றம், ஒலி, தெய்வம், வேதம், வடிவு, தொழில், ஓசை, அக்கரம். (கூ) 9

Koviloor Digital Library

இரண்டாவது தக்கராகப் பண்ணின் எழுதாக்கிளிவி

இருக்கு வேதம் என்னும் தவளாகரச் சுருதி

தக்கரா கப்பண் சத்தியாம் நாதம்
என்னக் கட்டளை ஏழ்வகைத் தாய்அச்
சத்தத்திற் றேன்று தவள வெளியென
வியன்சீர் தோன்றி வியன்சீர் வெளியில்
மலர்த்தாள் நடன மாடுந் திறத்தேழ்
தாளமுந் தோன்றத் தாரங் கைக்கிளை
தழுவும் ஒலியிற் ருளப் பிரியையாய்ச் (௯)

மீச்சுருதி

சத்த மாதரும் தாளமும் வெளியெனும்
தவளா கரத்திற் சமைந்து நின்ற
இருக்கு வேதமும் இலங்கக் கொண்டு
தூக்கிய திருவடி துலங்கு வடிவும்
ஆக்கற் றெழிலும் அதிகார ஓசையும்
ஆக நகாரம் அமைந்து நிற்கும் (௰)

சத்திய வுபநிழலறம்

அமைந்து நிற்கும் ஐவகைப் பூத
அடுக்கில் ஐந்தா வதாகலான் ஐந்தாம்
எண்ணின் எழுத்தாய் இலங்கும் ருளனும்
வெளியாம் இருக்கில் விரிந்த சாகை
ஒன்று மூர்த்தம் இரண்டு சராசரம்
மூன்று காலம்ஆய்த் தோன்ற நிற்கும்
தாரகை யொன்று சத்துசித் திரண்டு
தீயொரு மூன்று திக்கு நான்கு
பூதம் ஐந்திவ் வீதம் கூடிய
இருபத் தொருவகை யுருவாய்த் திகழ
உடுடு டுடுடு டுடுடு என்ன
அண்ட முடியில் நின்றதா ரகையிலும்
நாதம் விந்தென நவில்இடி மின்னலில்
இடிங்கு தடிங்கு எனவும் ரவிமதி
சுடரிடை சூசௌம் வ்சுவ்சு என்றும்
குணம் தகுணம் குடக்குத் தரம்என
திக்குத் திகந்தம் திரிந்தும் தரய்தரய்
தரிதரி குளனத் தரணியில் நகம்அடும்
தனுஅத் திரிளனச் சைலம தில்அள

Koviloor Digital Library

அம்தீர்த்	தம்கிர்	ரஅம்	மென்ன	
நீரில்	தகதீய்	தேய்என	நெருப்பில்	
ம்ருத்	ஊதிரு	ம்ருத	க்அதரு	
எனவெங்	கொங்கும்	இலங்கும்	வளியில்	
மீககு	குடிசெனு	எனவெளி	தனிலிவ்	
வைம்பூ	தத்தினும்	ஆய்ந்து	தேடிடத்	
தேடிடச்	சங்கை	நீட	வஃதஃ	
தனைத்திலுங்	குறுக	அதுநெ	டிலாகச்	
சங்கை	யதிகொள்	தாளந்	தத்தி	
எனவுந்	தத்திங்	கிணதோம்	என்று	
ஆழ்ந்த	நாத	மாக	வார்ந்திடும்	(௰க)

ந

மூன்றுவது பழந்தக்கராகப் பண்ணின் எழுதாக்கிளவி இயற்சீர் வேதம் என்னும் தத்தவுரியச் சுருதி

பழந்தக்க	ராகப்	பண்ணது	சத்தம்	
ஏழ்வகைத்	தாயினும்	ஏழும்	வலிமெலி	
இடையெனச்	சொன்மூன்	றினத்தின்	மூன்றுக	
அமைதலால்	மூன்று	ஆதி	சத்தி	
எனக்கட்	டளைமூன்	றியையப்	பெற்று	
சத்தத்திற்	காதியாம்	தவள	வெண்சீர்	
ஆதி	யாக	வமையவவ்	வெளியில்	
இயங்கொ	லியாய	இயச்சீர்	தோன்ற	
அதில்வலி	மெலிஇடை	யாகிய	உழைஇளி	
துத்தங்	கொள்ளத்	துலங்கும்	ஒலியில்	(௰உ)

மீச்சுருதி

மானதப்	பிரியையாம்	வாணி	எனவும்	
சாரசப்	பிரியம்	சார்திரு	எனவும்	
நடனப்	பிரியம்	நாடுமை	எனவும்	
இயம்பு	சத்தியும்	இயச்சீர்	வேதமாம்	
தத்த	வுரியத்திற்	சமைந்து	நின்ற	
தாள	வொத்தியற்	றமிழுங்	குஞ்சித	
பாத	வடிவும்	ஆதர	வளித்தற்	
றெழிலும்	அமைதி	துலங்கு	மோசையும்	
ஆக	மகாரமாம்	அக்கரம்	நிற்கும்.	(௰௩)

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

தத்தவுரிய உபநிழலறம்

அக்கரம்	தோன்றற்	காதி	யாகிய
வெளியில்	உருவாய்	விளங்கிக்	காண்பன
எல்லா	வற்றுளும்	இயங்கு	தருளாம்
என்னத்	தேடும்	இருக்கு	வேதச்
சாகையில்	நடஞ்செய்	சத்த	மேழேழ்
ஆதி	இரண்டோ	டைம்பத்	தொன்றெனும்
ஆரிய	மான	அரியின்	விரியை
ஓரின	மாக	ஒருவழிப்	படுத்தும்
ஓத்தி	யமாக	ஓதும்	இயற்றமிழ்
இயக்கமும்	இயமுமாம்	இயச்சீர்ச்	சாகை
டாட்டம்	தாத்தம்	ஆகிய	எட்டில்
ணநன	மூன்றும்	இணைந்த	பெருக்கம்
இருபா	ஞன்காம்	இவையாழ்	நான்கில்
ஆகத்	தொண்ணூற்	ருரும்	இவற்றுடன்
எஞ்சிய	அக்கரம்	ஈரா	றெ்ன்றும்
சாரநூற்	றென்பது	சாகை	யாகி
விரிந்தியம்	பும்பதம்	மேவ	மேவச்
சந்த	இயம்பல	தாகப்	பெருகி
அனந்தந்	தொந்தம்	பதமாயதற்	கெட்டா
விந்தா	யுச்சியில்	விளங்க	மவுனமாம். (மச)

ம

நான்காவது தக்கேசிப் பண்ணின் எழுதாக்கிளவி

சாமவேதம் பூவூடியச் சுருதி

தக்கேசிப்	பண்	தவள	வெளியில்
இயக்கங்	கொள்ளும்	இயச்சீர்	நேரிசைத்
தரவுடை	மலரெனுந்	தவள	இயமலர்ப்
பாணி	துலங்கப்	பண்படு	வெளியும்
வெளியில்	வளியாய்	விளங்கும்	ஒலியும்
துலங்கணுத்	திரளுரு	வெனுந்தும்	புருவாம்
வாக்கில்	ஆரிய	மானது	நாவில்
இரத	மாக	இசைகொள்	நாரதன்
ஆய	வாக்கியத்	தகத்திய	மாக

Koviloor Digital Library

இசைய பிறக்கும் இசைத்தமிழ்ச் சொன்மலர்
என்ன மலர்ச்சீ ரிரண்டுங் கட்டளை
இரண்டி னெடுகைக் கிளையொலி தாரம்
கொள்ளும் ஓசையும் விள்ளு மலர்வும்
சமஞ்சம மாக வமைந்து தோன்ற (௰௫)

மீச்சுருதி

இசைத்தமிழ்ச் சொல்லு மியாழ்வல தும்புரு
நாரதர் இருவரும் நடுவுடைச் சாமமாம்
பூவு டியமாய்ப் பொலிவு பெற்ற
வேதங் கமழ விரிந்த பாணி
உருவமுஞ் செய்யென் றெறுத்த லோசையும்
சங்கைசந் தையமறத் தவிர்க்குந் தூய்மைத்
தொழிலுஞ் சிகாரந் துலங்க நிற்கும். (௰௬)

இயக்காயவர்க்க இயஉபநிழலறம்

துலங்க நிற்குஞ் சுத்த வெளியிடை
தோன்றிக் காணுந் தூல வுருவில்
ஆரிய மாக அடங்கா நெடிலாய்
அகத்தியம் ஆக அதீத வொற்றுய்
நடனம் செய்யும் நாத விந்தெனத்
திகழும் இரண்டு திருவடி தலைக்கொண்
டொன்று முதலா யொன்பது டம்பு
கொள்ளும் ஒருமைக் கூறுடைத் தாகிக்
குண்டை சுழியுங் கொம்புங் காலும்
கூட்டும் விச்சும் குறிக்கொள் ஒற்றும்
உடையெழுத் தாய்ச்சொல் லுருக்கொள் பசுவும்
அதன்பா லேய்சீ ரளையா ழிதுவாம்
ஆவின் ஐந்தக அவியிற் சதுரியச்
சமைகிரு தம்என வமைபசு இயைவும்
என்னும் பாசை பாசியமும் ஆன
பண்ணும் யாழுமாம் பகாஉ விதமொழி
காலில் எழுஞ்சு சிகரமென இயலில்
இசைத்தமி ழென்ன இயம்பும் பண்ணுப்
பண்சார் பாம்பிர பஞ்சம் அனைத்திலும்
ஆகுத் தீயென வாய்ச்சமஞ் சமமாய்
விரியுஞ் சாம வேதச் சாகை (௰௭)

இயம்பும் ஒலிமெய் எனும்இய ஆகமாம்
இயாகத் தாகுதீ எழுந்து விளங்கப்

Koviloor Digital Library

பசுவும	ஃதியைவாம்	பஞ்ச	கவியச்	
சதுரி	யமாகச்	சமைகிரு	தத்தால்	
வளர்க்க	எழுநா	வன்னி	யடர்ந்தவ்	
வாக	மதனை	யணிபெற	வகுக்கும்	
ஆக	வணீஇயம்	ஆகிய	பண்திறம்	
எண்ணுறன்	காகவிவ்	வெண்ணுறன்	குறுப்பினும்	
பண்ணவர்	தோன்றப்	பகுக்குஞ்	சரிநடு	
வெனும்பிர	மச்சரி	இயக்கீர	அகஅத்தத்	
எஞ்சும்	அங்க	அணிஎச்சம்	என்னும்	
அங்கணி	யாச	மதிற்பகா	உவிதச்	
சிக்கியை	பான	சிகைமுளை	விரிதலை	
ஆகிய	குடிலமும்	அதனிற்	பிறக்கும்	
அமுத	லோசை	யாம்உழை	இளியும்	
பண்ணவர்	தாதையாம்	மண்பொதுத்	தந்தையும்	
தோன்ற	விஃதெலாஞ்	சோபினி	முதிரியை	
யாங்கை	காட்ட	லதனி	லடங்கவும்	(மஅ)
அதனை	நேர்நடு	வானசு	வாகாய்	
ஆக்கத்	தூல	மதிற்றிரி	விதமாங்	
காரண	நாடிக்	கருவி	யடர்த்த	
லெனப்பண்	ணின்திற	மெண்ணுறன்	கதனைத்	
திரிசமஞ்	சமமாய்ச்	செயத்தொண்	ணூற்று	
றென்னும்	நாற்பத்	தெட்டிரு	சீர்களும்	
அட்சது	ரத்திரி	யவர்களும்	கலைஞர்கள்	
அறுவருந்	தோன்றுமா	ருகப்	பகுக்கும்	
வானற்	பிறைத்த	மதிற்பகா	உவிதச்	
சிகையணி	முடியும்	சீர்முடி	பின்னல்	
என்னும்	வேணிகோ	டீரம்	பின்னலும்	
அதனிற்	சிரித்தல்	ரசித்த	லதட்டல்	
ஓசையிற்	கைக்கிளை	யுந்துத்தந்	தாரமும்	
கோசிகன்	கோதமன்	குளிர்கலை	யோனும்	
தோன்றத்	திறவேணி	தூயஆ	வாகனம்	
தாவன	மிம்மூன்	றுகிய	முதிரியை	
வாங்கை	காட்டல்	அதனி	லடங்கவும்.	(மகூ)
இத்திறம்	திரிஎன்	னும்	நான்கில்	
எஞ்சும்	காரண	அணிஎச்சம்	ஆன	
பகாஉ	விதமாம்	பதம்ஒரு	நான்கும்	
சேர	நூறுகித்	திகழ்தர	லாயப்பண்	
தூலம்	என்னச்	சொல்லும்	பஞ்சு	

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திரிநூ ருஅச் சியமுற ஆகுதீ
யதனுற் காரெனும் அடரிருள் ஊஃநூ
எங்குள தென்ன எரியும் வத்தியாய்
இயமெனுஞ் சொல்லொலி என்னப் பெறூஉங்
காருக வத்தியக் கனலென வும்இய
மெனுஞ்சொற் றூலத் தியைகா ரணம்என
இரண்டு விதத்தி லியங்கப் பெறலால்
இயக்காய உவிதம் இயக்ய உவிதம்
ஆகிய நூறும் ஆசமஅணி இயமும்
என்னத் துலங்கும் இயாகம் நூருற்
சிறப்புற் றிந்திரன் தேவர் கோவாய்த்
திகழலுங் கனமுறச் செயச்சொற் றூலமாம்
ஆவிற் பவித்தலாம் அவிற் பவமும்
ஆவை வான அவியும் இயாகம்
துலங்கா குதியிற் சொரிந்து வேட்கைகொள்
ஐம்பொறி நுகர்உ விதமா கியகனம்
பத்தில் இயக்கயப் பசுநூ றுறவே
ஆயிர மாக ஆகுதி வேட்கவிக்
கனரக மாயிரங் கண்ணெனக் கொண்டு
இந்திரன் போகியாய் இலங்கத் தத்தெனத்
தோன்றுங் கனமெனச் சொல்பூ ரிப்புக்
கூட்ட வொலிஎனக் கூறுங் கனஇயம்
எனுந்தத் கனக்கண இயவெரி யோங்கிப்
படரவிவ் வியாகப் பசுவை ஆகுதீ
பூரண மாக்கும் பூரணு குதியில்
ஆசம அணிஇயம் ஆயிரம் நிறைவாய்
ஆயிரங் கதிருடை யருக்கனும் இயக்கயம்
கூறு செய்யுங் கூற்றனுஞ் சாமனும்
அங்கியுந் தோன்றிவ் வருக்கி பாத்திய
நிறைவிற் பண்ணவ ரிருடிக எட்சதுர்த்
திரிகள் கஜலஞர்கள் தேவர் கோமான்
அனைவருங் கமைகொண் டடங்கித் தேனராய்த்
திகழுங் காம தேனு வாக. (உய)

இயக்கா யப்பசு எழிலுருக் கொண்டு
தெய்வப் பசுவாய் உய்வுப மாமிரு
பிறப்புற விவ்விரு பிறப்புடைப் புரோகித

Koviloor Digital Library

ஞகத் தேவேந்திரன் அரசுய் வுபமாம்
வேள்வி வேந்தாய் விளங்கிக் காணவிவ்
ஆசம அணிஇயம் ஆயிரத் துண்ணடு
வணிஇய மாம்பிர மணிஇய மாகியவ்
வாயிரத் துண்ணூ ருயிரம் கோடியாய்ச்
சமஇயத் தடங்காச் சாம பிரியனுய்க்
கடந்தமெய்ப் பொருள் கலந்து தோன்றலால். (௨௰௧)

ஆச்சீ ராய்முன் னமைபகு விதமும்
விவித மாகி விரிந்து தோன்றவவ்
வாச்சீர் விவிதத் தநேகம் சிக்கியை
பாஞ்சடி லச்சடை யாகிய சிகையாம்
சிக்குக் கற்றைச் செழுஞ்சடை யாகி
யதனிற் சோம்ப னடுங்க லோசையாம்
குரலும் விளரியுங் கொண்டு தோன்றலும்
யோகினி மோகினி யாகிய முதிரியை
யாங்கை காட்டலில் அடக்கி யிவ்வாறும்
திறம்திரி நூற்கனத் திற்சிக் கியைபாஞ்
சிகையைம் பாலிற் றிகழும் பகாஉவிதப்
பண்சார் படியாம் பஞ்ச வடியும்
அதிலிசை ஏழும் அகம்படி நான்காம்
ஆய்சீ ரமைவெனும் ஆச்ரமம் நான்கும்
ஆகிய சார்பு அந்நிய எச்சமாம்
சந்நியா சமதா கவிந்நி யாசமாய்
விளங்கு இக்கோ கனதவிரி இதழ்ஆயிரம்
சரிகம பதமெனச் சார்அளி முரல
பிசிதற் றேனப் பிழையிது பகாஉச்
சடையிற் ருழ்மலர் சரிகம பதநி
என்று மலர்மிசை ஏகிச் சீஎனச்
சீகரம் வீசித்திகழ் தர விரியும்
அறஆழி யனுய் அந்தணன் ரேன்றிச்
சொல்லறச் சொல்லும் சுசிகரக் கஜலயிற்
பொய்ம்மல ராகிப் பூவிற் ருழும்
பூவாய்ப் பிரமஅன் புவியில் ஆலயம்
கொள்ளாக் குசையாம் புல்லெனத் திகழவும்
(௨௰) கைக்கொண் டுணர்த்துவற் கஜலயாய்த் திகழும். (௨௰௨)

சி

Koviloor Digital Library

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த திருமுறை பெருநூல் விளக்கத்தில் ஐந்தாவது குறிஞ்சிப் பண்ணின் எழுதாக் கிளவி

அதர்வண வேதம் என்னும் வாம நூற் சுருதி

குறிஞ்சிப் பண்எனக் கூறும் பெரும்பண்
வியன்சீ ரென்னும் வெளியும் வெளியில்
இயங்கு வளியெனும் இயற்சீரும் அதில்
மலர்நாள் ஆக வன்சீர்த் தளைகொண்
டிலங்கும் ஐந்துள் ளியைந்தும் அதீதமாய்
ஐந்தும் தன்னுள் ளடங்கத் தனித்தும்
பூத நாதனும் புண்ணியன் என்னக்
கலிச்சீர் பெற்றுக் கட்டளை ஐந்தும்
சத்தியை வுச்சிதம் வாமம தேய்வம்
அகஉரம் தற்பூரீ இடம்இசை இணையமாய்
ஐம்முக மாக வமைந்த பாணியாய்த்
துத்தம் இளியதி லொத்த வோசையில் (உ௰௩)

மீச்சுருதி

ஐம்முக முடைய ஆதி பகவனும்
வெளிவளி யங்கியில் விளங்கும் நாடகத்
தமிழுங் கான்பொதிர் தரச்செய் யதர்வண
வேதமும் வேதைய வித்தையவ் வைந்தவித்
தவர்வா வென்ன வழைத்த பாணி
யுருவமும் அதரவவ் வொலிஞ் சீர்மைத்
தொழிலும் வகரந் தோன்ற நிற்கும். (உ௰௪)

ஈசோ வாசு உபநிழலறம்

தோன்ற நிற்குஞ் சொரூப விச்சுவத்
தூல காரணச் சூக்குமத் தொடுங்கித்
தேவர்கள் தேவஇந் திரனுேடி ருசிகள்
அட்சது ரத்திரி யவர்கள் கலைஞர்கள்
முதல்வர்கள் அனைவரும் முடிய எட்டா
அதீதமாய் நின்ற ஆதி பகவன்
வெளிவளி யங்கியில் விளங்கு பூவணனே
என்ன அதரவிவ் விலக்காய்ச் சுராதிகள்
அதிர்ப்புறும் வுமமாம் அதர்வணச் சாகை
விரிபசு பாசமாய் விளங்கும் ஆன்எனும்

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

மாவிலி	யைந்த	மாயையஞ்	சினத்திற்
காண்சீர்	கொண்டு	கணிக்க	முதற்பொருள்
எச்சம்	ஐந்துமே	விச்சுவ	ரூபமாய்த்
தன்னுள்	ளமைந்து	தலைப்படல்	கண்டு
விச்சுவே	டனனாய்	வியந்து	சத்தியாம்
ஒலியைப்	பொறிவாய்	ஓரைந்	தாய
அஞ்சு	தலைகொண்	டனாக	வொருதலை
யறுதலை	யாகி	யடங்க	நான்முக
னெனநடு	வாம்மெய்	யில்லாத	வனாகவும்
ம்யாம்	ம்மோவ்	என்ன	மென்றும்வாழி
இகஅக	என்ன	ஏப்ப	மிட்டும்
ஐம்எனப்	பற்கடித்	ததட்டும்	வாயுடையதும்
அரோபோ	மாதோ	இருமென்	றலறி
உளறங்	ஃலீஎன்	றுருட்டு	நோக்குடையதும்
ஞ்ச்சின்	இஃகும்	ம்அத்திஙிஃக	என்னும் பெருமூக்
கதனிற்	சௌம்என்	றதிருஞ்சு	வாசம்
உடையதும்	அம்ம	ஓடொடு	யோஔ
எனும்பே	ரொலியை	இரீச்	ச்ரீஎன்பன
என்னெனக்	கூர்ந்து	கேட்கும்	பெருஞ்செவியதும்
ஆம்பே	ருருவுமி	யார்ப்புங்	கொள்வன
வாயபூ	தங்களு	மதிக	விரசுடன்
எத்துகை	சிந்தலொ	டிந்நில	மண்டிலம்
எனவுழற்	றிப்பரிந்	தேகலம்	மானையாய்த்
தாண்டல்	படர்தலாந்	தன்மை	யுற்றெழு
அடிகொடு	நடந்து	நேராக	நிமிர்ந்தும்
நிரைநிரை	யாக	நிறைய	வடர்ந்தும்
மாவுரு	வாங்கொடு	வளர்ந்து	பருத்து
விளமாய்க்	காய்ந்தும்	வெம்மையிற்	கனிந்தும்
ஏனம்	பூத்தும்	இடரிரு	ணிழற்றியும்
காசு	பிறப்புறக்	கருவி	நெருங்கித்
திக்குத்	திசைபொலி	சீருடை	யதுவாய்
மாயியை	பாகி	மறத்தொழில்	புரியும்
மாய	மாமர	மாம்அசு	ராதிபன்
குழுவொடு	நெருங்கிக்	குலைகுலைத்	திடவும்
கவித்தும்	கவ்வியுங்	கடிதிற்	றுறத்தியும்
ஆழ்த்துஞ்	சீரில	கப்படச்	செய்தும்
அடிப்பணி	செய்யவுள்	ளாக்கி	யம்போ

Koviloor Digital Library

தரங்க	மென்ன	வலற	வலைத்தும்
பட்டுல	ரச்செய்	பாட்டிற்	களித்தே
ழாழிச்	சீரா	யமைந்து	காணும்
அலகைகள்	கூட்டமு	மாகத்	தோன்றி
அவிர்ப்பவங்	கொண்ட	வெச்சன்	றேவர்மூவர்
இந்திரன்	அக்னி	எமன்ரவி	பிரமன்
ஆகியோர்	மீதி	லதரவம்	புரியலிற்
பங்கப்	பட்டும்	பலவுருக்	கொண்டும்
அடற்கரு	மத்தர்க்	காற்ரு	தவராய்
வானவர்	அனைவரும்	மறைந்து	திரிதர
விச்சுவ	ஏடனை	வேட்கை	முதலாம்
இராக	மகன்றஞ்	சினத்தி	னீங்கி
மாவுரு	வாக	வமைந்தந்	தரஞ்செயும்
மந்திர	வுருவே	வலரா	யடங்கி
தன்நிலை	குன்றித்	தாழுங்	காலை
யதரவ	மந்திர	மாயதேழ்	கோடியும்
அடங்க	விச்சுவமாம்	ஐந்து	முகத்தொடு
அதீதமாய்	நின்ற	அதோமுகந்	தோன்ற
அதனிடை	ழுறஃன	எழு	என்ன
நாதந்	துலங்க	நாடகங்	கொண்டு
விச்சக	ளுந்தமிழ்	வித்தக	ளுகத்
துலங்கி	யதரவந்	துடைத்தடற்	கருமமாம்
குற்ற	மறுத்தெண்	குணனுய்	வீரம்
விளைத்துவீ	ரட்ட	விச்சுவ	ளுகியிவ்
வைம்பெரும்	பூதத்தி	யாப்பொலி	நாலும்
அடிக்கதிப்	பேழும்	அடர்ந்த	மாயைத்
திக்கு	திசைப்பொலி	சீரெண்	ணுன்கும்
அலகேய்	வேழாம்	யாழ்சீ	ராக
ஐம்பது	சாகை	யாகி	விரிந்த
பூத	வுருவாய்ப்	பொலிகா	னத்தின்
மெல்லின	மாமலர்	விரிமுரு	காகிக்
கமக	மென்னுங்	கந்தனுய்	நிற்கும்.

(உமரு)

வ

Koviloor Digital Library

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த
திருமுறைப் பெருநூல் விளக்கத்தில் ஆறுவது
வியாழக் குறிஞ்சிப் பண்ணின் எழுதாக் கிளவி

வேதாந்தம் என்னும் அறவண்ணச் சுருதி

வியாழக் குறிஞ்சியாய் விளம்பப் படும்பண்
விச்சாம் ஐந்தின் மேற்கொள் சேடமொன்
ருய்க்கட் டளையா றமையப் பெற்று
வெளிமுத லெந்தாய் விரிந்த வியந்தரம்
ஒன்றி லயப்பட் டொடுங்குமே காந்தம்
துலங்கு பாணியு மிலங்கு பதமும்
இளையுழை விளரியி லிசையு மோசையும் (உ௰௯)

மீச்சுருதி

விளங்கச் சேட விசேடதி சேடனும்
மொய்யல கையுரு முரிய மிதித்து
வேதை தவிர்த்தருள் வேத அந்தமாம்
அறவண மோருரு வாய தோற்றம்
வயங்க நின்ற வியன்கர வுருவும்
வரியளி கவரும் மண்டலப் பதமுமாய்
அஞ்ச லென்ன வருடரு தொழிலும்
ஒன்றி லயப்பட நின்றநட் பொலியும்
திகழ யகாரம் சிறந்து நிற்கும். (உ௰எ)

ஐதரேய உபநிழலறம்

சிறந்து நின்று திகழ்பொருள் விச்சுவம்
தூலங் காரணம் சூக்குமம் பூவணம்
எனவே னைப்பட் டிடைஞ்சலு றும்பசு
வேதை தீர்தலாம் வேதாந்த பாகை
அஞ்சினத் திற்படர்ந் தனேக வுருப்பெற்
றகில புவன மதிற்புணர்ப் பாகியவ்
வைந்தின் மேலொன் ருஞ்சட மாகி
இயங்க செய்யி யமானனு னென்ன
எக்களிப் பெய்தி இருடிக டேவர்க
ளாதியோர் பதமெண் பானென் றுயிர்க்கண
நெடிதே சாரியை நிலமேழ் பெருஞ்சுரர்
சகபத மேமொன் ருயதொண் ணூற்ரு
றதனிற் சந்தித் தனேக விகாரத்
திடைநில கொண்டாங் கிடைஞ்சல் பலபட்

Koviloor Digital Library

டல்லல்சேர்	சாக்கிரத்	தனந்த	லருளி	
வேதை	தீர்க்கும்	வேதஅந்தப்	பொருள்	
சகஅடை	வான	சகடை	நடத்தித்	
திரிபு	உரமும்	தேஅர்	சடஇயை	
பான	சடைவும்	அறிந்தெரிச்	சல்கொள	
ந்தஅஃ	தென்னும்	தத்திற்	றுவமெனத்	
தோன்றிய	வதுதன	துபநிழ	லாம்என	
எள்ளி	நகைக்கும்	அசிபத	மான	
தத்துவ	மசியதாம்	தந்து	வந்தம்	
அனந்தந்	தொந்த	மெனக்கொடு	கொட்டி	
ஆடல்	புரிய	அனந்தற்	சொற்பண	
விரியிற்	றிஊைத்து	வேதை	தீர்ந்துமுன்	
வேதச்	சாகை	விரியையும்	அஞ்சினத்	
தோற்ற	மாய	தொடர்தொண்	ணூற்கு	
றதனிற்	றுரியல்	செய்தறியுங்	காஊல	(உமஅ)
பண்ணல்	லாத	பணமெனுஞ்	சொற்பணப்	
பண்ணக	மான	படம்விரி	நாகம்	
ஆறென்	ருகவிவ்	வாறறி	வொன்ரும்	
ஏழ்வகைத்	தோற்றம்	எடுத்து	நிற்கும்	
அதற்கும்	பிரக்ஞை	யளித்து	நின்று	
பிரக்ஞை	ஞானமாம்	பிரக்ஞானம்	பிரமம்	
ஏலல	அல்லேலல	தேஊலயாம்	எனப்	
பழையமன்	ருடும்	பாண்ட	ரங்கஞ	
யாடல்	காட்டி	நின்ருட்டு	மெய்ப்பொருள்	
துரியந்	தோன்ருச்	சுழுத்தி	நல்கலும்	(உமகூ)
அனந்தலி	லாழ்ந்த	வான்மா	மேற்கொள்	
லரவுரி	இஊணதொட	ரடுக்கொடு	றைகொள்	
யோனி	நால்வகை	யோடொரு	பேதமாம்	
ஐந்துதீ	ராவிட	மாகி	யாழ்த்த	
ஆழ்வா	ஞகிய	ஆன்ம	நடுவாய்	
அவித்தை	கெடநின்	ருதன	தாய்க்கொள்	
ஆயனும்	அயம்	ஆத்மா	பிரமம்	
தில்ஊலஆ	அல்லல்கடி	யாகூ	ஐயாகூவாய்க்	
காவல்செய்	பாலன	ஞங்கா	பாலனய்	
ஆடல்	செய்துநின்	றருளுந்	திறத்தால்	(௩டம)
வேதை	தீர்ந்துமுன்	வேதச்	சாகையில்	

Koviloor Digital Library

பூதிக	மாகப்	புகல்தொண்	ணூற்று
றதனிற்	பன்னிரண்	டாகிய	பாகையும்
ஆக	நூற்றெட்	டடர்திறந்	தின்மன
துண்மெய்	யனுகி	யோதி	யோதுவித்
ததனுற்	பொய்ச்சார்	பாம்மறந்	தீர்ந்து
அறந்தரு	பதமும்	இதந்தரு	பாணியும்
தற்பணத்	திற்படர்	சாயையிற்	றேரன்றவச்
சாயா	புருடன்	தானவ	னென்ன
வேதச்	சாகை	விரியிற்	றூரிய
அதீதமாய்	நின்றவை	யஞ்சி	லுழல்தலிற்
றீர்வருள்	செய்து	தீர்த்தன்	றுலங்க
பூதிகம்	பாகை	யாதியாம்	நூற்றெட்
டதிலவ	னுபநிழ	லாகி	யான்மா
தானவ	னென்னத்	தானவ	னுகித்
திதிபுத்	திரராய்த்	திரிந்து	கடவுள
ரென்ன	எலுறன	மோகினி	யமிதங்கொள
நீள்கலா	திபர்கள்	நெடிதே	சுட்டிக்
காட்டலால்	உறுபு	அறுவேற்றுமைப்	பட்டு
மெய்யுயிர்	வேருய்	விடவ	மிதத்தால்
ஆகம்	நிறைவுகொள்	ஆக	மனுகிக்
காட்டிக்	கொடுத்த	கலைஞர்	களிருவரைத்
தெற்கும்	வடக்கும்	திரியத்	துறத்தி
விடவ	மிதங்கொள்	மெய்ய	னுருவப்
பிரதி	பலிப்பைப்	பெற்றகி	லாண்ட
பூதலம்	யாவையும்	பூவெனக்	கொண்ட
பூசெய	னென்னப்	புகல	நெடிற்சுட்
டாம்பொருள்	நாமென	வாய	நமோநமௌ
வெனுந்திரி	சதமென்	றெண்ணித்	திரிதல்
அடங்கி	வழிபா	டாகப்	புனிதம்
வேட்டல்	வேட்பித்தல்	செய்விர	தியனுகி
யதனுல்	இன்மை	யகன்று	மெய்ப்பொருள்
வாகாய்	வாய்க்கும்	வாக்காம்	அறத்திற்
காதி	நலனுடைத்	தாகத்	தன்னுள்
ஆவெனும்	பசுலய	மாகும்	ஆலயமாய்த்
தூல	வுருவம்	தோன்றக்	கண்டு
வாழ்க	வாழிய	வெல்க	போற்றி
காண்க	வென்னக்	கழறு	அஸ்துத
தாஸ்து	ஜயவிஜ	யிபவ	வென்ன
ஒன்றிரண்	டாமுப	சார	மொழிபத்

Koviloor Digital Library

நதிற்றிரி	யாமச்	சதந்தலைக்	கொண்டு	
அருத்தனே	புரியு	மதிவி	சேடத்தால்	
ஆயிரந்	தலையுடை	யாதி	சேடனுய்ச்	
சகந்திரம்	பெற்றிடத்	தாங்கும்	வலிமையில்	
அஃதனுட்	டானம்	ஆகித்	துலங்க	
அனந்த	பதந்தன	தாகக்	கோவில்	
என்ன	மேற்கொண்	டிலங்கு	பூதியன்	
நிற்கக்	கோவின்	நிலைஇனி	தாக	
அகத்திற்	பிரமமா	யண்மி	நின்று	
நானன	நன்ன	நானன	நன்னவென்	
றனந்தத்	திருக்கூத்	தாடல்	செய்ய	(௩௰௧)
பூதிகஞ்	சார்தரு	வேதனை	பலவும்	
தீர்ந்துள்	ளன்புச்	செறிவால்	ஈதல்	
ஏற்றல்	உடைத்தாம்	நோற்றல்	புரியத்	
தோன்றும்	ஓமந்து	துலங்கத்	துலங்கிப்	
படிந்தும்	வசித்தும்	பட்டும்	ஒற்றியும்	
அத்தியை	யயன	மாகச்	சார்ந்தும்	
இன்பந்	துய்க்கும்	இயல்பு	ளதாகிப்	
பொருட்பத	மனைத்தும்	புற்கல	மான	
காயத்	தின்பங்	கனியச்	சித்துரு	
வாகிக்	கலந்தை	யைந்தையு	மின்பமாய்ச்	
சித்தனு	பவிக்கச்	சீர்பத	நல்கியக்	
கால	பரம்பர	கதிதர	முடியில்	
ஊன்றி	யருளிவி	யோமா	திபனுய்	
அஃகே	னங்கலை	யாக	வணிந்து	
அகில	பதங்களும்	அஃகும்	ஆயுத	
பாணி	யனுகிப்	பகுதி	விகுதியாம்	
வேதை	நீறு	விளைக்கும்	விபூதி	
மெய்ய	னுகி	விளங்கும்	சித்திரம்	
கூத்தா	டச்செய்	கூத்தனிவ்	வாரும்	
ஆயிரத்	தொடுநூற்	றெண்ப	தாகிய	
வேதச்	சாகை	விரியைப்	பூதியம்	
தொண்ணூற்	ருரும்	தொகையுட்	பகுக்கும்	
பன்னிரண்	டான	பாகையுங்	கூடிய	
நூற்றெட்	டதற்கப்	பாற்பட்	டெஞ்சும்	
ஐந்திரம்	செய்யும்	அவித்தை	யையைந்துள்	
ளாழா	நின்ற	ஆழ்வான்	வாழ	
வருளுங்	காலப	ரம்பர	வியோமமும்	
ஆகிய	சத்தநா	லதின்வே	தாந்தமோ	
மஅ				

Koviloor Digital Library

டறுவகைத்	தொழிலும்	ஆள்வினை	குறிக்கோள்
என்னும்	அறம்பொரு	ளின்பம்	மூன்றும்
தோன்ற	லாகிய	தொகைதிரி	சதமுப்
பானிற்	பழம்பொருள்	படர்தரு	சாயை
பதியும்	புதுமை	யதினுற்	சேட
மிகுமதி	சேடவி	ரியதி	லாயிரங்
கூடு	தலையாய்	கொண்ட	திகாரக்
குறுந்தாட்	பூதக்	குறளதை	நாண்மலர்த்
தொடை	யலாக	வுடைவிர	தியனும்
அரஃகர	வென்னவா	ராதனை	கொள்ளும்
அடர்தி	ரிசதம்	ஆயிர	நாமமும்
ஆகமத்	தோற்றமும்	ஆலயப்	பாடும்
உபநிழ	லறங்க	ளொருநூற்	றெட்டும்
முப்பாழ்	பாழாய்	முடிந்த	வெண்ணீறு
விளங்கு	களாமுக	வேத	அந்தப்
பதமும்	லயப்படு	பாணியும்	அகம்புறம்
உருவ	நின்ற	வுருவம்	வலிமெலி
யனைத்தினும்	இடையின	மாகிய	பொதுவும்
சித்திரக்	கூத்தும்	சிறந்து	துலங்கி
விளங்க	விச்சுவ	வீரட்	டானன்
பரப்பிர	மமாய்ப்	பதிதர	நிற்கும். (௩௰௨)

ய

ஏழாவது மேகராகக் குறிஞ்சிப் பண்ணின் எழுதாக் கிளவி அத்துவித சித்தாந்தம் என்னும் இறைவண்ண நிறைவென்னியச் சுருதி

குளிர்மேக	ராகக்	குறிஞ்சிப்	பெயர்ப்பண்
விண்ணேறு	டைத்தாம்	மேகம்	என்ன
வியன்கலிச்	சீரும்	மேக	இராகக்
குறிக்கோ	ளுடைய	கோமான்	இருவர்
என்னக்	கட்டளை	இரண்டும்	அவர்களை
விண்முக	டதிர	வேற்றிப்	பாரத
மாகப்	படர்ந்த	ஆழியொக்	கத்தாழ்ந்
திறைஞ்ச	லென்ன	இளைஇளி	உழைகொளும்
ஓசையுங்	கொண்டு	ஓங்கி	யொடுங்கும். (௩௰௩)

Koviloor Digital Library

மீச்சுருதி

உருவமு டைடீஸந் தொன்ருஞ் சடத்திற்
ரேன்றி யமையத் துவிதசித் தாந்தமாய்
இசைகொள் மேகம் இறைஞ்சி நிற்கவும்
சிந்தில மார்ந்தார்த் திடவும் ஆட்சிகொள்
இந்திரன் வருணன் இருவரும் எடுத்தல்
படுத்தல் ஓசை பயிலும் ஆழி
சங்க முழக்கம் தருபா ரதமும்
ஓங்கா ரத்திரு வுருவுந் துலங்க
இதுஇக எச்சமென் றெடுத்துக் காட்டிப்
பாசம் அறுக்கும் பாசு பதமாம்
உணர்வில் அஉ உடைப்பசு பதியக்
கொண்டுயர் ஊழிக் கூத்தும் அனைத்தையும்
முடித்த லோசை முழக்கமும் நிறைந்த
இலிங்கா காரம் இலங்க நிற்கும் (௫௰௪)

பாசுபதப் பிரம உப நிழலறம்

இலிங்கா காரமா யிலங்கும் பதியை
வெளியிற் சொரூப விச்சுவ மென்றும்
தூலங் காரணம் சூக்குமம் என்ன
அகத்திற் றேடி யலுத்தும் அஞ்சின
விதத்திற் பார்த்தும் வேதை பலபட்
டடங்கிச் சாகையில் அவித்தை தீர்தலாம்
வேதாந்தப் பாகையின் விளங்குஞ் சடத்திற்
சித்தென ஆழ்வான் செவ்வி யனுகி
ஆயி ரமுகத் தாரனை கொண்டு
தெளிந்து நடன தெரிசனங் காணும்
பதஞ்சலி வியாக்கிர பாத னென்னும்
மென்மைவன் மைப்பத மென்னும் இரண்டிற்கு
அன்னி யனும்உப மன்னிய னருளால்
அஞ்செழுத் தோதிநீ றணிந்து தீர்க்கைபெற்
றனைத்தினுண் மெய்கண் டருட்சிவ ஞான
போதஞ் சித்தி பொருந்தும் வகையிற்
றேடி முடிந்த சித்தாந்த துருவம். (௫௰௫)

துருவித் தேடிய தொகுதிகள் யாவும்
பூதம் பூதியம் ஆதியாம் சடம்அது
தத்துச் சத்ததிற் றறிக்கும் சித்துயாம்
எமது உயிர்ப்பின் இயங்குவ தோன்றும். (௫௰௬)

அதனில் நாதவிந் ததிற்சந் தத்தனு

Koviloor Digital Library

சந்தத் தனுவிற் றிரிக்கும் வீசமஃ
தாதி யாக அகிலம் விளங்களம்
சாங்கம் ஆர்ப்புத் தந்து நிற்கும். (௫௰௭)

சுழல்முனை யுடைத்தாய்த் தோற்றம் தெரிதராக்
கதிர்கொள் நேமிதன் எதிரிடை கலையாய்
அதன்பின் கலையாய் அமையும் இருகதிர்
பாண்டென வெள்ளொளி பரப்ப வீது
உரம்பெறச் சண்டனுக் கொளியை யுதவிடு
சக்கரம் என்றன் நற்கரத் துள்ளது. (௫௰௮)

உள்ளஅச் சக்கரத் தொளியால் ஒளிரும்
கதிர்மதி யுதவும் கலையைந் திரத்தில்
அஞ்சு உருவமாம் பஞ்ச கலையும்
சுயஓ தனம்அது துர்ஓ தனமாய்
அமைந்த ஓதனம் ஐம்பதிற் றிரட்டியும்
துருவப் பதியிற் றேரன்றி எழுந்த
வாக்கொரு நான்கும் மலர்எனச் சுபத்திரம்
இயைகோ டனையஃ தேழும் ஆய
நூற்றுப் பதினெட்டு ருத்திரட் கணமும்
கலையாதி யாக நிலவ லுற்றன. (௫௰௯)

கலாதி நான்கிற் காணும் ஐந்தாம்
பப்புரு வாகமாய்ப் பரவும் வெளியும்
அதனிற் றேரன்றும் அரவமாம் வளியும்
வளியிற் சேர்ந்தவி மன்னும் அனலும்
அனலி லிளம்பாண் டாகிய புனலும்
புனலிற் கடர்க்கயம் பொருந்து நிலனும்
ஆயவைம் பூதம் அமைந்து தோன்றின. (௬௰)

தோன்றிய பூதத் துறுபூ திகமாய்
மாயச் சகுனி யாய மூலமும்
வியன்ஞா லக்கலர் விழைகீழ் உருவாய்ச்
சொல்லு கின்ற சுகவதிட் டானமும்
பிரளயக் கலர்எனப் பெறற்கரு அணம்அது
மணிநூல் எனமறை மணிபூ ரகமும்
சகலருங் கலராய்த் தாழ தாழ்ந்தெழு
துரோணம் என்னச் சொல்லனற் கதமும்
ஆள்நவ மாகி யடங்கி யடங்க
அச்சு வத்தம் ஆய விசுத்தியும்
கன்ம வினைவாற் காணும் சல்லியம்
அகலச் செய்யும் ஆக்ஞையும் ஆயவை

Koviloor Digital Library

எனதுசா ரங்கத் தியைவு கொண்டன. (௭௰௧)

கொண்ட பூதியத் தண்டிநின் றமைந்தன
ஓம்அகச் சிகண்டியாம் தாத ஃஹுட்
படவுத் திரமாய் யடர்வுறும் அத்தி
அத்திரம் படச்சாத் தகிதுவக் கஃஹுள்
அவிசடத் தூர்ஊட் டத்துவ் நெய்த்தோர்
வவ்சடஞ் செவ்வித மாகச் செயும்ஊன்
சுவைதா விராடுவாய் பெய்யாம் விழுக்கு
சுவாகாய் ஆகுதீ துருவ பதம்பெற
மூள்அரி யாய முளரி மூள்இயை
பான தண்டம் அங்கைத் தலம்உள்ளன. (௭௰௨)

தண்டம் அதனில் நின்றெழு கோடி
மந்திர ஈச்சுரர் மற்றும் இருநூற்
றிருபத்து நான்காய் இயம்பும் புவனம்
இருடிகள் தேவர்கள் எண்பத் தொருபதம்
ஆதி யானவை அமைந்து தோன்றும். (௭௰௩)

தோன்றிய தாதுட் டொடர்கொள் இராகத்து
எய்யா ததுவாய் இலங்கு ஆக்கிருஷ்ணம்
சத்தகம் அறுசஞ் சத்தகத் தம்பனம்
சிசுபா லத்துவம் சேர்வித் வேடனம்
சாரச் சந்துசெய் தன்மைப் பேதனம்
இடும்பைக் கிடும்புற யேவும்உச் சாடனம்
ஒன்றுய் நின்ற உடலுயிர் வேறுய்
பகுஅசு ரத்தனம் பண்ணும் மாரணம்
கீழ்சகம் பணியக் கிளைத்தெழும் மோகனம்
மணிமா லம்என வாக்கு வசீகரம்
ஆயதொ ழிற்செய் யட்டவித் தியேச்சுரன்
வலியவென் மந்திர வானிற் றேன்றுவர் (௭௰௪)

இவ்வா றுகிய எல்லாம் எனது
தத்துவத் துள்ளாய்ச் சமைந்து காணும்
காணும் அளவைக் கணக்கிற் கெட்டா
விச்சுவ மாக விளங்கும் என்உருவம்
விச்சிட்ட அத்து விதனுன் நான்நான்
என்று கீதை இசைத்து நிற்க. (௭௰௫)

கீழ்இதம் அதனின் வேதை உணர்ந்த
ஞான சிரியன் நல்லருள் பாலித்து

Koviloor Digital Library

ஈண்டு கூறிய தெல்லாம் உனது
உயிரும் உயிர்ப்பும் கலையும் கலாதியும்
பூதம் பூதியம் தாது இராகமும்
ஆய எட்டாம் அதிகரணம் கொண்டு
ஆவாய் நிற்கநீ ஆவுடை யவனுய்
எட்டினும் உனக்கு ஏற்றம் அளித்து
ஆதி யந்தம் ஆய்பா சுபதம்
தந்து பதினெட் டதனிற் றுருவமாய்
நிற்கும் விளக்கம் நிகழ்த்து கின்றேம். (௬௰௬)

நிகழ்வ தறியாது நீள்துயில் நீகொளும்
மந்தமும் அந்த மந்தந் தரவரு
மந்த தரத்தால் மயக்கும் தந்து
சுக்கின் கிலமாய்ச் சொல்லும் சிறுதுளி
ஆழ்கட லாக அதனிற் றுருவமாய்
அமைந்து நிற்க வமைத்த சித்தியார். (௬௰௭)

அமைந்த அந்நிலை யதற்றீ விரமும்
தீவிரந் தரவரு தெளிவுந் தந்துன்
உணர்வு தோன்ற வுயிர்ப்பித்த சித்தியார். (௬௰௮)

உயிர்ப்பிற் பூம்புவம் சுவம்மகம் சனம்தவம்
சத்தியம் தத்துச் சத்தெனச் சங்க
உருவாம் பிறழ்நவம் உவஅம் ஓம்என
ஒலிக்க நீதத் துவம்பெற வுன்னுள்
அடங்கல் விளங்க அருளிக் காயம்
திரம்பெறச் செய்சீவ சத்துச் சித்தியார். (௬௰௯)

சத்தி நீள்பதத் தமைகலை நெகிழ்வு
காண விளைவு காட்டு மியற்கைகாண்
விதுவார நேயம் எனும்மதி கதிரொளி
கருகச் செய்யுங் கரிகைநீ கொண்டது
காலிற் றேன்றிய காலச் சக்கரம். (௭௰)

காலச் சக்கர கதியாற் றேன்றிய
குந்திமை மாத்திரை கொள்கலை மூன்றுல்
குறுக நெடுமை கூர்வியன் ஞாலம்ஆம்
பார்கோ தேவர் சமையதி மகியாம்
மண்விண் வானேர் வாழுயர் நிலமும்
ஆணவ மதனுள் ளமுந்தி விளங்க
சாம்வித் தாய்த்திரி சாவித் திரியாம்
நாழிகை யாதி யாக நவினும்
காலம் நியதி கற்பித்த சித்தியார். (௭௰௧)

Koviloor Digital Library

காலம் நியதிக் கணக்கு நெடிதே
யாயினும் கலையில் அடங்கப் பெறுலயம்
மருவுசற் புத்திர மார்க்கம் அமையக்
கொண்டு ஐந்திரம் அண்ட வருஅணம்
காண்டீபம் ஆய்க் களங்கம் அறுக்கவும்
சோமன் சூரியன் றுய்ய அமிர்தெனும்
துய்யன் இனன்பெறு சுதையொத் தமைந்த
பசுநெடி லான பாசு பதம்பெறத்
தன்மை பேர்வடிவு தாச மார்க்கமாய்
அமையச் சகமார்க் கத்தைக் கடந்து
நிவாத கவசமாய் நீள்கால் அகையல்
பரப்பு டைத்தாகிப் பரந்து விரிந்த
ஆர்ப்பொலி யாவும் அடங்கி யழியவும்
உருத்திரா காரமும் ஒடுக்கம் பெறவும்
சரத்திற் சோதி சமைசன் மார்க்கத்து
ஆணவங் கன்மம் அழியக் கலாதியுட்
கலையும் வித்தையுங் கற்பித்து வித்தியா
தத்துவம் மந்திரம் சமைத்த சித்தியார்
மார்க்கம் நாலுள் வருமிவ் வுண்மெய்காண். (ருயஉ)

மெய்கண் டமைதி விளங்க அகத்தும்
அகத்தின் புறத்தும் அதற்கப் புறத்தும்
புறத்தப் புறத்தும் பொருந்தி நின்ற
ஒன்றதை யுனக்கு உணர்த்த வுணரும்
ஆதி பருவத் தமைந்த சுபக்கம்
விடுத்து அந்தரம் அடுத்த காலை
மறைந்துள் நின்ற மறையவன் மறைய
தோன்றுது நின்ற சூக்கம் தூலமாய்
ஐந்திரம் நல்கும் ஐவகைத் தோற்றமாம்
பூதம் ஆதி யாகும் அங்குரம்
கொளப்புரி யட்டமாய்க் கூறும் அகத்திணை
அகத்திணை யாய்உள் ளஃகப் புறத்திற்
பெயருந் திணையாம் பெருந்திணைப் பொருளாய்ப்
பரபக் கத்துட் படும்அ வாந்தரப்
பருவ மெய்தப் பருவர லூற்றது. (ருயஙு)

பருவத் துற்ற பருவரல் தீரப்
பூஇது எனஇகம் புகல்பூ தியமாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை வாகையாம்
எண்வகை மலர்களி வைநிரல் நிரையே
உழ

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணே

உச்சிபின்	தாரை	உரமும்	உதரம்
கண்டங்	கரணங்	கைகால்	எட்டில்
சாரச்	சமர்செய்	சமர்த்த	சார்த்தூலன்
விளங்கப்	படுஆண்	விரும்பும்	கைக்கிளை
என்னும்	ஆண்பெண்	இரண்டு	ருவாகி
ஆணவங்	கன்ம	மாயே	யத்துட்
சகலருங்	கலராய்ச்	சயங்கொள்	விசய
புருடனும்	இராகமாம்	பூவையும்	ஆகச்
சிகரமு	மாகச்	சித்தீந்த	சித்தியார்
சித்தியார்	என்னும்	தெளிவு	கொள்ளாது
ஐந்திரத்	தோன்றல்	அவர்கள்	சகாயன்
எனப்பர	பக்கம்	எய்தும்	அதனுல்
விளைந்தது	பார்அதம்	மீளா	வுடன்றல்
அதிற்பதி	னெட்டு	அக்கர	அணியாம்
பதாதிகள்	அனைத்தும்	பாழ்படும்	படியாய்க்
குருசேத்	திரத்துட்	குவிந்தடல்	கொண்டு
உஅம்	எனச்சங்	கொலிக்கும்	எல்லை
பதினெட்	டினில்வேறு	பாடு	பதினெட்டு
அமையத்	தாதேழ்	அனைத்தும்	சிந்தி
ஆயிர	முகங்கொண்	டாருய்ப்	பெருக
ஆபோற்	றுசோதி	ரசோம்	மிருதம்ஆம்
இயாகப்	பசுஇழுது	எரிஎரி	காசென
அருந்திப்	பேய்கள்	அகங்களி	கொண்டன
அநுசிதம்	எனச்சிவன்	அகன்று	நின்ருர்
அதனுற்	றண்டம்	அனது	தண்டமே. (ருமச)
வீணு	தண்டம்	ஆனது	அன்றி
உனது	அன்பிற்கு	உரியோர்	யாவரும்
இராஅக	மெய்தி	இருக்குங்	காலை
சார்அச்	சுவத்தம்	தடம்மா	றுதல்பெற
நீயமைத்	திட்ட	நிலைமை	பிறழ்ந்து
பூதா	காரம்	பொலிகான்	தருவாம்
விரியடர்	சூழல்	புரிதரும்	மாயை
அழுத்தம்	திருத்தம்	ஆக	வமைதல்
கானத்	திடையே	காணச்	சுத்த
வித்தியேச்	சுரனய்	விளங்கி	விளக்கம்
காட்டி	முன்பு	கழிந்த	எண்கரும
வீரரும்	ஒன்ருய்	மீண்டுருக்	கொண்ட

Koviloor Digital Library

வலிமையும் மீட்சியும் மாரண மாகச்
சிவமந் திரத்தைச் செபிக்க வரும்வசி
ஆயுத முந்தந் தனைத்தும் அழிய
அச்சுவத் தர்க்க ருளிள திருறப்
பட்டவர் எல்லாம் படப்பெரு விருத்திச்
சகலரும் ஊஅழி தாண்டவத் தடங்கப்
யான்எனது என்செயல் என்னும் ஆணவம்
கன்மம் மாயையின் கண்தலைப் பட்ட
உன்னை ஐந்திர உறவைப் பொருந்திய
தத்துவம் நீக்கிச் சாதா ஆக்கியது
ஆர்சிவ தத்துவம் அல்லாத சித்தியார். (௫௰௫)

சுத்த வித்தை ஈச்சுரம் சாதாக்கியம்
சத்தியுஞ் சிவமும் தந்ததுண் மெய்காண்
சத்தியுஞ் சிவமும் தந்த உண்மெய்யை
கண்டமெய் கண்டார் காட்டும் பொருளே
மெய்ப்பொருள் நீமுன் விளம்பியது எல்லாம்
கீழ்மைக்கு இதந்தரு கீதையென் றுணர்க. (௫௰௬)

கீதை மொழிந்த ஆதனும் உனக்கும்
ஆத னுகிய வியாதன் சொற்படி
உயர்வட சிகரியில் ஒற்றை மருப்பால்
வரைந்தனன் கணபதி வரையறை செய்ததே
பின்னர் நிகழ்ந்தன பிரம்ம பூருவம்
எனவிதி யெழுத்தின் முன்எழுத்தாய் நின்றது. (௫௰௭)

எழுத்தின் வலிமை அழுத்தம் உணராது
தத்துச் சத்ததிற் றரிக்கும் சித்தியாம்
எனல்தடு மாற்றம் இதுஇக எச்சமாம்
பூஉவம் சிறுதுளி பொருந்தும் தாது
அதன்விளை வதுபா ரதமாய் விளங்கும்
பாரத பெரும்போர் வாரா தகற்ற
சிவனைச் சீவனீ சித்தெனச் சார்ந்து
அத்து விதமாய் அமையச் வரலும்
ஆம்சின் முத்திரையை அன்று மேதையாய்
ஆலமர் கடவுள் கொண்டரு ளியவாறு
உணர்கென அவ்வாறு ணர்த்த வுணர்ந்து
உ-அ.ம எனும் உமாவின் அருளால்
எல்லாம் கூடி இலயங்கொள் குடிலையில்
பிறழ்நவம் தோன்றிப் பெருநெறி யாகி
அனைத்தும் தன்னுள் அடங்கக் கொண்டு

Koviloor Digital Library

காயம் திரம்பெறக் காப்புச் செய்யலும்
விடடை யத்துற வீயு மியற்கையும்
துதிக்கை கொள்ளும் தோன்றலாய்த் தோன்றலும். (௫௰௮)

தோன்ற நிலைபெறு துணையாய்த் தோத்திரம்
புரிந்துள் நாடி புனிதம் ஆகந்
தொட்டும் நட்டியும் அட்ட சுத்திகளால்
கருவி கரணக் கசடது தத்துவம்
என்று செஞ்சுடர் எழுக்கண் டதனில்
தாரைகம் மந்திரம் சபித்துச் சேர்த்துச்
சாகாக் கால்கொடு தரித்து நின்று
அமலம் நீத்த விமல னாகி
மெய்ப்பொருள் பெறல்சதம் வெண்ணீ றென்று
தவளா கரம்மெய் துவளும் வண்ணம்
முழுநீ றணிந்து மும்மைச் சுத்தனாய்
தத்துவம் ஆகச் சமைந்தன யாவையும்
தானல்ல வென்று சமையந் தீர்க்கையால்
காலம் நியதி கடன்மை கடந்தும். (௫௰௯)

கடந்தனம் என்ற கருவம் இன்றி
கருக்கிடை யாகக் குருக்கிடைத் தோதிய
சாதனம் விடாது சாதிப்ப அதனால்
அனைத்தும் வாசி யாகத் தரிக்கும்
தாரனை யடைந்து ஆலயம் சார்ந்து
உருத்திர அக்கம் உடைய வனாகி
நிமைகொள் நோக்கில் நீருய்ச் சணம்தரு
கண்டீக்காய் வித்தியை கைவரக் கொண்டு
வித்தியை பாகி விரிந்து பரந்தும்
பாரா வாரமாய்ப் பாரித் தடர்ந்தும்
தத்த வுரிய தன்மை யுடைய
வித்தையோர் தத்துவ மென்ன வுணர்ந்து
ஐந்தெழுத் தோதிமா றஅட்சண மதனில்
கங்கைய கங்கையங் கையுள் ளடக்கி
உள்ளமுந் தளவாய் உறப்பெற உச்செனக்
கொண்டு உச்சமாய் என்றாழ் ளிப்பஅந்
நெருப்பா றதனில் ஒருப்படச் சேர்த்து
கண்ட அகத்தியக் கலைநுணுக் கத்தால்
வித்தின் விரிந்த விசேடந் தீர்க்கையாய்
கலையொடு வித்தையின் நிலைகளை கண்டும். (௬௰)

கரைகண் டுளோம்என் றுரையா டாது

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

ஆசான்	றந்த	அநுபூதி	சாதனம்
பயிலும்	நலத்தால்	பாசு	பதம்எனும்
நாதம்	பத்தும்	நாடியுள்	வாசி
வாசி	வாவென	வமைநீள்	சிகரி
புக்கி	மகத்துட்	புகுந்தெரி	யோம்பி
அங்கி	தாரணை	யாகச்	செய்ய
அதனு	ளிளகி	யமித	மாய்வரும்
சோம	ரசத்தைச்	சுவைத்துட்	பருகி
மயிர்க்கா	லதோறு	மமிதந்	துளிப்ப
கும்பகம்	கொளல்	எனக்கூறும்	கடத்தின்
நீரைக்	கொண்டு	நீள்சிகை	நூற்கலை
ஆதி	யந்த	மானம	ராட்டம்
சொரிதுளி	திவலை	தூவலாய்ச்	சிந்த
அமித	தாரணை	யாக்கு	நலத்தால்
இருடிகள்	தேவர்களி	யாவரும்	பிதிரரும்
களித்து	மேன்மைக்	கதிகொண்	டருள
அதனுல்	மயிர்ப்பால	அம்கொள்	அந்தணனுய்
மலரு	மனமும்	மதுமது	கரமுமாம்
பூவிடையம்	இராகம்	புருடன்	மாயை
தத்தவம்	என்று	தவிர்த்து	நிர்வாணம்
தீர்க்கையால்	கோடி	சிறக்கப்	பெற்றதால்
மாலை	சந்தியு	வந்தன	விடுத்தும். (சாமக)
விடுத்த	நலத்தால்	மேலும்	மேலும்
கலைபயின்	றுண்மை	கண்ட	நலத்தால்
சந்திர	புட்க	ரணியிற்	படிந்து
அறுபத	மியாழ்செய்	நறுமலர்	யாக்க
மலர்செறி	கான	மடைந்து	நால்வகைப்
பூவெடுத்	தாயிரம்	பூசரி	என்னும்
முத்திரா	திகளால்	முதல்வனை	நாடி
ஆஅ	ரணங்கள்	ஆறுள்	அகம்புறம்
சமைந்தவீ	ராறு	சமையப்	பொருளும்
கண்டு	ஒன்பது	வகைத்தண்டன்	உடனே
பூசை	மூன்றும்	புரிந்துட்	புகுந்து
ஒளிவட்	டத்தி	னுட்டரி	சித்து
நாற்பத்து	முக்கோண	நடுவைச்	சார்ந்து
தொல்லை	நான்மறை	இல்லையென்	ருேதி
இணைத்து	ஒடுங்க	இல்இங்கு	அம்என

Koviloor Digital Library

உற்றதும் அவ்விடம் தத்துவம் தொண்ணூற்று
ஆறும் அத்துவா ஆறும் உபயம்
ஆக அதனால் ஆயிரம் இலிங்கமாய்த்
திகழ நாமாவளி தீர்க்கை காட்டும்
அதனில் எல்லாமும் ஆம்என வடக்கி
வித்தைஎச் சச்சிவ தத்துவம் விரும்ப
அங்கிதா ரணையில் அனைத்தும் நீறாய்ப்
பொடிபடப் போகாப் புனல்எனும் அமித
தாரணை வேகாத் தலைதர நின்று
வாயமை வாகிய வாமமந் திரத்தால்
முகையோர் ஐந்து முற்றும் நிரப்பி
ஆனைந் தாட்டி யனைய வணைந்து
சுத்தவித்தை ஈசுரம் சாதா வாக்கியஅச்
சித்திது சத்தி சிவம் எனத்தெளிந்து
சிவஞான போதந் திளைத்துள் ளமிழ்ந்து
அமிழ்ந்து ஏகமாய் அனைத்தும் தீர்தலாம்
அபிஷேக தீர்க்கை யடைந்து அத்துவித
சித்தாந்தம் தானாய்ச் சீதா னிற்கப்
பண்டா வின்னிலை கண்டடைந் தோர்க்கும்
பெறல்சதம் நான்கும் பெறவருள் செய்துள்
ஒடுக்கி அ.உ உடைய வனாகி
அனைத்தும் ஓங்காரமாய் அடங்கன் முறைகள்
எல்லா மாய்ச்சிவ இலிங்கம் நின்றது. (௯௰௨)

உ.அ.ம.

ௐ

சிவஞான போதத்தாற் சித்தியார் என்று
பவமகற்று ஞானம்பயில = உபமன்னியன்
கண்ணனுக்குச் சைவநெறி காட்டமெய் கண்டவன்
கண்டதனைக் கண்டுரைத்தோம் காண்.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த
“திருமுறைப் பெருநூல்” விளக்கத்தில்
ஏழாவது மேகராகக் குறிஞ்சிப் பண்ணின்
எழுதாக் கிளவியாம் அத்துவித சித்தாந்தம் என்னும்
இறைவண்ண நிறைவென்னியற் சுருதி நிறைவு பெற்றது.

Koviloor Digital Library

அடங்கன் முறையிற் றேன்றும் உருத்திரட் பாசுபத கைவல்லிய நவநீதம்

துவித சித்தாந்தம்	இருக்கு வேதம்	இயற்சீர் வேதம்	சாம வேதம்	அதர்வண வேதம்	வேதாந்தம்	அத்துவித சித்தாந்தம்
அகச்சு (அ)	சாகை (உ௰௧)	சாகை (௱௬)	சாகை (௲)	சாகை (௫௰)	பாகை (௰உ)	துருவம் (௰அ)
குண்டலி சத்தி	உருத்திரட் கணம் (௱௰அ)	பஞ்சகலா சத்தி	(எ) கோடிமந்திரர் அநுசிதச் சிவன்	(அ) வித்தியேச்சுரர்	அனந்த தேவர்	காயத்திரி
பெத்தர்	வியன்ஞாலக்கலர்	பெறுஇலயக்கலர்	சகலர்	பெருவிருத்திச்சகலர்	மும்மைச்சுத்தர்	தீர்க்கத்தர்
அமலம்	ஆள்நவம் மலம்	ஆள்நவம் கன்மம்	ஆணவகன்ம மாயேயம்	ஆணவம் கன்மம் மாயை	நிமலம்	விமலம்
சுருதி	குறில்நெடில்	மூவகை எழுத்து	சொல் பதம்	யாழ்யாப்பு கானம்	இலயம்	கீதை
காப்பு	உருத்திராக்கமணி	அக்கமாலை	நூல்சிகை	சாந்தம் குங்குமம்	திருநீறு	பாசுபதம்
ஆன்ம தத்துவம்	வித்தியா தத்துவம்	வித்தியா தத்துவம்	வித்தியா தத்துவம்	வித்தை எச்ச சிவதத்துவம்	சிவ தத்துவம்	சிவ தத்துவம்
கருவி கரணுதி (உ௰௪)	காலம் நியதி	கலை வித்தை	ராகம் புருடன்	மாயை, சுத்தவித்தை, ஈசுரம்	சாதாக்கியம்	சத்தி சிவம்
கூடு இலயம் (குடிலை)	நாதம்	விந்து	வல்லினம்	மெல்லினம்	இடையினம்	பிறழ்நவம்
அ.உ.ம். ஓம்	ந	ம	சி	வ	ய	உ.அ.ம். ஓம்

நூற்பகுதி	தெய்வாதீன	மிசை	குறியும்
தோற்றம்	பொருள்முடி	வீதுள்.	
ஈதுள்	எமையா	தெதற்கும்	அதீதமாம்
ஓது	திருவைந்	தெழுத்தும்.	

அடங்கன்முறைத் தொகுதி

௧. நட்டபாடைப்பண்	கணபதி. ௰௬.	சுருதி	துவித சித்தாந்தம் - அகச்சு. அ. ஓம்
உ. தக்கராகப்பண்	சத்தமாதர். எ.	தாளம்	இருக்கு வேதம் - சாகை. உ௰௧. ந
௩. பழந்தக்கராகப்பண்	ஆதிசத்தி. ௩.	சந்தம்	இயற்சீர் வேதம் - சாகை. ௱௬. ம
௪. தக்கேசிப்பண்	நாரதர் தும்புரு. உ.	சத்தம்	சாம வேதம் - சாகை. ௲. சி
௫. குறிஞ்சிப்பண்	ஐம்முகச் சிவன். ௫.	கானம்	அதர்வண வேதம் - சாகை. ௫௰. வ
௬. வியாழக் குறிஞ்சிப்பண்	ஆதிசேடன். ௬.	இலயம்	வேதாந்தம் - பாகை. ௰உ. ய
எ. மேகராகக் குறிஞ்சிப்பண்	இந்திரன். வருணன். உ.	ஆரோகண அவரோகணம்	அத்துவித சித்தாந்தம் - துருவம். ௰அ. ஓம்

மறையொலி விளக்கச் சந்திரிகை

விளரி	-	சிரம்	-	உழை
தாரம்	-	செவி	-	கைக்கிளை
இளி. உழை	-	வாய்	-	துத்தம்
கைக்கிளை	-	மூக்கு	-	தாரம்
துத்தம்	-	கண்	-	இளி
குரல்	-	நெஞ்சு	-	விளரி

அகச்சு (அ)

காது	-	இருக்கு	-	அத்தம்	8	ெ	உ
வாய். மெய்	-	யசூர்	-	ஆயுள்	( )	÷	உ
நுனி. அடிமூக்கு	-	சாமம்	-	காந்தருவம்	○	⌒	உ
கண்	-	அதர்வம்	-	தானுறு	®	.O|	உ

Koviloor Digital Library

இயச்சீர்வேதக் குறிப்பு

டாட்டம் , தாத்தம் ஆகிய எட்டு
தத்த, தாத்த, தெத்த, தைத்த,
டட்ட, டாட்ட, டெட்ட, டைட்ட (அ)

ந.ன.ண மூன்றும்
இணைந்த பெருக்கம்
(ந.ன.ண - ௩) (உ௰ச)

இவை யாழ் நான்கில் ஆகத்
தொண்ணூற்றுறு
(தி.து. தொ.தௌ.)

ஆறு அங்கம்								
க.	சித்செய் (சிட்சை)	-	சூக்கம்	-	௰உ	-	சிரம்
உ.	வியாகரணம்	-	மேற்கணக்கு	-	௬	-	அத்தம்
௩.	சந்தசு	-	எழுதாக்கிளவி	-	௩	-	தோள்
ச.	நிறுத்தம்	-	ஒடுக்கம்	-	ரு	-	துடை
ரு.	சோ. ஓது இடம்	-	கீழ்க்கணக்கு	-	௬	-	பாதம்
சா.	கற்பம்	-	மெய்வளம்	-	எ௰உ	-	முண்டம்

அகம்	-	பிரமநிலை
அகப்புறம்	-	உயிர்நிலை
புறம்	-	மனோநிலை
புறப்புறம்	-	வாசி நிலை

வாசி மனதைக்கூட மனம் உயிரைக்கூட உயிர் பிரம்மத்தை கூடுவதுயோகம்.

மேற்கணக்கு என்னும் வியாகரணம்			
க.	எழுத்து	-	செய்யுள் நிறைவு
உ.	அசை	-	நேர், நிறை
௩.	சீர்	-	சீர்முன் நேர்நிரை
ச.	யாழ்	-	பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழியாழ்.
ரு.	யாப்பு	-	யாழ்முன் யாப்பு
சா.	அடி	-	யாழ்சீர் யாப்பு
எ.	பண்	-	குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்
அ.	திறம்	-	படுமலைப்பாலை, மேற்செம்பாலை, செவ்வழிப்பாலை, செம்பாலை, விளரிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, சாதாரி.
௬.	பண்தார்	-	மேற்கண்ட எட்டுங் கூடிய ஒன்று.

Koviloor Digital Library

அறிவு இயல் விளக்கம்

வசிட்ட ரிஷி விளக்கம்

வசிட்ட இருசி அத்தியாயம்

உயிர்நிலையாகிய ஆகத்தின் றன்மைச் சூக்கமே மனம். அந்த மனோ கதித் துடிப்பைக் காட்டும் இயல்பையுடையது வாசி. அவ்வாசியைக் குருகி நிற்கும் மனத்தின் நினைப்பு யாவற்றையும் தன்னகத்தே பதிவுறச் செய்து வைத்துக் கொண்டு, வேண்டும் போதெல்லாம் அளிக்கும் இயற்றன்மையுடைமையால் வாசி குறுகிய வசியென்ற உடற்றமும்பிற்கும் வசிட்டர் என்ற பெயர், எண்ணைக் குவியலை யெல்லாம் ஈட்டுந் தன்மையுடைய மூளைக்கும் கூறப் பெறுகிறது. அருந்தும் ஆறிரதத்தால் உண்டாகும் ஆறு தாதுக்களின் அதிகத்தால் உருப்பெற்று விளங்கும் அருந்ததியாம் சுக்கிலத்தைத் தன்னகத்தே யுடையதாக வசியீட்டமாகிய மூளை விளங்குதலால் வசிட்டர் அருந்ததி என்ற மனைவியை யுடையவர் என்றும் சொல்லப் பெறுகிறது. தோல், நரம்பு, எலும்பு, புலால் முதலியன விளங்கும் அகத்திலிருந்தே இத்தாது பிறப்பதால் தோல், எலும்பு, நரம்புத் தொழின் மாக்களாகிய சக்கிலியர் குலப்பெண்ணென்று கூறப் பெறுகிறது. 'க' என்னும் ஒன்றினிடத்து அமைவதாற் கமை என்றும் அவ்வாறு அமைதலும் வெளித் தோன்ருதிருப்பதால் மறையும் இயல்புடைய திருடரின் பெயராகிய தேனர் எனவும் ஆகிய காமதேனுவென அகக் கருவிகளி யாவும் ஒருமைப் பாடுடைத்தாய்த் தொடர்பு கொண்டு வெளி தோன்ருதிருப்பதாகிய இயலைத் தனதாய்க் கொண்ட வசீயீட்டமாகிய தாது மூளையாகையால் வசிட்டர் காமதேனுவெனும் தெய்வப்பசுவையுடையவர் என்றும், மூளையை உள்ளுறக் கொண்ட உறுப்புகளில் முதன்மையாயது சிரமேயாகையால், மூளையை உள்ளுறக் கொண்டு ஒன்றுடனென்று தொடர்பு கொண்டு விளங்கும் அத்தியாம் ச-அத்தி என்னும் எலும்புத் தொடர்கள் நூறு ஆகிய சத்தி முதலிய நூற்றுவர்களின் தந்தை வசிட்டர் என்றும், செயல்படு நிமித்தம் நெருங்கிப்பதிவு கொண்டு வெவ்வேருகித் தனித்துள்ளதாக மேற்கூறிய நூறு எலும்புகளும் உள்ளமையால் கன்ம அடற்பதனென்னும் கன்மாடபாதன் வசிட்டரின் புத்திரர் நூற்றுவரையும் விழுங்கி விட்டான் என்றும், சிரத்திலுள்ள உறுப்புக்கள் எத்தனையோ, அத்தனை எண்ணிக்கையுடைய யுறுப்புக்களை உடைத்தாய் விளங்கும் இயற்கையுடைய உடம்பிற்கு ஆக்கம் விளைக்கும் செயற்காரணம் பற்றி விச்சுமித்திரனென்னும் பெயர் கொள்ளும் இரைப்பைக்கு எதிர்மாருந் தன்மையுடையது மூளையாகையால் விசுவாமித்திரனுற் படைக்கப்பட்டவரென்றும், பின்கலை நாடியில் விளங்கும் சூரியகலையின் விளக்கம் யாவிற்கும் பலந்தரு மண்டலத்திலிருக்கும்

Koviloor Digital Library

இயற்றன்மையுடையது மூளையே யாகையால், சூரியகுல மன்னர்களுக்குக் குலகுரு வென்றும், சுருண்டு சுழித்து நாத முடைத்தாய் வெண்ணிறம் பொருந்தி நின்று திரிபுறு மியற்கையால் திரிசங்கு என்னும் பெயரையுடைய கீழ்மூலமானது, மேன்முகமெய்தாமல் தலைகீழாக ஆக்குமியற்கையைத் தனதாய்க் கொண்டது மூளையாகையால் வசிட்டர் திரிசங்குவை நீசனாகச் சபித்தவரென்றும், வெண்ணிறம் பொருந்தி யசைவற்று நிலைகொண்ட நோக்கமுறுங் 'கொக்'கென நிற்கும் இயற்கையுடையது மூளையாகையால் கொக்குருவாக விசுவாமித்திரனால் இருந்தவரென்றும், 'மன்' என்னும் ஆன்மா ஏழ்வகைத் தோற்றத்தை யடையும் போது அடையும் தீங்காகிய அந்தரங்கள் ஏழுடன் ஆன்மா எய்யாதனை சரீரம் அடையும் அந்தரங்களேழும், ஆகிய பதினான்கு மன் வந்தரங்களில் ஒன்றாகிய வைவச்சுத மன்வந்தரம் என்னும் யமவாதனைத் தீங்கை எதிர்நோக்கி நிற்கும் பருவத்தில் அமைந்து விளங்கும் தன்மையுடையதாக இப்பொழுது இருப்பதால் வசிட்டர் வைவச்சுத மந்திர காலத்தில் இருப்பவர் என்றும் கூறப் பெறுகிறது. ஈண்டு கூறப் பெற்ற வசிட்டருசி அத்தியாயமானது உலக மக்களுக்குத் தெய்வீகக் கலைகளை வாரி வழங்கிய முனிவர்பிரானின் நினைவு என்றென்றைக்கும் இனியனவாகக் காக்கப் படுமாறு செய்ய வேண்டியமைத்துக் கூறப் பெற்ற காக்க பாடினியக் கலையாமென அறிக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கலைக்கோட்டு மாமுனிவர் விளக்கம்

கலைக்கோட்டு மாமுனிவர் அத்தியாயம்

கலைக்கோட்டு மாமுனிவர் சரித்திரம் காக்கப்படு இனியனவான கலையாயமைந்துள்ள விளக்கம் காட்டுகிறோம் காண்க.

அண்டமென்பது சிரம். வைபவம் (விபவம்) என்பது ஆக்கம். ஆகவே சிரம் ஆக்கமாக உறுதி நிலையையடையும் பருவத்தையே விபாண்டகர் என்றும், அந்த நிலைப் பருவமே பல்தோன்றுதற்குரியதாகையால் விபாண்டகர், மைந்தர் கலைக்கோட்டாரென்றும் கூறப் பெற்றது.

இந்தச் சரியைக்கிலக்கியமாய் நின்ற கலைக்கோட்டு முனிவர் சூரியன் துலாராசியில் விசாக நட்சத்திரத்தில் நின்று பரணி நட்சத்திரத்தில் நின்ற சந்திரனை நோக்க, பூர நட்சத்திரத்தில் சேயுதிக்க மகர ராசிக்கதிபனான சனி பூராட நட்சத்திரத்தில் அமைய மகர லக்கினத்தில் பிறந்தவர் என்பதையே விபாண்டர் நீராடச் செல்லுமிடத்து ஊர்வசியைக் கண்டு மோகமுற்று வீரியத்தை நழுவவிட, அது அக்குளத்துள் விழ, அக்குளத்துள் நீரருந்த வந்த மான் நீருடன் அதை அருந்திக் கருக் கொள்ளப் பிறந்தவரென்று கூறப் பெறுகிறது.

Koviloor Digital Library

எவ்வாறெனின் வைபவ அண்டன் சூரியன் பரணி மீன் நாசி. பரணிச்சந்திரன் வானவருலகக் கணிகையாம் ஊர்வசி. அதைச் சூரியன் நோக்குதல் வைபவ அண்டன் ஊர்வசியைக் கண்ணுற்றது. அவள் விலகியேக இவன் வீரியத்தைக் குளத்துள் நழுவவிட்டது. பரணி மீனின் நின்ற சந்திரன் விலகிச் செல்ல அந்தப் பரணி மீனின் திரிகோண நட்சத்திரத்தில் ஒன்ருகிய உட் குளமென்னும் பூராட நட்சத்திரத்தில் இலக்கினுதிபனுய் உள்ள சனி நின்றது. இப்படி நிற்க மகர ராசியை லக்கினமாய்க் கொண்டு பிறந்ததே. மான் அதை நீருடன் அருந்திக் கருக் கொண்டீன்றது என்றுணர்க. இதில் சூரியன். சந்திரன். செவ்வாய். சனி இவர்களின் நிலை மட்டும் தானே தெரிகிறது. மற்ற கோள்நிலைகளைப் பற்றிச் சொல்லவில்லையே என்று எண்ண வேண்டாம். தெய்வமாம் இசைவு பெற்றுத் தோன்றுபவர்களுக்கெல்லாம் நான்கு கோள்கள் பலம் பெற்றிருக்கும் என்பது பொது விதியாகையால் அதன்படி புதன், சுக்கிரன், வியாழன், இராகு முதலியகோள்களை அவரவர்கள் மூலத்திரிகோண முறையே நிறுத்திப் பார்க்க கன்னியில் புதன். துலாத்தில் சுக்கிரன். தனுசில் வியாழன். கும்பத்தில் இராகு. சிம்மத்தில் கேதுவாக அமைவன காணலாம். இது கலைஞர்கள் எளிதில் உணருந் தன்மைத்தாகையால். இதைச் சொல்ல வேண்டியதில்லையாயிற்று. இதை முறையே முழுவிவரமாகக் காட்டுகின்ருேம். இலக்கினம் மகரம். இரண்டில் ராகு; நாலில் சந்திரன். எட்டில் செவ்வாய் கேது. ஒன்பதில் புதன். பத்தில் சூரியன் சுக்கிரன். பன்இரண்டில் வியாழன் சனி. இதிற் காணும் சிறப்பியல் என்னவென்ருல் மழைவளம் பெருக உண்டாவதைக் காட்டுவதாகும். சூரியன் ராசி சஞ்சாரத்தாலோ கோட்களின் சேர்க்கையாலோ வீரியங் குன்றி நிற்குங்கால் அவனுடைய பார்வை பற்ற திரிகோண நட்சத்திரத்தில் சந்திரன் நிற்க. அந்த நட்சத்திரம் மழைகோளாகிய சுக்கிரனுடைய நட்சத்திரமாக. சுக்கிரனும் பலம்பெற மழைவளம் பெருக்கமுண்டாகும். இதில் அவ்வாருன அமைப்புப் பெற்றுள்ளதோடமையாமல் சலநிதித் தானமாகிய கன்னியில் ஐம்பூதங்களில் அப்பு கிரகமாகிய புதனும். நீர்நிலைத் தேக்க ராசியாகிய கும்பராசியில் அவ்விராசிக் கதிபனுகிய இராகுவும். குளத்திற்குரிய நட்சத்திரமாகையால் உடைக்குளமென்றே பெயர்பெற்ற பூராட நட்சத்திரத்தில். நீரேறி நிற்கும் நிலையாகிய ராசியாம் மகரத்திற்கதிபனுகிய சனியும். நிற்பது மழைவளச் சிறப்புக்கள் எத்தனையுண்டோ அத்தனையுமே பொருந்தவுள்ளதைக் காட்டுவனவாகவுள்ளன. இந்த கோள்நிலை நுணுக்கத்தையுணர்பவர்கள் மழைநாட்குறிப்பைத் தெளிந்து சொல்பவர்களாதல் மிக எளிது. இவ்வுலக வாழ்க்கைக்கு முதன்மையானது முதன்மைத்தாயது செல்வம். அஃது நீரின் வலிமையால் விளங்குவது. "நிதியின் பெருவலி நீர்வலி தானே" என்பது ஆகம மொழி. ஆகவே. நீர்வலிவை யுணர்த்தும் கோள்நிலை காக்கப்படும் இனியதாக இவையுரைக்கப் பெற்றது. இதன் நுணுக்கத்தையுணர்ந்து பயன் பெறுக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த
தேவாரப் பதிகங்கள்

முதல் திருமுறை

பண் - நட்டபாடை

1. திருப்பிரமபுரம் : பண் - நட்டபாடை

திறம் : நைவளத்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : பிரதாப நாட்டை ※ லலிதக்கிரியா

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபி மாபுரமேவிய பெம்மானிவனன்றே. க

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. உ

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரி துவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ங

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ச

Koviloor Digital Library

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்தோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௫

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௬

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௭

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலஊழிகள் தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௮

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௯

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௰

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ. திருப்புகலூர் : பண்- நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர்திறம் பண்தார் : கணபதி

கனரகம் : நாட்டக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

குறிகலந்த இசை பாடலினனசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்தொரு நீர்மையானுயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே. க

காதிலங்குகுழை யன்னிழைசேர்திரு மார்பன்னொருபாகம்
மாதிலங்குதிரு மேனியினன்கரு மானின் னுரியாடை
மீதிலங்கஅணிந் தானிமையோர்தொழ மேவும்மிடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை பாடும்புகலூரே. உ

பண்ணிலாவும்மறை பாடலினனிறை சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழ லென்றுந்தொழுதேத்த
உன்னிலாவியவர் சிந்தையுள்நீங்கா வொருவன்னிடமென்பர்
மண்ணிலாவும்மடி யார்குடிமைத்தொழில் மல்கும்புகலூரே. ங

நீரின்மல்குசடை யன்விடையன்னடை யார் தம்மரண்மூன் றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு னிந்தானுலகுய்யக்
காரின்மல்குகடல் நஞ்சமதுண்ட கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினனுயர் வெய்தும்புகலூரே. ச

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்மடியார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத் தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ ருந்தும்புகலூரே. ரு

கழலினேசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலினேசைகுறட் பாரிடம்போற்றக் குனித்தாரிடமென்பர்
விழவினேசையடி யார்மிடைவுற்று விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினேசைமுந் நீரயர்வெய்த முழங்கும்புகலூரே. சா

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல் விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தவடி யார்தொழுதேத்த வுகக்கும்மருள்தந்தெம்
கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வள மல்கும்புகலூரே. எ

Koviloor Digital Library

தென்னிலங்கையரை யன்வரைபற்றி யெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிர லால்நெரிவித்திசை கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு மேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேல்மதி தோயும்புகலூரே. அ

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு தேத்தும்மடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமன்னெடு மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தஎரி யாய்மிகவோங்கிய எம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்நிழலான்மது வாரும்புகலூரே. கூ

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர் செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும்புகலூரே. ய

புற்றில்வாழுமர வம்மரையார்த்தவன் மேவும்புகலூரைக்
கற்றுநல்லவர் காழியுள்ஞானசம்பந்தன்தமிழ்மாலை
பற்றியென் றும்மிசை பாடியமாந்தர் பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிப்பொலிவாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

3. திருவலிதாயம் : பண்- நட்டபாடை

திறம் : செந்திறம்

பண்தார் : கணபதி

கனரகம் : சுத்தநாட்டை

திருச்சிற்றம்பலம்

பத்தரோடுபல ரும்பொலியம்மல ரங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலிதாயம்
சித்தம்வைத்தஅடி யாரவர்மேலடை யாமற்றிடர்நோயே. க

படையிலங்குகர மெட்டுடையான்படி ருகக்கன லேந்திக்
கடையிலங்குமனை யிற்பலிகொண்டுணுங் கள்வன் னுறைகோயில்
மடையிலங்குபொழி லின்நிழல்வாய்மது வீசும்வலிதாயம்
அடையநின்றவடி யார்க்கடையாவினை அல்லற்றுயர்தானே. உ

ஐயனெய்யன்னணி யன்பிணியில்லவ ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தவல்லான்திரு மாதோடுறைகோயில்

Koviloor Digital Library

வையம்வந்துபணி யப்பிணிதீர்ந்துயர் கின்றவலிதாயம்
உய்யும்வண்ணந்நினை மின்னினைந்தால்வினை தீருந்நலமாமே. ௩

ஒற்றையேறதுடை யான்நடமாடியோர் பூதப்படைசூழப்
புற்றில்நாகமரை யார்த்துழல்கின்றஎம் பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுல கத்தொளிமல்கிட வுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மது வேசரணாவது பாடும்மடியார்க்கே. ௪

புந்தியொன்றிநினை வார்வினையாயின தீரப்பொருளாய
அந்தியன்னதொரு பேரொளியானமர் கோயிலயலெங்கும்
மந்திவந்துகடு வன்னொடுங்கூடி வணங்கும்வலிதாயஞ்
சிந்தியாதவவர் தம்மடும்வெந்துயர் தீர்தலெளிதன்றே. ௫

ஊனியன்றதலை யிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரி யின்னுரிபோர்த்துழல் கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறை வைத்தஎம்மாதி மகிழும்வலிதாயம்
தேனியன்றநறு மாமலர்கொண்டுநின் றேத்தத்தெளிவாமே. ௬

கண்ணிறைந்தவிழி யின்னழலால்வரு காமன்னுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொரு பால்மகிழ்வெய்திய பெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ் கொண்டடியார்கள் வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான் கழலேத்தநம் முண்மைக்கதியாமே. ௭

கடலில்நஞ்சமமு துண்டிமையோர்தொழு தேத்தநடமாடி
அடலிலங்கையரை யன்வலிசெற்றரு ளெம்மானமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின்மது விம்மும்வலிதாயம்
உடலிலங்குமுயிருள்ளவுந்தொழ வுள்ளத்துயர்போமே. ௮

பெரியமேருவரை யேசிலையாமலை வுற்றாரெயில்மூன்றும்
எரியஎய்தவொரு வன்னிருவர்க்கறி வொண்ணாவடிவாகும்
எரியதாகியுற வோங்கியவன்வலி தாயந்தொழுதேத்த
உரியராகவுடை யார்பெரியாரென வுள்கும்முலகோரே. ௯

ஆசியாரமொழி யாரமண்சாக்கிய ரல்லாதவர்கூடி
ஏசியீரமில ராய்மொழிசெய்தவர் சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரஅடி யார்க்கருள்செய்து வளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடை யாரடியாரெனப் பேணும்பெரியோரே. ௰

Koviloor Digital Library

வண்டுவைகும்மண மல்கியசோலை வளரும்வலிதாயத்
தண்டவாணனடி யுள்குதலாலருள் மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுள்ஞானசம் பந்தன்தமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார்குளிர் வானத்துயர்வாரே. ௰௲

திருச்சிற்றம்பலம்

இவ்வூர் தொண்டைநாட்டில் பாடியதென வழங்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

4. திருப்புகலியும் திருவீழிமிழலையும் : பண் - நட்டபாடை

விறைவுரை

திறம் : அயிர்ப்புத்திறம் பண்தார் : கணபதி

கனரகம் : சாய நாட்டை ✳ தேசியநாட்டக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற வாணுதல் மான்விழி மங்கை யோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே
எம்மிறை யேயிமை யாதமுக்கண் ஈசஎன் நேசஇதென் கொல்சொல்லாய்
மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. க

கழல்மல்கு பந்தொடம் மானைமுற்றில் கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழில்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும் புகலி நிலாவிய புண்ணியனே
எழில்மல ரோன்சிர மேந்தியுண்டோர் இன்புறு செல்வமி தென்கொல் சொல்லாய்
மிழலையுள் வேதிய ரேத்தி வாழ்த்த விண்ணிழி கோயில் விரும்பியதே. உ

கன்னிய ராடல் கலந்துமிக்க கந்துக வாடை கலந்து துங்கப்
பொன்னியல் மாடம் நெருங்குசெல்வப் புகலி நிலாவிய புண்ணியனே
இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத் தெம்மிறை யேயிது என்கொல் சொல்லாய்
மின்னியல் நுண்ணிடை யார்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ௩

நாகப ணந்திக ழல்குல்மல்கு நன்னுதல் மான்விழி மங்கையோடும்
பூகவ னம்பொழில் சூழ்ந்தஅந்தண் புகலி நிலாவிய புண்ணியனே
ஏகபெ ருந்தகை யாயபெம்மான் எம்மிறை யேயிது என்கொல் சொல்லாய்
மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ச

சந்தள றேறுத டங்கொள்கொங்கைத் தையலொ டுந்தள ராதவாய்மைப்
புந்தியி னுன்மறை யோர்களேத்தும் புகலிநிலாவிய புண்ணியனே

Koviloor Digital Library

எந்தமை யாளுடை யீசஎம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய்
வெந்தவெண்ணீறணி வார்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ௫

சங்கொளி யிப்பி சுருமகரந் தாங்கிநிரந்து தரங்க மேன்மேற்
பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப் புகலிநிலாவிய புண்ணியனே
எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய்
வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே.
௬

காமனை ரிப்பிழம் பாகநோக்கிக் காம்பென தோளியோடுங்கலந்து
பூமரு நான்முகன் போல்வரேத்தப் புகலிநிலாவிய புண்ணியனே
ாமவ னத்தெரி யாட்டுகந்த எம்பெருமானிது என்கொல்சொல்லாய்
வீமரு தண்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ௭

இலங்கையர் வேந்தெழில் வாய்த்தத்திண்டோள் இற்றலறவ்விர லொற்றியைந்து
புலங்களைக் கட்டவர் போற்ற அந்தண் புகலிநிலாவிய புண்ணியனே
இலங்கெரி யேந்திநின்றெல்லியாடும் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய்
விலங்கலொண் மாளிகை சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே.
௮

செறிமுள ரித்தவி சேறியாறுஞ் செற்றதில் வீற்றிருந்தானுமற்றைப்
பொறியர வத்தணை யானுங்காணுப் புகலிநிலாவிய புண்ணியனே
எறிமழு வோடிள மான்கையின்றியிருந்தபி ரானிது என்கொல்சொல்லாய்
வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ௯

பத்தர் கணம்பணிந் தேத்தவாய்த்த பான்மைய தன்றியும் பல்சமணும்
புத்தரும் நின்றலர் தூற்றஅந்தண் புகலிநிலாவிய புண்ணியனே
எத்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற எம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. ௰

விண்ணிழி கோயில் விரும்பிமேவும் வித்தக மென்கொலி தென்று சொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு பூங்கொடி யோடிருந் தானைப் போற்றி
நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப் பாரொடு விண்பரி பாலகரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

5. கீழைத்திருக்காட்டுப்பள்ளி : பண் - நட்டபாடை

திறம் : செம்பாலைத்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : கேதார நாட்டை

திருச்சிற்றம்பலம்

செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச்சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று கானலெல்லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடையானையுள்கி விண்டவ ரேறுவர் மேலுலகே. க,உ

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக்காவிரி கால்பொரு காட்டுப்பள்ளிப்
உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல வுத்தம ராயுயர்ந் தாருலகில்
அரவமெல்லாமரை யார்த்தசெல்வர்க் காட்செய அல்ல லறுக்கலாமே. ங

தோலுடை யான்வண்ணப் போர்வையினன் சுண்ணவெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யானிமை யோர்பெருமான் நுண்ணறி வால்வழி பாடுசெய்யுங்
காலுடை யான் கரி தாயகண்டன் காதலிக்கப்படுங் காட்டுப்பள்ளி
மேலுடையானிமை யாதமுக்கண் மின்னிடை யாளொடும் வேண்டினனே. ச

சலசல சந்தகி லோடுமுந்திச் சந்தன மேகரை சார்த்தியெங்கும்
பலபல வாய்த்தலை யார்த்துமண்டிப் பாய்ந்திழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றதி ருங்கழலான் காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்க ளேத்தநின்ற சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே. ரு

தளையவிழ் தண்ணிற நீலநெய்தல் தாமரை செங்கழுநீருமெல்லாங்
களையவி முங்குழ லார்கடியக் காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளித்
துளைபயி லுங்குழல் யாழ்முரலத் துன்னிய இன்னிசை யாற்றுதைந்த
அளைபயில் பாம்பரை யார்த்த செல்வர்க் காட்செய அல்ல லறுக்கலாமே. சா

முடிகையி னற்றேடு மோட்டுழவர் முன்கைத் திருக்கைக் கரும்பின்கட்டிக்
கடிகையி னலெறி காட்டுப்பள்ளி காதல்செய் தான்கரி தாயகண்டன்
பொடியணி மேனியினனையுள்கிப் போதொடு நீர்சுமந் தேத்திமுன்னின்
றடிகையினற்றெழ வல்லதொண்டர் அருவினையைத்துரந் தாட்செய்வாரே. எ

பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான் பெய்கழல் நாடொறும் பேணியேத்த
மறையுடை யான்மழு வாளுடையான் வார்தரு மால்கடல் நஞ்சமுண்ட
கறையுடை யான்கனலாடுகண்ணற் காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறையுடை யான்குறட் பூதச்செல்வன் குரைகழ லேகைகள் கூப்பினேமே. அ

Koviloor Digital Library

செற்றவர் தம்மர ணம்மவற்றைச் செவ்வழல் வாயெரியூட்டி நின்றுங்
கற்றவர் தாந்தொழு தேத்தநின்ருன் காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
உற்றவர் தாமுணர் வெய்திநல்ல வும்பருள் ளார்தொழு தேத்தநின்ற
பெற்றம ரும்பெரு மானையல்லாற் பேசுவது மற்ருெர் பேச்சிலோமே. ௯

ஒண்துவ ரார்துகி லாடைமெய்போர்த் துச்சிகொ ளாமையுண் டேயுரைக்குங்
குண்டர்க ளோடரைக் கூறையில்லார் கூறுவ தாங்குண மல்லகண்டீர்
அண்டம றையவன் மாலுங்காணு ஆதியி ருனுறை காட்டுப்பள்ளி
வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே. ௰

பொன்னியல் தாமரை நீலநெய்தல் போதுகளாற்பொலி வெய்து பொய்கைக்
கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக் காதல னைக்கடற் காழியர்கோன்
துன்னிய இன்னிசை யாற்றுதைந்து சொல்லிய ஞானசம் பந்தனல்ல
தன்னிசை யார்சொன்ன மாலைபத்துந் தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

6. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் : பண் - நட்டபாடை

திறம் : நவில்திறம் பண்தார் : கணபதி

கனரகம் : சாரங்கநாட்டை ✷ தேசிய நாட்டக் குறிஞ்சி

வினவுரை

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளு மடி பரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௧

நெய்தவழ் மூவெரி காவலோம்பு நேர்புரி நூன்மறை யாளரேத்த
மைதவழ் மாட மலிந்தவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்களேத்துஞ் சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கைதவழ் கூரெரி யேந்தி யாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௨

தோலொடு நூலிழை சேர்ந்தமார்பர் தொகுமறை யோர்கள் வளர்த்த செந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழ லார்க்கஆடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௩

Koviloor Digital Library

நாமரு கேள்வியர் வேள்வியோவா நான்மறை யோர் வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயில்மேய மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
தேமரு பூம்பொழிற் சோலை சூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர் மகிழ்ந் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௪

பாடல் முழவும் விழவுமோவாப் பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்தடவு மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகஆடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௫

புனையழ லோம்புகை யந்தணாளர் பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப
மனைகெழு மாடம் மலிந்தவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கனை வளர் கூரெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௬, ௭

பூண்டங்கு மார்பி னிலங்கைவேந்தன் பொன்னெடுந் தோள்வரை யாலடர்த்து
மாண்டங்கு நான்மறை யோர்பரவ மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேண்டங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண் டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௮

அந்தமு மாதியும் நான்முகனு மரவணை யானு மறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர் மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ் சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்த மகிற்புகை யேகமழுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௯

இலைமரு தேயழ காகநாளு மிடுதுவர்க் காயொடு சுக்குத் தின்னும்
நிலையமண் தேரரை நீங்கிநின்று நீதரல் லார்தொழும் மாமருகல்
மலைமகள் தோள்புணர் வாயருளாய் மாசில் செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோலுடுத் தெல்லி யாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. ௰

நாலுங் குலைக்கமு கோங்குகாழி ஞானம் பந்தன் நலந் திகழும்
மாலின் மதிதவழ் மாடமோங்கு மருகலின் மற்றதன் மேல்மொழிந்த
சேலுங் கயலுந் திளைத்தகண்ணார் சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழ லேத்து பாடல் சொல்லவல் லார்வினை யில்லையாமே.
௰௧

திருச்சிற்றம்பலம்

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

7. திருநள்ளாறும் திருஆலவாயும் : பண் - நட்டபாடை

திறம் : அயிர்ப்புத்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : சாயநாட்டை

விஞவுரை

திருச்சிற்றம்பலம்

பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடக மாடுநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல் சொல்லாய்
சூடக முன்கை மடந்தைமார்கள் துணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்த்த
ஆடக மாட நெருங்கு கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. க

திங்களம் போதுஞ் செழும்புனலுஞ் செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து
நங்கண் மகிழுநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
பொங்கிள மென்முலை யார்களோடும் புனமயி லாட நிலாமுளைக்கும்
அங்கழ கச்சுதை மாடக்கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. உ

தண்ணறு மத்தமுங் கூவிளமும் வெண்டலை மாலையுந் தாங்கி யார்க்கும்
நண்ண லரியநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
புண்ணிய வாணரும் மாதவரும் புகுந்துட னேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாடலெடுக்குங்கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. ௩

பூவினில் வாசம் புனலிற் பொற்புப் புதுவிரைச் சாந்தினிறுற்றத்தோடு
நாவினிற் பாடல்நள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர் விச்சா தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி
ஆவினி லைந்துகந் தாட்டுங்கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. ச

செம்பொன்செய் மாலையும் வாசிகையுந் திருந்து புகையு மவியும் பாட்டும்
நம்பும் பெருமைநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
உம்பரு நாகரு லகந்தானு மொலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும்
அம்புத நால்களால் நீடுங்கூடல் ஆலவா யின்க ணமர்ந்த வாறே. ரு

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு பைவிரி துத்திப் பரிய பேழ்வாய்
நாகமும் பூண்டநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
போகமு நின்னை மனத்து வைத்துப் புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகமு டையவர் சேருங்கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. சா

கோவண ஆடையு நீறுப்பூச்சுங் கொடுமழு ஏந்தலுஞ் செஞ்சடையும்
நாவணப் பாட்டுநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
பூவண மேனி யிளையமாதர் பொன்னும் மணியுங் கொழித்தெடுத்து
ஆவண வீதியி லாடுங் கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. எ

Koviloor Digital Library

இலங்கை யிராவணன் வெற்பெடுக்க எழில்விர லூன்றி யிசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியை நீக்கிப் புந்தியி லுந்நினைச் சிந்தை செய்யும்
அலங்கல்நல்லார்க ளமருங்கூடல் ஆலவ யின்க ணமர்ந்தவாறே. ௮

பணியுடை மாலும் மலரினோனும் பன்றியும் வெள்றிப் பறவையாயும்
நணுக லரியநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடு மற்றை மாமுர சின்னொலி யென்றுமோவா
தணிகிளர் வேந்தர் புகுதுங்கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. ௯

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ் சாதியில் நீங்கிய வத்தவத்தர்
நடுக்குற நின்றநள் ளாறுடைய நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
எடுக்கும் விழவுந்நன் னாள் விழவு மிரும்பலி யின்பினோ டெத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக்கூடல் ஆலவா யின்க ணமர்ந்தவாறே. ௰

அன்புடை யானை யரனைக்கூடல் ஆலவாய் மேவிய தென்கொலென்று
நன்பொனை நாதனை நள்ளாற்றுனை நயம் பெறப் போற்றி நலங்குலாவும்
பொன்புடை சூழ்தரு மாடக் காழிப் பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும் வல்லா ரிமையவ ரேத்த இருப்பர்தாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

8. திருஆவூர்ப் பசுபதீச்சரம் : பண் - நட்டபாடை

திறம் : ஆற்றுக்குறிச்சீர்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : சிந்து நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடு வார்தம் மனத்தார் திங்கட்.
கண்ணிய ரென்றென்று காதலாளர் கைதொழுதேத்த இருந்தவூராம்.
விண்ணுயர் மாளிகை மாடவீதி விரைகமழ் சோலைசு லாவியெங்கும்.
பண்ணியல் பாடல ருத ஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ௧

முத்தியர் மூப்பில ராப்பினுள்ளார் முக்கணர் தக்கன்றன் வேள்விசாடும்.
அத்திய ரென்றென் றடியரேத்தும் ஐயனணங்கொ டிருந்தவூராம்
தொத்தி லும்பொழில் மாடு வண்டு துதைந்தெங்குந் தூமதுப் பாயக்கோயிற்.
பத்திமைப் பாடல ருதஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ௨

பொங்கி வரும்புனல் சென்னிவைத்தார் போம்வழி வந்திழி வேற்றமானுர்
இங்குயர் ஞானத்தர் வானோரேத்தும் இறையவ ரென்றுமி ருந்தவூராம்
தெங்குயர் சோலைசே ராலை சாலி திளைக்கும் விளைவயல் சேரும்பொய்கைப்
பங்கய மங்கை விரும்புமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ௩

Koviloor Digital Library

தேவியோர் கூறின ரேறதேறுஞ் செலவினர் நல்குர வென்னை நீக்கும்
ஆவிய ரந்தண ரல்லல்தீர்க்கும் அப்பனுறரங்கே யமர்ந்தவூராம்
பூவிய லும்பொழில் வாசம்வீசப் புரி குழ லார்சுவ டொற்றி முற்றப்
பாவியல் பாடல ருதஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ச

இந்தணை யுஞ்சடை யார்விடையா ரிப்பிறப் பென்னை யறுக்கவல்லார்
வந்தணைந் தின்னிசை பாடுவார்பால் மன்னினர் மன்னி யிருந்தவூராம்
கொந்தணை யுங்குழ லார்விழவிற் கூட்ட மிடையிடை சேரும்வீதிப்
பந்தணை யும்விர லார்த மாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ரு

குற்ற மறுத்தார் குணத்தினுள்ளார் கும்பிடு வார்தமக் கன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணு ருறை பதி யாகுஞ் செறிகொள்மாடம்
சுற்றிய வாசலின் மாதர் விழாச் சொற்கவி பாடநி தானநல்கப்
பற்றிய கையினர் வாழுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. சா

நீறுடை யார்நெடு மால்வணங்கு நிமிர்சடை யார்நினை வார்தமுள்ளம்
கூறுடை யாருடை கோவணத்தார் குவலய மேத்த இருந்தவூராம்
தாறுடை வாழையிற் கூழைமந்தி தகுகனி யுண்டுமிண் டிட்டினத்தைப்
பாறிடப் பாய்ந்துப யிலுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. எ

வெண்டலை மாலை விரவிப்பூண்ட மெய்யுடை யார்விற லாரரக்கன்
வண்டமர் பூமுடி செற்றுகந்த மைந்தரி டம்வள மோங்கியெங்கும்
கண்டவர் சிந்தைக் கருத்தின்மிக்கார் கதியரு ளென்றுகை யாரக்கூப்பிப்
பண்டலர் கொண்டு பயிலுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. அ

மாலு மயனும் வணங்கிநேட மற்றவ ருக்கெரி யாகி நீண்ட
சீல மறிவரி தாகிநின்ற செம்மையி னுரவர் சேரு மூராம்
கோல விழாவி னரங்கதேறிக் கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்
பாலென வேமொழிந் தேத்துமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. கூ

பின்னிய தாழ்சடை யார்பிதற்றும் பேதைய ராஞ்சமண் சாக்கியர்கள்
தன்னிய லும்முறை கொள்ளகில்லாச் சைவரிடந்தள வேறுசோலைத்
துன்னிய மாதரு மைந்தர் தாமுஞ் சுனையிடை மூழ்கித் தொடர்ந்தசிந்தைப்
பன்னிய பாடல் பயிலுமாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே. ம

எண்டிசை யாரும்வ ணங்கியேத்தும் எம்பெரு மானை யெழில்கொ ளாவூர்ப்
பண்டுரி யார்சிலர் தொண்டர் போற்றும் பசுபதி யீச்சரத் தாதிதன்மேல்
கண்டல்கண் மிண்டிய கானற்காழிக் கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன
கொண்டினி தாவிசை பாடியாடிக் கூடும வருடை யார்கள்வானே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

9. திருவேணுபுரம் : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வண்டார்குழ லரிவையோடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானன்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராலுறை தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே. க

படைப்புந்நிலை யிறுதிப்பயன் பருமையோடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னெடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றல்மிகு வேணுபுர மதுவே. உ

கடந்தாங்கிய கரியையவர் வெருவவுரி போர்த்துப்
படந்தாங்கிய அரவக்குழைப் பரமேட்டிதன் பழவூர்
நடந்தாங்கிய நடையார்நல பவளத்துவர் வாய்மேல்
விடந்தாங்கிய கணணர்பியல் வேணுபுர மதுவே. ங

தக்கன்றன சிரமொன்றினை யரிவித்தவன் றனக்கு
மிக்கவ்வர மருள்செய்தஎம் விண்ணோர்பெரு மானூர்
பக்கம்பல மயிலாடிட மேகம்முழ வதிர
மிக்கம்மது வண்டார்பொழில் வேணுபுர மதுவே. ச

நானவித வுருவாய்நமை யாள்வான்நணு காதார்
வானர்திரி புரமூன்றெரி யுண்ணச்சிலை தொட்டான்
தேனர்ந்தெழு கதலிக்கனி யுண்பான்திகழ் மந்தி
மேனேக்கிநின் றிறங்கும்பொழில் வேணுபுர மதுவே. ரு

மண்ணோர்களும் விண்ணோர்களும் வெருவிம்மிக அஞ்சக்
கண்ணர்சல மூடிக்கட லோங்கவ்வுயர்ந் தானூர்
தண்ணர்நறுங் கமலம்மலர் சாயவ்விள வாளை
விண்ணர்குதி கொள்ளும்வியன் வேணுபுர மதுவே. சா, எ

மலையான்மக ளஞ்சவ்வரை யெடுத்தவ்வலி யரக்கன்
தலைதோளவை நெரியச்சர ணுகிர்வைத்தவன் றன்னூர்
கலையாரொடு சுருதித்தொகை கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொற்றேர்தரு வேணுபுர மதுவே. அ

Koviloor Digital Library

வயமுண்டவ மாலும்மடி காணுதவ மருளும்
பயனுகிய பிரமன்படு தலையேந்திய பரனூர்
கயமேவிய சங்கந்தரு கழுவிட்டுயர் செந்நெல்
வியன்மேவிவந் துறங்கும்பொழில் வேணுபுர மதுவே. ௯

மாசேறிய வுடலாரமண் குழுக்களொடு தேரர்
தேசேறிய பாதம்வணங் காமைத்தெரி யானூர்
தூசேறிய வல்குற்றுடி யிடையார்துணை முலையார்
வீசேறிய புருவத்தவர் வேணுபுர மதுவே. ௰

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்தன பாடல்
ஏதத்தினை யில்லார்விவை பத்தும்மிசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ கெதியைப்பெறு வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

10. திருவண்ணமலை : பண் - நட்டபாடை

திறம் : குறிச்சீர் செந்திறம்   பண்தார் : கணபதி
கனரகம் : கம்பீர நாட்டை

திருச்சிற்றம்பலம்

உண்ணமுலை யுமையாளொடு முடனுகிய வொருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. ௧

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணுமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. ௨

பீலம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணுமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. ௩

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனுவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேறுவ தல்லால்

Koviloor Digital Library
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள் அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணுமலை யதுவே. ௪

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணுமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனுவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே. ௫

பெருகும்புன லண்ணுமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக் குறுநோயடை யாவே. ௬

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணுமலை யதுவே. ௭

ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிட மண்ணுமலை யதுவே. ௮

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணுமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே. ௯

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின் றுழல்வாறும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின் அண்ணுமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே. ௰

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணுமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

11. திருவீழிமிழலை : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே. க

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே. உ

வம்மின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினோ டெம்மன்புசெய் தீசன்னுறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசை யெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழ லையே. ௩

பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே. ச

ஆயாதன சமயம்பல அறியாதவ னெறியின்
தாயானவ னுயிர்கட்குமுன் றலையானவன் மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை செல்வத்திரு வாரூர்
மேயானவ னுறையும்மிடம் வீழிம்மிழ லையே. ரு

கல்லால்நிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழ லையே. சா

கரத்தான்மலி சிரத்தான்கரி யுரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி பணிமூவர்கட் கோவா
வரத்தான்மிக அளித்தானிடம் வளர்புன்னைமுத் தரும்பி
விரைத்தாதுபொன் மணியீன்றணி வீழிம்மிழ லையே. எ

Koviloor Digital Library

முன்னிற்பவ ரில்லாமுர ணரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி தடந்தோளிற வூன்றிப்
புன்னைப்பணிந் தேத்தப்பெரு வாள்பேரொடுங் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம் வீழிம்மிழ லையே. அ

பண்டேழுல குண்டானவை கண்டானுமுன் னறியா
ஒண்டீயுரு வானானுறை கோயில்நிறை பொய்கை
வண்டாமரை மலர்மேல்மட அன்னம்நடை பயில
வெண்டாமரை செந்தாதுதிர் வீழிம்மிழ லையே. கூ

மசங்கற்சமண் மண்டைக்கையர் குண்டக்குண மிலிகள்
இசங்கும்பிறப் பறுத்தானிட மிருந்தேன்களித் திரைத்துப்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைகள் ஒளிகொண்டெழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில் வீழிம்மிழ லையே. ம

வீழிம்மிழ லைம்மேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்தமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

12. திருமுதுகுன்றம் : பண் - நட்டபாடை

திறம் : ஆற்றுக்குறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : சிந்து நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ்விட முண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச் சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகி லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முதுகுன்றடை வோமே. க

தழையார்வட வியவீதனில் தவமேபுரி சைவன்
இழையாரிடை மடவாளொடு மினிதாவுறை யிடமாம்
மழைவானிடை முழவவ்வெழில் வளைவாளுகி ரெரிகண்
முழைவாளரி குமிறும்முயர் முதுகுன்றடை வோமே. உ

விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிர முடையவ்வவ னேடு
முளைமாமதி தவழும்முயர் முதுகுன்றடை வோமே. ௩

Koviloor Digital Library

சுரர்மாதவர் தொகுகின்னர ரவரோதொலை வில்லா
நரரானபன் முனிவர்தொழ விருந்தானிடம் நலமார்
அரசார்வர வணிபொற்கல னவைகொண்டுபன் னாளும்
முரசார்வரு மணமொய்ம்புடை முதுகுன்றடை வோமே. ௪

அறையார்கழ லந்தன்றனை யயில்மூவிலை யழகார்
கறையார்நெடு வேலின்மிசை யேற்றானிடங் கருதில்
மறையாயின பலசொல்லியொண் மலர்சாந்தவை கொண்டு
முறையான்மிகு முனிவர்தொழு முதுகுன்றடை வோமே. ௫

ஏவார்சிலை யெயினன்னுரு வாகியெழில் விசயற்
கோவாதவின் னருள்செய்தவெம் மொருவற்கிட முலகில்
சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழு முதுகுன்றடை வோமே. ௬

தழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயு முதுகுன்றடை வோமே. ௭

செதுவாய்மைகள் கருதிவ்வரை யெடுத்ததிற லரக்கன்
கதுவாய்கள்பத் தலறியிடக் கண்டானுறை கோயில்
மதுவாயசெங் காந்தள்மலர் நிறையக்குறை வில்லா
முதுவேய்கள்முத் துதிரும்பொழில் முதுகுன்றடை வோமே. ௮

இயலாடிய பிரமன்னரி யிருவர்க்கறி வரிய
செயலாடிய தீயாருரு வாகியெழு செல்வன்
புயலாடுவண் பொழில்சூழ்புனற் படப்பைத்தடத் தருகே
முயலோடவெண் கயல்பாய்தரு முதுகுன்றடை வோமே. ௯

அருகரொடு புத்தரவ ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி யுடையானிடம் மலரார்
கருகுகுழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே. ௰

முகில்சேர்தரு முதுகுன்றுடை யானைமிகுதொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம் பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக ளிசையோடிவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர் பாவம்மடை யாவே. ௰௧

திருச்சிற்றம்பலம்

௩.௰௩

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

13.திருவியலூர் : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றத னுரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. க

ஏருர்தரு மொருவன்பல வுருவன்னிலை யானன்
ஆருர்தரு சடையன்னன லுருவன்புரி வுடையான்
மாருர்புர மெரியச்சிலை வளைவித்தவன் மடவாள்
வீருர்தர நின்றானிடம் விரிநீர்விய லூரே. உ

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழு மருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. ங

அடைவாகிய அடியார்தொழ அலரோன் தலை யதனில்
மடவாரிடு பலிவந்துண லுடையானவ னிடமாம்
கடையார்தர அகிலார்கழை முத்தந்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர்விய லூரே. ச

எண்ணார்தரு பயனாயய னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர் பொருளாயிறை யவனாய்க்
கண்ணார்தரு முருவாகிய கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழு விரிநீர்விய லூரே. ரு

வசைவிற்கொடு வருவேடுவ னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவானிலை யவனை
அசையப்பொரு தசையாவண மவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. சா

மானாரர வுடையானிரவுடையான் பகல்நட்டம்
ஊனார்தரு முயிரானுயர் விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும் விரிநீர்விய லூரே. எ

Kovilnoor Digital Library

பொருவாரெனக் கெதிராரெனப் பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங் கதிர்நீண்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம் விரிநீர்விய லூரே. அ

வளம்பட்டலர் மலர்மேலயன் மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணவகை யழலாகிய அண்ணல்
உளம்பட்டெழு தழற்றூணதன் நடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம் விரிநீர்விய லூரே. கூ

தடுக்காலுடல் மறைப்பாரவர் தவர்சீவர மூடிப்
பிடக்கேயுரை செய்வாரொடு பேணார்நமர் பெரியோர்
கடற்சேர்தரு விடமுண்டமு தமரர்க்கருள் செய்த
விடைச்சேர்தரு கொடியானிடம் விரிநீர்விய லூரே. ய

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழு மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்முடை யாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

14.திருக்கொடுங்குன்றம் : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்தும்மமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்றிரு நகரே. க

மயில்புல்குதண் பெடையோடட லுடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேல்மலி நெடுவெஞ்சுட ரனலேந்திநின் றுடி
எயில்முன்பட எய்தானவன் மேயவ்வெழில் நகரே. உ

மிளிரும்மணி பைம்பொன்னொடு விரைமாமல ருந்திக்
குளிரும்புனல் பாயுங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
கிளர்கங்கையொ டிளவெண்மதி கெழுவுஞ்சடை தன்மேல்
வளர்கொன்றையு மதமத்தமும் வைத்தான்வள நகரே. ங

Koviloor Digital Library

பருமாமத கரியோடரி யிழியும்விரி சாரல்
குருமாமணி பொன்றேழிழி யருவிக்கொடுங் குன்றம்
பெருமாவெயில் வரைவிற்றரு கணையிற்பொடி செய்த
பெருமானவ னுமையாளொடும் மேவும்பெரு நகரே. ௪

மேகத்திடி குரல்வந்தெழ வெருவிவ்வரை யிழியும்
நாகைக்குல மோடிந்திரி சாரற்கொடுங் குன்றம்
நாகத்தொடு மிளவெண்பிறை சூடிந்நல மாங்கை
பாகத்தவ னிமையோர்தொழ மேவும்பழ நகரே. ௫

கைம்மாமத கரியின்னின மிடியின்குர லதிரக்
கொய்ம்மாலர்ச் சோலைபுக மண்டுங்கொடுங் குன்றம்
அம்மானென வுள்கித்தொழு வார்கட்கருள் செய்யும்
பெம்மானவ னிமையோர்தொழ மேவும்பெரு நகரே. ௬

மரவத்தொடு மணமாதவி மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை விரவும்மலர்க் கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன் வைத்தானெடு நகரே. ௭

முட்டாமுது கரியின்னின முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை யவைமண்டிநின் றுடுங்கொடுங் குன்றம்
ஒட்டாவரக் கன்றன்முடி யொருபஃதவை யுடனே
பிட்டானவ னுமையாளொடு மேவும்பெரு நகரே. ௮

அறையும்மரி குரலோசையை யஞ்சியடு மானை
குறையும்மன மாகிம்முழை வைகுங்கொடுங் குன்றம்
மறையும்மவை யுடையானென நெடியானென விவர்கள்
இறையும்மறி வொண்ணாதவன் மேயவ்வெழில் நகரே. ௯

மத்தக்களி றாளிவ்வர வஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை வைகுங்கொடுங் குன்றம்
புத்தரொடு பொல்லாமனச் சமணர்புறங் கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன் மேயபழ நகரே. ௰

கூனற்பிறை சடைமேல்மிக வுடையான்கொடுங் குன்றைக்
கானற்கழு மலமாநகர்த் தலைவன்னல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன நலங்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்துல கேத்தும்மெழி லோரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

15. திருநெய்த்தானம் : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே. க

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும்புன லரவும்படு சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்ப்பயில் நெய்த்தானமெ னீரே. உ

பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக வுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே. ௩

சுடுநீறணி யண்ணற்சுடர் சூலம்மன லேந்தி
நடுநள்ளிருள் நடமாடிய நம்பன்னுறை யிடமாம்
கடுவாளிள வரவாடுமிழ் கடல்நஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர் நெய்த்தானமெ னீரே. ச

நுகராரமொ டேலம்மணி செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதண்கரை நிகழ்வாயநெய்த்தான
நகரானடி யேத்தந்நமை நடலையடை யாவே. ரு

விடையார்கொடி யுடையவ்வணல் வீந்தார்வெளை யெலும்பும்
உடையார்நறு மாலைசடை யுடையாரவர் மேய
புடையேபுனல் பாயும்வயல் பொழில்சூழ்ந்நெய்த் தானம்
அடையாதவ ரென்றும்மம ருலகம்மடை யாரே. சா

நிழலார்வயல் கமழ்சோலைகள் நிறைகின்றநெய்த் தானத்
தழலானவ னனலங்கையி லேந்தியழ காய
கழலானடி நாளுங்கழ லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய ரின்றித்தொழு வாரே. எ

Koviloor Digital Library

அறையார்கட லிலங்கைக்கிறை யணிசேர்கயி லாயம்
இறையாரமு னெடுத்தானிரு பதுதோளிற வூன்றி
நிறையார்புனல் நெய்த்தானன்நல் நிகழ்சேவடி பரவக்
கறையார்கதிர் வாளீந்தவர் கழலேத்துதல் கதியே. அ

கோலம்முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி திகழ்வாநெய்த் தானம்
காலம்பெற மலர்நீரவை தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புக ழடியாருட லுறுநோய்நலி யாவே. கூ

மத்தம்மலி சித்தத்திறை மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி பொருளாநினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்னுறை நெய்தானம தேத்தும்
சித்தம்முடை யடியாருடல் செறுநோயடை யாவே. ம

தலமல்கிய புனற்காழியுள் தமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானம தேத்தும்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர் சிவகதியே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

16. திருப்புள்ளமங்கை திருஆலந்துறை : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்றுன்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே. க

மலையான்மகள் கணவன்மலி கடல்சூழ்தரு தன்மைப்
புலையாயின களைவானிடம் பொழில்சூழ்புள மங்கைக்
கலையால்மலி மறையோரவர் கருதித்தொழு தேத்த
அலையார்புனல் வருகாவிரி யாலந்துறை யதுவே. உ

கறையார்மிட றுடையான்கமழ் கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன லுடையான்புள மங்கைச்
சிறையார்தரு களிவண்டறை பொழில்சூழ்திருவாலந்
துறையானவ னறையார்கழல் தொழுமின்துதி செய்தே. ௩

Koviloor Digital Library

தணியார்மதி யரவின்றெடு வைத்தானிடம் மொய்த்தெம்
பணியாயவன் னடியார்தொழு தேத்தும்புள மங்கை
மணியார்தரு கனகம்மவை வயிரத்திர ளோடும்
அணியார்மண லணைகாவிரி யாலந்துறை யதுவே. ௪

மெய்ந்நன்றுறும் வினைதீர்வகை தொழுமின்செழு மலரின்
கொத்தின்றெடு சந்தாரகில் கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை யாந்தைபல பாடும்புள மங்கை
அத்தன்னமை யாள்வானிட மாலந்துறை யதுவே. ௫

மன்ஞனவன் னுலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்ஞனவன் முதலானவன் பொழில்சூழ்புள மங்கை
என்ஞனவ னிசையானவ னிளஞாயிறின் சோதி
அன்ஞனவ னுறையும்மிட மாலந்துறை யதுவே. ௬

முடியார்தரு சடைமேல்முளை யிளவெண்மதி சூடிப்
பொடியாடிய திருமேனியர் பொழில்சூழ்புள மங்கைக்
கடியார்மலர் புனல்கொண்டுதன் கழலேதொழு தேத்தும்
அடியார்தமக் கினியானிட மாலந்துறை யதுவே. ௭

இலங்கைமனன் முடிதோளிற எழிலார்திரு விரலால்
விலங்கல்லிடை யடர்த்தானிடம் வேதம்பயின் றேத்திப்
புலன்கள்தமை வென்றார்புக ழவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையானிட மாலந்துறை யதுவே. ௮

செறியார்தரு வெள்ளைத்திரு நீற்றின் திரு முண்டப்
பொறியார்தரு புரிநூல்வரை மார்பன்புள மங்கை
வெறியார்தரு கமலத்தயன் மாலுந்தனை நாடி
அறியாவகை நின்றானிட மாலந்துறை யதுவே. ௯

நீதியறி யாதாரமண் கையரொடு மண்டைப்
போதியவ ரோதும்முரை கொள்ளார்புள மங்கை
ஆதியவர் கோயில்திரு வாலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு தன்மைபெற லாமே. ௰

பொந்தின்னிடைத் தேனூறிய பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி யாலந்துறை யரனைக்
கந்தம்மலி கமழ்காழியுட் கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி யாடத்தவ மாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

17. திருஇடும்பாவனம் : பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. க

மலையார்தரு மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர் காவல்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே. உ

சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழு மெந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு முலகத்தவர் நலமார்
கோலம்மிகு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே. ௩

பொழிலார்தரு குலைவாழைக ளெழிலார்திகழ் போழ்தில்
தொழிலான்மிகு தொண்டரவர் தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
எழிலார்தரு மிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. ச

பந்தார்விர லுமையாளொரு பங்காகங்கை முடிமேல்
செந்தாமரை மலர்மல்கிய செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ் குரவங்கமழ் குன்றில்
எந்தாயென விருந்தானிட மிடும்பாவன மிதுவே. ரு

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையுந்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க் கறியும்மறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு மிடும்பாவன மிதுவே. சா

நீறேறிய திருமேனியர் நிலவும்முல கெல்லாம்
பாறேறிய படுவெண்டலை கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
ஏறேறிய இறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. எ

Koviloor Digital Library

தேரார்தரு திகழ்வாளெயிற் றரக்கன்சிவன் மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி யொருபஃதவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடுகுணநாமமுங் கொடுத்த
ஏரார்தரு மிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. அ

பொருளார்தரு மறையோர்புகழ் விருத்தர்பொலி மலிசீர்த்
தெருளார்தரு சிந்தையொடு சந்தம்மலர் பலதூய்
மருளார்தரு மாயன்னயன் காணார்மய லெய்த
இருளார்தரு கண்டர்க்கிட மிடும்பாவன மிதுவே. கூ

தடுக்கையுட னிடுக்கித்தலை பறித்துச்சமண் நடப்பார்
உடுக்கைப்பல துவர்க்கூறைக ளுடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல் மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிட மிடும்பாவன மிதுவே. ய

கொடியார்நெடு மாடக்குன்ற ளூரிற்கரைக் கோல
இடியார்கட லடிவீழ்தரு மிடும்பாவனத் திறையை
அடியாயுமந் தணர்காழியு ளணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப் பறையும்வினை தானே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

18. திருநின்றியூர் : பண் - நட்டபாடை

திறம் : குறிச்சீர்ச்செந்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : கம்பீர நாட்டை

திருச்சிற்றம்பலம்

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே. க

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை யடிகள்திருப் பாதம்பணி வாரே. உ

பறையின்னொலி சங்கின்னொலி பாங்காரவு மார
அறையும்மொலி யெங்கும்மவை யறிவாரவர் தன்மை
நிறையும்புனல் சடைமேலுடை யடிகள்நின்றி யூரில்
உறையும்மிறை யல்லதென துள்ளம் முணராதே. ௩

Koviloor Digital Library

பூண்டவ்வரை மார்பிற்புரி நூலன்விரி கொன்றை
ஈண்டவ்வத னோடும்மொரு பாலம்மதி யதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு நின்றியது தன்னில்
ஆண்டகழல் தொழிலல்லது அறியாரவ ரறிவே. ச

குழலின்னிசை வணிடின்னிசை கண்டுகுயில் கூவும்
நிழலின்னெழில் தாழ்ந்தபொழில் சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வல னங்கையது ஏந்தியன லாடுங்
கழலின்னொலி யாடும்புரி கடவுள்களை கண்ணே. ரு

மூரன்முறு வல்வெண்ணகை யுடையாளொரு பாகம்
சாரன்மதி யதனோடுடன் சலவஞ்சடை வைத்த
வீரன்மலி யழகார்பொழில் மிடையுந்திரு நின்றி
ஊரன்கழ லல்லாதென துள்ளமுண ராதே. சா

பற்றியொரு தலைகையினி லேந்திப்பலி தேரும்
பெற்றியது வாகித்திரிதேவர்பெரு மானூர்
சுற்றியொரு வேங்கையத ளோடும்பிறை சூடும்
நெற்றியொரு கண்ணார்நின்றி யூரின்னிலை யாரே. எ, அ

நல்லம்மலர் மேலானெடு ஞாலம்மது வுண்டான்
அல்லரென ஆவரென நின்றும்மறி வரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி யூரின்னிலை யாரெஞ்
செல்வரடி யல்லாதென சிந்தையுண ராதே. கூ

நெறியில்வரு பேராவகை நினையாநினை வொன்றை
அறிவில்சம ணாதருரை கேட்டும்மய ராதே
நெறியில்லவர் குறிகள்நினை யாதேநின்றி யூரில்
மறியேந்திய கையானடி வாழ்த்தும்மதுவாழ்த்தே. ய

குன்றம்மது எடுத்தானுடல் தோளுந்நெரி வாக
நின்றங்கொரு விரலாலுற வைத்தான்நின்றி யூரை
நன்றார்தரு புகலித்தமிழ் ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை வின்றிநிறை புகழே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

19. திருக்கழுமலம் : திருவிராகம் - பண் - நட்டபாடை

திறம் : குறிச்சீர்ச்செந்திறம் பண்தார் : கணபதி

கனரகம் : கம்பீர நாட்டை * கமலாதரங்கணி

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவ ளிணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழினிறை வயலணி கழுமல மமர்கன லுருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி கழல்தொழன் மருவுமே. க

பிணிபடு கடல்பிற விகளற லெளிதுள ததுபெரு கியதிரை
அணிபடு கழுமல மினிதம ரனலுரு வினனவிர் சடைமிசை
தணிபடு கதிர்வள ரிளமதி புனைவனை யுமைதலை வனைநிற
மணிபடு கறைமிடறனைநல மலிகழ லிணைதொழன் மருவுமே. உ

வரியுறு புலியத ளுடையினன் வளர்பிறை யொளிகிளர் கதிர்பொதி
விரியுறு சடைவிரை புரைபொழில் விழவொலி மலிகழு மலமமர்
எரியுறு நிறஇறை வனதடி யிரவொடு பகல் பர வுவர்தம
தெரியுறு வினைசெறி கதிர்முனை யிருள்கெட நனிநினை வெய்துமதே. ங

வினைகெட மனநினை வதுமுடி கெனினனி தொழுதெழு குலமதி
புனைகொடி யிடைபொருள் தருபடு களிறின துரிபுதை யுடலினன்
மனைகுட வயிறுடை யனசில வருகுறள் படையுடை யவன்மலி
கனைகட லடைகழு மலமமர் கதிர்மதியினனதிர் கழல்களே. ச

தலைமதி புனல்விட அரவிவை தலைமைய தொருசடை யிடையுடன்
நிலைமரு வவொரிட மருளின னிழன்மழு விளைடழல் கணையினன்
மலைமரு வியசிலை தனின்மதி லெரி யுண மனமரு வினனல
கலைமரு வியபுற வணிதரு கழுமல மினிதமர் தலைவனே. ரு

வரைபொரு திழியரு விகள்பல பருகொரு கடல்வரி மணலிடை
கரைபொரு திரையொலி கெழுமிய கழுமல மமர் கன லுருவினன்
அரைபொரு புலியத ளுடையின னடியிணை தொழவரு வினையெனும்
உரைபொடி படவுறு துயர்கெட வுயருல கெய்தலொரு தலைமையே. சா

முதிருறு கதிர்வள ரிளமதி சடையனை நறநிறை தலைதனில்
உதிருறு மயிர்பிணை தவிர்தசை யுடைபுலியதளிடை யிருள்கடி
கதிருறு சுடரொளி கெழுமிய கழுமல மமர்மழு மலிபடை
அதிருறு கழலடி களதடி தொழுமறி வலதறி வறியமே. எ

Koviloor Digital Library

கடலென நிறநெடு முடியவ னடுதிறல் தெறவடி சரணென
அடல்நிறை படையரு ளியபுக ழரவரை யினனணி கிளர்பிறை
விடநிறை மிடறுடை யவன்விரி சடையவன் விடையுடை யவனுமை
உடனுறை பதிகள்தன் மறுகுடை யுயர்கழு மலவியன் நகரதே. அ

கொழுமல ருறைபதி யுடையவ னெடியவ னெனவிவர் களுமவன்
விழுமையை யளவறி கிலரிறை விரைபுணர் பொழிலணி விழவமர்
கழுமல மமர்கன லுருவின னடியிணை தொழுமவ ரருவினை
எழுமையு மிலநில வகைதனி லெளிதிமை யவர்விய னுலகமே. கூ

அமைவன துவரிழு கியதுகி லணியுடை யினரம ணுருவர்கள்
சமையமு மொருபொரு ளெனுமவை சலநெறி யனஅற வுரைகளும்
இமையவர் தொழுகழு மலமம ரிறைவன தடிபர வுவர்தமை
நமையல வினைநல னடைதலி லுயர்நெறி நனிநணு குவர்களே. ௰

பெருகிய தமிழ்விர கினன்மலி பெயரவ னுறைபிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடலடை கழுமல முறைவிட மெனநனி
பெருகிய சிவனடி பரவிய பிணைமொழி யனவொரு பதுமுடன்
மருவிய மனமுடையவர் மதி யுடையவர் விதியுடை யவர்களே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

20. திருவீழிமிழலை : திருவிராகம் - பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர் திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக்குறிஞ்சி ⁕ நாகதரங்கணி

திருச்சிற்றம்பலம்

தடநில வியமலை நிறுவியொர் தழலுமிழ் தருபட அரவுகொ
டடலசு ரரொடம ரர்களலை கடல்கடை வுழியெழு மிகுசின
விடமடை தருமிட றுடையவன் விடைமிசை வருமவ னுறைபதி
திடமலி தருமறை முறையுணர் மறையவர் நிறைதிரு மிழலையே. க

தரையொடு திவிதல நலிதரு தகுதிற லுறுசல தரனது
வரையன தலைவிசை யொடுவரு திகிரியை அரிபெற அருளினன்
உரைமலி தருசுர நதிமதி பொதிசடை யவனுறை பதிமிகு
திரைமலி கடல்மண லணிதரு பெறுதிடர் வளர்திரு மிழலையே. உ

மலைமகள் தனையிகழ் வதுசெய்த மதியறு சிறுமன வனதுயர்
தலையினை டழலுரு வனகர மறமுனி வுசெய்தவ னுறைபதி
கலைநில வியபுல வர்களிடர் களைதரு கொடைபயில் பவர்மிகு
சிலைமலி மதில்புடை தழுவிய திகழ்பொழில் வளர்திரு மிழலையே. ௩

Koviloor Digital Library

மருவலர் புரமெரி யினின்மடி தரவொரு கணைசெல நிறுவிய
பெருவலி யினனல மலிதரு கரனுர மிகுபிண மமர்வன
இருளிடை யடையுற வொடுநட விசையுறு பரனினி துறைபதி
தெருவினில் வருபெரு விழவொலி மலிதர வளர்திரு மிழலையே. ௪

அணிபெறு வடமர நிழலினி லமர்வொடு மடியிணை யிருவர்கள்
பணிதர அறநெறி மறையொடு மருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில மலிபுன லணை தரு வயலணி
திணிபொழில் தருமண மதுநுக ரறுபத முரல்திரு மிழலையே. ௫

வசையறு வலிவன சரவுரு வதுகொடு நினைவரு தவமுயல்
விசையன திறன்மலை மகளறி வுறுதிற லமர்மிடல் கொடுசெய்து
அசைவில படையருள் புரிதரு மவனுறை பதியது மிகுதரு
திசையினின் மலர்குல வியசெறி பொழின்மலி தருதிரு மிழலையே. ௬

நலமலி தருமறை மொழியொடு நதியுறு புனல்புகை யொளிமுதல்
மலரவை கொடுவழி படுதிறன் மறையவ னுயிரது கொளவரு
சலமலி தருமற லிதனுயிர் கெடவுதை செய்தவ னுறைபதி
திலகமி தெனவுல குகள்புகழ் தருபொழி லணிதிரு மிழலையே. ௭

அரனுறை தருகயி லையைநிலை குலைவது செய்ததச முகனது
கரமிரு பதுநெரி தரவிர னிறுவிய கழலடி யுடையவன்
வரன்முறை யுலகவை தருமலர் வளர்மறை யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதரு சிவனுறை பதிதிரு மிழலையே. ௮

அயனெடு மெழிலமர் மலர்மகள் மகிழ்கண னளவிட லொழியவொர்
பயமுறு வகைதழ னிகழ்வதொர் படியுரு வதுவர வரன்முறை
சயசய வெனமிகு துதிசெய வெளியுரு வியவவ னுறைபதி
செயநில வியமதில் மதியது தவழ்தர வுயர்திரு மிழலையே. ௯

இகழுரு வொடுபறி தலைகொடு மிழிதொழில் மலிசமண் விரகினர்
திகழ்துவ ருடையுடல் பொதிபவர் கெடவடி யவர்மிக வருளிய
புகழுடை யிறையுறை பதிபுன லணிகடல் புடைதழு வியபுவி
திகழ்சுரர் தருநிகர் கொடையினர் செறிவொடு திகழ்தரு மிழலையே. ௰

சினமலி கரியுரி செய்தசிவ னுறைதரு திருமிழ லையைமிகு
தனமனர் சிரபுர நகரிறை தமிழ்விர கனதுரை யொருபதும்
மனமகிழ் வொடுபயில் பவரெழின் மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மக ளிசைதர விருநில னிடையினி தமர்வரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

21. திருச்சிவபுரம் :திருவிராகம் : பண் - நட்டபாடை

திறம் : குறிச்சீர்ச்செந்திறம் பண்தார் : கணபதி

கனரகம் : கம்பீர நாட்டை ✵ கமலாதரங்கணி

திருச்சிற்றம்பலம்

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே. க

மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முத லுலகுகள் நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல் நடுவறி துயிலம ரரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை பவர்திரு மகளொடு திகழ்வரே. உ

பழுதில கடல்புடை தழுவிய படிமுத லியவுல குகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர் தொழுமவர் புகழ்மிகு முலகிலே. ௩

நறைமலி தருமள ருடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமகள் தலைவரே. ச

சினமலி யறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருள் நியதமு முணர்பவர்
தனதெழி லுருவது கொடுவடை தகுபர னுறைவது நகர்மதில்
கனமரு வியசிவ புரநினை பவர்கலை மகள்தர நிகழ்வரே. ரு

சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழியொழு குமெயுறு பொறியொழி
அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையர னுறைபதி
திருவளர் சிவபுர நினைபவர் திகழ்குல னிலனிடை நிகழுமே. சா

அசைவுறு தவமுயல் வினிலய னருளினில் வருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை யிருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுர நினைபவர் செழுநில னினில்நிகழ் வுடையரே. எ

Koviloor Digital Library

அடல்மலி படையரி யயனெடு மறிவரி யதொரழல் மலிதரு
சுடருரு வொடுநிகழ் தரவவர் வெருவொடு துதியது செயவெதிர்
விடமலி களநுத லமர்கண துடையுரு வெளிபடு மவன்நகர்
திடமலி பொழிலெழில் சிவபுர நினைபவர் வழிபுவி திகழுமே. ௯

குணமறி வுகள்நிலை யிலபொரு ளுரைமரு வியபொருள் களுமில
திணமென மவரொடு செதுமதி மிகுசம ணருமலி தமதுகை
உணலுடை யவருணர் வருபர னுறைதரு பதியுல கினில்நல
கணமரு வியசிவ புரநினைபவரெழி லுருவுடை யவர்களே. ௰

திகழ்சிவ புரநகர் மருவிய சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை நலமலி யொருபதும் நவில்பவர்
நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின் மிகைபுணர் தரநல மிகுவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

22. திருமறைக்காடு : திருவிராகம். பண் - நட்டபாடை

திறம் : படுகுறிச்சீர்திறம் பண்தார் : கணபதி
கனரகம் : நாட்டக்குறிஞ்சி ❋ நாகதரங்கணி

திருச்சிற்றம்பலம்

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினமலி யரவதுகொடுதிவி
தலமலி சுரரசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல் குலைதர வதுநகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவன மமர்தரு பரமனே. ௧

கரமுத லியஅவ யவமவை கடுவிட வரவது கொடுவரு
வரன்முறை யணிதரு மவனடல் வலிமிகு புலியத ளுடையினன்
இரவலர் துயர்கெடு வகைநினை யிமையவர் புரமெழில் பெறவளர்
மரநிகர் கொடைமனி தர்கள்பயில் மறைவன மமர்தரு பரமனே ௨

இழைவளர் தருமுலை மலைமக ளினிதுறை தருமெழி லுருவினன்.
முழையினின் மிகுதுயி லுறுமரி முசிவொடு மெழமுள ரியொடெழு.
கழைநுகர் தருகரி யிரிதரு கயிலையின் மலிபவ னிருளுறும்
மழைதவழ் தருபொழில் நிலவிய மறைவன மமர்தரு பரமனே. ௩

நலமிகு திருவித ழியின்மலர் நகுதலை யொடுகன கியின்முகை
பலசுர நதிபட அரவொடு மதிபொதி சடைமுடி யினன்மிகு
தலநில வியமனி தர்களொடு தவமுயல் தருமுனி வர்கள்தம
மலமறு வகைமன நினைதரு மறைவன மமர்தரு பரமனே. ௪

Koviloor Digital Library

கதிமலி களிறது பிளிறிட வுரிசெய்த அதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி கணநெடு மிகுதவ முயல்தரு
மதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவன மமர்தரு பரமனே. ௫

கறைமலி திரிசிகை படையடல் கனல்மழு வெழுதரவெறிமறி
முறைமுறை யொலிதம ருகமுடை தலைமுகிழ் மலிகணி வடமுகம்
உறைதரு கரதுல கினிலுய ரொளிபெறு வகைநினை வொடுமலர்
மறையவன் மறைவழி வழிபடு மறைவன மமர்தரு பரமனே. ௬

இருநில னதுபுன லிடைமடி தரவெரி புகவெரி யதுமிகு
பெருவளி யினிலவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவ னினமலர்
மருவிய அறுபத மிசைமுரல் மறைவன மமர்தரு பரமனே. ௭

சனம்வெரு வுறவரு தசமுக னொருபது முடியொடு மிருபது
கனமரு வியபுய நெரிவகை கழலடி யிலொர்விர னிறுவினன்
இனமலி கணநிசி சரன்மகிழ் வுறவருள் செய்தகருணையனென
மனமகிழ் வொடுமறை முறையுணர் மறைவன மமர்தரு பரமனே. ௮

அணிமலர் மகன் தலை மகனய னறிவரி யதொர்பரி சினிலெரி
திணிதரு திரளுரு வளர்தர அவர்வெரு வுறலொடு துதிசெய்து
பணியுற வெளியுரு வியபர னவனுரை மலிகடல் திரளெழும்
மணிவள ரொளிவெயில் மிகுதரு மறைவன மமர்தரு பரமனே. ௯

இயல்வழி தரவிது செலவுற இனமயி லிறகுறு தழையொடு
செயல்மரு வியசிறு கடமுடி யடைகையர் தலைபறி செய்துதவம்
முயல்பவர் துவர்பட முடல்பொதி பவரறி வருபர னவனணி
வயலினில் வளைவள மருவிய மறைவன மமர்தரு பரமனே. ௰

வசையறு மலர்மகள் நிலவிய மறைவன மமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள் புகழ்வழி வளர்தரு
இசையமர் கழுமல நகரிறை தமிழ்விர கனதுரை யியல்வல
இசைமலி தமிழொரு பதும்வல வவருல கினிலெழில் பெறுவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

பண் - தக்கராகம்

23. திருக்கோலக்கா : பண் - தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் : ஹரிப்பிரியா ✲ ஏகதாளம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. க

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை யுலக முய்யவே. உ

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. ௩

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. ச

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தை தன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. ரு

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. சா

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்

Koviloor Digital Library

கழலால் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே. எ

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினை கள் நீங்குமே. அ

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்ருன் பாத மேத்தி வாழ்மினே. கூ

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. ௰

நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

24. சீகாழி : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ✱ ரூபகதாளம்

திருச்சிற்றம்பலம்

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே. க

எந்தை யென்றங் கிமையோர் புகுந்தீண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமல ரவர்போலாம்
அந்தி நட்ட மாடும் மடிகளே. உ

Koviloor Digital Library

தேனை வென்ற மொழியா ளொருபாகங்
கான மான்கைக் கொண்ட காழியார்
வான மோங்கு கோயி லவர்போலாம்
ஆன வின்ப மாடும் மடிகளே. ௩

மாறு வென்றிக் காலன் மடியவே
காறு மாணிக் களித்த காழியார்
நாறு வாளி தொட்டா ரவர்போலாம்
பேறூர் புரங்க ளட்ட பெருமானே. ௪

மாடே ஓத மெறிய வயற்செந்நெற்
காடே றிச்சங் கீனுங் காழியார்
வாடா மலராள் பங்க ரவர்போலாம்
ஏடார் புரமூன் றெரித்த இறைவரே. ௫

கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்க ணரவ மாட்டு மவர்போலாஞ்
செங்க ணரக்கர் புரத்தை யெரித்தாரே. ௬

கொல்லை விடைமுன் பூதங் குனித்தாடுங்
கல்ல வடத்தை யுகப்பார் காழியார்
அல்ல விடத்து நடந்தா ரவர்போலாம்
பல்ல விடத்தும் பயிலும் பரமரே. ௭

எடுத்த அரக்கன் நெரிய விரலூன்றிக்
கடுத்து முரிய அடர்த்தார் காழியார்
எடுத்த பாடற் கிரங்கு மவர்போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே. ௮

ஆற்ற லுடைய அரியும் பிரமனுந்
தோற்றங் காணா வென்றிக் காழியார்
ஏற்ற மேறங் கேறு மவர்போலாங்
கூற்ற மறுகக் குமைத்த குழகரே. ௯

பெருக்கப் பிதற்றுஞ் சமணர் சாக்கியர்
கரக்கு முரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த இறைவ ரவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத் தையரே. ௰

Koviloor Digital Library

காரார் வயல்சூழ் காழிக் கோன்றனைச்
சீரார் ஞான சம்பந் தன்சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏரார் வானத் தினிதா யிருப்பரே. யக

திருச்சிற்றம்பலம்

25. திருச்செம்பொன்பள்ளி : பண் - தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் : ஹரிப்பிரியா ⁕ ஏகதாளம்

திருச்சிற்றம்பலம்

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே. க

வாரார் கொங்கை மாதோர் பாகமாய்ச்
சீரார் செம்பொன் பள்ளி மேவிய
ஏரார் புரிபுன் சடையெம் மீசனைச்
சேரா தவர்மேற் சேரும் வினைகளே. உ

வரையார் சந்தோ டகிலும் வருபொன்னித்
திரையார் செம்பொன் பள்ளி மேவிய
நரையார் விடையொன் றூரு நம்பனை
உரையா தவர்மே லொழியா வூனமே. ங

மழுவா ளேந்தி மாதோர் பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி மேவிய
எழிலார் புரிபுன் சடையெம் மிறைவனைத்
தொழுவார் தம்மேற் றுயர மில்லையே. ச

மலையான் மகளோ டுடனாய் மதிளெய்த
சிலையார் செம்பொன் பள்ளி யானையே
இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல்
நிலையாய் வணங்க நில்லா வினைகளே. ரு

அறையார் புனலோ டகிலும் வருபொன்னிச்
சிறையார் செம்பொன் பள்ளி மேவிய
கறையார் கண்டத் தீசன் கழல்களை
நிறையால் வணங்க நில்லா வினைகளே. சா

Koviloor Digital Library

பையா ரரவே ரல்கு லாளொடும்
செய்யார் செம்பொன் பள்ளி மேவிய
கையார் சூல மேந்து கடவுளை
மெய்யால் வணங்க மேவா வினைகளே. எ

வானுர் திங்கள் வளர்புன் சடைவைத்துத்
தேனுர் செம்பொன் பள்ளி மேவிய
ஊனுர் தலையிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனுன் கழலே யடைந்து வாழ்மினே. அ

காரார் வண்ணன் கனகம் அனையானும்
தேரார் செம்பொன் பள்ளி மேவிய
நீரார் நிமிர்புன் சடையெந் நிமலனை
ஓரா தவர்மே லொழியா வூனமே. கூ

மாசா ருடம்பர் மண்டைத் தேரரும்
பேசா வண்ணம் பேசித் திரியவே
தேசார் செம்பொன் பள்ளி மேவிய
ஈசா என்ன நில்லா இடர்களே. ய

நறவார் புகலி ஞான சம்பந்தன்
செறுவார் செம்பொன் பள்ளி மேயானைப்
பெறுமா றிசையாற் பாட லிவைபத்தும்
உறுமா சொல்ல வோங்கி வாழ்வரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

26. திருப்புத்தூர் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ✳ ரூபகதாளம்

திருச்சிற்றம்பலம்

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையு மிறையாரே. க

வேனல் விம்மு வெறியார் பொழிற்சோலைத்
தேனும் வண்டுந் திளைக்குந் திருப்புத்தூர்
ஊன மின்றி யுறைவா ரவர்போலும்
ஏன முள்ளு மெயிறும் புனைவாரே. உ

Koviloor Digital Library

பாங்கு நல்ல வரிவண் டிசைபாடத்
தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
ஓங்கு கோயி லுறைவா ரவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே. ௩

நாற விண்ட நறுமா மலர்கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை யுடையா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே. ௪

இசைவி ளங்கு மெழில்சூழ்ந் தியல்பாகத்
திசைவி ளங்கும் பொழில்சூழ் திருப்புத்தூர்ப்
பசைவி ளங்கப் படித்தா ரவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே. ௫

வெண்ணி றத்த விரையோ டலருந்தித்
தெண்ணி றத்த புனல்பாய் திருப்புத்தூர்
ஒண்ணி றத்த ஒளியா ரவர்போலும்
வெண்ணி றத்த விடைசேர் கொடியாரே. ௬

நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கண் மல்கு சிவனூர் திருப்புத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தா ரவர்போலும்
மையுள் நஞ்ச மருவு மிடற்றாரே. ௭

கருக்க மெல்லாங் கமழும் பொழிற்சோலைத்
திருக்கொள் செம்மை விழவார் திருப்புத்தூர்
இருக்க வல்ல இறைவ ரவர்போலும்
அரக்க னொல்க விரலா லடர்த்தாரே. ௮

மருவி யெங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறுந் திளைக்குந் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமா னவன்போலும்
பிரமன் மாலு மறியாப் பெரியோனே. ௯

கூறை போர்க்குந் தொழிலா ரமண்கூறல்
தேறல் வேண்டா தெளிமின் திருப்புத்தூர்
ஆறு நான்கு மமர்ந்தா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே. ௰

Koviloor Digital Library

நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேட ருறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென் றும்
அல்லல் தீரு மவல மடையாவே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

27. திருப்புன்கூர் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்

கனரகம் : திரியம்பகப்பிரியா ✲ ரூபகதாளம்

திருச்சிற்றம்பலம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. க

மூவ ராய முதல்வர் முறையாலே
தேவ ரெல்லாம் வணங்குந் திருப்புன்கூர்
ஆவ ரென்னு மடிக ளவர்போலும்
ஏவி னல்லா ரெயில்மூன் றெரித்தாரே. உ

பங்க யங்கண் மலரும் பழனத்துச்
செங்க யல்கள் திளைக்குந் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையும் மிறையாரே. ௩

கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்
திரையு லாவு வயல்சூழ் திருப்புன்கூர்
உரையி னல்ல பெருமா னவர்போலும்
விரையி னல்ல மலர்ச்சே வடியாரே. ௪

பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையுந் திருப்புன்கூர்
அழக ரென்னு மடிக ளவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. ரு

தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்

Koviloor Digital Library

பொருந்தி நின்ற அடிக ளவர்போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. ௭

பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்க்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற அடிக ளவர்போலும்
கூர நின்ற எயில்மூன் றெரித்தாரே. ௭

மலை யதனு ருடைய மதில்மூன்றும்
சிலை யதனு லெரித்தார் திருப்புன்கூர்த்
தலை வர்வல்ல அரக்கன் தரக்கினை
மலை யதனு லடர்த்து மகிழ்ந்தாரே. ௮

நாட வல்ல மலரான் மாலுமாய்த்
தேட நின்ரு ருறையுந் திருப்புன்கூர்
ஆட வல்ல ளடிக ளவர்போலும்
பாட லாடல் பயிலும் பரமரே. ௯

குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல்
வண்டு பாட மலரார் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. ௰

மாட மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

28. திருச்சோற்றுத்துறை : பண் - தக்கராகம்

திறம் : ஆற்றுப்படுதிறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் :ஷண்முகப்பிரியா ✱ திரிபுடை தாளம்

திருச்சிற்றம்பலம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னு தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னெளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௧

Koviloor Digital Library

பாலு நெய்யுந் தயிரும் பயின்றாடித்
தோலு நூலுந் துதைந்த வரைமார்பர்
மாலுஞ் சோலை புடைசூழ் மடமஞ்சை
ஆலுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. உ

செய்யர் செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தைய லாளொர் பாக மாயஎம்
ஐயர் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௩

பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேய வார்பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௪

பிறையு மரவும் புனலுஞ் சடைவைத்து
மறையு மோதி மயான மிடமாக
உறையுஞ் செல்வ முடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௫

துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகள் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௬

சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்
பாடி யாடிப் பரவு வாருள்ளத்
தாடி சோற்றுத் துறைசென் றடைவோமே. ௭

பெண்ணோர் பாக முடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகங் கலந்த நுதலினர்
எண்ணா தரக்க னெடுக்க வூன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௮

தொழுவா ரிருவர் துயர நீங்கவே
அழலா யோங்கி யருள்கள் செய்தவன்
விழவார் மருகில் விதியால் மிக்கஎம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே. ௯

கோது சாற்றித் திரிவா ரமண்குண்டர்
ஓது மோத்தை யுணரா தெழுநெஞ்சே

Koviloor Digital Library

நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென் றடைவோமே. ம

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

29. திருநறையூர்ச்சித்தீச்சரம் : பண் - தக்கராகம்

திறம் : படுதிறம் பண்தார் : சத்தமாதர்

கனரகம் :சந்திர சூடப்பிரியா ✵ செயம்பை தாளம்

திருச்சிற்றம்பலம்

ஊரு லாவு பலிகொண் டுலகேத்த
நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்
சீரு லாவு மறையோர் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. க

காடு நாடுங் கலக்கப் பலிநண்ணி
ஓடு கங்கை யொளிர்புன் சடைதாழ
வீடு மாக மறையோர் நறையூரில்
நீடுஞ் சித்தீச் சரமே நினைநெஞ்சே. உ

கல்வி யாளர் கனகம் மழல்மேனி
பில்கு கங்கை புரிபுன் சடையானூர்
மல்கு திங்கட் பொழில்சூழ் நறையூரில்
செல்வர் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. ந

நீட வல்ல நிமிர்புன் சடைதாழ
ஆட வல்ல அடிக ளிடமாகும்
பாடல் வண்டு பயிலு நறையூரில்
சேடர் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. ச

உம்ப ராலு முலகின் னவராலும்
தம்பெ ருமை யளத்தற் கரியானூர்
நண்பு லாவு மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. ரு

Koviloor Digital Library

கூரு லாவு படையான் விடையேறி
போரு லாவு மழுவா னனலாடி
பேரு லாவு பெருமான் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரமே யிடமாமே. ௭

அன்றி நின்ற அவுணர் புரமெய்த
வென்றி வில்லி விமலன் விரும்புமூர்
மன்றில் வாச மணமார் நறையூரில்
சென்று சித்தீச் சரமே தெளிநெஞ்சே. ௭

அரக்க ணுண்மை யழிய வரை தன்னுல்
நெருக்க வூன்றும் விரலான் விரும்புமூர்
பரக்குங் கீர்த்தி யுடையார் நறையூரில்
திருக்கொள் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. ௮

ஆழி யானு மலரி னுறைவானும்
ஊழி நாடி யுணரார் திரிந்துமேல்
சூழு நேட வெரியா மொருவன்சீர்
நீழல் சித்தீச் சரமே நினைநெஞ்சே. ௯

மெய்யின் மாசர் விரிநுண் துகிலிலார்
கையி லுண்டு கழறு முரைகொள்ளேல்
உய்ய வேண்டி லிறைவன் நறையூரில்
செய்யுஞ் சித்தீச் சரமே தவமாமே. ௰

மெய்த்து லாவு மறையோர் நறையூரில்
சித்தன் சித்தீச் சரத்தை யுயர்காழி
அத்தன் பாத மணிஞா னசம்பந்தன்
பத்தும் பாடப் பறையும் பாவமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

30. திருப்புகலி : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் :திரியம்பகப்பிரியா ✷ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

விதியாய்விளை வாய்விளை வின்பய னுகிக்
கொதியாவரு கூற்றை யுதைத்தவர் சேரும்
பதியாவது பங்கய நின்றல ரத்தேன்
பொதியார்பொழில் சூழ்புக லிந்நகர் தானே. ௧

Koviloor Digital Library

ஒன்றார்புர மூன்று மெரித்த ஒருவன்
மின்றாரிடை யாளொடுங் கூடிய வேடந்
தன்றாலுறை வாவது தன்கடல் சூழ்ந்த
பொன்றார்வயற் பூம்புக லிந்நகர் தானே. உ

வலியன்மதி செஞ்சடை வைத்தமணாளன்
புலியின் னதள் கொண்டரை யார்த்தபு னிதன்
மலியும்பதி மாமறை யோர்நிறைந் தீண்டிப்
பொலியும்புனற் பூம்புக லிந்நகர் தானே. ௩

கயலார்தடங் கண்ணி யொடும்மெரு தேறி
அயலார்கடை யிற்பலி கொண்டவ ழகன்
இயலாலுறை யும்மிட மெண்டிசை யோர்க்கும்
புயலார்கடற் பூம்புக லிந்நகர் தானே. ச

காதார்கன பொற்குழை தோடதி லங்கத்
தாதார்மலர் தண்சடை யேறமு டித்து
நாதானுறை யும்மிட மாவது நாளும்
போதார்பொழிற் பூம்புக லிந்நகர் தானே. ரு

வலமார்படை மான்மழு வேந்திய மைந்தன்
கலமார்கடல் நஞ்சமு துண்டக ருத்தன்
குலமார்பதி கொன்றைகள் பொன்சொரி யத்தேன்
புலமார்வயற் பூம்புக லிந்நகர் தானே. சா

கறுத்தான்கன லால்மதில் மூன்றையும் வேவச்
செறுத்தான்திக ழுங்கடல் நஞ்சமு தாக
அறுத்தானயன் தன்சிர மைந்திலு மொன்றைப்
பொறுத்தானிடம் பூம்புக லிந்நகர் தானே. எ

தொழிலால்மிகு தொண்டர்கள் தோத்திரஞ் சொல்ல
எழிலார்வரை யாலன்ற ரக்கனைச் செற்ற
கழலானுறை யும்மிடங் கண்டல்கள் மிண்டிப்
பொழிலால்மலி பூம்புக லிந்நகர் தானே. அ

மாண்டார்சுட லைப்பொடி பூசிம யானத்
தீண்டாநட மாடிய வேந்தன்றன் மேனி
நீண்டானிரு வர்க்கெரி யாயர வாரம்
பூண்டானகர் பூம்புக லிந்நகர் தானே. கூ

உடையார்துகில் போர்த்துழல் வார்சமண் கையர்
அடையாதன சொல்லுவ ராதர்க ளோத்தைக்

Koviloor Digital Library

கிடையாதவன் தன்நகர் நன்மலி பூகம்
புடையார்தரு பூம்புக லிந்நகர் தானே. ௰

இரைக்கும்புனல் செஞ்சடை வைத்தஎம் மான்றன்
புரைக்கும்பொழிற் பூம்புக லிந்நகர் தன்மேல்
உரைக்குந்தமிழ் ஞானசம் பந்தனெண் மாலை
வரைக்குந்தொழில் வல்லவர் நல்லவர் தாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

31. திருக்குரங்கணில்முட்டம் : பண் - தக்கராகம்

திறம் : செந்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : ஹரிப்பிரியா ⁕ ஏக தாளம்

திருச்சிற்றம்பலம்

விழுநீர்மழு வாட்படை யண்ணல் விளங்கும்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயும்
கொழுநீர்வயல் சூழ்ந்தகு ரங்கணில் முட்டம்
தொழுநீர்மையர் தீதுறு துன்ப மிலரே. ௧

விடைசேர்கொடி யண்ணல் விளங்குயர் மாடக்
கடைசேர்கரு மென்குளத் தோங்கிய காட்டில்
குடையார்புனல் மல்குகு ரங்கணில் முட்டம்
உடையானெனை யாளுடை யெந்தை பிரானே. ௨

சூலப்படை யான்விடை யான்சுடு நீற்றான்
காலன்றனை ஆருயிர் வவ்விய காலன்
கோலப்பொழில் சூழ்ந்தகு ரங்கணில் முட்டத்
தேலங்கமழ் புன்சடை யெந்தை பிரானே. ௩

வாடாவிரி கொன்றைவ லத்தொரு காதில்
தோடார்குழை யானல பாலன நோக்கிக்
கூடாதன செய்தகு ரங்கணில் முட்டம்
ஆடாவரு வாரவ ரன்புடை யாரே. ௪

இறையார்வளை யாளையொர் பாகத்த டக்கிக்
கறையார்மிடற் றன்கரி கீறிய கையான்
குறையார்மதி சூடிகு ரங்கணில் முட்டத்
துறைவானெமை யாளுடை யொண்சுட ரானே. ௫

Koviloor Digital Library

பலவும்பய னுள்ளன பற்றுமொ ழிந்தோம்
கலவம்மயில் காமுறு பேடையொ டாடிக்
குலவும்பொழில் சூழ்ந்தகு ரங்கணில் முட்டம்
நிலவும்பெரு மானடி நித்த னினைந்தே. ௬

மாடார்மலர்க் கொன்றைவ ளர்சடை வைத்துத்
தோடார்குழை தானொரு காதி லிலங்கக்
கூடார்மதி லெய்துகு ரங்கணில் முட்டத்
தாடார ரவம்மரை யார்த்தமர் வானே. ௭

மையார்நிற மேனிய ரக்கர்தங் கோனை
உய்யாவகை யாலடர்த் தின்னருள் செய்த
கொய்யார்மலர் சூடிகு ரங்கணில் முட்டம்
தையாற்றொழு வார்வினை காண்ட லரிதே. ௮

வெறியார்மலர்த் தாமரை யானொடு மாலும்
அறியாதசைந் தேத்தவ ராரழ லாகும்
குறியால்நிமிர்ந் தான்றன்கு ரங்கணில் முட்டம்
நெறியாற்றொழு வார்வினை நிற்ககி லாவே. ௯

கழுவார்துவ ராடைக லந்துமெய் போர்க்கும்
வழுவாச்சமண் சாக்கியர் வாக்கவை கொள்ளேல்
குழுமின்சடை யண்ணல்கு ரங்கணில் முட்டத்
தெழில்வெண்பிறை யானடி சேர்வ தியல்பே. ௰

கல்லார்மதிற் காழியுள் ஞானசம் பந்தன்
கொல்லார்மழு வேந்திகு ரங்கணில் முட்டம்
சொல்லார்தமிழ் மாலைசெவிக்கினி தாக
வல்லார்க்கெளி தாம்பிற வாவகை வீடே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

32. திருஇடைமருதூர் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம்
பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ✱ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

ஓடேகல னுண்பது மூரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந்
தீடாவுறை கின்ற இடைமரு தீதோ. ௧

Koviloor Digital Library

தடங்கொண்டதொர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதொர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்ற னிடைமரு தீதோ. உ

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலை யேந்தி
அங்கோல்வளை யாளையொர் பாக மமர்ந்து
பொங்காவரு காவிரிக்கோலக்கரைமேல்
எங்கோனுறை கின்ற இடைமரு தீதோ. ௩

அந்தம்மறி யாதஅ ருங்கல முந்திக்
கந்தங்கமழ் காவிரி கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற இடைமரு தீதோ. ச

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசனுறை கின்ற இடைமரு தீதோ. ரு

வன்புற்றிள நாக மசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடு முடனாய்
இன்புற்றிருந் தான்ற னிடைமரு தீதோ. சா

தேக்குந்திமி லும்பல வுஞ்சுமந் துந்திப்
போக்கிப்புறம் பூச லடிப்ப வருமால்
ஆர்க்குந்திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கவிருந் தான்ற னிடைமரு தீதோ. எ

பூவார்குழ லாரகில் கொண்டு புகைப்ப
ஓவாதடி யாரடி யுள்குளிர்ந் தேத்த
ஆவாவரக் கன்றனை யாற்ற லழித்த
ஏவார்சிலை யான்ற னிடைமரு தீதோ. அ

முற்றாததொர் பால்மதி சூடு முதல்வன்
நற்றாமரை யானொடு மால்நயந் தேத்தப்
பொற்றோளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற இடைமரு தீதோ. கூ

சிறுதேரருஞ் சில்சம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
ஏoக

Koviloor Digital Library

வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாள னிடைமரு தீதோ. ௰

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம் பந்தன்
எண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப்பாரே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

33. திருஅன்பிலாலந்துறை : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ✳ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

கணைநீடெரி மாலர வம்வரை வில்லா
இணையாவெயில் மூன்று மெரித்த இறைவர்
பிணைமாமயி லுங்குயில் சேர்மட வன்னம்
அணையும்பொழி லன்பிலா லந்துறை யாரே. க

சடையார்சது ரன்முதி ராமதி சூடி
விடையார்கொடி யொன்றுடை யெந்தை விமலன்
கிடையாரொலி யோத்தர வத்திசை கிள்ளை
அடையார்பொழி லன்பிலா லந்துறை யாரே. உ

ஊரும்மர வஞ்சடை மேலுற வைத்துப்
பாரும்பலி கொண்டடொலி பாடும் பரமர்
நீருண்கய லும்வயல் வாளை வராலோ
டாரும்புன லன்பிலா லந்துறை யாரே. ௩

பிறையும்மர வும்முற வைத்த முடிமேல்
நறையுண்டெழு வன்னியு மன்னு சடையார்
மறையும்பல வேதிய ரோத ஒலிசென்
றறையும்புன லன்பிலா லந்துறை யாரே. ச

நீடும்புனற் கங்கையுந் தங்க முடிமேற்
கூடும்மலை யாளொரு பாக மமர்ந்தார்
மாடும்முழ வம்மதி ரம்மட மாதர்
ஆடும்பதி யன்பிலா லந்துறை யாரே. ரு

Koviloor Digital Library

நீருர்திரு மேனிய ருனமி லார்பால்
ஊருர்சுவை யாகிய வும்பர் பெருமான்
வேருரகி லும்மிகு சந்தன முந்தி
ஆருர்வய லன்பிலா லந்துறை யாரே. சா

செடியார்தலை யிற்பலி கொண்டினி துண்ட
படியார்பர மன்பர மேட்டிதன் சீரைக்
கடியார்மல ரும்புனல் தூவிநின் றேத்தும்
அடியார்தொழு மன்பிலா லந்துறை யாரே. எ

விடத்தார் திகழும்மிட றன்நட மாடி
படத்தாரர வம்விர வுஞ்சடை யாதி
கொடித்தேரிலங் கைக்குலக் கோன்வரை யார
அடர்த்தாரரு ளன்பிலா லந்துறை யாரே. அ

வணங்கிம்மலர் மேலய னுந்நெடு மாலும்
பிணங்கியறி கின்றிலர் மற்றும் பெருமை
சுணங்கும்முகத் தம்முலை யாளொரு பாகம்
அணங்குந்திக ழன்பிலா லந்துறை யாரே. கூ

தறியார்துகில் போர்த்துழல் வார்சமண் கையர்
நெறியாவுண ராநிலை கேடினர் நித்தல்
வெறியார்மலர் கொண்டடி வீழு மவரை
அறிவாரவ ரன்பிலா லந்துறை யாரே. ய

அரவார்புன லன்பிலா லந்துறை தன்மேல்
கரவாதவர் காழியுள் ஞானசம் பந்தன்
பரவார்தமிழ் பத்திசை பாடவல் லார்போய்
விரவாகுவர் வானிடை வீடெளி தாமே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

34. சீகாழி : பண் - தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் : ஹரிப்பிரியா ✱ ஏக தாளம்

திருச்சிற்றம்பலம்

அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமன் னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே. க

Koviloor Digital Library

திரையார் புனல்சூ டியசெல்வன்
வரையார் மகளோ டுமகிழ்ந்தான்
கரையார் புனல்சூழ் தருகாழி
நிரையார் மலர்தூ வுமினின்றே. ௨

இடியார் குரலே றுடையெந்தை
துடியா ரிடையா ளொடுதுன் னுங்
கடியார் பொழில்சூழ் தருகாழி
அடியா ரறியா ரவலம்மே. ௩

ஒளியார்விடமுண் டவொருவன்
அளியார் குழல்மங் கையொடன்பாய்க்
களியார் பொழில்சூழ் தருகாழி
எளிதா மதுகண் டவரின்பே. ௪

பனியார் மலரார் தருபாதன்
முனிதா னுமையோ டுமுயங்கிக்
கனியார் பொழில்சூழ் தருகாழி
இனிதா மதுகண் டவரீடே. ௫

கொலையார் தருகூற் றமுதைத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதேத் தியகாழி
தலையாற் றொழுவார் தலையாரே. ௬

திருவார் சிலையா லெயிலெய்து
உருவா ருமையோ டடனுறன்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே. ௭

அரக்கன் வலியொல் கவடர்த்து
வரைக்கும் மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுநினைந்தே. ௮

இருவர்க் கெரியா கிநிமிர்ந்தான்
உருவிற் பெரியா ளொடுசேருங்
கருநற் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் வினைமாய்ந்தே. ௯

சமண்சாக் கியர்தா மலர் தூற்ற
அமைந்தா னுமையோ டடனன்பாய்க்

ஏ௰?

Koviloor Digital Library

கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல் தொண்டே. ௰

நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநினைந் தவர்பாடல்
வலரா னவர்வா னடைவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

35. திருவீழிமிழலை : பண் - தக்கராகம்

திறம் : செந்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : ஹரிப்பிரியா ✷ ஏக தாளம்

திருச்சிற்றம்பலம்

அரையார் விரிகோ வண ஆடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையா லுணர்வா ருயர்வாரே. ௧

புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் லொருகங் கைகரந்தான்
வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் லவர்நெஞ் சமுநெஞ்சே. ௨

அழவல் லவரா டியும்பாடி
எழவல் லவரெந் தையடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர்தொண்டே. ௩

உரவம் புரிபுன் சடைதன்மேல்
அரவம் மரையார்த் தவழகன்
விரவும் பொழில்வீ ழிம்மிழலை
பரவும் மடியா ரடியாரே. ௪

கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண் டறைகொன்றை
விரிதார் பொழில்வீ ழிம்மிழலை
உரிதா நினைவா ருயர்வாரே. ௫

Koviloor Digital Library

சடையார் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமே லதொர்பைங்கண்
விடையா னுறைவீ ழிம்மிழலை
அடைவா ரடியா ரவர்தாமே. சா

செறியார் கழலுஞ் சிலம்பார்க்க
நெறியார் குழலா ளொடுநின்றுன்
வெறியார் பொழில்வீ ழிம்மிழலை
அறிவா ரவலம் மறியாரே. எ

உளையா வலியொல் கவரக்கன்
வளையா விரலூன் றியமைந்தன்
விளையார் வயல்வீ ழிம்மிழலை
அளையா வருவா ரடியாரே. அ

மருள்செய் திருவர் மயலாக
அருள்செய் தவனு ரழலாகி
வெருள்செய்தவன்வீ ழிம்மிழலை
தெருள்செய் தவர்தீ வினைதேய்வே. கூ

துளங்குந் நெறியா ரவர்தொன்மை
வளங்கொள் என்மின்புல் லமண்தேரை
விளங்கும் பொழில்வீ ழிம்மிழலை
உளங்கொள் பவர்தம் வினையோய்வே. ம

நளிர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
குளிரார் சடையா னடிகூற
மிளிரார் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க் கிலைகேடே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

36. திருவையாறு : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்

கனரகம் : திரியம்பகப்பிரியா ✳ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. க

Koviloor Digital Library

மதியொன் றியகொன் றைவடத்தன்
மதியொன் றவுதைத் தவர்வாழ்வும்
மதியின் றெடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. ௨

கொக்கின் னிறகின் றெடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதையாறே. ௩

சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்காதல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ருமையாறே. ௪

உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமந் தணையாறே. ௫

தலையின் தொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்
நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே. ௬

வரமொன் றியமா மலரோன்றன்
சிரமொன் றையறுத் தவர்சேர்வாம்
வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசே ருமையாறே. ௭

வரையொன் றதெடுத் தவரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் றெடுசே ருமையாறே. ௮

சங்கக் கயனும் மறியாமைப்
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. ௯

துவரா டையர்தோ லுடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே

Koviloor Digital Library

தவரா சர்கள்தா மரையானோ
டவர்தா மணையந் தணையாறே. ௰

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

37. திருப்பனையூர் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ✳ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

அரவச் சடைமேல் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கள்நாளும்
பரவிப் பொலியும் பனையூரே. ௧

எண்ணொன் றிநினைந் தவர்தம்பால்
எண்ணின் றுமகிழ்ந் தவனூராம்
கண்ணின் றெழுசோ லையில்வண்டு
பண்ணின் றொலிசெய் பனையூரே. ௨

அலரும் மெறிசெஞ் சடைதன்மேல்
மலரும் பிறையொன் றுடையானூர்
சிலரென் றுமிருந் தடிபேணப்
பலரும் பரவும் பனையூரே. ௩

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 4646.b

இடியார் கடல்நெஞ் சமுதுண்டு
பொடியா டியமே னியினானூர்
அடியார் தொழமன் னவரேத்தப்
படியார் பணியும் பனையூரே. ௪

அறையார் கழல்மே லரவாட
இறையார் பலிதேர்ந் தவனூராம்
பொறையார் மிகுசீர் விழமல்கப்
பறையா ரொலிசெய் பனையூரே. ௫

Koviloor Digital Library

அணியார் தொழவல் லவரேத்த
மணியார் மிடறென் றுடையானூர்
தணியார் மலர்கொண் டிருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே. ௬

அடையா தவர்மூ வெயில்சீறும்
விடையான் விறலார் கரியின்தோல்
உடையா னவனெண் பலபூதப்
படையா னவனூர் பனையூரே. ௭

இலகும் முடிபத் துடையானை
அலல்கண் டருள்செய் தவெம்மண்ணல்
உலகில் லுயிர்நீர் நிலமற்றும்
பலகண் டவனூர் பனையூரே. ௮

வரமுன் னிமகிழ்ந் தெழுவீர்கள்
சிரமுன் கடிதா ழுவணங்கும்
பிரமன் னெடுமா லறியாத
பரமன் னுறையும் பனையூரே. ௯

அழிவல் லமண ரொடுதேரர்
மொழிவல் லனசொல் லியபோதும்
இழிவில் லதொர்செம் மையினானூர்
பழியில் லவர்சேர் பனையூரே. ௰

பாரார் விடையான் பனையூர்மேல்
சீரார் தமிழ்ஞா னசம்பந்தன்
ஆரா தசொன்மா லைகள்பத்தும்
ஊரூர் நினைவா ருயர்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

38. திருமயிலாடுதுறை : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் : திரியம்பகப்பிரியா ✱ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

கரவின் றிநன்மா மலர்கொண்டே
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே. ௧

Koviloor Digital Library

உரவெங் கரியின் னுரிபோர்த்த
பரமன் னுறையும் பதியென்பர்
குரவஞ் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே. உ

ஊனத் திருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனைத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. ௩

அஞ்சொண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையே
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
துஞ்சும் பிணியா யினதானே. ச

தணியார் மதிசெஞ் சடையான்றென்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியா யினதீர்த் தருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே. ரு

தொண்ட ரிசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. சா

அணங்கோ டொருபா கமமர்ந்து
இணங்கி யருள்செய் தவனூராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலா டுதுறையே. எ

சிரங்கை யினிலேந் தியிரந்த
பரங்கொள் பரமேட் டிவரையால்
அரங்கவ் வரக்கன் வலிசெற்ற
வரங்கொள் மயிலா டுதுறையே. அ

ஞாலத் தைநுகர்ந் தவன்தானும்
கோலத் தயனும் மறியாத
சீலத் தவனூர் சிலர்கூடி
மாலைத் தீர்மயிலா டுதுறையே. கூ

நின்றுண் சமணும் நெடுந்தேரர்
ஒன்றும் மறியா மையுயர்ந்த

Koviloor Digital Library

வென்றி யருளா னவனூராம்
மன்றன் மயிலா டுதுறையே. ம

நயர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வா மிவையுற் றுணர்வார்க்கே. மக

திருச்சிற்றம்பலம்

இதுவே மாயூரம். (மாயவரம்)

39.திருவேட்களம் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்

கனரகம் : திரியம்பகப்பிரியா ✷ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

அந்தமு மாதியு மாகிய வண்ண லாரழலங்கை யமர்ந்திலங்க
மந்தமுழவ மியம்ப மலைமகள் காண நின் ருடிச்
சந்த மிலங்கு நகுதலை கங்கை தண்மதி யம்மயலேத தும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும் வேட்களநன் னகராரே. க

சடைதனைத் தாழ்தலு மேறமுடித்துச் சங்கவெண்தோடு சரிந்திலங்கப்
புடைதனிற் பாரிடஞ்சூழப் போதருமா றிவர் போல்வார்
உடைதனில்நால்விரற் கோவணவாடை யுண்பது மூரிடு பிச்சைவெள்ளை
விடைதனை யூர்திநயந்தார் வேட்கள நன்னகராரே. உ

பூதமும்பல்கண மும்புடைசூழப் பூமியும்விண்ணு முடன்பொருந்தச்
சீதமும்வெம்மையு மாகிச் சீரொடுநின்ற வெஞ் செல்வர்
ஓதமுங்கானு லுஞ் சூழ்தருவேலை உள்ளங்கலந்திசை யாலெழுந்த
வேதமும் வேள்வியு மோவா வேட்கள நன்னகராரே. ௩

அரைபுல்குமைந்தலை யாடலரவம் அமையவெண்கோவணத் தோடசைத்து
வரைபுல்குமார்பி லொராமை வாங்கிய ணிந்தவர்தாந்
திரைபுல்குதெண்கடல் தண்கழியோதந் தேனலங்கானலில் வண்டுபண்-செய்ய
விரைபுல்கு பைம்பொழில்சூழ்ந்த வேட்கள நன்னகராரே. ச

பண்ணுறுவண்டறை கொன்றையலங்கல் பால்புரைநீறு வெண்நூல்கிடந்த
பெண்ணுறு மார்பினர்பேணர் மும்மதி லெய்த பெருமான்
கண்ணுறுநெற்றி கலந்த வெண்திங்கட் கண்ணியர்விண்ணவர் கைதொழுதேத்தும்
வெண்ணிறமால் விடை யண்ணல் வேட்கள நன்னகராரே. ரு

Koviloor Digital Library

கறிவளர்குன்ற மெடுத்தவன்காதற் கண்கவரைங்கணை யோனுடலம்
பொறிவள ராரழலுண்ணப் பொங்கிய பூத புராணர்
மறிவளராங்கையர் மங்கையொர்பங்கர் மைஞ்ஞிற மானுரி தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந் தாரார் வேட்கள நன்னகராரே. ௬

மண்பொடிக்கொண்டெரித் தோர்சுடலை மாமலைவேந்தன் மகள்மகிழ
நுண்பொடிச் சேரநின்றுடி நொய்யன செய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலை யோடுகையேந்திக் காலனைக் காலாற் கடிந்துகந்தார்
வெண்பொடிச் சேர்திருமார்பர் வேட்கள நன்னகராரே. ௭

ஆழ்தருமால்கடல் நஞ்சினையுண்டா ரமுதமம ரர்க்கருளிச்
சூழ்தருபாம் பரையார்த்துச் சூலமோடொண் மழுவேந்தித்
தாழ்தருபுன்சடை யொன்றினை வாங்கித் தண்மதியம்மய லேததும்ப
வீழ்தருகங்கைகரந்தார் வேட்கள நன்னகராரே. ௮

திருவொளிகாணிய பேதுறுகின்ற திசைமுகனுந் திசைமேல ளந்த
கருவரையேந்திய மாலுங் கைதொழ நின்ற துமல்லால்
அருவரையொல்க வெடுத்தவரக்க னுடெழிற்றோள்க ளாழத்தழுந்த
வெருவுறவூன்றிய பெம்மான் வேட்கள நன்னகராரே. ௯

அத்தமண்தோய்துவ ராரமண்குண்டர் யாதுமல்லாவுரை யேயுரைத்துப்.
பொய்த்தவம் பேசுவதல்லாற் புறனுரையாதொன்றுங் கொள்ளேன்.
முத்தனவெண்முறு வல்லுமையஞ்ச மூரிவல்லானையி னீருரிபோர்த்த.
வித்தகர் வேதமுதல்வர் வேட்கள நன்னகராரே. ௰

விண்ணியன்மாடம் விளங்கொளிவீதி வெண்கொடியெங்கும் விரிந்திலங்க.
நண்ணிய சீர்வளர்காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்.
பெண்ணினல்லாளொரு பாகமமர்ந்து பேணிய வேட்கள மேல்மொழிந்த.
பண்ணியல்பாடல் வல்லார்கள் பழியொடு பாவமிலாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

40. திருவாழ்கொளிபுத்தூர் : பண் - தக்கராகம்

திறம் : ஆற்றுத்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் : வருணப்பிரியா ✳ மட்டிய தாளம்

திருச்சிற்றம்பலம்

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப் பூதகணம் புடைசூழக்.
கொடியுடையூர்திரிந் தையங் கொண்டுபலபல கூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம். ௧

Koviloor Digital Library

அரைகெழுகோவண வாடையின்மேலோ ராடரவம் மசைத் தையம்.
புரைகெழுவெண்டலை யேந்திப் போர்விடை யேறிப்புகழ
வரைகெழுமங்கைய தாகமொர்பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்.
விரைகமழ் மாமலர் தூவி விரிசடை யானடி சேர்வோம். உ

பூணெடுநாக மசைத் தனலாடிப் புன் தலையங்கையி லேந்தி புத்தூர்த்
ஊணிடு பிச்சையூ ரைய முண்டியென்று பலகூறி
வாணெடுங்கண்ணுமை மங்கையொர்பாக மாயவன் வாழ்கொளி (புத்தூர்த்)
தாணெடுமாமல ரிட்டுத் தலைவன தாள்நிழல் சார்வோம். ௩

தாரிடுகொன்றையொர் வெண்மதிகங்கை தாழ்சடை மேலவை சூடி
ஊரிடு பிச்சைகொள் செல்வ முண்டியென்று பலகூறி
வாரிடுமென்முலை மாதொருபாக மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
காரிடுமாமலர் தூவிக் கறைமிடற்றானடி காண்போம். ௪

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக் காதிலோர் வெண்குழை யோடு
புனமலர்மாமலை புனைந்தூர் புகுதியென்றே பலகூறி
வனமுலைமாலை மங்கையொர்பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்
இனமலை ரேய்ந்தன தூவி யெம்பெருமானடி சேர்வோம். ரு

அளைவளர்நாக மசைத்தனலாடி யலர்மிசையந்தண னுச்சிக்
கனை தலையிற்பலி கொள்ளுங் கருத்தனே கள்வனேயென்னு
வளையொலிமுன்கை மடந்தையொர்பாக மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தளையவிழ் மாமலர்தூவித் தலைவன தாளிணை சார்வோம். சா

அடர்செவிவேழத்தி னீருரிபோர்த்து வழிதலையங்கையி லேந்தி
உடலிடுபிச்சையோ டைய முண்டியென்று பலகூறி
மடனெடுமாமலர்க் கண்ணியொர்பாக மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தடமலராயின தூவித் தலைவன தாள்நிழல் சார்வோம். எ

உயர்வரையொல்க வெடுத்தவரக்க னெளிர்கடகக்கை யடர்த்து
அயலிடுபிச்சையோ டைய மார்தலையென்றடி போற்றி
வயல்விரிநீல நெடுங்கணிபாக மாயவன்வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரிமாமலர் தூவித் தாழ்சடையானடி சார்வோம். அ

கரியவன்நான்முகன் கைதொழுதேத்தக் காணலுஞ்சாரலு மாகா
எரியுருவாகியூ ரைய மிடுபலியுண்ணியென் றேத்தி
வரியரவல்குல் மடந்தையொர்பாக மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரிமலராயின தூவி விகிர்தனசேவடி சேர்வோம். கூ

குண்டமணர்துவர்க் கூறைகள்மெய்யிற் கொள்கையினார் புறங்கூற
வெண்டலையிற்பலி கொண்டல் விரும்பினையென்று விளம்பி

Koviloor Digital Library

வண்டமர்பூங்குழல் மங்கையொர்பாக மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர்தூவத் தோன்றிநின்றருனடி சேர்வோம். ய

கல்லுயர்மாக்கட னின்றுமுழங்குங் கரைபொரு காழியமூதூர்
நல்லுயர்நான்மறை நாவின் நற்றமிழ் ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும் வல்லவன்வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லியபாடல்கள் வல்லார் துயர்கெடுதலெளி தாமே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

41. திருப்பாம்புரம் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ⁕ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர் திரிபுரமெரிசெய்த செல்வர்
வாரணிவனமுலை மங்கையோர்பங்கர் மான்மறியேந்திய மைந்தர்
காரணிமணிதிகழ் மிடறுடையண்ணல் கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தரு நான்மறையாளர் பாம்புர நன்னகராரே. க

கொக்கிறகோடு கூவிளமத்தங் கொன்றையொ டெருக்கணிசடையர்
அக்கினொடாமை பூண்டழகாக அனலதுஆடுமெம் மடிகள்
மிக்கநல்வேத வேள்வியுளெங்கும் விண்ணவர் விரைமலர்தூவப்
பக்கம்பல்பூதம் பாடிடவருவார் பாம்புர நன்னகராரே. உ

துன்னலினுடை யுடுத்ததன்மேலோர் சூறைநல்லரவது சுற்றிப்
பின்னுவார்சடைகள் தாழவிட்டாடிப் பித்தராய்த் திரியுமெம் பெருமான்
மன்னுமாமலர்கள் தூவிடநாளும் மாமலையாட்டியுந் தாமும்
பன்னுநான்மறைகள் பாடிடவருவார் பாம்புர நன்னகராரே. ங

துஞ்சுநாள்துறந்து தோற்றமுமில்லாச் சுடர்விடுசோதியெம் பெருமான்
நஞ்சுசேர்கண்ட முடையவென்நாதர் நள்ளிருள்நடஞ்செயுந் நம்பர்
மஞ்சுதோய்சோலை மாமயிலாட மாடமாளிகைதன்மே லேறிப்
பஞ்சுசேர்மெல்லடிப் பாவையர் பயிலும் நன்னகராரே. ச

நதியதனயலே நகுதலைமாலை நாண்மதிசடைமிசை யணிந்து
கதியதுவாகக் காளிமுன்காணக் கானிடைநடஞ்செய்த கருத்தர்
விதியதுவழுவா வேதியர்வேள்வி செய்தவரோத்தொலி யோவாப்
பதியதுவாகப் பாவையுந்தாமும் பாம்புர நன்னகராரே. ரு

Koviloor Digital Library

ஓதிநன்குணவார்க் குணர்வுடையொருவ ரொளிதிகழுருவஞ்சே ரொருவர்
மாதிஊனயிடமா வைத்தஎம்வள்ளல் மான்மறியேந்திய மைந்தர்
ஆதிநீயருளென் றமரர்கள்பணிய அலைகடல்கடையவன் றெழுந்த
பாதிவெண் பிறைசடை வைத்தஎம்பரமர் பாம்புர நன்னகராரே. சா

மாலினுக்கன்று சக்கரமீந்து மலரவற்கொருமுக மொழிந்து
ஆலின்கீழறமோர் நால்வருக்கருளி யனலதுஆடுமெம் மடிகள்
காலனைக்காய்ந்து தங்கழலடியாற் காமனைப்பொடிபட நோக்கிப்
பாலனுக்கருள்கள் செய்தவெம்மடிகள் பாம்புர நன்னகராரே. எ

விடைத்தவல்லரக்கன் வெற்பினையெடுக்க மெல்லிய திருவிர லூன்றி
அடர்த்தவன்றனக்கன் றருள்செய்தவடிக ளனலதுஆடுமெம் மண்ணல்
மடக்கொடியவர்கள் வருபுனலாட வந்திழியரிசிலின் கரைமேல்
படப்பையிற்கொணர்ந்து பருமணிசிதறும் பாம்புர நன்னகராரே. அ

கடிபடுகமலத் தயனெடுமாலுங் காதலோடடிமுடி தேடச்
செடிபடுவினைகள் தீர்த்தருள்செய்யுந் தீவணரெம்முடைச் செல்வர்
முடியுடைமார் முனிகணத்தவர்கள் முறைமுறையடிபணிந் தேத்தப்
படியதுவாகப் பாவையுந்தாமும் பாம்புர நன்னகராரே. கூ

குண்டர்சாக்கியருங் குணமிலாதாருங் குற்றுவிட்டுடுக்கையர் தாமுங்
கண்டவாறுரைத்துக் கால்நிமிர்ந்துண்ணுங் கையர்தாமுள்ளவா றறியார்
வண்டுசேர்குழலி மலைமகள் நடுங்க வாரணமுரிசெய்து போர்த்தார்
பண்டுநாஞ்செய்த பாவங்கள்தீர்ப்பார் பாம்புர நன்னகராரே. ம

பார்மலிந்தோங்கிப் பருமதில்சூழ்ந்த பாம்புர நன்னகராரைக்
கார்மலிந்தழகார் கழனிசூழ்மாடக் கழுமலமுதுபதிக் கவுணி
நார்மலிந்தோங்கு நான்மறைஞான சம்பந்தன்செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்தழகார் செல்வமதோங்கிச் சிவனடிநண்ணுவர்தாமே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

42. திருப்பேணுபெருந்துறை : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ⁂ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

பைம்மாநாகம் பன்மலர்கொன்றை பன்றிவெண்கொம்பொன்று பூண்டு.
செம்மாந்தையம் பெய்கென் றுசொல்லிச் செய்தொழில்பேணியோர் செல்வர்.

Koviloor Digital Library

அம்மானேக்கிய யந்தளிர்மேனி யரிவையோர்பாக மமர்ந்த.
பெம்மானல்கிய தொல்புகழாளர் பேணு பெருந்துறையாரே. க

மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய்நின்ற மூர்த்தி
பாவங்கள்தீர்தர நல்வினைநல்கிப் பல்கணம்நின்று பணியச்
சாவமதாகிய மால்வரைகொண்டு தண்மதில்மூன்று மெரித்த
தேவர்கள்தேவ ரெம்பெருமானூர் தீதில் பெருந்துறையாரே. உ

செய்பூங்கொன்றை கூவிளமாலை சென்னியுட்சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங்கோதை மாதுமைபாகங் கூடியோர்பீடுடை வேடர்
கைபோனுன்ற கனிகுலைவாழை காய்குலையிற்கமு கீனப்
பெய்பூம்பாளை பாய்ந்திழிதேறல் பில்கு பெருந்துறையாரே. ௩

நிலனெடுவானு நீரோடுதீயும் வாயுவுமாகியோ ரைந்து
புலனெடுவென்று பொய்மைகள்தீர்ந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி
நலனெடுதீங்குந் தானலதின்றி நன்கெழுசிந்தைய ராகி
மலனெடுமாசு மில்லவர்வாழு மல்கு பெருந்துறையாரே. ச

பணிவாயுள்ள நன்கெழுநாவின் பத்தர்கள்பத்திமை செய்யத்
துணியார்தங்க ளுள்ளமிலாத சுமடர்கள்சோதிப் பரியார்
அணியார்நீல மாகியகண்ட ரரிசிலுரிஞ்சு கரைமேல்
மணிவாய்நீலம் வாய்கமழ்தேறல் மல்கு பெருந்துறையாரே. ரு

எண்ணூர்தங்கள் மும்மதில்வேவ ஏவலங்காட்டிய எந்தை
விண்ணேர்சாரத் தன்னருள்செய்த வித்தகர்வேத முதல்வர்
பண்ணூர்பாட லாடலருத பசுபதியீசனேர் பாகம்
பெண்ணுணய வார்சடையண்ணல் பேணுபெருந்துறையாரே. சா

விழையாருள்ளம் நன்கொழுநாவில் வினைகெடவேதமா றங்கம்
பிழையாவண்ணம் பண்ணியவாற்ருற் பெரியோரேத்தும் பெருமான்
தழையார்மாவின் தாழ்கனியுந்தித் தண்ணரிசில்புடை சூழ்ந்து
குழையார்சோலை மென்னடையன்னங் கூடுபெருந்துறையாரே. எ

பொன்னங்கானல் வெண்திரைசூழ்ந்த பொருகடல்வேலியிலங்கை,
மன்னனெல்க மால்வரையூன்றி மாமுரணுகமுந்தோளும்,
முன்னவைவாட்டிப் பின்னருள்செய்த மூவிலைவேலுடை மூர்த்தி,
அன்னங்கன்னிப்பேடையொடாடியணவு பெருந்துறையாரே. அ

புள்வாய்போழ்ந்து மாநிலங்கீண்ட பொருகடல்வண்ணனும் பூவின்,
உள்வாயல்லி மேலுறைவானு முணர்வரியானுமை கேள்வன்,
முள்வாய்தாளின் தாமரைமொட்டின் முகமலரக்கயல் பாயக்,
கள்வாய்நீலங் கண்மலரேய்க்குங் காமர் பெருந்துறையாரே. கூ

Koviloor Digital Library

குண்டுந்தேருங் கூறைகளைந்துங் கூப்பிலர்செப்பில ராகி
மிண்டுமிண்டர் மிண்டவைகண்டு மிண்டுசெயாது விரும்பும்
தண்டும்பாம்பும் வெண்டலைசூலந் தாங்கியதேவர்தலைவர்
வண்டுந்தேனும் வாழ்பொழிற்சோலை மல்கு பெருந்துறையாரே. ௰

கடையார்மாட நன்கெழுவீதிக் கழுமலவூரன் கலந்து
நடையாரின்சொல் ஞானசம்பந்தன் நல்லபெருந்துறை மேய
படையார்சூலம் வல்லவன்பாதம் பரவியபத்திவை வல்லார்
உடையாராகி யுள்ளமுமொன்றி யுலகினில்மன்னுவர் தாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

43. திருக்கற்குடி : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : சத்தமாதர்

கனரகம் : திரியம்பகப்பிரியா ✳ ரூபக தாளம்

திருச்சிற்றம்பலம்

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. க

அங்கமொ ராறுடை வேள்வி யான அருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல் பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர் தங்கையில் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங் கற்குடி மாமலை யாரே. உ

நீரக லந்தரு சென்னி நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த தண்மதி சூடிய சைவர்
போரக லந்தரு வேடர் புனத்திடை யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங் கற்குடி மாமலை யாரே. ௩

ஒருங்களி நீயிறை வாவென் றும்பர்க ளோல மிடக்கண்
டிருங்கள மார விடத்தை யின்னமு துண்ணிய ஈசர்
மருங்களி யார்பிடி வாயில் வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்குங் கற்குடி மாமலை யாரே. ௪

Koviloor Digital Library

போர்மலி திண்சிலை கொண்டு பூதக ணம்புடை சூழப்
பார்மலி வேடுரு வாகிப் பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல் கிளைத்த இன்னொளி மாமணி யெங்கும்
கார்மலி வேடர் குவிக்குங் கற்குடி மாமலை யாரே. ௫

உலந்தவ ரென்ப தணிந்தே வூரிடு பிச்சைய ராகி
விலங்கல்வில் வெங்கன லாலே மூவெயில் வேவ முனிந்தார்
நலந்தரு சிந்தைய ராகி நாமலி மாலையி னாலே
கலந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. ௬

மானிட மார்தரு கையர் மாமழு வாரும் வலத்தார்
ஊனிடை யார்தலை யோட்டி லுண்கல னாக வுகந்தார்
தேனிடை யார்தரு சந்தின் திண்சிறை யால்தினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங் கற்குடி மாமலை யாரே. ௭

வாளமர் வீர நினைந்த இராவணன் மாமலை யின்கீழ்த்
தோளமர் வன்தலை குன்றத் தொல்விர லூன்று துணைவர்
தாளமர் வேய்தலை பற்றித் தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளம தார்முகில் கீறுங் கற்குடி மாமலை யாரே. ௮

தண்டமர் தாமரை யானுந் தாவியிம் மண்ணை யளந்து
கொண்டவ னும்மறி வொண்ணாக் கொள்கையர் வெள்விடையூர்வர்
வண்டிசை யாயின பாட நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயி லாடுங் கற்குடி மாமலை யாரே. ௯

மூத்துவ ராடையி னாரும் மூசு கடுப்பொடி யாரும்
நாத்துவர் பொய்ம்மொழி யார்கள் நயமில ராமதி வைத்தார்
ஏத்துயர் பத்தர்கள் சித்த ரிறைஞ்ச அவரிட ரெல்லாங்
காத்தவர் காமரு சோலைக் கற்குடி மாமலை யாரே. ௰

காமரு வார்பொழில் சூழுங் கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாடவல் லார்கள்
பூமலி வானவ ரோடும் பொன்னுல கிற்பொலி வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

44. திருப்பாச்சிலாச்சிராமம் : பண் - தக்கராகம்

திறம் : அயிர்ப்புத்திறம் பண்தார் : சத்தமாதர் வயிரவர்
கனரகம் : பவப்பிரிய ⁕ அட தாளம்

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செயதுபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே. க

கலைபுனைமானுரி தோலுடையாடை கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட இடர்செய்வதோஇவரீடே. உ

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி லாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச் சிதைசெய்வதோ இவர்சீரே. ௩

கனமலர்க்கொன்றை அலங்கலிலங்கக் கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய புநிதர்கொ லாமிவரென்ன,
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி லாச்சிரமத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே. ச

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை முதிரவோர்வாய் மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி லாச்சிரமத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச் சதுர்செய்வதோ இவர்சார்வே. ரு

நீறுமெய்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண் ணுலுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி யைவிரற் கோவணவாடை
பால்தருமேனியர் பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட இடர்செய்வதே ாஇவரீடே. சா

பொங்கிளநாகமோ ரேகவடத்தோ டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய குழகர்கொலமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச் சதிர்செய்வதோ இவர்சார்வே. எ

Koviloor Digital Library

ஏவலத்தால்விச யற்கருள்செய்து இராவண னையிடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழைவாடச் சிதைசெய்வதோ இவர்சார்வே. அ

மேலதுநான்முக னெய்தியதில்லை கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனு மெய்தியதில்லை யெனவிவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி லாச்சிர மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப் பழிசெய்வதோ இவர்பண்பே. கூ

நாணொடுகூடிய சாயினரேனும் நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையா லுரைகளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி லாச்சிர மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப் புனைசெய்வதோ இவர்பொற்பே. ம

அகமலியன்பொடு தொண்டர்வணங்க ஆச்சிரா மத்துறைகின்ற,
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன,
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்,
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரகிலாவினைதானே. மக

திருச்சிற்றம்பலம்

ஸஸ

45. திருஆலங்காடு : பண் - தக்கராகம்

திறம் : மெய்த்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : ராமப்பிரியா ✵ துருவ தாளம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. க

கேடும்பிறவியு மாக்கினாருங் கேடிலா
வீடுமாநெறி விளம்பினாரெம் விகிர்தனார்
காடுஞ்சுடலையுங் கைக்கொண்டெல்லிக் கணப்பேயோ
டாடும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. உ

கந்தங்கமழ்கொன்றைக் கண்ணிசூடி கனலாடி
வெந்தபொடிநீற்றை விளங்கப்பூசும் விகிர்தனார்

Koviloor Digital Library

கொந்தண்பொழிற்சோலை யரவிற்றோன்றிக் கோடல்பூத்
தந்தண்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௩

பாலமதிசென்னி படரச்சூடிப் பழியோராக்
காலனுயிர்செற்ற காலனாய கருத்தனார்
கோலம்பொழிற்சோலைப் பெடையோடாடி மடமஞ்ஞை
ஆலும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௪

ஈர்க்கும் புனல்சூடி யிளவெண்டிங்கள் முதிரவே
பார்க்குமரவம்பூண் டாடிவேடம் பயின்றாரும்
கார்க்கொள்கொடிமுல்லை குருந்தமேறிக் கருந்தேன்மொய்த்
தார்க்கும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௫

பறையுஞ்சிறுகுழலும் யாழும்பூதம் பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையும் மைந்தனார்
பிறையும்பெரும்புனல்சேர் சடையினாரும் பேடைவண்
டறையும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௬

நுணங்குமறைபாடி யாடிவேடம் பயின்றாரும்
இணங்குமலைமகளோ டிருகூறொன்றா யிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௭

கணையும்வரிசிலையு மெரியுங்கூடிக் கவர்ந்துண்ண
இணையிலெயின்மூன்று மெரித்திட்டாரெம் மிறைவனார்
பிணையுஞ்சிறுமறியுங் கலையுமெல்லாங் கங்குல்சேர்ந்
தணையும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௮

கவிழமலைதளரக் கடகக்கையா லெடுத்தான்தோள்
பவழநுனைவிரலாற் பையவூன்றிப் பரிந்தாரும்
தவழுங்கொடிமுல்லை புறவஞ்சேர நறவம்பூத்
தவிழும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௯

பகலுமிரவுஞ்சேர் பண்பினாரும் நண்போரா
திகலுமிருவர்க்கு மெரியாய்த்தோன்றி நிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடு வல்லார்க்கென்றுந் தீயபோய்
அகலும்பழையனூ ராலங்காட்டெம் மடிகளே. ௰

போழம்பலபேசிப் போதுசாற்றித் திரிவாரும்
வேழம்வருமளவும் வெயிலேதுற்றித் திரிவாருங்
கேழல்வினைபோகக் கேட்பிப்பாருங் கேடிலா
ஆழ்வர்பழையனு ராலங்காட்டெம் மடிகளே. ௰௧

சாந்தங்கமழ்மறுகிற் சண்பைஞானசம்பந்தன்
Koviloor Digital Library
ஆந்தண்பழையனூ ராலங்காட்டெம் மடிகளை
வேந்தனருளாலே விரித்தபாட லிவைவல்லார்
சேர்ந்தஇடமெல்லாந் தீர்த்தமாகச் சேர்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

46. திருஅதிகைவீரட்டானம் : பண் - தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : சத்தமாதர்
கனரகம் : திரியம்பகப்பிரியா ❋ருபக தாளம்

திருச்சிற்றம்பலம்

குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்டதொடையலா னாடும்வீரட் டானத்தே. ௧

அரும்புங் குரும்பையு மலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டுடன்கை யனல்வீசிச்
சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பு மதிகையு ளாடும்வீரட் டானத்தே. ௨

ஆட லழல்நாக மரைக்கிட் டசைத் தாடப்
பாடல் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேல் மதிதோய் அதிகையுள்
வேடம் பலவல்லா னாடும் வீரட் டானத்தே. ௩

எண்ணா ரெயிலெய்தா னிறைவ னனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரம னதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே. ௪

கரிபுன் புறமாய கழிந்தா ரிடுகாட்டில்
திருநின் றொருகையால் திருவா மதிகையுள்
எரியேந் தியபெருமா னெரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே. ௫

துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாய லுமையோ டிசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே. ௬

Koviloor Digital Library

பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி
பூதம் படைசூழப் புலித்தோலுடையாகக்
கீத முமைபாடக் கெடில வடபாக்கம்
வேத முதல்வனின் ருடும்வீரட் டானத்தே. எ

கல்லார் வரையரக்கன் தடந்தோள் கவின்வாட
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் தலைசூடி
வில்லா லெயிலெய்தா னுடும்வீரட் டானத்தே. அ

நெடியான் நான்முகனு நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பனைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் மதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும்வீரட் டானத்தே. கூ

அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடனேந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வா துமையோ டுடனுகி
விரைதோ யலர்தாரா னுடும்வீரட் டானத்தே. ய

ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

47. திருச்சிரபுரம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : அயிர்ப்புத்திறம் பண்தார் : ஆதி சத்தி
கனரகம் : மானதப் பிரியா

திருச்சிற்றம்பலம்

பல்லடைந்த வெண்டலையிற் பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாள் மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொல்மறையோ டங்கங்க லைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ் சிரபுர மேயவனே. க

கொல்லைமுல்லை நகையினுளோர் கூறது வன்றியும்போய்
அல்லல்வாழ்க்கைப் பலிகொண்டுண்ணு மாதர வென்னைகொலாஞ்
சொல்லநீண்ட பெருமையாளர் தொல்கலை கற்றுவல்லார்
செல்லநீண்ட செல்வமல்கு சிரபுர மேயவனே. உ

Koviloor Digital Library

நீரடைந்த சடையின்மேலோர் நிகழ்மதி யன்றியும்போய்
ஊரடைந்த ஏறதேறி யுண்பலி கொள்வதென்னே
காரடைந்த சோலைசூழ்ந்து காமரம் வண்டிசைப்பச்
சீரடைந்த செல்வமோங்கு சிரபுர மேயவனே. ௩

கையடைந்த மானினோடு காரர வன்றியும்போய்
மெய்யடைந்த வேட்கையோடு மெல்லியல் வைத்தலென்னே
கையடைந்த களைகளாகச் செங்கழு நீர்மலர்கள்
செய்யடைந்த வயல்கள்சூழ்ந்த சிரபுர மேயவனே. ௪

புரமெரித்த பெற்றியோடும் போர்மத யானைதன்னைக்
கரமெடுத்து தோலுரித்த காரண மாவதென்னே
மரமுரித்த தோலுடுத்த மாதவர் தேவரோடுஞ்
சிரமெடுத்த கைகள் கூப்புஞ் சிரபுர மேயவனே. ௫

கண்ணுமூன்று முடையதன்றிக் கையினில் வெண்மழுவும்
பண்ணுமூன்று வீணையோடு பாம்புடன் வைத்தலென்னே
எண்ணுமூன்று கனலுமோம்பி யெழுமையும் விழுமியராய்த்
திண்ணமூன்று வேள்வியாளர் சிரபுர மேயவனே. ௬

குறைபடாத வேட்கையோடு கோல்வளையா ளொருபாற்
பொறைபடாத இன்பமோடு புணர்தரு மெய்ம்மையென்னே
இறைபடாத மென்முலையார் மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடலோங்கு சிரபுர மேயவனே. ௭

மலையெடுத்த வாளரக்க னஞ்சவொ ருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார்மேதகு வீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினனே சிரபுர மேயவனே. ௮

மாலினோடு மலரினனும் வந்தவர் காணாது
சாலுமஞ்சப் பண்ணிநீண்ட தத்துவ மேயதென்னே
நாலுவேத மோதலார்கள் நந்துணை யென்றிறைஞ்சச்
சேலுமேயுங் கழனிசூழ்ந்த சிரபுர மேயவனே. ௯

புத்தரோடு சமணர்சொற்கள் புறனுரை யென்றிருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த பான்மைய தென்னைகொலாம்
மத்தயானை யுரியும்போர்த்து மங்கையொ டும்முடனே
சித்தர்வந்து பணியுஞ்செல்வச் சிரபுர மேயவனே. ௰

தெங்குநீண்ட சோலைசூழ்ந்த சிரபுர மேயவனை
அங்கநீண்ட மறைகள்வல்ல அணிகொள்சம் பந்தனுரை
பங்கநீங்கப் பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேற்
சங்கமோடு நீடிவாழ்வர் தன்மையி னலவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

48. திருச்சேய்ஞலூர் : பண் - பழந்தக்கராகம்

திறம் : அயிர்ப்புத்திறம்

பண்தார் : ஆதி சத்தி

கனரகம் : மானதப் பிரியா

திருச்சிற்றம்பலம்

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. க

நீறடைந்த மேனியின்கண் நேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி யரவ மணிந்ததென்னே
சேறடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. உ

ஊனடைந்த வெண்தலையி னோடுப லிதிரிந்து
கானடைந்த பேய்களோடு பூதங்க லந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்தெரி யாடலென்னே
தேனடைந்த சோலைமல்கு சேய்ஞலூர் மேயவனே. ங

வீணடைந்த மும்மதிலும் வில்மலை யாஅரவின்
நாணடைந்த வெஞ்சரத்தால் நல்லெரி யூட்டலென்னே
பாணடைந்த வண்டுபாடும் பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடமல்கு சேய்ஞலூர் மேயவனே. ச

பேயடைந்த காடிடமாப் பேணுவ தன்றியும்போய்
வேயடைந்த தோளியஞ்ச வேழ முரித்ததென்னே
வாயடைந்த நான்மறையா றங்கமோ டைவேள்வித்
தீயடைந்த செங்கையாளர் சேய்ஞலூர் மேயவனே. ரு

காடடைந்த ஏனமொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணுற்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே. சா

பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவ குத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே. எ

மாவடைந்த தேரரக்கன் வலிதொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு நயந்தருள் செய்ததென்னே

Koviloor Digital Library

பூவடைந்த நான்முகன்போற் பூசுரர் போற்றிசெய்யும்
சேவடைந்த வூர்தியானே சேய்ஞலூர் மேயவனே. அ

காரடைந்த வண்ணனோடு கனகம னையானும்
பாரிடந்தும் விண்பறந்தும் பாதமு டிகாணார்
சீரடைந்து வந்து போற்றச் சென்றருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகிற் சேய்ஞலூர் மேயவனே. கூ

மாசடைந்த மேனியாரும் மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த வூணினாரும் நேசமி லாததென்னே
வீசடைந்த தோகையாட விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ் சேய்ஞலூர் மேயவனே. ய

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ் தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்த னின்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

49. திருநள்ளாறு : பண் - பழந்தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதி சத்தி
கனரகம் : நடனப் பிரியா

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும்பொன் னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல்பர மேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவணஆ டையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயதுநள் ளாறே. க

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர்பா லுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயதுநள் ளாறே. உ

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடியணி யிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர்பணிந் தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ்சூலமும்பற் றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயதுநள் ளாறே. ௩

Koviloor Digital Library

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநிழற் சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயதுநள் ளாறே. ச

ஏறுதாங்கி யூர்திபேணி யோர்கொளிள மதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோ ராடரவஞ் சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பினிரை கொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயதுநள் ளாறே. ரு

திங்களுச்சி மேல்விளக்குந் தேவனிமை யோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவ னென்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடியார் கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயதுநள் ளாறே. சா

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண்முழ வதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவதன்றி யும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தருகண் டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயதுநள் ளாறே. எ

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத்தீ யம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவதன் றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ் சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயதுநள் ளாறே. அ

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணனீழ லாரழல்போ லுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்கவலித் திருவார்
நண்ணலாகா நம்பெருமான் மேயதுநள் ளாறே. சூ

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர்குண மிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறிசெல் லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிளும் முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயதுநள் ளாறே. ய

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கியதாழ் சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந் தன்னல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலுறை வாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

50. திருவலிவலம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம் பண்தார் : ஆதி சந்தி

கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனும நாவில்நவின் றேத்தே
வல்லவாறே வந்துநல்காய் வலிவல மேயவனே. க

இயங்குகின்ற இரவிதிங்கள் மற்றுநற்றே வரெல்லாம்
பயங்களாலே பற்றிநின்பாற் சித்தந்தெளி கின்றிலர்
தயங்குசோதீ சாமவேதா காமனைக்காய்ந் தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய் வலிவல மேயவனே. உ

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே யுன்றனுமங் காதலிக்கின் றதுள்ளம்
வண்டுகிண்டிப் பாடுஞ்சோலை வலிவல மேயவனே. ங

மெய்யராகிப் பொய்யைநீக்கி வேதனையைத் துறந்து
செய்யராளுர் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தே
வைநவனுயே னுன்றனும நாளுந்நவிற் றுகின்றேன்
வையம்முன்னே வந்துநல்காய் வலிவல மேயவனே. ச

துஞ்சும்போதுந் துற்றும்போதுஞ் சொல்லுவனுன் திறமே
தஞ்சமில்லாத் தேவர்வந்துன் தாளிணைகீழ்ப் பணிய
நஞ்சையுண்டாய்க் கென்செய்கேனே நாளுநினைந் தடியேன்
வஞ்சமுண்டென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே. ரு

புரிசடையாய் புண்ணியனே நண்ணலார்மூ வெயிலும்
எரியவெய்தா யெம்பெருமா னென்றிமையோர் பரவும்
கரியுரியாய் காலகாலா நீலமணி மிடற்று
வரியரவா வந்துநல்காய் வலிவல மேயவனே. சா

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பா லன்புசெய்வா னுதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு ளைவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே. எ

Koviloor Digital Library

நீரொடுங்குஞ் செஞ்சடையாய் நின்னுடைய பொன்மலையை
வேரொடும்பீழ்ந் தேந்தலுற்ற வேந்தனிரா வணனைத்
தேரோடும்போய் வீழ்ந்தலறத் திருவிரலா லடர்த்த
வாரொடுங்குங் கொங்கைபங்கா வலிவல மேயவனே. அ

ஆதியாய நான்முகனு மாலுமறி வரிய
சோதியானே நீதியில்லேன் சொல்லுவனின் திறமே
ஓதிநாளு முன்னையேத்து மென்னைவினை யவலம்
வாதியாமே வந்துநல்காய் வலிவல மேயவனே. கூ

பொதியிலானே பூவணத்தாய் பொன்திகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர்சித்தம் பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியரென் றிவர்கள்
மதியிலாதா ரென்செய்வாரோ வலிவல மேயவனே. ய

வன்னிகொன்றை மத்தஞ்சூடும் வலிவலமே யவனைப்
பொன்னிநாடன் புகலிவேந்தன் ஞானசம்பந் தன்சொன்ன
பன்னுபாடல் பத்தும் வல்லார் மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னுசோதி யீசனோடே மன்னியிருப் பாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

51. திருச்சோபுரம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : அயிர்ப்புத்திறம் பண்தார் : ஆதி சத்தி
கனரகம் : மானதப் பிரியா

திருச்சிற்றம்பலம்

வெங்கணானை யீருரிவை போர்த்துவிளங் குமொழி
மங்கைபாகம் வைத்துகந்த மாண்பதுஎன் னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக் கடிகமழுங் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுரமே யவனே. க

விடையமர்ந்து வெண்மழுவொன் றேந்திவிரிந் திலங்கு
சடையொடுங்கத் தண்புனலைத் தாங்கியதென் னைகொலாம்
கடையுயர்ந்த மும்மதிலுங் காய்ந்தனலுள் ளழுந்தத்
தொடைநெகிழ்ந்த வெஞ்சிலையாய் சோபுரமே யவனே. உ

தீயராய வல்லரக்கர் செந்தழலுள் ளழுந்தச்
சாயவெய்து வானவரைத் தாங்கியதென் னைகொலாம்

Koviloor Digital Library

பாயும்வெள்ளை ஏற்றையேறிப் பாய்புலித்தோ லுடுத்த
தூயவெள்ளை நீற்றினானே சோபுரமே யவனே. ௩

பல்லிலோடு கையிலேந்திப் பல்கடையும் பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கை மேலதான ஆதரவென் னைகொலாம்
வில்லைவென்ற நுண்புருவ வெல்நெடுங்கண் ணியோடுந்
தொல்லையூழி யாகிநின்றாய் சோபுரமே யவனே. ௪

நாற்றமிக்க கொன்றைதுன்று செஞ்சடைமேல் மதியம்
ஏற்றமாக வைத்துகந்த காரணமென் னைகொலாம்
ஊற்றமிக்க காலன்றன்னை யொல்கவுதைத் தருளித்
தோற்றமீறு மாகிநின்றாய் சோபுரமே யவனே. ௫

கொன்னவின்ற மூவிலைவேற் கூர்மழுவாட் படையன்
பொன்னைவென்ற கொன்றைமாலை சூடும்பொற்பென் னைகொலாம்
அன்னமன்ன மென்னடையாள் பாகமமர்ந் தரைசேர்
துன்னவண்ண ஆடையினாய் சோபுரமே யவனே. ௬

குற்றமின்மை யுண்மைநீயென் றுன்னடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான காரணமென் னைகொலாம்
வற்றலாமை வாளரவம் பூண்டயன்வெண் டலையில்
துற்றலான கொள்கையானே சோபுரமே யவனே. ௭

விலங்கலொன்று வெஞ்சிலையாக்கொண்டுவிற லரக்கர்
குலங்கள்வாழு மூரெரித்த கொள்கையிதென் னைகொலாம்
இலங்கைமன்னு வாளவுணர் கோனையெழில் விரலால்
துலங்கவூன்றி வைத்துகந்தாய் சோபுரமே யவனே. ௮

விடங்கொள்நாக மால்வரையைச் சுற்றிவிரி திரைநீர்
கடைந்தநஞ்சை யுண்டுகந்த காரணமென் னைகொலாம்
இடந்துமண்ணை யுண்டமாலு மின்மலர்மே லயனுந்
தொடர்ந்துமுன்னங் காணமாட்டாச் சோபுரமே யவனே ௯

புத்தரோடு புன்சமணர் பொய்யுரையே யுரைத்துப்
பித்தராகக் கண்டுகந்த பெற்றிமையென் னைகொலாம்
மத்தயானை யீருரிவை போர்த்துவளர் சடைமேல்
துத்திநாகஞ் சூடினானே சோபுரமே யவனே. ௰

சோலைமிக்க தண்வயல்சூழ் சோபுரமே யவனைச்
சீலமிக்க தொல்புகழார் சிரபுரக்கோன் நலத்தால்
ஞாலமிக்க தண்டமிழால் ஞானசம்பந் தன்சொன்ன
கோலமிக்க மாலைவல்லார் கூடுவர்வா னுலகே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

52. திருநெடுங்களம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார் : ஆதி சந்தி

கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. க

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. உ

நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. ஙூ

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. ச

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின்றாள் நிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. ரு

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவ னடியிணையே பரவும்
திருத்தர்க்கீத ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. சா

கூறுகொண்டாய் மூன்றுமொன்றுக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. எ

Koviloor Digital Library

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. அ

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழவெங்கு நேடஆங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன்னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. கூ

வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற வேடமில்லாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. ௰

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன் மாலை ஞானசம்பந் தன்சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

53. திருமுதுகுன்றம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதி சத்தி
கனரகம் : நடனப் பிரியா

திருச்சிற்றம்பலம்

தேவராயு மசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னும்
மூவராய முதலொருவன் மேயதுமு துகுன்றே. க

பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்த் காலுமேலை விண்ணியமா னனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானன் மேயதுமு துகுன்றே. உ

Koviloor Digital Library

வாரிமாகம் வைகுதிங்கள் வாளரவஞ் சூடி
நாரிபாகம் நயந்துபூமேல் நான்முகன்றன் றலையில்
சீரிதாகப் பலிகொள்செல்வன் செற்றலுந்தோன் றியதோர்
மூரிநாகத் துரிவைபோர்த்தான் மேயதுமு துகுன்றே. ௩

பாடுவாருக் கருளுமெந்தை பனிமுதுபௌ வமுந்நீர்
நீடுபாரு முழுதுமோடி யண்டர்நிலை கெடலும்
நாடுதானு மூடுமோடி ஞாலமுநான் முகனும்
ஊடுகாண மூடும்வெள்ளத் துயர்ந்ததுமு துகுன்றே. ச

வழுங்குதிங்கள் வன்னிமத்த மாசுணமீ சணவிச்
செழுங்கல்வேந்தன் செல்விகாணத் தேவர்திசை வணங்கத்
தழுங்கு மொந்தை தக்கைமிக்க பேய்க்கணம்பூ தஞ்சூழ
முழங்குசெந்தீ யேந்தியாடி மேயதுமு துகுன்றே. ரு

சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட் டொல்லராநல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந் தான்நினைத்தைம் புலனும்
அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி மேயதுமு துகுன்றே. சா, எ

மயங்குமாயம் வல்லராகி வானினொடு நீரும்
இயங்குவோருக் கிறைவனைய இராவணன்தோள் நெரித்த
புயங்கராக மாநடத்தன் புணர்முலைமா துமையாள்
முயங்குமார்பன் முனிவரேத்த மேயதுமு துகுன்றே. அ

ஞாலமுண்ட மாலுமற்றை நான்முகனு மறியாக்
கோலமண்டர் சிந்தைகொள்ளா ராயினுங்கொய் மலரால்
ஏலஇண்டை கட்டிநாம மிசையஎப்போ துமேத்தும்
மூலமுண்ட நீற்றர்வாயன் மேயதுமு துகுன்றே. கூ

உறிகொள்கையர் சீவரத்த ருண்டுழல்மிண் டர்சொல்லை
நெறிகளென்ன நினைவுறாதே நித்தலுங்கை தொழுமின்
மறிகொள்கையன் வங்கமுந்நீர்ப் பொங்குவிடத் தையுண்ட
முறிகொள்மேனி மங்கைபங்கன் மேயதுமு துகுன்றே. ய

மொய்த்துவானோர் பல்கணங்கள் வணங்குமு துகுன்றைப்
பித்தர்வேடம் பெருமையென்னும் பிரமபுரத் தலைவன்.
.... யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

54. திருவோத்தூர் : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார் : ஆதி சத்தி

கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஒத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. க

இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. உ

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. ௩

தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஒட்டி ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரேயருள் நல்குமே. ச

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றுடுவார்
அழையா மேயருள் நல்குமே. ரு

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயருள் நல்குமே. சா

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயருள் நல்குமே. எ

Koviloor Digital Library

என்ரு னிம்மலை யென்ற அரக்கனை
வென்ருர் போலும் விரலினல்
ஒன்ருர் மும்மதி லெய்தவ னேத்தூர்ச்
என்ருர் மேல்வினை யேகுமே. அ

நன்ரு நான்மறை யானெடு மாலுமாய்ச்
சென்ருர் போலுந்தி சையெலாம்
ஒன்ரு யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. கூ

கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னேத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே. ய

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும் புவார்வினைவீடே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

55. திருமாற்பேறு : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார் : ஆதிசத்தி

கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே. க

தொடையார் மார்மலர் கொண்டிரு போதும்மை
அடைவா ராமடி கள்ளென
மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீ ரேயுமை யுள்கியே. உ

பையா ரும்மர வங்கொடு வாட்டிய
கையா னென்று வணங்குவர்

Koviloor Digital Library

மையார் நஞ்சுண்டு மாற்பேற்றி ருக்கின்ற
ஐயா நின்னடி யார்களே. ௩

சால மாமலர் கொண்டு சரணென்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னுர்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே. ௪

மாறி லாமணி யேயென்று வானவர்
ஏற வேகமிக ஏத்துவர்
கூற னேகுல வுந்திரு மாற்பேற்றின்
நீற னேயென்று நின்னையே. ௫

உரையா தாரில்லை யொன்றுநின் தன்மையைப்
பரவா தாரில்லை நாள்களும்
திரையார் பாலியின் தென்கரை மாற்பேற்
றரையா னேயருள் நல்கிடே. ௬,௭

அரச ளிக்கும் மரக்க னவன்றனை
உரைகெ டுத்தவ னெல்கிட
வரமி குத்தவெம் மாற்பேற் றடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே. ௮

இருவர் தேவருந் தேடித்தி ரிந்தினி
ஒருவ ராலறி வொண்ணிலன்
மருவு நீள்கழல் மாற்பேற் றடிகளைப்
பரவு வார்வினை பாறுமே. ௯

தூசு போர்த்துழல் வார்கையில் துற்றுணும்
நீசர் தம்முரை கொள்ளெலும்
தேச மல்கிய தென்திரு மாற்பேற்றின்
ஈச னென்றெடுத் தேத்துமே. ௰

மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னு மாற்பேற் றடிகளை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன் சொல்
பன்ன வேவினை பாறுமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

56. திருப்பாற்றுறை : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம் பண்தார் : ஆதிசத்தி

கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரா ராதி முதல்வரே. க

நல்லா ரும்மவர் தீய ரெனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினர்
பல்லார் வெண்டலைச் செல்வரெம் பாற்றுறை
எல்லா ருந்தொழு மீசரே. உ

விண்ணர் திங்கள் விளங்கு நுதலினர்
எண்ணர் வந்தெ னெழில்கொண்டார்
பண்ணர் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உள்நாள் நாளும் முறைவரே. ௩

பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவி னல்லா ரெயிலெய்தார்
பாவந் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே. ச

மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தென
தாகம் பொன்னிற மாக்கினர்
பாகம் பெண்ணு முடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. ரு

போது பொன்திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தென் நலங்கொண்டார்
பாதந் தொண்டர் பரவிய பாற்றுறை
வேத மோதும் விகிர்தரே. சா

வாடல் வெண்டலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினர்
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆடல் நாக மசைத்தாரே. எ

வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தெ னெழில்கொண்டார்

Koviloor Digital Library

பவ்வ நஞ்சடை கண்டரெம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. அ

ஏன மன்னமு மானவ ருக்கெரி
ஆன வண்ணத்தெ மண்ணலார்
பான லம்மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே. கூ

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தெ னன்னலம் வெளவினுர்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. ய

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம் பந்தன தின்தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே. யக

திருச்சிற்றம்பலம்

57. திருவேற்காடு : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார்:ஆதிசத்தி
கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே. க

ஆடல் நாக மசைத்தள வில்லதோர்
வேடங் கொண்டவன் வேற்காடு
பாடி யும்பணிந் தாரிவ் வுலகினில்
சேட ராகிய செல்வரே. உ

பூதம் பாடப் புறங்காட் டிடையாடி
வேத வித்தகன் வேற்காடு
போதுஞ் சாந்தும் புகையுங் கொடுத்தவர்க்
கேத மெய்துத லில்லையே. ங

Koviloor Digital Library

ஆழ்க டலெனக் கங்கை கரந்தவன்
வீழ்ச டையினன் வேற்காடு
தாழ்வு டைமனத் தாற்பணிந் தேத்திடப்
பாழ்ப டும்மவர் பாவமே. ச

காட்டி னாலு மயர்த்திடக் காலனை
வீட்டி னானுறை வேற்காடு
பாட்டி னாற்பணிந் தேத்திட வல்லவர்
ஒட்டி னார்வினை ஒல்லையே. ரு

தோலி னாலுடை மேவவல் லான்சுடர்
வேலி னானுறை வேற்காடு
நூலி னாற்பணிந் தேத்திட வல்லவர்
மாலி னார்வினை மாயுமே. சா

மல்லல் மும்மதில் மாய்தர எய்ததோர்
வில்லி னானுறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே. எ

மூரல் வெண்மதி சூடு முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுநி னைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே. அ

பரக்கி னார்படு வெண்டலை யிற்பலி
விரக்கி னானுறை வேற்காட்டூர்
அரக்க னுண்மை யடரப்பட் டானிறை
நெருக்கி னானைநி னைமினே. கூ

மாறி லாமல ராநெடு மாலவன்
வேற லானுறை வேற்காடு
ஈறி லாமொழி யேமொழி யாவெழில்
கூறி னார்க்கில்லை குற்றமே. ய

விண்ட மாம்பொழில் சூழ்தரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koyilor Digital Library

58.திருக்கரவீரம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம் பண்தார் : ஆதிசத்தி

கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

அரியு நம்விஜன யுள்ளன ஆசற
வரிகொள் மாமணி போற்கண்டங்
கரிய வன்திக முங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே. க

தாங்கு மோவிஜன தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்திக முங்கர வீரத்தெஞ்
சங்க ரன்கழல் சாரவே. உ

ஏதம் வந்தடை யாவினி நல்லன
பூதம் பல்படை யாக்கிய
காத லான்திக முங்கர வீரத்தெம்
நாதன் பாத நணுகவே. ௩

பறையு நம்விஜன யுள்ளன பாழ்பட
மறையு மாமணி போற்கண்டம்
கறைய வன்திக முங்கர வீரத்தெம்
இறைய வன்கழ லேத்தவே. ச

பண்ணி ஞர்மறை பாடல ஞடலன்
விண்ணி ஞர்மதி லெய்தமுக்
கண்ணி ஞனுறை யுங்கர வீரத்தை
நண்ணு வார்விஜன நாசமே. ரு

நிழலி ஞர்மதி சூடிய நீள்சடை
அழலி ஞரன லேந்திய
கழலி ஞருறை யுங்கர வீரத்தைத்
தொழவல் லார்க்கில்ஜல துக்கமே. சா

வண்டர் மும்மதில் மாய்தர வெய்தவன்
அண்ட ஞரழல் போலொளிர்
கண்ட ஞருறை யுங்கர வீரத்துத்
தொண்டர் மேற்றுயர் தூரமே. எ

Koviloor Digital Library

புனலி லங்கையர் கோன்முடி பத்திறச்
சினவ லாண்மை செகுத்தவன்
கனல வன்னுறை கின்றக ரவீரம்
எனவல் லார்க்கிட ரில்லையே. அ

வெள்ளத் தாமரை யானெடு மாலுமாய்த்
தெள்ளத் தீத்திர ளாகிய
கள்ளத் தானுறை யுங்கர வீரத்தை
உள்ளத் தான்வினை ஒயுமே. கூ

செடிய மண்ணெடு சீவரத் தாரவர்
கொடிய வெவ்வுரை கொள்ளேன்மின்
கடிய வன்னுறை கின்ற கரவீரத்
தடிய வர்க்கில்லை யல்லலே. ம

வீடி லான்விளங் குங்கர வீரத்தெஞ்
சேடன் மேற்கசி வாற்றமிழ்
நாடு ஞானசம் பந்தன சொல்லிவை
பாடு வார்க்கில்லை பாவமே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

59.திருத்தூங்கானைமாடம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : செந்திறம்

பண்தார்:ஆதிசத்தி
கனரகம் : சாரசப் பிரியா

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீரெல்லா மடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங் கெழுமனைகள் தோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. க

பிணிநீர சாதல் பிறந்தலிவை பிரியப் பிரியாத பேரின் பத்தோ
டணிநீர மேலுல கமெய்தலுறி லறிமின் குறைவில்லை ஆனேறுடை
மணிநீல கண்ட முடையபிரான் மலைமக ளுந்தானு மகிழ்ந்துவாழும்
துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. உ

சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்,
ஆமா றறியா தலமந்துநீ ரயர்ந்துங் குறைவில்லை ஆனேறுடைப்
பூமாணலங்க லிலங்கு கொன்றை புனல்பொதிந்த புன்சடையி னுறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந்தொழுமின்களே. ௩

Koviloor Digital Library

ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்கை யொழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லா மனந்திரிந்து மண்ணில் மயங்காதுநீர்
மூன்றுமதிலெய்த மூவாச்சிலை முதல்வர்க் கிடம்போலு முகில்தோய்கொடி
தோன்றுங் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந்தொழுமின்களே. ச

மயல்தீர்மை யில்லாத தோற்றம்மிவை மரணத்தொடொத்தழியு மாருதலால்
வியல்தீர மேலுக மெய்தலுறின் மிக்கொன்றும் வேண்டா விமலனிடன்
உயர்தீர வோங்கிய நாமங்களா லோவாது நாளு மடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. ரு

பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா படர்நோக் கிற்கண் பவளந்திற
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு நரைதோன்றுங் நமக்காதல்முன்
பொன்னீர்மை துன்றப் புறந்தோன்றுநற் புனல்பொ திந்தபுன் சடையிறைனுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. சா

இறையூண் துகளோ டிடுக்கணெய்தி யிழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
நிறையூ ணெறிகருதி நின்றீரெல்லாம் நீள்கழ லேநாளு நினைமின்சென்னிப்
பிறைசூ ழலங்க லிலங்குகொன்றை பிணையும் பெருமான் பிரியாதநீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. எ

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப் பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
இல்சூ ழிடங்கருதி நின்றீரெல்லா மிறையே பிரியா தெழுந்துபோதும்
கல்சூழரக்கன் கதறச் செய்தான் காதலியுந் தானுங் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. அ

நோயும் பிணியு மருந்துயரமு நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்.
வாயு மனங்கருதி நின்றீரெல்லா மலர்மிசைய நான்முகனும் மண்ணும் விண்ணும்
தாய அடியளந்தான் காணமாட்டாத் தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. கூ

பகடூர் பசிநலிய நோய்வருதலாற் பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரு மூடுதுவ ராடையரு நாடிச்சொன்ன
திகடீர்ந்த பொய்ம்மொழிகள் தேறவேண்டா திருந்திழையுந் தானும் பொருந்திவாழுந்
துகடீர் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. ௰

மண்ணார் முழுவதிரும் மாடவீதி வயற்காழி ஞானசம் பந்தன்நல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவிவாழும் விதியதுவே யாகும் வினைமாயுமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

௬௦.திருத்தோணிபுரம் : பண் - பழந்தக்கராகம்

திறம் : குறிச்சிர்திறம் பண்தார்:ஆதிசத்தி

கனரகம் : நடனப் பிரியா

திருச்சிற்றம்பலம்

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடு மளியரசே ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்நிலைமை பரிந்தொருகாற் பகராயே. க

எறிசுறவங் கழிகான லிளங்குருகே என்பயலை
அறிவுறு தொழிவதுவு மருவினையேன் பயனன்றே
செறிசிறுர் பதமோதுந் திருத்தோணி புரத்துறையும்
வெறிநிறுர் மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே. உ

பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே கடுவினையே னுறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற் பழியாமோ மொழியாயே. ங

காண்டகைய செங்காலொண் கழிநாராய் காதலாற்
பூண்டகைய முலைமெலிந்து பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்டகைய மணிமாடத் திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாற் கின்றேசென் றடியறிய வுணர்த்தாயே. ச

பாராரே யெனையொருகால் தொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப் பவளக்காற் கபோதகங்காள்
தேராரு நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக் கென்நிலைமை நிகழ்த்தீரே. ரு

சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள் விண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி புரத்தீசன் துளங்காத
கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே. சா

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே. எ

Koviloor Digital Library

பானுறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கு மினிதாக மொழியுமெழி லிளங்குயிலே
தேனாரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனுரை யென்னிடத்தே வரவொருகாற் கூவாயே. அ

நற்பதங்கள் மிகஅறிவாய் நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவைநல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெயப்பயலை விளம்பாயே. கூ

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றேணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே. ௰

போர்மிகுத்த வயற்றேணி புரத்துறையும் புரிசடையெங்
கார்மிகுத்த கறைக்கண்டத் திறையவனை வண்கமலத்
தார்மிகுத்த வரைமார்பன் சம்பந்த னுரைசெய்த
சீர்மிகுத்த தமிழ்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

61.திருச்செங்காட்டங்குடி : பண் - பழந்தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : ஆதிசத்தி
கனரகம் : நடனப் பிரியா

திருச்சிற்றம்பலம்

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே. க

வாரேற்ற பறையொலியுஞ் சங்கொலியும் வந்தியம்ப
ஊரேற்ற செல்வத்தோ டோங்கியசீர் விழவோவாச்
சீரேற்ற முடைத்தாய செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான் கணபதீச் சரத்தானே. உ

வரந்தையான் சோபுரத்தான் மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான் கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங் குடியான்செஞ் சடைசேருங்
கரந்தையான் வெண்ணீற்றான் கணபதீச் சரத்தானே. ௩

Koviloor Digital Library

தொங்கலுங் கமழ்சாந்து மகிற்புகையுந் தொண்டர்கொண்
டங்கையால் தொழுதேத்த அருச்சுனற்கன் றருள்செய்தான்
செங்கயல்பாய் வயலுடுத்த செங்காட்டங் குடியதனுள்
கங்கைசேர் வார்சடையான் கணபதீச் சரத்தானே. ௪

பாலினல் நறுநெய்யாற் பழத்தினற் பயின்ருட்டி
நூலினல் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினுர் வயல்புடைசூழ் செங்காட்டாங் குடியதனுள்
காலினற் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே. ௫

நுண்ணியான் மிகப்பெரியான் ஓவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யானந் தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங் குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான் கணபதீச் சரத்தானே. ௬

மையினுர் மலர்நெடுங்கண் மலைமகளோர் பாகமாம்
மெய்யினுன் பையரவ மரைக்கசைத்தான் மீன்பிறழச்
செய்யினுர் தண்கழனிச் செங்காட்டங் குடியதனுள்
கையினுர் கூரெரியான் கணபதீச் சரத்தானே. ௭

தோடுடையான் குழையுடையா னரக்கன்றன் ருேளடர்த்த
பீடுடையான் போர்விடையான் பெண்பாக மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங் குடியுடையான் சேர்ந்தாடுங்
காடுடையா னுடுடையான் கணபதீச் சரத்தானே. ௮

ஆனூரா வுழிதருவா னன்றிருவர் தேர்ந்துணரா
வானூரான் வையகத்தான் வாழ்த்துவார் மனத்துளான்
தேனூரான் செங்காட்டங் குடியான்சிற் றம்பலத்தான்
கானூரான் கழுமலத்தான் கணபதீச் சரத்தானே. ௯

செடிநுகருஞ் சமணர்களுஞ் சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க் கருளாத பண்பினுன்
பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே. ௰

கறையிலங்கு மலர்க்குவளை கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச் செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார் வானுலகத் திருப்பாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

௬௨. திருக்கோளிலி : பண் - பழந்தக்கராகம்

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதிசத்தி

கனரகம் : நடனப் பிரியா

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே யரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. க

ஆடரவத் தழகாமை அணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன் துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவந் தீர்க்குமவன் கோளிலியெம் பெருமானே. உ

நன்றுநகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்ற னுேங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர்பொன் றிகழுங் கோளிலியெம் பெருமானே. ங

வந்தமண லாலிலிங்க மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் தன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே. ச

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலும்நற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே. ரு

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றுதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே. சா

கன்னவிலு மால்வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொன்னவிலு மாமறையான் தோத்திரஞ்செய் வாயினுளான்
மின்னவிலுஞ் செஞ்சடையான் வெண்பொடியா னங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலியெம் பெருமானே. எ

Koviloor Digital Library

அந்தரத்தில் தேரூரு மரக்கன்மலை யன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலா லூன்றவவ னுடல்நெரிந்து
மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. அ

நாணமுடை வேதியனு நாரணனு நண்ணவொணுத்
தாணுவெனை யாளுடையான் றன்னடியார்க் கன்புடைமை
பாணனிசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. கூ

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளா தீசனையே ஏத்துமின்கள்
நடுக்கமிலா அமருலகந் நண்ணலுமா மண்ணல்கழல்
கொடுக்கிலா வரங்கொடுக்குங் கோளிலியெம் பெருமானே. ய

நம்பனைநல் லடியார்க ளுமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்க் ளெய்துவர்க ளீசனையே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

63. திருப்பிரமபுரம் : பண் - தக்கேசி

திறம் : அராகத்திறம்

பண்தார் : நாரதர் தும்புரு
கனரகம் : மோகனமல்லாரு

பல் பெயர்ப் பத்து

திருச்சிற்றம்பலம்

எரியார்மழுவொன் றேந்தியங்கை யிடுதலையேகலனு
வரியார்வளையா ரையம்வவ்வாய் மாநலம்வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன் தாமரை நான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே. க

பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப் பெய்பலிக்கென்றயலே
கயலார்தடங்க ணஞ்சொனல்லார் கண்டுயில்வவ்வுதியே
இயலானடாவி யின்பமெய்தி யிந்திரனுள்மண்மேல்
வியலார்முரச மோங்குசெம்மை வேணுபுரத்தானே. உ

நகலார்தலையும் வெண்பி[illegible]லே Koviloor Digital Library
பகலாப்பலிதேர்ந் தையம்வவ்வாய் பாய்கலைவவ்வுதியே
அகலாதுறையு மாநிலத்தி லயலின் மையாலமரர்
புகலால்மலிந்த பூம்புகலி மேவியபுண்ணியனே. ௩

சங்கோடிலங்கத் தோடுபெய்து காதிலோர் தாழ்குழையன்
அங்கோல்வளையா ரையம்வவ்வா யானலம்வவ்வுதியே
செங்கோனடாவிப் பல்லுயிர்க்குஞ் செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட வெங்குருமேயவனே. ௪

தணிநீர்மதியஞ் சூடிநீடு தாங்கிய தாழ்சடையன்
பிணிநீர்மடவா ரையம்வவ்வாய் பெய்கலைவவ்வுதியே
அணிநீருலக மாகியெங்கு மாழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத் தான்மிதந்த தோணிபுரத்தானே. ௫

கவர்பூம்புனலுந் தண்மதியுங் கமழ்சடைமாட்டயலே
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யானலம்வவ்வுதியே
அவர்பூணரையர்க் காதியாய்அவள் தன் மன்னனுள்மண்மேல்
தவர்பூம்பதிக ளெங்குமெங்குந் தங்குதராயவனே. ௬

முலையாழ்கெழும மொந்தைகொட்ட முன்கடைமாட்டயலே
நிலையாய்ப்பலிதேர்ந் தையம்வவ்வாய் நீநலம்வவ்வுதியே
தலையாய்கிடந்திவ் வையமெல்லாந் தன்னதோராணைநடாய்ச்
சிலையால்மலிந்த சீர்ச்சிலம்பன் சிரபுரமேயவனே. ௭

எருதேகொணர்கென் றேறியங்கை யிடுதலையேகலனக்
கருதேர்மடவா ரையம்வவ்வாய் கண்டுயில்வவ்வுதியே
ஒருதேர்கடாவி யாரமரு ளொருபதுதோள்தொலையப்
பொருதேர்வலவன் மேவியாண்ட புறவமர்புண்ணியனே. ௮

துவர்சேர்கலிங்கப் போர்வையாருந் தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக் கண்டவண்ணங் காரிகைவார்குழலார்
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யானலம்வவ்வுதியே
தவர்செய்நெடுவேற் சண்டனுளச் சண்பையமர்ந்தவனே. ௯

நிழலால்மலிந்த கொன்றைசூடி நீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவா ரையம்வவ்வாய் கோல்வளைவவ்வுதியே
அழலாயுலகங் கவ்வைதீர ஐந்தலைநீண்முடிய
கழலுகரையன் காவலாகக் காழியமர்ந்தவனே. ௰

கட்டார்துழாயன் தாமரையா னென்றிவர் காண்பரிய
சிட்டார்பலிதேர்ந் தையம்வவ்வாய் செய்கலைவவ்வுதியே

Koviloor Digital Library
நட்டார்நடுவே நந்தருள் நல்வினையா லுயர்ந்த
கொட்டாறுடுத்த தண்வயல்சூழ் கொச்சையமர்ந்தவனே. ௰௧

கடையார்கொடிநன் மாடவீதிக் கழுமலவூர்க்கவுணி
நடையார்பனுவல் மாலையாக ஞானசம்பந்தன்நல்ல
படையார்மழுவன் மேல்மொழிந்த பல்பெயர்பத்தும்வல்லார்க்
கடையாவினைக ளுலகில்நாளு மமருலகாள்பவரே. ௰௨

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

64. திருப்பூவணம் : பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : நாரதர் தும்புரு

கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

அறையார்புனலு மாமலரு மாடரவார்சடைமேல்
குறையார்மதியஞ் சூடிமாதோர் கூறுடையானிடமாம்
முறையார்முடிசேர் தென்னர்சேரர் சோழர்கள்தாம்வணங்கும்
திறையாரொளிசேர் செம்மையோங்குந் தென்திருப்பூவணமே. ௧

மருவார்மதில்மூன் றொன்றவெய்து மாமலையான்மடந்தை
ஒருபால்பாக மாகச்செய்த வும்பர்பிரானவனூர்
கருவார்சாலி யாலைமல்கிக் கழல்மன்னர்காத்தளித்த
திருவால்மலிந்த சேடர்வாழுந் தென்திருப்பூவணமே. ௨

போரார்மதமா வுரிவைபோர்த்துப் பொடியணிமேனியனுய்க்
காரார்கடலின் நஞ்சமுண்ட கண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப் புனல்வாய்பரப்பிப் பன்மணிபொன்கொழித்துச்
சீரார்வாரி சேரநின்ற தென்திருப்பூவணமே. ௩

கடியாரலங்கற் கொன்றைசூடிக் காதிலொர்வார் குழையன்
கொடியார்வெள்ளை யேறுகந்த கோவணவன்னிடமாம்
படியார்கூடி நீடியோங்கும் பல்புகழாற்பரவச்
செடியார்வைகை சூழநின்ற தென்திருப்பூவணமே. ௪

கூரார்வாளி சிலையிற்கோத்துக் கொடிமதில்கூட்டழித்த
போரார்வல்லி மெல்லியலாளோர் பால்மகிழ்ந்தானிடமாம்
ஆராஅன்பில் தென்னர்சேரர் சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடநீடுந் தென்திருப்பூவணமே. ௫

Koviloor Digital Library

நன்றுதீதென் றென்றிலாத நான்மறையோன் கழலே
சென்றுபேணி யேத்தநின்ற தேவர்பிரானிடமாம்
குன்றிலொன்றி யோங்கமல்கு குளிர்பொழில்சூழ்மலர்மேல்
தென்றலொன்றி முன்றிலாருந் தென்திருப்பூவணமே. ௬

பைவாயரவ மரையிற்சாத்திப் பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனி நீறுபூசி ஏறுகந்தானிடமாம்
கைவாழ்வளையார் மைந்தரோடுங் கலவியினால்நெருங்கிச்
செய்வார்தொழிலின் பாடலோவாத் தென்திருப்பூவணமே. ௭

மாடவீதி மன்னிலங்கை மன்னனைமாண்பழித்துக்
கூடவென்றி வாள்கொடுத்தாள் கொள்கையினார்க்கிடமாம்
பாடலோடு மாடலோங்கிப் பன்மணிபொன்கொழித்து
ஓடநீரால் வைகைசூழு முயர்திருப்பூவணமே. ௮

பொய்யாவேத நாவினானும் பூமகள்காதலனும்
கையாற்றொழுது கழல்கள்போற்றக் கனலெரியானவனூர்
மையார்பொழிலின் வண்டுபாட வைகைமணிகொழித்துச்
செய்யார்கமலந் தேனரும்புந் தென்திருப்பூவணமே. ௯

அலையார்புனலை நீத்தவருந் தேரருமன்புசெய்யா
நிலையாவண்ண மாயம்வைத்த நின்மலன்தன்னிடமாம்
மலைபோற்றுன்னி வென்றியோங்கு மாளிகைசூழ்ந்தயலே
சிலையார்புரிசை பரிசுபண்ணுந் தென்திருப்பூவணமே. ௰

திண்ணார்புரிசை மாடமோங்குந் தென்திருப்பூவணத்துப்
பெண்ணார்மேனி யெம்மிறையைப் பேரியலின்தமிழால்
நண்ணாருட்கக் காழிமல்கு ஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல் பத்தும்வல்லார் பயில்வதுவானிடையே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

௬௫. காவிரிப்பூம்பட்டினத்துத் திருப்பல்லவனீச்சரம்
பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார்:நாரதர் தும்புரு
கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

அடையார்தம் புரங்கள்மூன்று மாரழலிலழுந்த
விடையார்மேனி யராய்ச்சீறும் வித்தகர்மேயவிடங்
கடையார்மாட நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே. க

எண்ணுறரெயில்கள் மூன்றுஞ்சீறு மெந்தைபிரானிமையோர்
கண்ணுயுலகங் காக்கநின்ற கண்ணுதனண்ணுமிடம்
மண்ணுர்சோலைக் கோலவண்டு வைகலுந் தேனருந்திப்
பண்ணுர்செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. உ

மங்கையங்கோர் பாகமாக வாணிலவார்சடைமேற்
கங்கையங்கே வாழவைத்த கள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர் புணரியோத மீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ௩

தாரார்கொன்றை பொன்றயங்கச் சாத்தியமார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த நின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர் புக்கிசைபாடலினற்
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ச

மைசேர்கண்ட ரண்டவாணர் வானவருந்துதிப்ப
மெய்சேர்பொடிய ரடியாரேத்த மேவியிருந்தவிடஞ்
கைசேர்வளையார் விழைவினேடு காதன்மையாற்கழலே
பைசேரரவா ரல்குலார்சேர் பல்லவனீச்சரமே. ௫

குழலினேசை வீணைமொந்தை கொட்டமுழவதிரக்
கழலினேசை யார்க்கஆடுங் கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந் தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௬

வெந்தலாய வேந்தன்வேள்வி வேரறச்சாடிவிண்ணேர்
வந்தெலாமுன் பேணநின்ற மைந்தன்மகிழ்ந்தஇடம்
மந்தலாய மல்லிகையும் புன்னைவளர்குரவின்
பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. எ

Koviloor Digital Library

தேரரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்கவவன்
தாரரக்குந் திண்முடிக ளூன் றியசங்கரனூர்
காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்
பாரரக்கம் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. அ

அங்கமாறும் வேதநான்கு மோதுமயன்நெடுமால்
தாங்கருலும் நேடநின்ற சங்கரன் றங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி வார்கடலூடலைப்பப்
பாங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. கூ

உண்டுடுக்கை யின்றியேநின் றூர்நகவேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார் கண்டறியாதவிடந்
தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண் தீரநல்கும் பல்லவனீச்சரமே. ம

பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தெம்
அத்தன்றன்னை யணிகொள்காழி ஞானசம்பந்தன்சொல்
சித்தஞ்சேரச் செப்புமாந்தர் தீவினைநோயிலராய்
ஒத்தமைந்த வும்பர்வானி லுயர்விஞெடோங்குவரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

66. திருச்சண்பைநகர் : பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : நாரதர் தும்புரு

கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

பங்கமேறு மதிசேர்சடையார் விடையார்பலவேதம்
அங்கமாறு மறைநான்கவையு மானூர்மீனூரும்
வங்கமேவு கடல்வாழ்பரதர் மனைக்கேநுனைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ் சண்பைநகராரே. க

சூதகஞ்சேர் கொங்கையாளோர் பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர் புண்ணியனூர் பூதகணநாதர்
மேதகஞ்சேர் மேகமந்தண் சோலையில்விண்ணூர்ந்த
சாதகஞ்சேர் பாளைநீர்சேர் சண்பைநகராரே. உ

மகரத்தாடு கொடியோனுடலம் பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத் தேவிக்கருள்செய் நீலகண்டனூர்
பகரத்தாரா வன்னம்பகன் றில் பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னை தாழைப்பொழில்சேர் சண்பைநகராரே. ௩

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

மொய்வல்லசுரர் தேவர்கடைந்த முழுநஞ்ச துவுண்ட
தெய்வர்செய்ய வுருவர்கரிய கண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியி னுரியர்காதலாற்
சைவர்பாசு பதர்கள்வணங்குஞ் சண்பைநகராரே. ௪

கலமார்கடலுள் விடமுண்டமரர்க் கமுதமருள்செய்த
குலமார்கயிலைக் குன்றதுடைய கொல்லையெருதேறி
நலமார்வெள்ளை நாளிகேரம் விரியாநறும்பாளை
சலமார்கரியின் மருப்புக்காட்டுஞ் சண்பைநகராரே. ௫

மாகரஞ்சே ரத்தியின்தோல் போர்த்துமெய்ம்மாலான
சூகரஞ்சே ரெயிறுபூண்ட சோதியன்மேதக்க
ஆகரஞ்சே ரிப்பிமுத்தை யந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்துஞ் சண்பைநகராரே. ௬, ௭

இருளைப்புரையு நிறத்திலரக்கன் றனையீடழிவித்து
அருளைச்செய்யு மம்மான்னேரா ரந்தண்கந்தத்தின்
மருளைச்சுரும்பு பாடியளக்கர் வரையார்திரைக்கையால்
தரளத்தோடு பவளமீனுஞ் சண்பைநகராரே. ௮

மண்டான்முழுது முண்டமாலு மலர்மிசைமேலயனும்
எண்டானறியா வண்ணநின்ற இறைவன்மறையோதி
தண்டார்குவளைக் கள்ளருந்தித் தாமரைத்தாதின்மேற்
பண்டான்கொண்டு வண்டுபாடுஞ் சண்பைநகராரே. ௯

போதியாரும் பிண்டியாரும் புகழலசொன்னலும்
நீதியாகக் கொண்டங்கருள நிமலனிருநான்கின்
மாதிசித்தர் மாமறையின் மன்னியதொன்னூலர்
சாதிகீத வர்த்தமானர் சண்பைநகராரே. ௰

வந்தியோடு பூசையல்லாப் போழ்தின்மறைபேசிச்
சந்திபோதிற் சமாதிசெய்யுஞ் சண்பைநகர்மேய
அந்திவண்ணன் தன்னையழகார் ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதிசேர்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

67. திருப்பழனம் : பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர் திறம்

பண்தார் : நாரதர் தும்புரு
கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. க

கண்மேற்கண்ணுஞ் சடைமேற்பிறையு முடையார்காலனைப்
புண்ணாறுதிர மெதிராவோடப் பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்த எந்தைபெருமா னிமவான்மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப் பழனநகராரே. உ

பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல்விழிகட்பேய்
உறையுமயான மிடமாவுடையா ருலகர்தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி யாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியுமோவாப் பழனநகராரே. ங

உரமன் னுயர்கோட் டுலறுகூகை யலறுமயான த்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையி னறவமேற்ற பெம்மானெமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன் பழனநாகராரே. ச

குலவெஞ்சிலையான் மதில்மூன்றெரித்த கொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங் குயிலும்பயிலுங் கடல்போற்காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள் திரைமுன்சேர்க்கும் பழனநகராரே. ரு

வீளைக்குரலும் விளிசங்கொலியும் விழவினொலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப் பொடியாமதிளெய்தார்
ஈளைப்படுகி லிலையார்தெங்கிற் குலையார்வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப் பழனநாகராரே. சா

பொய்யாமொழியார் முறையாலேத்திப் புகழ்வார்திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல் சேர்ந்தஅகலத்தார்
கையாடலினர் புனலான்மல்கு சடைமேற்பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார் பழனநகராரே. எ

மஞ்சோங்குயர முடையான்மலையை மாறுயெடுத்தான்தோள்
அஞ்சோடஞ்சு மாறுநான்கு மடரவூன்றினார்

Koviloor Digital Library

நஞ்சார்சுடலைப் பொடிநீறணிந்த நம்பான்வம்பாரும்
பையாடரவ முடனேவைத்தார் பழனநகராரே. அ

கடியார்கொன்றைச் சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூ வடியாலுலக முழுதுந்தாவிய
நெடியான்நீள்தா மரைமேலயனும் நேடிக்காணாத
படியார்பொடியா டகலமுடையார் பழனநகராரே. கூ

கண்டான்கழுவா முன்னேயோடிக் கலவைக்கஞ்சியை
உண்டாங்கவர்க ளுரைக்குஞ்சிறுசொல் லோரார்பாராட்ட
வண்டாமரையின் மலர்மேல்நறவ மதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழும வண்டியாழ்செய்யும் பழனநகராரே. ய

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணுபுரத்தன் னுள்
நாவுய்த்தனைய திறலால்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார்நல்லாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

68. திருக்கயிலாயம் : பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : நாரதர் தும்புரு
கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூல்திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர்கண்டத்தர்
இடியகுரலா லிரியுமடங்கல் தொடங்குமுனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன் றுடையார் கயிலைமலையாரே. க

புரிகொள்சடையா ரடியர்க்கெளியார் கிளிசேர்மொழிமங்கை
தெரியவுருவில் வைத்துகந்த தேவர்பெருமானார்
பிரியகளிற்றை யரவுவிழுங்கி மழுங்கஇருள்கூர்ந்த
கரியமிடற்றர் செய்யமேனிக் கயிலைமலையாரே. உ

மாவினுரிவை மங்கைவெருவ மூடிமுடிதன்மேல்
மேவுமதியு நதியும்வைத்த இறைவர்கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர் திரங்கல்முகவன்சேர்
காவும்பொழிலுங் கடுங்கற்சுனைசூழ் கயிலைமலையாரே. ங

Koviloor Digital Library

முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட முதல்வர்மதனன்றன்
தென்னீருருவ மழியத்திருக்கண் சிவந்தநுதலினார்
மன்னீர்மடுவும் படுகல்லறையி னுழுவைசினங்கொண்டு
கன்னீர்வரைமே லிரைமுன்தேடுங் கயிலைமலையாரே. ௪

ஒன்றும்பலவு மாயவேடத் தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்து நாடற்குரியார் கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளில் திகைத்தகரிதண் சாரல்நெறியோடிக்
கன்றும்பிடியு மடிவாரஞ்சேர் கயிலைமலையாரே. ௫

தாதார்கொன்றை தயங்குமுடியர் முயங்குமடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர்பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனா யறநான்கருள்செய்த
காதார்குழையர் வேதத்திரளர் கயிலைமலையாரே. ௬, ௭

தொடுத்தார்புரமூன் றெரியச்சிலைமே லெரியொண்பகழியார்
எடுத்தான்திரள்தோள் முடிகள்பத்து மிடியவிரல்வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக் குறுகிவருங்கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார் கயிலைமலையாரே. ௮

ஊணாப்பலிகொண் டுலகிலேற்றா ரிலகுமணிநாகம்
பூணாணா ரமாகப்பூண்டார் புகழுமிருவர்தாம்
பேணாவோடி நேடஎங்கும் பிறங்குமெரியாகிக்
காணாவண்ண முயர்ந்தார்போலுங் கயிலைமலையாரே. ௯

விருதுபகரும் வெஞ்சொற்சமணர் வஞ்சச்சாக்கியர்
பொருதுபகரு மொழியைக்கொள்ளார் புகழ்வார்க்கணியராய்
எருதொன்றுகைத்திங் கிடுவார்தம்பா லிரந்துண்டிகழ்வார்கள்
கருதும்வண்ண முடையார்போலுங் கயிலைமலையாரே. ௰

போரார்கடலிற் புனல்சூழ்காழிப் புகழார்சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற் கயிலைமலையார்மேல்
தேராவுரைத்த செஞ்சொன்மாலை செப்புமடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகின் மருவுமனத்தாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

69. திருவண்ணாமலை : பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர் திறம்

பண்தார் : நாரதர் தும்புரு

கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. க

மஞ்சைப்போழ்ந்த மதியஞ்சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்குமதுவும் நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவா ரிதணமதுவேறி
அஞ்சொற்கிளிக ளாயோவென்னு மண்ணாமலையாரே. உ

ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு முண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி யிழியுமிரவின்கண்
ஆனத்திரள்வந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. ங

இழைத்தஇடையா ளுமையாள்பங்க ரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார் விடையொன்றேறித் தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக் காணாதோடிப் பெருங்கைமதவேழம்
அழைத்துத்திரிந்தங் குறங்குஞ்சார லண்ணாமலையாரே. ச

உருவிற்றிகழு முமையாள்பங்க ரிமையோர்பெருமானார்
செருவில்லொருகால் வளையவூன்றிச் செந்தீயெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த பருமாமணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சார லண்ணாமலையாரே. ரு

எனைத்தோரூழி யடியாரேத்த இமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன் கைம்மேற்குழலூத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சார லண்ணாமலையாரே. சா

வந்தித்திருக்கு மடியார்தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமனுறைகோயில்
முந்தியெழுந்த முழவினோசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. எ

Koviloor Digital Library

மறந்தான்கருதி வலியைநினைந்து மாறுயெடுத்தான்றேள்
நிறந்தான்முரிய நெரியவூன்றி நிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டி யருளாயென்று தேவரவர்வேண்ட
அறந்தான்காட்டி யருளிச்செய்தா ரண்ணுமலையாரே. அ

தேடிக்காணார் திருமால்பிரமன் தேவர்பெருமானை
மூடியோங்கி முதுவேயுகுத்த முத்தம்பலகொண்டு
கூடிக்குறவர் மடவார்குவித்துக் கொள்ளவம்மினென்
றோடிப்பாடி யளக்குஞ்சார லண்ணுமலையாரே. கூ

தட்டையிடுக்கித் தலையைப்பறித்துச் சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக் கொள்ளவேண்டா பேணித்தொழுமின்கள்
வட்டமுலையா ளுமையாள்பங்கர் மன்னியுறைகோயில்
அட்டமாளித் திரள்வந்தணையு மண்ணுமலையாரே. ய

அல்லாடரவ மியாங்குஞ்சார லண்ணுமலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்த பாடலான பத்துமிவைகற்று
வல்லாரெல்லாம் வானேர்வணங்க மன்னிவாழ்வாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

70. திருஈங்கோய்மலை : பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர் திறம்

பண்தார் : நாரதர் தும்புரு
கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர்சூடித்
தேனெத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவி லெரிகொண்டாடுங் கடவுளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சார லீங்கோய்மலையாரே. க

சூலப்படையொன் றேந்தியிரவிற் சுடுகாடிடமாகக்
கோலச்சடைகள் தாழக்குழல்யாழ் மொந்தைகொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண ஆடும்பரமனார்
ஏலத்தொடுநல் லிலவங்கமழு மீங்கோய்மலையாரே. உ

கண்கொள்நுதலார் கறைகொள்மிடற்றார் கரியினுரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார்விடையார் கொடியார்வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும் பெம்மானெமையாள்வார்
எண்குமரியுந் திரியுஞ்சார லீங்கோய்மலையாரே. ௩

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

மறையின்னிசையார் நெறிமென்கூந்தல் மலையான்மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவுங் குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங் கழலுமார்ப்பப் படுகாட்டெரியாடும்
இறைவர்சிறைவண் டறைபூஞ்சார லீங்கோய்மலையாரே. ௪

நொந்தசுடலைப் பொடிநீறணிவார் நுதல்சேர்கண்ணினர்
கந்தமலர்கள் பலவுந்நிலவு கமழ்புன்சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும்
எந்தம்மடிகள் கடிகொள்சார லீங்கோய்மலையாரே. ௫

நீருரகல முடையார்நிரையார் கொன்றையரவோடும்
ஆரூர்சடையா ரயில்வெங்கணையா லவுணர்புரமூன்றும்
சீருவெரிசெய் தேவர்பெருமான் செங்கணடல்வெள்ளை
ஏரூர்கொடியா ருமையாளோடு மீங்கோய்மலையாரே. ௬

வினையாயினதீர்த் தருளேபுரியும் விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல் மதியஞ்சூடும் நம்பர்நலமல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான் தலையோடனலேந்தும்
எனையாளுடையா னுமையாளோடு மீங்கோய்மலையாரே. ௭

பரக்கும்பெருமை இலங்கையென்னும் பதியிற்பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளு மணியார்விரல்தன்றால்
நெருக்கியடர்த்து நிமலாபோற்றி யென்றுநின்றேத்த
இரக்கம்புரிந்தா ருமையாளோடு மீங்கோய்மலையாரே. ௮

வரியார்புலியி னுரிதோலுடையான் மலையான்மகளோடும்
பிரியாதுடனு யாடல்பேணும் பெம்மான்றிருமேனி
அரியோடயனு மறியாவண்ண மளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்த எங்கள்பெருமா னீங்கோய்மலையாரே. ௯

பிண்டியேன்று பெயராநிற்கும் பிணங்குசமணரும்
மண்டைகலனைக் கொண்டுதிரியும் மதியில்தேரரும்
உண்டிவயிரு ருரைகள்கொள்ளா துமையோடுடனாகி
இண்டைச்சடையா னிமையோர்பெருமா னீங்கோய்மலையாரே. ௰

விழவாரொலியு முழவுமோவா வேணுபுரந்தன் னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சே ரணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூ ழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார் கவலைகளைவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

71. திருநறையூர்ச்சித்தீச்சரம்: பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர் திறம்

பண்தார் : நாரதர் தும்புரு

கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

பிறைகொள்சடையர் புலியினுரியர் பேழ்வாய்நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்துங் கையர்கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர் மனையின்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டு தேனூர்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. க

பொங்கார்சடையர் புனலரனலர் பூதம்பாடவே
தங்காதலியுந் தாமுமுடனுய்த் தனியோர்விடையேறிக்
கொங்கார்கொன்றை வன்னிமத்தஞ் சூடிக்குளிர்பொய்கைச்
செங்காலனமும் பெடையுஞ்சேருஞ் சித்தீச்சரத்தாரே. உ

முடிகொள்சடையர் முளைவெண்மதியர் மூவாமேனிமேல்
பொடிகொள்நூலர் புலியினதளர் புரிபுன்சடைதாழக்
கடிகொள்சோலை வயல்சூழ்மடுவிற் கயலாரினம்பாயக்
கொடிகொள்மாடக் குழாமார்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. ௩

பின்ருழ்சடைமேல் நகுவெண்டலையார் பிரமன்றலையேந்தி
மின்ருழுருவிற் சங்கார்குழைதான் மிளிருமொருகாதர்
பொன்ருழ்கொன்றை செருந்திபுன்னை பொருந்துசெண்பகம்
சென்ருர்செல்வத் திருவார்நறையூர்ச் சித்தீச்சரத்தாரே. ச

நீரார்முடியர் கறைகொள்கண்டர் மறைகள்நிறைநாவர்
பாரார்புகழால் பத்தர்சித்தர் பாடியாடவே
தேரார்வீதி முழவார்விழவி னெலியுந்திசைசெல்லச்
சீரார்கோலம் பொலியுநறையூர்ச் சித்தீச்சரத்தாரே. ரு

நீண்டசடையர் நிரைகொள்கொன்றை விரைகொள்மலர்மாலை
தூண்டுசுடர்பொன்னொளிகொள் மேனிப்பவளத் தெழிலார்வந்
தீண்டுமாட மெழிலார்சோலை யிலங்குகோபுரந்
தீண்டுமதியந் திகழுநறையூர்ச் சித்தீச்சரத்தாரே. சா

குழலார்சடையர் கொக்கினிறகர் கோலநிறமத்தம்
தழலார்மேனித் தவளநீற்றர் சரிகோவணக்கீளர்
எழிலார்நாகம் புலியினுடைமே லிசைத்துவிடையேறிக்
கழலார்சிலம்பு புலம்பவருவார் சித்தீச்சரத்தாரே. எ

Koviloor Digital Library

கரையார்கடல்சூ ழிலங்கைமன்னன் கயிலைமலைதன்னை
வரையார்தோளா லெடுக்கமுடிகள் நெரித்துமனமொன்றி
உரையார்கீதம் பாடநல்ல வுலப்பிலருள்செய்தார்
திரையார்புனல்சூழ் செல்வநறையூர்ச் சித்தீச்சரத்தாரே. அ

நெடியான்பிரமன் நேடிக்காணார் நினைப்பார்மனத்தாராய்
அடியாரவரு மருமாமறையு மண்டத்தமரரும்
முடியால்வணங்கிக் குணங்களேத்தி முதல்வாஅருளென்னச்
செடியார்செந்நெல் திகழுநறையூர்ச் சித்தீச்சரத்தாரே. கூ

நின்றுண்சமண ரிருந்துண்தேரர் நீண்டபோர்வையார்
ஒன்றுமுணரா ஊமர்வாயி லுரைகேட்டுழல்வீர்காள்
கன்றுண்பயப்பா லுண்ணமுலையிற் கபலாமயல்பொழியச்
சென்றுண்டார்ந்து சேருநறையூர்ச் சித்தீச்சரத்தாரே. ௰

குயிலார்கோல மாதவிகள் குளிர்பூஞ்சுரபுன்னை
செயிலார்பொய்கை சேருநறையூர்ச் சித்தீச்சரத்தாரை
மயிலார்சோலை சூழ்ந்தகாழி மல்குசம்பந்தன்
பயில்வார்க்கினிய பாடல்வல்லார் பாவநாசமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

72. திருக்குடந்தைக்காரோணம்: பண் - தக்கேசி

திறம் : குறிச்சிர் திறம்

பண்தார் : நாரதர் தும்புரு
கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

வாரார்கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண் குழகன்குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோளெந்தை காரோணத்தாரே. ௧

முடியார்மன்னர் மடமான்விழியார் மூவுலகும்மேத்தும்
படியார்பவள வாயார்பலரும் பலவுப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார் மாடவீதிக் குடந்தைக்குழகாருங்
கடியார்சோலைக் கலவமயிலார் காரோணத்தாரே. ௨

மலையார்மங்கை பங்கரங்கை யனலர்மடலாரும்
குலையார்தெங்கு குளிர்கொள்வாழை யழகார்குடமூக்கில்
முலையாரணிபொன் முளைவெண்ணகையார் மூவாமதியினர்
கலையார்மொழியார் காதல்செய்யுங் காரோணத்தாரே. ௩

Koviloor Digital Library

போதார்புனல்சேர் கந்தமுந்திப் பொலியவ்வழகாரும்
தாதார்பொழில்சூழ்ந் தெழிலார்புறவி லந்தண்குடமூக்கில்
மாதார்மங்கை பாகமாக மனைகள் பலிதேர்வார்
காதார்குழையர் காளகண்டர் காரோணத்தாரே. ச

பூவார்பொய்கை யலர்தாமரைசெங் கழுநீர்புறவெல்லாம்
தேவார்சிந்தை யந்தணாளர் சீராலடிப்போற்றக்
கூவார்குயில்க ளாலும்மயில்க ளின்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந் தழகார்குடந்தைக் காரோணத்தாரே. ரு

மூப்பூர்நலிய நெதியார்விதியாய் முன்னேயனல்வாளி
கோப்பார்பார்த்தன் நிலைகண்டருளுங் குழகர்குடமூக்கில்
தீர்ப்பாருடலி லடுநோயவலம் வினைகள்நலியாமைக்
காப்பார்கால னடையாவண்ணங் காரோணத்தாரே. சா

ஊனார்தலைகை யேந்தியுலகம் பலிதேர்ந்துழல்வாழ்க்கை
மானார்தோலார் புலியினுடையார் கரியின்னுரிபோர்வை
தேனார்மொழியார் திளைத்தங்காடித் திகழுங்குடமூக்கில்
கானார்நட்ட முடையார்செல்வக் காரோணத்தாரே. எ

வரையார்திரள்தோள் மதவாளரக்க னெடுப்பமலைசேரும்
விரையார்பாத நுதியாலூன்ற நெரிந்துசிரம்பத்தும்
உரையார்கீதம் பாடக்கேட்டங் கொளிவாள்கொடுத்தாரும்
கரையார்பொன்னி சூழ்தண்குடந்தைக் காரோணத்தாரே. அ

கரியமாலுஞ் செய்யபூமே லயனுங்கழறிப்போய்
அரியவண்டந் தேடிப்புக்கு மளக்கவொண்கிலார்
தெரியஅரிய தேவர்செல்வந் திகழுங்குடமூக்கில்
கரியகண்டர் காலகாலர் காரோணத்தாரே. கூ

நாணாரமணர் நல்லதறியார் நாளுங்குரத்திகள்
பேணார்தூய்மை மாசுகழியார் பேசேலவரோடுஞ்
சேணார்மதிதோய் மாடமல்கு செல்வநெடுவீதிக்
கோணாகரமொன் றுடையார்குடந்தைக் காரோணத்தாரே. ம

கருவார்பொழில்சூழ்ந் தழகார்செல்வக் காரோணத்தாரைத்
திருவார்செல்வ மல்குசண்பைத் திகழுஞ்சம்பந்தன்
உருவார்செஞ்சொல் மாலையிவைபத் துரைப்பாருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பதறுத்துக் கவலைகழிவாரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

73. திருக்கானூர்: பண் - தக்கேசி

திறம் : குறிச்சிர் திறம் பண்தார் : நாரதர் தும்புரு

கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

வானூர்சோதி மன்னுசென்னி வன்னிபுனங்கொன்றைத்
தேனூர்போது தானூர்கங்கை திங்களொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
கானூர்மேய கண்ணூர்நெற்றி யானூர்செல்வரே. க

நீந்தலாகா வெள்ளமூழ்கு நீள்சடைதன்மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு கொன்றையெழிலாரப்
போந்தமென்சொ லின்பம்பயந்த மைந்தரவர்போலாங்
காந்தள்விம்மு கானூர்மேய சாந்தநீற்றுரே. உ

சிறையார்வண்டுந் தேனும்விம்மு செய்யமலர்க்கொன்றை
மறையார்பாட லாடலோடு மால்விடைமேல்வருவார்
இறையார்வந்தெ னில்புகுந்தென் னெழில்நலமுங்கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய பிறையார் சடையாரே. ௩

விண்ணூர்திங்கட் கண்ணிவெள்ளை மாலையதுசூடித்
தண்ணூரக்கோ டாமைபூண்டு தழைபுன் சடைதாழ
எண்ணூவந்தெ னில்புகுந்தங் கெவ்வநோய்செய்தான்
கண்ணூர்சோலைக் கானூர்மேய விண்ணோர்பெருமானே. ச

தார்கொள்கொன்றைக் கண்ணியோடுந் தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாட லாடலோடு சேடராய்வந்து
ஊர்கள்தோறு மையமேற்றென் னுள்வெந்நோய்செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய கறைக்கண்டத்தாரே. ரு

முளிவெள்ளெ லும்பு நீறுநூலு மூழ்குமார்பராய்
எளிவந்தார்போ லையமென்றெ னில்லேபுகுந்துள்ளத்
தெளிவுநாணுங் கொண்டகள்வர் தேறலார்பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய ஒளிவெண்பிறையாரே. சா

மூவாவண்ணர் முளைவெண்பிறையர் முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார் பொக்கம்பலபேசிப்
போவார்போல மால்செய் துள்ளம் புக்கபுரி நூலர்
தேவார்சோலைக் கானூர்மேய தேவதேவரே. எ

Koviloor Digital Library

தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிடமோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. அ

அந்தமாதி யயனுமாலு மார்க்குமறிவரியான்
சிந்தையுள்ளு நாவின்மேலுஞ் சென்னியுமன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்துமாலை காலையாடுவான்
கந்தமல்கு கானூர்மேய எந்தைபெம்மானே. கூ

ஆமையரவோ டேனவெண்கொம் பக்குமாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல உள்வெந்நோய்செய்தார்
ஓமவேத நான்முகனுங் கோணாகணையானுஞ்
சேமமாய செல்வர்கானூர் மேயசேடரே. ய

கழுதுதுஞ்சுங் கங்குலாடுங் கானூர்மேயானைப்
பழுதில்ஞான சம்பந்தன்சொற் பத்தும்பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லித்துதித்துநின்
றழுதுநக்கு மன்புசெய்வா ரல்ல லறுப்பாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

74. திருப்புறவம்: பண் - தக்கேசி

திறம் : குறிச்சீர் திறம்

பண்தார் : நாரதர் தும்புரு
கனரகம் : மல்லாரு

திருச்சிற்றம்பலம்

நறவநிறைவண் டறைதார்க்கொன்றை நயந்துநயனத்தாற்
சுறவஞ்செறிவண் கொடியோனுடலம்பொடியாவிழிசெய்தான்
புறவமுறைவண் பதியாமதியார் புரமூன்றெரிசெய்த
இறைவனறவ னிமையோரேத்த உமையோடிருந்தானே. க

உரவன்புலியி னுரிதோலாடை யுடைமேற்படநாகம்
விரவிவிரிபூங் கச்சா அசைத்த விகிர்தனுகிர் தன்னாற்
பொருவெங்களிறு பிளிறவுரித்துப் புறவம்பதியாக
இரவும்பகலு மிமையோரேத்த உமையோடிருந்தானே. உ

பந்தமுடைய பூதம்பாடப் பாதஞ்சிலம்பார்க்கக்
கந்தமல்கு குழலிகாணக் கரிகாட்டெரியாடி
அந்தண்கடல்சூழ்ந் தழகார்புறவம் பதியாவமர்வெய்தி
எந்தம்பெருமா னிமையோரேத்த உமையோடிருந்தானே. ங

Koviloor Digital Library

நினைவார்நினைய இனியான் பனியார் மலர் தூய்நித்தலுங்
கனையார் விடையொன் றுடையான்கங்கை திங்கள்கமழ்கொன்றை
புனைவார்சடையின் முடியான்கடல்சூழ் புறவம்பதியாக
எனையாளுடையா னிமையோரேத்த உமையோடிருந்தானே. ச

செங்கணரவும் நகுவெண்டலையும் முகிழ்வெண்டிங்களுந்
தங்குசடையன் விடையனுடையன் சரிகோவணஆடை
பொங்குதிரைவண் கடல்சூழ்ந்தழகார் புறவம்பதியாக
எங்கும்பரவி யிமையோரேத்த உமையோடிருந்தானே. ரு

பின்னுசடைகள் தாழக்கேழ லெயிறுபிறழப்போய்
அன்னநடையார் மனைகள்தோறு மழகாற்பலிதேர்ந்து
புன்னைமடலின் பொழில்சூழ்ந்தழகார் புறவம்பதியாக
என்னையுடையா னிமையோரேத்த உமையோடிருந்தானே. சா

உண்ணற்கரிய நஞ்சையுண் டொருதோழந்தேவர்
விண்ணற்பொலிய அமுதமளித்த விடைசேர்கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண் டறைபூஞ்சோலைப் புறவம்பதியாக
எண்ணிற்சிறந்த இமையோரேத்த உமையோடிருந்தானே. எ

விண்டானதிர வியனூர்கயிலைவேரோடெடுத்தான்றன்
திண்டோளுடலு முடியுநெரியச் சிறிதேயூன்றிய
புண்டானொழிய அருள்செய்பெருமான் புறவம்பதியாக
எண்டோளுடையா னிமையோரேத்த உமையோடிருந்தானே. அ

நெடியான் நீள்தா மரைமேலயனு நேடிக்காண்கில்லாப்
படியாமேனி யுடையான்பவள வரைபோல்திருமார்பிற்
பொடியார்கோல முடையான் கடல்சூழ் புறவம்பதியாக
இடியார்முழவா ரிமையோரேத்த உமையோடிருந்தானே. கூ

ஆலும்மயிலின் பீலியமணர் அறிவில்சிறுதேரர்
கோலும்மொழிக ளொழியக்குழுவுந் தழலுமெழில்வானும்
போலும்வடிவு முடையான் கடல்சூழ் புறவம்பதியாக
ஏலும்வகையா லிமையோரேத்த உமையோடிருந்தானே. ய

பொன்னார்மாட நீடுஞ்செல்வப் புறவம்பதியாக
மின்னாரிடையா ளுமையாளோடு மிருந்தவிமலனைத்
தன்னார்வஞ்செய் தமிழின்விரக னுரைத்ததமிழ்மாலை
பன்னாள்பாடி யாடப்பிரியார் பரலோகந்தானே. யக

திருச்சிற்றம்பலம்

Koyilpor Digital Library

75. திருவெங்குரு: பண் - குறிஞ்சி

திறம் : நேர்மைத் திறம் பண்தார் : ஈசன்

கனரகம் : அம்சகாம்போதி

திருச்சிற்றம்பலம்

காலைநன்மாமலர் கொண்டடிபரவிக் கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன்
ஓலமதிடமுன் னுயிரொடுமாளவுதைத்தவனுமையவள் விருப்பனெம்பெருமான்
மாலை வந்தணுக ஓதம்வந்துலவி மறிதிரைசங்கொடு பவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள் சூழ்ந்த வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. க

பெண்ணினைப்பாக மமர்ந்துசெஞ்சடைமேற் பிறை யொடுமரவினை யணிந்தழகாகப்
பண்ணினைப்பாடி யாடிமுன் பலிகொள் பரமரெம்மடிகளார் பரிசுகள்பேணி
மண்ணினை மூடி வான்முகடேறி மறிதிரைகடல்முகந் தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கி வந்திழிகோயில் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. உ

ஓரியல்பில்லா வுருவமதாகி யொண்டிறல்வேடன துருவதுகொண்டு
காரிகைகாணத் தனஞ்சயன்றன்னைக் கறுத்தவற்களித்துடன் காதல்செய்பெருமான்
நேரிசையாக அறுபதமுரன்று நிரைமலர்த்தாதுகள் மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும் விம்மியசோலை வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ௩

வண்டணைகொன்றை வன்னியுமத்த மருவியகூவிள மெருக்கொடுமிக்க
கொண்டணிசடையர் விடையினர்பூதங் கொடுகொட்டிகுடமுழாக் கூடியுமுழவப்
பண்டிகழ்வாகப் பாடியொர்வேதம் பயில்வர்முன்பாய்புனற் கங்கையைச்சடை மேல்
வெண்பிறைசூடி யுமையவளோடும் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ச

சடையினர்மேனி நீறதுபூசித் தக்கைகொள்பொக்கண மிட்டுடனகைக்
கடைதொறும்வந்து பலியதுகொண்டு கண்ட வர்மனமவை கவர்ந்தழகாகப்
படையதுவேந்திப் பங்கயக் கண்ணி யுமையவள்பாகமு மமர்ந்தருள் செய்து
விடையொடு பூதஞ் சூழ்தரச்சென்று வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ரு

கரைபொருகடலில் திரையதுமோதக் கங்குல்வந்தேறிய சங்கமுமிப்பி
உரையுடைமுத்த மணலிடைவைகி ஓங்குவானிருளறத் துரப்பவெண்டிசையும்
புரைமலிவேதம் போற்று பூசுரர்கள் புரிந்தவர்நலங்கொளா குதியினில்நிறைந்த
விரைமலிதூபம் விசும்பினைமறைக்கும் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. சா

வல்லிநுண்ணிடையா ளுமையவள் தன்னை மறுகிடவருமத களிற்றினைமயங்க
ஒல்லையிற்பிடித்தங் குரித்தவள்வெருவல் கெடுத்தவர்விரிபொழில் மிகுதிருவாலில்
நல்லற முரைத்து ஞானமோடிருப்ப நலிந்திடலுற்று வந்தவக்கருப்பு
வில்லியைப்பொடிபட விழித்தவர்விரும்பி வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. எ

Koviloor Digital Library

பாங்கிலாவரக்கன் கயிலையன்றெடுப்பப் பலதலைமுடியொடு தோளவைநெரிய
ஓங்கியவிரலா லூன்றியன்றவற்கே ஒளிதிகழ்வாளது கொடுத்தழகாய
கோங்கொடுசெருந்தி கூவிளமத்தங் கொன்றையுங்குலாவிய செஞ்சடைச்செல்வர்
வேங்கைபொன்மலரார் விரைதருகோயில் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. அ

ஆறுடைச்சடையெம் மடிகளைக்காண அரியொடுபிரமனு மளப்பதற்காகிச்
சேறிடைத்திகழ்வா னத்திடைபுக்குஞ் செலவறத்தவிர்ந்தன ரெழிலுடைத்திகழ்வெண்
நீறுடைக்கோல மேனியர்நெற்றிக் கண்ணினர்விண்ணவர் கைதொழு தேத்த
வேறெமையாள விரும்பியவிகிர்தர் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. கூ

பாடுடைக்குண்டர் சாக்கியர்சமணர் பயில்தருமறவுரை விட்டழகாக
ஏடுடைமலராள் பொருட்டுவன் தக்கன் எல்லையில்வேள்வியைத் தகர்த்தருள்செய்து
காடிடைக்கடிநாய் கலந்துடன்சூழக் கண்டவர்வெருவுற விளித்துவெய்தாய
வேடுடைக்கோலம் விரும்பியவிகிர்தர் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ய

விண்ணியல்விமானம் விரும்பியபெருமான் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணியநூலன் ஞானசம்பந்தன் நவின்றஇவ்வாய்மொழி நலமிகுபத்தும்
பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியுமாடியும் பயிலவல்லார்கள்
விண்ணவர்விமானங் கொடுவரஏறி வியனுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

76. திருஇலம்பையங்கோட்டூர் : பண் - குறிஞ்சி

திறம் : ஆசான் திறம்

பண்தார் : ஈசன்

கனரகம் : கும்பகாம்போதி

திருச்சிற்றம்பலம்

மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு மாசிலாச்சீர் மறைக் காடுநெய்த்தானம்
நிலையினானெனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கலையினார் மடப்பிணைதுணை யொடுந்துயிலக் கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார்பைம்பொழி லிலம்பையங்கோட்டு ரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. க

திருமலர்க்கொன்றையான் நின்றியூர்மேயான் தேவர்கள் தலைமகன் திருக்கழிப்பாலை
நிருமலனென துரை தனதுரையாக நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கருமலர்க்கமழ் சுனை நீள்மலர்க்குவளை கதிர்முலையிளையவர் மதிமுகத்துலவும்
இருமலர்த்தண்பொய்கை இலம்பையங்கோட்டு ரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. உ

Koviloor Digital Library

பாலனும்விருத்தனும் பசுபதிதானும் பண்டுவெங்கூற்றுதைத் தடியவர்க்கருளும்
காலனுமெனதுரை தனதுரையாகக் கனலெரியங்கையி லேந்தியகடவுள்
நீலமாமலர்ச்சுனை வண்டு பண்செய்ய நீர்மலர்க்குவளைகள் தாதுவிண்டோங்கும்
ஏல நாறும்பொழி லிலம்பையங்கோட்டு ரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௩

உளங்கொள்வாருச்சியார் கச்சியேகம்பன் ஒற்றியூருறையுமண் ணுமலையண்ணல்
விளம்புவானெனதுரை தனதுரையாக வெள்ளநீர் விரிசடைத் தாங்கியவிமலன்
குளம் புறக்கலைதுள மலைகளுஞ்சிலம்பக் கொழுங்கொடியெழுந்தெங்கும்
கூவிளம்கொள்ள
இளம்பிறைதவழ்பொழி லிலம்பையங்கோட்டு ரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௪

தேனுமாயமுதுமாய்த் தெய்வமுந்தானாய்த் தீயொடுநீருடன் வாயுவாந்தெரியில்
வானுமாமென துரை தனதுரையாக. வரியராஅரைக்கசைத் துழிதருமைந்தன்
கானமான் வெருவுறக் கருவிரலூகங் கடுவனேடுகளுமூர் கற்கடுஞ்சாரல்.
ஏன மானுழிதரு மிலம்பையங்கோட்டு ரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௫

மனமுலாமடியவர்க் கருள்புரிகின்ற வகையலாற்பலிதிரிந் துண்பிலான் மற்றோர்
தனமிலானெனதுரை தனதுரையாகத் தாழ்சடை யிளமதி தாங்கிய தலைவன்
புனமெலாமருவிக ளிரு விசேர்முத்தம் பொன்னெடுமணிகொழித் தீண்டிவந்தெங்கும்
இனமெலாமடைகரை இலம்பையங்கோட்டு ரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௬

நீருளான்தீயுளா னந்தரத்துள்ளான் நினைப்பவர்மனத்துளான் நித்தமாஏத்தும்
ஊருளானெனதுரை தனதுரையாக ஒற்றைவெள்ளேறுகந் தேறியவொருவன்
பாருளார் பாடலோ டாடலருத பண்முரன்றஞ்சிறை வண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழி லிலம்பையங்கோட்டு ரிருக்கையாப் பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௭

வேருலாமாழ்கடல் வருதிரையிலங்கை வேந்தன தடக்கைக ளடர்த்தவனுலகில்
ஆருலாமெனதுரை தனதுரையாக ஆகமோரரவணிந் துழிதருமண்ணல்
வாருலாநல்லன மாக்களுஞ்சார வாரணமுழிதரு மல்லலங்கானல்
ஏருலாம்பொழிலணி இலம்பையங்கோட்டு ரிருக்கையாப் பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௮

கிளர்மழைதாங்கினன் நான்முகமுடையோன் கீழடி மேல்முடிதேர்ந்தளக்கில்லா
உளமழையெனதுரை தனதுரையாக வொள்ளழ லங்கையி லேந்தியவொருவன்

Koviloor Digital Library
வளமழையெனக்கழை வளர்துளிசோர மாசுணமுழிதரு மணியணிமாலை
இளமழைதவழ்பொழி லிலம்பையங் கோட்டூரிருக்கையாப்பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௯

உரிஞ்சனகூறைகள் உடம்பினராகி உழிதருசமணருஞ் சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரை தனதுரையாகப் பெய்பலிக்கென்றுழல் பெரியவர்பெருமான்
கருஞ்சுனைமுல்லைநன் பொன்னடைவேங்கை களிமுகவண்டொடு தேனினமுரலும்
இருஞ்சுனைமல்கிய இலம்பையங்கோட்டூரிருக்கையாப் பேணியென்
னெழில்கொள்வதியல்பே. ௰

கந்தனைமலிகனை கடலொலியோதங் கானலங்கழிவளர் கழுமலமென்னும்
நந்தியாருறைபதி நான்மறைநாவன் நற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்தன்
எந்தையார்வளநக ரிலம்பையங்கோட்டூ ரிசையொடுகூடிய பத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிட விண்ணவரோடும் வீடுபெற்றிம்மையின் வீடெளிதாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

77. திருஅச்சிறுபாக்கம் : பண் - குறிஞ்சி

திறம் : நைவளத்திறம் | பண்தார் : ஈசன்
கனரகம் : சஞ்சுகாம்போதி

திருச்சிற்றம்பலம்

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப் பொருகடற்பவளமொ டழல்நிறம்புரையக்
குன்றிரண்டன்ன தோளுடையகலங் குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை மெல்லியலாளையோர் பாகமாப்பேணி
அன்றிரண்டுருவ மாயவெம்மடிகளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ௧

தேனினுமினியர் பாலனநீற்றர் தீங்கரும்பனையர்தந் திருவடிதொழுவார்
ஊன்நயந்துருக உவகைகள்தருவா ருச்சிமேலுறைபவ ரொன்றலாதூரார்
வானகமிறந்து வையகம் வணங்க வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையினுரிவை போர்த்தவெம்மடிக ளச்சிறுபாக்கம் தாட்சிகொண்டாரே. ௨

காரிருளுருவ மால்வரைபுரையக் களிற்றின துரிவை கொண் டரிவைமேலோடி.
நீருருமகளை நிமிர்சடைத்தாங்கி நீறணிந்தேறுகந் தேறியநிமலர்
பேரருளாளர் பிறவியிற் சேரார் பிணியிலர்கேடிலர் பேய்க்கணஞ்சூழ.
ஆரிருண்மாலை யாடுமெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ௩

மைம்மலர்க்கோதை மார்பினரெனவு மலைமகளவளொடு மருவினரெனவுஞ்.
செம்மலர்ப்பிறையுஞ் சிறையணிபுனலுஞ் சென்னிமேலுடையரெஞ்
சென்னிமேலுறைவார்

Koviloor Digital Library

தம்மலரடி யொன் றடியவர்பரவத் தமிழ்ச்சொலும்வடசொலுந் தாள் நிழற்சேர
அம்மலர்க்-கொன்றை யணிந்தவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ௪

விண்ணுலாமதியஞ் சூடினரெனவும் விரிசடையுள்ளது வெள்ளிநீரெனவும்
பண்ணுலாமறைகள் பாடினரெனவும் பலபுகழல்லது பழியிலரெனவும்
எண்ணலாகாத இமையவர் நாளு மேத்தரவங்களோ டெழில்பெறநின்ற
அண்ணலானூர்தி யேறுமெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ௫

நீடிருஞ்சடைமே லிளம்பிறைதுளங்க நிழல்திகழ்மழு வொடு நீறுமெய்பூசித்.
தோடொருகாதினிற் பெய்துவெய் தாய சுடலையிலாடுவர் தோலுடையாகக்.
காடரங்காகக் கங்குலும்பகலுங் கழுதொடுபாரிடங் கைதொழுதேத்த
ஆடர வாட ஆடுமெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ௬

ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி யிளங்கிளையரிவையொ டொருங்குடனாகிக்
கூறுமொன்றருளிக் கொன்றையந்தாருங் குளிரிளமதியமுங் கூவிளமலரும்
நாறுமல்லிகையு மெருக் கொடுமுருக்கு மகிழிளவன்னியு மிவைநலம்பகர
ஆறுமொர்சடைமே லணிந்தவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண் டாரே. ௭

கச்சுமொள்வாளுங் கட்டியவுடையர் கதிர்முடிசுடர்விடக் கவரியுங்குடையும்
பிச்சமும்பிறவும் பெண்ணணங்காய பிறை நுதலவர்தமைப் பெரியவர்பேணப்
பச்சமும்வலியுங் கருதிய அரக்கன் பருவரையெடுத்ததிண் டோள்களையடர்வித்
தச்சமுமருளுங் கொடுத்தவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே. ௮

நோற்றலாரேனும் வேட்டலாரேனும் நுகர்புகர்சாந்தமொ டேந்தியமாலைக்
கூற்றலாரேனு மின்னவாறென்று மெய்தலாகாததொ ரியல்பினையுடையார்
தோற்றலார்மாலு நான்முகமுடைய தோன்றலு மடியொடு முடியுறத்தங்கள்
ஆற்றலாற்காணு ராயவெம்மடிக ளச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே. ௯

வாதுசெய்சமணுஞ் சாக்கியப்பேய்கள் நல்வினைநீக்கிய வல்வினையாளர்.
ஓதியுங்கேட்டு முணர்வினையிலாதா ருள்கலா காததோ ரியல்பினையுடையார்.
வேதமும்வேத நெறிகளுமாகி விமலவேடத்தொடு கமலமாமதிபோல்.
ஆதியுமீறு மாயவெம் மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. ௰

மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய மதுமலர்ப்பொய் கையிற் புதுமலர்கிழியப்
பச்சிறவெறிவயல் வெறிகமழ் காழிப் பதியவரதிபதி கவுணியர்பெருமான்
கைச்சிறுமறியவன் கழலலாற்பேணுக் கருத்துடைஞானசம் பந்தனதமிழ்
கொண் டச்சிறுபாக்கத் தடிகளையேத்து மன்புடையடியவரருவினையிலரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

78. திருஇடைச்சுரம் : பண் - குறிஞ்சி

திறம் : நைவளத் திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : சஞ்சுகாம்போதி

திருச்சிற்றம்பலம்

வரிவளரவிரொளி யரவரைதாழ வார்சடைமுடிமிசை வளர்மதிசூடிக்
கரிவளர் தருகழல் கால்வலனேந்திக் கனலெரியாடுவர் காடரங்காக
விரிவளர் தருபொழி லிளமயிலால வெண்ணிறத்தருவிகள் திண்ணெனவீழும்
எரிவளரினமணி புனமணிசார லிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. ௧

ஆற்றையுமேற்றதோ ரவிர்சடையுடைய ரழகினையருளுவர் குழகலதறியார்
கூற்றுயிர்செகுப்பதோர் கொடுமையையுடையர் நடுவிருளாடுவர் கொன்றையந்தாரார்
சேற்றயல் மிளிர்வன கயலிளவாளை செருச்செயவோர்ப்பன செம்முக மந்தி
ஏற்றையொடுழிதரு மெழில்திகழ்சார லிடைச்சுர மேவிய இவர்வணமென்னே. ௨

கானமுஞ்சுடலையுங் கற்படுநிலனுங் காதலர்தீதிலர் கனல்மழுவாளர்
வானமுநிலமையு மிருமையுமானர் வணங்கவுமிணங்கவும் வாழ்த்தவும்படுவார்
நானமும்புகையொளி விரையொடுகமழ நளிர்பொழிலிளமஞ்ஞை மன்னியபாங்கர்
ஏனமும் பிணையலு மெழில்திகழ்சார லிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. ௩

கடமணிமார்பினர் கடல்தனிலுறைவார் காதலர்தீதிலர் கனல்மழுவாளர்
விடமணிமிடறினர் மிளிர்வதோரரவர் வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர்
வடமுலையயலன கருங்குருந்தேறி வாழையின் தீங்கனி வார்ந்துதேனட்டும்
இடமுலையரிவைய ரெழில்திகழ்சார லிடைச்சுரமேவிய இவர்வணமென்னே ௪

கார்கொண்டகடிகமழ் விரிமலர்க்கொன்றைக் கண்ணியர் வளர்மதி கதிர்விடக்கங்கை
நீர்கொண்டசடையினர் விடையுயர்கொடியர் நிழல்திகழ்மழுவின ரழல்திகழ்நிறத்தர்
சீர் கொண்டமென்சிறை வண்டுபண்செய்யும் செழும்புனலனையன செங்குலைவாழை
ஏர்கொண்டபலவினொ டெழில்திகழ் சார லிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. ௫

தோடணிகுழையினர் சுண்ணவெண்ணீற்றர் சுடலையினாடுவர் தோலுடையாகப்
பீடுயர்செய்ததோர் பெருமையையுடையர் பேயுடனாடுவர் பெரியவர்பெருமான்
கோடல்களொழுகுவ முழுகுவதும்பி குரவமுமரவமு மன்னியபாங்கர்
ஏடவிழ்புதுமலர் கடிகமழ்சார லிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. ௬

கழல்மல்குகாலினர் வேலினர்நூலர் கவர்தலையரவொடு கண்டியும் பூண்பர்
அழல்மல்குமெரியொடு மணிமழுவேந்தி யாடுவர்பாடுவ ராரணங்குடையர்
பொழில்மல்குநீடிய அரவமுமரவ மன்னியகவட்டிடைப் புணர்குயிலாலும்
எழில்மல்கு சோலையில் வண்டிசைபாடு மிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. ௭

Koviloor Digital Library

தேங்கமழ்கொன்றையந் திருமலர்புனைவார் திகழ்தரு சடைமிசைத் திங்களுஞ்சூடி
வீந்தவர்சுடலைவெண் ணீறு மெய்பூசி வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர்
சாந்தமு மகிலொடு முகில்பொதிந்தலம்பித் தவழ்கனமணியொடு மிகு பளிங்கிடறி
ஏந்துவெள்ளருவிக ளெழில்திகழ்சார லிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. அ

பலஇலமிடுபலி கையிலொன்றேற்பர் பலபுகழல்லது பழியிலர்தாமும்
தலையிலங்கவிறொளி நெடுமுடியரக்கன் தடக்கைகளடர்த்ததோர் தன்மையையுடையர்
மலையிலங் கருவிகள் மணமுழவதிர மழைதவழிளமஞ்ஞை மல்கிய சாரல்.
இலைஇலவங்கமு மேலமுங்கமழு மிடைச்சுரமேவிய இவர்வணமென்னே. கூ

பெருமைகள்தருக்கியோர் பேதுறுகின்ற பெருங்கடல் வண்ணனும்
பிரமனுமோரா அருமையரடிநிழல் பரவிநின்றேத்து மன்புடையடியவர்க்
கணியருமாவர் கருமைகொள் வடிவொடு சுனைவளர்குவளைக் கயலினம்வயலிள
வாளைகளிரிய எருமைகள்படிதர இளஅனமாலு மிடைச்சுரமேவிய
இவர்வணமென்னே. ம

மடைச்சுரமறிவன வாளையுங்கயலும் மருவியவயல் தனில் வருபுனற்காழிச்
சடைச்சுரத்துறைவதோர் பிறையுடையண்ணல் சரிதைகள்பரவிநின் றுருகுசம்பந்தன்
புடைச்சுரத்தருவரைப் பூக்கமழ்சாரற் புணர்மடநடையவர் புடையிடையார்ந்த
இடைச்சுரமேத்திய இசையொடுபாட லிவைசொலவல்லவர் பிணியிலர்தாமே.மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

79. திருக்கழுமலம் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்

கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

அயிலுறுபடையினர் விடையினர்முடிமே லரவமும் மதியமும் விரவியஅழகர்
மயிலுறுசாயல வனமுலையொரு பால் மகிழ்பவர்வானிடை முகில்புல்குமிடறர்
பயில்வுறு சரிதைய ரெருதுகந்தேறிப் பாடியுமாடியும் பலிகொள்வர்வலிசேர்
கயிலையும்பொதியிலு மிடமெனவுடையார் கழுமல நினையநம் வினைகரிசறுமே. க

கொண்டலுநீலமும் புரைதிருமிடறர் கொடுமுடியுறைபவர் படுதலைக்கையர்
பண்டலரயன்சிர மரிந்தவர்பொருந்தும் படர்சடையடிகளார் பதியதனயலே
வண்டலும் வங்கமுஞ் சங்கமுஞ்சுறவும் மறிகடல்திரைகொணர்ந் தெற்றிய கரைமேற்
கண்டலுங்கைதையும் நெய்தலுங்குலவுங் கழுமல நினையநம் வினைகரிசறுமே. உ

Koviloor Digital Library

எண்ணிடையொன்றினர் இரண்டினருருவ மெரியிடை மூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடைஐந்தின ராறினராங்கம் வகுத்தனரேழிசை யெட்டிருங்கலைசேர்
பண்ணிடையொன்பது முணர்ந்தவர்பத்தர் பாடிநின்றடிதொழ மதனனை வெகுண்ட
கண்ணிடைக்கனலினர் கருதியகோயில் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௩

எரியொருகரத்தின ரிமையவர்க்கிறைவ ரேறுகந்தேறுவர் நீறுமெய்பூசித்
திரிதருமியல்பின ரயலவர்புரங்கள் தீயெழவிழித்தனர் வேய்புரைதோளி
வரிதருகண்ணிணை மடவரலஞ்ச மஞ்சுறநிமிர்ந்ததோர் வடிவொடும்வந்த
கரியுரிமருவிய அடிகளுக்கிடமாங் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௪

ஊரெதிர்ந்திடுபலி தலைகலனாக வுண்பவர்விண்பொலிந்திலங்கியவுருவர்
பாரெதிர்ந்தடிதொழ விரைதருமார்பிற் படஅரவாமையக் கணிந்தவர்க்கிடமாம்
நீரெதிர்ந்திழிமணி நித்திலமுத்தம் நிரைசுரிசங்கமொ டொண்மணிவரன்றிக்
காரெதிர்ந்தோதம்வன் றிரைகரைக்கெற்றுங் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௫

முன்னுயிர்த் தோற்றமு மிறுதியுமாகி முடியுடையமரர் களடிபணிந்தேத்தப்
பின்னியசடைமிசைப் பிறைநிறைவித்த பேரருளாளனுர் பேணியகோயில்
பொன்னியல் நறுமலர் புனலொடுதூபஞ் சாந்தமுமேந்திய கையினராகிக்
கன்னியர் நாள்தொறும் வேடமேபரவுங் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௬

கொலைக்கணித்தாவரு கூற்றுதைசெய்தார் குரைகழல் பணிந்தவர்க் கருளியபொருளின்
நிலைக்கணித்தாவர நினைய வல்லார்தந் நெடுந்துயர் தவிர்த்தஎந்
நிமலருக்கிடமாம் மலைக்கணித்தாவர வன்றிரைமுரல மதுவிரிபுன்னைகள்
முத்தெனஅரும்பக் கலைக்கணங்கானலின் நீழலில்வாழுங் கழுமல நினையநம்
வினைகரிசறுமே. ௭

புயம்பலவுடையதென் னிலங்கையர்வேந்தன் பொருவரையெடுத்தவன்
பொன்முடிதிண்டோள்
பயம்பலபட அடர்த் தருளியபெருமான் பரிவொடுமினிதுறை கோயிலதாகும்
வியன்பலவிண்ணினும் மண்ணினுமெங்கும் வேறு வேறுகங்களிற்
பெயருளதென்னக்
கயம்பலபடக்கடற்றிரைகரைக்கெற்றுங் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௮

விலங்கலொன்றேந்திவன் மழைதடுத்தோனும் வெறிகமழ்தாமரை
யோனுமென்றிவர்தம்
பலங்களால்நேடியு மறிவரியதாய பரிசினன்மருவிநின் றினிதுறைகோயில்
மலங்கிவன்றிரைவரை யெனப்பரந்தெங்கும் மறிகடலோங்கி வெள்ளிப்பியுஞ்சுமந்து
கலங்கடன்சுரக்கொடு நிரக்கவந்தேறுங் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௯

ஆம்பலதவமுயன் றறவுரைசொல்லு மறிவிலாச்சமணருந் தேரருங்கணிசேர்
நோம்பலதவமறி யாதவர்நொடிந்த மூதுரைகொள்கிலா முதல்வர்தம்மேனிச்

Koviloor Digital Library

சாம்பலும்பூசி வெண் டலைகலனாகத் தையலாரிடுபலி வையகத்தேற்றுக்
காம்பனதோளியொ டினிதுறைகோயில் கழுமல நினையநம் வினைகரிசறுமே. ௰

கலிகெழுபாரிடை யூரெனவுளதாங் கழுமலம்விரும்பிய கோயில் கொண்டவர்மேல்
வலிகெழுமனமிக வைத்தவன் மறைசேர் வருங்கலை-ஞானசம் பந்தனதமிழின்
ஒலிகெழு மாலையென் றுரைசெய்தபத்து முண்மையினால்நினைந் தேத்த வல்லார்மேல்
மெலிகெழுதுயரடை யாவினைசிந்தும் விண்ணவராற்றலின் மிகப்பெறுவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

80. கோயில் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஈசன்

கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. க

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. உ

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே. ௩

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே. ௪

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. ரு

Koviloor Digital Library

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. ௬

அலையார் புனல்சூடி யாகத் தொருபாக
மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. ௭

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே. ௮

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. ௯

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. ௰

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

81. சீகாழி : பண் - குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்றான் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே. ௧

Koviloor Digital Library

துளிவண் டேன்பாயு மிதழி தூமத்தந்
தெளிவெண் திங்கள்மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் டலைமாலை யுகந்தா னூர்போலுங்
களிவண் டியாழ்செய்யுங் காழிந் நகர்தானே. ௨

ஆலங் கோலத்தின் நஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் தன்மையால்
பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தால்
காலற் காய்ந்தானூர் காழிந் நகர்தானே. ௩,௪,௫,௬,௭

இரவில் திரிவோர்கட் கிறைதோ ளிணைபத்தும்
நிரவிக் கரவாளை நேர்ந்தா னிடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பால்நீ றணிவோர்க்குங்
கரவில் தடக்கையார் காழிந் நகர்தானே. ௮

மாலும் பிரமனு மறியா மாட்சியான்
தோலும் புரிநூலுந் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலு மிறந்தோர்க் கெந்நாளுங்
காலம் பகராதார் காழிந் நகர்தானே. ௯

தங்கை யிடவுண்பார் தாழ்ச்சி வரத்தார்கள்
பொங்கை யுணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை யொருபாக மகிழ்ந்தான் மலர்ச்சென்னிக்
கங்கை தரித்தானூர் காழிந் நகர்தானே. ௰

வாசங் கமழ்காழி மதிசெஞ் சடைவைத்த
ஈசன் நகர்தன்னை யிணையில் சம்பந்தன்
பேசுந் தமிழ்வல்லோர் பெருநீ ருலகத்துப்
பாசந் தனையற்றுப் பழியில் புகழாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

82. திருவீழிமிழலை : பண் - குறிஞ்சி

திறம் : குறிச்சித்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

இரும்பொன் மலைவில்லா எரியம் பாநாணில்
திரிந்த புரமூன்றுஞ் செற்ற ஞுறைகோயில்
தெரிந்த அடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழி மிழலையே. ௧

Koviloor Digital Library

வாதைப் படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடல்நஞ்சை யுண்டா னுறைகோயில்
கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலியோவா வீழி மிழலையே. உ

பயிலும் மறையாளன் தலையிற் பலிகொண்டு
துயிலும் பொழுதாடுஞ் சோதி யுறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் மிளவேயும்
வெயிலும் போல்மாதர் வீழி மிழலையே. ௩

இரவன் பகலோனு மெச்சத் திமையோரை
நிரவிட் டருள்செய்த நிமலன் னுறைகோயில்
குரவஞ் சுரபுன்னை குளிர்கோங் கிளவேங்கை
விரவும் பொழிலந்தண் வீழி மிழலையே. ச

கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமா னுறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே. ரு

மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோ டீந்தா னுறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே. சா

மதியால் வழிபட்டான் வாணாள் கொடுபோவான்
கொதியா வருகூற்றைக் குமைத்தா னுறைகோயில்
நெதியான் மிகுசெல்வர் நித்த நியமங்கள்
விதியால் நிற்கின்றார் வீழி மிழலையே. எ

எடுத்தான் தருக்கினை யழித்தான் விரலூன்றிக்
கொடுத்தான் வாளாளாக் கொண்டா னுறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே. அ

கிடந்தா னிருந்தானுங் கீழ்மேற் காணாது
தொடர்ந்தாங் கவரேத்தச் சுடரா யவன்கோயில்
படந்தாங் கரவல்குற் பவளத் துவர்வாய்மேல்
விடந்தாங் கியகண்ணார் வீழி மிழலையே. சு

சிக்கார் துவராடைச் சிறுதட் டுடையாரும்
நக்காங் கலர்தூற்றும் நம்பா னுறைகோயில்

Koviloor Digital Library

தக்கார் மறைவேள்வித் தலையா யுலகுக்கு
மிக்கா ரவர்வாழும் வீழி மிழலையே ம

மேனின் றிழிகோயில் வீழி மிழலையுள்
ஏனத் தெயிற்றானை யெழிலார் பொழிற்காழி
ஞானத் துயர்கின்ற நலங்கொள் சம்பந்தன்
வாய்மைத் திவைசொல்ல வல்லோர் நல்லோரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

83. திருஅம்பர்மாகாளம் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

அடையார் புரமூன்று மனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே. க

தேனார் மதமத்தந் திங்கள் புனல்சூடி
வானார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஊனார் தலைதன்னிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலேத்த அல்ல லடையாவே. உ

திரையார் புனலோடு செல்வ மதிசூடி
விரையார் பொழிலம்பர் மாகா ளம்மேய
நரையார் விடையூரு நம்பான் கழல்நாளும்
உரையா தவர்கண்மே லொழியா வூனம்மே. ந

கொந்தண் பொழிற்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலியம்பர் மாகா ளம்மேய
கந்தங் கமழ்கொன்றை கமழ்புன் சடைவைத்த
எந்தை கழலேத்த இடர்வந் தடையாவே. ச

அணியார் மலைமங்கை யாகம் பாகமாய்
மணியார் புனலம்பர் மாகா ளம்மேய
துணியா ருடையினான் துதைபொற் கழல்நாளும்
பணியா தவர்தம்மேற் பறையா பாவம்மே. ரு

Koviloor Digital Library

பண்டாழ் கடல்நஞ்சை யுண்டு களிமாந்தி
வண்டார் பொழிலம்பர் மாகா ளம்மேய
விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக் குறுகா குற்றம்மே. சா

மிளிரும் மரவோடு வெள்ளைப் பிறைசூடி
வளரும் பொழிலம்பர் மாகா ளம்மேய
கிளருஞ் சடையண்ணல் கேடில் கழலேத்தத்
தளரும் முறுநோய்கள் சாருந் தவந்தானே. எ

கொலையார் மழுவோடு கோலச் சிலையேந்தி
மலையார் புனலம்பர் மாகா ளம்மேய
இலையார் திரிசூலப் படையான் கழல்நாளும்
நிலையா நினைவார்மேல் நில்லா வினைதானே. அ

சிறையார் வரிவண்டு தேனுண் டிசைபாட
மறையார் நிறையம்பர் மாகா ளம்மேய
நறையார் மலரானும் மாலுங் காண்பொண்ணு
இறையான் கழலேத்த எய்தும் மின்பம்மே. கூ

மாசூர் வடிவின்னுர் மண்டை யுணல்கொள்வார்
கூசா துரைக்குஞ்சொற் கொள்கை குணமல்ல
வாசார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஈசா என்பார்கட் கில்லை யிடர்தானே. ய

வெருநீர் கொளவோங்கும் வேணு புரந்தன் னுள்
திருமா மறைஞான சம்பந்தன சேணுர்
பெருமான் மலியம்பர் மாகா ளம்பேணி
உருகா வுரைசெய்வா ருயர்வா னடைவாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

84. திருநாகைக்காரோணம் : பண் - குறிஞ்சி

திறம் : நேர்மைத்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : அம்சகாம்போதி

திருச்சிற்றம்பலம்

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடல்நாகைக் காரோ ணத்தானே. க

Koviloor Digital Library

பெண்ணா ணெனநின்ற பெம்மான் பிறைச்சென்னி
அண்ணா மலைநாட னாரூ ருறையம்மான்
மண்ணார் முழவோவா மாடந் நெடுவீதிக்
கண்ணார் கடல்நாகைக் காரோ ணத்தானே. உ

பாரோர் தொழவிண்ணோர் பணியம் மதில்மூன்றும்
ஆரா ரழலூட்டி யடியார்க் கருள்செய்தான்
தேரார் விழவோவாச் செல்வன் திரைசூழ்ந்த
காரார் கடல்நாகைக் காரோ ணத்தானே. ௩

மொழிசூழ் மறைபாடி முதிருஞ் சடைதன்மேல்
அழிசூழ் புனலேற்ற அண்ணல் லணியாய
பழிசூழ் விலராய பத்தர் பணிந்தேத்தக்
கழிசூழ் கடல்நாகைக் காரோ ணத்தானே. ச

ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருள்நல்கிச்
சேணின் றவர்க்கின்னஞ் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்
காணுங் கடல்நாகைக் காரோ ணத்தானே. ரு

ஏனத் தெயிறோடும் அரவ மெய்பூண்டு
வானத் திளந்திங்கள் வளருஞ் சடையண்ணல்
ஞானத் துரைவல்லார் நாளும் பணிந்தேத்தக்
கானற் கடல்நாகைக் காரோ ணத்தானே. சா

அரையா ரழல்நாக மக்கோ டசைத்திட்டு
விரையார் வரைமார்பின் வெண்ணீ றணியண்ணல்
வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடல்நாகைக் காரோ ணத்தானே. எ

வலங்கொள் புகழ்பேணி வரையா லுயர்திண்டோள்
இலங்கைக் கிறைவாட அடர்த்தங் கருள்செய்தான்
பலங்கொள் புகழ்மண்ணிற் பத்தர் பணிந்தேத்தக்
கலங்கொள் கடல்நாகைக் காரோ ணத்தானே. அ

திருமா லடிவீழத் திசைநான் முகனேத்தப்
பெருமா னெனநின்ற பெம்மான் பிறைசென்னிச்
செருமால் விடையூருஞ் செல்வன் திரைசூழ்ந்த
கருமால் கடல்நாகைக் காரோ ணத்தானே. கூ

நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற அடியார்க் கருள்செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடல்நாகைக் காரோ ணத்தானே. ௰

Koviloor Digital Library

கரையார் கடல்நாகைக் காரோ ணம்மேய
நரையார் விடையானை நவிலுஞ் சம்பந்தன்
உரையார் தமிழ்மாலை பாடு மவரெல்லாம்
கரையா வுருவாகிக் கலிவா னடைவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖

85. திருநல்லம் : பண் - குறிஞ்சி

திறம் : நேர்மைத்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : அம்சகாம்போதி

திருச்சிற்றம்பலம்

கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லான் நமையாள்வான் நல்ல நகரானே. ௧

தக்கன் பெருவேள்வி தன்னி லமரரைத்
துக்கம் பலசெய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் னிறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் நமையாள்வான் நல்ல நகரானே. ௨

அந்தி மதியோடு மரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட் டெரியாடி
சிந்தித் தெழவல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி நமையாள்வான் நல்ல நகரானே. ௩

குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் மரவோடு வெண்ணூல் திகழ்மார்பில்
தளிருந் திகழ்மேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்ல நகரானே. ௪

மணியார் திகழ்கண்டம் முடையான் மலர்மல்கு
பிணிவார் சடையெந்தை பெருமான் கழல்பேணித்
துணிவார் மலர்கொண்டு தொண்டர் தொழுதேத்த
நணியான் நமையாள்வான் நல்ல நகரானே. ௫

வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசுஞ் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் னெனவுள்கி யெழுவார் வினைகட்கு
நாசன் நமையாள்வான் நல்ல நகரானே. ௬

Koviloor Digital Library

அங்கோல் வளைமங்கை காண அனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக
வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்
நங்கோன் நமையாள்வான் நல்ல நகரானே. எ

பெண்ணார் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணார் நுதலினன் கயிலை கருத்திலல்
எண்ணா தெடுத்தானை யிறையே விரலூன்றி
நண்ணார் புரமெய்தான் நல்ல நகரானே. அ

நாகத் தணையானும் நளிர்மா மலரானும்
போகத் தியல்பினாற் பொலிய அழகாகும்
ஆகத் தவளோடு மமர்ந்தங் கழகாரும்
நாகம் மரையார்த்தான் நல்ல நகரானே. கூ

குறியில் சமணோடு குண்டர் வண்தேரர்
அறிவில் லுரைகேட்டங் கவமே கழியாதே
பொறிகொள் ளரவார்த்தான் பொல்லா வினைதீர்க்கும்
நறைகொள் பொழில்சூழ்ந்த நல்ல நகரானே. ய

நலமார் மறையோர்வாழ் நல்ல நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சை யமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

86. திருநல்லூர் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே. க

ஏறி லெருதேறு மெழிலா யிழையோடும்
வேறும் முடனுமாம் விகிர்த ரவரென்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் மடியார்கட் கடையா குற்றமே. உ

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூரூ ரிடுபிச்சை
நாடுந் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் மடியார்கட் கடையா பாவமே. ௩

நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழு
தேத்து மடியார்கட் கில்லை யிடர்தானே. ௪

ஆகத் துமைகேள்வ னரவச் சடைதாழ
நாகம் மசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந்தண்மித் தாள்கள் தொழுந்தொண்டர்
போகம் மனத்தராய்ப் புகழத் திரிவாரே. ௫

கொல்லுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லு நெறியானைச் சேர்ந்தா ரிடர்தீரச்
சொல்லு மடியார்க ளறியார் துக்கமே. ௬

எங்கள் பெருமானை யிமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லாத்
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற் றறுப்பாரே. ௭

காம னெழில்வாட்டிக் கடல்சூ ழிலங்கைக்கோன்
நாம மிறுத்தானை நல்லூர்ப் பெருமானை
ஏம மனத்தாரா யிகழா தெழுந்தொண்டர்
தீப மனத்தார்க ளறியார் தீயவே. ௮

வண்ண மலரானும் வைய மளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த
எண்ணு மடியார்கட் கில்லை யிடுக்கனே. ௯

பிச்சக் குடைநீழற் சமணர் சாக்கியர்
நிச்ச மலர்தூற்ற நின்ற பெருமானை
நச்சு மிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சு மடியார்கட் கில்லை யிடர்தானே. ௰

தண்ணம் புனற்காழி ஞான சம்பந்தன்
நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை

Koviloor Digital Library

வண்ணம் புனைமாலை வைகு லேத்துவார்
விண்ணுந் நிலனுமாய் விளங்கும் புகழாரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

87. திருவடுகூர் : பண் - குறிஞ்சி

திறம் : நேர்மைத்திறம்
பண்தார் : ஈசன்
கனரகம் : அம்சகாம்போதி

திருச்சிற்றம்பலம்

சுடுகூ ரெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே. க

பாலுந் நறுநெய்யுந் தயிரும் பயின்றாடி
ஏலுஞ் சுடுநீறு மென்பு மொளிமல்கக்
கோலம் பொழிற்சோலைக் கூடி மடஅன்னம்
ஆலும் வடுகூரி லாடும் மடிகளே. உ

சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதன்மேல்
ஓடுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
ஏடு மலர்மோந்தங் கெழிலார் வரிவண்டு
பாடும் வடுகூரி லாடும் மடிகளே. ௩

துவரும் புரிசையுந் துதைந்த மணிமாடம்
கவர வெரியோட்டிக் கடிய மதிலெய்தார்
கவரு மணிகொல்லைக் கடிய முலைநல்லார்
பவரும் வடுகூரி லாடும் மடிகளே. ச

துணியா ருடையாடை துன்னி யரைதன்மேல்
தணியா அழல்நாகந் தரியா வகைவைத்தார்
பணியா ரடியார்கள் பலரும் பயின்றேத்த
அணியார் வடுகூரி லாடும் மடிகளே. ரு

தளருங் கொடியன்னாள் தன்னோ டுடனாகிக்
கிளரு மரவார்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண் டிசைபாட
ஒளிரும் வடுகூரி லாடும் மடிகளே. சா

நெடியர் சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர் விடையூர்வர் கொடியர் மொழிகொள்ளார்

Koviloor Digital Library

கடிய தொழிற்காலன் மடிய வுதைகொண்ட
அடியர் வடுகூரி லாடும் மடிகளே. எ

பிறையு நெடுநீரும் பிரியா முடியினுர்
மறையும் பலபாடி மயானத் துறைவாரும்
பறையு மதிர்குழலும் போலப் பலவண்டாங்
கறையும் வடுகூரி லாடும் மடிகளே. அ

சந்தம் மலர்வேய்ந்த சடையின் னிடைவிம்மு
கந்தம் மிகுதிங்கட் சிந்து கதிர்மாலை
வந்து நயந்தெம்மை நன்று மருள்செய்வார்
அந்தண் வடுகூரி லாடும் மடிகளே. கூ

திருமா லடிவீழத் திசைநான் முகனுய
பெருமா னுணர்கில்லாப் பெருமான் நெடுமுடிசேர்
செருமால் விடையூருஞ் செம்மான் திசைவில்லா
அருமா வடுகூரி லாடும் மடிகளே. ம

படிநோன் பவையாவர் பழியில் புகழான
கடிநா ணிகழ்சோலை கமழும் வடுகூரைப்
படியா னசிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

88. திருஆப்பனூர் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

முற்றுஞ் சடைமுடிமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படவரவ மதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே. க

குரவங் கமழ்குழலாள் குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவுந் திருமேனி விளங்கும் வளையெயிற்றின்
அரவ மணிந்தானை யணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. உ

முருகு விரிகுழலார் மனங்கொ ளநங்கனைமுன்
பெரிது முனிந்துகந்தான் பெருமான் பெருங்காட்டின்

Koviloor Digital Library

அரவ மணிந்தானை யணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௩

பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியி னுடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை யணியாப்ப னூரானைப்
பணியு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௪

தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகர மொருமூன்றும் நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை யணியாப்ப னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௫

ஓடுந் திரிபுரங்க ளுடனே யுலந்தவியக்
காட திடமாகக் கனல்கொண்டு நின்றிரவில்
ஆடுந் தொழிலானை யணியாப்ப னூரானைப்
பாடு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௬

இயலும் விடையேறி யெரிகொள் மழுவீசிக்
கயலி னிணைக்கண்ணு ளொருபாற் கலந்தாட
இயலு மிசையானை யெழிலாப்ப னூரானைப்
பயிலு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௭

கருக்கு மணிமிடறன் கதநாகக் கச்சையினன்
உருக்கு மடியவரை யொளிவெண் பிறைசூடி
அரக்கன் றிறலழித்தா னணியாப்ப னூரானைப்
பருக்கு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. ௮

கண்ணன் கடிக்கமல மலர்மே லினிதுறையும்
அண்ணற் களப்பரிதாய் நின்றங் கடியார்மேல்
எண்ணில் வினைகளைவா னெழிலாப்ப னூரானைப்
பண்ணின் னிசைபகர்வார் வினைபற் றறுப்பாரே. ௯

செய்ய கலிங்கத்தார் சிறுதட் டுடையார்கள்
பொய்யர் புறங்கூறப் புரிந்த வடியாரை
ஐய மகற்றுவா னணியாப்ப னூரானைப்
பைய நினைந்தெழுவார் வினைபற் றறுப்பாரே. ௰

அந்தண் புனல்வைகை யணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவும் நலஞான சம்பந்தன்
சந்த மிவைவல்லார் தடுமாற் றறுப்பாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣

Koviloor Digital Library

89. திருஎருக்கத்தம்புலியூர் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஈசன்

கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
உடையா னுமையோடு முடனு யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே. க

இலையார் தருசூலப் படையெம் பெருமானுய்
நிலையார் மதில்மூன்று நீருய் விழவெய்த
சிலையா னெருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையா னடியேத்தக் கருதா வினைதானே. உ

விண்ணேர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணு ணலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணு ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணு வெனவல்லார்க் கடையா வினைதானே. ந

அரையார் தருநாக மணிவா னலர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி
வரையா னெருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே. ச

வீருர் முலையாளைப் பாக மிகவைத்துச்
சீரு வருகாலன் சினத்தை யழிவித்தான்
ஏரு னெருக்கத்தம் புலியூ ரிறையானை
வேரு நினைவாரை விரும்பா வினைதானே. ரு

நகுவெண் டலையேந்தி நானுவிதம் பாடிப்
புகுவா னயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவா னெருக்கத்தம் புலியூர்த் தகைந்தங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே. சா,எ

ஆவா வெனவரக்க னலற வடர்த்திட்டுத்
தேவா வெனவருளார் செல்வங் கொடுத்திட்ட
கோவே யெருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே யெனஅல்லல் தீர்தல் திடமாமே. அ

மறையான் நெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத் தின்றெத்தே

Koviloor Digital Library

இறையா னெருக்கத்தம் புலியூ ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும்வினையே. ௲

புத்த ரருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையுஞ் சோதி யுமையோடும்
நித்த னெருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்த னறவன்றன் னடியே யடைவோமே. ௰

ஏரா ரெருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலை யிவைவல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறைவாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

90. திருப்பிரமபுரம் : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனையே மனம், பரவி யுய்ம்மினே. க

காண வுள்குவீர், வேணு நற்புரத்
தாணு வின்கழல், பேணி யுய்ம்மினே. உ

நாத னென்பிர்காள், காத லொண்புகல்
ஆதி பாதமே ஓதி யுய்ம்மினே. ௩

அங்க மாதுசேர், பங்க மாயவன்
வெங்குரு மன்னும், எங்க ளீசனே. ௪

வாணி லாச்சடைத் தோணி வண்புரத்
தாணி நற்பொனைக், காணு மின்களே. ௫

பாந்த ளார்சடைப், பூந்த ராய்மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்த னென்பரே. ௬

கரிய கண்டனைச், சிரபு ரத்துளெம்
அரசை நாள்தொறும், பரவி யுய்ம்மினே. ௭

நறவ மார்பொழிற், புறவ நற்பதி
இறைவன் நாமமே, மறவல் நெஞ்சமே. ௮

Koviloor Digital Library

தென்றி லரக்கனைக். குன்றிற் சண்டைமன்
அன்று நெரித்தவா. நின்று நினைமினே. ௯

அயனு மாலுமாய். முயலுங் காழியான்
பெயல்வை யெய்திநின். றியலு முள்ளமே. ௰

தேர ரமணரைச். சேர்வில் கொச்சைமன்
நேரில் கழல்நினைந். தோரு முள்ளமே. ௰௧

தொழும னத்தவர். கழும லத்துறை
பழுதில் சம்பந்தன். மொழிகள் பத்துமே. ௰௨

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

91. திருஆரூர் : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

சித்தந் தெளிவீர்காள். அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ. முத்தி யாகுமே. ௧

பிறவி யறுப்பீர்காள். அறவ னாரூரை
மறவா தேத்துமின். துறவி யாகுமே. ௨

துன்பந் துடைப்பீர்காள். அன்ப னணியாரூர்
நன்பொன் மலர்தூவ. இன்ப மாகுமே. ௩

உய்ய லுறுவீர்காள் ஐய னாரூரைக்
கையி னாற்றொழ. நையும் வினைதானே. ௪

பிண்ட மறுப்பீர்காள். அண்ட னாரூரைக்
கண்டு மலர்தூவ. விண்டு வினைபோமே. ௫

பாச மறுப்பீர்காள். ஈச னணியாரூர்
வாச மலர்தூவ. நேச மாகுமே. ௬

வெய்ய வினைதீர. ஐய னணியாரூர்
செய்ய மலர்தூவ. வைய முமதாமே. ௭

அரக்க னாண்மையை. நெருக்கி னானாரூர்
கரத்தி னாற்றொழத். திருத்த மாகுமே. ௮

Koviloor Digital Library

துள்ளு மிருவர்க்கும். வள்ள லாருளை
உள்ளு மவர்தம்மேல். விள்ளும் வினைதானே. ௯

கடுக்கொள் சீவரை. அடக்கி னுளூர்
எடுத்து வாழ்த்துவார். விடுப்பர் வேட்கையே. ௰

சீரூர் சம்பந்தன். ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார். பேரா ரின்பமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

92. திருவீழிமிழலை : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்

கனரகம் : குந்தளகாம்போதி, சுதகாம்போதி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே. காசு நல்குவீர்
மாசின் மிழலையீர். ஏச லில்லையே. ௧

இறைவ ராயினீர். மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை. முறைமை நல்குமே. ௨

செய்ய மேனியீர். மெய்கொள் மிழலையீர்
பைகொ ளரவினீர். உய்ய நல்குமே. ௩

நீறு பூசினீர். ஏற தேறினீர்
கூறு மிழலையீர். பேறு மருளுமே. ௪

காமன் வேவவோர். தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர். சேம நல்குமே. ௫

பிணிகொள் சடையினீர். மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர். பணிகொண் டருளுமே. ௬

மங்கை பங்கினீர். துங்க மிழலையீர்
கங்கை முடியினீர். சங்கை தவிர்மினே. ௭

அரக்கன் நெரிதர. இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர். கரக்கை தவிர்மினே. ௮

அயனு மாலுமாய். முயலு முடியினீர்
இயலு மிழலையீர். பயலு மருளுமே. ௯

Koviloor Digital Library

பறிகொள் தலையினர், அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிறிவ தரியதே. ௰

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

93. திருமுதுகுன்றம் : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்
பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்று மேத்துவீர்க், கென்று மின்பமே. ௧

அத்தன் முதுகுன்றைப், பத்தி யாகிநீர்
நித்த மேத்துவீர்க், குய்த்தல் செல்வமே. ௨

ஐயன் முதுகுன்றை, பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வைய முமதாமே. ௩

ஈசன் முதுகுன்றை, நேச மாகிநீர்
வாச மலர்தூவப், பாச வினைபோமே. ௪

மணியார் முதுகுன்றைப், பணிவா ரவர்கண்டீர்
பிணியா யினகெட்டுத், தணிவா ருலகிலே. ௫

மொய்யார் முதுகுன்றில், ஐயா வெனவல்லார்
பொய்யா ரிரவோர்க்குச், செய்யா ளணியாளே. ௬

விடையான் முதுகுன்றை, இடையா தேத்துவார்
படையா யினசூழ, உடையா ருலகமே. ௭

பத்துத் தலையோனைக், கத்த விரலூன்றும்
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே. ௮

இருவ ரறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே. ௯

தேர ரமணரும், சேரும் வகையில்லான்
நேரின் முதுகுன்றை, நீர்நின் றுள்குமே. ௰

Koviloor Digital Library

நின்று முதுகுன்றை. நன்று சம்பந்தன்
ஒன்று முரைவல்லார். என்று முயர்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

94. திருஆலவாய் : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நீல மாமிடற். றால வாயிலான்
பால தாயினுர். ஞால மாள்வரே. க

ஞால மேழுமாம். ஆல வாயிலார்
சீல மேசொலீர். காலன் வீடவே. உ

ஆல நீழலார். ஆல வாயிலார்
கால காலனுர். பால தாமினே. ௩

அந்த மில்புகழ். எந்தை யாலவாய்
பந்தி யார்கழல். சிந்தை செய்ம்மினே. ச

ஆட லேற்றினன் கூட லாலவாய்
பாடி யேமனம். நாடி வாழ்மினே. ரு

அண்ண லாலவாய். நண்ணி னன்றனை
எண்ணி யேதொழத். திண்ண மின்பமே. சா

அம்பொ னலவாய். நம்ப னுர்கழல்
நம்பி வாழ்பவர். துன்பம் வீடுமே. எ

அரக்க னுர்வலி. நெருக்க னலவாய்
உரைக்கு முள்ளத்தார்க். கிரக்க முண்மையே. அ

அருவ னலவாய். மருவி னன்றனை
இருவ ரேத்தநின். றுருவ மோங்குமே. கூ

ஆர நாகமாம். சீர னலவாய்த்
தேர மணசெற்ற. வீர னென்பரே. ௰

அடிக ளாலவாய்ப். படிகொள் சம்பந்தன்
முடிவி லின் தமிழ் செடிகள் நீக்குமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

95. திருஇடைமருதூர் : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம் | பண்தார் : ஈசன்

கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

தோடொர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், ருடு மருதனே. க

கருதார் புரமெய்வர், எருதே யினி தூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. உ

எண்ணு மடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. ௩

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியா ருலகிலே. ச

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லரே. ரு

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. சா

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையா ரின்பமே. எ

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. அ

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. கூ

நின்றுண் சமண்தேரர், என்று மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. ௰

கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

96. திருஅன்னியூர் : திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்　　　　　　　　பண்தார் : ஈசன்

கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

மன்னி யூரிறை. சென்னி யார்பிறை
அன்னி யூரமர். மன்னு சோதியே. க

பழகுந் தொண்டர்வம். அழக னன்னியூர்க்
குழகன் சேவடி. தொழுது வாழ்மினே. உ

நீதி பேணுவீர். ஆதி யன்னியூர்ச்
சோதி நாமமே. ஓதி யுய்ம்மினே. ங

பத்த ராயினீர். அத்த ரன்னியூர்ச்
சித்தர் தாள்தொழ. முத்த ராவரே. ச

நிறைவு வேண்டுவீர். அறவ னன்னியூர்
மறையு ளான்கழற். குறவு செய்ம்மினே. ரு

இன்பம் வேண்டுவீர். அன்ப னன்னியூர்
நன்பொ னென்னுமின். உம்ப ராகவே. சா

அந்த ணாளர்தம். தந்தை யன்னியூர்
எந்தை யேயெனப். பந்த நீங்குமே. எ

தூர்த்த னைச்செற்ற. தீர்த்த னன்னியூர்
ஆத்த மாஅடைந். தேத்தி வாழ்மினே. அ

இருவர் நாடிய. அரவ னன்னியூர்
பரவு வார்விண்ணுக். கொருவ ராவரே. கூ

குண்டர் தேரருக். கண்ட னன்னியூர்த்
தொண்டு ளார்வினை. விண்டு போகுமே. ய

பூந்த ராய்ப்பந்தன் ஆய்ந்த பாடலால்
வேந்த னன்னியூர். சேர்ந்து வாழ்மினே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

உ

சிவமயம்

அறிவும் நன்றாக குரு வாழ்க குருவே துணை

97. திருப்புறவம் : பண் - குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஈசன்

கனரகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

எய்யாவென்றித் தானவரூர்மூன் றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந் திருமேனிச்
செய்யான் வெண்ணீ றணிவான் றிகழ்பொற் பதிபோலும்
பொய்யாநாவி னந்தணர்வாழும் புறவம்மே. க

மாதொருபாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற
நாதனென்றேத்து நம்பரன்வைகுந் நகர்போலும்
மாதவிமேய வண்டிசைபாட மயிலாடப்
போதலர்செம்பொன் புன்னைகொடுக்கும் புறவம்மே. உ

வற்றுநதியும் மதியும்பொதியுஞ் சடைமேலே
புற்றுடரவின் படமாடவுமிப் புவனிக்கோர்
பற்றுயிடுமின் பலியென் றடைவார் பதிபோலும்
பொற்றுமரையின் பொய்கைநிலாவும் புறவம்மே. ங

துன்னார்புரமும் பிரமன்சிரமுந் துணிசெய்து
மின்னார்சடைமே லரவும்மதியும் விளையாடப்
பன்னாளிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொன்னார்புரிநூ லந்தணர்வாழும் புறவம்மே. ச

தேவாஅரனே சரணென்றிமையோர் திசைதோறுங்
காவாயென்று வந்தடையக்கார் விடமுண்டு
பாவார்மறையும் பயில்வோருறையும் பதிபோலும்
பூவார்கோலச் சோலைசுலாவும் புறவம்மே. ரு

கற்றறிவெய்திக் காமன்முன்னாகும் முகவெல்லாம்
அற்றரனேநின் னடிசரணென்னு மடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர் பதியென்பர்
பொற்றிகழ்மாடத் தொளிகள் நிலாவும் புறவம்மே. சா

எண்டிசையோரஞ் சிடுவகைகார்சேர் வரையென்னக்
கொண்டெழுகோல முகில்போற்பெரிய கரிதன்னைப்
பண்டுரிசெய்தோன் பாவனைசெய்யும் பதியென்பர்
புண்டரிகத்தோன் போன் மறையோர்சேர் புறவம்மே. எ

Koviloor Digital Library

பரக்குந்தொல்சீர்த் தேவர்கள்சேனைப் பௌவத்தைத்
துரக்குஞ்செந்தீப் போலமர்செய்யுந் தொழில்மேவும்
அரக்கன் திண்டோ ளழித்தானக் காலத்திற்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர் புறவம்மே. அ

மீத்திகழண்டந் தந்தயனோடு மிகுமாலும்
மூர்த்தியைநாடிக் காணவொண்ணாது முயல்விட்டாங்
கேத்தவெளிப்பா டெய்தியவன்ற னிடமென்பர்
பூத்திகழ்சோலைத் தென்றலுலாவும் புறவம்மே. கூ

வையகநீர்தீ வாயுவும்விண்ணும் முதலானான்
மெய்யலதேர ருண்டிலையென்றே நின்றேதங்
கையினிலுண்போர் காணவொண்ணாதான் நகரென்பர்
பொய்யகமில்லாப் பூசுரர்வாழும் புறவம்மே. ம

பொன்னியல்மாடப் புரிசைநிலாவும் புறவத்து
மன்னியஈசன் சேவடிநாளும் பணிகின்ற
தன்னியல்பில்லாச் சண்பையர்கோன்சீர்ச் சம்பந்தன்
இன்னிசையீரைந் தேத்தவல்லோர்கட் கிடர்போமே. மக

திருச்சிற்றம்பலம்

98. திருச்சிராப்பள்ளி : பண் - குறிஞ்சி

திறம் : நேர்மைத்திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : அம்சகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. க

மைம்மகவேந்திக் கடுவனெடுடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. உ

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் மடிக ளடியார்க்கல்ல லில்லையே. ங

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. ௪

கொலைவரையாத கொள்கையர் தாங்கள் மதில்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலைவரைநில முண்டதும் வெள்ளை நிறமாமே. ௫

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலொர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை யறிவாரே. ௬

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. ௭

மலைமல்குதோளன் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலி திரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோ லுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. ௮

அரப்பள்ளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டா லிகழாரே. ௯

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்க ளுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. ௰

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

99. திருக்குற்றலம் : பண் - குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

வம்பார்குன்றந் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடலமர்ந்தா னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலுந் நமரங்காள். க

பொடிகள்பூசித் தொண்டர்பின் செல்லப் புகழ்விம்மக்
கொடிகளோடுந் நாள்விழமல்கு குற்றாலம்
கடிகொள்கொன்றை கூவிளமாலை காதல்செய்
அடிகள்மேய நன்னகர்போலும் மடியீர்காள். உ

செல்வமல்கு செண்பகம்வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனுங் குற்றாலம்
வில்லினொல்க மும்மதிலெய்து வினைபோக
நல்குநம்பான் நன்னகர்போலுந் நமரங்காள். ங

பக்கம்வாழைப் பாய்கனியோடு பலவின்றேன்
கொக்கின்கோட்டுப் பைய்கனி தூங்குங் குற்றாலம்
அக்கும்பாம்பு மாமையும்பூண்டோ ரனலேந்தும்
நக்கன்மேய நன்னகர்போலுந் நமரங்காள். ச

மலையார்சாரல் மகவுடன்வந்த மடமந்தி
குலையார்வாழைத் தீங்கனிமாந்துங் குற்றாலம்
இலையார்சூல மேந்தியகையா னெயிலெய்த
சிலையான்மேய நன்னகர்போலுஞ் சிறுதொண்டீர். ரு

மைம்மாநீலக் கண்ணியர்சாரல் மணிவாரிக்
கொய்ம்மாவேன லுண்கிளியோப்புங் குற்றாலம்
கைம்மாவேழத் தீருரிபோர்த்த கடவுள்ளெம்
பெம்மான்மேய நன்னகர்போலும் பெரியீர்காள். சா

நீலநெய்தல் தண்சுனைசூழ்ந்த நீள்சோலைக்
கோலமஞ்ஞை பேடையொடாடுங் குற்றாலம்
காலன்றன்னைக் காலாற்காய்ந்த கடவுள்ளெம்
சூலபாணி நன்னகர்போலுந் தொழுவீர்காள் எ

Koviloor Digital Library

போதும்பொன்னு முந்தியருவி புடைசூழக்
கூதன்மாரி நுண்டுளி தூங்குங் குற்றுலம்
மூதூரிலங்கை முட்டியகோனை மிறைசெய்த
நாதன்மேய நன்னகர்போலுந் நமரங்காள். அ

அரவின்வாயின் முள்ளெயிறேய்ப்ப அரும்பீன்று
குரவம்பாவை முருகமர்சோலைக் குற்றுலம்
பிரமன்னோடு மாலறியாத பெருமையெம்
பரமன்மேய நன்னகர்போலும் பணிவீர்காள். கூ

பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு பெடைபுல்கிக்
குருந்தம்மேறிச் செவ்வழிபாடுங் குற்றுலம்
இருந்துண்தேரும் நின்றுண்சமணு மெடுத்தார்ப்ப
அருந்தண்மேய நன்னகர்போலு மடியீர்காள். ம

மாடவீதி வருபுனற்காழி யார்மன்னன்
கோடலீன்று கொழுமுனைகூம்புங் குற்றுலம்
நாடவல்ல நற்றமிழ்ஞான சம்பந்தன்
பாடல்பத்தும் பாடநம்பாவம் பறையுமே. ம௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

100. திருப்பரங்குன்றம் : பண் - குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நீடலர்சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலனந்திச் சுடரெரியேந்திச் சுடுகானில்
ஆடலனஞ்சொ லணியிழையாளை யொருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே. ௧

அங்கமொராறும் மருமறைநான்கும் மருள்செய்து
பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற் பொலிவித்துத்
திங்களும்பாம்புந் திகழ்சடைவைத்தோர் தேன்மொழி
பங்கினன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே. ௨

நீரிடங்கொண்ட நிமிர்சடைதன்மேல் நிரைகொன்றை
சீரிடங்கொண்ட எம்மிறைபோலுஞ் சேய்தாய
ஒருடம்புள்ளே யுமையொருபாக முடனாகிப்
பாரிடம்பாட இனிதுறைகோயில் பரங்குன்றே. ௩

Koviloor Digital Library

வளர்பூங்கோங்க மாதவியொடு மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டறைசோலைப் பரங்குன்றம்
தளிர்போல்மேனித் தையல்நல்லாளோ டொருபாகம்
நளிர் பூங்கொன்றை சூடினன்மேய நகர் தானே. ௪

பொன்னியல்கொன்றை பொறிகிளர்நாகம் புரிசடைத்
துன்னியசோதி யாகியாசன் தொன்மறை
பன்னியபாட லாடலன்மேய பரங்குன்றை
உன்னியசிந்தை யுடையவர்க்கில்லை யுறுநோயே. ௫

கடைநெடுமாடக் கடியரண்மூன்றுங் கனல்மூழ்கத்
தொடைநவில்கின்ற வில்லினனந்திச் சுடுகானில்
புடைநவில் பூதம் பாடநின்றாடும் பொருசூலப்
படைநவில்வான்றன் நன்னகர் போலும் பரங்குன்றே. ௬

அயிலுடைவேலோ ரனல்புல் குகையி னம்பொன்றல்
எயில்படவெய்த எம்மிறைமேய இடம்போலும்
மயில்பெடைபுல்கி மாநடமாடும் வளர்சோலைப்
பயில்பெடைவண்டு பாடலருத பரங்குன்றே. ௭

மைத்தகுமேனி வாளரக்கன்றன் மகுடங்கள்
பத்தின திண்டோ ளிருபதுஞ்செற்றான் பரங்குன்றைச்
சித்தமதொன்றிச் செய்கழலுன்னிச் சிவனென்று
நித்தலுமேத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே. ௮

முந்தியிவ்வையந் தாவியமாலு மொய்யொளி
உந்தியில்வந்திங் கருமறையீந்த வுரவோனும்
சிந்தையினாலுந் தெரிவரிதாகித் திகழ்சோதி
பந்தியலங்கை மங்கையொர்பங்கன் பரங்குன்றே. ௯

குண்டாய்முற்றுந் திரிவார்கூறை மெய்போர்த்து
மிண்டாய்மிண்டர் பேசியபேச்சு மெய்யல்ல
பண்டால்நீழல் மேவியாசன் பரங்குன்றைத்
தொண்டாயேத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே. ௰

தடமலிபொய்கைச் சண்பைமன்ஞான சம்பந்தன்
படமலிநாக மரைக்கசைத் தான்றன் பரங்குன்றைத்
தொடைமலிபாடல் பத்தும்வல்லார்தந் துயர்போகி
விடமலிகண்ட னருள்பெறுந்தன்மை மிக்கோரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

101. திருக்கண்ணார்கோயில் : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகுந் நல்வினையாய நணுகும்மே. க

கந்தமர்சந்துங் காரகிலுந்தண் கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர் மண்ணிவளஞ்சேர் வயல்மண்டிக்
கொந்தலர்சோலைக் கோகிலமாடக் குளிர்வண்டு
செந்திசைபாடுஞ் சீர்திகழ்கண்ணார் கோயிலே. உ

பல்லியல்பாணிப் பாரிடமேத்தப் படுகானின்
எல்லிநடஞ்செய் யீசனெம்மான்றன் னிடமென்பர்
கொல்லையின்முல்லை மல்லிகைமௌவற் கொடிபின்னிக்
கல்லியலிஞ்சி மஞ்சமர்கண்ணார் கோயிலே. ௩

தருவளர்கானந் தங்கியதுங்கப் பெருவேழம்
மருவளர்கோதை யஞ்சவுரித்து மறைநால்வர்க்
குருவளரால நீழலமர்ந்தீங் குரைசெய்தார்
கருவளர்கண்ணார் கோயிலடைந்தோர் கற்றோரே. ச

மறுமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லா மளவிட்ட
குறுமாணுருவன் தற்குறியாகக் கொண்டாடுங்
கறுமாகண்டன் மேயதுகண்ணார் கோயிலே. ரு

விண்ணவருக்காய் வேலையுள் நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத்தே வர்க்கமுதீந்தெவ் வுலகிற்குங்
கண்ணவனைக்கண் ணார்திகழ்கோயிற் கனிதன்னை
நண்ணவல்லோர்கட் கில்லைநமன்பால் நடலையே. சா

முன்னொருகாலத் திந்திரனுற்ற முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ணாயிரமீந்தோன் சார்பென்பர்
கன்னியர்நாளுந் துன்னமர்கண்ணார் கோயிலே. எ

பெருக்கெண்ணாத பேதையரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன் நீள்கழல்நெஞ்சில் நினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர்வாள்தேர் முன்னீந்த
திருக்கண்ணாரென் பார்சிவலோகஞ் சேர்வாரே. ௮

செங்கமலப்போ திற்றிகழ்செல்வன் திருமாலும்
அங்கமலக்கண் ணோக்கரும்வண்ணத் தழலானான்
தங்கமலக்கண் ணார்திகழ்கோயில் தமதுள்ளம்
அங்கமலத்தோ டேத்திடஅண்டத் தமர்வாரே. ௯

தாறிடுபெண்ணைத் தட்டுடையாருந் தாமுண்ணுஞ்
சோறுடையார்சொல் தேறன்மின்வெண்ணூல்சேர்மார்பன்
ஏறுடையன்பர னென்பணிவானீள் சடைமேலோர்
ஆறுடையண்ணல் சேர்வதுகண்ணார் கோயிலே. ௰

காமருகண்ணார் கோயிலுளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியல்மாடப் புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுள்ஞான சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற் பழிபோமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

102. சீகாழி : பண் - குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஈசன்
கனரகம் : குந்தளகாம்போதி

திருச்சிற்றம்பலம்

உரவார்கலையின் கவிதைப்புலவர்க் கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங் கலிக்காழி
அரவாரரையா வவுணர்புரமுன் றெரிசெய்த
சரவாஎன்பார் தத்துவஞானத் தலையாரே. ௧

மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய் முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீனுங் கலிக்காழி
மைசேர்கண்டத் தெண்டோள்முக்கண் மறையோனே
ஐயாவென்பார்க் கல்லல்களான அடையாவே. ௨

இளகக்கமலத் தீன்களியங்குங் கழிசூழக்
களகப்புரிசைக் கவினார்சாருங் கலிக்காழி

Koviloor Digital Library

அளகத்திருநன் னுதலிபங்கா அரனேயென்
றுளகப்பாடு மடியார்க்குறுநோ யடையாவே. ௩

தென்னார்முத்த மீன்றுமரகதம் போற்காய்த்துக்
கன்னார்கமுகு பவளம்பழுக்குங் கலிக்காழிப்
பென்னேர்பாகா பித்தாபிரானே யென்பார்க்கு
நன்னாவினைகள் நாடொறுமின்பந் நணுகும்மே. ௪

மழையார்சாரற் செம்புனல்வந்தங் கடிவருடக்
கழையார்கரும்பு கண்வளர்சோலைக் கலிக்காழி
உழையார்கரவா வுமையாள்கணவா வொளிர்சங்கக்
குழையாவென்று கூறுவல்லார்கள் குணவோரே. ௫

குறியார்திரைகள் வரைகள்நின்றுங் கோட்டாறு
கறியார்கழிசம் பிரசங்கொடுக்குங் கலிக்காழி
வெறியார்கொன்றைச் சடையாவிடையா என்பாரை
அறியாவினைக எருநோய்பாவம் மடையாவே. ௬, ௭

உலங்கொள்சங்கத் தார்கலியோதத் துதையுண்டு
கலங்கள்வந்து கார்வயலேறுங் கலிக்காழி
இலங்கைமன்னன் றன்னையிடர்கண் டருள்செய்த
சலங்கொள்சென்னி மன்னாஎன்னத் தவமாமே. ௮

ஆவிக்கமலத் தன்னமியங்குங் கழிசூழக்
காவிக்கண்ணார் மங்கலமோவாக் கலிக்காழிப்
பூவிற்றோன்றும் புத்தேளொடுமா லவன்றானும்
மேவிப்பரவு மரசேயென்ன வினைபோமே. ௯

மலையார்மாட நீடுயரிஞ்சி மஞ்சாருங்
கலையார்மதியஞ் சேர்தருமந்தண் கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்கென்று மறிவொண்ணா
நிலையாயென்னத் தொல்வினையாய நில்லாவே. ௰

வடிகொள்வாவிச் செங்கழுநீரிற் கொங்காடிக்
கடிகொடென்றன் முன்றினில்வைகுங் கலிக்காழி
அடிகள் தம்மை யந்தமில்ஞான சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர்தம்மேற் பழிபோமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்குரு குரு வாழ்க குருவே துணை

103. திருக்கழுக்குன்றம் : பண் - குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்
பண்தார் : ஈசன்
கனரகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

தோடுடையானொரு காதிற்றூய குழைதாழ
ஏடுடையான் றலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருளேம நடமாடங்
காடுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. க

கேணவல்லான் கேழல்வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலொர் புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகள் தன்னை யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. உ

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ௩

துணையல்செய்தான் தூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணினல்லாளை யொருபாகம்
இணையல்செய்யா விலங்கெயில்மூன்று மெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ச

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ரு

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்டர்
உள்ளமெல்லா முள்கிநின்றாங்கே யுடனாடுங்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. சா, எ

ஆதல்செய்தா னரக்கர் தங்கோனை யருவரையின்
நோதல்செய்தான் நொடிவரையின்கண் விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகள் தன்னோ டொருபாகம்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. அ

Koviloor Digital Library

இடந்தபெம்மா னேனமதாயு மனமாயும்
தொடர்ந்தபெம்மான் தூமதிசூடி வரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்தபொம்மான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. கூ

தேயநின்றான் திரிபுரங்கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண்குண்டர் சாக்கீயர்
காயநின்றான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. ய

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடியபத்து மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

104. திருப்புகலி : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

ஆடலரவசைத் தானருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த
ஆடிய எம்மிறையூர் புகலிப் பதியாமே. க

ஏல மலிகுழலா ரிசைபாடி யெழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே. உ

ஆறணி செஞ்சடையா னழகார்புர மூன்றுமன்று வேவ
நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை யெம்மிறைவன்
பாறணி வெண்டலையிற் பகலேபலி யென்றுவந்து நின்ற
வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே. ங

வெள்ள மதுசடைமேற் கரந்தான் விரவார்புரங்கள் மூன்றுங்
கொள்ள எரிமடுத்தான் குறைவின்றி யுறைகோயில்
அள்ளல் விளைகழனி யழகார்விரைத் தாமரைமேலன்னம்
புள்ளினம் வைகியெழும் புகலிப் பதிதானே. ச

சூடு மதிச்சடைமேற் சுரும்பார்மலர்க் கொன்றைதுன்ற நட்டம்
ஆடு மமரர்பிரா னழகாருமை யோடுமுடன்
வேடு படநடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட இனிதுறையும் புகலிப் பதியாமே. ரு

மைந்தணி சோலையின்வாய் மதுப்பாய்வரி வண்டினங்கள் வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பனிடம்
அந்திசெய் மந்திரத்தா லடியார்கள் பரவியெழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப் பதிதானே. சா

மங்கையோர் கூறுகந்த மழுவாளன் வார்சடைமேற் றிங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன் கருதுமிடஞ்
செங்கயல் வார்கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னாற்றொழுவா ரவல மறியாரே. எ

வல்லிய நுண்ணிடையா ளுமையாள் விருப்பனவனண்ணும்
நல்லிட மென்றறியா னலியும் விறலரக்கன்
பல்லொடு தோள்நெரிய விரலூன்றிப் பாடலுமே கைவாள்
ஒல்லை யருள்புரிந்தா னுறையும் புகலியதே. அ

தாதலர் தாமரைமே லயனுந் திருமாலுந் தேடி
ஓதியுங் காண்பரிய வுமைகோ னுறையுமிடம்
மாதவி வான்வகுள மலர்ந்தெங்கும் விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள்சூழ் புகலிப் பதிதானே. கூ

வெந்துவர் மேனியினார் விரிகோவண நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லா மவையோர் பொருளென்னேல்
வந்தெதி ரும்புரமூன் றெரித்தா னுறைகோயில் வாய்ந்த
புந்தியி னார்பயிலும் புகலிப் பதிதானே. ம

வேதமோர் கீதமுணர் வாணர்தொழுதேத்த மிகுவாசப்
போதனைப் போல்மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானமிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்
ஓதவல் லாருலகி லுறுநோய் களைவாரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

105. திருஆரூர் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : ஆற்றுத்திறம் பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : சுரவராளி

திருச்சிற்றம்பலம்

பாடலன் நான்மறையன் படிபட்ட கோலத்தன் திங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலும் மெரியுண்ணக் கூரெரிகொண் டெல்லி
ஆடல னாதிரைய னாரூ ரமர்ந்தானே. க

சோலையில் வண்டினங்கள் சுரும்போ டிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய் முகில்தோயு மாரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும் பரமேட்டி பாதம்
காலையு மாலையும்போய்ப் பணிதல் கருமமே. உ

உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித் தொழுமின்தொண்டீர் மெய்யே
கள்ள மொழிந்திடுமின் கரவா திருபொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற் கரந்திட்ட வெள்ளேற்றான் மேய.
அள்ள லகன்கழனி யாரூ ரடைவோமே. ௩

வெந்துறு வெண்மழுவாட் படையான் மணிமிடற்றானரையின்
ஐந்தலை யாடரவ மசைத்தா னணியாரூர்ப்
பைந்தளிர்க் கொன்றையந்தார்ப் பரமன் னடிபரவப் பாவம்
நைந்தறும் வந்தணையு நாடொறும் நல்லனவே. ச

வீடு பிறப்பெளிதா மதனை வினவுதிரேல் வெய்ய
காடிட மாகநின்று கனலேந்திக் கைவீசி
ஆடு மவிர்சடையா னவன்மேய ஆரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே. ரு

கங்கையோர் வார்சடைமேற் கரந்தான் கிளிமழலைக் கேடில்
மங்கையோர் கூறுடையான் மறையான் மழுவேந்தும்
அங்கையி னானடியே பரவி யவன்மேய ஆரூர்
தங்கையினாற் றொழுவார் தடுமாற் றறுப்பாரே. சா

நீறணி மேனியனாய் நிரம்பா மதிசூடி நீண்ட
ஆறணி வார்சடையா னாரூ ரினிதமர்ந்தான்
சேறணி மாமலர்மேற் பிரமன் சிரமரிந்த செங்கண்
ஏறணி வெல்கொடியா னவனெம் பெருமானே. எ, அ

Koviloor Digital Library

வல்லியந் தோலுடையான் வளர்திங்கட் கண்ணியினான் வாய்ந்த
நல்லிய ளுன்முகத்தோன் தலையின் னறவேற்றான்
அல்லியங் கோதைதன்னை யாகத் தமர்ந்தருளி ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே. கூ

செந்துவ ராடையினா ருடைவிட்டு நின்றுழல்வார் சொன்ன
இந்திர ஞாலமொழிந் தின்புற வேண்டுதிரேல்
அந்தர மூவெயிலும் அரணம் மெரியூட்டி ஆரூர்த்
தந்திர மாவுடையா னவனெந் தலைமையனே. ய

நல்ல புனற்புகலித் தமிழ்ஞான சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி ஆரூ ரமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந் துடைப்பாரே. யக

திருச்சிற்றம்பலம்

106. திருஊறல் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : படுகுறிச்சீர்திறம் பண்தார் : அதிசேடன்
கனரகம் : புல்லகவராளி

திருச்சிற்றம்பலம்

மாறில வுணரரணம் மவைமாயவோர் வெங்கணையா லன்று
நீறெழ வெய்தவெங்கள் நிமல னிடம்வினவில்
தேறலி ரும்பொழிலுந் திகழ்செங்கயல் பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறல மர்ந்தபிரா னொலியார்கழ லுள்குதுமே. க

மத்த மதக்கரியை மலையான்மக ளஞ்சவன்று கையால்
மெத்த வுரித்தவெங்கள் விமலன் விரும்புமிடம்
தொத்தல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர் நீலநாளுந் நயனம்
ஒத்தல ருங்கழனித் திருவூறலை யுள்குதுமே. உ

ஏன மருப்பினொடு மெழிலாமையும் பூண்டழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக் கடவுள் கருதுமிடம்
வான மதிதடவும் வளர்சோலைகள் சூழ்ந்தழகார் நம்மை
ஊன மறுத்தபிரான் திருவூறலை யுள்குதுமே. ங

நெய்யணி மூவிலைவேல் நிறைவெண்மழு வும்மனலு மன்று
கையணி கொள்கையினான் கடவுள் ளிடம்வினவில்
மையணி கண்மடவார் பலர்வந் திறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான் திருவூறலை யுள்குதுமே. ச

Koviloor Digital Library

எண்டிசை யோர்மகிழ எழில்மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழஅளித்தா னவன்தாழு மிடம்வினவில்
கொண்டல்கள் தங்குபொழிற் குளிர்பொய்கை கள்சூழ்ந்து நஞ்சை
உண்டபி ரானமருந் திருவூறலை யுள்குதுமே. ௫, ௬, ௭

கறுத்த மனத்தினொடுங் கடுங்காலன்வந் தெய்துதலுங் கலங்கி
மறுக்குறு மாணிக்கருள மகிழ்ந்தா னிடம்வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரந்தோளு மெய்யுந்நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் திருவூறலை யுள்குதுமே. ௮

நீரின் மிசைத்துயின்றோன் நிறைநான் முகனும் மறியா தன்று
தேரும் வகைநிமிர்ந்தா னவன்சேரு மிடம்வினவில்
பாரின் மிசையடியார் பலர்வந் திறைஞ்சமகிழ்ந் தாகம்
ஊரு மரவசைத்தான் திருவூறலை யுள்குதுமே. ௯

பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையர் மோட்டமணர் குண்டர்
என்னு மிவர்க்கருளா வீசனிடம் வினவில்
தென்னென வண்டினங்கள் செறியார்பொழில் சூழ்ந்தழகார் தன்னை
உன்ன வினைகெடுப்பான் திருவூறலை யுள்குதுமே. ௰

கோட லிரும்புறவிற் கொடிமாடக் கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனற்சடைமேற் கரந்தான் றிருவூறல்
நாட லரும்புகழான் மிகுஞானசம் பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார் பரலோகத் திருப்பாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

107. திருக்கொடிமாடச்செங்குன்றூர் :
பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : சுத்தவராளி

திருச்சிற்றம்பலம்

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பி னல்ல
பந்தண வும்விரலா ளொருபாகம மர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவா ரவல மறுப்பாரே. ௧

அலைமலி தண்புனலோ டரவஞ் சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான் மலையா ரிளவாழைக்

Koviloor Digital Library

குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. ௨

பாலன நீறுபுனை திகழ்மார்பிற் பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலா ளொருபாக மமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றன் கழலேத்தல் நீதியே. ௩

வாருறு கொங்கைநல்ல மடவாள் திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடுங் கதநாகம் பூண்டருளிச்
சீருறு மந்தணர்வாழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழலேத்தல் நீதியே. ௪

பொன்றிக ழாமையொடு புரிநூல் திகழ்மார்பில் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத்தோளியோர் பாகமாகக்
குன்றன மாளிகைசூழ் கொடிமாடச் செங்குன்றூர் வானில்
மின்றிகழ் செஞ்சடையான் கழலேத்தல் மெய்ப்பொருளே. ௫

ஓங்கிய மூவிலைநற் சூல மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார் வினையாய பற்றறுமே. ௬

நீடலர் கொன்றையொடு நிமிர்புன் சடைதாழ வெள்ளை
வாட லுடைதலையிற் பலிகொள்ளும் வாழ்க்கையனுய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய தேயுமே. ௭

மத்தநன் மாமலரும் மதியும்வளர் கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல் துதைய வுடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
தத்துவ னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. ௮

செம்பொனின் மேனியனும் பிரமன்றிரு மாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போ லொளியாய ஆதிபிரான்
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
நம்பன தாள்தொழுவார் வினையாய நாசமே. ௯

போதியர் பிண்டியரென் றிவர்கள் புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட் டுழல்வீர் வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
வேதிய னைத்தொழநும் வினையான வீடுமே. ௰

Koviloor Digital Library

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார் புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச் செங்குன்றூ ரேத்தும்
நலமலி பாடல்வல்லார் வினையான நாசமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

108. திருப்பாதாளீச்சரம் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்
பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினன் புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மனநடையா ளொருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலின னுறைகோயில் பாதாளே. ௧

நீடலர் கொன்றையொடு நிரம்பா மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதில்நல்ல குழையான் சுடுநீற்றன்
ஆடர வம்பெருக அனலேந்திக் கைவீசி வேதம்
பாடலி னலினியா னுறைகோயில் பாதாளே. ௨

நாகமும் வான்மதியுந் நலமல்கு செஞ்சடையான் சாமம்
போகநல் வில்வரையாற் புரமூன் றெரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல் வளர்சாயல் தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தா னுறைகோயில் பாதாளே. ௩

அங்கமு நான் மறையு மருள்செய் தழகார்ந்த அஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோ னுறைகோயில்
செங்கயல் நின்றுகளுஞ் செறுவில் திகழ்கின்ற சோதிப்
பங்கய நின்றலரும் வயல்சூழ்ந்த பாதாளே. ௪

பேய்பல வுந்நிலவப் பெருங்காடரங் காகவுன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவுந் திகழ்வித்துத்
தேய்பிறை யும்மரவும் பொலிகொன்றைச் சடைதன்மேற்சேரப்
பாய்புன லும்முடையா னுறைகோயில் பாதாளே. ௫

கண்ணமர் நெற்றியினன் கமழ்கொன்றைச் சடைதன்மேல் நின்றும்
விண்ணியல் மாமதியும் முடன்வைத் தவன்விரும்பும்

Koyiloor Digital Library

பெண்ணமர் மேனியினான் பெருங்கா டரங்காக ஆடும்
பண்ணலியல் பாடலினா னுறைகோயில் பாதாளே. ௬

விண்டலர் மத்தமொடு மிளிரும்மிள நாகம்வன் னிதிகழ்
வண்டலர் கொன்றைநகு மதிபுல்கு வார்சடையான்
விண்டவர் தம்புரமூன் றெரிசெய்துரை வேதநான் கும்மவை
பண்டிசை பாடலினா னுறைகோயில் பாதாளே. ௭

மல்கிய நுண்ணிடையா ளுமைநங்கை மறுகஅன் றுகையால்
தொல்லை மலையெடுத்த அரக்கன்றலை தோள்நெரித்தான்
கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள் சடைக்க ணிந்தோன்
பல்லிசை பாடலினா னுறைகோயில் பாதாளே. ௮

தாமரை மேலயனும் மரியுந்தம தாள்வினையால் தேடிக்
காமனை வீடுவித்தான் கழல்காண்பில ராயகன்றூர்
பூமரு வுங்குழலா ளுமைகங்கை பொருந்தியிட்ட நல்ல
பாமரு வுங்குணத்தா னுறைகோயில் பாதாளே. ௯

காலையி லுண்பவருஞ் சமண்கையருங் கட்டுரை விட்டன்
றாலவிட நுகர்ந்தா னவன்றன்னடி யேபரவி
மாலையில் வண்டினங்கள் மதுவுண் டிசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தா னுறைகோயில் பாதாளே. ௰

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த பாதாளச் சேரப்
பொன்னியன் மாடமல்கு புகலிந்நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லா ரெழில்வானத் திருப்பாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

109. திருச்சிரபுரம் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சிர்திறம்

பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடங்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே. ௧

Koviloor Digital Library

அங்கமொ டருமறை யருள்புரிந்தான்
திங்களொ டரவணி திகழ்முடியன்
மங்கையொ டினிதுறை வளநகரஞ்
செங்கயல் மிளிர்வயற் சிரபுரமே. ௨

பரிந்தவன் பன்முடி யமரர்க்காகித்
திரிந்தவர் புரமவை தீயின்வேவ
வரிந்தவெஞ் சிலைபிடித் தடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே. ௩

நீறணி மேனியன் நீள்மதியோ
டாறணி சடையின னணியிழையோர்
கூறணிந் தினிதுறை குளிர்நகரஞ்
சேறணி வளவயற் சிரபுரமே. ௪

அருந்திற லவுணர்க ளரணழியச்
சரந்துரந் தெரிசெய்த சங்கரனூர்
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே. ௫

கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணுமவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே. ௬

வானமர் மதியொடு மத்தஞ்சூடித்
தானவர் புரமெய்த சைவனிடங்
கானமர் மடமயில் பெடைபயிலுந்
தேனமர் பொழிலணி சிரபுரமே. ௭

மறுத்தவர் திரிபுர மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்
இறுத்தவ னிருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. ௮

வண்ணநன் மலருறை மறையவனுங்
கண்ணனுங் கழல்தொழக் கனலுருவாய்
விண்ணுற வோங்கிய விமலனிடந்
திண்ணநன் மதிலணி சிரபுரமே. ௯

வெற்றரை யுழல்பவர் விரிதுகிலார்
கற்றில ரறவுரை புறனுரைக்கப்

Koviloor Digital Library

பற்றலர் திரிபுர மூன்றும்வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே. ௰

அருமறை ஞானசம் பந்தனந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

110. திருஇடைமருதூர் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்
பண்தார் : அதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினெ டிறவுமானன்
அருந்தவ முனிவரொ டால்நீழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே. ௧

தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவன் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வளநக ரிடைமருதே. ௨

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவி லேற்றினன் ஞாலமெல்லாம்
உடைதலை யிடுபலி கொண்டுழலவான்
இடைமரு தினிதுறை யெம்மிறையே. ௩

பணைமுலை யுமையொரு பங்கனென்னுர்
துணைமதில் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநக ரிடைமருதே. ௪

பொழிலவன் புயலவன் புயலியக்குந்
தொழிலவன் துயரவன் துயரகற்றுங்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநக ரிடைமருதே. ௫

Koviloor Digital Library

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநக ரிடைமருதே. ௬

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநக ரிடைமருதே. ௭

தருக்கின அரக்கன் தாளுந்தோளும்
நெரித்தவன் நெடுங்கைமா மதகரியன்
றுரித்தவ னொன்னலர் புரங்கள்மூன்றும்
எரித்தவன் வளநக ரிடைமருதே. ௮

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியா வணமறி கடல்துயின்ற
கரியவ னலரவன் காண்பரிய
எரியவன் வளநக ரிடைமருதே. ௯

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியி லுரையவை பொருள்கொளாதே
அந்தண ரோத்தினொ டரவமோவா
எந்தைதன் வளநக ரிடைமருதே. ௰

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

111. திருக்கடைமுடி : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : ஆதிசேடன்
சுவரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

அருத்தனை யறவனை யமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே. ௧

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

திரைபொரு திருமுடி திங்கள்விம்மும்
அரைபொரு புலியத ளடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனைநீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே. உ

ஆலிள மதியினொ டரவுகங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுதிறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலன வளநகர் கடைமுடியே. ௩

கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவனூர்
பையணி யரவொடு மான்மழுவாள்
கையணி பவனிடங் கடைமுடியே. ச

மறையவ னுலகவன் மாயமவன்
பிறையவன் புனலவ னனலுமவன்
இறையவ னெனவுல கேத்துங்கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே. ரு

படவர வேரல்குற் பல்வளைக்கை
மடவர லாளையொர் பாகம்வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள் தன் வளநகர் கடைமுடியே. சா

பொடிபுல்கு மார்பினிற் புரிபுல்குநூல்
அடிபுல்கு பைங்கழ லடிகளிடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே. எ

நோதல்செய் தரக்கனை நோக்கழியச்
சாதல்செய் தவனடி சரணெனலும்
ஆதர வருள்செய்த அடிகளவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே. அ

அடிமுடி காண்கில ரோரிருவர்
புடைபுல்கி யருளென்று போற்றிசைப்பச்
சடையிடைப் புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடி யதனயல் காவிரியே. சூ

மண்ணுதல் பறித்தலு மாயமிவை
எண்ணிய காலவை யின்பமல்ல
ஒண்ணுத லுமையையொர் பாகம்வைத்த
கண்ணுதல் வளநகர் கடைமுடியே. ௰

Koviloor Digital Library

பொன்திகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்தமி ழிவைசொல இன்பமாமே. ௰௩

திருச்சிற்றம்பலம்

112. திருச்சிவபுரம் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரன்நகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே. ௧

அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப்
பொன்றிட வுதைசெய்த புனிதன்நகர்
வென்றிகொ ளெயிற்றுவெண் பன்றிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே. ௨

மலைமகள் மறுகிட மதகரியைக்
கொலைமல்க வுரிசெய்த குழகன்நகர்
அலைமல்கு மரிசிலி னதனயலே
சிலைமல்கு மதிளணி சிவபுரமே. ௩

மண்புன லனலொடு மாருதமும்
விண்புனை மருவிய விகிர்தன்நகர்
பண்புனை குரல்வழி வண்டுகிண்டிச்
செண்பக மலர்பொழிற் சிவபுரமே. ௪

வீறுநன் குடையவள் மேனிபாகம்
கூறுநன் குடையவன் குளிர்நகர் தான்
நாறுநன் குரவிரி வண்டுகிண்டித்
தேறலுண் டெழுதரு சிவபுரமே. ௫

மாறெதிர் வருதிரி புரமெரித்து
நீறது வாக்கிய நிமலன்நகர்

Koviloor Digital Library

நாறுடை நடுபவ குழவரொடும்
சேறுடை வயலணி சிவபுரமே. ௬

ஆவிலைந் தமர்ந்தவ னரிவையொடு
மேவிநன் கிருந்ததொர் வியன்நகர் தான்
பூவில்வண் டமர்தரு பொய்கையன்னச்
சேவல்தன் பெடைபுல்கு சிவபுரமே. ௭

எழில்மலை யெடுத்தவல் லிராவணன்றன்
முழுவலி யடக்கிய முதல்வன்நகர்
விழவினி லெடுத்தவெண் கொடிமிடைந்து
செழுமுகி லடுக்கும்வண் சிவபுரமே. ௮

சங்கள வியகையன் சதுர்முகனும்
அங்கள வறிவரி யவன்நகர்தான்
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே. ௯

மண்டையிற் குண்டிகை மாசுதரும்
மிண்டரை விலக்கிய விமலன்நகர்
பண்டமர் தருபழங் காவிரியின்
தெண்டிரை பொருதெழு சிவபுரமே. ௰

சிவனுறை தருசிவ புரநகரைக்
கவுணியர் குலபதி காழியர்கோன்
தவமல்கு தமிழிவை சொல்லவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

113. திருவல்லம் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

எரித்தவன் முப்புர மெரியின்மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவ னுறைவிடந் திருவல்லமே. ௧

Koviloor Digital Library

தாயவ னுலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் தூமதி சூடியெல்லாம்
ஆயவ னமரர்க்கும் முனிவர்கட்கும்
சேயவ னுறைவிடந் திருவல்லமே. ௨

பார்த்தவன் காமனைப் பண்பழியப்
போர்த்தவன் போதகத் தின்னுரிவை
ஆர்த்தவன் நான்முகன் தலையையன்று
சேர்த்தவ னுறைவிடந் திருவல்லமே. ௩

கொய்தவம் மலரடி கூடுவார்தம்
மைதவழ் திருமகள் வணங்கவைத்துப்
பெய்தவன் பெருமழை யுலகமுய்யச்
செய்தவ னுறைவிடந் திருவல்லமே. ௪

சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும்வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடுங்கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே
சேர்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. ௫

பதைத்தெழு காலனைப் பாதமொன்றால்
உதைத்தெழு மாமுனிக் குண்மைநின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வியன்று
சிதைத்தவ னுறைவிடந் திருவல்லமே. ௬, ௭

இகழ்ந்தரு வரையினை யெடுக்கலுற்றாங்
ககழ்ந்தவல் லரக்கனை யடர்த்தபாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச்செய்தே
திகழ்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. ௮

பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
அரியவ னருமறை யங்கமானான்
கரியவன் நான்முகன் காணவொண்ணாத்
தெரியவன் வளநகர் திருவல்லமே. ௯

அன்றிய அமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய அறவுரை கூறுவண்ணம்
வென்றவன் புலனைந்தும் விளங்களங்கும்
சென்றவ னுறைவிடந் திருவல்லமே. ௰

கற்றவர் திருவல்லங் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன

Koviloor Digital Library

குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவ ரீசன்பொற் பாதங்களே. ௰௩

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

114. திருமாற்பேறு : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவ னுணுமவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே. ௧

பாறணி வெண்டலை கையிலேந்தி
வேறணி பலிகொளும் வேட்கையனுய்
நீறணிந் துமையொரு பாகம்வைத்த
மாறிலி வளநகர் மாற்பேறே. ௨

கருவுடை யாருல கங்கள்வேவச்
செருவிடை யேறியுஞ் சென்றுநின்
றுருவுடை யாளுமை யாளுந்தானும்
ம்ருவிய வளநகர் மாற்பேறே. ௩

தலையவன் தலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுகந்தான்
கலைநவின் ருன்கயி லாய மென்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே. ௪

துறையவன் தொழிலவன் தொல்லுயிர்க்கும்
பிறையணி சடைமுடிப் பெண்ணொர்பாகன்
கறையணி மிடற்றண்ணல் காலற்செற்ற
மறையவன் வளநகர் மாற்பேறே. ௫

பெண்ணினல் லாளையொர் பாகம்வைத்துக்
கண்ணினுற் காமனைக் காய்ந்தவன்றன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்குநன் மாற்பேறே. ௬, ௭

Koviloor Digital Library

தீதிலா மலையெடுத் தவ்வரக்கன்
நீதியால் வேதகீ தங்கள்பாட
ஆதியா ருகிய அண்ணலெங்கள்
மாதிதன் வளநகர் மாற்பேறே. அ

செய்யதன் டாமரைக் கண்ணனொடும்
கொய்யணி நறுமலர் மேலயனும்
ஐயனன் சேவடி யதனையுங்க
மையல்செய் வளநகர் மாற்பேறே. கூ

குளித்துணு அமணர்குண் டாக்கரென்றும்
களித்துநன் கழலடி காணலுற்ருர்
முளைத்தவெண் மதியினொ டரவஞ்சென்னி
வளைத்தவன் வளநகர் மாற்பேறே. ம

அந்தமில் ஞானசம் பந்தன் நல்ல
செந்திசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தமின் றமிழ்கள் கொண் டேத்தவல்லார்
எந்தைதன் கழலடியெய்துவரே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

115. திருஇராமனதீச்சரம் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளு மவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்கும னிராமன தீச்சரமே. க

சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்தம தத்தவன் ருதையோதான்
அந்தமில் பாடலோ னழகனல்ல
எந்தவ னிராமன தீச்சரமே. உ

தழைமயி லேறவன் ருதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய கோலமார்பின்
இழையவ னிராமன தீச்சரமே. ந

Koviloor Digital Library

சத்தியு ளாதியோர் தையல்பங்கன்
முத்திய தாகிய மூர்த்தியோதான்
அத்திய கையினி லழகுசூலம்
வைத்தவ னிராமன தீச்சரமே. ௪

தாழ்ந்தகு ழற்சடை முடியதன்மேல்
தோய்ந்த இளம்பிறை துளங்குசென்னிப்
பாய்ந்தகங் கையொடு படவரவம்
ஏய்ந்தவ னிராமன தீச்சரமே. ௫

சரிகுழ லிலங்கிய தையல்காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவ னுடலோ னங்கையேந்தும்
எரியவ னிராமன தீச்சரமே. ௬

மாறிலா மாதொரு பங்கன்மேனி
நீறது வாடலோ னீள்சடைமேல்
ஆறது சூடுவா னழகன்விடை
ஏறவ னிராமன தீச்சரமே. ௭

தடவரை யரக்கனைத் தலைநெரித்தோன்
படவர வாட்டிய படர்சடையன்
நடமது வாடலா னுன்மறைக்கும்
இடமவ னிராமன தீச்சரமே. ௮

தனமணி தையல்தன் பாகன்றன்னை
அனமணி யயனணி முடியுங்காணான்
பனமணி அரவரி பாதங்காணான்
இனமணி யிராமன தீச்சரமே. ௯

தறிபோலாஞ் சமணர்சாக் கியர்சொற்கொளேல்
அறிவோரா னுமம றிந்துரைமின்
மறிகையோன் றன்முடி மணியார்கங்கை
எறிபவ னிராமன தீச்சரமே. ௰

தேன்மலர்க் கொன்றையோன் *
* * * *
* * * *
* * முந்தமக் கூனமன்றே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

116. பொது : திருநீலகண்டம். பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : ஆற்றுச்செந்திறம் பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : சுத்தசுரவராளி ⁕ பிரணவாகாரி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். க

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். உ

முலைத்தட மூழ்கிய போகங்களுமற் றெவையு மெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். ௩

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். ச

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். ரு

மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். சா, எ

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துது நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். அ

Koviloor Digital Library

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியு முடியுந் தொடர்வரியீர்
தோற்றிலும் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றுதிரு நீலகண்டம். ௯

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றுதிரு நீலகண்டம். ௰

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்துவல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

117. திருப்பிரமபுரம் :மொழிமாற்று.
பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : இயையாலமைத்திறம் பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : சிம்மளவராளி ⁕அம்சப்பிரமரி

திருச்சிற்றம்பலம்

காட தணிகலங் காரர வம்பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினிற் றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம் வில்லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே. ௧

கற்றைச் சடையது கங்கண முன்கையிற் றிங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்றலை சுட்டதுபண்
டெற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை யெழில்விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள் வேதியரே. ௨

கூவிளங் கையது பேரி சடைமுடிக் கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத் துத்திநாகம்
ஏவிளங் குந்நுத லாளையும் பாகமு ரித்தனரின்
பூவிளஞ் சோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே. ௩

உரித்தது பாம்பை யுடல்மிசை யிட்டதோ ரொண்களிற்றை
எரித்ததொ ராமையை யின்புறப் பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே. ௪

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

கொட்டுவ ரக்கரை யார்ப்பது தக்கை குறுந்தாளன
விட்டுவர் பூதங் கலப்பில ரின்புக ழென்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமு மேந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை சுந்தரரே. ரு

சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர் கோவணந்தங்
கூத்தவர் கச்சுக் குலவிநின் றுடுவர் கொக்கிறகும்
பேர்த்தவர் பல்படை பேயவை சூடுவர் பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே. சா

காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற் கழற்சிலம்பு
மாலது வேந்தல் மழுவது பாகம் வளர்கொழுங்கோட்
டாலது வூர்வ ரடலேற் றிருப்ப ரணிமணிநீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர் சிரபுர மேயவரே. எ

நெருப்புரு வெள்விடை மேனிய ரேறுவர் நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை யார்விறல் மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி புண்ணியரே. அ

இலங்கைத் தலைவனை யேந்திற் றிறுத்த திரலையின்னுள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி குமைபெற்றது
கலங்கிளர் மொந்தையி னுடுவர் கொட்டுவர் காட்டகத்துச்
சலங்கிளர் வாழ்வயற் சண்பையுள் மேவிய தத்துவரே. கூ

அடியிணை கண்டிலன் தாமரை யோன்மால் முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந் தேறுவர் தோலுடுப்பர்
பிடியணி யுந்நடை யாள்வெற் பிருப்பதோர் கூறுடையர்
கடியணி யும்பொழிற் காழியுள் மேய கறைக்கண்டரே. ௰

கையது வெண்குழை காதது சூல மமணர்புத்தர்
எய்துவர் தம்மை யடியவ ரெய்தாரொ ரேனக்கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுள் மேவிய கொற்றவரே. ௰க

கல்லுயர் கழுமல விஞ்சியுள் மேவிய கடவுள் தன்னை
நல்லுரை ஞானசம் பந்தன்ஞா னத்தமிழ் நன்குணரச்
சொல்லிடல் கேட்டல்வல் லோர்தொல்லை வானவர்தங்களொடுஞ்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ லோகமதே. ௰உ

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

118. திருப்பருப்பதம் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : ஆற்றுத்திறம் பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : சுரவராளி

திருச்சிற்றம்பலம்

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே. க

நோய்புல்கு தோல்திரைய நரைவரு நுகருடம்பில்
நீ புல்கு தோற்றமெல்லா நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே. உ

துனியுறு துயர்தீரத் தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனுத லிரண்டுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக் கருமுசுக் கழையுகளும்
பனியுறு கதிர்மதியான் பருப்பதம் பரவுதுமே. ௩

கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடையான்
எங்கள்நோ யகலநின்ற னெனவரு ளீசனிடம்
ஐங்கணை வரிசிலையா னநங்கனை யழகழித்த
பைங்கண்வெள் ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே. ௪

துறைபல சுனைமூழ்கித் தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந் தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப் பருப்பதம் பரவுதுமே. ௫

சீர்கெழு சிறப்போவாச் செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே யிரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுள திடம்வகையால்
பார்கெழு புகழோவாப் பருப்பதம் பரவுதுமே. ௬

புடைபுல்கு படர்கமலம் புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி வெந்தவெண் ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே. ௭

Koviloor Digital Library

நினைப்பெனு நெடுங்கிணற்றை நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தே னவலம்வந் தடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கை கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப் பருப்பதம் பரவுதுமே. ௮

மருவிய வல்வினைநோ யவலம்வந் தடையாமல்
திருவுரு வமர்ந்தானுந் திசைமுக முடையானும்
இருவரு மறியாமை யெழுந்ததோ ரெரிநடுவே
பருவரை யுறநிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே. ௯

சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர்பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே. ௰

வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட லிசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவு ஞானசம் பந்தன்நல்ல
ஒண்சொலி னிவைமாலை யுருவெணத் தவமாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

119. திருக்கள்ளில் : பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : ஆற்றுத்திறம்

பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : சுரவராளி

திருச்சிற்றம்பலம்

முள்ளின்மேல் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமே லுயர்வெய்த லொரு தலையே. ௧

ஆடலான் பாடலா னரவங்கள் பூண்டான்
ஓடலாற் கலனில்லா னுறை பதியால்
காடலாற் கருதாத கள்ளில் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசு வாரே. ௨

எண்ணார்மும் மதிலெய்த விமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார்நீ றணிமார்பன் கள்ளில் மேயான்
பெண்ணாணும் பெருமானெம் பிஞ்ஞ கனே. ௩

Koviloor Digital Library

பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண் டாலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார் நயந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளில் மேயான்
நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சு ளானே. ச

விரையாலு மலராலும் விழுமை குன்று
உரையாலு மெதிர்கொள்ள வூரா ரம்மாக்
கரையார்பொன் புனல்வேலிக் கள்ளில் மேயான்
அரையார்வெண் கோவணத்த வண்ணல் தானே. ரு

நலனுய பலிகொள்கை நம்பான் நல்ல
வலனுய மழுவாளும் வேலும் வல்லான்
கலனுய தலையோட்டான் கள்ளில் மேயான்
மலனுய தீர்த்தெய்து மாதவத் தோர்க்கே. சா

பொடியார்மெய் பூசினும் புறவின் நறவம்
குடியாவூர் திரியினுங் கூப்பி டினும்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளில் மேயான்
அடியார்பண் பிகழ்வார்க ளாதர் களே. எ

திருநீல மலரொண்கண் தேவி பாகம்
புரிநூலுந் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளி லென்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே. அ

வரியாய மலரானும் வையந் தன்னை
உரிதாய அளந்தானு முள்ளு தற்கங்
கரியானு மறியாத கள்ளில் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே. கூ

ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணு மின்கள்
மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ணல் திருந் தடியே. ய

திகைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகைமேவு முதிர்சடையான் கள்ளி லேத்தப்
புகழோடும் பேரின்பம் புகுது மன்றே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

120. திருவையாறு : திருவிராகம்.
பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் றோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவ னரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநக ரந்த ணையாறே. க

கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதிபடர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியத ளரவரை
ஆர்த்தவன் வளநக ரந்த ணையாறே. உ

வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற வெய்தவ னெழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது இமையவர் குறைகொள
அரிந்தவன் வளநக ரந்த ணையாறே. ௩

வாய்ந்தவல் லவுணர்தம் வளநக ரெரியிடை
மாய்ந்தற வெய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் றொன்மறை யாறங்கம்
ஆய்ந்தவன் வளநக ரந்த ணையாறே. ச

வானமர் மதிபுல்கு சடையிடை யரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநக ரந்த ணையாறே. ரு

முன்பனை முனிவரோ டமரர்கள் தொழுதெழும்
இன்பனை யிணையில விறைவனை யெழில்திகழ்
என்பொனை யேதமில் வேதியர் தாந்தொழும்
அன்பன வளநக ரந்த ணையாறே. சா

வன்றிற லவுணர்தம் வளநக ரெரியிடை
வெந்தற வெய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநக ரந்த ணையாறே. எ

விடைத்தவல் லரக்கனல் வெற்பினை யெடுத்தலும்
அடித்தலத் தாலிறை யூன்றிமற் றவனது

Koviloor Digital Library

முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநக ரந்த ணையாறே. அ

விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோனல
எண்ணிலி தேவர்க ளிந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனுங் காண்பரி தாகிய
அண்ணல்தன் வளநக ரந்த ணையாறே. கூ

மருளுடை மனத்துவன் சமணர்கள் மாசரு
இருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா
அருளுடை யடிகள் த மந்த ணையாறே. ய

நலமலி ஞானசம் பந்தன தின்றமிழ்
அலமலி புனல்மல்கு மந்தணை யாற்றினைக்
கலமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

121. திருஇடைமருதூர் : திருவிராகம்.
பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சிர்திறம் — பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுர மெரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம் மிடர்கெட லெளிதே. க

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியணல் விடமிடை மருதே. உ

அருமைய வெளிமைய னழல்விட மிடறினன்
கருமையி னொளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொ டொருமையின்
இருமையு முடையணல் விடமிடை மருதே. ந

Koviloor Digital Library

பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதொர்
எரிவளர் சடையண லிடமிடை மருதே. ௪

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கு மிடமிடை மருதே. ௫

கலையுடை விரிதுகில் கமழ்குழ லகில்புகை
மலையுடை மடமகள் தனையிட முடையோன்
விலையுடை யணிகல னிலனென மழுவினோ
டிலையுடை படையவ னிடமிடை மருதே. ௬

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமண லணைகரை யிசைசெயு மிடைமரு
துளமென நினைபவ ரொலிகழ லிணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. ௭

மறையவ னுலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல வடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவ னுறைதரு மிடமிடை மருதே. ௮

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ டிகலின ரினதெனக்
கருதிட லரியதொ ருருவொடு பெரியதொர்
எருதுடை யடிகள் த மிடமிடை மருதே. ௯

துவருறு விரிதுகி லுடையரு மமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மி னிடுமணல்
கவருறு புனலிடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெட லணுகுதல் குணமே. ௰

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழிலிடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

122. திருஇடைமருதூர் : திருவிராகம்.
பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : சுத்தவராளி

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. க

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரு மிடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவில ருலகினில்
பிறிதிரை பெறுமுடல் பெறுகுவ தரிதே. உ

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென விடுபலி யவரிடை மருதினை
வலமிட வுடல்நலி விலதுள வினையே. ங

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவ ரிடைமரு தெனுநகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் முயர்வே. ச

உரையரு முருவின ருணர்வரு வகையினர்
அரைபொரு புலியத ளுடையின ரதன்மிசை
இரைமரு மரவின ரிடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. ரு

ஒழுகிய புனல்மதி யரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை யடிகள தறைகழல்
எழிலின ருறையிடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருற லிலரே. சா

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமக ளுலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவ ரிடமிடை மருதே. எ

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர

Koviloor Digital Library

இருவகை விரனிறி யவரிடை மருதது
பரவுவ ரருவினை யொருவுதல் பெரிதே. அ

அரியொடு மலரவ னெனவிவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழு
எரிதரு முருவர்த மிடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. கூ

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவில
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமனம் நினைவது மெழிலே. ம

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

123. திருவலிவலம் : திருவிராகம்.
பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சிர்திறம்

பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே. க

இட்டம தமர்பொடி யிசைதலி னசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென அணிபெறு
விட்டொளிர் திருவுரு வுடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலமுறை யிறையே. உ

உருமலி கடல்கடை வுழியுலகமருயிர்
வெருவுற வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்கள முடையவன் மிடைதரு
மருமலி பொழில்வலி வலமுறை யிறையே. ங

Koviloor Digital Library

அனல்நிகர் சடையழ லவியுற வெனவரு
புனல்நிகழ் வதுமதி நனைபொறி யரவமும்
எனநினை வொடுவரு மிதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலமுறை யிறையே. க

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. ரு

தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுஅரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே. சா

நலிதரு தரைவர நடைவரு மிடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவ னெழில்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்வலி வலமுறை யிறையே. எ

இரவண னிருபது கரமெழில் மலைதனின்
இரவண நினைதர வவன்முடி பொடிசெய்து
இரவண மமர்பெய ரருளின னகநெதி
இரவண நிகர்வலி வலமுறை யிறையே. அ

தேனமர் தருமல ரணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நில மகழரி யடிமுடி
தானணை யாவுரு வுடையவன் மிடைகொடி
வானணை மதில்வலி வலமுறை யிறையே. கூ

இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையி லுணலுடை யவர்களு நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை யுருவினன்
மலைமலி மதில்வலி வலமுறை யிறையே. ம

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழில்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய வொருபது முயர்பொருள் தருமே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

124. திருவீழிமிழலை : திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : செந்திறம்

பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : சுத்தவராளி

திருச்சிற்றம்பலம்

அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்
நலமலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே. க

இருநில மிதன்மிசை யெழில்பெறு முருவினர்
கருமலி தருமிகு புவிமுத லுலகினில்
இருளறு மதியின ரிமையவர் தொழுதெழு
நிருபமன் மிழலையை நினையவ லவரே. உ

கலைமகள் தலைமக னிவனென வருபவர்
அலைமலி தருபுன லரவொடு நகுதலை
இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினையவ லவரே. ௩

மாடமர் சனமகிழ் தருமன முடையவர்
காடமர் கழுதுக ளவைமுழ வொடுமிசை
பாடலின் நவில்பவர் மிகுதரு முலகினில்
நீடமர் மிழலையை நினையவ லவரே. ச

புகழ்மகள் துணையினர் புரிகுழ லுமைதனை
இகழ்வுசெய் தவனுடை யெழின்மறை வழிவளர்
முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவ லவரே. ரு

அன்றின ரரியென வருபவ ரரிதினில்
ஒன்றிய திரிபுர மொருநொடி யினிலெரி
சென்றுகொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற
நின்றவன் மிழலையை நினையவ லவரே. சா

கரம்பயில் கொடையினர் கடிமல ரயனதொர்
சிரம்பயில் வறவெறி சிவனுறை செழுநகர்
வரம்பயில் கலைபல மறைமுறை யறநெறி
நிரம்பினர் மிழலையை நினையவ லவரே. எ

ஒருக்கிய வுணர்வினெ டொளிநெறி செலுமவர்
அரக்கனன் மணிமுடி யொருபது மிருபது

Koviloor Digital Library

கரக்கன நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினையவ லவரே. அ

அடியவர் குழுமிட அவனியில் நிகழ்பவர்
கடிமல ரயனரி கருதரு வகைதழல்
வடிவுரு வியல்பினொ டுலகுகள் நிறைதரு
நெடியவன் மிழலையை நினையவ லவரே. கூ

மன்மத னெனவொளி பெறுமவர் மருதமர்
வன்மலர் துவருடை யவர்களு மதியிலர்
துன்மதி யமணர்கள் தொடர்வரு மிகுபுகழ்
நின்மலன் மிழலையை நினையவ லவரே. ௰

நித்திலன் மிழலையை நிகரிலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ்விர கனமொழி
பத்தியில் வருவன பத்திவை பயில்வொடு
கற்றுவல் லவருல கினிலடி யவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

125. திருச்சிவபுரம் : திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : செந்திறம் பண்தார் : ஆதிசேடன்
கனரகம் : சுத்தவராளி

திருச்சிற்றம்பலம்

கலைமலி யகலல்கு லரிவைத னுருவினன்
முலைமலி தருதிரு வுருவம துடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ
இலைநலி வினையிரு மையுமிடர் கெடுமே. க

படரொளி சடையினன் விடையினன் மதிலவை
சுடரெரி கொளுவிய சிவனவ னுறைபதி
திடலிடு புனல்வயல் சிவபுர மடையநம்
இடர்கெடு முயர்கதி பெறுவது திடனே. உ

வரைதிரி தரவர வகடழ லெழவரு
நுரைதரு கடல்விட நுகர்பவ னெழில்திகழ்
திரைபொரு புனலரி சிலதடை சிவபுரம்
உரைதரு மடியவ ருயர்கதி யினரே. ௩

Koviloor Digital Library

துணிவுடை யவர்சுடு பொடியின ருடலடு
பிணியடை விலர்பிற வியுமற விசிறுவர்
தணிவுடை யவர்பயில் சிவபுர மருவிய
மணிமிட றனதடி யிணைதொழு மவரே. ௪

மறையவன் மதியவன் மலையவன் நிலையவன்
நிறையவ னுமையவள் மகிழ்நட நவில்பவன்
இறையவ னிமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவ னெமையுடை யவனே. ரு

முதிர்சடை யிளமதி நதிபுனல் பதிவுசெய்
ததிர்கழ லொலிசெய வருநட நவில்பவன்
எதிர்பவர் புரமெய்த இணையிலி யணைபதி
சதிர்பெறு முளமுடை யவர்சிவ புரமே. சா

வடிவுடை மலைமகள் சலமக ளுடனமர்
பொடிபடு முழையதள் பொலிதிரு வுருவினன்
செடிபடு பலிதிரி சிவனுறை சிவபுரம்
அடைதரு மடியவ ரருவினை யிலரே. எ

கரமிரு பதுமுடி யொருபது முடையவன்
உரநெரி தரவரை யடர்வுசெய் தவனுறை
பரனென அடியவர் பணிதரு சிவபுர
நகரது புகுதல்நம் முயர்கதி யதுவே. அ

அன்றிய லுருவுகொ ளரியய னெனுமவர்
சென்றள விடலரி யவனுறை சிவபுரம்
என்றிரு பொழுதுமுன் வழிபடு மவர்துயர்
ஒன்றிலர் புகழொடு முடையரிவ் வுலகே. கூ

புத்தரொ டமணர்க ளறவுரை புறவுரை
வித்தக மொழிகில விடையுடை யடிகள்தம்
இத்தவ முயல்வுறி லிறைவன சிவபுரம்
மெய்த்தகவழிபடல் விழுமிய குணமே. ௰

புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு சிவபுர நகருறை
எந்தையை யுரைசெய்த விசைமொழி பவர்வினை
சிந்திமு னுறவுயர் கதிபெறு வர்களே. ௰க

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

126. திருக்கழுமலம் : திருத்தாளச்சதி - பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதிசேடன்

கனரகம் : வராளி

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின் றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணுற்
றுமேகாணு வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார் பூவார்சீர்மேவுங் கழுமல வளநகரே. க

பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்த வெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுத லரிவையொடும்
உச்சத்தா னச்சிப்போல் தொடர்ந்தடர்ந்த வெங்கணே
றூராவூரா நீள்வீதிப் பயில்வொடு மொலிசெயிசை
வச்சத்தா னச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசிவல வவனதிடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே. உ

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
சேரேசேரே நீராகச் செறிதரு சுரநதியோ
டங்கைச்சேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்டலைப்
பாலேமேலே மாலேயப் படர்வுறு மவனிறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையனிடங்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. ௩

அண்டத்தா லெண்டிக்கு மமைந்தடங்கு மண்டலத்
தாறேவேறே வானுள்வா ரவரவ ரிடமதெலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்தலைந்த வும்பரு
மாறேலாதார் தாமேவும் வலிமிகு புரமெரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்திடிந்த இஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதூரா முனிவுசெய் தவனதிடங்
கண்டிட்டே செஞ்சொற்சேர் கவின்சிறந்த மந்திரக்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. ச

Koviloor Digital Library

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீருர்வீருர் போரார்தா ரகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரு முயிர்கள்திறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடேயாமே மாலோகத் துயர்களை பவனதிடங்
கைக்கப்பேர் யுக்கத்தே கனன்றுமிண்டு தண்டலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே. ரு

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தர மேயாமைப் பிரிவுசெய் தவனதிடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணுதாரே சேராமெய்க் கழுமல வளநகரே. சா

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்கு ணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. எ

செம்பைச்சே ரிஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழிற்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகரிறைவன்
இம்பர்க்கே தஞ்செய்திட் டிருந்தரன் பயின்றவெற்
பேரார்பூநே ரோர்பாதத் தெழில்விர லவணிறுவிட்
டம்பொற்பூண் வென்றித்தோ ளழிந்துவந்த னஞ்செய்தாற்
காரார்கூர்வாள் வாணளன் றருள்புரி பவனதிடங்
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காரார்சேருர் மாவீதிக் கழுமல வளநகரே. அ

பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பானுமால் தானுமேயப் பறவையி னுருவுகொள
ஒன்றிட்டே யம்புச்சே ருயர்ந்தபங் கயத்தவ
னேதானேதா னஃதுணரா துருவின தடிமுடியுஞ்

Koviloor Digital Library

சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
றேசால்வேறே ராகாரந் தெரிவுசெய் தவனதிடங்
கன்றுக்கே முன்றிற்கே கலந்திலந் நிறைக்கவுங்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. ௯

தட்டிட்டே முட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணுத்
தாமேபேணு தேநாளுஞ் சமணெடு முழல்பவரும்
இட்டத்தா லத்தந்தா னிதன்றதென்று நின்றவர்க்
கேயாமேவா யேதுச்சொ லிஜைமலி மருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள் புத்தரும்
போல்வார்தாமோ ராமேபோய்ப் புணர்வுசெய் தவனதிடங்
கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. ௰

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கஜலத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
டேழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதல் மடவரலே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

127. திருப்பிரமபுரம் : ஏகபாதம் - பண் - வியாழக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் :ஆதிசேடன்

கனரகம் : வராளி, மலயமாருதம், இலயம்

திருச்சிற்றம்பலம்

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். ௧

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன். உ

Koviloor Digital Library

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே. ௩

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன். ௪

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன். ௫

பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி. ௬

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில். ௭

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன். ௮

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். ௯

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே. ௰

கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே

கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
Koviloor Digital Library
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே. மக

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. மஉ

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

128. திருப்பிரமபுரம் : பண் - வியாழக்குறிஞ்சி
திருவெழுக்கூற்றிருக்கை

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : ஆதிசேடன், சூரியன்

கனரகம் : வராளி, பானு சூடாமணி, கரணம்

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை

இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழ லுன்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை

ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி

முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

Koviloor Digital Library

நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை உ௰௫
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி

வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை ௩௰
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முக னறியாப்

பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை ௩௰௫
ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்

மறைமுதல் நான்கும் ௪௰
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

கழுமல முதுபதிக் கவுணிய னறியும் ௪௰௫
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

129. திருக்கழுமலம் : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : வருணன், இந்திரன்

கனரகம் : மேகரஞ்சனி

திருச்சிற்றம்பலம்

சேவுயருந் திண்கொடியான் திருவடியே சரணென்று சிறந்தஅன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச் செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டுங் கழுமலமே ௧

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங் கரித்தா னமரர்தொழ அமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறு மிறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே. ௨

அலங்கல்மலி வானவருந் தானவரு மலைகடலைக் கடையப்பூதங் கலங்கஎழு
கடுவிடமுண் டிருண்டமணி கண்டத்தோன் கருதுங்கோயில் விலங்கலமர்
புயன்மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்குங் காலந்தானுங் கலங்கலிலா
மனப்பெருவண் கையுடைய மெய்யர்வாழ் கழுமலமே. ௩

பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச் சயமெய்தும் பரிசு வெம்மைப் போரிசையும்
புரமூன்றும் பொன்றவொரு சிலை வளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின் சூளிகைமேல் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு மகிழ்வெய்துங் கழுமலமே. ௪

ஊர்கின்ற அரவமொளி விடுதிங் ளொடுவன்னி மத்த மன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர் செஞ்சடையான் நிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின் பெருகு சுதைமாடக் கழுமலமே. ௫

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்தம் மதுவுகுப்ப அதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளக வளர் கரும்பிரிய அகம்பாயுங் கழுமலமே. ௬

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு வாய் நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப் புள்ளிரியுங் கழுமலமே. ௭

அடல்வந்த வானவரை யழித்துலகு தெழித்துழலும் அரக்கர்கோமான்
மிடல்வந்த இருபதுதோள் நெரியவிரற் பணிகொண்டோன் மேவுங்கோயில்,

Koviloor Digital Library

நடவந்த வுழுவரிது நடவொணு வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற் கரைகுவிக்குங் கழுமலமே. அ

பூமகள்தன் கோனயனும் புள்ளினெடு கேழலுருவாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணு வகைநின்றானமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களி கூர்ந்து நின்றேத்துங் கழுமலமே. கூ

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை மெய்த் தவமாய் நின்றுகையில்
உணல்மருவுஞ் சமணர்களு முணராத வகைநின்ற னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலி விழவினொலி யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க மேற்படுக்குங் கழுமலமே. ௰

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து ளீசன்றன் கழல்மேல்நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந்தன்றான் நயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்திரண்டு மிவைவல்லார் தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுஆண்டு முக்கணு னடிசேர முயல்கின்றாரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

130. திருவையாறு : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : வருணன், இந்திரன்
கனரகம் : மேகரஞ்சனி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே. க

விடலேறு படநாக மரைக்கசைத்து வெற்பரையான் பாவையோடும்
அடலேறென் றதுவேறி யஞ்சொலீர் பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங் கீன்றலைக்குந் திருவையாறே. உ

கங்காளர் கயிலாய மலையாளர் கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலுங் கோயில்
கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயா லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான லிரைதேருந் திருவையாறே. ௩

Koviloor Digital Library

ஊன்பாயு முடைதலைகொண் டூரூரின் பலிக்குழல்வாருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனர் தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலருந் திருவையாறே. ௪

நீரோடு கூவிளமும் நிலாமதியம் வெள்ளெருக்கும் நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த தத்துவனர் தங்குங்கோயில் காரோடி
விசும்பளந்து கடிநாறும் பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறே. ௫

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நெறிகாட்டும் விகிர்தனகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த புண்ணியனர் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினர்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே. ௬

நின்றுலா நெடுவிசும்பி னெருக்கிவரு புரமூன்றும் நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளருந் திருவையாறே. ௭

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த அரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோள்நெறிய அடர்த்தவனுக் கருள் புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ இளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல வயல்படியுந் திருவையாறே. ௮

மேலோடி விசும்பணவி வியன்நிலத்தை மிகஅகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத வகைநின்றன் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக் குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே. ௯

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே யாளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீசரிறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள் வந்தலைக்குந் திருவையாறே. ௰

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம் பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

131. திருமுதுகுன்றம் : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : வருணன், இந்திரன்
கனரகம் : மேகரஞ்சனி

திருச்சிற்றம்பலம்

மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண் குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணு நடைதெளியப் பளிங்கேபோ லரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன் கருதுமூ ருலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா ரிக்கொழிக்கும் முதுகுன்றமே. க

வேரிமிகு குழலியொடு வேடுவனாய் வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம் புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்றல் திருமுன்றிற் புகுந்துலவும் முதுகுன்றமே. உ

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந் திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமுகுயர்தெங்கின்குவைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா நீள்வயல்சூழ் முதுகுன்றமே. ௩

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோ னிந்திரன்மால் சென்றிரப்பத் தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநாணரியெரிகால் வாளியாக
மும்மதிலும் நொடியளவிற் பொடி செய்த முதல்வனிடம் முதுகுன்றமே. ச

இழைமேவு கலையல்கு லேந்திழையா ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவும் மால்யானையிரைதேரும் வளர்சாரல் முதுகுன்றமே. ரு

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த நாதனிட நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலி கழு நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகள் முகமலர வயல்தழுவு முதுகுன்றமே. சா

அறங்கிளரும் நால்வேத மாலின்கீ ழிருந்தருளி யமரர் வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தி னொன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங் கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி முத்துலைப்பெய் முதுகுன்றமே. எ

கதிரொளிய நெடுமுடிபத் துடையகட லிலங்கையர் கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங் கயிலை மலையைநிலை பெயர்த்தஞான்று.

Koviloor Digital Library

மதிளைகைக் கிறை முரல மலரடியொன் றூன்றிமறை பாடஆங்கே.
முதிரொளிய சுடர்நெடுவாள் முன்னீந்தான் வாய்ந்தபதி முதுகுன்றமே. அ

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும் பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந் துறநாடியுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை செழு நிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றமே. சா

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட் டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது முள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவம்புரியும் முதுகுன்றமே. ம

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு முதுகுன்றத்திறையைமூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன்றோம்புதொழில் தமிழ்ஞான சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர் நீடுலக மாள்வர்தாமே. மக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

132. திருவீழிமிழலை : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம் பண்தார் : வருணன், இந்திரன்
கனரகம் : மேகரஞ்சனி

திருச்சிற்றம்பலம்

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க் கிரங்கி நின்று.
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித்தோன் நின்றகோயில்.
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோது மோசைகேட்டு.
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலையாமே. க

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத் தாகப்புத் தேளிர்கூடி.
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட கண்டத்தோன் மன்னுங்கோயில்.
செறியிதழ்த்தா மரைத்தவிசில் திகழ்ந்தோங்கு மிலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்.
வெறிகதிர்ச்சா மரையிரட்ட இளவன்னம் வீற்றிருக்கும் மிழலையாமே. உ

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கள் தம் புரமூன்று மெழிற்கணுடி.
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொள வெஞ் சிலைவளைத்தோ னுறையுங்கோயில்
கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம் முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டும் மிழலையாமே. ௩

Koviloor Digital Library

உரைசேரு மெண்பத்து நான்குநூ றுயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கும் மிழலையாமே. ௪

காணுமா றரியபெரு மானாகிக் காலமாய்க் குணங்கள் மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம் படைத்தளிக்கும் பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப போலோங்கு மிழலையாமே. ௫

அகனமர்ந்த அன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யும் மிழலையாமே. ௬

ஆறுடு சடைமுடிய னனலாடு மலர்க்கைய னிமயப் பாவை
கூறுடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன் குளிருங்கோயில்
சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடும் மிழலையாமே. ௭

கருப்பமிகு முடலர்த்துக் காலூன்றிக் கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடிதோள் நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்ற னுடல்தடிந்த சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி விமானஞ்சேர் மிழலையாமே. ௮

செந்தளிர்மா மலரோனுந் திருமாலு மேனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினல் மறைவழியே புற்பரப்பி நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிக அளிப்போர் சேருமூர் மிழலையாமே. ௯

எண்ணிறந்த அமணர்களு மிழிதொழில்சேர் சாக்கியருமென்றுந்-தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்கருள்புரியும் நாதன்கோயில்
பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப் பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ டும்மிழியு மிழலையாமே. ௰

மின்னியலும் மணிமாட மிடைவீழி மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன் செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகு ஞான சம்பந்தன் பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லா ரிருநிலத்தி லீசனெனு மியல்பினோரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

133. திருக்கச்சியேகம்பம் : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : வருணன். இந்திரன்

கனரகம் : சிந்து மந்தாரி

திருச்சிற்றம்பலம்

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினெ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே. க

வரந்திகழு மவுணர் மாநகர்மூன் றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேயஇடம்
குருந்த மல்லிகை கோங்குமா தவிநல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்சேர இடர்கெடுமே. உ

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய கச்சி தன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பஞ் சேர இடர்கெடுமே. ஙு

தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற் சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற் கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப மேத்த இடர்கெடுமே. ச

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத் தூமதியம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப் பேய்க ளவைசூழ
வாடல்வெண் டலையோ டனலேந்தி மகிழ்ந்துட னுடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே. ரு

சாகம்பொன் வரையாகத் தானவர் மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி யேத்த இடர்கெடுமே. சா, எ

வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளர வம்மணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா அரக்கன்றன் நீள்முடி பத்து மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே. அ

Koviloor Digital Library

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தண னணங்கினெ டமருமிடம்
கரவில்வண் கையினர்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை மாய்ந்தறுமே. கூ

குண்டுபட் டமணா யவரொடுங் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை யொன்றினா லவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங் காண இடர்கெடுமே. ௰

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி யேம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

134. திருப்பறியலூர்வீரட்டம் : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : வருணன், இந்திரன்
கனரகம் : மேகரஞ்சனி

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. க

மருந்த னமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. உ

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ௩

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்

Koviloor Digital Library

சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ் சூழ வீரட்டத் தானே. ௪

கரிந்தா ரிடுகாட்டி லாடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. ரு

அரவுற்ற நாண அனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே. ௬

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையா ரரவ மழகா அசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. எ

வளைக்கும் மெயிற்றின் னரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே. அ

வளங்கொள் மலர்மே லயன்ஒத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழுத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே. கூ

சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதா னடியார் பெருமான்
உடையன் புலியி னுரிதோ லரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே.

KOVILOOR ANDAVAR
A. No. 46466
LIBRARY, KOVILOOR

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே. ௰௧

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

135. திருப்பராய்த்துறை : பண் - மேகராகக்குறிஞ்சி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : வருணன். இந்திரன்

கனரகம் : மேகரஞ்சனி

திருச்சிற்றம்பலம்

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே. க

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல அடிகளே. உ

வேதர்வேதமெல் லாமுறையால்விரித்
தோதநின்ற வொருவனுர்
பாதிபெண்ணுரு வாவர்பராயத்துறை
ஆதியாய அடிகளே. ௩

தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய்பயின் ருடுபராய்த்துறை
ஆலநீழ லடிகளே. ச

விரவிநீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவில்நின்றெரி யாடுவர்
பரவினரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த அடிகளே. ரு

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்ற அடிகளே. சா

விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற அடிகளே. எ

Koviloor Digital Library

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த் துறை
அரக்கன்றன்னை அடிகளே. அ

நாற்றமாமல ரானெடுமாலுமாய்த்
தோற்றமும்மறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க அடிகளே. கூ

திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே. ய

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே. யக

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

136. திருத்தருமபுரம் : பண் - யாழ்முரி

திறம் : குறிச்சீர்திறம்

பண்தார் : வருணன், இந்திரன்
கனரகம் : மேகரஞ்சி ✱ ஆகிரி

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட அன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவு மாடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயாங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே. க

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

பொங்குந டைப்புகலில் விடை யாமவர் ஊர்திவெண்
பொடி யணி தடங் கொள்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புன லர வம்வைகிய சடையர்
சங்குக டற்றிரையா லுதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழில் தருமபு ரம்பதியே. உ

விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொள்தோடு நின்றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனுப்
பெண்ணுற நின்றவர்தம் முரு வம்மயன் மால்தொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவல்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநல் தருமபு ரம்பதியே. ௩

வாருறு மென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழில் மழைந் நுழை தருமபு ரம்பதியே. ச

நேருமவர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேருமவர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடல் தடர்த் தபெற்றியா ரறிவர்
ஆரமவர்க்கழல்வா யதொர் நாகம ழஃகுறவ்
வெழுஃகொழும் மலர் கொள் பொன் னிதழிநல் லலங்கல்
தாரமவர்க்கிமவான் மக ளூர்வது போர்விடை
கடி படு செடி பொழில் தருமபு ரம்பதியே. ரு

கூழையங் கோதைகுலா யவள் தம்பிணை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்

Koviloor Digital Library

யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃ கறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள் ளினந் துயில் பயில் தருமபு ரம்பதியே. சா

தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையில் துதை வெண்மதி துன்றுகொன்
றைதொல் புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயல் தருமபு ரம்பதியே. எ

தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முழையின் னத ளும்முடை யாடையர்
கொலைம் மலி படை யொர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவணஏறுடையெம் மடி கட்கிடம் வன்தடங்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. அ

வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலை தனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொள் தாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே. கூ

புத்தர்கள் தத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பய னுகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம் பொழில் தருமபு ரம்பதியே. ம

Koviloor Digital Library

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொருஉ புனல் திருஉ வமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடல் தரும புரம்பதியைப்
பின்னொடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னொடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
உறு வர்கள் இடர் பிணி துயரணைவ் விலரே. ௰௧

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

பதிகங்கள் - ௱௩௰௬

அகத்திய மாமுனிவர் விளக்கம்

அகத்திய மாமுனிவர் அத்தியாயம்

அகத்தியர் சிவகலையாகமாதி நூற்களை அருளிச் செய்த முனிவர்கள் முதன்மையானவர் ஆகையால் அவருடைய நாமங் காக்கப்படு மினியானவற்றுள் ஒன்றுந் தகுதி வாய்ந்தெனக் கருதி மூலாக்கினியை வளரச் செய்யும் சமானனென்னும் வாயுவினுக்கு அதன் பெயரை யமைத்துள்ளார்கள். அதனை ஒரு அத்துக்குட்படுத்தி முன்பு கூறினோம். அத்தியை யாயத்தை விரிவாக நாம் செய்துள்ள அகத்தியருண்மை நாடித் தொகை விளக்கத்திற் கூறியுள்ளோம். ஆயினும் அதன் நுணுக்கத்தையும். காக்கப்படும் இனிய கலையையும் ஈண்டுக் கூறுவோம் காண்க.

சிவஞானநுபூதி சாதன விளைவில் கபால வரையினின்று மூலத்திற் சார்பு கொண்டு சமான வாயுக் கதியால் மூலாக்கினியை எழுப்பி எழுந்துள்ள நிலையில் நின்ற பருவத்திற் பூரணத்தை யடைந்தவர் யாரேயாயினும் அவர் அகத்தியரேயாம். இதற்குப் பதமுத்தியென்று பெயர். ஒரு பதவியை யேற்கும் தகுதியாளராம் ஒருவர். அப்பதவியை யடைந்த பின்னர் அவர் இயற்பெயர் மாறி பதவியின் பெயரே வழங்குதல் போல அப்பதத்தினை அடைந்தவர்க் கெல்லாம் அகத்தியர் என்ற பெயரே வழங்கும் எனவறிக. இவ்விலக்கண வமைதியின்றிப் பெரியோர்கள் கூற மாட்டார்கள். அப்படியேதேனும் உளதாயின் அது தள்ளற் பாலதாம். இந்தச் சிலையக் கிலக்கியமாய் நின்ற அகத்திய மாமுனிவர் சதய நட்சத்திரத்தில் கும்ப ராசியை இலக்கினமாய்க் ஜனி

Koviloor Digital Library

கொண்டு பிறந்தவர். இலக்கனத்திற் கேதுவும் ஏழில் மற்ற கோள்களெல்லாம் அமைந்துள்ளன. இதைக் குறித்தே தான் மேரு கிரியில் பார்வதி பரமேச்சுரன் திருக்கல்யாணம் நடைபெற்றது. அங்கு எல்லா உலகத்தவர்களும் ஒன்று கூடினார்கள். அதனால் வடதிசை தாழ்ந்தது. தென்திசை உயர்ந்தது. அதைச் சமானம் செய்ய அங்குட்ட முனிவரான அகத்தியரை இறைவன் தென் திசைக்கனுப்பி வைத்தார். அதன்படி தென் பொதிகை வரையின் அமைந்தார். கல்யாணக் காட்சியை இருக்குமிடத்திலிருந்தே காணும் பேறு பெற்றார். கும்பத்திற் றோன்றிய வதனால் கும்பமுநி என்னும் பெயர் வந்தது. அங்குட்ட வடிவின் அளவினராக இருந்தமையால் குறுமுனிவர் என்னும் பெயர் பெற்றார். கடல் நீரை அங்கையில் அடக்கி யுண்டார் என்றெல்லாம் கூறப் பெறுகிறது. மேருவாகிய மலை சிம்மராசி. அதில் பார்வதி பரமேச்சுரன் திருமணம் நடைபெறல் சிம்மராசியில் சூரியன் சந்திரன் ஒன்று கூடல். அப்பொழுது அவ்விடம் எல்லா உலகத்தவர்களும் ஒன்று கூடல். கோள்களெல்லாம் அதே ராசியில் கூடி நிற்றல். அப்பொழுது வடதிசை தாழ்ந்து தென்திசை உயரல். சிம்மராசியில் உள்ள ராகுவிற்கு ஏழில் கேது நிற்றல் அங்குட்ட அளவிலரான குறுமுனிவரை இறைவன் தென்றிசைக் கனுப்பி வைத்தல். அங்கையென்னும் அத்த மீனிற்கு மேற்பாதத்தில் அங்கை அட்டமாம் அங்குட்ட மென்னும் இரண்டுள்ளங்கையைச் சார்ந்து எட்டுவிரல் கானெனவுள்ள நட்சத்திர பாதம் எட்டாம். மகம் க, உ, ௩ பூரம் க, உ, ௩, ச உத்திரம் க ஆகிய எட்டிலும் முறையே சூரியன். சந்திரன். புதன். ராகு. சனி. சுக்கிரன். செவ்வாய் வியாழன் ஆகிய எட்டுக் கோள்களும் நிற்கத் தோன்றுதல் அங்குட்ட முனிவராய் ஆதல் எல்லாக் கோள்களும் சிம்மராசியிற் குறுகி நிற்க கும்பராசியிற் சதயமீனை இலக்கினமாய்க் கொண்டு தோன்றல். குறுமுனிவராய்க் கும்பத்தே தோன்றிய கும்ப முனிவர் எனப் பெறல். குன்றென்னும் சதயமீனை இலக்கினமாய்க் கொள்ளல். பொதிகை வரையின் அமைதல். பொதிகை வரையின் அமைந்ததும் பூமி சமநிலையாதல். எட்டுக் கோள்களினும். வலியதாகியபாம்பு அதனியற்கைப்படி தன்னிடத்தினின்றும் கீழிறக்கங் கொள்ளல். குன்ற மென்னு சதய மீனினின்று சூரிய சந்திரர்கள் ஒன்று கூடுமிடத்தை ஏழாம் பார்வையாகப் பார்த்தல். பொதிகையிலிருந்து கல்யாணக் கோலத்தைத் தரிசித்தல். கைத்தலம் மென்னும் அத்த நட்சத்திர ராசிக்கு மேல் எட்டுக் கோள்களும் குறுகி நிற்றல் - எட்டுக் கடல்களும் உள்ளங்கையில் அடங்கும்படி செய்தல். இந்தக் கோள்நிலைக் குறிப்பு மலையருவி நீத்தம். முகின்மழை நீத்தம். கடலலை நீத்தம். நீலச் சதுப்பு நீத்தம் ஆகிய நீத்தப் பெருக்க உற்பாதங்களை யெல்லாம் நீக்க வல்ல தன்மையை விளக்கி மக்கட்கு நலம் பயப்பன வாகையால் இது காக்கப்படு மினியனவாக வமைத்துக் கூறப் பெற்றெதென வுணர்க.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

துருவாச முனிவர் விளக்கம்

துருவாச முனிவர் அத்தியாயம்

துருவாச மாமுனிவர் ஆத்திரம் அசூயையற்ற பெரியோர்கள் பாற் குற்றமிழைக்கும் கொடியோர்களைச் சபித்து ஒழிக்கும் மார்க்கங் கூறி அறம் வளர்த்தவராகையால் அவர் நாமங் காக்கப்படும் இனியவற்றுள் ஒன்ருகக் கருதி உடலுறுப்புகளில் மலாசயத்திற்கு அவர் பெயரைச் சரியையாயியைபு செய்துள்ளார்கள் என்பதை முன்பு கூறினேம். அவ்வத்தின் இயையும் ஆயமாம் அத்தியாயத்தையும் விளக்குகிரேம் காண்க.

திரிபுரம் எரியச் சிரித்த சிவபெருமானுடைய கோபக் கனலிற் ரேன்றிய குழந்தை ஆத்திரைய மாரிஷியின் மகவாய் அநுசூயையிடம் உதிக்க இறைவன் அருள் செய்ய அவ்வாறு தித்துத் தவசியானவரே துருவாசர். சுவாலிக்குங் கனற் கொழுந்தென கடுங் கோபம் உடையவர். தவறிழைத்தவர் யாவரே ய்ாயினும் சபிக்கும் ஆற்றல் உடையவர் என்று கூறப் பெறுகிறது. இரும்பு மதிலாய் விண்ணிலியங்குஞ் சனியும், வெள்ளி மதிலாய் விண்ணிலியங்குஞ் சுக்கிரனும், பொன்மதிலாய் விண்ணிலியங்கும் சந்திரனும், ஆகிய முப்புரங்களும் எரிபிறந்து அங்கி படர்ந்து செந்தழலாய் வெந்து விழும் படி ஆர்த்து நகைத்து முறுவல் கொள்ளலெனக் கார்த்திகை, அத்தம், கேட்டை ஆகிய மீன்களில் முறையே நிற்க, ஈசனின் நாளாகிய திருவாதிரை மீன இலக்கினமாகக் கொண்டு பிறந்தமையால் திரிபுரம் எரியச் சிரித்த சிவபெருமானுடைய கோபக் கனலிற் ரேன்றியவர் என்றும், எல்லாக் கோள்களினிடத்தும் அசூயையின்றி அனசூயை என்னும் நட்பாய் நிற்கும் புதன் மாதுருத்தானமாகிய நாலாமிடத்தில் நிற்பதைக் குறிக்க அனசூயையின் மைந்தன் என்றும், சூரியன் மிதுருத்தானமாகிய ஐந்தின் நிற்பதைக் குறிக்க ஆத்திரேயரைப் பிதாவாகக் கொண்டவர் என்றும், செவ்வாய் லக்கினத்தில் நிற்பதைக் குறிக்கவே கடுங்கோபமுடையவரென்றும், தாழ்ந்து நிமிருந்தன்மைப் பொருத்தத்தாற் சாபமென்னும் பெயரையுடைய தனுசுக்குரியவனுன வியாழன் அதிலேயே நிற்பதால் சாபமிடும் வலிமையுடையவர் என்றும், தூருவாச மாகிய கிணறென்னும் விருச்சிகராசியில் இருசு என எதிர் எதிர் நிற்கும் இராகு நிற்பதைக் குறிக்கவே துருவாச மகாரிசி என்றுங் கூறப் பெற்றதென உணர்க. எரிபிறந்திடு நாள் என்றும், அங்கி நாள் என்றும், செந்தழல் நாள் என்றும், முறையே கார்த்திகை, அத்தம், கேட்டை ஆகிய மீன்கள் பெயர் பெறும். அதில் முறையே சனி, சுக்கிரன், சந்திரன் நிற்க அவைகளுக்கு நீச்சத் தன்மை ஏற்படும். மேலும் அந்த நாண்மீன்களுக்குரிய எழுத்தொலி ஆர்ப்பு, நகைப்பு, முறுவல் என்னும் மூவகைப்பட்ட சிரிப்பொலியைக் குறிக்குந் தன்மையுடையன என்பனவற்றை நோக்கி முன் கூறிய தூருவாசர் சரியையைக் காண்க. இது நீச்சத்தை நீச்சம் பெற்ற கோள் நோக்கலால் ஏற்படும் விளைவின் பயனைக் காட்டவும், தீச்சொற் பலிதமுறுங் கோள்நிலையைக் காட்டவும் ஏற்பட்ட காக்கப்படு இனியனவாம். இதை நுணுகியுணர்பவர்கள் சபித்தல் செய்யும் கலை நுணுக்க வல்லராகலாம் என்றுணர்க.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

விசுவாமித்திர ரிஷி விளக்கம்

விசுவாமித்திர ருசி அத்தியாயம்

விசுவாமித்திர ருசியும் உலகினருக்குச் சிவகலையாக மாதிகலை யருளியவரே யாகையால் அவருடைய நாமமும் காக்கப்படும் இனியவற்று ளொன்றெனக் கருதி யாக்கைக்கு ஆக்கந்தரா நிற்கும் செயற்ப்பாட்டைக் கொண்ட ஆமாசயத்திற்குச் சரி இயைபுள்ள சரியையாக வமைத்துக் கூறிய விவரம் காட்டுகிறோம் காண்க. விச்சு உவம் என்னும் (இரண்டாவதாகிய) நிலையையடையும் போது தோன்ருததாய தன்மையே போல சுக்கிலத்தா லெடுத்த தூலமாகிய இந்த உடம்பாம் விச்சுவத்திற்கு மித்திரமாய் நின்று ஆக்கந் தருவது இரைப்பையாகிய ஆமாசயமே யாகையால் உலகினுக்கே நண்பனெனக் கருதப் பெற்ற தன்மை வாய்ந்த விசுவாமித்திரரை ஆமாசயமாகக் கூறப் பெற்றது. அந்த ஆமாசயம் உதராக்கினியால் எப்பொழுதும் வெம்மை மாருமலிருக்கும் இயல்புடைமையால் அவர் எப்பொழுதும் கோபமுடையவராக இருந்தாரென்று கூறப் பெறுகிறது. ஆமாசய நிலையத்ததானமாகிய பிண்டத்திலள்ள கருவிகளெல்லாம் வசியீட்டத் தாதுவாகிய மூளையிடங் கொண்டுள்ள அண்டத்திலுள்ள கருவிகளுக்கு எதிர்மாருகவுள்ளமையால் வசிட்டருக்கு இவர் என்றும் எதிர்மாறுபாடு கொண்டுள்ளவர் என்றும். ஆமாசயத் தொடராயுள்ள கீழ்மூலமானது மேன்முக மெய்தியுள்ள காலத்து அதைக் கீழ் முகமாகும் வண்ணம் வசியீட்டத் தாது நிலையப் போக்கு ஏற்படலாய காரணத்தால். மூலங் கீழ்முக மெய்துவதை வசிட்டருடன் மாறு கொண்டு இவர் சிருட்டி செய்த சுவர்க்கம் அந்தர சுவர்க்கமாய்த் தலைகீழாக வாயது என்றும். இவர் சிருட்டியிற் ருேன்றியனயாவையும் நீச்சத் தன்மை யுடையன வாயிற்றென்றும். உடம்பின் தட்ப வெட்ப மிகுதிப்பாடு. இரைப்பையாம் ஆமாசயத் தொழிலைக் கட்டுப்படுத்தும் ஆகையால் மேனகையால் இவர் பங்கப் படுத்தப்பட்டாரென்றும். வடிவத்தாலும். தன்மையாலும். செயலாலும் ஆமையை ஒத்துள்ளதாக ஆமாசய மிருப்பதால் இவர் ஆமையுருப் பெற்றுக் கொக்குருக் கொண்ட வசிட்டருடன் மாறுபட்டிருந்தாரென்றும் கூறப் பெறுகிறது. இவை விச்சுவா மித்திர நாமங் காக்கப்படும் இனிய கலையின் தெளிவென்றுணர்க.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கோதம ரிஷி விளக்கம்

கோதம இருசி அத்தியாயம்

கோ உத்தமர் என்னும் கோதமர் நிமித்தநூல் வகுத்தருளிய நிமித்த நூல்கலா வல்லவராகையால் அவருடைய நாமமும் காக்கப்படும் இனியவற்றுள் ஒன்ருக ஆக்கப் பெற்று ஐந்து ஆசயங்களில் ஒன்ருன சலாசயத்திற்குச் சரியியைபாகுஞ் சரியையாக வகுக்கப் பெற்றுள்ளது. அதனியலை முன்பு காட்டினேம். அது ஒரு அத்துக்குட்படுத்திக் கூறப் பெற்ற தாகையால் அவ்வந்தினியைந்த ஆயமாம் அத்தியாயத்தை ஈண்டுக் கூறுகிறோம் காண்க.

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

அச்வதி இரண்டில் சுக்கிரன் நிற்க, பரணி இரண்டில் புதனிற்க, கார்த்திகை இரண்டில் சூரியன் நிற்க, கார்த்திகை இரண்டாம் பாதமே சென்ம லக்கினமாக வமைய அதிற் சந்திரனும் நிற்க ஏழாமிடமாகிய வெருள் செய்யும் இராசியில் கேட்டை இரண்டில் செவ்வாய் நிற்க தனுசில் வியாழனும் மகரத்திற் சனியும் மீனத்திற் கேதுவும் கன்னியில் இராகுவும் நிற்கப் பிறந்தமையைக் குறிக்கவே இவரைக் கோதமர் என்றும் அகலியையை மணந்தார் என்றும், அகலியையை இந்திரன் பொய்யுருக் கொண்டு புணர்ந்தானென்றும், அஃதறிந்த கோதம ருசி அவனுடம்பெல்லாம் ஆயிரம் நிதம்பக் குறிகள் தோன்றும்படி சபித்தார் என்றும் அதனுற் கூசி தண்டளிரிலையில் மறைந்துள்ள இந்திரனுக்காகத் தேவர்கள் வேண்ட அது அவனுக்கவ்வாறே யாயினும் மற்றையோர்களுக்கு ஆயிரங் கண்களெனத் தோன்றுமாறு சாப நீக்கம் செய்தாரென்றும், அகலியையானவள் கற்பாறையாகக் கிடந்து மிதுலைவழிச் செல்லும் இராமனுடைய பாதச் சுவடுபடலால் மீண்டும் பெண்ணுகு மாறு சாபமும், சாப நீக்கமும் செய்தாரென்றும் கூறப் பெறுகிறது. எவ்வாறெனின், கோ உத்தமர் என்னும் மொழியே கோதமர் என்று ஆகியிருக்கிறது. கோ என்பது இடம் 'உ' என்பது இரண்டு. இரண்டில் ஒன்ருகத் தானுங் கூடி விடாமல், இரண்டின் முன்னிலைப் பாட்டில் தான் மிக்கவனுய்த் தமித்து நிற்பவனே உத்தமன் என்று கூறப் பெறுவான். ஆகவே, இடபத்தில் சூரியனும் சந்திரனும் நிற்க, அதை இலக்கினமாகக் கொண்டு பிறந்தமையாலும், "கோ" என்னும் பசுவாகிய புதன் பாசமாகிய சுக்கிரனை நீங்கிப் பதியாகிய சூரியனை அணுகலாகிய கோ உத்தம இயலைப் பெறும் முறைப்படி அச்வதி இரண்டில், பரணி இரண்டில், கார்த்திகை இரண்டில் முறையே சுக்கிரன், புதன், சூரியன் நிற்கத் தோன்றியமையாலும் கோதமர் என்னப் பெற்ருர். கோதமர் என்னம் பெயர்க் காரணம் பற்றி நான்கு கோணிலையை மட்டும் அறிந்து கொண்டோம். மேலும் உள்ள கோள்நிலைக் குறிப்பை எவ்வாறுணர்த்தியுள்ளார்கள் என்பதையும் காட்டுகிருேம். செவ்வாய் ஏழில் நிற்பதைக் குறிக்கவே அகலியையை மனைவியாகக் கொண்டார் என்று கூறப் பெறுகிறது. கலி என்ருல் சநி. அகலியென்ருல் சநிக்கு எதிர்மறையாகிய கோள் என்பதைக் குறிக்கும். சநிக்கு எதிர்மறையாய கோள் செவ்வாயேயாம். செவ்வாயின் மூலத்திரி கோண ராசியாகிய மேடத்திற் சநி சார்ந்தால் நீச்சத் தன்மையடைகிறது. அதே செவ்வாய் சநியின் வீடாகிய மகரத்திற் சார்ந்தால் உச்சம் பெறுகிறது. ஆகையால் கலிக்கு எதிர்மாருந் தன்மை பெற்ற அகலி இயைபுடையது செவ்வாயே ஆகிறது. அகலியையான செவ்வாய் ஏழாமிடமாகிய களத்திரத்தானத்தில் நிற்பதாலேயே அகலியையைக் கோதமர் மனைவியாகக் கொண்டார் என்றும், அந்தச் செவ்வாய் இந்திரன் என்னும் பெயர்த்தன்மை பெற்ற கேட்டை மீனில் நிற்பதால் இந்திரன் அவளைக் கூடினுனென்றும், செந்தழலெரியின் தன்மை வாய்ந்த அந்த மீன் எரிபிறந்திடு நாளாகிய கார்த்திகையிற் சூரியன் நிற்க இலக்கினங் கொண்டமைந்த கோதமரைப் போல சூரியனுடைய பார்வையைப் பெற்று நிற்பதால் கோதமரைப் போல இந்திரன் பொய்யுருக் கொண்டான் என்றும், செந்தழல் எரியாகிய கேட்டை மீனில் நிற்கும் செவ்வாயை அக்கினி நாண் மீனுகிய கார்த்திகையில் நிற்கும், ஆயிரங்

Koviloor Digital Library

கதிரோனுகிய சூரியன் நோக்குங் காலம். இந்திரன் என்னும் பரிசவுணர்ச்சித் தாது துவக்காகிய ஆனந்த மய கோசம் எங்ஙனும் இரத்தமும் நீருங் கசியும் துளையும் பெண் தெய்வக் குறியென்றும் சொல்லப் பெறுவதுமாகிய வைசூரிக் கொப்புளந் தோன்றும். இயற்கையே ஆயிரம் நிதம்பக் குறிகள் தோன்றும் படியாய் இந்திரனைச் சபித்தார் என்றும் வைசூரிக் கொப்புளங்கள் எல்லாம் அயலார் பார்ப்பதற்கு அழகாய்க் கண்களைப் போலிருந்தாலும் அதையுடையோருக்கு அது இரத்தமும் நீரும் கசியும் துளையாகவே இருப்பதால் இந்திரனுக்கு அது பெண்குறியாகவே தான் தோற்றமளிக்குமென்றும் வைசூரிக் கொப்புளங் கொண்டோர்கள் அவ்வெம்மைக் காற்றுமல் தண்டளிரிலையை யிடமாகக் கொள்ளுமியற்கையையே இந்திரன் வெட்கி இலையகத்து மறைந்தானென்றும். சந்திரா லக்கினத்திற்கு ஏழிலும் சென்ம லக்கினத்திற்கு ஏழிலும் சுக்கில லக்கினத்திற்கு எட்டிலும் செவ்வாய் நின்ற செவ்வாய் தோஷங் காரணமாகக் களத்திரம் வாய்க்காமல் போம் தன்மையையே அகலியைக் கல்லாய் போம்படி சபித்தாரென்றும் துலையின் மிக்கதாகிய மிதுலையென்னும் துலாராசிக்கேகும் குருவாகிய இராமன் கல்லென்னும் சிம்மராசியிற் பிரவேசிக்கும் காலம் குற்றமற்ற மனைவி வாய்ப்பதைக் குறிக்கவே இராமன் மிதுலை போம் வழியிற் கல்லாய்க் கிடந்த அகலியையின் சாபம் நீங்கப் பெற்றது என்றும் சொல்லப் பெறுகிறது. தூலமாகவும். சூக்குமமாகவும். கோதமப் பெயர்காரணத்தை விவரித்து இதுவரையுள்ள கோணிலையைச் சொன்னேம். இதேபோல் காரணமாகவும் கோதமப் பெயர் காரணத்தைப் பார்க்க கோள்நிலை யொன்பதின் அமைவு தோன்றுதலையும் காட்டுவோம். 'கோ' என்பது கண் கண்ணிரண்டுங் கூடி ஒன்றை நோக்குவதே கோவிற்கு உத்தமமாங் கோதமம். கோவாகிய கண்ணிற்கு நோக்கும் தன்மையில்லையேல் பயனில்லாதாகி விடும். ஆகையால். அவ்வாருகாமல் எல்லா ராசிகளினும் பார்வையுடையதாகக் கோணிலை யமைத்துப் பார்க்கும் போது ஐந்தில் இராகு. எட்டில் வியாழன். ஒன்பதிற் சனி. பதினென்றில் கேதுவாக வமையும். கோதமன்என்ற பெயரைத் தூல. சூக்கும. காரணமாக வமைத்தும். சரித்திரக் கூற்றை வைத்தும் பார்க்கும் போது கோணிலை முழுதும் அமைந்து விடுகிறது. இதை நுணுகி யாராயின். கோணிலைப் பயனுணர் ஆற்றலும் நிமித்திக நூலுணர்வுத் தெளிவும் தெள்ளெனத் தோன்றும். இப்பொழுது கூறிய கோணிலையை வரிசைப்படுத்தியுங் காட்டுகிறேம். இலக்கனம் கார்த்திகை இரண்டில் இடபம். சூரியன். சந்திரன் இருவரும் கார்த்திகை இரண்டில் (இடப ராசியில்) இராகு ஐந்தில். ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் (கேட்டை இரண்டில்) செவ்வாய். எட்டில் வியாழன். ஒன்பதில் சனி. பதினென்றில் கேது. பன்னிரண்டில் (அச்வதி இரண்டிற்) சுக்கிரன். பரணி இரண்டில் புதன். இவ்வாறு பார்க்கும் போது இலக்கினவமைதி கோதம தூலம். சுக்கிரன். புதன். சூரியன் நிற்கும் நட்சத்திர பாதவ மைதி கோதம சூக்குமம். ஏழாமிடச் செவ்வாய் அமைதி கோதம சரித்திர நுணுக்கம். இராகு. வியாழன். சனி. கேது வமைதி கோதம காரணம். இவ்வாருக அமைந்துள்ளதைக் காணும் பயன் கருதிக் காக்கப்படுமினியன வாயமைத்த காக்க பாடினிய விளக்கத்தை யோர்ந்துணர்ந்து பயன் பெறுக.

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

திருமுறைப் பெருநூல் விளக்கம்

ஆசிரியர் : சிந.வே. ஷண்முகநாத பிள்ளை அவர்கள்

காப்பு

ஞானசம் பந்தர் நவின்ற தேவாரமாம்
மோனத் தமிழ்மறை முற்றிற்கும் — வானம்
புவிபுக ழும்வேதப் பொருள் விளக்கம் செப்பும்
கவி செய்ய வைங்கரன் முள்காப்பு.

திருச்சிற்றம்பலம்

நட்டபா டையெனும் நாமச் சங்கேதம்
ஆம்முது மொழிச அனுகிற அகம்எனும்
நுதலிப் புகுதலின் நுழைந்து சித்செய்
சூக்கம் ஈறாறில் தோன்றி நிற்கும்
வியாகர ணம்எனும் மேற்கணக் கொன்பதிற்
சார்ந்த இசைவாம் சந்தசு என்னும்
எழுதா கிளவிமுன் றென்னும் சுருதி
மீச்சு ருதியில் விளங்கும் இயல்இசை
நாடகம் மூன்றாய் நவில்வதி லிரண்டுள்
நிறுத்தம் என்னும் ஒடுக்கம் ஐந்துள்
விவித மாக விரிந்து நிற்கும்
உபநிழ லிதாம்என ஓதும் நாடகம்
விளங்க வமைத்து விரிப்போம் காண்க.

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதல்திருமுறையில் முதற்பண்ணாகிய நட்டபாடை எனும் பெயர்குறிப்பையுடைய பண் எட்டுக் கட்டளைகளைக் கொண்டதாய் விளங்குகிறது. அதில் நட்டபாடை என்னும் பெயர்க் காரணம்

"நாட்டம் இரண்டும் நாடவொன் றனைபோல்
சீர்யாழ் யாப்புஅடி திறம்இவை நாட்டம்
படஇரன் டொன்றும் பண்நட் பாடை."

சிலஅரு

Koviloor Digital Library

என்பதைக் கொண்டு உணரலாம். அடுத்தபடியாக எட்டுக் கட்டளைகளை உடைய பண் இருபத்திரண்டுக்கு

"நைவளத்திறம், படுகுறிச்சீர் திறம், செந்திறம், அயிர்ப்பித் திறம், செம்பாலைத் திறம், நவில் திறம், ஆற்றுக் குறிச்சீர் திறம், குறிச்சீர் செந்திறம்" ஆக எட்டுக் கட்டளைகள் இவற்றின் விளக்கம் வருமாறு.

"நேய நயவளம் நிகழ்த்தல் நைவளத்திறம்
குறிக்கப் படுவது படுகுறிச் சீர்திறம்
தீமைதீர் செம்மை செப்புதல் செந்திறம்
என்கொல் சொல்லாய் எனல்அயிர்ப் புத்திறம்
தீமை தீர்தரு செம்மையின் பால்யேய்
திறஞ்செப் பிடுதல் செம்பா லைத்திறம்
அமைந்த சொல்லாய் என்றழைத்தல் நவில்திறம்
அருட்டிருப் பணியை யாற்றக் குறிப்பிட்
டறிவிக் கும்திறம் ஆற்றுக் குறிச்சீர்
குறிப்புறு செம்மையே குறிச்சீர் செந்திறம்".

மேற்கண்டவாறுள்ள நட்டபாடை பண்ணும் இந்த எட்டுக் கட்டளைகளும் அமைந்துள்ள காரணத்தை ஒலிவழி மொழியும் மறைநூல் விளக்க முறைப்படியுணரும் பொழுது இது துவித சித்தாந்தம் என்னும் பிரணவ வேதமாக இருக்கின்றது. இதன் விபரத்தை முறைப்படி பார்ப்போம். நாம் பார்க்கும் முறைக்கு திருமுறை என்று பெயர். திருமுறை பாஞ்சராத்திறம் என்னும் பஞ்சரத்திறமும் வைகாநசம் என்னும் வைகாநேயமும் ஆகிய இருவகைக்குள் அடங்கும். அதை வேதவிளக்கத்திற்கு முதல் நூலாகத் தந்திருக்கின்றோம்.

"திருமுறைப் பெருநூல் இலக்கண விளக்கம்"

பஞ்சரத்திறம் (ஐந்து)

அடங்கலுந் தன்னுள் ளடக்கி யடங்கும்
இயல்புள நாதத் தியைந்து விளங்க
வமைதிரு முறையே யடங்கன் முறையாம். க

அடங்கன் முறையாய் அடக்கி யடங்குந்
தன்மை யதனுற் சபையெனும் அம்பரம் உ

அம்பரம் என்னும் அகண்ட வெளியில்
விளங்குஞ் சித்தெனும் விந்துவை நாதம்
என்னுஞ் சத்தி இயைந்து நோக்கஅச்
சித்தம் பரத்திற் றிருநடம் ஆகும். ௩.

Koviloor Digital Library

சித்தம் பரத்திற் றிருநடஞ் செய்யும்
அசைவாற் பிறக்கும் ஆரவா ரம்அத்
தெய்வார வாரமே தேவாரம் என்ப ச

தேவார வாரமாய்த் திகழுஞ் சத்துசித்
தனந்த நடன மாயசிற் றம்பலம்
எழுதாக் கிளவி எனும்முதன் மறையாம். ரு

வைகாநேயம் (பதினொன்று)

முதன்மறை யாக முழங்குஞ் சுருதி
அடங்கன் முறையாய் அசபை நாதமாய்
சித்தம் பரநடஞ் செயுஞ்தே வாரமாய்
இறையருட் குருவா யியைந்து கைகாட்டும்
உபதச மான ஊமை எழுத்தாய்
அகர உகர மாகிய லிங்கமாம்
எட்டும் இரண்டும் எனும்அத் துவிதமாய்
அண்டம் பிண்டம் அகண்ட சராசரத்
தாதியும் அந்தமும் ஆகிய ஒன்றும்
இருசெனச் சித்துடன் இயைந்து சித்தர்கள்
இருடிகள் பதந்தர வேற்ற மோனம்
சிதம்பர ரகசியத் திருச்சிற் றம்பலம் சா

சிற்றம் பலத்திற் றிருநடஞ் செய்யும்
பதத்தாற் றுலங்கும் பசுவிற்கு ஆதியும்
அந்தமும் ஆக அமையுஞ் சிற்றம்பலம் எ

அந்தமும் ஆதியும் ஆகி நின்ற
பதியின் நடனம் பாசத் தியைந்த
பசுவெளி முகமாய்ப் பார்க்குங் காஉல
ஐவகை வேற்றுமை யாகித் தோன்றும் அ

ஐவகை வேற்றுமை யதுதனிச் சிறப்புத்
தன்மை யடுக்கென சாற்றும் பண்ணும் கூ

அதுவே.

வேற்றுமை ஐந்தாய் விளங்கப் பெற்றதால்
வேதம்நான் கொடு வேதாந்தம் ஒன்றும்
ஆகிய ஐந்தாய் அமைவு பெற்றது. ய

வேதவே தாந்தமாய் விளங்கும் பண்ணெனும்
தனிச்சிறப் புடைய தன்மை யடுக்குப்

Koviloor Digital Library

பஞ்ச (பஞ்ச) பீடத்திற் பதிசெய் நடனப்
பதச்சுவ டாகது பதிந்து தோன்ற
எழுந்த எழுத்து ஏழே ழிரண்டெனும்
நாத ஒலியையும் நாத வீரியம்
ஐம்பத் தொன்றையும் அகத்தியம் ஆக்கும்
ஐந்தாய் அஷ்டடங் கக்கர மொன்றாய்
விந்தொலி யாக விளங்கு தமிழையும்
உடம்பாய்க் கொள்ளும் உயரரி சித்தரி
எழுத்து முதற்பண் தாரி ருகப்
பிறக்கு மொன்பான் பிறப்புடை யொன்றாய்
மாலெனும் பசுவுரு வாகித் தோன்றும் ௰௧

மாலெனும் பசுவுரு வாயபண் தோற்றத்
திறத்திற் பண்ணவர் செனிக்கவப் பண்ணகத்
தைந்து தலைகொள லாதியாய்த் தோன்றி
முடிவில் நான்கு முகமுள வொன்றாய்
வேதன் என்ன விளங்குந் தாளமும்
சந்தம் பதமொடு சார்தரு கான
மிவைலய மொன்றுள் ளியைந்து நான்காம் ௰௨

நான்கொன் ருக நவிலும் பண்பா
டதனிடை தோன்றும் அநேகம் சாகை ௰௩

சாகைகள் அனைத்தினும் சார்ந்து பண்பா
டாகிய மால்அயன் அரனடி தேடும் ௰௪

தேடிட நின்ற சிற்றம் பலநடம்
ஐந்தெழுத் தாகி ஆன்மஞா னந்தரும் ௰௫

ஐந்தெழுத் தோருரு வாகிய மோன
பூரண மாகப் பொலியும் ஒன்றின்
அடிக்கீ ழாய்ச்சித் தாந்த பீடமாய்
வேதச் சுருதியாய் வேத முடியிலும்
வேத முடிவிலும் விளங்கும் பிரணவம் ௰௬

இவ்வகை யாஞ்சிறப் பியைந்து விளங்குஞ்
சூக்குமஞ் சேர்ந்தொரு தூலமாய்த் தோன்றித்
திகழ வமைத்தது திருமுறை யாகும் ௰௭

(திருமுறைப்பெருநூல் இலக்கண விளக்கம் நிறைவு பெற்றது)

அதன்படி பார்க்கும் பொழுது அடங்கன்முறை தேவாரம் திருச்சிற்றம்பலம் என்னும் சங்கேதமொழியைக் கொண்டு விளங்கும் நிலை:

Koviloor Digital Library
பண்ணினமாகிய இந்த நட்டபாடைப்பண் வைகாநேயத்தின் பதினுருவது சூத்திரமாகிய

"ஐந்தெழுத்	தோருரு	வாகிய	மோன	
பூரண	மாகப்	பொலியும்	ஒன்றின்	
அடிக்கீ	ழாய்ச்சித்	தாந்த	பீடமாய்	
வேதச்	சுருதியாய்	வேத	முடியிலும்	
வேத	முடிவிலும்	விளங்கும்	பிரணவம்"	பசூ

என்னும் விதியின்படி அமைந்துள்ளது. அதில் முதலாவது நட்டபாடைப் பண்ணின் எழுதாக் கிளவி துவித சித்தாந்த சுருதி.

எழுதா	கிளவி	எனுஞ்சிற்	றம்பலம்
அந்தமும்	ஆதியும்	ஆகித்	துலங்கத்
தோன்றும்	பண்சூக்	குமவிரி	சொல்லுவோம்.

பண் : நட்டபாடை

நட்டபா	டைஎன	நவிலும்	முதற்பண்
மூலத்	தாமரை	முகையெட்	டிதழ்என
எட்டுக்	கட்டுஊ	இயைய	வதனுள்
அக்கர	மான	அஉம	என
எட்டி	லிரண்டும்	இரண்டி	லொன்றும்
துலங்க	நட்ட	பாடையின்	தோற்றம்
விளங்க	முதலாம்	விளரி	உழைஇசை
தாரங்	கொள்ள	நேருறு	மொலியில்

இந்த சூத்திரம் எழுதாக் கிளவி என்னும் சந்தசு மூன்றில் இயல் என்னும் சுருதியை விளக்குகிறது. மூலத்தாமரை முகையெட்டிதழ் என எட்டுக் கட்டஊ இயைய வந்ததே அண்டத்துள்ளன அகச்சாய்ப் பதிந்து இலங்கி இயைபுள்ள இலங்கை. அதனுள் அக்கரமான அ உ ம என எட்டிலிரண்டும் இரண்டிலொன்றும் துலங்க வந்ததே இலங்கை ஈசனும் அவன் பெற்றேகும் ஆன்மலிங்கமும் ஆகும். அதற்கு காப்பாய் ஆதியாம் மூல கணபதி நின்று கருஊண பாலித்து அராஉமா அயணமாக்கியதே நட்டபாடையின் தோற்றம் விளங்க முதலாம் விளரி உழை இசை தாரங் கொள்ள நேருறு மொலியில் அமையும். அதில் நட்டபாடையின் தோற்றம் விளங்கலாயதே எண் மூன்றென்ரும் இது இக எச்ச வடிவென்றகன்று வகுத்தல் செய்தது. அப்படி செய்யுங்கால் ஈரிறு வகையால் எய்தும் முட்டு பாட்டுட் பட்டு பதிந்து பரவுதலில் உபநிழலறம் தோன்றும்.

Koviloor Digital Library

இந்த உபநிழலறம் துவித சித்தாந்த சுருதியாகவும் அச்சுருதி கூறும் பிரணவ பீடமுமாக நிற்கும். இதில் சந்தசு என்னும் எழுதாக் கிளவி மூன்றில் சுருதி என்னும் இயலையும் மீச்சுருதி என்னும் இசையையும் விளக்கிக் கூறினேம். ஒலிவழி பொருட் கோடற்காக சிட்சை வியாகரணம் என்னும் சூக்க மேற்கணக்கு ஆகிய வேத அங்கத்தின் சிரசையும். அத்தத்தையும் ஆய்ந்து சந்தசு என்னும் மூன்றையும் வகுக்கப் பெறுகிறது. அதில் ஒலி என்னும் சுருதி இயற்கைப்படி காணக் பெறுவதால் இயல் என்றும் அச்சுருதியின் மீச்சுருதியாக இசைவித்து காணப் பெறுவதால் இசை என்றும் வழங்கப் பெறுவதில் உபநிழலறமாய் விரித்துக் கூறும் நாடகத்தை காண்போம்.

"மூலாதார கமலம் என்ன" அமைந்து காணப் பெறுவன பற்றி இதற்கு முண்டக உபநிழலறம் எனப் பெயர் வந்தது. இதை முண்டகோப நிஷத் என்று வடநூலர் கூறுவர். அறம் என்பது வேதம். அதை சுருதி மீச்சுருதி என்னும் இயல் இசையில் விரிவுபடுத்தி விளக்கிக் கூறுதலால் உபநிழல் அறம் எனப் பெயர் வந்தது.

ஈரிறு வகையால் எய்தும் முட்டுப்பாட்டுட்பட்டு பதிந்து பரவலில் காரார்த்த வீரிய மாருத முழக்கம் செவிசார் இயல்பால் திணறிப் பொதிப்புற்ற இராவணனது முட்டுப்பாட்டில் முதலாவதாக பிரணவமான பெருநெறி நிலவும் துவித சித்தாந்த சுருதி அகச்சு என்னும் அண்டத்திலும் பிண்டத்திலும் ஒலி விட்டு வீசும் ஒன்பதாகி ஓர் உருக் கொண்டு துவித சித்தாந்தம் என்னும் முதற்பொருள் போலியாய் காணப்பெறும் சுருதி என்னும் ஒலிவடிவாகிய அகமாம் அச்சு என்னும் பூதிகம் நால்வகை யோனி எழுவகை தோற்றத்து எண்பத்து நான்கு (அᏊ) லக்கமாய் விரிந்து காணப் பெறுவன ஆனவை யணைத்தும் இராவணுகாரமாகிய எட்டு இரண்டு அஞ்சு ஆகிய மறைந்த தேவர்கள் என்னும் பண்ணவர்கள் மாயாவாத காரியமாக எடுத்த உருவங்களே பிரபஞ்சம் முழுவதும் என்றதாக ஆயிரம் வேதங்கஊ ஒதும் திறமை வாய்ந்த இராவணன் முறையிட்டு ஒலிக்க அதுகால் காரார்த்த வீரிய மாருத முழக்கம் செவிசார் இயைபால் திணரி பொதிர்ப்பாய் இடிஒலி முழக்கத்திற்கு அஞ்சி நடுக்கம் கொண்டு அத்தன் அம்மான் இற்றைஐகு அத்து என்று நடுக்குற்று மொழிந்த காலையில் "அகரம் காரம் கரம்கான் தம்தில் திவாசி மீஅய அல்அது இல்இடம் பூடு இரஇல என்ன அதுகேட்ட இராவணன் பொதிர்ப்பு மொழியாக இது அருத்த வேதமாம் அச்சு ஒத்த இருக்கென விடுவித்துக் கொண்டு சென்று மேற்கதி பெற்று உய்வுபெறக் காட்டும் உய்வு ஏணியும் உய்வு ஏணியே யோனி என்று வந்தது இது முண்டக உபநிழலறத்தில் தோன்றும் கர்மபாகை யாம். இதன் மேல் அர்த்த பாகையும் ஞானபாகையையும் பார்ப்போம்.

Koviloor Digital Library

"பிரணவமான பெருநெற் நிலவும் துவித சித்தாந்த சுருதி அகச்சு" சித்துப் பொருளின் உருவத்தைக் கொண்டு உள்ளதால் சித்தாந்தம் என்று சொல்லப் பெறுவதும் முதற்பொருளின் தோற்ற எதிர்மறைப் பாட்டால் அமைந்துள்ளதால் துவிதசித்தாந்தம் என்றும் ஒலியின் பிறப்பிடமாகிய ஏழுநிலையங்களைக் கொண்ட இரண்டாகப் பிரங்குவதால் பிரணவம் என்றும் அது விளங்கும் இடம் பெரிய வாயில்களை உடையதாகவும் உள்ள உயிர்நிலையாகிய அகத்தில் அச்சு ஆக விளங்கும் அகச்சு என்னும் சுருதியானது **"நால்வகை யோனி எழுவகைத் தோற்றத்தில்"** வாய் மூக்கு கண் செவி ஆகிய நால்வகைப் பிறப்பிடங்களைக் கொண்டு ஏழுவகைத் தோற்றமாகத் தோன்றும். ஏழுவகையாக தோன்றும் இடமாவன நெஞ்சு, கழுத்து, நாவு, மூக்கு, அந்நாக்கு, நெற்றி, சிரசு ஆகியவனவாம். இவை நான்கு பிறப்பிடமும் ஏழுவகைத் தோற்றமும் உடையதாகி எண்பத்தினன்கு (அ௰ச) என்னும் எண்ணிக்கை உடையதாய் காணப்பெறும். இதற்கு சூத்திரம் **"பிரணவமான பெருநெறி நிலவும் துவித சித்தாந்த சுருதி அகச்சு நால்வகை யோனி ஏழுவகை தோற்றத்து எண்பத்து நான்கு லக்கமாய் விரிந்து"** எண்பத்து நான்கு லக்கமாய் விரிந்து காணப் பெறுவன ஆனவை உயிர்மெய் எழுத்துக்கள் (௰அ) பதினெட்டில் க, ச, ட, த, ப என்னும் எழுத்து தூலம் காரண சூக்குமங்களைக் கொண்டு பதினைந்து (௰ரு) ஆகும் பொழுது மொத்தம் கூடிய (௰௩ + ௰ரு) = (உ௰அ) இருபத்தெட்டும் உயிர்நாத விந்து எழுத்துக்களோடு கூடி இருபத்தெட்டு மூன்று எண்பத்தினன்கு (அ௰ச) ஆகும். எண்பத்தினன்கு (அ௰ச) என்ற எண்ணிக்கையைக் கொண்டு விரிவுற்று பெருகிக் காணப்பெறுவன எல்லாம் அகரம் உகரம் ஆகிய எட்டும் இரண்டும் என்னும் உயிர் விந்து எழுத்துக்கள் ஒலியைப் பற்றி விரியும் பொழுது ஐவகையாகிப் பெருகி சொல்லால் பண்ணப் பெறும் பண்ணுகவும் அழியாத வாசிநிலை உருவமும் கொண்டு ஆயிரக் கணக்கான சொற்பெருக்காய் ஒலிக்கும். இதற்கு சூத்திரம் **"காணப் பெறுவன ஆனவையெல்லாம் எட்டும் இரண்டுமாம் இராவணுகரத்து அஞ்சு அதாகி அகன்ற பண்ணவர் மாயா வாத யமைந்த உருவென ஆரணம் ஆயிரம் அரற்றி யொலிக்க"** அவ்வொலிக்கு அடங்காமல் வெளி ஒலியாக வெடித்தல் ஓசையாக விண் ஏறு முழக்கம் அமைந்து காணப் பெறும் செவிசார் இயைபால் சாரியைக் கொண்டு பொருள் கூறுவதற்குத் திணரி விதிர்விதிர்ப் பெய்தும் பொதிர்ப்பு எனக் காணும் **"காரார்த்த வீரிய மாருத முழக்கம் செவி சார் இயைபால் திணரி பொதிர்ப்பாய் அத்தன் அம்ஆன் இற்றைஜகு அத்து என்று நேசித்து இணங்கி அகரம் காரம் கரம்கான் தம்தில் திவாசி மீஅய அல்அது இல்இடம் பூடு இரஇல என்ன"** காணப் பெறும் வெற்றுெலி சொற்சாரியை தோற்றமும் வாக்கிய அர்த்தம் ஆகிய அச்சுவத்தம் என்னும் உயிர்ப்பு பொருள் ஆகவும் இருக்கும். **"இருக்கென விடுத்து ஏகிமேலாம் கதி பெற்றுய்ய காட்டுய் வேணியும்"** ருக் வேதமாகவும் உள்ள தோற்றத் தொடர்பினை விடுத்து மேன்மை கதிபெற்று

Kovilpoor Digital Library
வாழ காட்டும் உய்வு ஏணி உருவமாகவும் அந்த பாகை தோன்றும். இதன் ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

"பிரணவமான பெருநெறி நிலவும்" மண், நீர், அனல், காற்று, வான், சூரியன், சந்திரன், அக்னி, தாரகை ஆகிய ஒன்பது நிலை பெறுகின்ற **"துவித சித்தாந்த சுருதி அகச்சு"** முதற் பொருளாகிய சத்தின் நின்றும் தோன்றிய சித்து ஓர் உருக் கொணட துவித சித்தாந்தம் என்னும் உயிர்நிலையின் யிடத்து தோன்றிய ஒலிவடிவாகிய அகத்தின் அச்சாம் வாசியாகிய சுருதி அகச்சு **"நால்வகை யோனி ஏழுவகை தோற்றத்து எண்பத்து நான்கு லக்கமாய் விரிந்து காணப்பெறுவன ஆனவை யெல்லாம்"** கருப்பையில் தோன்றுவது, முட்டையில் தோன்றுவது, வித்தில் தோன்றுவது, இந்த மூன்றின் அழிவுநிலை கழிவுப் பொருளில் தோன்றுவது ஆகிய நான்கு பிறப்பிடங்களைக் கொண்டு கருவாயும், உருவாயும், குழவியாயும், பாலப் பருவமாயும், பாலியிற் பருவமாயும், வளமெய் இயைவன பருவமாயும், முதிர்வு பருவமாயும் ஆகிய எழுவகைத் தோற்றத்தே கொண்டுள்ள உயிரினங்கள் அனைத்தையும் நூல் வழக்கில் பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, வனசை, பத்திரை, சகுணம், சதுஷ் பாதம், நாகபம், கிமிஷ் சுக்னம் என்று வழங்கப்படும். இதை பதினெரு கரணங்கள் என்று கூறுவர். பவம் பாலவம் என்னும் இரண்டும் மக்கள் இனத்தைக் குறிக்கும். பவம் என்பது பிறப்பு அருத்த ஞானியர்களையும் பாலவம் என்பது மண்மேல் பிறந்து இறந்து உழலும் மக்கள் இனத்தையும் குறிக்கும். கௌலவம் கவிழ்ந்த நடையினை உடைய உயிரினம். தைதுலை தத்தி உழல்வன வான உயிரினம். கரசை கரத்தை அசைத்து பறப்பன வான உயிரினம். வனசை வலிமையின் அசைந்து செல்லும் உயிரினம். பத்திரை பத்திரம் என்னும் இலைகளை உடைய மூலத்தைக் கொண்ட மூலிகை இனம். இவைகள் ஏழு வகை தோற்றத்தினதாகும். இந்த ஏழுவகையும் ஒன்று கூடின நிறை உடம்பு கொண்டவன் மனிதன். இந்த ஏழுவகையும் சகுணம், சதுஷ்பாதம், நாகபம், கிமிஸ்துக்னம் என்னும் சகுணம் - இச்சைக் குணம் - இது கருப்பையில் தோன்றுவது. சதுஷ் பாதம் - இச்சை துர் பேதம் - அது முட்டையில் தோன்றுவது. நாகவம் - மேற்கூறிய இளமைத் தன்மையில்லாமல் வித்திலேயே தோன்றுவது. கிமிஸ்துக்னம் என்னும் கிருமிதுர்க்கனம், மேற்கூறிய இவைகளின் அழிவுநிலைத் தோற்றத்தில் தோன்றுவது. இவையே நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் என்னும் பதினெரு கரணங்கள் ஆகும். இவைகள் (அமச) 84 நூறு ஆயிரமானவற்றையும் பார்ப்போம். ஈண்டு கூறிய நால்வகை யோனி எழுவகை தோற்றம் ஒருங்கிணைந்த நிறைவு பொருந்திய உயிர்நிலைப் பொருளாய் உள்ளவன் மனிதன் என்பதைக் கண்டோம். மனித உடம்பில் செவி, வாய், கண், மூக்கு ஆகிய நான்கும் நால்வகை உய்வு ஏணிகளாக

Koviloor Digital Library
உள்ளன. ஐம்பூத வாசலில் நான்கு வாயில்கள் மேற்கண்டவைகள். மேற்கண்ட நான்கு அடைக்கவும் திறக்கவும் வாய்ப்புள்ள ஒருவழி தொகுதியினவாகும். அதில் மண் கூருகிய துவக்கு என்னும் புனர்ப்பியல் பகுதி ஒன்று மட்டும் வாயிற் கூறு கொள்ளாமல் அமைந்திருக்கிறது. ஆகையால் அது ஒன்று நீங்கலாக மற்ற நான்கும் புலன் அடக்கத்திற்கு உரியதாக இருக்கின்ற படியால் உய்வைத் தரும் ஏணி என்ற பொருளில் உய்வேணி என்ற காரணப் பெயர்ச்சொல் யோனி என்று இப்பொழுது வழங்குகிறது. மனித சரீரத்தில் உள்ள (௱௯௨) உறுப்பில் உய்வு ஏணி 4 (௪) நான்கும் புனர்ப்பியல் பகுதியும் நீக்க மிகுதியுள்ள (௨௯௮) உறுப்புக்களில் தூலம், காரணம், சூக்குமம் ஆகிய மூன்றும் நிலை கொண்டு செயல்படும் பொழுது (௨௯௮) மூன்று (௮௯௪) 84 ஆகிறது. இந்த (௮௯௪) லக்கத்தை யுடையது ஒவ்வொன்றிலும் நூறு கதிர்களை உடைய தத்துவக் கூட்டம் சேர்ந்து நிற்க அவ்வொவ்வொன்றிலும் உயிர்க்கலை ஆயிரமாக பொருந்தி நின்று (௮௯௪) எண்பத்தினன்கு நூறு ஆயிரம் ஆகின்றன. இந்த (௮௯௪) எண்பத்தி நான்கு நூருயிரமே உயிரினத்தின் தொகுதி கூட்டம் என்பதை மேற்கூறிய அளவுகோல் பொருள் இலக்கணத்தைக் கொண்டு அளவிடும் பொழுது உயிரினங்கள் (௮௯௪) எண்பத்தினன்கு நூறு ஆயிரமே எனவும் அவைகளே யோனி பேதத்தினல் மாறுபட்டு எல்லையற்றதாக விரிந்து காணப் பெற்ருலும் அவைகள் எல்லாம் (௮௯௪) நூறு ஆயிரத்திற்குள்ளாகவே அடங்கும் என்பதை யுணர்க. இதையே (௮௯௪) எண்பத்தி நான்கு நூறு ஆயிரம் யோனிபேதம் என்று பெரியோர்கள் வரையறை செய்துள்ளார்கள். இவ்வனைத்தையும் இரவி. மதி என்றும். எட்டும் இரண்டும் என்றும். 'அ'காரம் 'உ'காரம் என்றும் பெரியோர்கள் குறிப்பிட்டுள்ள உயிர்ப்பு தன்மையுடைய சரப் பொருள்கள். இந்த சரமானது இராமல் அலைந்து திரியும் இராவணுகாரமாகி நிற்க அதைக் கொண்டு ஐம்பூத தொகுதிகள் பிரபஞ்சமாய் விரிந்து நிற்க அதில் மாயாவாதமாக அழியாத உயிர் காற்ருக அமைந்த உருவமே சரப் பொருள் அனைத்துமாய் உருக் கொண்டு விளங்குவனவாக அமையும் நிலையில் ஆயிரம் கதிர் உடைய உயிர்பொலி தொகுதி விளங்குமியலில் இதற்கு சூத்திரம் **"காணப் பெறுவன ஆனவை யெல்லாம் எட்டும் இரண்டுமாம் இராவணு காரத்தஞ்சி அதாகி அகன்ற பண்ணவர் மாயாவாதமமைந்த உருவென ஆரணம் ஆயிரம் அரற்றி யொலிக்க"** அண்டத்தில் மேககோர்ச்சிதமாக தோன்றும் இயல்பை உடைய செவியில் வாசிசாரும் இயல்பைக் கொண்ட சாரியை முழக்கங் தோன்றுங்கால் நடுக்கந்தரா நிற்கும் நிலையில் உணர்வு மயக்கம் ஏற்பட்டு உள்ள நிலையில் தலைவனுகிய ஞானசிரியன் கருணை கூர்ந்து இன்றுடன் முடிவுற்ற தென்ன நினைக்கும் நிலையை நீக்கி அருளாவிடில் **"காரார்த்த வீரிய மாருத முழக்கஞ் செவி சாரியைப்பாற் றிணரிப் பொதிர்ப்பாய் அத்தன் அம்மான் இற்றைஐகு அத்து"** என்று நேசித்து இணக்க வெற்றெலியாக சொல்லில் சாரும் இயல்பினதாகிய சொற்சாரியை ஒலிக்கு கொள்கலனுகிய செவியினிடத்து

Koviloor Digital Library

தோன்றும் வெற்றெலியும் சொல்லொலி பேதங்களை ஆக்கும் அச்சு என்னும் உயிரின் அத்தமாகிய அச்சு ஒத்தம் என விளங்கும் இருக் வேதம் என்னும் தவளாகர ஒலியுமாக முட்டுப் பாட்டை தர அதை விடுத்து மேற்சென்ருல் நற்கதிபெற காட்டும் தன்மை உடையதான உய்வு ஏணியதாக நம் சரீரத்தில் அண்ட வாசலாகிய நாதானு சந்தானத்தைத் தரும் பொறி நிற்கும். **"அகரம் காரம் கரம்கான் தம்தில் தீவாசி மீஅய அல்அது இல்இடம் பூடு இரஇல என்ன இதனின் வாக்கிய அச்சுவத்த இருக்கென விடுத்து ஏகிமேலாம் கதிபெற்றுய்ய காட்டுய் வேணியும்"** என்பது சூத்திரம். இது ஈரிருவகையால் எய்தும் முட்டுப்பாடு என்று குறிப்பிட்ட நான்கில் ஒன்று.

கர்மபாகை

அழிவற்ற நிலையைத் தரும் அமிதம் கொள்ளற் பொருட்டு ஆழ்ந்த நீர் பெருக்கை உடைய ஆழி நடுவில் முப்பத்து மூன்று கோடி தேவர்களும் அறுபத்து ஆறுகோடி அசுரர்களும் மேருகிரியை உருண்டு புரளக் கூடிய மத்தாக ஆக்கி பிடித்து கடையக் கூடிய கூட்டமெல்லாம் அலுப்புற்று மூர்ச்சையடைய அவ்விடத்து அந்த மேருகிரியாகிய மத்தை தான் ஒருவனே நிமிர்த்தி பிடித்து கடையும் பெறும் வலிமையை உடையவனுக வாலி விளங்கினுன். அவன் அவ்வளவு வலிமை உடையவனுக விளங்கியது வாழ்நல்லிலிங்கம் ஒன்றே வைத்து பூஜிக்கும் தன்மையால் ஏற்பட்டது. யான் ஆயிரத்தெட்டு லிங்க பூஜை இயற்றும் பேறு பெற்றவன் இதற்கு சூத்திரம்

"முப்பத்து மூன்றுகோடி தேவரும் ஆறுபத்து ஆறுகோடி அசுரரும் அமிதம் வேண்டி யாழி நடுவில் ஒருங்கே கூடி யொலிக்கக் கடைந்து அலுத்து மூர்ச்சை யடைய வாங்கன் உருள்மேரதனை புரன்மத்தாக பிடித்துக் கடையும் பெருவலியுடைமை வாலி பெற்றது வாழ் நல்லிலிங்கம் ஒன்றல் யானே ஓராயிரத்தெட்டு லிங்க பூஜை இயற்றுவன்" ஓராயிரத்தெட்டு லிங்க பூஜை அவ்வாறு இயற்றும் செயற்பாடு முப்போது உள்ளது. அதன் விளைவால் யாவும் அருட்டிரு நீருகும். அந்த நீறு இவ்வுடம்பை என்றும் அழியாமல் நிலைபெறச் செய்யும் பெரும் பேற்றைத் தரும் பெறல் சதமாகி பேதிக்கும் தன்மையுடையது. அஃதல்லாமல் மிகுந்த வலிமை பொலிவைத் தரும் இயல்பும் மிக்கது. இதற்கு சூத்திரம் **"யானே ஓராயிரத்தெட்டு லிங்க பூஜை இயற்றுவன் முப்போததனுல் யாவும் அருட்திரு நீரும் நீறே மெய்யை நிலைபேறுக்கி வேதை செய்யும் மேன்மை மிக்க எறுழ்பூத்திலங்கும் இயல்பை யுடையது"** காய்ந்து அழிந்து போகும் இந்த காயமானது கற்பகோடி காலம் நிலைபெற்று நிற்கும்படி ஆயுளை வேதிக்கும் அதோடு அல்லாமல் ஆகாய கவனமும் செல்லச் செய்யும் தன்மையுடையதாம்

Koviloor Digital Library
என்று உலகாயதம் மொழியும் வாய்சொல் உடையவனுகி **"காயம் கற்ப காலம் நிலைக்க ஆயுள் வேதிக்கும் அந்தர கவனமும் ஆம் என்றுலகாயதம் வாய்பேசி"** பொய்யை மெய்யென்று வாய்ச்சாலம் பேசும் உலகாயத கொள்கையை மேற்கொண்டு செயலாற்றும் நிலையில் மிகுந்த வலிமை யுடையவனுகிய வாலியின் பின் சென்று அவன் வலிக்கு ஆற்ருமல் அவன் வாலில் பிணிக்கப் பெற்று உள்ள நிலையில் அவன் செல்லல் ஆகிய எட்டு திக்கும் இழுபட்டவனுகி நலிந்துலர்ந்து கீழ்மை யடையும் இராவணன் தொந்தங்கோடி துறை கோடி என்று இயற்கையாம் உண்மையை மொழியுங்கால் மேல்நிலையை அடைய வகுக்கும் பொறிவழியாகிய சொல் மயக்கைத் தரும் வாயாகிய உய்வு ஏணியும்". இதற்குரிய

அர்த்தபாகை

முப்பத்து மூன்று கோடி தேவரும் அறுபத்து ஆறுகோடி அசுரரும் சிரத்தினிடத்து அண்டி நிற்கும் அண்டர்கள் என்னும் முப்பத்து மூன்று மெய்களும் அந்த மெய் எழுத்துக்கள் உயிர்க்கலை எழுத்துடன் கூடலால் அதில் இரட்டிப்பு பெற்று விளங்கும் அறுபத்தாறு உயிர்மெய்யாகிய அவுணரும் அமிதம் வேண்டி ஆழி நடுவில் ஒருங்கே கூடி யொலிக்கக் கடைந்து அலுத்து மூர்ச்சை யடைய தமிழ் எழுத்தாகிய அமித கலையை வேண்டி வாயை 'ஆ' என திறத்தலால் இழியும் ஆழியின் நடுவென்னும் நாவில் எல்லா எழுத்தும் எழுத்தின் கூட்டமாகிய சொல்லும் தெளிவாக ஒலிக்க அவ்வொலிகளெல்லாம் விந்தெழுத்தாகிய புள்ளியில் ஒலியற்றதாய் விளங்க **"வாங்கன் உரல்மேரதனை புரன்மத்தாகப் பிடித்துக் கடையும் பெருவலிமையுடைமை வாலி பெற்றது வாழ் நல்லிலிங்கம் ஒன்றுல் யானே ஓராயிரத் தெட்டு லிங்க பூஜை இயற்றுவன்"** அவ்விடத்து சுரா அசுரர்கள் என்னும் அண்டரும் அவுணருமாகிய மெய்யெழுத்தும் உயிர்மெய் எழுத்து அதன் கூட்டமாகிய சொல்லும் ஒலிக்க அவ்வொலிக்கு ஏற்றவாறு அசைவைத் தரும்மேல் உருவாகிய மேரு என்னும் சிரம்புரளக் கூடிய மத்தென அசைவு தரச் செய்யும் மிக்க வலிமை உடைய வல்லெழுத்தில் தலையாயது வாழ்வைத் தரும் லிங்காகாரம் ஒன்றை யுடையது. வல்லெழுத்தில் நிறைவுடைத்தாய் விளங்கும் 'ற' கரமானது முதலில் ஒரு லிங்காகாரத்தைக் கொண்டும் அடுத்தது வாலின் வடிவைக் கொண்டும் விளங்குகின்றமையால் வாழ்நல் லிலிங்கத்தையும் வாலையும் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது. இராவணனுக அர்த்தபாகையில் காணப்படும் எழுத்து அஃகேனமாக இருக்கிறது. அந்த எழுத்தின் சிறப்பியலைப் பற்றியும் சிறிது ஆராய்வோம். மூன்று பிந்துக்களின் வடிவத்தைக் கொண்ட அவ்வெழுத்து உருவகம் மேலே உள்ள பிந்து

Koviloor Digital Library

கைலாய மலையையும் அதற்கு கீழ் உள்ள இரண்டு பிந்து எழுத்துக்கள் கைலாய மலையின் கீழ்ப்பாகத்தையும் அதில் அகப்பட்டு தத்தளிக்கும் இராவணனையும் குறிப்பதாக இருக்கிறது. அவ்வெழுத்து அகரத்தோடு சேர "ஹ" தோன்றும். அது அகர வர்க்கமாகிய ஐந்திலும் 'ழ'கர 'ல'கர 'க்ழ்' மெய் எழுத்தின் முற்பட்ட 'ச'கர எழுத்துப் புணர்ச்சியால் ஷ, ஊ, க்ஷ ஆகிய மூன்று எழுத்துக்களும் அஃகேனம் முற்பட தோன்றும் 'ழ' கரச் சேர்க்கையிலும் தோன்றி 'ள' காரமாய் தனிநிலை ஒன்றுகிய அஃகேனம் இராவணன் என்ன பத்து தலைப்புக்களைக் கொண்டு துலங்குவ காண்க. இவ்விராவணுகாரம் அ. இ. ர என்னும் உயிர் நாதக் கலையுடன் கூடி ஆயிரத்தெட்டு என்னும் லிங்காகாரத்தை தழுவி நிற்றலால் ஆயிரத்தெட்டு லிங்கத்தை வழிபடுபவன் இராவணன் என்றும் துலங்குவ காண்க. மேலும் இந்த எழுத்தின் இயலை ஆழ்ந்து நோக்கினுல் இராவனேச்சுரனுடைய தன்மைகள் முழுதும் பொருந்தியிருப்பதைக் காணலாம். **"முப்போ ததனுல் யாவும் அருட்திரு நீறும் நீறே மெய்யை நிலைபேறுக்கி வேதை செய்யும் மேன்மை மிக்க எறுழ்பூத்திலங்கும் இயல்பையுடையது"** முப்போது தோற்றம், துலக்கம் இறுதி ஆகிய பகுதியின் சார்பு அனைத்தும் அருள்திரு நீறும் 'வி' பகுதியாம். அவ் 'வி' பகுதியோ மெய்யை நிலைபெறச் செய்து இடைநிலை. சாரியை சந்தி. விகாரம் என்னும் வேற்றுமை அடையச் செய்யும் மேன்மை மிக்க வலிமை உடைத்தாய் விளங்கும் தன்மையுடையது. **"காயம் கற்ப காலம் நிலைக்க ஆயுள் வேதிக்கும் அந்தர கவனமும் ஆம்"** ஏழு தாதுக்கள் என்ன நிற்கும் எழுத்தால் ஆகிய காயம் என்ன துலங்கும் யாக்கையால் கற்பவர்களுக்கு நீண்ட காலம் நினைவில் நிலைக்கும்படியாக ஆயுள் என்னும் காலக் கணக்கை மீறி இசைக்குமிடத்து எடுத்தல். படுத்தல். மெலிதல் ஆகிய தன்மை உடையதாகும். இதில் உச்ச இசையானது அந்தர கவனமாக திகழும் **"என்றுலகா யதம்வாய் பேசி வாலிபின் சென்றவன் வாலிற்சிக்கி எண்டிசை எல்லாம் இழுபட்டுலர்ந்து காய்ந்ததமான கதியெய்தி ராவணன்"** உலகிற்கு எடுத்துக்காட்டாக இசைக்கும் வாய்ச் சொல்லாக பற்பல பேசி வல்லெழுத்தாகிய 'ற'கரத்திற்கு இடைந்து திசை மொழியாகத் திரிந்து தன் இயல் குன்றிய இராவணுகாரம் **"தொந்தங்கோடி துறையது கோடி என்றென் நியற்சீர் இயம்புங் காலை கதிபெற்றுய்யக் காட்டுய் வேணியும்"** சொற்கூட்டமும். சொல் தொடர்வு இசையும் பற்பலவாக இயங்கும் இயற்சீர் உளதாய் அது காயமாக நற்கதி பெற காட்டுகின்ற உய்வு ஏணியாகவும் அர்த்தபாகை தோன்றும். இதற்குரிய ஞானபாகை வருமாறு.

Koviloor Digital Library

"முப்பத்து மூன்று கோடி தேவரும் ஆறுபத்தாறு கோடியசுரரும் அமிர்தம் வேண்டி யாழ் நடுவில் ஒருங்கே கூடி யொலிக்கக் கடைந்து அலுத்து மூர்ச்சையடைய" முப்பத்து இரண்டு சூக்குமமும் அறுபத்து நாலு காரண தூலங்களும் உயிர்ப்பூவாகிய "கோ" அடியாகிய மூன்றினைப் பற்றி கோடியாகி யவை அமிர்த கதிபெற வேண்டி மூலாதார நடுவில் ஒன்றுபட்டு ஒலிக்கூட்டம் உண்டாகும் படியாக உட்சுவாசம். மீள் சுவாசம் ஆகிய போக்குவரத்துள்ள தன்மையை மேற்கொண்டு அலுத்த நிலைமையில் ஜாக்கிர அவஸ்தை நீங்கி சொப்பன அவஸ்தை வந்துற்ற காலை "வாங்கண் உருள்மேரதனைப் புரன்மத்தாகப் பிடித்துக் கடையும் பெருவலிமையுடைமை வாலிபெற்றது வாழ்நல்லிலிங்கம் ஒன்றால்" அவ்விடத்து மத்தென சுழலும் தன்மையுடைய சிரத்தை சார்ந்து நிற்கும் பின்கலை நாடியானது செயல்புரியும் இயல் சஞ்சாரம் செய்து சரித்துத் திரியும் உயிர்க்கதியாகிய ஒன்றனைப் பெற்ற வாய்ப்பாலே யாகும். "யானே ஓராயிரத்தெட்டு லிங்க பூசை இயற்றுவன் முப்போததனால் யாவும் அருட்டிரு நீறும் நீறே மெய்யை நிலைபேறாக்கி வேதை செய்யும் மேன்மை மிக்க எறும்பூத் திலங்கும் இயல்பை யுடையது காயம் கற்ப காலம் நிலைக்க ஆயுள் வேதிக்கும் அந்தர கவனமும் ஆம்என்றுலகா யதம்வாய் பேசி வாலிபின் சென்றவன் வாலிற்சிக்கி எண்டிசையெல்லாம் இழுபட்டுலர்ந்து" சிவலிங்கமாகிய உயிர்ப்பூ மும்மண்டலத்தில் சார்வுரும் இயல்பை பொருந்தி விசுத்தி. ஆக்ஞை. நாதாந்தம் ஆகிய மூன்று இடத்திலும் ஆயிரம் ஆயிரமாக நடைபெறும் இயல்பை உடையதாகி எட்டும் இரண்டுமாய் நிற்கும் லிகங்காகார தன்மை பொருந்தியுள்ள மூர்த்தம் என்னும் சிரசினிடத்து பற்றுக்கோடு கொண்டு திரியும் தன்மையால் ஆயிரத்தெட்டு என்னும் லிகங்காகாரத்தை த்னதாய் கொண்ட நடைமுறை சுவாசகதி உடைய இயலில் மூன்று போதும் வழிபாடு இயற்றும் தகவும். எல்லாவிதமான மேம்பாடுமிக்க செயல்களும் நீறாய் அமையும் அந்த நீறால் வேதித்து காட்டும் வேதை என்னும் பெரும் சிறப்பு வாய்க்கும். அத்தகு சிறப்புடைய நீறால் காயமானது கற்ப காலத்திற்கு நிலைக்கும் படியாக ஆயுள் வேதிப்பைத் தரும் ஆயுள்வேதம் சித்தியாகும். அதனால் ககனகுளிகை செய்து அந்தரத்தில் செல்லும் அந்தர கவனமும் ஆகும் என்று உலகாயதம் வாக்கால் வாதித்து வாசிசாதனை செய்வதாக முயற்சியில் ஈடுபட்டு வலிமையின் நெடிதுள்ள வாலி என்னும் பின்கலை நாடி பூரகம் கொண்டு அந்நாடியால் சிக்குற்று எண்டிசைத்தானமாகிய "சடிலம்" முழுதும் வலிந்து அடர்ந்து வெம்மையில் வெம்பி "காய்ந் ததமான கதியெய்தி இராவணன் தொந்தங்கோடி துறையதுகோடி என்றென்றியற்சீர் இயம்புங் காலை கதிபெற்றுய்யக் காட்டுய் வேணியும்" பின்கலை நாடியில் சிக்குற்ற இயல்புடைய பிராணவாயு சூரிய

Koviloor Digital Library
நாடியாகிய பின்கலை சார்பால் வெப்பம் மிக்குற்று நிலைபெருது அலையும் தன்மையுடைய நிலையில் இவ்வாருன செயல்பாட்டால் விளையும் துறைகோடி தொந்தங்கோடி என்று இயமானனல் இயங்கும் இயற்சீரை விளக்குங்கால் இவைகளின் நீங்கி நற்கதி பெற்று உய்வை தராநிற்கும் வாக்கிற்கு இடமாகிய உய்வு ஏணியும். ஞானபாகை முற்றிற்று.

கர்மபாகை

"சித்தின் அந்தமாம் செம்பொருள்யானே யான்யெனதென்னும் இரண்டாம் துவிதம் அன்றியொன்றிவ் வகிலத்தில்லை எல்லா சத்தியும் இலங்கும் ஈசனுன் செயவிசயம் எண்டிக்கிலுஞ் செய்தவன் ஆம் என்றேகா ஆன்மவாதம்" செம்மை மிக்க சித்தாந்தப் பொருளாக யானே விளங்குகின்றேன். எனது யான் என்னும் இரண்டாகக் காணும் துவிதம் அன்றி இவ்வகிலத்தில் எவையும் இல்லை எல்லா வகையான ஆற்றலும் பொருந்திய இறைவன் யானேயாம். எட்டுத் திக்கிலும் செயவிசயம் செய்தவன் ஆகும் என்று ஏகான்ம வாதமாம் சென்று சென்று அழியும் உயிர்க்கலை இயக்கத்தை மேற்கொண்ட நிலையில் **"இசைத்து நாப்பிளப் பெய்த வூதை யசனம் பண்ணி யண்ட வேதண்டம் கான்தரு வாம்எனக் கையிற்பற்றி யசையச் சத்தியால் ஆட்டித் தூக்க"** ஏகான்ம வாதம் பேசி நாப்பிளக்கும் படியாக உதாசினம் பண்ணி மேருவினிடத்து அமைந்துள்ள வேதண்டம் ஆய வெள்ளி மலையை கானகத்தில் உள்ள மரத்தைப் பிடுங்குவது போல கையால் பற்றி பிடித்து பறித்து அசைத்து வலிமையால் தூக்குங்கால் **"தூக்கக் கலக்கம் தொடரத் தன்வயம் இழக்கச் சத்தி கயிலய பதியாகச் சக்கிரி தலைக்கொள்சக்கிரி என்ன மூக்கின் மூச்சு முட்டத் திணறுதல் ஆக ஆண்டுகள் ஆயிரம் வரை கீழ்"** அப்படி தூக்குங் கால் தன்வயம் இழக்கும் படியாக கலக்கம் தொடர ஊடலாற் பிரிந்திருந்த சத்தியானவள் பதியினை கூட அப்படிக் கூடுங்கால் இறைவன் சத்தியோடு ஒன்றிய கயிலாய பதியாகி விளங்க அந்நிலையில் கைலாய கிரியானது 'சக்'கென அழுந்தப் பெற்று அழுத்துங்கால் தூக்கல் தலைக் கொண்டுகள்ள சக்கிரி என்ன இரிந்து மூச்சானது மூக்கு முட்டத் திணறுதல் கொள்ளலால் ஆயிரம் ஆண்டுகள் வரை அம்மலையின் கீழ் **"இராவணனுகி இது விசயார்த்தம் அதல விதல சுதல தராதல இரசாதல மகாதல பாதலமே எலாச் சத்தியும் என்று சாமம் இசைத்துக் கதி பெற்றுய்ய காட்டும் வேணியும்"** இராவணனுகி கிடைப்பட்டவனுக கிடந்து இது விசயார்த்தம் இது வெள்ளிமலை அதல விதல சுதல அதுவுமில்லை இதுவுமில்லை சுதல தராதல சூதென தராதும் அல்ல இரசாதல மகாதல பாதலமே பிணிக்கப்படும் எளிமையுடையதும் அல்ல பாதலமே எலாச் சத்தியும் யென்று இறைவனுடைய திருவடியே எல்லாமும் ஆய வலிமை உடையது

Koviloor Digital Library
என்றவனுகை சாமவேத கானம் செய்து அவ்விசையால் கதிபெற்று செல்லுமாறு காட்டும் உய்வு ஏணியாம் யாவினும் முற்பட்ட ஊக்கத்தைத் தரும் மூக்காகிய உய்வு ஏணியும் என்னும் கருமபாகைக்கு அர்த்த பாகை விபரம் வருமாறு. இதற்குரிய

அர்த்தபாகை

"சித்தின் அந்தமாம் செம்பொருள் யானே யான்யென தென்னும் இரண்டாம் துவிதம் அன்றி யொன்றிவ் வகிலத்தில்லை" சித்துப் பொருளின் வடிவமாம் சிறப்பு வாய்ந்த பொருளாக உள்ளதும் நானே நான் என்று ஒலிக்கக் கூடியதும் தான் தனது என்னும் இரண்டாகிய துவித சித்தாந்தம் என்னும் பெயர் பொருள் ஆயதுமாகிய **"மெய்ப்பொருளன்றி வேறு ஒன்று யாங்கனும் இல்லை" "எல்லா சத்தியும் விளங்கும் ஈசனுன்"** பேராற்றல் உடைய தலைவன் நானே **"செய விசயம் எண்டிக்கிலும் செய்தவன்"** மேம்பட்ட வெற்றி எல்லா திக்கிலும் விளங்கச் செய்தவன் ஆம் **"என்று ஏகா ஆன்மவாதம்"** ஏகாநின்ற உயிர்ப்பொலி இசைத்து நாப்பிளப்பெய்த வூதை இசையின் காரணமாக நாவின் தன்இயல் திரிந்து **"வூதை அசனம் பண்ணி"** வாயுவை உள்ளடக்கி **"யண்ட வேதண்டம் கான்தருவாம் எனக்கையிற் பற்றி அசையச் சத்தியால் ஆட்டித் தூக்க "** அண்ட வேதண்டமாகிய சிரம் கான்தருவம் கானமும் தருவுமாக உள்ள காந்தருவம் இது என கையிற்பற்றி அசைய சத்தியால் ஆட்டித் தூக்க இசைக்கு ஏற்ப கையால் தாளஜதி ஒன்று அசைந்து எடுத்தலோசை கொள்ளுங்கால் **"தூக்கக் கலக்கம் தொடரத் தன்வயம் இழக்கச் சத்தி கயிலய பதியாக"** அப்படி எடுத்தலோசை கொள்ளுங்கால் கலக்கம் தொடர தன்வயம் இழக்க எடுத்தலோசை கலக்கும் கால் ஆயகலக்கம் நீளியதாக (நெடிலாக) அதனல் தன்வயம் இழக்கும் நிலையில் சத்திகயிலய பதியாக ஒலியானது சுருதியொடு ஒன்றி லயம் பெற்று கயிலாய பதியாக விளங்க **"சக்கிரி தலைக்கொள் சக்கிரி என்ன மூக்கின் மூச்சு முட்டத் திணறுதல் ஆக ஆண்டுகள் ஆயிரம் வரைகீழ் இராவணன் ஆகி"** கையில் லயம் கொண்டு விளங்குத் தாளம் சக்கென இரிதலைக் கொண்டு விளங்கும் நிலையில் ஆரோகண அவரோகண கதிகளால் மூச்சு முட்டி திணறுதல் ஏற்பட உயிர் நாதம் விந்துவைக் கொண்டு 'அ' என்னும் பசுவாகிய உயிர் அண்டி நிற்கும் ஆண்டு என்னும் சிகரத்தின்கீழ் இராவணனுகி நெடிதே நிலைபெற்றுள்ள இராவணன் என்ன. பொருந்தி சொல்லும் பொருளுமாய் விளங்குகின்ற விசையார்த்தத்தை தவிர்த்து வேறு ஒன்றும் இலது அதுவும் அல்ல இதுவும் அல்ல சூதென தராதும் அல்ல நெடிலும் அல்லமகாதல மாகம் என்னும் ஆகாயத்தை இடமாகக் கொண்ட பாதலமே எலா சத்தியும் என்று இறைவனுடைய திருவடியே எல்லா வல்லமையும் பொருந்தியது என்று சாமம் இசைத்து கதிபெற்றுய்யக்

Koviloor Digital Library
காட்டுய் வேணியும் **"சாமவேத கானம் பண்ணி மேநிலை அடைந்து செல்லும்படியாக காட்டக் கூடிய உய்வு ஏணியாகிய சமநிலைத்துளையும்"** இதற்குரிய

ஞானபாகை

"சித்தின் அந்தமாம் செம்பொருள் யானே" உயிர் நிறைவு பெற்ற ஓர் உருவமாக யானே விளங்குகின்றேன். அப்படி விளங்குபவனும் விளங்கும் பொருள்கள் அனைத்திற்கும் உடையவனும் ஆகிய இரண்டைத் தவிர்த்து வேறு எப்பொருளும் யாங்ஙனும் இல்லை **"இரண்டாம் துவிதம் அன்றி யொன்றிவ் வகிலத்தில்லை"** ஆகவே எல்லா வலிமையும் பொருந்திய தலைவனாக நானே இருக்கின்றேன். எல்லா சத்தியும் இலங்கும் ஈசனுன் வெற்றியும் வெற்றி சஞ்சாரமும் எட்டுத் திக்கிலும் செய்தவன் ஆம் என்று **"எல்லாச் சத்தியும் இலங்கும் ஈசனுன் செயவிசயம் எண்டிக்கிலும் செய்தவன் ஆம் என்று"** ஏகா ஆன்மவாதம் உயிரும் உயிர்ப்பும் அன்றி அதற்கு மேம்பட்டதாக அன்றி ஏதும் இல்லை என்று நாக்கடிப்பாகப் பேசி வாசியை அடக்கி அதனுல் எல்லாக் கருவிகளும் சார்ந்து நிற்கின்ற ஞானேந்திரிய கர்மேந்திரிய நிலைக் கலனுகிய சிரத்தினை ஒரு விருட்சத்தை கையால் பிடுங்கி ஆட்டுவதைப் போன்று வாசி பந்தனத்தால் ஆடி அசைந்து அவ்வாசி முட்டுப்பட்டு சலிக்கும்படியாக செய்ய "ஏகா ஆன்ம வாதம் இசைத்து நாப்பிளப் பெய்த வூதை அசனம் பண்ணி அண்ட வேதண்டம் கான்தரு வாம் என கையிற்பற்றி யசையச் சத்தியால் ஆட்டித் தூக்க" தூக்கக் கலக்கம் தொடர தன்வயம் இழக்கச் சத்தி கயிலய பதியாக சக்கிரி தலைக்கொள் சக்கிரி என்ன மூக்கின் மூச்சு முட்டத் திணறுதல் ஆக வாசியானது பந்தனம் செய்யப்படுவதால் அண்டத்தை முட்டி கலக்கம் ஏற்படும் வண்ணம் அசைவு காணலும் தன்வயம் இழந்த காலையில் ஆதாரசத்தியானது முதற் பொருளைச் சார அதன் காரணமாக சக்கென இரிதலைக் கொள்ளும் சக்கிரி என்னும் பாம்பை ஒத்து மூக்கினிடத்து மூச்சு முட்ட திணறுதல் கொள்ளலால் ஏற்படும் தீங்கை ஆதாரச்சத்தி அருளும் காரணத்தால் ஆண்டுகள் ஆயிரம் வரை கீழ் இராவணனுகி இது விசயார்த்தம் ஆயிரம் ஆண்டுகள் என்னும் கபாலம் விம்மி வெடித்து விடாமல் ஆதார பூதசத்தி காப்புச் செய்யலால் இராவணுகார மாகி நிலைபெற்று இதுவே வெற்றி விளைவுப் பொருள் **"அதல விதல சுதல தராதல இரசாதல மகாதல பாதலமே எலாச் சத்தியும் யென்று சாமம் இசைத்து கதிபெற்றேகக் காட்டுய் வேணியும்"** விசயார்த்தம் இதுவே யன்றி அதுவும் அல்ல இதுவும் அல்ல நிலைபேறல்லது நிலைபேறைத் தராததும் அல்ல பிணிப்பை அகற்றுவதன்றி பிணிப்பை தருவன அல்ல அனைத்திற்கும் பிறப்பிடமான பெருவெளியினிடத்து நடைகொள்ளுகின்ற திருவடியாகிய ஒன்றே அனைத்து செயல்பாட்டு விளைவிற்கும் காரணமாம்

Koviloor Digital Library

என்றுசாமக்கிரியை இசைத்து மேன்நிலைப்பாடு கொண்டு உய்ய காட்டுகின்ற உய்வு ஏணியாம் வளிநிலை வாயிலும்" ஞானபாகை முற்றிற்று.

"முடிவில்லாத மூன்றரைக் கோடி வாழ்நாள் பெற்றேம் மங்கல மங்கையைப் பெற்றேம் குபேரன் பின்னிட்டோட அவனது செல்வம் அனைத்தையும் கவர்ந்தேம் நித்திய தத்துவம் நிலைக்கப் பெற்றேன் துணைவனுனுன் தூய புலத்தியன் மரபிற் றேன்றலாய் வந்தேம் என்று எக்களிப்பாக இருக்குங் காலை"

. கர்மபாகை

முடிவில்லாத மூன்றரைக் கோடி வாழ்நாள் பெற்றேம், மூன்றரைக் கோடி யாண்டுகள் நெடிதே முடிவில்லாததாக அமைய உள்ள வாழ்நாள் பெற்றுள்ளேன் **மங்கல மங்கையை பெற்றேம்** நித்திய சுமங்கலியாக வாழும் மங்கை நல்லாளைப் பெற்றுள்ளேன். **குபேரன் பின்னிட்டோட அவனது செல்வம் அனைத்தையும் கவர்ந்தேம்** பின்கலாக்கன் என்னும் குபேரன் புறங்காட்டி ஓடச் செய்து அவனது செல்வம் அனைத்தையும் கவர்ந்துள்ளேன் **நித்திய தத்துவம் நிலைக்கப் பெற்றேன் துணைவனுனுன்** அழிவில்லாத வலனுடைய நிலை பேறுள்ளோன் எனக்கு இளவல் ஆனுன். **தூய புலத்தியன் மரபிற் றேன்றலாய் வந்தேம் என்று எக்களிப்பாக இருக்குங் காலை** மாசற்ற புலத்திய பிர்மாவின் வழித்தோன்றலாக வந்துள்ளேன் என்று இறுமாப்புடன் இருக்கும் போதில் **முயன்று பெற்ற மூன்றரைக் கோடி வயதரைக் கோடி வாழ்வே என்றும் மங்கல மங்கையோ மாண்டும் தரிக்கும் மண்டோதரியாம் மங்கையே என்றும், குபேர செல்வமுங் குறைந்து பெயரும் செல்வமே என்றுந் திறமை மிக்க நித்திய தத்துவம் நித்திரை தத்வமாய் வாய்த்தத் துணைநலம் மாயும் என்றும் புலத்தியன் மரபோ அகத்தியன் சீற்றத்து தழிந்தரக்கர் குலமாயிற் றென்றும்** தவமுயற்சியால் பெற்ற மூன்றரைக்கோடி யாண்டுகள் ஆகிய வாழ்நாள் உண்மையில் அரைக்கோடியே யென்றும் மங்கல மங்கை யென்று கருதியவள் மாண்டதன் பின்னும் வாழும் மண்டோதரியே என்றும் குறையாத குபேர சம்பத்து குறைந்து நிலைபெயரும் செல்வமே என்றும் அழிவற்ற ஆற்றல் மிக்கவன் துணைவன் என்று கருதியது தூங்கி கழியும் அழிவை வாய்ப்பாகப் பெற்றுள்ளது.

ஆகவே அந்த துணைநலம் அழிவிற்கு இடமாய தென்றும் புலத்திய பிரமாவின் பரம்பரையோ அகத்தியருடைய கோபத்தால் அழிவைப் பெற்று அரக்கர் குலமாயிற்றென்றும் **வேற்றுருவாகி விளங்கும் மாதவன் தானுறு வேதம் சாற்றத் தெளிந்த இலங்கை வேந்தாம் இராவணேச்சுரன்** தன்னுடைய மெய்த்தோற்றத்தை கரந்து வந்த

Koviloor Digital Library

மாதவன் தன்இயலே உணர்த்தும் தானுரு வேதம் சொல்லலில் தெளிவு பெற்ற இலங்காதிபனுன இராவணேச்சுரன் ஆழ்சுமை நரகத் தழுந்தா துயர்ந்த வீடுபேறடைய வேண்டிச் சீதையைக் கவர்ந்து இலங்கையிற் காவல் செய்து அவளை விடேன் என்று அதரவம் பேசி இராமபாணத்திலக்காய்த் தான்தனது எல்லாம் ஆக இசைவித்திராமன் மனிதவுருய் வந்து கண்காணத் தோன்றி விளங்குந் தூய்மை மிக்க துவித சித்தாந்த சுருதிப் பொருளின் வடிவமே யென்றதின் மாழ்கி யுயர்ந்த கதிபெற்றேகக் காட்டுய் வேணியும் இலங்காதிபனுன இராவணேஸ்வரன் பெரும் சுமையாக தலைதூக்க வொட்டாமல் ஆழ்ந்தி அழுத்தும் ஆழ்சுமை நரகத்தில் அழுந்தி விடாமல் மேம்பட்ட நிலையாம் வீடுபேறு அடைவான் வேண்டி சீதாபிராட்டியை கவர்ந்து கொண்டு போய் இலங்காபுரியில் சிறைக் காவலில் வைத்து அவளைஎவ்வாற்ருனும் விடேன் என்று வம்புபேசி இராமபாணத்திற்கு இலக்காக தன்னையும் தன்னதுவான எல்லாவற்றையும் பொருந்தச் செய்து இராமன் மனிதவுருவாய் வந்து புறக் கண்ணுல் காணும்படியாக தோன்றி விளங்கும் மாசற்ற துவித சித்தாந்த சுருதிப் பொருள் வடிவமே என்று அதில் அழுந்தி திளைத்து உயர்ந்த கதிபெற்று உய்யுபெறக் காட்டும் காட்சி பொருட்பேறுடைய பார்வைப் பொறியாகிய உய்வு ஏணியும் ஆக அமையும் கர்மபாகைக்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

துவித சித்தாந்த சுருதிப் பொருளின் வடிவம் தென்மொழி என்றும் வடமொழி என்றும் துவிதம் ஆக வழங்கும் இருவகையாக நிலவும் சித்துப் பொருள் வடிவம் கொண்ட சுருதி (ஒலித்தொகுதி) முடிவில்லாத மூன்றரைக் கோடி வாழ் நாள் பெற்றேம் முடிவில்லாமல் நெடிதே ஓங்கி நிற்கும் வன்மை மென்மை இடைமையாகிய மூன்றரைக் கோடி பகுப்பைப் பெற்று மங்கல மங்கையைப் பெற்றேம் மலரில் வாழும் மங்கையாகிய நாமகளை தலைவியாக கொண்டும் குபேரன் பின்னிட்டோட சங்கநிதி பதுமநிதிக்கு அதிபனுகி பெயர்ச்சியின்றி நிலைபேறு கொள்ளும் குபேரன் நிலைபெயர்ந்து ஓட அவனது செல்வம் அனைத்தையும் கவர்ந்தேம் அவனது செல்வம் என்னும் சங்கநிதியாம் ஒலிக் கூட்டத்தையும். அவ்வொலிக் கூட்டத்தை தொகைப் படுத்தி சொல்மலராகச் செய்யும் பதுமநிதி தனதாய் வாய்க்கப் பெற்றுள்ளது நித்திய தத்துவம் நிலைக்கப் பெற்றேன் துணைவனுனன் அழியாத கொண்டு கூட்டு நிலைக்கப் பெற்ற இயல்புப் பொருள் ஏவல்கேட்டு நிற்கலுற்றது தூய புலத்தியன் மரபிற்றேன்றலாய் வந்தேம் என்று புலப்பாட்டு இயலைக் கொண்டிலங்கும் அறிவுத் தொடரின் தொகுதியாய் கலை அமைந்தது என்று எக்களிப்பாக இருக்குங் காலை கலைஞான வள்ளலாய் வந்தேம் என்று இறுமாப்புற்றிருக்கும் போது

Koviloor Digital Library

முயன்று பெற்ற மூன்றரைக் கோடி வயதரைக் கோடி வாழ்வே யென்றும் நிறையுயிர் முயற்சியால் உள்வளி துரப்பத் தோன்று வன்மை மென்மை இடைமையாய மூன்றும் இடைமையாகிய அரைக் கோடியால் விளங்குவனவே யென்றும் **மங்கல மங்கையோ மாண்டும் தரிக்கும் மண்டோதரியாம் மங்கையே என்றும்** வெண்டாமரையில் தூய தவள நிறத்தோடு விளங்கும் நாமகள் நூல் இழந்த பின்னும் நிலைபேறு கொண்டிலங்கும் வெள்ளைக் கலை உடுத்திய அணங்கே என்றும் **குபேர செல்வமும் குறைந்து பெயரும் செல்வமே என்றும்** நிலைபெற்றது என்று கருதும் சங்கநிதியாம் இசை மலரும் பதுமநிதியாம் சொல்மலரும் மறதி எய்தும் இயல்புடையதாய் திரியும் தன்மைத்தே யென்றும் **திறமை மிக்க நித்திய தத்துவம் நித்திரை தத்வமாய் வாய்த்தத் துணைநலம் மாயும் என்றும்** சாக்கிர நிலையில் விளங்குவனவாகிய சொற்கூட்டக்கலைத் தொகுதித் தொடர் சொப்பன நிலையில் ஆழும் கால் நித்திய தத்துவத்தை இழந்து நித்திரை தத்துவமாய் விளங்கலுற்றது என்றும் ஆகவே. அவ்வலிமை பயனற்றதாய் விடுகிறது என்றும் **புலத்தியன் மரபோ அகத்தியன் சீற்றத்து தழிந்தரக்கர்குல மாயிற்றென்றும்** புலத்தியன் மரபென்னும் புலமைச் சிறப்பு அகத்தியனும் உள்ஒலி கதிப்பால் கேடுற்று இசைமரபிற் குன்றிவிட்டதென்றும் **வேற்றுவாகி விளங்கும் மாதவன் தானுறு வேதம் சாற்றத் தெளிந்த இலங்கை வேந்தாம் இராவணேச்சுரன்** மாதவன் ஆகிய இறைவனே வேறுபட்ட உருவமாம் மானிட வடிவத்தோடு விளங்கி நின்று தானுறு வேதம் என்னும் தனுறு வேதமாம் சரசாத்திரத்தைச் சொல்ல தெளிவுற்ற இலங்கை வேந்தாம் இராவணேச்சுரன் இராவண்ணம் நடைகொண்டிலங்கும் இராவணேச்சுரனும் நரபதி **ஆழ்சுமை நரகத் தழுந்தா துயர்ந்த வீடுபேறடைய வேண்டி** தலையெடுக்காது ஆழ்த்தும் நரகமாகி ஆழ்சுமை நரகத்தழுந்தாது மேம்பட்டதாகி அபவர்க்க நிலை அடைய வேண்டி **சீதையைக் கவர்ந்து இலங்கையிற் காவல் செய்து அவளை விடேன் என்று அதரவம் பேசி** சீதலாகரமாம் சீதையென்னும் இன்னிசையைப் பெற்று இலங்கும் நிலையில் தளைகொண்டு யாக்கும் 'பா' புனைந்து வாக்கால் இசைக்கும் இசைபல இசைத்து இராமபாணத் திலக்காய்த் தான்தனது எல்லாம் ஆக இசைவித்து அதனுல் பயனற்ற நிலையை ஓர்ந்து இராமபாணம் என்னும் வாசி சாதனம் பயின்று அதற்கு இலக்காக தான் தனது என்னும் எல்லாமும் அச்சரத்தில் ஒன்றி லயப்பட **இராமன் மனிதவுருவாய் வந்து கண்காணத் தோன்றி விளங்குந் தூய்மை மிக்க** இராமன் என்னும் ஞானசிரியன் தனக்கு உய்வைத்தரும் பொருட்டு மனிதவுருவம் எடுத்து புறக்கண்ணல் காணும்படியாக தோன்றி நிற்கும் மாசற்ற மேன்மையுடைய. **துவித சித்தாந்த சுருதிப் பொருளின் வடிவமே என்றதின் மாழ்கியுயர்ந்த கதிபெற்றேகக் காட்டும் வேணியும்** துவித சித்தாந்த சுருதிப் பொருளாம் இறைவனின் பிரதிபலிப்பாகிய சித்துருக் கொண்ட சத்துப் பொருளின் உருவமே ஞானசிரியன் வடிவமாம் என்று

ராக

Koviloor Digital Library

அவன் காட்டியருளிய சரசாதனப் பயிற்சி நிறைவில் அழுந்தி அவனே தானுகும் நற்கதி பெற்று ஏகும்படியாக காட்டும் உய்வு ஏணியாம் முக்கண் வடிவமாய் அஃகும் 'ஏ' இனம் ஆகவுமாக நிலைபெறும் அர்த்தபாகைக்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

முடிவில்லாத மூன்றரைக்கோடி வாழ்நாள் பெற்றேம் மங்கல மங்கையை பெற்றேம் குபேரன் பின்னிட்டோட அவனது செல்வம் அனைத்தையும் கவர்ந்தேம் நித்திய தத்துவம் நிலைக்கப் பெற்றேன் துணைவனுனன் எல்லையற்றதான இலக்கையுடைய மூன்றரைக் கோடி என்னும் எண்ணிக்கையுள்ள கேசரந்திரங்களின் வழியாக சஞ்சாரம் செய்யும் இயல்பும் மங்கல மங்கையை பெற்றேம் குபேரன் பின்னிட்டோட அவனது செல்வம் அனைத்தையும் மணமங்கலம் விளங்கும் உள்மனு சக்தியையும் "குபேரன் பின்னிட்டோட அவனது செல்வம் அனைத்தையும்" நிலைபெயராது விளங்கும் ஆதார சக்தியெல்லாம் பிற்பட முற்பட்ட சக்தியாய் விளங்கும் சூட்சம சடாதார மூலத்தையும் நித்திய தத்துவம் நிலைக்கப் பெற்றேன் துணைவனுனன் கால எல்லை யளவினதாக நிலைகொள்ளும் இயல்பு உறுதுணையாக அமைந்துள்ளது. தூய புலத்தியன் மரபில் ரேன்றலாய் வந்தேம் என்று எக்களிப்பாக இருக்கும் காலை மாசற்ற புலத்து இயல் என்னும் ஐந்தன்மைத் திறம் ஐந்தன்மை திறத் தொடரில் வந்துள்ளோம் என்று இறுமாந்து இருக்கும் நிலையில் மெய்உணர்வு அளிக்கும் ஞானசிரியன் வாய்க்கப் பெற்று முயன்று பெற்ற மூன்றரைக் கோடி வயதரைக் கோடி வாழ்வே என்றும் மூன்றரைக் கோடி கேசரந்தரங்களில் சஞ்சாரம் செய்யும் உயிர்ப்புக்கலை உண்மையில் இடம் வலம் நடு என்னும் மூன்றில் திரிகின்ற பிராணவாயு உண்மையில் நடுநிலை கொண்டு நிற்கும் நடுநாடியின் நிலைகொண்டுள்ள ஏகமே உபயமாய் ஒன்று இரண்டாகவும் பொய்த் தோற்றத்தில் மூன்ருகவும் அந்த மூன்றில் நடுநிலை கொண்டு பிளவு பட்டு அரையாகவும் ஆக மூன்றரையாய் துலங்கி மூன்றரைக் கோடி கேசரந் தரங்களிலும் சஞ்சாரம் செய்கிறது என்றும் அவை உண்மையில் ஏகமாய் நின்ற நடுநாடியில் ஓடும் வாயுவின் பகுதியே என்றும் ஆகையால் மூன்றரைக் கோடி அரைக்கோடியாகவே உள்ளது என்றும் அதுவே வாழ்நாளாக அமைந்துள்ளது என்றும் மங்கல மங்கையோ மாண்டும் தரிக்கும் மங்கையேயென்றும் மங்கல மங்கையாம் குண்டலி சக்தியானது மாண்டும் தரித்தலாகிய துவாதசம் அந்தமாகிய பின்னரும் நிலைகொண்டு இருக்கும் ஆதார சத்தி என்றும் குபேர செல்வமும் குறைந்து பெயரும் செல்வமே என்றும் சங்க வடிவமும் பதும வடிவமும் கொண்டு விளங்கும் மூலாதார நிலையத்தில் தோன்றி செல்லும் செல்வமாகிய கலை சென்றவாறு

Koviloor Digital Library

மீளாது குறையுற்று மீளும் தன்மை உடையது என்றும் நித்திய தத்துவம் நித்திரைத் தத்துவமாய் வாய்த்தத் துணைநலம் மாயும் என்றும் நித்திய தத்துவத்தைத் தரும் சக்தியானது நித்திரைத் தத்துவமாய் வாய்க்கப் பெற்று அதனால் அழிவைத் தருவதாயிற்று என்றும் புலத்தியன் மரபோ அகத்தியன் சீற்றத்து அழிந்தரக்கர் குலமாயிற்றென்றும் ஐந்தன்மை திறங்களை உடைய சதுர்முகத் தோன்றல் மூலாக்கினியின் வெம்மையால் அழிவுபெற்ற திதிநிலை தோன்றலாயிற்றென்றும் உணர்த்திய பொழுது தானுறு வேதம் சாற்றத் தெளிந்த தானுறு நிலையை யுணர்த்தும் தானுறு வேதமாம் தனுறு வேத உண்மை தெளிவுற்ற காலை இலங்கை வேந்தாம் இராவணேச்சுரன் தோன்றி துலங்கா நிற்கும் மெய்யையிடங் கொண்ட இராவணேச்சுரன் என்னும் சஞ்சாரகதி பிராண வாயுவைக் கொண்ட தோன்றல் ஆழ்சுமை நரகத் தழுந்தாது உயர்ந்த வீடுபேறு அடைய வேண்டி தலை எடுக்க ஒட்டாது தாக்கும் ஜனன சாகரத்துள் ஆழ்ந்து விடாமல் உயர்நிலை யடைய வேண்டி சீதையை கவர்ந்து இலங்கையில் காவல் செய்து அவளை விடேன் என்று அதரவம் பேசி சீதளாகாரமாகிய தாதுவை ஆதார சக்தியால் காக்கும் தன்மையை சாதித்து அச்சீதளாகாரத்தை காப்புச் செய்யும் இயலில் நெகிழ்வு கொள்ளாமல் அந்தராதி யோகங்களைச் செய்தும் பேசியும் இராமபாணத்திலக்காய் தான் தனது எல்லாமாக இசைவித்து ஓங்கார இயல்பைக் கொண்ட இராமபாணம் என்னும் சரசாதனத்தினல் தானும் தனதுமாகிய கருவிக் கூட்டங்கள் எல்லாம் சரசாதனத்திற்கு இலக்காக்கி இராமன் மனித உருவாய் வந்து கண்காண தோற்றத்தைத் தரும் பரிசுத்தம் மிக்க துவித சித்தாந்த சுருதிப் பொருளின் வடிவமே முதற்பொருளின் நின்றும் பிரிந்து அதன் உருவத்தை தனது உருவமாய்க் கொண்டு விளங்கும் ஆரணப் பொருளின் உருவமே என்றதின் மாழ்கியுயர்ந்த கதிபெற்றேக காட்டுய் வேணியும் அந்த ஆரணப் பொருளின் பிரபையில் திளைத்து மூழ்கி அதனல் மேநிலை பெற்று செல்ல காட்டும் உய்வு ஏணியாம் திருஷ்டி வாசலும்.

கர்மபாகை

அரனைப் பிரியா ஆத்தும லிங்கம் தனதாய்ப் பெற்றுத் தன்பதி நாடும் இராவணேச்சுரன் எதிரில் வேற்றுருக் கொண்டு தோன்றி நின்று சுசிகரம் சிவசந்நிதானத்தில் நின்றும் வேறுபடாத ஆன்மலிங்கமானது தன்வசமாகப் பெற்று தனது நாட்டை நாடிச் செல்லும் இராவணேச்சுரன் முன்னிலையில் வேற்றுருவோடு காண நின்று புனிதம் காரணமாக சுசிகரம் காரணமாய் அது கைவரப் பெற்று வைதிக நான்மறைத் தெய்வீகம் பேறுபெறத் திட்டித்ததைப் பெயர்க்கு மிராவணன் புனிதம் காரணமாக அந்த லிங்கமானது தன்கைவசமாக பெற்று வேதமும் வேதமார்க்கமும் வேதவேத மார்க்க தெய்வீகமும் பெறும் பொருட்டு பெறத்

Koviloor Digital Library

திட்டித்த நிலையில் அதை பெயர்த்தெடுக்க முயலும் இராவணன் எடுக்க முடியாமல் இளைத்து மகாபலலிங்கம் என்றேக இளைத்து மகாபலலிங்கம் இது என்று செல்லும் படியாக (காப்புச் செய்யும் கணபதி அருளால்) அனைத்து விக்கினங்களையும் நீக்கி பாதுகாப்புச் செய்யும் கணபதியினுடைய கிருபையால் மாயாவாத மமைவுற்ற இருக்கும் அர்த்த வேதமரூஉம் உலகாயதம் அதனியற்சீர் பெறும் ஆயுள் வேதமும் ஏகான்ம வாத மிசைபெறு சாமகானம் பொலி காந்தருவ வேதமும் துவித சித்தாந்தத் துடியதர்வத்தில் தன்னிலை யுணர்த்தும் தனுறு வேதமும் ஆய விவற்றின் அகச்சு எட்டும் சுருதி நான்கும் தோன்றும் அராஉமா அயணமும் கணபதி அருளும் காப்பும் மூலமும் முதலுமாய் முதற்பண் விரியும் மாயாவாதம் அமைவுரப் பெற்ற ருக்வேத என்னும் அர்த்த வேதமும் உலகாயதம் பொருந்திய இயற்சீர் வேதம் என்னும் யசூர் வேதமும் உபவேதமாகிய ஆயுள்வேதமும் ஏகான்ம வாதம் இசைக்கப்பெறும் சாமகானம் பொலிவுற்று விளங்கும் உபவேதமாகிய காந்தருவ வேதமும் துவிதசித்தாந்தம் பொருந்திய அதர்வண வேதமும் அதில் உபவேதமாய் காணப்பெறும் தனுறுவேதமும் ஆகிய இவற்றின் எட்டு அகச்சும் நால்வகை சுருதிகளும் விளங்கா நிற்கும் அரா உமா அயணம் என்னும் இராமாயணமும் விக்கினேஸ்வரனாகிய கணபதியின் திருஅருளும் காப்பும் மூலாதாரமும் மூலமுதலுமாய் முதற்பண்ணாகிய நட்டபாடை விரிவு பெற்று விளங்கும். அதற்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

அரனைப் பிரியா ஆத்துமலிங்கம் உயிர்க்கலையை விட்டு நீங்காததான ஆத்துமலிங்கம் என்னும் அஃகேனம் உயிர்க்கலை சார்பு பொருத்தி தனதாய் பெற்று தன்பதி நாடும் தென்மொழியாக விளங்கும் இயலில் இராவணேச்சுரன் எதிரில் வேற்றுருக் கொண்டு தோன்றி நின்று அந்த தென்மொழிக்கு எதிரிடையாக வேற்றுரு அமைந்து விளங்கி நிலைகொண்டவிடத்து சுசிகரம் காரணமாய் அது கைவரப் பெற்று சுத்த வித்தியா தத்துவமாய் தோன்றி நிலைகொண்ட இயலில் வேதவேதாந்த சித்தாந்தம் வழங்கும் மொழியாக ஆற்றல்பெற திட்டித்து அதை பெயர்க்குமிராவணன் இளைத்து மகாபல லிங்கமென்றேக தென்மொழியை வடமொழியாக பெயர்ச்சி அடையச் செய்யும் வடமொழி கூட்டமாம் ஹ. ஸ. ஶ. ஷ. க்ஷ என்னும் ராக்ஷ்ஸ்ஷாஹாரம் தென்மொழியால் பங்கம் அடைந்த நிலையில் தென்மொழி மிக்க வலிமை உடையதாய் இலங்கும் லிங்காகரத்தை உடையது என்று சொல்லி அகலும்படியாய் காப்புச் செய்யும் கணபதி அருளால் திரிபின்றி நிலைப்பெறச் செய்யும் ஒலிக் கூட்டங்களுக்கு பதியாய் விளங்கும்

Koviloor Digital Library

மூலகுண்டலி சார்பு மிக்க வலிமையால் தோன்றும் மாயாவாதம் அமைவுற்ற அர்த்தவேதமதாம் இருக்கும் சாகாதகால் நிலைபெற்றுள்ள தவளாகாரமாம் ரிக்வேதமும் உபவேதமாகிய அர்த்த வேதமும் உலகாயதம் அதனியற்சீர் பெறும் ஆயுள் வேதமும் உலகியல் ஆயத்தமான நடைமுறைக்கு ஒப்ப அமைந்துள்ள இயற்சீர் என்னும் எழுத்தொலி அமையப் பெறும் இயற்சீர் வேதம் யசூர் வேதம் அதில் தோன்றும் உப வேதமாகிய ஆயள் வேதமும் ஏகான்ம வாத இசைபெறு சாமகானம்பொலி காந்தருவ வேதமும் உயிர்க்கலை அழியாமல் இசைக்கப் பெறும் பொலிவு பெற்ற கானம் பொருந்திய சாமவேதமும் அதில் உபவேதமாகத் தோன்றும் காந்தருவ வேதமும் துவித சித்தாந்தத் துடியதர்வத்தில் தன்னிலையுணர்த்தும் தனுறு வேதமும் சித்துப் பொருளின் பிரதிபலிப்பாய் உருக்கொண்டு தோன்றிய துவித சித்தாந்தம் என்னும் துடிப்புடைய வாக்கியமாகிய அதரவத்தில் அதர்வண வேதத்தில் தன்னிலை யுணர்த்தும் தனுறு வேதமாகிய உபவேதமும் ஆய இவற்றின் அகச்சு எட்டும் இவை யாவும் அடங்கிய அக அச்சாம் எட்டு இதழ் கமலம் பொருந்திய மூலாதாரமாம் 'அ'கரமும் சுருதி நான்கும் தோன்றும் அராஉமா அயணமும் நான்கு வேதங்களும் விளங்கப் பெறும் அராஉமா அயணம் என்னும் பிரணவமும் கணபதி அருளும் காப்பும் மூலமும் முதலுமாய் முதற்பண் விரியும் கணபதியின் திருஅருளும் அவரால் விக்கினமின்றி காக்கப் பெறும் காப்பும் நிலைபேறும் ஆரம்பமுமாய் முதற் பண்ணுகிய நட்டபாடைப்பண் விரிவுரு நிற்கும். இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

அரஊனப் பிரியா ஆத்தும லிங்கம் தனதாய்ப் பெற்று தன்பதி நாடும் பரமாகிய பிரமத்தை நாடும் தன்மை நீங்காத ஆத்தும லிங்கம் என்னும் உயிர்ப்பூவை தனதாய்பெற்று தன்பதி நாடும் இராவணேச்சுரன் தன்னுடையதாகக் கொண்டு நடைகொள்ளும் ஆன்ம தத்துவச் சலன வாயுகதியோனின் எதிரில் வேற்றுருக் கொண்டு தோன்றி நின்று சுசிகரம் காரணமாய் அது கைவரப் பெற்று வைதிக நான்மறை தெய்வீகப் பேறு பெற திட்டித்ததை பெயர்க்கு மிராவணன் இளைத்து மகாபல லிங்கமென்றேக காப்புச் செய்யும் கணபதி அருளால் வேதவேதாந்த நான்மறை அருட்திறம் பெரும்பேறு உருப்பெற்று நிலையுற்றதை நிலைபெயரும் படியாகச் செய்யும் இராவணுகார முயற்சி பலிக்காமல் மகாபல லிங்கமாக உயிர்ப்பூ கொண்ட ஆன்மலிங்கமானது விளங்க பிரணவாகாரத் திருகாப்புச் செய்யும் கணபதி அருளால் மாயாவாத அமைவுற்ற இருக்கும் அர்த்த வேதமதாம் துவாத சாந்தப் பதியாம் மூலாதார வெளியும் வேதப் பொருளும் (உலகாயதம்

Koviloor Digital Library

அதனியற்சீர் பெறும் ஆயுள் வேதமும் உலகியற் கலையாக உருப்பெற்று விளங்கும் எழுத்தொலி பொருந்திய இயற்சீர் வேதமும் உபவேதமாகிய ஆயுள் வேதமென்னும் உயிர்நிலைக் கலையும் ஏகான்ம வாத இசைபெறு சாமகான பொலி காந்தருவ வேதமும் ஆன்மீக சலனத்து இசைபெறச் செய்யும் ஏற்ற இறக்கம் சமனம் பெறும் சத்த சுரத்தால் விளங்கும் சாமகான பொலிவு பெற்றுள்ள காந்தருவ வேதம் என்னும் உபவேதமும் துவித சித்தாந்த துடியதர்வத்தில் தன்னிலை யுணர்த்தும் தனுறு வேதமும் முதற் பொருளின் தோற்றமாகிய துவித சித்தாந்தம் என்னும் ஞானவாக்கியம் பொருந்திய கலையில் தனது வாழ்க்கை நிலையை அறிவிக்கும் தான் உரு வேதம் என்னும் தனுறு வேதமும் ஆகிய விவற்றின் அகச்சு எட்டும் சுருதி நான்கும் அந்த உயிர்நிலை கலையின் உருக்கொள் தோற்றம் எட்டும் நான்மறையும் விளங்கும் சாந்திகலை சாந்தி அதீத கலை. வித்தியாகலை. பிரதிஷ்டாகலை ஆகிய நான்கு கலைகளும் பிரமனும் ஆதனு தோன்றும் அராஉமா அயணமும் கணபதி அருளும் காப்பும் மூலமும் முதலுமாய் முதற்ப்பண் விரியும் பிரமமும் ஆதனும் ஒன்று கூடுதலாகிய பிரமாதம் என்னும் இதிகாசமாம் இராமாயணமும் விக்கினேஸ்வரர் அருட்திறத்தால் ஏற்படும் காப்பும் மூலமும் முதலும் வேரும் விளைவும் ஆக முதலாவது நட்டபாடைப் பண் விரிந்து காணும். இதற்குத் தெய்வம் என்னும் தேவர் கணபதி ஒலியென்னும் சந்தோப விசிதியாம் சந்தவுற் பவச்சீர் விளரி உழை தாரங் கொள்ளவுள்ளது. கலையென்னும் புராணம் துவித சித்தாந்தம். உரு என்னும் காயத்திரி வாழ் நல்லிலிங்கம் தொழில் என்னும் அநுஷ்டுபு காப்பு.

ஈண்டு கூறப்பட்ட நட்டபாடை பண்ணிற்குரிய வேத புருடனின் ஆறு அங்க விளக்கம் வருமாறு. (க) சித்செய் (சிட்செய்) சூக்கம் பனிரெண்டு (யஉ) சிரமும் (உ) வியா கரணம் என்னும் மேற்கணக்கு ஒன்பதாகிய அத்தமும் (ங) சந்தசு என்னும் எழுதாக் கிளவி மூன்றாகிய தோளும் (ச) நிருத்தம் என்னும் ஒடுக்கம் ஐந்து (ரு) ஆகிய தொடையும் (ரு) சோஒது இடம் என்னும் கீழ்கணக்கு ஒன்பதாகிய பாதமும் (சா) கற்பம் என்னும் மெய்வளம் (எ௰உ) எழுபத்திரண்டாகிய உடம்பும் கொண்டு ஒலி உருவாகிய வேதம் ஒரு புருஷாகிருதியாய் நிற்கும். அவ்வாறு நிற்கப் பெறும் உருவிற்கு கருவாய் விளங்குவது துவித சித்தாந்த சுருதி வடிவாம் பீடமுமாக நிற்கும் பிரணவமாம்.

மேற்கூறிய ஆறு அங்கத்தில் மேற்கணக்கு கீழ்கணக்கு என்னும் இரண்டில் ஈரு ஒன்பது பதினெட்டாக தோன்றினும் கணக்கு என்பது எட்டில் அமைந்து விளங்கும் இயல்புடைய எண்ணுகவே ஓர் உருக் கொண்டு விளங்கி ஒன்பதாகிய படியால் அது ஈரெட்டுப் பதினாறுகவே அமைய ஆம் முறையால் ஆறு அங்கங்களின் கூட்டுத் தொகை (108)

Koviloor Digital Library

நூற்றி எட்டாகவே ஆகிறது. ஆகவே உரு என்பது நூற்றெட்டு என்பதாகவே வழக்கில் அமையப் பெற்று விளங்கிறது. இதில் மெய்வளம் என்பது மேளம் என்று வழங்குகிறது.

ஆறு அங்கத்திற்குரிய இலக்கண விளக்கம்.

உடம்பின் உறுப்புக்கள் (முப்பத்திரண்டாக) (ௌ௨) ஆக இருக்கும் போது வேத அங்கம் மட்டும் ஆருக (௬) ஆக அமைவது ஏனெனில் வேதம் ஒலியை உடம்பாகக் கொண்டது. அவ்வொலியானது வளியால் வெளியில் உலவும் தன்மையைப் பெற்ற உடம்பை உடையதாகிறது. அந்த ஒலியும் வளியும் செயல்படும் நிலையம் கொண்ட பெரும்நாடி சிரம். அத்தம் (கை). தோள். தொடை. பாதம் இவை பொருந்திய உடலாக அமைந்திருக்கிறது. இதை மேற்போக்காகப் பார்த்தால் தலை. கை. கால். உடம்பு ஆகக் காணும். அதில் சிரம் உயிர்நிலையாகிய காயத்தில் சித்செய் என்னும் சூக்கமாக அமையும். மற்றையவை சூக்கமாகிய சிரத்தை தலைப்பட்டு நிற்கும் தூலமாக இருக்கும். தூலத்தில் காண்பன எல்லாம் சூக்கமாக சிரத்தினிடத்து காண்பதால் சூக்கத்திற்கு சித்செய் என்றும் பெயர். ஓசை. பரிசம். உருவம். ரசம். கந்தம். புத்தி. மனம். அகங்காரம் என்ற எட்டும் (அ) கண். செவி. வாய். மூக்கு என்ற நான்கும் (௪) சேர்ந்து (௰௨) பனிரெண்டாக இருக்கும். அந்த பன்னிரெண்டே வேத புருஷனின் சிரமாகவும் அச்சிரத்தில் தோன்றும் சூக்கம் ஆகி பன்னிரண்டாய் நிற்கும் சுவாசம் ஆனது பனிரெண்டும் எட்டும் ஆக விளங்குவது போன்று விளங்குவதை விரித்து பண்ணிலக்கண சூக்கத்தில் சொல்லியதைக் காண்க. இப்பொழுது வேதபுருடனுக்கு சிரமாக சூக்கம் அமைந்துள்ளவாறு காட்டினேம். சூக்கமாகிய சித்செய்யை ஓதி உணர்வது முதன்மைத்தாகும். சிரம் இல்லையென்றால் மற்ற உறுப்புக்களை வைத்து இனம் கண்டு கொள்ள முடியாதது போன்று வேத விளக்கம் கண்டு கொள்ள முடியாது. பேர்வழி யார் என்று தெரிய வேண்டில் அதற்குரிய உறுப்பு சிரமேயாகும். ஒரு மனிதனுக்கு பெயரிடும் பொழுதும் இறைவனுடைய திருச்சன்னிதானத்தில் தலையில் அடித்துத்தான் பெயர் கூப்பிடுவதை இன்றும் காணலாம். ஆகவே சூக்கம் சிரமாக அமைகிறது. நட்டபாடை என்னும் சுங்கேத மொழியை சார்பு கொண்டு அணுகுகிற சணுக்கிறகமாக அமைவு பெறக் காண்பது சித்செய் என்னும் சூக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன காண்க.

வியாகரணம் என்னும் மேற்கணக்கு ஒன்பதின் (௯) விளக்கம் வருமாறு

க. எழுத்து

மேற்கணக்கு என்பது உயர்நிலைத் தானத்தில் அனைவருக்கும் விளக்கும் படியாக தோற்றத்தை தருவனவேயாகும். உயர்நிலைத்

Koviloor Digital Library
தானத்தில் தோன்றும் தோற்றம் எல்லையற்றனவாக தோன்றும் கூட்டமாகும். அக்கூட்டத்தை நெறிமுறைப்படுத்தி ஒரு எல்லைக்குள் அமைய ஆம்படி வகுக்கும் போது அதற்கு கணக்கு என்று பெயர். கணம் என்றால் கூட்டம். அக்கூட்டத்தை ஓர் எல்லைக்குள் ஆக்கும் போது கணக்கு என்று ஆகின்றது. க்கு என்பது முற்றுப்புள்ளி கணம் கூட்டம். அதை அளவுபடுத்தி வரம்பு செய்வது இக்கு. ஆகவே கணக்கு என்று பெயர். அது மேல் நிலைத்தானத்தில் தோன்றியதால் மேற்கணக்கு என்று பெயர். அக்கணக்கைக் கொள்ளும் கோளங்களாகிய கோள்கள் எட்டு வகைக்குள் அடங்கும். அதில் ஒரு கோள் மட்டும். ஒன்று இரண்டாகி ஒன்றையொன்று கவர்ந்து கொண்டு சஞ்சரிப்பதால் கோள் எட்டே ஆயினும் ஒன்பதாகவே பேசப்படுகிறது. அவ்வாறே வேதபுருடனின் கரமாகிய அத்தத்தில் குறுகி நெருக்கம் பெற்றுள்ளதால் கரணம் என்று சொல்லப் பெறுவனவாகிய குறியீடுகள் ஒன்பதானாலும் எட்டாகவே அமையும். அந்த இயலில் மேற்கணக்கு என்னும் வியாகரணம் ஒன்பது எட்டாகவே அமைவன காண்க. அவ்வமைப்பில் எழுத்து. அசை. சீர். யாழ். யாப்பு. அடி. பண். திறம். பண்தார் என்ன ஒன்பதாகிறது. அவ்வொன்பதில் ஒன்றாகக் காண்பது எழுத்து. ஏழு அத்துக்களையுடைய சொல்லின் எல்லை. இது அண்டத்தில் மேட ராசியாகவும் விருச்சிக ராசியாகவும் செவ்வாய் என்னும் கோளின் நிலைக்களமாகவும் அமையும். பிண்டத்தில் ஏழுதாதுக்களுக்கும் உரிமைப்பாடுள்ள தசையும் ரத்தமுமாக அமையும். தசை மேல் இடமாகிய மேடமாகவும். ரத்தம் வெருள்செய் இடமாகி விருச்சிகமாகவும் பொருந்தி நிற்கும். இதற்குரிய கோள் செவ்வாய். எழுத்து செவ்விய வாயினின்றும் தோன்றி நிற்கும் செவ்வாயாக ஆதிக்கம் பெற்று சத்தமும் தாதுவுமாக விளங்கி செவ்வாய் திசை வருஷம் ஏழு (எ) என்பதற்கும் கணித நூல் வல்லார்கள் ஆராய்ச்சிக்கு இடமாக திசாவருஷம் ஏழு என நிற்கும். மங்கலங்கள் ஏழும் ஒன்று கூடிய எட்டாக அமைந்து காணப் பெறுவதால் செவ்வாய்க்கு மங்கலன் என்று ஒரு பெயர் உண்டு. அந்த மங்கலப் பொருட் பெயரை குறிக்கும் சொற்களே மங்கலச் சொற்களாகும். செவ்வாய் அக்கினி காரகனாக இருப்பதாலும் கோள்கள் அனைத்தும் அக்கினியின் பேதங்களே ஆவதாலும் இது முதன்மைப் பெயருடையதாகின்றது. கரஅணமாகிய கரணத்தில் நாதபிந்துக்களாகி நிறைவு பெற்று தோன்றியும் தோன்றாமையுமாக உருவங் கொண்டுள்ள சிறுவரையும் புள்ளியுமாக நிரம்பி நிற்கும்.

மேற்கணக்கு ஒன்பதில் இரண்டாகக் காண்பது அசை :

அந்த அசை மொழி முதலாக இடம்பெற்று விளங்கும் சொற்களாக நேர்அசை என்றும் நிறைஅசை என்றும் இரண்டாக அமைவு பெற்று நின்று

Koviloor Digital Library

அவ்வமைவில் மொழி முதலாகும் எழுத்துக்கள் இருபதாகிய எல்லையைக் கொண்டு நிற்கும். அவ்விருபது க.ச.ட.த.ப என்னும் ஐந்து எழுத்து இனம் பற்றியும் பால் பற்றியும் நின்று இருபதாகும். இது வான மண்டலமாகிய அண்டத்தில் சூரியனுக்கு நேராகவும் புதனை விட்டு மேலும் ஒரு ராசி கடந்து நின்று நிறையாகவும் காணப் பெறும். அதனுலேயே சுக்கிரனுக்கு உசனன் என்று ஒரு பெயர் உண்டு. சுக்கிரனுக்குரிய ராசி இடபம். துலாம். இது அண்டத்தில் இடப ராசியாகவும் துலாம் ராசியாகவும் சுக்கிரன் என்னும் கோளின் நிலைக்களமாகவும் அமையும். சுக்கிரன் மழைகோளாகி மழை வருஷித்து அதனுல் பயன் துய்ப்பவனுகிய விளைவைத் தரும் கழனி வளம்பெற அமையும் அந்த அமைப்பை தன் உழைப்பால் தரக் கூடியதும் கழனியின் இடத்து மேய்வதை விருப்பமாகக் கொண்டுள்ளதும் எருது ஆகையால் அவ்வெருது கழனியை அழித்து விடாமல் அவ்விடத்தை விட்டு இடையைச் செய்யும் செயற்ப்பாட்டைக் கொண்ட விலங்கினமாக எருது இருப்பதால் அதற்கு இடபம் என்று பெயர் வந்தது. அவ்வாறு இடையச் செய்யாமல் மேய்க்கும் மேய்ப்பனுக்கு எதிர்மறை 'அ' காரம் மருவிய சொல்லாக இடையன் என்று பெயர் வந்தது. கழனிக்கும் காட்டிற்கும் இடையில் உள்ள சமவெளி நிலமாகிய புல்தரையில் அதற்கு உணவு அமையப் பெருகின்ற படியால் நடுநிலைத் தானங் கொண்ட தொலாம் என்னும் இராசியும் மழைக் கோளாகிய சுக்கிரனுக்கு உரியதாயிற்று. தாராசு நடுநிலையைக் கொண்டு தொலாமல் நிற்கும் நிலைபற்றி அதற்கு தொலாம் என்று உள்ள பெயர் தொலாம் துலாம் என்று ஆயிற்று. அவ்வமைபு பிண்டத்தில் மேலாகிய தோலுக்கும் அடியாகிய அத்திக்கும் இடையில் உள்ள பத்து நாடிக் கூட்டமாகவும் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களாகவும் ஆகிய இருபதாய் விளங்கும். ஆகவே சுக்கிர திசை வருஷம் இருபதாயிற்று. ஈண்டு அண்டத்திலும் பிண்டத்திலும் உள்ள அமைபுபடி மேற்கணக்கு ஒன்பதில் ஒன்ருக காண எழுத்து செவ்வாய் என்றும் இரண்டாகக் காணும் அசை சுக்கிரன் என்றும் அது வேதபுருடனின் கரத்தில் ரவிமதியாகிய உருவத்தைக் கொண்ட இடம்வலம் ஆக அமைந்திருக்கும் பெரிய ரேகை இரண்டு என்றும் விளக்கம் பெற்றுள்ளதாம்.

௩. சீர்

ஒன்ருக காணும் எழுத்தும் இரண்டாக காணும் அசையும் அசைமுன் இயைந்து மூன்ருகி சீர் என்னும் பெயர் பெற்று விளங்கும். அச்சீர் அது அண்டத்தில் சாந்திராயன எண்ணிக்கைபடி பதினறு நாள் மீன்களை உள்ளடக்கிய மூலம் என்னும் நாள்மீன் இராசியாகிய தனுசுராசியாகி நாள் அசை சீர் என்னும் கால்களைக் கொண்ட பதினறு பாதத்தையுடைய நாள்மீன் எல்லை முடிவாகி விளங்கும். இதில் பதினறு

Koviloor Digital Library

மீருகவும் பதினறு பாதங்களைக் கொண்ட மீன் முடிவின் எல்லையாகியும் தனுசின் உருவத்தைக் கொண்டும் ஒன்றை யொன்று பற்றி நிற்கும் மீனின் உருவத்தைக் கொண்டும் தனுசு ராசியாகவும் மீன ராசியாகவும் இடம் பெறும். மூலமும் பனிரெண்டாய் கால் கொண்டு நின்ற ராசியும் பொருந்தி நிற்கும் கோள் சீவருகிய வியாழன் ஆகும். அதற்குரிய ஆண்டு இங்கு காட்டிய விளக்கத்தின்படி பதினறு ஆக கணக்கிடப்படும். இது பிண்டத்தில் மூல நட்சத்திரம் மூலாதாரத்தையும் ரேவதி நட்சத்திரம் பனிரெண்டாய் நின்ற சூரியனைக் குறிக்கும் ராசி முடியையும் காட்டும். இது வேத புருடனின் அத்தத்தில் சரம் திறம் உபயமாய் நிற்கும் கைவிரல் குறுக்கு ரேகை பனிரெண்டாகவும் அது பொருந்திய விரற்கள் நான்காகி பதினறாகவும் தனு என்னும் வளையவும் நிமிரவும் கூடிய விரல்களாகி மூலம் என்னும் பெரு விரலை ஆதாரமாய்க் கொண்டு விளங்கி வியாழ திசை பதினறு வருஷத்தை குறிப்பனவாக இருக்கும். இது மூலாதாரச் சார்புடையதாகி பனிரெண்டாய் நிற்கும் வாசியைக் காட்டும் தன்மைத்தால் சீவன் என்னும் வியாழனை குறிப்பனவாக வேத புருடன் கரத்தின் விரல்களும் குறியீடுகளும் ஆக அமைவு பெற்று காணும். இது வேத வியாகரணமாகிய மேற்கணக்கு ஒன்பதில் நாலசைச் சீர் பதினருக நிற்கும். இதில் ஒரு பாதி மாச்சீராகவும் ஒரு பாதி விளச்சீராகவும் கொண்டு மாச்சீர் குதிரையையும் விளச்சீர் விரலையும் குறிக்க தாளும் தலையும் ஒன்ருய் சவளபாகழி என்னும் பாவின் மிக்கூருதல் ஆம் பகழியை கோத்து நிற்பது தனுசு ஆக அமையும். நாலசைச்சீர் அடிதளையாய் வரும் இயற்கையால் மீனம் ஆயிற்று. மேலும் குரு உச்சம் பெற்று நிற்கும் நாள் மீனுகிய பூசம் புனர்பூசம் ஆய தன்மையைக் குறிக்கும் தண்நிழல் நறுநிழல் கொண்ட தண்பூ நறும்பூவாக அமைவதும் நோக்கத் தக்கது.

மேற்கணக்கு ஒன்பதில் ஒன்ருகிய எழுத்தும் இரண்டாகிய அசையும் மூன்ருகிய சீரும் வேத புருடனின் அத்தத்தில் அமைவ கண்டோம். மேலும் இவ்வாறு யாழ் அமைவதையும் பார்ப்போம்.

சீ. யாழ்

முறையே எழுத்துக்கு செவ்வாயும் அசைக்கு சுக்கிரனும் சீரிற்கு வியாழனும் அதற்குரிய ராசி திசாவருஷம் வடிவம் எல்லாம் மேற்கணக்கில் அமைய ஆம்படி கண்ட போன்று யாழாகிய மிதுனத்திற்குப் பார்க்கும் பொழுது அண்டத்தில் ஒருமைப்பாடு கொண்டு இணைந்து நிற்கும் ஒன்றுபட்ட இரண்டு உருவமாக காணப் பெறுவது மிதுனம். அவ்வாறே தலை கவிழ்ந்து இருக்கும்உருவமாக காணப்பெறுவது கன்னி. இவ்விரண்டும் புதனுக்குரிய ராசியாகும். புதன் பரணி பூரம் பூராடம் என்னும் நாள்மீனிற்குரிய தசாநாதனுக்கிய சுக்கிரனேடு தலைப்பட்டு நிற்கும் கோளாகையால் அவ்வாறே பரணியாகிய நாள்மீனை தலையாகக் கொண்டு

Koviloor Digital Library

பதினேழாக நிற்கும் கேட்டை நட்சத்திரமானது புதனுக்குரிய திசா வருஷம் பதினேழை ஆயில்யம் கேட்டை ரேவதி என்னும் திரிகோண நட்சத்திரமாக கொண்டுள்ளதில் கேட்டை பதினேழாக இருப்பதால் திசாவருஷம் பதினேழாக ஆயிற்று. கலையானது ஆண் பெண் என இடம் வலமாய் தொந்தங் கொண்டு நிற்றலே மிதுனம். அவை இரண்டும் ஒன்று கூடி சுழிமுனையாய் உள்வீட்டு அழுந்த நிற்றலே கன்னி. இது வேத புருடனின் கரத்தில் விரல் அடி மேடாக நிற்கும். இது வியாகரண விளக்கமாகிய மேற்கணக்கு ஒன்பதில் (௲) பதில்) யாழ்தொகை சீர் ஏழாகவும் யாப்பு ஒன்ருகவும் கட்டள் யாழ் நான்காகவும் யாழ் ஐந்தாகவும் ஆகிய பதினேழாய் அமையும். இதில் புதனுக்கு யாழோன் என்ற பெயரே இருத்தலும் புதனுடைய பிறப்பை இளன் என்னும் ஆண் இழை என்னும் பெண்ணுக மாறிய காலத்து மதிமகனுக கன்னியினிடத்து தோன்றியவன் புதன் என்பதைக் கொண்டு மிதுனம் கன்னி என்ற பெயர் புதனுடைய இராசிக்கு அமைந்ததும் கலை ஐந்து ஆறு தலங்களின் நடத்தல் பனிரெண்டில் ஐம்பூதம் சாருதல் ஆகிய பதினேழும் கலையினுக்குரிய திசாவருஷமாக இருப்பதும் நோக்கத் தக்கது.

ரு. யாப்பு

இவ்வாறு ஐந்தாவதாகிய யாப்பிற்கு மேற்கணக்கு இலக்கணம் காணும் பொழுது அண்டத்தில் உடுபதியாக நாள்மீன்களை புணர்ந்து நிற்கும் கோள் சந்திரன். சந்திரனுக்குரிய ராசி கடகம். அது திசை ஆதிக்கம் செலுத்தும் நாள்மீன் அத்தம். ஐவிரல்களையுடைய அத்தம் என்ன வடிவமைந்து நிற்கும். நாள்மீன் திறத்திற்குரிய சந்திரனின் திசை ஆதிக்கம் பெறுவதால் ஐ இரண்டு பத்தாகிய திசா வருஷம் சந்திரனுக்குரிய பத்தாகிறது. மேலும் சந்திரனுக்குரிய ராசியாகிய கடகம் என்னும் நெண்டினுடைய கால்கள் பத்தாகவே அமைந்துள்ளன. இதை பிண்டத்திர் பார்க்கும் பொழுது சூரியன் உயிருக்கு காரகனுக இருப்பது போன்று சந்திரன் உடம்பிற்கு காரகனுக இருப்பதால் இந்த எண்சாண் உடம்பு அதில் இரண்டாகிய இயலைக் கொண்டு பத்தாக அமைந்துள்ளன. நகக் கண்கள் ஐந்தாக அமைந்து நிற்கும். இது மேற்கணக்கு என்னும் வியாகரண விளக்கத்தில் பருவ பண்பாட்டு இயல் ஆறும் இசைப்பா நாலும் ஆகிய பத்தாய் நிலைபெற்று யாழ் நான்கை யாத்து நிற்கும் யாப்பு ஒன்று ஆகிய ஐந்தாய் அமைந்து காணும். சந்திரனுக்குரிய ராசியாகிய கற்கடகம் கற்போன்று கடுமையான அகத்தை உடைமை பிராணி ஆகிய நெண்டிற்கு கற்கடகம் என்று பெயர் வந்தது. மேலும் சூட்சமம் தூலம் என்னும் உடம்புப் பகுதியில் கடுமையான தன்மையுடைய அகம் சந்திரனுடையதாக இருப்பதாகக் கடகம் என்று வந்தது.

Koviloor Digital Library

ரா. அடி

இவ்வாறு ஆருவதாகிய அடிக்கு மேற்கணக்கு இலக்கணம் காணும் பொழுது அண்டத்தில் உயிருக்குக் காரகனாகிய சூரியன். உயிரானது உடம்பில் நிலைபேறு கொள்ளாததாக அமைந்து உடம்பு எடுக்கவும் அதனோடு உறவு கொள்ளாமல் விடவும் ஆகிய பகை இயற்றிறம் பெற்று விளங்குவதால் எல்லா உயிரினங்களுக்கும் பகை பூண்டு விளங்கும் சிம்மராசி சூரியனுக்கு உரியதாக கூறுப்பெறுகிறது. சூரியன் ராசி பனிரெண்டில் ஆறு ராசிகளுக்கு அதிபனாக இருத்தலாலும் சூரியன் கதிர்பரப்பி ஒளிவீசும் போது வான மண்டலத்தில் ஆறு ராசிகள் மறைந்து ஆறு ராசிகளே தோன்றப் பெறுவதாலும் மார்த்தாண்டன் என்னும் சூரியனுக்குரிய தசா வருஷம் ஆறாக கணிக்கப் பெறுகிறது. பிண்டத்தில் பூவில் தோன்றிய காயும் மாவும் உண்டி பசி பொலிவு மலர்வு ஆகிய ஆறு தோற்றங்களாக கரு உருவில்காணப் பெறும். இது வேத புருடனின் கரத்தில் நகக்கண் ஐந்தும் புறங்கை ஒன்றும் ஆகிய ஆறாக கனி. மலர். காய். மா. விளம். நாள் என்ன அறுவகை திறத்தால் அமையும் அடியாக நிற்கும். உயிரினங்களையும் மெய்யையும் அடியால் அகப்படுத்தும் சி அங்கமே சிங்கமாகும். "சி" என்பது உயிர்காற்றாகிய "அ" வளியைக் குறிக்கும். அந்த "அ" வளி பொருந்திய நிலையமாக இருக்கும் அங்கமே சிங்கமாம். சிம்ம ராசிக்கு இடம் மலையென்று குறிக்கப் பெறுவதும் சரீரத்தில் உயிர் இயங்கு தானமானது சிரசாக இருக்கும் இயல்பு தன்மையே யாகும். இதை மேற்கணக்கு ஒன்பதாகிய வியாகரண விளக்கத்தில் பார்க்கும் பொழுது யாழ்சீர் முன் யாப்பாகிய ஆறாக அமையும் யாழ். பாலை. முல்லை. மருதம். நெய்தல். குறிஞ்சி ஆகிய ஐந்தாகும். அவ்வைந்தின் முன் வேற்றுயாழ் யாப்பாக அமையும் போது யாழும் யாப்புமாக ஆறாகி அடி நிறைவு பெறும்.

எ. பண்

இவ்வாறே வியாகரண விளக்கத்தில் ஏழாவதாகிய பண்ணிற்கு விளக்கம் காணும் பொழுது தேன் துளிர்க்கும் பூந்தாதுவானது இசை கொண்டு சாரும் சாரளியை அகப்படுத்தி குவிந்து மயக்கும் தன்மையுடையதாய் ஊறுபாடு விளைவிக்கும் இயல்பைக் கொண்டு பூந்தாதுவாகிய மகரம் எனப் பெயர் பெறும் ராசிக்கு உரியதாக நோய் முகனாகிய சனி நிற்கும் மகரராசி பத்தாவதாகவும் கோள்கள ஒன்பதற்கு புறம்பாகவும் உள்ள ராகு கேதுக்களை அகப்படுத்திக் கொண்டு விளங்களால் அதற்குரிய தசா வருஷம் பத்தொன்பதாகவும் அமைந்து காண மேலும் அநுடம் நுடமாய்க் காணப் பெறும் அநுட நட்சத்திரத்திற்கு அதிபனாக இருத்தலால் முடவன் என்றும் பெயர் பெறும். இது அண்டத்திற் காணும் இயல். அது பிணடத்தில் இராகம் எட்டு நோய் மூன்று மலம் மூன்று குணம் மூன்று வினை இரண்டு ஆகிய பத்தொன்பதை விளைவிக்கும் நோய்

Koviloor Digital Library

முகமாக அமைவு பெறும். இதை வியாகரண விளக்கமாகிய மேற்கணக்கு பார்க்கும் பொழுது சுரம், யாழ், தாளம், சரசம், பண்பு, பண்பாடு, பண்இசை, பண்தானம், கலிப்பா, வெண்பா, அகவல், வஞ்சி ஆகிய பாஅணி பன்னிரண்டுடன் பாவின் சீர் அடி ஆகிய ஏழும் சேர பத்தொன்பதாகி குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசை பொருந்திய பண்ணாக அமையும். இது வேத புருடனின் அத்தத்தில் முட்டிமேடாக விளங்கும்.

அ. திறம்

இவ்வாறே வியாகரண விளக்கத்தில் எட்டாவதாகிய திறத்திற்கு பார்க்கும் பொழுது அண்டத்தில் ஒன்று இரு கூருகி சஞ்சாரம் செய்யும் ராகு கேதுக்களாக அமையும். இரு கூருன ராகு கேதுக்கள் உருவத்தில் பாம்பாகையால் நச்சு பாம்பு கரந்து உறைவ போன்று கண்களுக்கு தோற்ருது சீற்றங் கொண்டு தீண்டுங்கால் வெளிப்படுவது போன்று ரவிமதியை தீண்டுங்கால் மட்டும் காண முடியும். தீண்டிய பிறகு நாகமானது மறைந்து விடுவது போன்று அது மறைந்து விடும். பாம்பு குடத்திலோ குடம் போன்று உள் அமைப்புக் கொண்ட புற்றிலோ மறைவு கொண்டிருக்கும் ஆகையால் குடமாகிய கும்பமே இதற்குரிய ராசியாக அமைகிறது. இது பனிரெண்டு ராசிகளுக்கும் ஏழு கோள்களுக்கும் இருபத்தி ஏழு நாள்மீன்களுக்கும் ஆதியும் அந்தமுமாக அமையும். இது இரு கூருகி மற்ற ஏழு கோள்களும் சேர்ந்து ஒன்பதாகுங் கால் ஒவ்வொன்றிற்கும் இரு கூருக பதினெட்டாகி தன்னுடைய தசா வருஷம் பதினெட்டாகக் கொள்ளும். கேதுவானது தான் அல்லாத மற்ற ஏழு கோள்களையும் சார்ந்து திசா வருஷம் ஏழு என நிற்கும். இந்த இராகு கேதுக்கள் அண்ட கோளத்தில் உள்ள இராசி நாள்மீன் கோள் அனைத்திற்கும் ஆதியும் அந்தமுமான ஆதாரமாக நிற்பதால் கோள்கள் அனைத்தின் சார்பு கொண்டு திசா வருஷங்களை பெற்றன. ஆதியும் அந்தமுமாக நிற்பது ஒன்றற்கொன்று ஏழாமிடத்தில் நிற்பதைக் கொண்டும் கோள்களுடைய சஞ்சாரத்திற்கு எதிர்நிலைப்பாடு கொண்டு விளங்கும் தன்மையாலும் உணரலாம். இது அமிர்த நிலை விஷநிலை என்ற இரு கூறுகளைப் பெற்று அமிர்தநிலை கேதுவாகவும் விஷநிலை இராகுவாகவும் அமைய பெற்றதுடன் கேது ஞானகாரகன் என்றும் இராகு மிருத்தியுகாரகன் என்றும் விளங்குகிறது. முற்கூறிய இராசி மண்டல கோளகை அனைத்திற்கும் இது ஆதார பூதமாக இருப்பதாலும் இராசி கோளகை ஒளி மண்டலமாதலாலும் ஒளி இருளே இடமாகக் கொண்டு விளங்கும் தன்மை உடையது ஆக ஆதலாலும் ஆதார பூதமாகிய இவை இரண்டும் இருள் வடிவமும் புகை வடிவமும் ஆக இருப்பதால் கண்களுக்கு காண

Koviloor Digital Library

முடிவதில்லே. அந்த இருளோ புகையோ ரவிமதி இவைகளே சாரும் பொழுது மட்டும் காண முடிகிறது. இவைகள் நவவியாகரண விளக்கத்தில் எட்டாவதாகிய அமைப்பை அண்டத்தில் காணும் பொழுது காணப் பெறும் தோற்றம். இது பிண்டத்தில் முதலும் ஈறும் ஆகிய அடிமுடி என்னும் தலேயும் காலுமாக அமைவு பெறும். அடிமுடி யாதியாக விளங்கும் ஒருடம்பானது தூலம் சூக்குமம் என்ன இரு கூருகி எல்லா உயிர் இயக்கக் கருவிகளேயும் தனக்குள்ளாக அகப்படுத்திக் கொண்டு விளங்கும். இதில் ஒளிமயமான கூறு ஏழுவாசல்களேப் பெற்றும் இருள்மயமான கூறு உள்ளீடாக ஆருதார மண்டலம் ஆகிய ஒன்பதில் கால் கொண்டு பதினெட்டாக அமைவு பெற்ற பௌதீகதாரமான பாதத்தை அடிப்படையாகக் கொண்ட நிலேயமாக விளங்கும். இது அமித நிலேயும் விஷநிலேயும் என்னும் இருபகுப்புக்களேக் கொண்டு முப்பத்திரண்டு உறுப்புக்களிலும் நேர் எதிர் எதிராக சஞ்சரிக்க நிற்கும். இதுவும் உயிர்நிலேயமாகிய தூலத்தில் ஒலியின் கூருகிய உள்ளுறுப்புக்களுக்கு புறம்பாக இரு கூருக பிரிவு பெற்று உள்ளதில் தலே காலாதியாக வுடைய ஒன்று ஒன்றல்லாத தோற்றத்தைக் கொண்டு புலப்பாட்டிற்கு தனி உருவங் காணப்பெருமல் நிற்கும். இதை வியாகரண விளக்கமாகிய மேற்கணக்குப் பார்க்கும் பொழுது இயக்காய வர்க்க கூறுபாடு கொண்ட பண்களின் திறமாக நிற்கும். அப்பண்ணின் திறம் படுமலேப்பாலே. மேற்செம்பாலே. செவ்வழிப்பாலே. செம்பாலே. விளரிப்பாலே. அரும்பாலே கோடிப்பாலே. சாதாரி என்னும் எட்டுவகை திறங்களுள் அடங்கும். இந்த எட்டும் பண் என்றும் திறம் என்றும் சொல்லக் கூடிய இருவகைத் தாய் இருக்கும். ஈண்டு கூறிய எட்டும் தூல சூட்சமங்கள் என இருவகைப் பிரிவைக் கொண்டது. அவைகள் சூக்குமம் என்ன ஏழிசையாகவும் சண்முகதூலமான ஆறும் சதுர்முகச் சூக்கத்தைக் கொண்ட புரிய அட்டம் எட்டும் ஆகிய பதினெட்டாகவும் அமைந்து நிற்கும். முற்கூறிய ஏழு வகையையும் உள்ளடக்கிய ஒருமைப்பாடு கொண்டுள்ள இரு கூருகிய முழு அத்தமாக நிற்கும். முழு அத்தமாக பார்க்கும் பொழுது எதிர்எதிர் நிற்கும் இரு கூருகிய ஒன்ருய் காணும். அந்த இரு கூறுகளும் உள்நோக்கில் ரவிமதி ஆதி அண்டகோளகை நுண் கலேப்பொருளாய் விளங்கி நிற்கும். நுண்கலேப் பொருளேக் காணும் பொழுது முழு அத்தம் தோன்ருமலும் முழு அத்தத்தைப் பார்க்கும் பொழுது நுண்கலேப் பொருள் தோன்ருமலும் அமைவு பெற்று விளங்கும். இறைவன் நமக்கு காட்சி பொருளாய் அருளிய அண்ட கோளகைப் பொருளே பிண்டத்திலும் அண்ட பிண்டத்தில் காணும் அவ்வமைபுகளே சரஅச்சர உருவமான கலேநூலிலும் காட்டினேம். இதை ஆழ்ந்து ஆராய்ந்தால் ஆய்வின் திறமைக்கு தக்கபடி கோள்விதியர் கலேயை உணரலாம். இத்துடன் இரண்டாவதாகிய வேத அங்க விளக்கம் நிறைவு பெறுகிறது.

Koviloor Digital Library

கூ. பண்தார்

இவ்வெட்டும் கூடிய ஒருமைப்பாட்டின் அமைந்தது பண்தார். பண்ணிற்கு உரியவராக விளங்கும் பண்தாரை உருவகப் படுத்தி தந்துள்ள வேதியர் இட்ட கட்டளையை பண்தார் நிறைவுபெற செய்வார். அப்படி நிறைவுபெறச் செய்யும் சூத்திரதாருக்கு உரிய தேகம் ஒலிமயமான சத்தத்திரேகம். அந்த சத்தத்திரேகத்தை வாயால் இசைக்கும் வாயிசையர் ஆகிய வைசியர் விருப்பத்தை சத்ததிரேகம் என்னும் உடலமைப்புக் கொண்ட சத்திரியர் வலிமையோடு நிறைவேற்றும் சூத்திரதாராராய் விளங்கும் சூத்திரர். ஈண்டு கூறியதை வகைப்படுத்தி நோக்கும் பொழுது வேதத்தை ஓதி கட்டளையிட்ட கட்டளைதாரர் ஆகிய ஞானிகளே பிரமகுல வேதியர் என்றும், அவரால் தோற்றுவிக்கப் பட்ட சத்ததிரேகத்தை உடையவரே சத்திரிகர் என்றும், அந்த சத்ததிரேகத்தை வாயால் இசைக்கும் வாயிசையியரே வைசியர் என்றும் இவற்றை எல்லாம் தனதாகக் கொண்டு செயல்படா நிற்கும் சூத்திரமாகிய பணுவலை கொண்டவரே சூத்திரர் என்றும் பண்சாதி தோன்றுவன காணலாம். இவையே வேதம் வகுத்த நால்வகை வருணங்கள்.

வேதபுருடனின் ஆறு அங்க விளக்கம் கூறியயிடத்து சித்செய் என்னும் சிட்சையாம் சூக்கம் என்னும் சிரம் பண்ணிலக்கணச் சூக்கம் என்னும் நூலாகவே அமைந்துள்ளபடியால் இதில் விரித்து கூறவில்லை. பண்ணிலக்கணச் சூக்கத்தால் காண்பனவற்றை நூலாக அமைத்துள்ளோம். அதில் வியாகரணம் என்னும் மேற்கணக்காகிய ஒன்பது வேத புருடனின் அத்தமாக இருப்பதால் அத்தத்தில் கோள்விதி குறிக்கும் குறிப்புக்கள் அனைத்தும் காலகணிதம் கணிக்கும் இயல்புக் குரியனவாக இருப்பதை ஓரளவு விரித்துக் கூறினோம். இந்த மேற்கணக்கு கணிக்காவிட்டால் வேதவிளக்கம் காண முடியாது. இதையே திருமூலர்

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.

என்று விளக்குகிறார். இதில் அண்ட நிற்கும் கணக்கு என்பது கீழ்கணக்கு ஒன்பதைக் குறிக்கும். இந்த கணக்கு வேதபுருடனின் கரமாக இருப்பதாலும் இதைப் பார்த்தால் தான் கோள்விதி ஆதியென விளைவிக்கும் விளக்கத்தைக் கூறலாம் ஆகையாலும், பொதுப்படையாக நியதியை கூறமிடத்து கையும் கணக்கும் என்ற வழக்குச் சொல் உள்ளது. கணக்கைக் கண்டு பொருள் விளக்கம் கூறும் சிறப்பு இயற்பகுதி பொதுக் குறிப்பாக செய்யுள் வகைக்கு பொருள் கூறுவதை அத்தம் சொல்லுகின்றோம் என்பது

Koviloor Digital Library

அர்த்தம் சொல்லுகின்றேம் என்று வடமொழிச் சொல்லாக மாறிவிட்டது. கரத்திற்கு அத்தம் என்று பெயர். கரத்திற்குள்ளாக கோள்விதி ஆதி என அனைத்தும் காணப்பெறும் அத்தாகிய எல்லை அமைந்துள்ளதால் அதற்கு அத்தம் என்று பெயர். அது வடமொழியில் அஸ்தம் என்று திரிபுற்றது.

அடுத்தது எழுதாக்கிளவி மூன்று ஆகிய விளக்கத்தைக் கூறுவோம். எழுதாக் கிளவிக்கு வடமொழியில் சந்தசு என்று பெயர். சார்ந்து இசைக்கும் இசையே சந்தசு யென்று ஆயிற்று. அது தமிழில் எழுதாக் கிளவி என்று கூறியுள்ளார்கள். எழுதாக் கிளவிக்குரிய மறைக்காயராம் வேதபுருடனின் அங்கம் தோள். அதிற்றேன்று வனவாய தோற்றம் மூவகைப்படும். அம் மூன்றையும் சுருதி. மீச்சுருதி. உபநிழலறம் என்ற இயல். இசை. நாடகமாகிய மூவகையாய் (எழுதாக்களிவி தோன்றும்) கூறப் பெறுகிறது. இதில் தோள் என்பது இடம் வலம் நடு ஆகிய தன்மையுடைய உயிர்க்கலை துடிப்பிற்கு இடமாகிய தானத்தையே குறிக்கும். வாயால் சொல்லி காதால் கேட்டு எழுதும் சொல் எதுவும் எழுதாக்கிளவி ஆகாது. உயிர்த்துடிப்பின் கலையை உணர்த்துவதே எழுதாக் கிளவியாம். அவ்வாருய் அமைந்த உயிர்த்துடிப்பு ஞானசிரியன் உணர்த்துகின்ற இயல் ஒலியாகிய சுருதியாகவே இருக்கிறது. அதை வெளிப்படையாக உணர்த்தும் பொழுது சுருதியை விளம்பிச் சொல்லுவதால் மீச்சுருதி யாகிறது. அந்த மீச்சுருதியை மீண்டும் விரித்து சொல்லும் பொழுது அதற்கு உபநிழலறம் என்று கூறப் பெறும். இந்த உயிர்த் துடிப்பாகிய மூன்றும் அகத்தில் முதற் பொருளோடு ஒன்றி பேதமில்லாமல் இருக்கும் காலத்தை கடந்து அகப்புறமாகவும். புறமாகவும். புறப்புறமாகவும் அமைந்த நிலையில் அகப்புறத்தில் சுருதியாகவும். புறத்தில் மீச்சுருதியாகவும். தோன்றி நின்ற உயிர்ப்பொலி இவ்விரண்டும் கடந்த புறப்புறமாகிய நிலையில் உபநிழலறம் என்று பேசப்படுகிறது. ஆதியில் ஒன்ருக இருந்தது ஒரு ஆதாரத்தைப் பற்றி மீச்சுருதியாகி புறப்புறமாகிய வெளியிற் செல்லுங்கால் ஒன்று இரண்டாகி சுருதி மீச்சுருதியின் சாயையை பொருந்தி வேதம் ஆக தோன்றலால் உபநிழலறம் எனப் பேர் பெறும். இதை வடநூலில் ஸ்ருதி. இஸ்மிருதி. உபநிஷத் என்று கூறவர். நாம் வேத விளக்கம் கூறம் பொழுது இம்மூவகையையே எழுதாக்கிளவியாகக் காட்டுகிறேம். இதைத் தெளிவாக திருமுறைப் பெருநூல் விளக்கத்தில் காணலாம்.

"மொழி யுளத்தா லறியாச் சிவவுணர்வாற்
றனிஇயன் மறைமுன் சாவாக் கல்வியாய்
ஐந்தக் கரத்தால் அமையுந் தமிழ்மொழி
ஒலிவடி வாகி யுலவம் அநாதியில்" என்று கூறப் பெறுகிறது.

வேத விளக்கத்திற் தோன்றிய சாகை ஆயிரத்து நூற்றி எண்பதும் அண்டத்திலும் பிண்டத்திலும் மறைக் காயம் கொண்டு விளங்கும் வேத புருஷனின் அங்கத்திலும் எவ்வாறு தோன்றுகிறது என்பதைப் பார்ப்போம்.

ஶ்ரீ

Koviloor Digital Library

உலக மக்கள் அனைவருக்கும் முதற்பொருளாகிய இறைவன் அருளிச் செய்தது வான மண்டலத் தோற்றங்களாகிய இராசி கோள் நாள்மீன் ஆதியெனவும் அவற்றின் சஞ்சார கதிகளுமே யாகும். அதில் வான மண்டலத் தோற்றம் எழுதும் சொல் எனவும் அதன் சஞ்சார கதி எழுதாக் கிளவியாகவும் கொள்ளத்தகும். இதையே திருவள்ளுவர் "அந்தரத்தில் ஒரு புதுமை யருளும் சொல்லி" என்று குறிப்பிடுகிருர். வான மண்டலத் தோற்றத்தையும் அதன் சஞ்சார கதியையும் கணித்து தெளிந்து அதன்படி அகத்திலும் அண்ட பிண்ட தோற்றத்திற்குச் சரியாக இயையச் செய்த நூற்களாகிய வேத வேதாந்த சித்தாந்த ஆகமங்களிலும் அமைவுகண்டால் அந்த நூற்கு நற்சாட்சி பத்திரமோ சிறப்புப் பாயிரமோ ஒருவரும் தரவேண்டியதில்லை. காரணம் முதற்பொருளே சிறப்பாயிரம் தந்துள்ளார். அண்ட பிணட தோற்ற ஞானசாதன விளக்கத்திற்குப் புறம்பாக எந்த நூல் இருந்தாலும் அது யார் செய்ததாக இருந்தாலும் பெரியோர்களாலும் இறைவனுலும் அது ஒப்புக் கொள்ளப் படமாட்டாது: ஆனது பற்றியே திருமுறைப் பெருநூல் விளக்கத்திற்கு இவ்வாருன உரை கூறப்பெறுகிறது என்று அறிக.

"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே". என்பது ஆகமம்.

அவ்வாறு பார்க்கப் பெறும் பொழுது வான மண்டலத்து செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி இந்நான்கும் நான்மறை கோளாக அமையும். இதற்குரிய விளக்கம் வருமாறு. சூரியன் சந்திரன் ஆகிய கலைகள் இரண்டும் சேர்ந்தது சுழிமுனை. அந்த சுழிமுனை யானது உட்சுழித்து ஓர் உருக்கொண்டு சுழன்று மூலாதாரத்திற்கு செல்லுவதால் மறை எனப்படுகிறது. அதில் நான்மறையாவது சூரியன் சந்திரன் உச்ச பலத்தில் கூட செவ்வாயும். சந்திரன் சூரியன் தன்னிலைக் கொண்டுள்ள நிலையில் கூட புதனும் சூரிய சந்திரன் நீச்ச நிலைப்படும்நிலையில் கூட வியாழனும். சூரிய சந்திரனை நீச்ச நிலைப்பாடுறுத்தும் சனி. ராகு. கேது கூடலில் சுக்கிரனும் தோன்றும். ஆகையால் இந்த நான்மறைக்கு கோள்களும் நான்மறைக் கோளாகின்றது. நான்மறையில் தவளாகரம் என்னும் ருக்வேதத்திற்கு (உ௰க) 21 சாகையும். தத்த உரியம் என்னும் யசூர் வேதத்ற்கு (௱கூ) 109 சாகையும். பூவூடியம் என்னும் சாம வேதத்திற்கு (சு) 1000 ஆயிரம் சாகையும் வாமம் என்னும் அதர்வண வேதத்திற்கு ஐம்பது (ரு௰) 50 சாகையும் ஆக ஆயிரத்து நூற்றி எண்பது சாகைகள் வான மண்டலத்தில் தோன்றும் வகையை கூறுவோம்.

Koviloor Digital Library

இது கோள் நிலைத் தானமாகிய ராசியில் மேற்கூறிய மறைக்கோள்கள் நான்கிற்கும் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய நான்கும் இடமாக அமையும்.

செவ்வாயினுடைய வீடாகிய மேடத்திலிருந்து உபய ராசியாகிய மிதுனத்தைக் கணக்கிடம் பொழுது அசுபதி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் இரண்டாம் பாதம் வரையிலும் எண்ணிப் பார்க்கும் பொழுது பதினெட்டு (௰அ) 18 பாதங்களாகும். இதற்குள் அடங்கிய கோள்கள் செவ்வாயும் சுக்கிரனும் ஆக இருபது 20 (உ௰). மிருகசீரிடத்தில் மற்றும் இரண்டு பாதங்கள் மிதுனத்தில் இருப்பதால் அந்த இராசி ஒன்றையும் கூட்ட தவளாகரமாகிய ரிக்வேத சாகை (உ௰க) 21 இருபத்தி ஒன்ருக அமைவது காணப் பெறும்.

அடுத்த படியாக தத்தவுரியம் என்னும் யசூர் வேதச் சாகையை அளவிடும் போது மேசம் முதல் சிம்மம் ஈருகவுள்ள நட்சத்திர பாதங்கள் (சா௰ச) நாற்பத்தி நாலு 44. கோள்கள் செவ்வாய், வெள்ளி, புதன், சந்திரன், சூரியன் ஆக (ரு) ஐந்து. அதற்குரிய திசா வருஷங்கள் முறையே (எ) 7, (உ௰) 20, (௰எ) 17 (௰) 10, (சு) 6. ஆக மொத்தம் 44+5+7+20+17+10+6=109. இதுவே வான மண்டலத்தில் காணப் பெறும் தத்த உரியம் என்னும் யசூர் வேத சாகை (௱கூ) 109. தவளாகரம் என்னும் ரிக் வேதத்திற்கும் தத்தவுரியம் என்னும் யசூர் வேதத்திற்கும் சாகைகள் கணித்து கண்டது போன்று பூவூடியம் என்னும் சாம வேதத்திற்கும் காண்போம்.

சாம வேதத்திற்குரிய சாகைகள் ஓராயிரமாகும். (௲) 1000. இப்பொழுது பார்க்க வேண்டிய இராசி தனுசு. தனுசில் நிலை கொண்டு விளங்கும் நட்சத்திரத்திற்கு மூலம் என்று பெயர். மூலம் மேல் மூலம் என்றும் கீழ்மூலம் என்னும் எதிர் எதிர் உள்ள இரண்டு துருவங்களை போன்றது. அதில் கீழ் மூலம் தனுசு இராசியில் இடம் கொண்டு விளங்கும். மேல் மூலம் மிதுன ராசியாக திருவாதிரை நட்சத்திரத்தை தனதாய் கொண்டு விளங்கும். இவ்விரண்டும் சூரிய சந்திர கதி மாற்றத்தைக் கொண்டு தட்சிணயனம் எனவும் உத்தராயணம் எனவும் பேர் பெறும். அதில் சூரியன் பனிரெண்டு (௰உ) சந்திரன் பதினுறு (௰சு) என்னும் இயலின்படி திருவாதிரைக்கும் மூலத்திற்கும் இடைப்பட்ட பனிரெண்டு நட்சத்திரங்களாகவும். மூலம் முதல் திருவாதிரை வரை அபிஜித் நட்சத்திரத்தைக் கூட்டி பதினுருகவும் அமைவன காண்க. மேல் மூலம் கீழ் மூலம் ஆகிய இரண்டும் உயிர்நிலைத் தானங்கள். உயிர்நிலை கோள் குரு. இவைகளைக் கொண்டு அறியும் சிறப்பியல் அயனசரம். அயனசரத்தில் ராசி (௰உ) பனிரெண்டாக இருப்பினும் சரம், திறம், உபயம் என்ற மூன்றைக்

Koviloor Digital Library

கொண்டு நான்கு அவித்தை தானங்களை அடையும் பொழுது பனிரெண்டாகி சரம் (௪) திறம் (௪) உபயம் (௪) நான்காக நடைபெறுங்கால் ஒரு இராசிக்குரிய ஐந்து (௫) நாழிகை இருபது நாழிகையாகும். அந்த இருபது நாழிகைக்கு ஆதாரமாய் உள்ள ஐந்து நாழிகை மனித ஆயுளின் எல்லையாகிய நூறு ஆண்டுகளைக் காட்டும். நூறு ஆண்டுகளில் தசா நாதம் ஒன்றும் தசா நாதனின் ஆதிக்கத்தில் நடை பெறும் புத்திகள் ஒன்பதும் ஆகிய பத்தும் இடங் கொண்டு விளங்கும். இந்நிலையில் இதன் உட்பிரிவு நூற்றி பத்து ஆயிரமாக அமையும். இந்த ஆயிரமே பூவூடியம் என்னும் சாம வேதத்தின் சாகை (௲) 1000 ஆயிரமாக அமையும்.

இவ்வாறே வாமம் என்னும் அதர்வண வேதத்திற்குரிய சாகை ஐம்பதனை (௫௰) வான மண்டலத்தில் பார்க்கும் பொழுது அதற்குரிய ராசி மீனம். மீனம் பனிரெண்டாவது இராசியாயினும் லக்கின ராசியையும் சேர்க்கும் பொழுது பதிமூன்ருகும். கோள் 9 (௯) இவற்றிற்குரிய நட்சத்திரங்கள் அபிஜித்துடன் இருபத்தெட்டு (௨௰௮) ஆக மொத்தம் 50 ஐம்பது. இவைகளே வான மண்டலத்தில் காணப்பெறும் அதர்வணவேதச் சாகை ஐம்பது (௫௰) ஆக மொத்தம் (௲௱௮௰) 1180 ஆயிரத்து நூற்றி எண்பது சாகைகள். இது அண்டத்திற் காணும் வேத சாகையின் தோற்றம். இதில் தவளாகரமென்னும் ருக் வேதச் சாகைக்குப் பார்த்தது போன்று மற்றவற்றிற்கும் பார்க்காமல் மாறுபாடாக பார்க்கப் படுகிறதே என்ருல் ரிக்வேதம் வெளி நோக்கைக் கொண்டது. ஆகையால் மேற்போக்காகப் பார்த்தோம். தத்தவுரியம் என்னும் யசூர் வேதம் வெளிநோக்கில்லாமல் ஆதார நிலையில் பார்க்கப் பெறுவன வாகையால் அதன்படி பார்க்கப் பெற்றது. பூவூடியம் என்னும் சாமவேதம் சமம் சமமாக பகுத்துப் பார்க்க பெறுவனவாகையால் அயனசரமாக பகுத்தும் அதனுள் ஆதார சர நாழிகையாக ஆக்கியும் பார்க்கப் பெறுகிறது. வாமம் என்னும் அதர்வண வேதம் பூதிகாதாரமாக காணப் பெறுவன வாகையால் அவ்வாறே ராசி கோள் நாள்மீன் ஆதியனவாகக் காணப் பெறுகிறது என்று அறிக. இதில் கோள்கள் ஒன்பதாக இருக்கும் பொழுது செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி ஆகிய நான்கு கோள்களை மட்டும் நான்மறைக் கோளாகக் கணிப்பானேன் என்பதற்கு விளக்கம் முன்பே கூறியுள்ளோம். இதற்குரிய நான்மறைக் கோள்கள் ராசிகள் ஈண்டு கூறியனவேயாம். என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைவன பஞ்ச பட்சிகளேயாகும். பஞ்ச பட்சி வித்தை எளிதில் புலனுகாத ஒரு மாபெரும் நுணுக்கமான கலையாகும். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. நமது கலைகள் அனைத்தும் வடமொழியிலும் மற்றும் பிறமொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப் பெற்றிருக்கிறது. ஆனல் இந்த பஞ்சபட்சி வித்தை மட்டும் மொழி பெயர்ப்புச் செய்யப்படவில்லை. இதை ஐம்போக்கு என்று விட்டு விட்டார்கள். அதுவே ஹம்பஃ என்ருயிற்று. இந்த ஐம்போக்கு வித்தை நான்மறையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Koviloor Digital Library

மறை ஒலிமயமாகி வெளியில் உலவும் காற்றை அடிப்படையாகக் கொண்டது. அவ்வாருன தன்மை உடைய பிராணி பறவை யினமே யாகும். அப்பறவையில் வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்பன வேத வேதாந்த விளக்கத்திற்குரியனவாக அமையும். வல்லூறு உச்ச நிலையில் செல்லும் இயற்கை வுடையதாய் வான மண்டலத்தினின்றும் கதி கொள்ளும் தன்மை யுடையதாய் ஐந்தொழில் உண்டி என்னும் தொழிலுக்குரியனவாய் இருப்பதால் செவ்வாய் என்னும் கோளுக்கும் அதற்குரிய ரிக் வேதத்திற்கும் எடுத்துக் காட்டாக அமையலுற்றது. அதற்கு அடுத்தது தத்தவுரியம் என்னும் யசூர் வேதம். அதற்குரிய பிராணி ஆந்தை. ராசி கன்னி. கோள் புதன் தொழில் நடை. நடை கொள்வன காலின் இயற்கை. கால்வெளியின் நின்று தோன்றிய வளியே ஆகும். அந்த வளியின் இயக்கத்தைக் கொண்ட இயற்சீர் வேதம். நடையைத் தொழிலாய்க் கொண்ட பறவையாகிய ஆந்தையின் இயலில் அமைவன காண்க. அடுத்தது பூவூடியம் என்னும் சாம வேதம். இதற்குரிய பறவை காகம். தொழில் அரசு. கோள் வியாழன். சேகரமாக வாழும் இயலிலும் மற்ற பறவைகளைப் போல் காட்டில் சஞ்சாரம் செய்யாமல் நாட்டிலேயே இருப்புக் கொள்ளும் இயலிலும் காக்கும் தொழில் குறிப்பையுடைய "காகா" என்று ஒலிக்கும் இயலினும் தேடி உண்ணுமல் தெற்றியுண்ணும் இயல்புடைமை யாலும் காகம் அரசு என்பதை உணரலாம். இதற்குரிய இராசி தனுசு. சாம வேதம் பகுத்து பகுத்துப் பார்க்கும் இயல்புடையது. காகமும் பகுத்துண்ணும் இயலில் மகிழ்வுடையது.

அடுத்தபடியாக காண வேண்டியது வாமம் என்னும் அதர்வண வேதம். அதற்குரிய பறவை கோழி. தொழில் துயில். இராசி மீனம். கோள் சுக்கிரன். அதர்வண வேதம் உக்கிரமான மந்திரங்களைக் கொண்டது. கோழியும் கொடுமையாய் கொக்கரித்து எதிர்க்கும் இயல்புடையது. ஆராவாரிக்கும் இயல்புடையது. துயில் கொள்ளும் இயல்புடையது.

இவற்றை பிண்டத்தில் பார்க்கும் பொழுது ஞானசிரியன் உணர்த்தியபடி வெளிவளி ஒலியுண்டாகும். சாதனம் செய்ய அந்த சாதனம் சிக்கலின்றி பலிதமாகும் பொழுது தசவித நாதங்கள் தோன்றும். அந்த நாதங்கள் தோன்றுகின்ற வாயில் செவிவாய் மூக்கு கண் என்பனவாக இருக்கும். அந்த நாதத்தின் வகையை திருமூலர்

"மணிகடல் யானை வளர்குழல் மேகம்
மணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங் கடாமிவை பத்தும்
பணிந்தவர்க் கன்றிப் பார்க்க வொன்குதே."

Koviloor Digital Library
என்று கூறுகிறர். இவற்றை நாலவகை வாயிலினும் வகை தொகை செய்து பார்க்கும் பொழுது முற்கூறியவாறு 1180 (௲௱அ) சாகைகளும் ஒலிக் கதிர்களில் தோன்றும். அதில் செவியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை ரிக் வேதம் என்றும், வாயை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை யசூர் வேதம் என்றும், நாசியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை சாம வேதம் என்றும், கண்களை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை அதர்வண வேதம் என்றும், வகுக்கப் பெறுகிறது. செவியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி மேகம் கடல் பேரிகை. இவை ஒவ்வொன்றின் ஒலிக்கதிர்கள் (எ) ஏழாக இருக்கும் ஆக மூவேழு இருபத்தி ஒரு ஒலிக்கதிர்கள் இருபத்திஒரு சாகை.

வாயை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி மணியும் குழலும். இவை தாளம் முப்பத்தைந்து (35) (௩௰௫) ஓசை ஒன்று மேளம் எழுபத்திரண்டு (எ௰உ) 72 ஒலி ஒன்று ஆக (35+1+72+1) = 109 நூற்றி ஒன்பது ஒலிக்கதிர்கள் யசூர் வேத சாகை 109 ஆக இருக்கும்.

மூக்கை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி யானை, சங்கு, வண்டு, தும்பி இவற்றின் ஒலியாக முறையே பத்து நூறு ஆயிரம் ஒலிக் கதிர்கள் சாம வேத சாகை ஆயிரமாக இருக்கும்.

கண்களை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி யாழ். அது ஏழேழ் நாற்பத்தொன்பது (49) ஏழால் ஒன்னு ஆக (1) ஆக (ரு௰) ஐம்பது ஆக அதர்வணச் சாகை இருக்கும்.

இதை மறை காயம் கொண்டுள்ள வேத புருஷனின் புயமாகப் பார்க்கும் பொழுது அப்புயம் இடம் வலம் நடு என்னும் மூன்றை கொண்டு விளங்கும். அந்த மூன்றும் வன்மை மென்மை இடைமை ஆக காணும். அது வல்லின எழுத்து ஆறுகவும் ஆக மெல்லின எழுத்து ஆறுகவும் இடையின எழுத்து ஆறுகவும் ஆக பதினெட்டாகி உயிர்க்கலை எழுத்து எஃ ஆகிய மூன்றுடன் இருபத்தொரு சாகைக்கு இருபத்தொரு எழுத்தாய் நிற்கும். இது ரிக் வேத சாகை. இவ்வெழுத்தால் நடைகொள்ளும் பூதபூதிக எழுத்து (5+7 = 12) (ரு+எ = ௰உ) பனிரெண்டின் பெருக்கம் இருநூற்றி பதினறுகும். (உ௱௰சா). அவ் இருநூற்றி பதினறில் குறில் நெடிலாகிய இயற்கைப் படி நோக்க எழுத்து நூற்றி எட்டாகும் (௱அ). அதில் விந்து எழுத்தைக் கூட்ட நூற்றி ஒன்பதாகிறது. இது யசூர் வேதச் சாகை. இந்த எழுத்துக்களை ஒலிக் கூட்ட சொல் எல்லையின்படி நோக்க சொல் எழுத்து ஒன்பதாகவும் சொல் ஒன்றுகவும் ஆக பத்து ஆக விளங்கும். இப்பத்தும் தலைப்பட்டு வரும் சொற்கூட்டம் நூறில் எழுத்து எண்ணிக்கையைக் கூட்ட

Koviloor Digital Library

ஆயிரம் ஆகும். இது சாமவேதச் சாகை ஆயிரம். இவ்வெழுத்துக்களுக்கு வித்தெழுத்தாகிய திருஐந்தெழுத்தும் அவ்வத்தெழுத்தின் விளை- வெழுத்தாகிய ஐந்தும் தனித்தனி உறழ்ச்சிப் பெருக்கம் இரண்டு இருபத்தைந்து சேரும் பொழுது (50) (ருப) ஐம்பது ஆகி நிற்கும். இது அதர்வணச் சாகை ஐம்பது ஆக வேத புருடனின் இதய செயற்பாட்டு நூலமாக விளங்கும். ஈண்டு அண்டத்திலும் பிண்டத்திலும் வேத புருஷன் அகத்திலும் ஆக ஆயிரத்து நூற்றி எண்பது (1180) (க/ராஅ0) சாகைகள் அமைவன காட்டினோம்.

அடுத்தபடியாக வேத புருஷனின் அங்கங்களில் தொடை ஆகிய நிறுத்தம் என்னும் ஒடுக்கம் ஐந்தையும் காண்பாம். தொடையானது பாதம், கணைகால், முழங்கால், புட்டம் என்ற நான்கையும் கொண்ட ஒன்றாக விளங்குவது தொடை. இது வான மண்டலத்தில் 3, 6, 8, 12 (ந) (சா) (அ) (0உ) ஆகிய நான்கையும் கொண்ட ஒன்றாகிய லக்கினமாக அமையும். இவைகளே ஆயட்கால எல்லைக்குரிய கண்டாங்கள். பிண்டத்தில் பார்க்கும் பொழுது பாலப் பருவம், பாலியற் பருவம், யவ்வனப் பருவம், விருத்தப் பருவம் இந்நான்கையும் அடையும் குழவிப் பருவமாக அமையும். வேத புருடனுடைய தொடை நிறுத்தம் என்னும் ஒடுக்கம் 5 (ரு) ஆகக் காணும் பொழுது ஆயிரத்து நூற்றி எண்பது சாகையாய் விரிந்து நின்ற நான்கு வேதங்களின் ஒடுக்கம் மந்திரமாக அமையும். மந்திரமானது தேவர், சந்தோப விசிதி என்னும் சந்த உற்பவ சீர் புராணம் காயத்திரி அனுஷ்டுபூ என்னும் அனுட்டிப்பூ என்னும் ஐந்தமாம். தெய்வம், ஒலி, கலை, உரு, தொழில் ஆகிய ஐந்தாகி வேத புருஷன் ஏவல் செய்வதற்கு இறைவன் அருளிய நடைமுறை வலிமை உறுப்பாக காணப் பெறும்.

வேத புருஷனின் ஐந்தாவது அங்கமாகிய சோதிடம் என்னும் (சோ.ஒ.இடம்) (இச்சை-ஒது-இடம்) கீழ்கணக்கு (கூ) 9 ஒன்பது பாதமாக அமையும். இது வான மண்டலத்தில் நவக் கோள்களின் பாதசாரமாக அமைந்து காணும். பிண்டத்தில் தற்கால நன்மை தீமையைக் காட்டும் குறியாக சலன ரேகைகளால் காணப் பெறும். இவ்விரேகை பாதத்திலும் அமையப் பெறும். இதற்கு சிறப்பிடம் பாதம். வேத புருடனின் அங்கத்தில் பார்க்கப் பெறும் பொழுது இச்சை-ஒது-இடமாகிய அற்புத பதிகங்கள் ஆகி மேற்கணக்கு அண்டி நிற்கும் கீழ்கணக்காக காணும். இது வேத புருடனின் பாதம்.

அடுத்தபடியாக கற்பம் என்னும் மெய்வளமாம் மேளம் என்னும் (எ0உ) 72 எழுபத்திரண்டு பெயர்த் தொகையமைந்த ஆதார

Koviloor Digital Library

பிண்டத்தைப் பார்ப்போம். ஈண்டு சொல்லி வந்த வேத வேதாந்தங்களில் சிட்சை, வியாகரணம், சந்தசு, நிறுத்தம், சோதிடம் என்னும் சூக்கம், மேற்கணக்கு எழுதாக்கிளவி, ஒடுக்கம், கீழ்கணக்கு ஆயவைகள் முறையே (௰௨) 12, 9(௯), 3(௩), 5(௫), 9(௯) ஆய எண்ணிக்கைக்குள் அமையும். அதில் மேற்கணக்கு கீழ்கணக்கு ஒன்பது ஒன்பதாக இருந்தாலும் உண்மையில் எல்லாம் கூடிய ஒன்ருகிய பண்தாரை நீக்கிப் பார்க்கும் பொழுது அவ்விரண்டும் எட்டெட்டாகவே நிற்கும். இவை எல்லாம் கூடிய தொகை (12+8+3+5+8) 36 (௩௰௬) முப்பத்தாறு ஆக அமையும். இந்த முப்பத்தாறு சூக்குமம். சூக்குமத்தைக் கொண்டு செயல்படும் காரணம் 36 (௩௰௬) முப்பத்தாறு. இந்த சூக்கும காரணங்களைக் கொண்டு செயல்படும் கற்பம் என்னும் மெய்வளமும் (௩௰௬) முப்பத்தாருகவே யிருக்கும் ஆக இம் மூன்று முப்பத்தியாறு கூடிய எண்ணிக்கை (௱௮) நூற்றி எட்டாக அமையப் பெறும். ஆகவே உரு ஏற்றுதல் என்னும் மந்திர எண்ணிக்கைக்கு நூற்றி (௱௮) எட்டை உருவாகக் கொள்ளப் பெறுகிறது. இதில் பண்ணின் திறங்கள் முப்பத்திரண்டு (௩௰௨). யாழ் நான்கு (௪) ஆகிய முப்பத்தாறு (௩௰௬) சூக்குமம். அவற்றினுள் இராகங்கள் முப்பத்திரண்டும் சந்தம், பதம், கானம், லயம் ஆகிய நாலுடன் கூடி முப்பத்தாறு சூட்சும காரணமாக நிற்கும்.

இந்த சூட்சும காரணத்தை அடிப்படையாகக் கொண்டு தூலமாக முப்பத்தாறு எழுத்துக்களைக் கொண்டு நூற்பா அமையும். இந்த நூற்றி எட்டும் கொண்ட உருவான சரீரத்தை யுடையவனுல் வேத புருஷன் வேதியர் சொல்லும் கட்டளையை மேற்கொண்டு பணிபுரியும் ஏவலனுக நிற்பான். அவனுடைய இயற்ருெழில் முதற்பொருளை தேடிக் கொண்டே இருப்பதாகும். இதில் சூக்கும் காரணம் ஒன்று கூடிய எழுபத்திரண்டை (௭௰௨) 72. மேளகர்த்தா இராகம் என்று கூறுவர். மெய்வளம் என்பதே மேளம் என்ருயிற்று. இசைக்கக் கற்பதால் கற்பம் என்று பெயர். இது அண்டத்தில் ராசி பனிரெண்டையும் கோள்கள் ஒன்பதையும் சார்ந்து நிற்கும். நாள்மீன் இருபத்தி ஏழின் பாதம் நூற்றி எட்டாக காணப் பெறும்.

இது பிண்டத்தில் தத்துவம் தொண்ணூற்ருரைக் கொண்ட (96) (௯௰௬) இயற்கையுடைய ஒரு மனிதனை ஞானசிரியன் உபதசம் என்னும் பனிரெண்டாய் நிற்கும் கலையை கொடுத்து அருள்பாலிக்கும் பொழுது நூற்றி எட்டாக அமைந்து காணும்.

நான்மறை ஆறங்க விளக்கம் நிறைவுற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

பண் : தக்கராகம்

தக்க	ராகம்	எனச்சாற்று	சங்கேதம்
ஆம்முது	மொழிச	அனுகிற	அகம்எனும்
நுதலி	புகுதலின்	நுழைந்து	சிட்செய்
சூக்கம்	ஈராறில்	தோன்றி	நிற்கும்
வியாகர	ணம்எனும்	மேற்கணக்கு	கொன்பதிற்
சார்ந்த	இசைவாம்	சந்தசு	என்னும்
எழுதாக்	கிளவி	மூன்றுஇசைக்கும்	சுருதி
மீச்சுரு	தியில் விளங்	கும்இயல்	இசை
நாடகம்	மூன்றுய்	நவில்வதில்	இரண்டுள்
நிறுத்தம்	என்னும்	ஒடுக்கம்	ஐந்தில்
விவித	மாக	விரிந்து	நிற்கும்
உபநிழல்	இதாம்என	ஓதும்	நாடகம்
விளங்க	அமைத்து	விரிப்போம்	காண்க.

திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதற்றிரு முறையில் இரண்டாவது பண்ணுகிய தக்கராகப் பண் ஏழு கட்டளைகளைக் கொண்டதாய் விளங்குகிறது. அதில் தக்கராகம் என்னும் பெயர்க் காரணம் கூறுதும்.

தக்கராகப் பண் இலக்கணம்

தக்கவ	ளிராகத்	தவளத்	தளமடற்
றுமறை	என்னத்	தகுவெண்	சீறடி
யாப்பில்	யாழில்	யாழ்யாப்	பிடையில்
யாழ்யாப்	பெதிர்வில்	யாழி	னிடையில்
தழுவி	வந்தது	தக்க	ராகம்.

அடுத்தபடியாக ஏழுகட்டளை உடைய தக்கராகப் பண்ணிற்குரிய கட்டளைத் திறங்கள் ஏழு. அவைகள் செந்திறம். குறிசீர் திறம். ஆற்று படுதிறம். படுதிறம். ஆற்று திறம். மெயத் திறம். அயிர்ப்புத்திறம்

(க) வினைகள் நீங்க மேற்கோள் வாழ்வை அடையக் காட்டும் திறம் செந்திறம்.

(உ) குறிப்பிட்டு ஒன்றைக் கூறி அதற்கு அவர் போல் ஆம் என அறிவிக்கும் திறம் குறிச்சீர் திறம் எனக் கொள்ளலாகும்.

Koviloor Digital Library

(ரு) ஆற்றுப்படும் அத்தன்மையை விளக்குவது ஆற்று படுதிறம் ஆகும் என்ப.

(ரு) நெஞ்சில் படும்படி நிகழ்த்தல் படுதிறம்.

(ரு) இறைவழிபாடு இவ்வாறு செய்து சார்வோம் நாம் எனச் சாற்றல் ஆற்றுத்திறம்.

(ரு) சத்தியம் தவரு தன்மையை காக்க கொடிய விஊைவக் கொல்லும் இயல்பை அதிர்வுற கேட்கும் அடிகள் தம்மையே விவரித்திடுவது மெய்திறம் ஆகும்.

(ஏ) மங்கை மகிழ மன்றுள் ஆடும் இறைவர் மற்றும் ஓர் ஏழை வாட்டம் கண்டு கொண்டிருப்பது கவின் உடைத்தாகுமோ எஒ என்ன இசைத்தல் அயிர்ப்புத் திறம்.

மேற்கண்ட வாறுள்ள தக்க ராகப்பண்ணும் அதன் ஏமு கட்டஊகளும் அமைந்துள்ள காரணத்தை ஒலி வழிமொழியும் மறைநூல் விளக்க முறைப்படி உணரும் பொழுது அது தவளாகர மென்னும் ருக் வேதமாக இருக்கிறது. அதன் விபரத்தை முறைப்படி பார்ப்போம். அப்படி பார்க்கும் திருமுறை பாஞ்சராத் திறம் என்னும் பஞ்சரத் திறமும் வைகா நசம் என்னும் வைகா நேயமும் ஆகிய இருவகை வைணவ ஆகமத்துள் முதலாவதாகிய பஞ்சரத் திறத்தில் மூன்ருவது சூத்திர இலக்கணத்திற்கு இலக்கியமாக இந்த தவளாகரம் அமையும்.

"அம்பறம் என்னும் அகண்ட வெளியில்
விளங்கும் சித்தெனும் விந்துவை நாதம்
என்னும் சத்தி இயைந்து நோக்க
அச்சித்தம் பரத்தில் திருநடம் ஆகும்."

என்பது சூத்திரம்.

இருக்கு வேத மென்னும் தவளாகரச் சுருதி

தக்கரா கப்பண் சத்தியாம் நாதம்
என்னக் கட்டஊ ஞ்வகைத் தாய்அச்
சத்தத்திற் றேன்று தவள வெளியென
வியன்சீர் தோன்றி வியன்சீர் வெளியில்
மலர்த்தாள் நடன மாடுந் திறத்தேழ்
தாளமுந் தோன்றத் தாரங் கைக்கிஊ
தமுவும் ஒலியிற் ருளப் பிரியையாய்ச்

Koviloor Digital Library

இந்த சூத்திரம் எழுதாக் கிளவி என்னும் சந்தசு மூன்றில் இயல் என்னும் சுருதியை விளக்குகிறது. "தக்கராகப்பண் சத்தியாம் நாதம்" தக்கராகப் பண்ணுனது நாத உருவாகிய சத்தியென்னும் படியாக "என்னக் கட்டளை ஏழ்வகைத்தாய்" ஏழ்வகை கட்டளைகளைப் பெற்று "அச்சத்தத்திற் றேன்றும் தவளவெளியென" ராகத்தினுல் இடம்கொண்டு விரியும் மாசற்ற வெளி என்னும் படியாக "வியன்சீர் தோன்றி வியன்சீர் வெளியில்" சீரில் முற்பட்டதாக வெண்சீர் தோன்ற அந்த வெண்சீரில் இடம் கொண்டு நிற்கும் பரப்பின்" மலர்த்தாள் நடன மாடுந் திறத்தேழ் தாளமுந் தோன்றத்" திருமலரடியானது நடம்புரியும் கூறுபாட்டால் ஏழ்வகை தாளமும் தோன்ற "தாரங் கைக்கிளை தழுவும் ஒலியிற்" நாசியைப் பற்றி அண்ணுக்கின் இடத்தில் "தழுவும் ஒலியிற் றளப் பிரியையாய்ச்" மருவித் தோன்றும் இசையில் தாளப் பிரியையாக என்னும் சுருதிக்கு மீச்சுருதி

மீச்சுருதி

சத்த	மாதரும்	தாளமும்	வெளியெனும்
தவளா	கரத்திற்	சமைந்து	நின்ற
இருக்கு	வேதமும்	இலங்கக்	கொண்டு
தூக்கிய	திருவடி	துலங்கு	வடிவும்
ஆக்கற்	றெழிலும்	அதிகார	ஓசையும்
ஆக	நகாரம்	அமைந்து	நிற்கும்.

"சத்த மாதரும் தாளமும் வெளியெனும்" ஏழ்வகை எழில் மங்கையரும் தாள ஒற்றும் வியோம நிலையும் ஆகிய "தவளா கரத்திற் சமைந்து நின்ற" வெள்ளொலிப் பிரபையில் இயல்பாய் அமைந்து நின்ற "இருக்கு வேதமும் இலங்கக் கொண்டு" பூதாதியின் எல்லையாகிய மறையும் விளக்கம் கொள்ள "தூக்கிய திருவடி துலங்கு வடிவும்" எடுத்த திருப்பாதம் எழிலுடன் காணும் உருவமும். "ஆக்கற் றெழிலும் அதிகார ஓசையும்" படைப்புத் தொழிலும் வல்லிசை ஒலியும் "ஆக நகாரம் அமைந்து நிற்கும்" பொருந்தப் பெற்று திருஐந்தெழுத்தில் முதலாவதாகிய 'ந' காரம் என்னும் அக்கரம் அமைவுபெறு நிலை கொள்ளும். இந்த நகாரத்தில் லயங் கொண்டு தோன்றும் தவளாகரமாகிய இருக்கு வேத சுருதி மீச்சுருதியில் தோன்றும் தெய்வம் என்னும் தேவர் சத்தமாதர்கள். ஒலி என்னும் சந்த உற்பவசீர் (சந்தோப விசுதி) தாரங் கைக்கிளை தழுவ தோன்றுவது. கலையென்னும் புராணம் தவளாகரம் என்னும் இருக்கு வேதம். உரு என்னும் காயத்திரி தூக்கிய திருவடி. தொழில் என்னும் (அனுஷ்டிபூ) படைப்பு.

ஈண்டு கூறிய சுருதி மீச்சுருதிக்கு உபநிழலறம். இது சத்திய உபநிழலறம் எனப் பெயர் பெறும்.

Koviloor Digital Library

அமைந்து நிற்கும் ஐவகைப் பூத அடுக்கில் ஐந்தா வதாகலான்ஐந்தாம்

எண்ணின்	எழுத்தால்	இலங்கும்	'ரு' எனும்
வெளியாம்	இருக்கில்	விரிந்த	சாகை
ஒன்று	மூர்த்தம்	இரண்டு	சராசரம்
மூன்று	காலம்ஆய்த்	தோன்ற	நிற்கும்
தாரகை	யொன்று	சத்துசித்	திரண்டு
தீயொரு	மூன்று	திக்கு	நான்கு
பூதம்	ஐந்திவ்	வீதம்	கூடிய
இருபத்	தொருவகை	யுருவாய்த்	திகழ

இதற்கு ஞானபாகை விளக்கம் வருமாறு.

ஞானுசிரியன் உபதேசித்தபடி சாதனம் செய்யுங்கால் தோன்றுகின்ற தசவித நாதத்தில் பேரிகை, மேகம் தரும் இடி ஒலி, கடல் ஆய இவற்றின் மூவேழு ஒலிக்கதிர்களே தவளாகரம் என்னும் ரிக் வேதமாகவும், சாகை இருபத்தொன்ருகவும் (உ௰௧) காணப் பெறும். இதற்குரிய அர்த்த பாகை வருமாறு.

"அமைந்து நிற்கும் ஐவகைப் பூத அடுக்கில்" சமைவு பெற்று நிற்கும் பூதபேத வரிசையில் **"ஐந்தாவதாகலான் ஐந்தாம் எண்ணின் எழுத்தாய் இலங்கும் 'ரு' எனும்"** நாலின் மேற்பட்ட ஒன்று ஆதலால் அவற்றிற்குரிய இலக்கக் குறியீடாகத் தோன்றும் எழுத்தாகிய 'ரு' எனும் **"வெளியாம் இருக்கில் விரிந்த சாகை"** விண்டலமாகிய தவளாகரம் என்னும் இருக்கில் பரந்து தோன்றும் சாகை என்னும் சார்கை **"ஒன்று மூர்த்தம் இரண்டு சராசரம் மூன்று காலம் ஆய்த் தோன்ற நிற்கும்"** தலைப்பட்டுத் தோன்றும் ஒன்ருகவும் அதில் தொடர்வு கொண்டு இயங்குவனவும் நிலைபெறுவனவும் ஆகிய இரண்டும். இறப்பு. எதிர்வு. நிகழ்வு. ஆய திரிகாலமுமாய் காண நிலைபெரு நிற்கும். **"தாரகை யொன்று சத்துசித் திரண்டு தீயொரு மூன்று திக்கு நான்கு பூதம் ஐந்திவ் விதம் கூடிய இருபத் தொரு வகை யுருவாய்த் திகழ"** விண்மீன் ஒன்று நாதம் விந்து இரண்டு. சோம. சூரிய. அக்கினி மூன்று. நாற்றிசை. ஐம்பூதம் ஆகிய இருபத்தொருவகை தோற்றங்களாய் விளங்க

உடுடு	டுடுடு	டுடுடு	என்ன
அண்ட	முடியில்	நின்ற	தாரைகயிலும்
நாதம்	விந்தென	நவில்இடி	மின்னலில்
இடிங்கு	தடிங்கு	எனவும்	ரவிமதி
சுடரிடை	சூசௌம்	ஃசுஃசு	என்றும்

Koviloor Digital Library

குணம்	தகுணம்	குடக்குத்	தரம்என
திக்குத்	திகந்தம்	திரிந்தும்	தரய்தரய்
தரிதரி	குஎனத்	தரணியில்	நகம்அடும்
தனுஅத்	திரிஎனச்	சைல	மதில்அள
அம்தீர்த்	தம்கிர்	ரஅம்	மென்ன
நீரில்	தகதீய்	தேய்என	நெருப்பில்
ம்ருத்	ஊதிரு	ம்ருத	க்அதரு
எனவெங்	கெங்கும்	இலங்கும்	வளியில்
மீகக	குடிசெனு	எனவெளி	தனிலிவ்
வைம்பூ	தத்தினும்	ஆய்ந்து	தேடிடத்
தேடிடச்	சங்கை	நீட	வஃதஃ
தஊனத்திலுங்	குறுக	அதுநெ	டிலாகச்
சங்கை	யதிகொள்	தாளந்	தத்தி
எனவுந்	தத்திங்	கிணதோம்	என்று
ஆழ்ந்த	நாத	மாக	வார்ந்திடும்

ரு.

"உடுடு டுடுடு டுடுடு என்ன அண்ட முடியில் நின்ற தாரகையிலும்" விண்மீனை நோக்கி உடுஉடு என்றும் "நாத விந்தென நவில்இடி மின்னலில் இடிங்கு தடிங்கு எனவும்" ஒலியும் துளியுமாய் நிற்கும் அசனி. வீசசனியில் இடிங்கு தடிங்கு என்றும். "ரவிமதி சுடரிடை சூசௌம் வ்சுவ்சு என்றும்" சோம சூரிய அக்கினியினிடத்து சூசௌம் வ்சு வ்சு என்றும். "குணம் தகுணம் குடக்குத் தரம் என திக்குத் திகந்தம் திரிந்தும்" திசையினும் திசாந்தத்திலும் குணம் தகுணம் குடக்கு உத்தரம் என அலைந்தும் "தரய்தரய் தரிதரி குஎனத் தரணியில்" நிலத்தினிடத்து தரய்த்தரிதெரி கு எனவும்

"நகம் அடும் தனுஅத்திரி எனச் சைலமதில்" சைலமெனும் மலையினிடத்து நகம் அடும் தனு அத்திரி எனவும் "அளஅம் தீர்த்தம் கீர்ரஅம் மென்ன" நீரினிடத்து அளஅம் தீர்த்தம் கிர்ரஅம் எனவும் "தகதீய்தேய் என நெருப்பில்" தீயினிடத்து தகதீய்தேய் எனவும் "ம்ருத் ஊதிரு மிருத க்அதரு எனவெங் கெங்கும் இலங்கும் வளியில்" நிலையின்றி சஞ்சாரம் செய்யும் காற்றினிடத்து ம்ருத் ஊதிரு ம்ருதக்அதரு எனவும். "மீகக குடிசெனு எனவெளி தனி" ஆகாயத் தினிடத்து மீ என்றும் கக என்றும் உடியென்றும் செனு என்றும் கூறி மயங்கியும் "இவ்வைம் பூதத்தினும் ஆய்ந்து தேடிட" பாரிடம் ஐந்தினும் ஆராய்ந்து தேடத்தேடிட "தேடிட சங்கை நீட" தேடிடுங் காலத்து எண்ணிக்கை நீளிதாக "அஃதஃ தஊனத்திலும் குறுக அது நெடிலாக" அவ்வொவ்வொன்றிலும்

Koviloor Digital Library

குறுகுங்கால் முன் குறுகியது நெடிலாக "சங்கை யதிகொள் தாளந்தத்தி" ஐயப்பாடு மிகுதி கொள்ள தாளம் தத்தி எனவும் முப்பத்திரண்டாய் நின்ற தாளஜதி சொற்கூட்டம் தத்தி எனவும் அது இது எனவும் "தத்திங் கிண தோம் என்று" அது இது இங்கென தோன்றிற்றென்று "ஆழ்ந்த நாதமாக வார்ந்திடும்" மூழ்கி நின்ற ஒலியாக நிறைவு பெறும். (உடு. இடிங்கு. தடிங்கு. சூ. சௌம். வ்சு. குணம். தகுணம். குடக்கு. உத்தரம். தரை. தரி. கு. நகம். அடும். தணு. அத்திரி. அள. அம் தீர்த்தம். கிர்ரஅம். தக. தீய். தேய். ம்ருத். ஊதிரு. ம்ருத. க்அதரு. மீ. கக. குடி. செணு. ஆக முப்பத்திரண்டு மூழ்கி நின்ற ஒலியாக நிறைவு பெறும். ஈண்டு ஞானபாகையினிடத்து கூறிய ஒலிக்கதிர் எல்லை அடிப்படையில் அர்த்தபாகையை விவரித்தோம். ஞானசாதன இல்லாதவர்களுக்கும் தவளாகரம் என்னும் ரிக்வேத செயற்பாடு புரியும் வண்ணம் கர்மபாகையும் கூறுகின்றோம்.

தவளாகரம் என்னும் இருக்கு வேதத்திற்குரிய ஒலிதரும் நிலையம் செவியாகும். அச்செவி தோலால் ஆனது. அகத்தில் ஒலியை தருவதற்கும் தெரிவதற்கும் உரிய கருவியாக தோலின் வலிமையும் தெளிவும் பெற்றுள்ள சவ்வேயமைந்திருக்கிறது. அவ்வாறு தோற்கருவி ஒன்றை அகம்புறமாக அமைத்து அதில் நாதத்தை எழுப்பிப் பார்த்தால் ஈண்டு கூறிய தவளாகர முழக்கத்தை கேட்கலாம். அம்முழக்கம் அர்த்தபாகையில் கூறிய சொற்கூட்டமாகவே காணப் பெறும். அதற்கு பொருள் விளக்கம் காணும் பொழுது வேத சூத்திரத்தில் சொல்லிய இருபத்தொரு வகை சார்கையிலும் சார்வுற்று குறில் நெடில் தோன்றும் வண்ணம் ஒவ்வொன்றிலும் குறுக முன் குறுகியது நெடிலாக அமைவதோடு அது. இது. இங்ஙனம் என்று ஓய்வுறுங்கால் தாரம் என்னும் வல்லிசைக்குரிய 'ந' காரம் காணப் பெறும். இதில் தாள ஜதி தோன்றுகின்றதையும் அது கேசாதி பாதமாக காணும் பொழுது முப்பத்திரண்டாக இருப்பதால் தாளம் என்று பெயர் வந்ததும் காண்க.

சுருதி மீச்சுருதி உபநிழலறம் என்னும் எழுதாக்கிளவி மூன்றில் அமைந்து தோன்றுவன ஒன்பது வகை அமைப்புக்களை கொண்டதாக இருக்கும். அதில் தவளாகரம் என்னும் ரிக் வேதத்தில் சாகை இருபத்தொன்றும் உருத்திரட் கணம் நூற்றி பதினெட்டும் (சாஅ) வியன் ஞால கலரும் ஆள் நவமலமும். குறில் நெடிலும். உத்திராக்க மணியும். வித்தியா தத்துவமும் காலம் நியதி ஆகிய சித்தாந்த தத்துவப் பகுதியும் நாதமும் அமைந்து நிற்க அவைகளுக்குஅதீதமாய் 'ந' காரம் தோன்றுதல் காணப் பெறும். இது உருத்திரட் பாசுபத கைவல்லிய நவநீதம் எனப் பேர் பெறும். இவ்வமைபில் நட்டபாடைப் பண்ணில் தோன்றும் துவித சித்தாந்தத்திற்கு அகச்சு எட்டு. குண்டலி சத்தி. பெத்தர். அமலம். சுருதி.

Koviloor Digital Library

காப்பு, ஆன்ம தத்துவம், கருவி, கரணுதி இருபத்திஞன்கு (உமச) கூடுலயம் என்னும் குடிலை ஆக அமைவு பெற்று துவித சித்தாந்தத்தில் 'அ' கார 'உ' கார 'ம' கார ஓங்காரம் தோன்றும்.

ஈண்டு கூறியது பூத அடுக்கில் ஐந்தாவதாகி நிறைவு பெறுகின்ற படியால் இருக்கு வேதமெனவும் அது சார்புற்று நிற்கும் பகுதி இருபத்தி ஒன்ருக (உமக) விளங்குவதால் சார்கை (உமக) என்றும் அந்த சார்கையானது ஓர் உருக்கொண்டு திரண்டு கூட்டமாக இருக்கின்றபடியால் உருத்திரட் கணம் என்றும், அதை சோதிட நூலில் பார்வையும் திசா வருஷமுமாக ஆக்கிக் காணும் போது நூற்றி பதினெட்டாக அமைகின்ற படியால் நூற்றி பதினெட்டு உருத்திரர்கள் என்றும் அவைகள் வெட்ட வெளியில் துலங்கும் ஞாலமாக இருக்கின்ற படியாலும் அதற்கு கீழாக நாம் விளங்குகின்ற படியாலும் வியன் ஞாலகலர் என்றும், அந்த வியன் ஞாலத்தவராகிய நம்மை ஆளுகின்ற ஒன்பதாக ஆகி நம் அறிவுக்கு எட்டாத மயக்கத்தைத் தருகின்ற படியால் ஆள் நவம் மலம் என்றும் அவைகளைப் பற்றி குறிக்கோள் உடையவராக ஆம் போது நெடிலாவதால் குறில்நெடில் என்றும் இதற்குரிய அடையாளப் பொருளாக காணும் இயலில் தோன்றும் பொருள் ருத்திராக்க மணியாக இருப்பதால் உருதிரள் அக்க மணி என்றும் இவைகள் அனைத்தும் உணர்ச்சிப் புலப்பாட்டிற்கு வரும் காலம் வெளியில் சுவாசம் நடைகொள்ளும் காலமாக இருப்பதால் வித்தியா தத்துவம் என்றும், மேற்கூறியவைகள் நமது காலத்தையும் நியதியையும் கணித்து காண்பதாக அமைகின்றபடியால் காலம் நியதி என்ற சித்தாந்த தத்துவமாகவும் இவைகள் அனைத்திற்கும் முதற்பொருள் ஒலி மயமாக இருப்பதால் நாதம் என்றும் இவ்வாருகிய பத்திற்கும் ஆதீதமாக தோன்றுகின்ற திருஐந்தெழுத்தின் 'ந' காரமும் காணப் பெறும். இதில் ஆள்நவம் என்பதை ஆணவ மலம் என்றும், வியன்ஞால கலரை விஞ்ஞான கலர் என்றும் சித்தாந்திகள் திரித்து கூறுவதோடு வேதத்தை விட்ட தனிப்பட்ட ஒன்ருக சித்தாந்தத்தை மாசுபடுத்திக் கூறுவர். இந்த ரிக்வேதமானது ஆகாயமாகிய வெளியை இடமாகக் கொண்டு பிறப்பதால் வெளியிற் றுலங்கும் கோள்நிலை ஆகியனவற்றை கொண்டு கணிக்கப் பெறும் சோதிட நூல் முழுதும் இதில் அமைவு பெற்று வருவனவேயாம் என்றுணர்க.

வேதம் முதல் நூலாக இருப்பதால் இதில் அமைபெருத கலைகள் ஏதும் இல்லை. அவர் அவர் அறிவாற்றலைக் கொண்டு இதன் அடிப்படையில் எல்லா கலைகளையும் உணரலாம். அப்படிக்கின்றி மொழிவரிவாக எழுதப் புகின் மனமயக்கத்தைத் தரும் ஆகையால் குறிப்புரை மட்டும் தரப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இவ்வாறு மறைநூல் முழுவதற்கும் ஒன்பது ஒன்பதாகவே பகுதிப் பொருள் அமைவு பெறும். அதனுல் நவநீதம் என்ற பெயர் இதற்கு வழங்கப் பெற்று அது திரண்ட உருவமாக விளங்கி பாச உபத்தை அதம் செய்யும் தன்மை உடையதாகி வீடுபேற்றைத் தரும் இயல்புடையதாக இருக்கின்றபடியால் இந்த நவநீதத்திற்கு உருத்திரட் பாசுபத கைவல்லிய நவநீதம் என்று பெயர் வழங்குகிறோம்.

இவ்வாறு துவித சித்தாந்தத்திற்குப் பார்க்கும் பொழுது சொல் அளவீட்டு குறியாகிய அகச்சு எட்டும், குண்டலி சத்தியும் தெய்வமும் பெற்றம் என்னும் பசுவின் தன்மை வாய்க்கப் பெறுவதால் பெத்தர் என்றும், துவிதமாய் சித்துப் பொருள் அந்தம் பெற்று விளங்கும் நிலையில் கோள்நிலை யாதியெனவற்றின் ஆள்நவம் இன்மையால் அமலம் என்றும் குறில்நெடிலாகிய ஒலி பேதமின்றி சுருதி தோன்றுவதால் சுருதி என்றும் கரு உருவாய் திரண்டு நிறைவுபெற காப்புப் பெற்று இருக்கின்றபடியால் காப்பு என்றும், வித்தியா தத்துவமாய் விளங்கும் சுவாசம் மனத்துடன் ஒன்றி ஆன்மாவைக் கூடி நிற்றலால் ஆன்ம தத்துவம் என்றும், அது கருவி கரணங்களுக்கு முதன்மையாய் நின்று (உ௨௪) இருபத்தி நான்கு பேதம் பெறுவதால் கருவி கரணுதிகள் இருபத்தி நான்கு என்றும் இவைகள் எல்லாம் ஒன்ற கூடி ஒரு லயப்பட்டு நிற்றலால் கூடு இலயம் என்று சொல்லப் பெறும் துவித சித்தாந்த உருத்திரள் பாசுபத கைவல்லிய நவநீதத்திற்கு அதீதமாய் 'அ'கார 'உ'கார 'ம'கார ஓங்காரம் தோன்றப் பெறும்.

இவ்வாறு நான்மறையில் முதன்மறையாகிய தவளாகரத்தை நடைமுறையில் உள்ள பாடலாகிய இசைவழி நடைமுறையில் பார்க்கும் போது செந்திறத்தில் நின்று ஹரிப்பிரியா என்ற ராகம் தோன்றும். அதற்குரியது ஏகதாளம். தக்கராகம் என்னும் பெயர் குறிப்பிற்குரிய பொருள் விளக்கம் கணிக்கப் பெறும் பொழுது தக்கவள் என்பது திருமகளைக் குறிக்கும். ராகம் என்பது பற்றுக் கோடாகிய பிரியத்தை குறிக்கும். தக்கவள் என்னும் திருமகள் தளம் நெடிதுடைய தாமரை மலரில் பற்றுக் கோடு கொண்டு உறைபவள் ஆகையால் தளம் நெடிதாகிய தாளப் பிரியம் என்ற சொல் எழுதாக் கிளவியாக இந்த பண்ணிற்குரிய இசையில் தோன்றுகின்றது. ஆகவே தாளம் தமக்கு வேண்டும் என்ற குறிப்பில் தக்கராகப் பண் ஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்ருர். அவர் குறிப்பின்படி இறைவன் திருஐந்தெழுத்து பொறிக்கப் பெற்ற பொற்ருளம் அருளுகின்ருர். பொற்ருளம் கஞ்சம் போன்று கணீர் என்று ஒலிக்காது. ஆகையால் அப்பொற்ருளத்திற்கு ஓசை உண்டாகும்படி அம்பாள் அருளுகின்ருள். சுவாமி சத்தபுரீசுவரர். அம்பாள் ஓசை கொடுத்த நாயகி. திருகோலக்கா என்னும் அப்பதி சத்தபுரி. ஞானசம்பந்தப் பெருமான் பாடிய பண்ணிற்கு உரிய பண்தார் சத்தமாதர்கள். ஆகவே ஞானசம்பந்தப் பெருமானுக்கு

Koviloor Digital Library

பண்ணிசை பயிலும் தாளம் வாய்க்கப் பெறுகிறது. அவ்வாறு வாய்த்த பிரிய இராகங்கள் என்னென்ன என்பதையும் அதற்குரிய தாளங்கள் எவ்வாறு தோன்றப் பெறுகிறது என்பதையும் காண்போம். தக்கராகத்திற்குரிய பண்திறம் செந்திறம், குறிச்சீர் திறம், ஆற்றுப் படுதிறம், படுதிறம், ஆற்றுத்திறம், மெய்த்திறம், அயிர்ப்புத் திறம் ஆய ஏழுகட்டளைத் திறங்கள். அதில் தோன்றுவன தாளம் செந்திறம் - ஏகதாளம், குறிச்சீர் திறம் - ரூபக தாளம், ஆற்றுப்படுதிறம் - திரிபுடை தாளம், படுதிறம் - செயம்பைதாளம், ஆற்றுத்திறம் - மட்டியதாளம், மெய்த்திறம் - துருவ தாளம், அயிர்ப்புத் திறம் - அடஅதாளம். இதற்குரிய விளக்கம் வருமாறு :-

இவற்றுள் வந்த ஏழ்வகைத் திறத்தில்
செந்திறம் விளங்கச் செய்பொருள் ஏகமே -ஆதலால்
அப்பெயர்த் தாளம் அதற்குரி மைத்தாம் (க)

குறிப்பிடு முருவகங் கொள்குறிச் சீர்த்திறத்
துரிமை யுடையது ரூபக தாளம் (உ)

ஆற்றுப் படும்அத் தன்மை திரிபுடைத்
தாதலால் அத்திறம் அப்பெயர்த் தாளம் (௩)

படுகர் கொள்ளும் பயம்பிற செயம்பு
திகழ்தலாற் படுதிறம் செயம்பை தாளம் (௪)

ஆற்றின் மாட்டயம் அமையும் ஆதலால்
அத்திறம் அப்பெயர்த் தாளம் ஆகும் (௫)

சற்றுஞ் சலிப்பில் தன்மை வாய்ந்த
மெய்த்திறந் துருவ மென்னுந் தாளம் (௬)

தெளியா தயிர்ப்புச் சேர லடாததால்
அயிர்ப்புத் திறமே அடஅ தாளம் (௭)

திறமிவ் வேழிற் செனித்த தாள
விளக்கம் உரைத்தனம் மெய்யறி ஞர்க்கே. (௮)

செந்திறம் - ஹரிப்பிரியம் - செம்மை, குறிச்சீர் திறம் - கண், திரியம்பகப் பிரியா - மூன்றுகண், ஆற்றுப்படுதிறம் - அக்னி தேவன், வாயுதேவன் - சரவணப்பொய்கை - சண்முகப்பிரியா

படுதிறம் - சந்திரசூடப்பிரியா - செயம்மைப் தாளம் - சலனமில்லாதது. ஆற்றுத்திறம் - மாட்டைய தாளம் - தண்ணீர் பிரியாது - வருணப் - பிரியா. மெய்திறம் - சத்தியம் தவருதவள் ஃ ராமப்பிரியா ஃ துருவதாளம். அயிர்ப்புத்திறம் - அடஅ தாளம் - பவப்பிரியா.

Koviloor Digital Library

திறத்தினின்று தான் ராகம் தோன்றுவது என்பது பண்ணுக்குரிய சிறப்பான பெருவழக்காக இருப்பினும் தக்கராகப் பண்ணின் திறத்தின் ஏழ்வகைத் தாளமும் தோன்றும்படியாகவும், அதன் பெயர்க் காரணம் நன்கு விளங்கும் படியாகவும் ஞானசம்பந்தப் பெருமான் தக்கராகப் பண்ணில் அமைத்து தந்திருக்கிருர்.

தாளஜதி சொற்கூட்டம் தக்கராகப் பண்ணில் தோன்றுவதோடு தாளம் ஏழ்வகையும் அப்பண்ணின் திறத்தில் தோன்றும் படியாக அமைத்து தந்துள்ளது பெரும் சிறப்பிற்குரிய இயலாகவும் இருக்கின்றது. வேத அங்கம் ஆறில் சோ-ஓது-இடம் என்னும் சோதிடம் மேற்கணக்கினை ஒத்த கீழ்கணக்காக வேதபுருஷனின் பாதம் துலங்கக் காணும். அவ்வாருன கீழ்கணக்கே "துணிவளர் திங்கள்" என்னும் அற்புதப் பதிகம். இவ்வாருக இசைக்கும் இசையை கற்பதற்கு உரிய கற்பம் என்னும் மெய்வளம் எழுபத்திரண்டு (எ௰உ) கொண்டு இதில் கூறுப்பட்ட ராகங்களுக்கு சுரநிர்ணயம் செய்து கொள்ள வேண்டியது. இதுவரை சொல்லி வந்த தொகுதி குறிப்பு :-

சிட்சை என்னும் சூக்கம் (௰உ) பனிரெண்டு சிரம். வியாகரணம் என்னும் மேற்கணக்கு (௯) ஒன்பது அத்தம் (கை) . சந்தசு என்னும் எழுதாக்கிளவி (௩) மூன்று தோள். நிறுத்தம் என்னும் ஒடுக்கம் (௫) ஐந்து தொடை.

சோ-ஓது-இடம் என்னும் சோதிடமாம் கீழ்கணக்கு (௯) ஒன்பது. பாதம். கற்பம் என்னும் மெய்வளம் எழுபத்திரண்டு (எ௰உ) ஆக அமையும் உடம்பும் கொண்டு புருஷாகிருதியாக நிற்கும் வேதபுருஷன் தவளாகரத்தனுகி தேடும் இயற்கைத் தன்மையை விளக்கினேம்.

மேலும் உருட்திரள் பாசுபத கைவல்லிய நவநீதமாக அமைவு பெறும் இயற்கையும் சொன்னேம்.

அடுத்தபடியாக தத்தவுரியம் என்னும் இயற்சீர் வேத விளக்கத்தையும் காண்போம்.

நான்மறை பெயர்ப் பொருள் விளக்கம்

நான்மறை என்ற சொல் நாலுவகையான தனிப்பட்ட பொருட்பெயர் குறிப்பன்று. ஒன்றில் நான்கு அடங்கியிருக்கின்றது. அவைகள் நான்கு தலைப்புக்களைக் கொண்ட ஒரு பொருளாகவே யுள்ளது. அதனுல் நான்மறை என்று சொல்லுப் பெறுகிறது. எவ்வாறு கரம் ஐந்து பிரிவுகளைக் கொண்ட ஒன்ருய் உள்ளதோ, பூதம் ஐந்து பிரிவுகளைக் கொண்டு ஒருமைப்பாட்டின்

Koviloor Digital Library

விளங்குகின்றதோ அதே போன்று நான்கு தலைப்புக்களைக் கொண்ட ஒன்று தான் வேதம். இப்பொழுது தவளாகரம் என்னும் ரிக் வேதம் புருஷாகிருதியைக் கொண்டு மெய்ப் பொருளைத் தேடும் இயல்புடையதாக இருப்பதை நாம் பார்த்தோம். அதைத் தொடர்ந்து செயல்படுவனவாகிய மறைப் பகுதியை தத்தவுரியம் என்னும் இயற்சீர் வேதமாக ஈண்டு பார்ப்போம்.

தவளம்-வெளி. அதில் இயக்கம் கொள்வது பிரபஞ்சனன் ஆகிய வாயு. வாயுவின் தொழில் சலனம் தரும் இயக்கம். ஆகையால் வெளி இருந்தால் அதனிடத்து உலவை கொள்ளும் காலும் இருக்கும். அந்த கால் ஆகாயத்தினிடத்து சலனமின்றி அடங்கி நிற்கும் பொழுது வெளியினுடைய தன்மையை பெற்று வெண்மையாகவும், வெளியினின்று சலனமுடைத்தாய் சஞ்சாரம் செய்யும் பொழுது கருநீலம் ஆகிய உருக் கொண்டும் விளங்கும். ஆகவே நாம் இப்பொழுது பார்க்கப் பெறும் இயற்சீர் வேதம் ஒன்ருய் இருப்பினும் சுக்கில யசூர் வேதம் என்றும், கிருஷ்ண யசூர் வேதம் என்றும் இரண்டாக நிற்கும். வெண்சீர் அகிய பூச்சீரைக் கொண்டு வருவது சுக்கில யசூர் வேதம். அப்படிக்கில்லாமல் பழந்தக்க ராகமாக வெண்சீர் நிற்க இயற்சீர் வந்தது கிருஷ்ண யசூர் வேதம். தக்கசீர் என்னும் வெண்சீர் பிற்பட முற்பட்டு இயற்சீர் வந்ததால் இதற்கு பழந்தக்க ராகம் என்று பெயர் வந்தது.

பழந்தக்	கராகப்	பண்ணெனச்	சொல்லும்
சங்கே	தமாம்ச	அனுகிற	அகம் எனும்
முதுமொழி	சுட்டி	முணைந்து	முணைந்து
சிட்செய்	என்னும்	செப்பும்	சூக்கம்
பன்னி	ரெண்டில்	பரந்து	நிற்கும்
வியாகர	ணம்எனும்	மேற்கண்	கொன்பதிற்
சார்ந்த	இசைவாம்	சந்தசு	என்னும்
எழுதாக்	கிளவி	இசைக்கும்	சுருதி
மீச்சு	ருதியில்	விளங்கும்	இயல்இசை
நாடகம்	மூன்ருய்	நவில்வதில்	இரண்டுள்
நிருத்தம்	என்னும்	ஒடுக்கம்	ஐந்தில்
வீவ்வித	மாக	விரிந்து	நிற்கும்
உபநிழ	லிதாம்என	ஓதும்	நாடகம்
விளங்க	அமைத்து	விரிப்போம்	காண்க.

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதல் திருமுறையில் மூன்ருவது பண்ணுகிய பழந்தக்க ராகப்பண் மூன்று கட்டளைக் கொண்டு

Koviloor Digital Library

விளங்குகிறது. அவையாவன, அயிர்ப்புத் திறம், குறிச்சீர் திறம், செந்திறம் ஆகிய மூன்று கட்டளைத் திறங்கள்.

பழந்தக்க ராகப் பண்ணின் இலக்கணம்

யாப்பு முன்னமை யாழிலி யாழ்முன்
யாழ்த்தொகை தன்னில் அடித்தொடர் சீர்முன்
னிலக்கணச் சீரின் இயைதக் கராகம்
முன்னுற வந்த முறையாற் பழந்தக்க
இராக மென்ன இசைக்கப் பெற்றது.

"என்னே என்றும் என்னை கொல்லாம்
என்று கேட்டு இசைத்தல் அயிர்ப்பு"

"நலிவை அகற்றி நன்மை நல்க
விரும்பி மிகவும் வேண்டல் செந்திறம்
இடர்களை யாய்யென்று இசைத்தலும் அஃதே"

மேயது இவ்விடமென விளங்க குறிப்பிட்டு
கூறும் திறமே குறிச்சீர் திறமாம்
இவ்வடிப் படையில் இயைவன காண்க.

அற்புத பதிக அமைப்பின் விளக்கம்

ஆண்சீராகிய வன்சீரை முதன்மை யாக்கி அதை மாறும் படியாக கட்டல் யாழ்த்தொகை யமைத்து ஒத்தாழிசை கழிற்நெடிற் றுறை நேராக அமைய அதிற் காயும் பூவும் தோன்ற பழந்தக்க ராகப்பண் பாடி அருளிய காரணத்தால் ஆண்பனை பெண்பனையாகி பூத்துக் காய்த்தது. அதற்குரிய இலக்கண சூத்திரம்.

வன்சீர் இயற்கை மாறக் கட்டல்
யாழ்த்தொகை வைத்து வொத்தாழிசைக் கழிநெடிற்
றுறைநேர் காய்பூ தோன்ற வதனிற்
பழந்தக்க ராகப் பண்ணியல் காணும்
பழந்தக்க ராகப் பண்ணிசை பாடி
ஆண்பனை பெண்பனை யாகிக் காய்க்கும்
செந்திறம் விளங்கச் செய்தது பூத்தேர்த்
தாயன வென்னும் அற்புதப் பதிகம்.

"வேதவே தாந்தமாய் விளங்கும் பண்ணெனும்
தனிச்சிறப் புடைய தன்மை யடுக்குப்
பஞ்ச (பண்ச) பீடத்திற் பதிசெய் நடனப்

Koviloor Digital Library

பதச்சுவ	பானது	பதிந்து	தோன்ற
எழுந்த	எழுத்து	ஏழே	ழிரண்டெனும்
நாத	ஒலியையும்	நாத	விரியாம்
ஐம்பத்	தொன்றையும்	அகத்தியம்	ஆக்கும்
ஐந்தாய்	அஃதடங்	கக்கர	மொன்ருய்
விந்தொலி	யாக	விளங்கு	தமிழையும்
உடம்பாய்க்	கொள்ளும்	உயரரி	சித்தரி
எழுத்து	முதற்பண்	தாரி	ருகப்
பிறங்கு	மொன்பான்	பிறப்புடை	யொன்ருய்
மாலெனும்	பசுவுரு	வாகித்	தோன்றும்"

மேற்கண்ட சூத்திரத்திற்கு இலக்கியமாக தத்தவுரியம் என்னும் இயற்சீர் வேதம் அமையப் பெறும். மேற்கண்ட சூத்திரமானது வைகாநேய ஆகமத்தில் ஆருவது சூத்திரமாக வுள்ளது.

திருமுறையில் மூன்ருவதாகிய பழந்தக்கராகப் பண்ணின் எழுதாக்கிளவியை ஒலி வழிபொருள் காணும் முறைப்படி உணரும் பொழுது அது இயற்சீர் வேதம் என்னும் யசூர் வேதமாக இருக்கிறது. அதற்குரிய சுருதி

பழந்தக்க	ராகப்	பண்ணது	சத்தம்
ஏழ்வகைத்	தாயினும்	ஏழும்	வலிமெலி
இடையெனச்	சொன்மூன்	றினத்தின்	மூன்ருக
அமைதலால்	மூன்று	ஆதி	சத்தி
எனக்கட்	டளை மூன்	றியையப்	பெற்று
சத்தத்திற்	காதியாம்	தவள	வெண்சீர்
ஆதி	யாக	வமையவவ்	வெளியில்
இயங்கொ	லியாய	இயச்சீர்	தோன்ற
அதில்வலி	மெலிஇடை	யாகிய	உழைஇளி
துத்தங்	கொள்ளத்	துலங்கும்	ஒலியில்"

"பழந்தக்க ராகப் பண்ணது சத்தம் ஏழ்வகைத் தாயினும்" பழந்தக்க ராகம் என்னும் பண்ணனது ஒலி ஏழ்வகையைக் கொண்டு விளங்குவதாக இருப்பினும் **"ஏழும் வலிமெலி இடையெனச் சொன்மூன் றினத்தின்"** சத்தத்தைக் குறிக்கும் ஏழும் வல்லினம் மெல்லினம் இடையினம் என்று வகுக்கப் பெறும் இனத்தின் **"மூன்ருக அமைதலால் மூன்று ஆதி சத்தி"** அவ்வாறு மூன்ருக தோன்றப் பெறலால் ஆதிசத்தி மூவரென **"எனக்கட்டளை மூன்று இயையப் பெற்று"** பண்தாரைக் குறிக்கும் கட்டளைத் திறங்கள் மூன்ருக இயைந்து வர **"சத்தத்திற் காதியாம் தவள வெண்சீர் ஆதியாக அமைய"** ஒலியின் பிறப்பிடமாகிய

Koviloor Digital Library

தவளாகரம் ஆம் வெண்சீர் முற்பட்டு வர **"அவ் வெளியில் இயங்கொலியாய இயற்சீர் தோன்ற"** அந்த வெண்சீராம் வெளியினிடத்து சலனம் கொள்ளும் சலனம் உடைய இயற்கை உடைய காரணத்தால் இயற்சீர் எனப் பெறும் சீரானது விளங்கி நிற்க **"அதில்வலி மெலி யிடை யாகிய உழை இளி துத்தங் கொள்ளத் துலங்கும் ஒலியில்"** அந்த சீரினிடத்து வல்லோசையும் மெல்லோசையும் மத்திம ஓசையும் ஒலியும் ஆக உழை இளி துத்தத்தை மருவி நிற்க காணும் ஓசையில் என்னும் சுருதிக்கு மீச்சுருதி வருமாறு.

மீச்சுருதி

"மானதப்	பிரியையாம்	வாணி	எனவும்
சாரசப்	பிரியம்	சார்திரு	எனவும்
நடனப்	பிரியம்	நாடுமை	எனவும்
இயம்பு	சத்தியும்	இயச்சீர்	வேதமாம்
தத்த	வுரியத்திற்	சமைந்து	நின்ற
தாள	வொத்தியற்	றமிழுங்	குஞ்சித
பாத	வடிவும்	ஆதர	வளித்தற்
றொழிலும்	அமைதி	துலங்கு	மோசையும்
ஆக	மகாரமாம்	அக்கரம்	நிற்கும்."

"மானதப் பிரியையாம் வாணி எனவும்" மனோ மலரைப் பிரியாத இயல் கொண்டு உறையும் சரச் சோதி எனவும் **"சாரசப் பிரியம் சார்திரு எனவும்"** கமல மலரை பிரியாத லெட்சுமி தேவி எனவும் **"நடனப் பிரியம் நாடுமை எனவும்"** நடனத்தில் பற்றுக்கோடு கொண்டு நோக்கா நிற்கும் உமாதேவி எனவும் **"இயம்பு சத்தியும் இயச்சீர் வேதமாம் தத்த வுரியத்திற்"** சொல்லப் பெறும் சக்தி தேவியும் யசூர் வேதம் என்னும் தத்த வுரியத்தில் **"சமைந்து நின்ற தாள வொத்தியற் றமிழுங்"** சமைவு பெற்றுத் தோன்றும் தாள ஒத்தாகிய இயற்றமிழும் **"குஞ்சித பாத வடிவம்"** ஊன்றி நின்ற திருவடி உருவும் **"ஆதர வளித்தற் றொழிலும்"** நிலை பேருகச் செய்யும் தொழிலும் **"அமைதி துலங்கும் ஓசையும்"** மந்த தரமான சமனிசை ஒலி விளங்கும் இசையும் **"ஆக மகாரமாம் அக்கரம் நிற்கும்"** இவ்வாருக அமைய திருஐந்தெழுத்தில் இரண்டவாதாகிய **'ம'** காரம் எனும் எழுத்து நிலை பெறும். இதில் லயம் கொண்டு தோன்றும் தெய்வம் ஆதி சத்தி மூவர். ஒலி என்னும் சந்தவுற்பவச் சீராம் (சந்தோப விசுதி) உழை இளியை துத்தம் தளை கொள்ளத் தோன்றும் ஒலியாகும். கலை என்னும் புராணம் இயற்சீர் வேதமாகிய யசூர் வேதம் என்னும் தத்தவுரியம். உரு என்னும் காயத்திரி குஞ்சித பாதம் என்னும் ஊன்றிய திருவடி தொழில் என்னும் அநுஷ்டுபு காத்தல் ஆகிய ஒடுக்கம். ஐந்தின் சுருதி மீச்சுருதி என்னும் இயல்இசை அமைவு பெற உபநிழ லறமாம் நாடகம் தோன்றும். அவை வருமாறு.

Koviloor Digital Library

அக்கரம்	தோன்றற்	காதி	யாகிய
வெளியில்	உருவாய்	விளங்கி	காண்பன
எல்லா	வற்றுளும்	இயங்கு	தருளாம்
என்னத்	தேடும்	இருக்கு	வேதச்
சாகையில்	நடஞ்செய்	சத்த	மேழேழ்
ஆதி	இரண்டோ	டைம்புத்	தொன்றெனும்
ஆரிய	மான	அரியின்	விரியை
ஓரின	மாக	ஒருவழிப்	படுத்தும்
ஒத்தி	யமாக	ஓதும்	இயற்றமிழ்
இயக்கமும்	இயமுமாம்	இயச்சீர்ச்	சாகை
பாட்டம்	தாத்தம்	ஆகிய	எட்டில்
ணநன	மூன்றும்	இணைந்த	பெருக்கம்
இருபா	ளுன்காம்	இவையாழ்	நான்கில்
ஆக	தொண்ணூற்	றுரும்	இவற்றுடன்
எஞ்சிய	அக்கரம்	ஈரா	றென்றும்
சாரநூற்	றென்பது	சாகை	யாகி
விரிந்தியம்	பும்பதம்	மேவ	மேவச்
சந்த	இயம்பல	தாகப்	பெருகி
அனந்தம்	தொந்தம்	பதமாயதற்	கெட்டா
விந்தா	யுச்சியில்	விளங்க	மவுனமாம்

ம.

தைத்திரியோ உபநிசத் என்னும் தத்தவுரிய உபநிழலறம்

தக்கராகப்பண் தவளாகரம் என்றும் ரிக்வேதம் என்றும் ஆதி வேதம் என்றும் கண்டோம். அந்த ஆதி வேதத்தை இசைத்து பார்க்கும் பொழுது வியன் ஞாலமாகிய அனைத்துமாய் நிற்பதில் தேடுவதையும் கண்டோம். அப்படி தேடி ஒயுங்கால் "ந" காரத்தில் லயமாகி ஒடுங்கி வியன் ஞாலப் பொருள் அனைத்திலும் இயக்கம் தர நிற்பது ஒன்று உள்ளதால் அந்த தேட்டத்தின் பயனுக வெளியில் இயக்கத்தை தருவது யாது என்பதை தேடி யுணரும் செயற்பாட்டைக் கொண்டதே தவளாகரத்தின் செயற்பாட்டில் பிறக்கும் இயற்சீர் வேதம் ஆகிறது. அதை உணர்த்தவே தக்கராகத்திற்கு உரியதாகிய வெண்சீரை முதலாவதாக வைத்து அவ்வெண்சீராம் வெளியில் இயக்கத்தைத் தரும் இயற்சீரை அதற்கு முற்பட வைத்து அதை வெண்சீர் முற்பட இயற்சீர் தோன்றும் படியாக அமைத்ததால் பழந்தக்கராகமென பெயர் சூட்டி ஞானசம்பந்த பெருமான் யசூர் வேதம் என்னும் தத்தவுரியத்தை விளக்குகிருர் என்பது தெளிவாகிறது.

Koviloor Digital Library

அதோடல்லாமல் சத்தம் ஏழ்வகைத்தாயினும் அவ்வேழும் அடி. நடு. முடி ஆகிய மூன்று தானங்களில் மூன்று நாடியைப் பற்றி தோன்றுகின்றமையால் ஆதி சத்தி மூவர் என இதற்கு தெய்வம் அமைகிறது. அந்த ஆதி சத்திகள் சரஸ்வதி, லெட்சுமி, உமாதேவி ஆகிய மூவரென மானதப் பிரியா, சாரசப் பிரியா, நடனப் பிரியா என்ற ராகத்தில் அமைகின்றது.

மனதிற்கு ஐயப்பாடு தோன்றும் இயற்கைப் பாடுடைத் தன்மையால் அயிர்ப்புத் திறத்திற்கு மானதப் பிரியா ராகம் அமைந்து வருதல் சரஸ்வதி தேவியைக் குறிக்கவும். மங்கலகரமாகிய செம்மையைத் தரும் இயற்கையை விளக்கும் செந்திறத்திற்கு சாரசப் பிரியா ராகம் அமைந்து வருதல் கமல மலரில் விருப்பங் கொள்ளும் லட்சுமி தேவியைக் குறிக்கவும் திருகண்ணேக்கத்தால் அகிலத்தையும் ஆட்டிப் படைக்கும் விருப்பையுடைய குறிக்கோளைக் காட்டும் குறிச்சீர் திறத்திற்கு அமைந்து வரும் நடனப் பிரியா ராகம் உமாதேவியைக் குறிக்கவும் இப்பழந்தக்கராகப் பண் அமைந்து வரும்படியாக ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்துள்ளார்.

"அக்கரம் தோன்றற் காதி யாகிய"

எழுத்துக்களின் பிறப்பிடமாகிய முதன்மைத் தானமாம்,

"வெளியில் உருவாய் விளங்கி காண்பன"

ஆகாயத்தினிடத்து உருக்கொண்டு தோற்றத்தை தருவனவாகி காணகிடப்பன,

"எல்லா வற்றுள்ளும் இயங்குதல் தாளாம்"

அனைத்திலும் இயக்கத்தை தராநிற்பது திருவடியேயாம்.

"என்னத் தேடும் இருக்கு வேதச்"

என்று என்று தேடும் தவளாகரம் ஆகிய ரிக்வேத.

"சாகையில் நடஞ்செய் சத்த மேழேழ்"

அவ்வெளியினிடத்து பொருந்தா நிற்கும் அனைத்திலும் நடைகொள்ளும் ஒலியானது ஏழும் ஏழேழாக.

"ஆதி இரண்டோ டைம்பத் தொன்றெனும்"

நாத விந்துகள் இரண்டோடும் கூடி ஐம்பத்தொன்றென ஆகிய.

Koviloor Digital Library

"ஆரிய மான அரியின் விரியை"

நிரம்பிய ஓசையான நெடுமாலின் விரிந்த தோற்றத்தை

"ஓரின மாக ஒருவழிப் படுத்தும்"

இனமுறையால் ஒன்று படுத்திக் காணும்

"ஒத்தி யமாக ஓதும் இயற்றமிழ்"

வரிசை ஒழுங்கின் வைத்து பாடமாகக் காணும் முத்தமிழில் முதலாவதாகும் இயற்றமிழ்

"இயக்கமும் இயமுமாம் இயச்சீர்ச்சாகை"

அசைவையும் அசைவு ஒலியையும் கணிக்கும் இயற்சீர் வேத சார்பு.

"டாட்டம் தாத்தம் அகிய எட்டில்"

தத்த, தாத்த, தெத்த, தைத்த, டட்ட, டாட்ட, டெட்ட, டைட்ட ஆகிய எட்டில்

"ணநன மூன்றும் இணைந்த பெருக்கம் இருபா னுன்காம்"

மெல்லெழுத்தாகிய டாட்ட தாத்த ஆதியாகிய இணை எழுத்துக்கள் மூன்றும் ஒன்றி வந்த கூட்டம் இருபத்தி நான்காகும்.

"இவை யாழ் நான்கில் ஆகத் தொண்ணூற் றுறும்"

தி, து, தொ, தௌ ஆகிய யாழ் நான்கிலும் இவைகள் கூடி வருங்கால் தொண்ணூற்றுராகும்.

"இவற்றுடன் எஞ்சிய அக்கரம் ஈரா றென்றும்"

இந்த தொண்ணூற்றி ஆறுடன் டாட்ட, தாத்த, அநுதாத்த யாழ் நான்கிலும் அமைந்து காணும் எழுத்தில் மிகுதிப்பட நிற்கும் பதிமூன்று எழுத்தும்;

"சாரநூற் றென்பது சாகை யாகி"

கூடிவருங்கால் நூற்றி ஒன்பான் சார்பு உடையதாகி

"விரிந்தியம் பும்பதம் மேவ மேவச்"

இவ்வாருக விரிவு பெற்று சொல்லக் கூடிய சொற் கூட்டங்களை மேற்கொள்ள மேற்கொள்ள

ராமசா

Koviloor Digital Library

"சந்த இயம்பல தாகப் பெருகி"

பலவண்ணமாகிய ஓசை மிகுதிப் பாடு கொண்டு விரிந்து

"அனந்தம் தொந்தம் பதமாயதற் கெட்டா
விந்தா யுச்சியில் விளங்க மவுனமாம்"

எல்லையற்ற தொடர்புள்ள சொற்கூட்டமாகி நிற்க அதற்கு தொடர்பு கொள்ள முடியாத மெய்புள்ளியாகி மேல்நிலை தானத்தில் விளங்கலால் மோனமாய் ஆரவாரமின்றி ஓயும். இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

ஞானசாதன செயற்பாட்டில் ஆருதார மண்டலங்களில் நடைபெறும் வாசியினுடைய வடிவமே ஏழு அத்துக்களை யுடைய எழுத்தாகவும் அவ்வெழுத்து மூலம் முதல் ஆங்ஞை வரை முறையே நான்கு ஆறு பத்து பனிரெண்டு பதினறு இரண்டு ஒன்று ஆகிய ஐம்பத்தொன்றையும் அவ்ஆருதார வடிவைக் கொண்டும் தோன்றுவதுடன் அது புறப்புறமாய் புறப்படும் போது ஒன்று இரண்டாகி தென்கலை வடகலை யென்ன பிரிவுபெற்று நிற்பதுடன் ஆரியம் என்றும் தமிழ் என்றும் அரி விரியாகியும் சித்தரியாகியும் ரேசக பூரக கும்பக இயலில் தோன்ற பெறுவதோடு புறப்புறமாய் இருந்த ஆரியத்தை அகப்புறத்தில் நடத்திக் காணும் பொழுது அது மிகுதி பாட்டை ஓரினமாகி அமைய ஆக்கும் வல்லினம் மெல்லினம் இடையினம் ஆகிய மூன்று கலையாய் அது ஆருதாரத்தில் நடைபெறும் பொழுது அறுமூன்று பதினெட்டாகி விளங்கும் உயிர் மெய்யாய் அமைந்து உயிர்க்கலை பனிரெண்டாகி நிலைபெற்று கூடி நிற்பதில் ஆகிய விரி இருநூற்றி பதினறு ஆகி இவ்வெழுத்து வடிவத்தியலுக்கு முதற் பொருள் மனமோ வாசியோ அல்லாத உயிராக இருப்பதால் அது ஆண் பெண் என்ற பேதம் கடந்ததால் குறிலாகிய ஆணும் நெடிலாகிய பெண்ணும் கூடிய இருநூற்றி பதினருக அல்லாமல் அதன் உட்பொருளாய் நிற்கும் நூற்றி எட்டாக ஆகி எல்லாம் கூடிய ஒன்ருய் ஆக நூற்றி ஒன்பது சாகையாக வாசிநிலை கொள்ளும் இயற்கையே ஞானபாகையாம். இதற்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

தவளாகர வேதச் செயற்பாட்டாற் காணும் ஒலிக் கூட்டம் நாற்பத்தொன்பதும் அந்த ஏழேழில் நாதவிந்துகளாய் அமைந்து காணும் அந்த இரண்டும் கூடிய ஐம்பத்தொன்றை ஆதியாகக் கொண்டு தோன்றும் ஆரியமொழியாம் அரிவிரியும் சித்தரியாகிய தமிழும் துலங்கா நிற்கும் இயற்சீர் வேதமாகிய யசுர்வேத அடுக்கில் காணப்பெறும் இயற்றமிழ்

Koviloor Digital Library

செயலொலியாம் இயற்சீர் வேதச் சார்கையில் தோன்றும் சந்தம் முன்கூறிய சூத்திரத்தின்படி 'த'காரம் 'ட'காரம் ஆகிய எட்டில் அதன் தாத்தம் அநுதாத்தம் ஆகிய மூன்றும் கூடிய கூட்டுத்தொகை இருபத்திநான்காகி நிற்க அவ் இருபத்தி நான்கும் யாழ் நான்கில் உறழ்ச்சி பெறத் தோன்றும் தொண்ணூற்ருருடன் மிகுதிப் பாடாக நிற்கும் பதிமூன்றுடன் கூட நூற்றி ஒன்பது சார்கையாகும். இவ்வாறு சாகை கொண்டு விரிந்துள்ள சந்தமானது பதத்தை அணுக அணுக சந்த ஓசையானது எல்லையற்றதாக விரிந்த பதங்களில் அமைவு கொள்ள இயலாததாகஅனந்தம் தொந்தம் பதம் எனும் முடிவில்லாத பல்சொற்ருெடர் ஆகி அதற்கு எட்டாத மெய்ப் பொருட் புள்ளியாய் வரிவடிவத்தில் அடங்காமல் மேல் நிலையில் நிற்க அதை எட்ட முடியாமல் அமைந்து மௌனம் கொள்ளும் நிலையில் 'ம'காரம் தோன்றும். இதற்குரிய கர்மபாகை வருமாறு :-

வெளியினிடத்து உருப்பெற்று விளங்கும் அனைத்திலும் நடைகொண்டு துலங்கும் ஆர்இயம் என்னும் இயக்கப் பொருட் காரகனுகிய அரி எல்லையற்றதாக விரிவு கொண்டு நிற்பதை மகா விட்டணு என்று சொல்லும்படி அகிலம் அனைத்தையும் அளவிடும் இயலில் நிற்றல் கண்டு அதை சிற்றரியாக அதாவது வாமனனுக (வாழ்மனனுக) அளவிட்டு காணும் இயலில் விரிவனைத்தும் தொண்ணூற்றி ஆருகவும் அதில் எஞ்சியதாகக் காணும் ஈருரென்றும் சுவாச கதியாகவும் காணப் பெறும் தத்துவாதீதமாகிய உயிர்ப்பு உரு செயற்பாட்டு நிலையில் புறப்புறமாக சார்வு கொள்ளலில் அதற்கு எட்டாத வாழ்மனனுக்கும் சித்தரியாகிய சீவனுக்கும் முற்பட்ட பொருளாகச் சொல்லிறந்த இடத்தில் மெய்ப் பொருட் புள்ளி நின்று இயக்கத்தை தரும். இயற்சீர் தன்மைக்கு எட்டாத வேற்றுமையுடைய இடத்தில் நிலைகொள்ளும் தன்மையுடையதாக காண்பதே இயற்சீர் வேதம்.

வேத முதலாகத் தோன்றிய இருக்கு தொழிற்பாடுறும் போது தோன்றும் இயற்சீர் வேதம் வெளியில் இயக்கத்தைத் தரும் வளியின் இயலைப் பொருந்தி நிலைகொள்ளும் போது அதன் சார்பு நிலையாகிய சார்கை (ΛΙΤΚα) நூற்றி ஒன்பதாகிறது. அந்த நூற்றி ஒன்பதும் தோன்றி செயல்படும் இயலில் வித்தியா கலை, சாந்தி அதீத கலை, நிவர்த்தி கலை, பிரதிஷ்டாகலை, சாந்தி கலை ஆய பஞ்சகலா சத்திகள் தோன்றும். நூற்றி ஒன்பது சாகையும் பஞ்சகலா சக்திகளும் நேயம் பெற நிற்கும் பூரியராக ஆம்நிலையில் பிரளய கலராகவும் இந்நிலையில் ஆணவம் என்னும் ஆள்நவம் செயற்பாடு கொள்ளும். இயலில் ஆணவம் கன்மம் என்னும் மலமாகவும் இதில்தோன்றிய சுருதி முன்பு குறில் நெடிலாக அமைவு பெற்றது மூவகை எழுத்தாகவும், காப்பாகத் தோன்றிய ருத்திராக்க மணி இதில் அக்க மாலையாகவும் ஆன்ம தத்துவத்தில் தோன்றிய வித்தியா தத்துவாதி

Koviloor Digital Library

வித்தியா தத்துவமாகவும் காலம் நியதியைத் தரும் பொருள் கலை வித்தையாகவும் நாதமாக விரிந்து நின்றது குறுகி விந்தாகவும் 'ம' காரத்தில் லயம் கொண்டு காணப் பெறும். இது இயற்சீர் வேத உருத்திரள் பாசுபத கைவல்லிய நவநீதம்.

வியாகரண விளக்கத்தில் காணும் முல்லையாழ் சுக்கில யசூர் வேதம் என்றும். நெய்தல் யாழ் கிருஷ்ண யசூர் வேதம் என்றும் உணர்க.

தக்கேசிப் பண்ணின் விளக்கம்

பிரணவ வேதமாகிய துவித சித்தாந்த த்தில்கருப்
பொருளாய் தோன்றிய நான்மறையில் தவளாகரம்
தத்தவுரியம் ஆகிய ரிக் யசூர் வேதத்தில் தொடர்நிலைப்
பொருளாய் அமைந்துள்ள பூவூடியம் என்னும்
சாமவேதம் தக்கேசிப் பண்ணில் எழுதாக் கிளவியாக

அமைந்து காணப் பெறுகிறது.

தேவர் மொழியென செப்பும் சங்கேதமும்
சனுகிர கம்எனச் சாற்றும் சொல்லும்
ஆய நுதலிப் புகுதலைப் புகலுங்காலை
எல்லை யற்றதாம் எண்குறிப் பிற்கு
ஏது வாக யியையும் சங்கேதம்
தக்கேசிப் பண் தரும்இய லிற்கு
விளக்க மாக விரிப்போம் காண்க.

தக்கேசிப் பண்ணிலக்கணம்

"தக்கசீர் எனச் சாற்றும் வெண்சீர்
யாழ்த்தொகை யாழின் அமையத் தரவாய்
இயைந்த யாப்பி லியற்சீர் பொருந்தும்
தன்மை யுடையது தக்கேசிப் பண்".

என்ற இயலின்படி தக்கேசிப் பண் அமைவு பெற்றுக் காணும். இதற்குரிய கட்டளைத் திறங்கள் தக்கேசிப் பண் பதிகம் பனிரெண்டுக்கு (யஉ) அராகத்திறம். குறிச்சீர் திறம் ஆகிய இரண்டு கட்டளைத் திறங்கள்.

Koviloor Digital Library

அராகத் திறம் விளக்கம்

“ஐயம் வெளவாது அவள்நலம் வெளவுதல்
அராகத் திறமாய் அமைந்து காணும்”.

குறிச்சீர் திறம் விளக்கம்

“இறைவன் வைகும் இடங்குறிப் பிட்டு
கூறுவ தனைத்தும் குறிச்சீர் திறமாம்”.

“மாலெனும் பசுவுரு வாயபண் தோற்றத்
திறத்திற் பண்ணவர் செனிக்கவப் பண்ணகத்
தைந்து தலைக்கொள லாதியாய்த் தோன்றி
முடிவில் நான்கு முகமுள வொன்றுய்
வேதன் என்ன விளங்குந் தாளமும்
சந்தம் பதமொடு சார்தரு கான
மிவைலய மொன்றுள் ளியைந்து நான்காம்.”

வைகா நேயத்தில் ஏழாவது சூத்திரம் இதில் சந்தம் பதமொடு சார்தரு கானம் என்னும் வாக்கியத்தில் சந்தம் கண்ட பதமாக சாம வேதம் அமைகிறது. ஒலியாக தவளாகரம் என்னும் ரிக் வேதமும், எழுத்தாக தத்தவுரியம் என்னும் யசூர் வேதமும் அமைந்து வர இதில் பதம் தோன்றுகிறது.

சாமவேதம் – பூவுடியச் சுருதி

தக்கேசிப் பண் தவள வெளியில்
இயக்கங் கொள்ளும் இயச்சீர் நேரிசைத்
தரவுடை மலரெனுந் தவள இயமலர்ச்
பாணி துலங்கப் பண்படு வெளியும்
வெளியில் வளியாய் விளங்கும் ஒலியும்
துலங்கனுத் திரளுரு வெனுந்தும் புருவாம்
வாக்கில் ஆரிய மானது நாவில்
இரத மாக இசைகொள் நாரதன்
ஆய வாக்கியத் தகத்திய மாக
இசைய பிறக்கும் இசைத்தமிழ்ச் சொன்மலர்
என்ன மலர்ச்சீ ரிரண்டுங் கட்டளை
இரண்டி னெடுகைக் கிளையொலி தாரம்
கொள்ளும் ஓசையும் விள்ளு மலர்வும்
சமஞ்சம மாக வமைந்து தோன்ற (மு

Koviloor Digital Library

சாமவேதம் அமையா நிற்கும் பூவூடிய சுருதியின் தனிப் பெறும் சிறப்பை ஆராய்வோம்.

இதில் மலர்ச்சீர் இரண்டு அமைந்துள்ளது. முல்லை யாழ் வெண்கவி யாசிரியத்தரவு யாப்பு கொண்டுவரும் தக்கேசிப்பண் முறையே வெண்சீரும் ஆசிரியச் சீரும் அமைவது ரிக்வேத யசூர் வேத அமைதியில் தோன்றும் வரிசை ஒழுங்கு நியதியை குறிப்பனவாக உள்ளது. வெண்சீர் வெளியினிடத்துத் தோன்றும் ரிக்வேதக் குறிப்பு. இயற்சீர் அதிற கால் கொண்டு உலவும் தத்தவுரியம் என்னும் யசூர் வேதக் குறிப்பைக் காட்டுகிறது. வெளியிலும் வளியிலும் மலர்வுற்று விளங்கும் புவனம் இரண்டாம் நீரையும் நிலத்தையும் மலர்ச்சீர் இரண்டு காட்டுகின்றது. ஆக இதன் யாப்பு வெண்கவியாசிரியத் தரவாக வெளிமண்டலம் நிலவி உலவும் சூக்குமத்தில் தளை கொண்டு விளங்குவதை வெண்கவியாசிரிய தரவு யாகிய யாப்புக் காட்டுகிறது. மேலும் மலர் இரண்டிற்கும் முற்பட்ட பூவூடியமாய் முளரியாக வெண்கவி வஞ்சி இயற்சீர் தரவு காட்டுகிறது. இக்குறிப்பானது தவளாகரம் என்னும் ரிக் வேதத்தின் தேட்டத்தில் உள் விளைவாக அமைந்து காண்பனவே என்னும் குறிப்பேயாகும். இதில் வரும் மலர் இரண்டு ஆடல் வல்லானின் "சி" என்று உதறிய கையைக் காட்டுகிறது. ஒன்று போன்று மற்றொன்று இணைந்துவந்தால் அதற்கு அணி என்று பெயர். அது பாவில் இணைந்து வரும் பொழுது அதை பாணி என்கிறோம். பாணி என்பது கரம். அந்த கரம் "திருந்துநற் 'சி' என்று உதறிய கையும்" என்றபடி பார்க்கும் பொழுது 'சி' காரம் தோன்றுகிறது. முன்பு 'ந' காரமும் 'ம' காரமும் தோன்றியது. இதில் 'சி' காரம் தோன்றுகின்றது. 'சி' காரம் தீயின் கூறாகிய எழுத்து. இது வளியமை வானும் நீரமை நிலனும் ஆகிய நான்கின் நடுவாக அமையலால் நான்கிற்கும் நடுவாயும் நான்கிலும்நடுவாயும் அமைந்துள்ளன என்பதை காட்டவே பன்னிரெண்டு பண்ணின் நான்கு வெண்கவியாசிரியத் தரவாகவும் மற்றும் ஒரு நான்கு வெண்கவி வஞ்சியியற்சீர் தரவாக தீயின் கூறைக் காட்டவும் 'தீ' தனித்து மட்டும் நில்லாமல் மற்றைய நான்கிலும் கலந்து நிற்பதைக் காட்ட மேலும் ஒரு நான்கு பண் வெண்கவி வஞ்சியியற்சீர் தரவாக ஆக்கி பனிரெண்டு பண்கள் நமக்கு ஞானசம்பந்தப் பெருமான் தந்திருக்கின்றார்.

"தக்கேசிப் பண் தவள வெளியில்"

தக்கசீரும் இயற்சீரும் இணைந்து வந்த தக்கேசிப் பண்ணானது தவளாகரமாம் அண்டத்தினிடத்து.

"இயக்கங் கொள்ளும் இயச்சீர் நேரிசை"

அசைவு பெற்றுக் காணும் இயற்கை உடைய சீராகி அதில் நேரிசை கொண்டு

Koviloor Digital Library

“தரவுடை மலரெனும் தவள இயமலர்ப்”

மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் ஆகிய வரிசை நாலுங் கடந்த பூச்சீராக தரவு கொண்டு வெள்ளொலி வீசும் மலராக.

“பாணி துலங்கப் பண்படு வெளியும்”

பாவினுடைய வரிசை தோன்ற அதில் பாணியாகிய இரண்டு மலரைக் கொண்டு துலங்கப் பெறும் பண்பாடு உள்ள வெளியாய்

“வெளியில் வளியாய் விளங்கும் ஒலியும்”

வெளியினிடத்து உலவை கொண்டு தோன்ரு நிற்கும் ஓசையும்:

“துலங்கணுத் திரளுரு வெனுந்தும் புருவாம்”

ஆக விளக்கம் பெற்று காணும் சிதறிய உருவாகிய

“வாக்கில் ஆரிய மானது நாவில்”

காற்றின் உந்துதலால் பிறக்கும் ஒலியானது நாவை

“இரத மாக இசைகொள் நாரதன்”

வேண்டிய வாறு செலுத்தும் இசை சிறப்பையுடைய தும்புரு நாரதர்:

“ஆய வாக்கியத் தகத்திய மாக”

வாக்கால் இயம்பப் பெறும் வாக்கியத்து உள்ளொலியாக

“இசையப் பிறக்கும் இசைத்தமிழ் சொன்மலர்”

ஒருமைப்பாடு கொண்டு தோன்றும் இயல்பை யுடைய இசைப்பாட்டு சொல்லின் மலர்

“என்ன மலர்ச்சீர் இரண்டுங் கட்டளை”

என்னும் படியாக இரண்டு மலர்ச்சீர்களைக் கொண்டு

“கட்டளை இரண்டினெடு கைக்கிளையொலி தாரங் கொள்ளும் ஓசையும்”

இரண்டு கட்டளைகளைப் பெற்று கைக்கிளை ஓசையானது தாரத்தை தளைக்கொள்ளும் ஒலியும்

Koviloor Digital Library

"விள்ளும் மலர்வும் சமஞ்சம மாக வமைந்து தோன்ற"

இதழ் விரியும் மலர்கள் இரண்டு ஒருமைப்பாடு கொண்டு ஒரே மாதிரி சமம் சமமாக அமைவுற்று காண என்னும் சுருதிக்கு மீச்சுருதி

மீச்சுருதி

"இசைத்தமிழ்ச்	சொல்லு	மியாழ்வல	தும்புரு
நாரதர்	இருவரும்	நடுவுடைச்	சாமமாம்
பூவூ	டியமாய்ப்	பொலிவு	பெற்ற
வேதங்	கமழ	விரிந்த	பாணி
உருவமுஞ்	செய்யென்	றெறுத்த	லோசையும்
சங்கைசந்	தையமறத்	தவிர்க்குத்	தூய்மைத்
தொழிலுஞ்	சிகாரந்	துலங்க	நிற்கும்." (௰௬)

"இசைத் தமிழ்ச் சொல்லும்"

இசைத் தமிழுக்கு ஆதாரமாகிய சொல்லும்:

"யாழ்வல தும்புரு நாரதர் இருவரும்"

இசைக் கருவியை இசைத்தலில்வல்லவர்களாகிய தும்புரு நாரதர் இருவரும்:

"நடுவுடைச் சாமமாம் பூவூடியமாய்ப் பொலிவு பெற்ற"

சமம் சமம் ஆகிய இரண்டிண்டிற்கும் ஊடு புகுந்து ஒலிக்கும் பூவூடியம் என்னும் படியாக மலர்ச்சி பெற்று விளங்கும்.

"வேதங் கமழ விரிந்த பாணி உருவமுஞ்"

பூவூடியம் என்னும் வேதம் மணம்தர விரிந்து காணும் கரதலத்தின் உருவமும்:

"செய்யென்றெறுத்து லோசையும்"

'சி' என்று விலக்கி ஓதுக்கும் ஒலியும்

"சங்கை சந்தையமறத் தவிர்க்குந் தூய்மைத் தொழிலுஞ்"

எண்ணற்றதாய் விளங்கும் தத்த கார ஒலியை அறும்படியாக தவிர்த்தல் செய்யும் புனிதம் மிக்க தொழிலும்

Koviloor Digital Library

"சிகாரந் துலங்க நிற்கும்"

சிகாரமானது சாம வேதம் லயம் கொள்ள நிலை பெறும்.

பூவூடிய மீச்சுருதியாகிய இதற்கு தெய்வம் என்னும் தேவர் தும்புரு நாரதர். ஒலி என்னும் சந்த உற்பவச் சீராம் சந்தோப விசிதி கைக்கிளை தாரங் கொள்ள தோன்றும் ஒலி. கலை என்னும் புராணம் பூவூடியம் என்னும் சாம வேதம். உரு என்னும் காயத்திரி திருந்து நர்ச் 'சி' என்று உதறிய கை. தொழில் என்னும் அநுட்டிப்பு (அனுஸ்டிபூ) ஐயப்பாடு தவிர்க்கும் சுசிகரத் தொழில் ஆக 'சி' காரம் என்னும் திரு ஐந்தெழுத்தின் நடு எழுத்து தோன்றும். இதற்குரிய

இயக்காய வர்க்க இய உபநிழலறம்

"துலங்க	நிற்குஞ்	சுத்த	வெளியிடை
தோன்றிக்	காணுந்	தூல	உருவில்
ஆரிய	மாக	அடங்கா	நெடிலாய்
அகத்தியம்	ஆக	அதீத	வொற்றாய்
நடனஞ்	செய்யும்	நாத	விந்தெனத்
திகழும்	இரண்டு	திருவடி	தலைக்கொண்
டொன்று	முதலா	யொன்ப	துடம்பு
கொள்ளும்	ஒருமைக்	கூறுடைத்	தாகிக்
குண்டை	சுழியுங்	கொம்புங்	காலும்
கூட்டும்	விச்சும்	குறிக்கொள்	ஒற்றும்
உடையெழுத்	தாய்ச்சொல்	லுருக்கொள்	பசுவும்
அதன்பா	லேய்சீ	ரளையா	ழிதுவாம்
ஆவின்	ஐந்தக	அவியிற்	சதுரியச்
சமைகிரு	தம்என	வமைபசு	இயைவும்
என்னும்	பாசை	பாசியமும்	ஆன
பண்ணும்	யாழுமாம்	பகாஉ	விதமொழி
காலில்	எழுஞ்சுசி	கரமென	இயலில்
இசைத்தமி	ழென்ன	இயம்பும்	பண்ணுய்ப்
பண்சார்	பாம்பிர	பஞ்சம்	அனைத்திலும்
ஆகுத்	தீயென	வாய்ச்சமஞ்	சமமாய்
விரியுஞ்	சாம	வேதச்	சாகை." (௰அ)

இயக்காய வர்க்க இய உபநிழலறமாம் சாம வேதமானது "காலில் எழுஞ் சுசிகரமென" காற்றில் தோன்றும் தூய்மை தொழில் பொருளான 'தீ' என்ன "இயலில் இசைத்தமிழ் என்ன இயம்பும் பண்ணுய்" இயக்கத்தை

Koviloor Digital Library

தரும் செயற்பாடு கொண்ட காற்றின் தன்மை வாய்ந்த பண்ணும் தத்தவுரிய வேதத்திற்குரிய பண்ணுய் "பண்சார்பாம் பிரபஞ்சம் அனைத்திலும்" ஐந்தின் அடிப்படையாக தோன்றுவதால் பஞ்சம் என்ற பெயர் கொண்டுள்ளதாய் எல்லாமுமாய் உள்ள பிரபஞ்சம் முழுதிலும் "ஆகத்தீயென வாய்ச் சமஞ் சமமாய்" நடுநிலைப்பாடு கொண்டுள்ளதும் நடுநிலையாய் விளங்குவதும் ஆய தன்மையால் ஆகுதீ எனப் பெயர் கொண்டு சமம் சமமாய் "விரியுஞ் சாமவேதச் சாகை" படர்ச்சி பெற்றுக் காணும் சமம் நெடிதே உள்ள சாமவேத சார்கை.

"துலங்க நிற்குஞ் சுத்த வெளியிடை
தோன்றிக் காணுந் தூல உருவில்"

ஆதியில் தோற்றம் தரா நிற்கும் கலங்கமற்ற வெட்ட வெளியினிடத்து தோற்றத்தைத் தரும்பூதிக உருவத்தில்

"ஆரிய மாக அடங்கா நெடிலாய்"

ஆரிய காரியமாக அதற்கு எட்டாத நெடிலாகவும்

"அகத்தியம் ஆக அதீத வொற்றுய்"

அடங்கா நெடில் குறுகிக் காணும் காலை அக் குறுக்கத்திற்கும் எட்டாத ஒற்ருக அமைந்து

"நடனஞ் செய்யும் நாத விந்தெனத்
திகழும் இரண்டு திருவடி தலைக்கொண்டு"

முற்கூறியவாறு விளங்கிக் காணும் பூதிக உருவில் நிரம்பிய ஒலியாகவும் நெடில் குறிலாகவும் காணும் திருநடம் பயிற்றுவதும் நாதவிந்தென கூறப்படுவதுமாகிய இரண்டு திருவடிகளை சிரசாகக் கொண்டு

"ஒன்று முதலா யொன்ப தூடம்பு
கொள்ளும் ஒருமைக் கூறுடைத் தாகி"

ஏகாங்கமாயும் மேலும் நவஅங்கமாயும் அமைந்து ஒன்றித்துக் காணும் திறமுடையதாய்

"குண்டை சுழியும் கொம்பும் காலும்
கூட்டும் விச்சும் குறிக்கோள் ஒற்றும்
உடையெழுத் தாய்ச்சொல் லுருக்கொள் பசுவும்"

குண்டை முதலாகிய ஏழு குறியீடுகளைக் கொள்ளும் எழுத்தாகி சொல் உருக் கொள்கின்றபடியால் பசு எனப்படுபவும்

ாா௱

Koviloor Digital Library

"அதன்பா லேய்சீ ரஊஙா ழிதுவாம்"

அதனிடத்து காணப் பெறும் பாலும் கோசல கோமியமும் மோரும் வெண்ணெய்யும் ஆகிய

"ஆவின் ஐந்தக அவியிற் சதுரியச்
சமைகிரு தம்என வமைபசு இயைவும்"

பஞ்ச அக அவியம் எனச் சொல்லப்படும் ஐந்தில் நான்காக சமைவுற்று தோன்றும் நெய்யென காணும் பாசையும்

"என்னும் பாசை பாசிய மும்ஆன"
மொழியும் மொழிதலுமாய் விளங்கும்

"பண்ணும் யாழுமாம் பகாஉ விதமொழி"

என்னும் இயக்காயவர்க்க இயஉபநிழலற சூத்திரத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

"துலங்க நிற்கும் சுத்த வெளியிடை"

ஐம்பூதங்களுக்கு பிறப்பிடமாய் உள்ள பெரும் பாழின் இடத்து உருக் கொண்டு விளங்கும் பூதிகமான சரீரத்தின் இடத்து

"தோன்றிக் காணுந் தூல உருவில்
ஆரிய மாக அடங்கா நெடிலாய்"

புரிவுற்ற ஒலியாகி மிகநீட்சி கொண்டு திரியும் நெடிலாகவும் குறுகுங்கால்

"அகத்தியம் ஆக அதீத வொற்றுய்"

உள்ளொலியாக காணும் பொழுது குறுகி நிற்கும் குறுக்கத்திற்கும் எட்டாத வெட்சி புள்ளியாய்

"நடனஞ் செய்யும் நாத விந்தெனத்"

உலவை கொண்டு விளங்கும் ஓசையும் ஒற்றும் என்ன

"திகழும் இரண்டு திருவடி தலைக்கொண்டு"

விளங்கிக் காணும் இரண்டு திருவடிகளாம் வாசியை சிரத்தின் அமையக் கொண்டு

Koviloor Digital Library

"ஒன்று முதலாய் ஒன்ப தூடம்பு"

ஒன்றிரண்டென்ன காணும் நவதுவாரங்களை யுடைத்தாய்

"கொள்ளும் ஒருமைக் கூறுடைத் தாகி"

கொண்டுள்ள ஒருமைப் பாட்டில் கூறுபாடுகளைக் கொண்டு விளங்கும்

"குண்டை சுழியும் கொம்பும் காலும்
கூட்டும் விச்சும் குறிக்கொள் ஒற்றும்"

ஆகிய சுவாசகதி வேதைப் பாட்டால் தோன்றப் பெறும் எழுவகைத் தாகிய

"உடையெழுத் தாய்ச்சொல் லுருக்கொள் பசுவும்"

ஏழுதாதுக்களைக் கொண்டு விளங்குவதாகி பசு என்னும் பெயரைத் தாங்கி நிற்பதுவும்

"அதன்பா லேய்சீ ரளையா ழிதுவாம்"

அதனிடத்துக் காணப் பெறும் உறுப்புக்களும் இயம் ஆழ்ந்து தோன்றும் யாழ் இதுவே என்னும்

"ஆவின் ஐந்தக அவியிற் சதுரிய"

உயிர்க்கூருகிய விளைபொறி ஐந்தும் அதில் தோன்றிக் காணும் கலை இரண்டின் உட்சுவாசம் மீள் சுவாசம் ஆகிய நான்காய்

"சமைகிரு தம்என வமைபசு இயைவும்"

விளைவுற்றுக் காணும் புனிதமாகிய சொல்லும்

"என்னும் பாசை பாசிய மும்ஆன"

அப்புனித சொல்லைத் தரும் மொழியும் மொழிதலும் ஆன

"பண்ணும் யாழுமாம் பகாஉ விதமொழி"

ஐந்து வகை இடங்களை நிலைக்கலனுகக் கொண்டு நால்வகைத் தானத்தில் தோன்றும் பெயரு கிருதமாகிய மொழி

"காலில் எழுஞ்சு சிகரமென இயலில்"

வாசி எழுந்துலவுதலில் தோன்றும் புனிதம் பொருந்தி யதென்ன சொல்லப் பெறும் இயற்கையை

Koviloor Digital Library

"இசைத்தமி ழென்ன இயம்பும் பண்ணுய்"

ஒன்றி காணப்பெறும் ஒருமைப் பாட்டு இயல் உடைய விழுமியதென்ன சொல்லப்பெறும் பஞ்ச கலைகளாய்

"பண்சார் பாம்பிர பஞ்சம் அனைத்திலும்"

இப்பஞ்ச கலைகளாய் தோன்றப் பெறும் தலைமைப் பாட்டியல் எல்லாவற்றிலும்

"ஆகுத் தீயென வாய்சமஞ் சமமாய்"

நடுநிலைத் தானம் கொண்டு விளங்கும் அங்காரகனுய் ஒவ்வொன்றிலும் நடுநிலை கொண்டு

"விரியுஞ் சாம வேதச் சாகை"

படர்ச்சிவுற்றுக் காணும் பூவூடிய மறையின் சார்கை என்ற ஞானபாகைக்கு அர்த்த பாகை வருமாறு.

அர்த்த பாகை

இதிற்குறிக் கப்பட்டுள்ள பெயருகிருதம் என்பதையே பைசந்தி. மத்திமை. சூக்குமை. வைகரி என்று வடநூலார் கூறுவர். இவைகள் நான்கும் நான்கு வாக்குகள் எனப்படும். பேச இயைந்ததை பைசந்தி என்றும். சொற்கொள் மெய்யை சூக்குமை என்றும். வைகுகரியை வைகரி என்றும் இவற்றுள் நடுநிலை கொண்டுள்ளதை மத்திமை என்றும் வடமொழி திரிபுற்று காட்டலால் பேச இயைந்த வாயே பைசந்தி என்றும். சொற்கொள் மெய்யாகிய காதே சூக்குமை என்றும். வைகுகரி என்னும் கண்ணே வைகரி என்றும் இதற்கெல்லாம் நடுநிலைத் தானம் கொண்டு விளங்குவதாகிய நாசியே மத்திமை என்றும் புரியாமையால் வேறுபடுத்திக் கூறுவர். இது போன்றே பஞ்ச கலைகள் என்பதையும் மெய்யே சாந்தி கலை என்றும். ஐயப்பாட்டை நிவர்த்திக்கும் கேள்வியை கொள்ளும் செவியே நிவர்த்தி கலை தானம் என்றும். பல சொல்லால் தோன்றிய கலகலப்பு ஓசையாகிய கலகத்தில் ஏற்படும் சாந்தி அதீதத்தைத் தரும் வாய்மொழித் தானமே சாந்தி அதீத கலை என்றும் சகல வித்தைக்கும் நிலைக்கலனுகத் தோன்றும் சுவாசகதியைத் தரும் நாசியே வித்தியாகலை என்றும். உருவத்தைக் காணச் செய்யும் தீஉருடீ என்னும் "திருட்டி"யாம் கண்ணே பிரதிஷ்டாகலை என்றும் விளங்காமையால் ஏதேதோ கூறுவர்.

Koviloor Digital Library

"நுலங்க நிற்குஞ் சுத்த வெளியிடை"

"தோன்றிக் காணும் தூல உருவில்"

தோன்றுப் பெரு நிற்கும் கலங்கற்ற ஆகாயத்தினிடத்து பிறந்து செயல்படும்ஒலிஉரு தூலத்தில்

"ஆரிய மாக அடங்கா நெடிலாய்"

ஆர்த்து எழுந்து நெடிதோங்கும் ஆரியத்திற்கு எட்டாத நீளிதாய்

"அகத்தியம் ஆக அதீத வெற்றுய்"

நீளிவதின்றி குறுகும் உள்ஒலியாக காணும் போது அதற்கும் எட்டாத வெட்சி புள்ளியாய்

"நடனஞ் செய்யும் நாத விந்தெனத்"

நடைகொள்ளும் ஒலியும் ஒற்றுமாக

"திகழும் இரண்டு திருவடி தலைக்கொண்டு"

விளங்கா நிற்கும் உபய பதங்களை சிரத்தில் கொண்டு

"ஒன்று முதலாய் யொன்ப தூடம்பு"

ஏக தசத்திற்குக் கீழாய் நிற்கும் நவமாகிய

"கொள்ளும் ஒருமைக் கூறுடைத் தாகி"

ஒருடம்பாய் திறம்பெற்று விளங்கும்

"குண்டை சுழியும் கொம்பும் காலும்"

இகர வீச்சாகவும் அவ்வீச்சில் சுழிக்கும் சுழியாகவும் மருட்டி ஏக விரட்டும் 'எகர கொம்பாகவும் முற்பட்டு நடைகொள்ளக் காணும் காலாகவும்

"கூட்டும் விச்சும் குறிக்கொள் ஒற்றும்"

ஒக்க அமைக்கும் 'ஐ' கார கொம்பாகவும் விளைவைத்தரும் ஒன்று பலவாய் உருவங் கொள்ள காணும் "ஔ" காண் ஆகியும் குறிக்கோளுடைய ஒற்று உருப் புள்ளியாகியும்

Koviloor Digital Library

"உடையெழுத் தாய்ச்சொல் லுருக்கொள் பசுவும்"

அமைந்து காணும் ஏழு அத்துக்களை உடைத்தாய் சொல்லப் பெறும் உருவத்தைக் கொண்ட ஆவினமாகியும்

"அதன்பா லேய்ச்சீ ரளையா ழிதுவாம்"

அவ்வெழுத்தால் ஆகிய சொல்லிற் காணப் பெறும் பாலை. சீர். தளை. யாழ் ஆகிய அமைவு கொண்ட ஐந்தின்

"ஆவின் ஐந்தக அவியிற் சதுரிய"

'அ' இனத்தின் தோன்றும் சொல்லில் நால்வகையாகி

"சமைகிரு தம்மென்ன வமைபசு இயைவும்"

தோன்றப் பெரும் தெளிவுடைத்தாகிய பாசையும்

"என்னும் பாசை பாசியமும் ஆன"

மொழியும். மொழிதலும்

"பண்ணும் யாழுமாம் பகாஉ விதமொழி"

இசையும் இசைப்புமாய் அமையும் ஒன்றிரண்டாகி வேறுபடாமல் நிற்கும் பாகவதச் சொல்

"காலில் எழும்சுசி கரமென இயலில்"

ஊதய அசனம் பண்ணும் உதாசினனும் தீயெனும் தன்மை பொருந்தி

"இசைத் தமிழென்ன இயம்பும் பண்ணுய்"

வாக்கே இயம் எனச் சொல்லப் பெறும் பாணியாய்

"பண்சார் பாம்பிர பஞ்சம் அனைத்திலும்"

பஞ்சமாய் இருந்த ஐந்தியற் பொருள் எல்லாவற்றிலும்

"ஆகுத் தீயென வாய்சமஞ் சமமாய்"

நடுநிலைத் தானங்கொண்டு விளங்கும் அ அஃகுதீ யென அமைந்து நிரநிறையே படர்ச்சி பெற்றுக் காணும்

Koviloor Digital Library

"விரியுஞ் சாம வேத சாகை"

விரியும் பூவுடிய மறைச் சார்கைக்கு கர்மபாகை வருமாறு.

"துலங்க நிற்கும் சுத்த வெளியிடை"

விளங்கிக் காணும் மாசற்ற ஆகாயத் தினிடத்து

"தோன்றிக் காணும் தூல உருவில்"

தாணுவாக நிலை பெற்று நிற்கும் வெளிப் பாட்டு உருவத்தில்

"ஆரிய மாக அடங்கா நெடிலாய்"

ஆரியனாகிய பிரமதேவனுக்கு எட்ட முடியாத நீட்சி கொண்டதாய்

"அகத்தியம் ஆக அதீத வொற்றாய்"

நிலத்தில் நிலைபெற்றுக் காணும் உட்பொருட் தோற்றத்தில் காணப் பெறும் பொழுது காணுந்தோறும் எங்கும் நிலைபெறாது சென்று கொண்டேயிருக்கும் முடிவில்லாத ஒன்றாய்

"நடனஞ் செய்யும் நாத விந்தென"

தூக்கிய திருவடியும் ஊன்றிய திருவடியுமாக விளங்கும்

"திகழும் இரண்டு திருவடி தலைக்கொண்டு"

உபய பதங்களை சிரத்தானத்தில் கொண்டு

"ஒன்று முதலாய் ஒன்ப துடம்பு
கொள்ளும் ஒருமை கூறுடைத் தாகி"

ஏ கார் நவ பிறப்பெடுத்து மேலும் ஒரு பிறப்பை எடுக்க போகின்றவனாகிய ஏகதசதேகத்தனாகி யவன்

"குண்டை சுழியும் கொம்பும் காலும்
கூட்டும் விச்சும் குறிக்கொள் ஒற்றும்
உடையெழுத் தாய்ச்சொல் லுருக்கொள் பசுவும்"

சுழற்புள்ளியும் திமிலும் சுழற்புள்ளியும் கண்டாக வரும் நடைகொள் பதமும் ஒருமைப் பாடும் உழப்பு நிலையும் உராய்வு நிலையும் உடையதாய் சொல்லும் ஆவும்

ஈரமா

Koviloor Digital Library

"அதன்பா லேய்சீ ரஊயா ழிதுவாம்
ஆவின் ஐந்தக அவியிற் சதுரிய"

அதனிடத்துக் காணப் பெறும் பஞ்சகவியம் என்னும் ஐந்தின் நான்காவது பொருளாகிய நெய்யும்

"சமைகிரு தமென்ன வமைபசு இயைவும்"

நான்காவதாகப் பிறப்பெடுத்துத் தோன்றும் நெய்யும்

"என்னும் பாசை பாசியமும் ஆன"

'ஆ'னின் ஐந்தும் அதிலுரு நான்கும் ஆகிய

"பண்ணும் யாழுமாம் பகாஉ விதமொழி"

இறைவனுடைய சார்நித்தியத்தை நிலைபெற எடுத்து இசைக்கும் பரமபாகவதனை அரி பிரமர்கள்

"காலில் எழுஞ்சுசி கரமென இயலில்"

இருவரும் காற்றும் தீயும் போற் கலந்து புனிதம் தர பாடும் பாட்டாம்

"இசைத்தமி ழென்ன இயம்பும் பண்ணுய்"

இனிமை மிக்க காந்தருவ கீதமாய்

"பண்சார் பாம்பிர பஞ்சம் அனைத்திலும்"

அடுக்கு நிலையாய் கொண்டு விளங்கும் அகிலம் முற்றிலும்

"ஆகுத் தீயென வாய்சமஞ் சமமாய்
விரியும் சாம வேத சாகை"

பசுபந்த யாகமென கூறப் பெறும் சமநிரைக் கூருக படர்வுற்றுக் காணும் பூவூடிய மறை சார்கை.

"இயம்பும் ஒலிமெய் யெனும்இய ஆகமாம்
இயாகத் தாகுதீ எழுத்து விளங்கப்
பசுவும ஃதியைவாம் பஞ்ச கவியச்
சதுரி யமாகச் சமைகிரு தத்தால்
வளர்க்க எழுநா வன்னி யடர்ந்தவ்
வாக மதனை யணிபெற வகுக்கும்
ஆக வணீஇயம் ஆகிய பண்திறம்
என்னுன் காகவிவ் வெண்ணுன் குறுப்பினும்

Koviloor Digital Library

பண்ணவர்	தோன்றப்	பகுக்குஞ்	சர்நடு
வெனும்பிர	மச்சரி	இயக்கீர	அகஅந்தத்
எஞ்சும்	அங்க	அணிஎச்சம்	என்னும்
அங்கணி	யாசமதிற்	பகாஉ	விதச்
சிக்கியை	பான	சிகைமுஊள	விரிதலெ
ஆகிய	குடிலமும்	அதனிற்	பிறக்கும்
அமுத	லோசையாம்	உழை	இளியும்
பண்ணவர்	தாதையாம்	மண்பொதுத்	தந்தையும்
தோன்ற	விஃதெலாஞ்	சோபினி	முதிரியை
யாங்கை	காட்ட	லதனி	லடங்கவும் (மஉ)

வேள்வித் தீயானது மூவகைப்படும் என்றும் அது ஆக வணீயம், தட்சணுக்கினீயம் காருகபத்தீயம் என்ற பெயரால் வழங்கும் என்றும் நடைமுறையில் வைதீக நூல் வழக்கில் பேசப்படுகிறது. அவ்வாறு பேசப்பெறும் அக்கினி மூன்று என்ன என்பதை இந்த பூவூடியம் என்னும் சாமவேதம் ஞானபாகை, அர்த்தபாகை, கர்மபாகையால் விளக்குகிறது. ஞானபாகைக்கு இயைய அர்த்தபாகையும் கர்மபாகையும் பொருந்தி வந்தாலன்றி மற்றது பிழைபாடு உள்ளது எனக்கருதி தவிர்க்கப்படும். அதில் "ஆகவணீயம்" என்னும் அக்கினி பற்றிய விளக்கம் இதில் வருகிறது.

"இயம்பும்	ஒலிமெய்	யெனும்இய	ஆகமாம்
இயாகத்	தாகுதீ	எழுந்து	விளங்கப்"

இசைக்கப்பெறும் ஓசையாகிய உடம்பே இயஆகம் எனப்படும். இயம்-ஒலி ஆகம்-உடம்பு, ஆகவே இயாகம் என்பது ஒலி உடம்பு என கொள்ளப் பெறுகிறது. அவ்வொலி உடம்பில் நடுநிலைப்பாடு கொள்ளும் தன்மையை குறிக்கும் சொல்லாக இயாகத்தில் ஆகுதீ என்ற சொல் வழங்கப் பெறுகிறது. ஆகுதீ என்ருல் ஆகு என்பது நடு ஆகுதீ என்பது நடுநிலைப்பாடு கொண்டு விளங்கி எழும்பி நிற்கும் தீயை குறிக்கும்.

"பசுவும்	ஃதியைவாம்	பஞ்ச	கவியச்
சதுரிய	மாகச்	சமைகிரு	தத்தால்
வளர்க்க"			

உயிரும் அவ்வுயிர் இயைவு பெற்றுள்ள ஐந்தன்மை திறமாம் ஞானேந்திரியம் ஐந்தும் அந்த ஞானேந்திரியத்தில் வாக்கு நாலாகத் தோன்றி புனிதம் நல்கும் இசைத்தெளிவால் சுருதியும்

"வளர்க்க	எழுநா	வன்னி	யடர்த்தவ்
வாக	மதஊன	யணிபெற	வகுக்கும்
ஆக	வணீஇயம்"		

Koviloor Digital Library

ஆகிய பண்திறம் என்குறன் காகவிவ் வெண்ணுன் குறுப்பினும் மெய்யும் நடுநிலைத் தானங்கொண்டு விளங்கலால் "நா" என்றும் அந்த நடுநிலைத் தானத்தின் நின்றும் உன்னதமாக மேல்எழும்பி நிற்கும் தன்மையால் "எழுநா" என்றும் பெயர்கொண்ட சுருதியை இசைக்க இசைக்க படர்ச்சி பெற்று அவ்வொலி உடம்பை வரிசைப் படுத்தி நடுநிலைப்பேறு கொண்டுள்ள நாடியாம் சுழிமுனையில் வரிசைப்படுத்தும் செயலால் ஆகவணீ இயம் என்னும் ஆகம் - ஒலி உடம்பு அணி - வரிசை இயம் - ஒலி ஆகவே ஆகவணீஇயம் என்பது நடுநிலைத் தானத்தினின்று எழும்பி எழுநாவாகி சுருதியை நிறைவு கொள்ளும்படி இசைத்து அவ்வொலி உடம்பில் நடுநாடியை வசப்படுத்தி எல்லா நாடிகளுக்கும் அச்செயற்பாடு செல்லும்படியாக ஆக்குதலால் ஆகவணீ இயம் எனப் பெயர் பெறும் அங்கி தாரணை செயற்பாடு நிலைபெறல்.

"ஆகிய பண்திறம்
என்குறன் காகவிவ் வெண்ணுன் குறுப்பினும்
பண்ணவர் தோன்றப்"

பூத பூதியம் பண்செய் கரணமாக ஆகி (௩௰௨) முப்பத்திரண்டாய் அமைவு கொண்டு நிற்கும் உறுப்புகளில் தூல காரணம் தோன்ற

"பகுக்குஞ் சரிநடு
வெனும்பிர மச்சரி இயக்கீர அகஅத்தத்
எஞ்சும் அங்க அணிஎச்சம் என்னும்
அங்கணி யாசமதிற்"

சாதன காரியம் சாதித்து பகுப்பு ஏற்படச் செய்ய சரிநடுவாய் காணும் ஒலியாம் பிரமச்சரி இயம் என்னும் சொல் அகம் ஆகிய பொருளின் மிகைப்பாடு கொண்டு காணப் பெறும் அங்கணீயாசம் என்னும் அங்க அணி எச்சம் அதனிடத்து

"பகாஉ விதச்
சிக்கியை யான சிகைமுளை விரிதலை
ஆகிய குடிலமும்"

பிரிக்க முடியாத சடையும் அச்சடைக்கு முதலாகிய முளைதலை விரிதலை ஆகிய குடில குந்தளமும்

"அதனிற் பிறக்கும்
அமுத லோசையாம் உழை இலியும்"

Koviloor Digital Library
அந்த குடில குந்தளத்தால் தோன்றப் பெறும் அமுதலோசையாகிய சிரத்திலும், நெற்றியிலும் பிறக்கும் உழை இளியும்

"பண்ணவர் தாதையாம் மண்பொதுத் தந்தையும்"

தூலகாரணங்களுக்கு ஆதியாய் நிற்கும் மனதும்

"தோன்ற விஃதெலாஞ் சோபினி முதிரியை
யாங்கை காட்ட லதனி லடங்கவும்"

புலப்பட காணும் இயலில் இஃது அனைத்தும் சோபினி முத்திரை என்னும் கைக்குறியால் அடங்கிக் காணப் பெறும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை விளக்கம் வருமாறு.

அர்த்தபாகை

"இயம்பும் ஒலிமெய் எனும்இய ஆகமாம்"

சொல்லப்பெறும் ஓசையும் உடம்பு என்னும் இயஆகமாகிய

"இயாகத் தாகுதீ எழுந்து விளங்க"

இயக்காயத்தில் ஆகுதீயாகிய சுருதி தோன்றிக் காணப்பெற

"பசுவும் ஃதியைவாம் பஞ்ச கவியச்
சதுரிய மாக சமைகிரு தத்தால்"

பாசையாம் மொழியும் அதிற்ருேன்றப் பெறும் பஞ்ச கலைகளும் நான்கு வாக்கும் தோன்றித் தெளிவு தர

"வளர்க்க எழுநா வன்னி யடர்ந்தவ்
வாக மதனை யணிபெற வகுக்கும்
ஆக வணீஇயம் ஆகிய பண்திறம்"

பஞ்ச கலைகளும் வாக்கு நான்கும் அமையும் தெளிவால் தோன்றி பெருகி நிற்கும் சொற்கூட்டங்களை நாவில் செயற்பாடு கொள்ளப்பெற நிற்கும் ஒலி விளக்கம் படர்ச்சி பெற்று துலங்க அச்சொல் அகத்தே வரிசை கிரமப்படுத்தி வகுத்து காணப் பெறும் ஆக அணி இயமாம் பண் திறங்கள்

"என்ணுன் காகவிவ் என்ணுன் குறுப்பினும்
பண்ணவர் தோன்ற பகுக்கும் சரிநடு"

Koviloor Digital Library

முப்பத்திரண்டாக இயஆக உறுப்பாம் அம்முப்பத்திரண்டினும் பண்ணவராகிய (ரு-௰உ) முப்பத்திரண்டு இராகங்கள் தோன்ற பகுத்து அவ்விசை சுருதியில்

"வெனு பிரமச்சரி இயக்கீர அகஅத்தத்
எஞ்சும் அங்க அணிஎச்சம் என்னும்"

பிரமர கீதமாகிய இயக்காயத்தில் முன்கூறிய முப்பத்திரண்டிற்கும் அதீதமாய்க் காணப்பெறும் சுருதிக்கு அடங்காத

"அங்கணி யாசமதிற் பகாஉ விதச்
சிக்கியை பான சிகைமுஊ விரிதஉல
ஆகிய குடிலமும்"

அங்கணியாசமதிற் அங்க அணி எச்சம் என்னும் பண்திறங்கள் முப்பத்திரண்டிற்கும் எட்டாததாக உள்ள பண்திறமும் பண்திரி என்னும் சடையும் ஆக அமையும் குடிலம் என்னும் கூடுலயமும்

"அதனிற் பிறக்கும்
அமுத லோசை யாம்உழை இளியும்"

திறம்திரி ஆகியவற்றில் தோன்ரு நிற்கும் விம்மலோசையாம் உழை இளியும்

"பண்ணவர் தாதையாம் மண்பொதுத் தந்தையும்
தோன்ற"

பண்தோற்றத்திற்கு முதற்பொருளாக இருக்கும் சொல்லும் பொருளும்

"தோன்ற விஃதெலாஞ் சோபினி முதிரியை
யாங்கை காட்ட லதனி லடங்கவும்"

அதனிற் தோன்றும் இசையும் அழகிய ஒற்றறுத்ததாகிய தாள ஜதியில் அடங்கவும்; தோன்றப் பெறும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

"இயம்பும் ஒலிமெய் எனும்இய ஆகமாம்
இயாகத் தாகுதீ எழுந்து விளங்க"

சொல்லப்பெறும் மெய்மொழியாகிய வேள்வி என்னும் யாகத்தில் ஐம்பூதங்களுக்கும் நடுவாகிய சுடர்தீ எழுந்து காணும்படியாக

Koviloor Digital Library

"பசுவும் ஃதியைவாம் பஞ்ச கவியச்
சதுரிய மாக சமைகிரு தத்தால்
வளர்க்க"

ஆவிற் பவங்கொண்டு தோன்றும் அவிற்பாகம் என்னும் ஆன் ஐந்தும் அப்பசு அமிர்தத்தில் நான்காவதாக சமைகிருதம் ஆகிய ஆச்செயத்தால் வேள்வித் தீயை வளர்க்க

"எழுநா வன்னி யடர்ந்தவ்
வாக மதனை யணிபெற வகுக்கும்
ஆக வணீஇயம்"

அவ்ஆச்செயத்தை உண்ண நாவை நீட்டி எழும்பிக் காணும் எரி உடன்றெழுத்து யாகத்திற்கு சோபிதம் (அழகு) தர நிற்கும் மூவகைத் தீயில் ஆகவணீஇயம் இது என்னும் படியாக

"ஆகிய பண்திறம் எண்ணுன் காகவிவ்
எண்ணுன் குறுப்பினும் பண்ணவர் தோன்ற"

ஐந்தன்மைத்திறம் யாகத்தில் முப்பத்திரண்டாய் விளங்க அம்முப்பத்திரண்டிலும் தேவர்கள் ஒருமைப்பாடு கொண்டு தோற்றம்தர

"பகுக்கும் சரிநடு வெனும் பிரமச்சரி
இயக்கீர அகஅத்தத் எஞ்சும்"

தோன்றப் பெரு நிற்கும் தேவர்கள் அனைவருக்கும் பகுத்தளிக்கும் ஆகுதீ ஆக்கும் பிரமச்சரியம் கிரஹஸ்தம் என்னும் ஆச்சீர் அமைவாம் ஆச்சிரமத்தில் நிற்பவர்

"அங்க அணிஎச்சம் என்னும் அங்கணி
யாசமதிற்"

செய்யப்பெறும் அங்க அணி எச்சமாம் அங்கணியாசமதிற்

"பகாஉ விதச்
சிக்கியை பான சிகைமுஊள விரிதஉல
ஆகிய குடிலமும்"

அவ்அங்கணி யாசத்திற்கு உட்படாமல் நிற்கும் பிரிக்க முடியாத சடையும் சிகையும் முஊளதஊலயும் விரிதஊலயும் அகிய பந்தமும்

ЛТஉ ௰௩

Koviloor Digital Library

"அதனிற் பிறக்கும் அழுத லோசையாம்
உழை இளியும்"

மேற்கூறிய பிரமச்சரியம் கிரஹஸ்தம் ஆகிய அமைவு பருவத்தில் பிறக்கும் கலுழ்தலொலியாகிய உழை இளியும்

"பண்ணவர் தாதையாம் மண்பொதுத் தந்தையும்
தோன்ற விஃதெலாஞ் சோபினி முதிரியை
யாங்கை காட்ட லதனி லடங்கவும்"

மக்கள்குல முதல்வனுகிய பிரமனும் தந்தையாகக் கொண்டு விளங்கும் பிரமகுல ஆச்சாரம் துலங்க இவை அனைத்தும் தரும் வேத ஒலிக்கு முத்திரையிட்டு காட்டும் சோபினி முத்திரையும் ஆக கர்மபாகை நிறைவு பெறும்.

அதனை நேர்நடு வானசு வாகாய்
ஆக்கத் தூல மதிற்றிரி விதமாங்
காரண நாடிக் கருவி யடர்த்த
லனைப்பண் ணின்திற மெண்ணுன் கதனைத்
திரிசமஞ் சமமாய்ச் செயத்தொண் ணூற்று
றென்னும் நாற்பத் தொட்டிரு சீர்களும்
அட்சது ரத்திரி யவர்களும் கலைஞர்கள்
அறுவருந் தோன்று மாறுகப் பகுக்கும்
வானற் பிறைத்த மதிற்பகா உவிதச்
சிகையணி முடியும் சீர்முடி பின்னல்
என்னும் வேணிகோ டீரம் பின்னலும்
அதனிற் சிரித்தல் ரசித்த லதட்டல்
ஓசையிற் கைக்கிளை யுந்துத்தந் தாரமும்
கோசிகன் கோதமன் குளிர்கலை யோனும்
தோன்றத் திறவேணி தூயஆ வாகனம்
தாவான மிம்மூன் றுகிய முதிரியை
வாங்கை காட்டல் அதனி லடங்கவும் (மசூ)

ஈண்டு கூறியுள்ள வரைக்கும் தெளிவுரை காட்டுதும் காண்க.

பிரணவ வேதமாகிய துவித சித்தாந்தம் கரு உருப் பெறுங்கால் அமைந்த அமைப்பு. கரு உருவாகி பிறப்பெடுத்து வாழ்நிலைப் பருவம் அடைந்த பொழுது தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக அதை நாடி தேடித்திரியும் இயற்கையை குருமுகமாக காணப் பெறும் பொழுது அமல

Koviloor Digital Library
நிலையிலிருந்து ஆள்நவ மலத்தை பெற்று வியன் ஞாலக் கலராகி கால நியதிக் குட்பட்டு அந்த பருவத்தையும் கடந்து ஆள்நவமலம் கன்ம மலத்திற்கு உட்பட்டு கலை வித்தையாதியன கற்று உள்ள நிலையில் இவைகள் எல்லாம் மித்தை என்றுணர்ந்து பூர்வ புண்ணிய வசத்தால் குரு நோக்கம் பெற்று ஞான சாதனம் பயிலும் போது சித்தாந்த வேத வேதாந்த உண்மை உணர்வு பெறுங்கால் அச்சாதன விளைவில் தோன்றுகின்ற தோற்றத்திற்கு சரியான இயைவு செய்து தந்த நூற்களே சரியை என்று தெளிவு பெற பெறும் பொழுது வேத நூல் சரியை ஞானசம்பந்தாதி முனிவர்கள் அருளிச் செய்த திருமுறைப் பெருநூல் என்று தெளிவு பெற்று அத்தெளிவால் ஞானசாதன விளைவில் தோன்றும் தசவித நாதங்கள் நான்கு வாயில் வழியாக ஒலிப்பதால் நான்கு வேதமாகி அந்நான்கில் தவளாகரம் என்னும் ரிக்வேதம் விள்ளல்லோசையாக நாடிசுத்தியில் அமைவனவாக தோன்றலும் வாசி தாரணையாக தொகைப்பாடு கொண்டு வாக்கியமாக அமையவும் ஆகியவற்றை தவளாகரம் என்னும் ரிக்வேதமும் தத்தவுரியம் என்னும் இயற்சீர் வேதமும் ஆக அமைவதை திருமுறைப் பெருநூல் விளக்க சரியையில் கண்டோம்.

ஈண்டு கூறப் பெறுவது பூவூடியம் என்னும் சாம வேதம். இதற்குரிய பூதவாசல் வாசிநிலைத் தானமாகிய நாசி. வாசியானது இருவகை கலையால் மலர்ச்சி கொண்டு தோன்றுவதாலும் அவ்விரு வகை கலைக்கும் நடுநிலை கலை ஒன்று தோன்றும் பொழுது இருவகையாய் மலர்ச்சி பெற்றுள்ள பூவின் ஊடு இயமாய் அமைவதால் பூவூடியம் என்றும் அப்பூவூடியம் தோன்றுங்கால் இரண்டு கலைகளும் சமம் சமமாக நிற்பதால் சமம் நெடிதுடைய சாமம் என்னும் பெயரையுடைய வேதமாகவும் இது பேசப் பெறுகிறது. இதில் நாடி சுத்தியும் வாசி தாரணையும் சித்தியானதின் பின்னர் நாடி தாரணையால் அங்கிதாரணை அமையப் பெறும் செயற்பாட்டு சரியையாக உள்ளபடியாலும் அங்கிதாரணையானது நடுநாடியான சுழிமுனையை ஆதாரமாகக் கொண்டு தோன்றுவதாலும் இதில் யாகமும் பஞ்ச கவிய சேர்க்கையால் ஏற்படும் புனிதமும் ஆவிற் பவித்துக் காணும் கிருதமாகிய அவிற்பாகம் கொடுத்தலால் ஆக வணீயம் என்னும் யாக அக்கினி வளர்க்கப் பெறுவதும் அதனுல் தேவர்கள் தோற்றம் தரப் பெறுவதும் பிரமச்சரியம். கிரஹஸ்தம் என்னும் ஆச்சிரமம் அமைவுற்றுக் காண்பதும் அங்கணீயாசமும் சோபினி முத்திரையும் சொல்லப் பெறுகிறது.

"அதனை நேர்நடு வானசு வாகாய்
ஆக்கத்"

அப்படி சொல்லப் பெறுவதை கோட்டம் இன்றி அமையப் பெறும் மத்திய பாகமான நாடியைக் கொண்டு சுவாகாய் ஆக்கல் என்னும் நன்மையம் அதுவாகச் செய்ய

Koviloor Digital Library

"தூல மதிற்றிரி விதமாங்
காரண நாடிக் கருவி யடர்த்தலென"

பருத்துக் காணப் பெறும் பூதீகத்தில் நாடியானது மூவகை யானதாய் விளங்கி செயற்பாட்டிற்கு காரணமாய் விளங்கும் தன்மையால் தூலகாரணம் எனப்பெறும் யாக்கை பிரிவில் திரிவிதமான புரியாய் காணக் கிடைக்கும் இயல்வழியாக கருவிகளை கட்டுப்படுத்தல் என்னும்

"பண்ணின் திறமென்ன ருங்கதனைத்
திரிசமஞ் சமமாய்ச் செயத் தொண்ணூற்று
றென்றும் நாற்பத் தெட்டிரு சீர்களும்"

பூதிகாதார கூறுபாட்டை முன்பு இரண்டாக பகுத்து கண்டது போல் அல்லாமல் மும்மூன்ருக சமப்படுத்தி காணல் எனும் திரிசமமாகச் செய்யுங்கால் முப்பத்திரண்டு உறுப்பானது ஒவ்வொன்றும் மூவகை நாடி அமைவில் சமம் சமமாகி அமையும் நாடிதாரணையில் முப்பத்திரண்டு மூன்று தொண்ணூற்ருராகவும் அதை இரு சீராகப் பார்க்கும் பொழுது நாற்பத்தெட்டாகவும்.

"அட்சது ரத்திரி யவர்களும் கலைஞர்கள்
அறுவருந் தோன்று மாருகப் பகுக்கும்"

எண்நான்கு முப்பத்திரண்டாகப் பார்க்கும் பொழுது மூன்ருகவும் பதினுராகப் பார்க்கப் பெறும் பொழுது கலைஞர்கள் அறுவரும் தோன்ரு நிற்க காணப் பெறும்

"வானற் பிறைத்த மதிற்பகா உவிதச்
சிகையணி முடியும் சீர்முடி பின்னல்
என்னும் வேணிகோ டீரம் பின்னலும்"

இதில் ஆச்சிர் அமைவெனும் ஆச்சிரமம் வானத்தில் தோன்றும் பிறையாம் சந்திரனின் பொருளியல் கொண்ட வானற் பிரஸ்தம் என்னும் வானப் பிரஸ்தாச்சிரமும் அதனிடத்து பகுப்புற்று காணமுடியாத சிகையும் ஆபரணம் பூட்டிய முடியும் சிறப்பு மிக்க பின்னல் இட்டு காணும் அணிவேய்ந்த வேணியும் மயிர்முடி கோட்டிக் காணும் சடைமுடி பின்னலும் ஆகி

"அதனிற் சிரித்தல் ரசித்த லதட்டல்
ஓசையிற் கைக்கிளை யுதுத்துந் தாரமும்"

ஈர. ம2

Koviloor Digital Library

இவ்வாறு அமைந்துள்ள சிகா வளத்தில் ஒலியாக நகைத்தல் சுவைத்தல் உரப்பல் ஒலியில் கைக்கிளை துத்தந் தாரம் ஆகிய இசைகள் நின்று ஒலிக்க

"கோசிகன் கோதமன் குளிர்கலை யோனும்
தோன்ற"

சுருங்குதல் விரிதல் ஆகிய தன்மை யுடைமையால் கோசிகன் ஆகவும் மணிமுடி கவித்து இருக்கும் தன்மையால் கோஉத்தமன் ஆகிய கோதமனும் வளர்சடை முடி பின்னலால் குளிர்கலையோனாகிய சந்திரனும்

"தோன்றத் திறவேணி தூயஆ வாகனம்
தாவான மிம்மூன் றுகிய முதிரியை
வாங்கை காட்டல் அதனி லடங்கவும்"

திறவிணி முத்திரையும் ஆவாகன முத்திரையும் தாவன முத்திரையும் ஆகிய மூவகை முத்திரையாகிய கைகாட்டலில் இவை யாவும் அடங்கிக் காணும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

"அதனை நேர்நடு வானசு வாகாய்
ஆக்கத்"

'சு' ஆகு என்னும் நல்லதாகிய நடுநிலை திறம் செய்து பார்க்கும் பொழுது

"தூலமதிற் றிரிவிதமாங் காரண நாடிக்
கருவி யடர்ந்த லெனபண் ணின்திறம்
எண்ணுன் கதனை"

சொல்லின் அகமாய்த் தோன்றும் அதனில் தூலம் காரணம் சூக்குமம் என்ற மூவகையாய் கருவிகள் சூழ்ந்து நிற்கும் காரணத்தைக் கொண்டு பண்ணின் கூறுபாடாகிய முப்பத்திரண்டை

"திரிசமஞ் சமமாய் செயத்தொண் ணூற்ரு
றென்னும் நாற்பத் தொட்டிரு சீர்களும்"

மூன்ருய் சமப்படுத்தி சமஆகமாய் பார்க்கும் பொழுது (௲௰௨) முப்பத்திரண்டாய் நின்ற ஒன்று தொண்ணூற்றி ஆருகவும் அத்தொண்ணூற்றி ஆருய் நின்றது இருசீரில் நாற்பத் தெட்டாகவும்

Koviloor Digital Library

"அட்சது ரத்திரி யவர்களும் கலைஞர்கள்
அறுவருங் தோன்றுமா முகப் பகுக்கும்"

மூன்றுக பார்க்கும் பொழுது முப்பத்திரண்டாகவும் ஆருகப் பார்க்கும் பொழுது பதினுருகவும் அமையும் படியாக பகுத்துக் காணும்

"வானற் பிறைத்த மதிற்பகா உவிதச்
சிகையணி முடியும் சீர்முடி பின்னல்
என்னும் வேணிகோ டீரம் பின்னலும்"

வானற் பிறைத்தமதில் பதினுருய் நிரம்பியுள்ள கலையில் பகுக்க முடியாத இரண்டாம் தென்மொழி வடமொழியாக அமைவு பெறும். திறம், திரி, கணம் ஆக அமையும் இசைத் திறங்களும்

"அதனிற் சிரித்தல்ரசித்த லதட்டல்
ஓசையிற் கைக்கிளை யுந்துத்தந் தாரமும்"

சிரித்தல் ஓசையாகிய கைக்கிளையும், ரசித்தல் ஓசையாகிய துத்தமும் அதட்டல் ஓசையாகிய தாரமும்

"கோசிகன் கோதமன் குளிர்கலை யோனும்
தோன்றத்"

மேற்கூறிய ஒலிக்கு தலைவர்களாக விஸ்வாமித்திரன், கௌதமன், சந்திரன் ஆகியோரும் தோற்றம் தராநிற்க

"திறவேணி தூயஆ வாகனம்
தாவான மிம்மூன் ருகிய முதிரியை
வாங்கை காட்டல் அதனி லடங்கவும்"

வட்டித்தல் ஆகிய தாள ஒற்றில் இவைகள் அனைத்தும் அடங்கவும் காணப்பெறும் என்ற அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

"அதனை நேர்நடு வானசு வாகாய்
ஆக்க"

நடுநிலை கொண்டு விளங்கும் ஆகவணீயம் என்ற வேள்வித் தீயில் சுவாகாய் என்ற வேத வாக்கிய மந்திரத்தை ஓதி "சுவாகா" ஆக்கும் பொழுது

Koviloor Digital Library

"நூலமத்ற் திரிவிதமாம் காரண நாடிக்
கருவி யடர்த்த லைபண் ணிந்திறம்
என்ஞன் கருவை"

ஐ. ஒ. ஔ என்னும் திரிவிதமாம் மூன்றெழுத்தைக் கொண்ட நாமாவளியாக தலைப்படு நிலை கொண்டு விளங்கும் முப்பத்திரண்டு எழுத்தை முதலாகக் கொண்டு விளங்கும் நாமாவளி தொகையில் முற்கூறிய ஐ. ஒ. ஔ சேர திரிசமமாய் தொண்ணூற்றி ஆறு தோன்ற அது முப்பத்து முக்கோடி தேவர்களாகவும் அவர்களுக்குரிய மந்திரமாகவும் விளங்கிக் காணலில் அதுவே ஐ. ஒ. ஔ என்னும் இருசீர் கொண்ட ஒன்ருக அமையலால் நாற்பத்தொண்ணுயிரம் ரிசிகளாகவும் உயிர்க்கலை பன்னிரண்டும் அடங்கிய எழுத்தாக ஐ. ஒ. ஔ ஆகின்றபடியால் ஆ ஈறு அம் என்று ஆகி நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் என்ன ஆகின்றது.

"அட்சது ரத்திரி யவர்களும் கலைஞர்கள்
அறுவருந் தோன்றுமா ருகப் பகுக்கும்"

முன்ருகப் பார்க்கும் பொழுது அப்சரஸ்திரிகள் என்னும் அட்சதுரத்திரிகள் ஆகிய அப்சரசுகளுமாய் தோன்ற மேலும் அறுவகை யாக்கிப் பார்க்குங் காலை கலைஞர்கள் தோன்ற

"வானற் பிறைத்த மதிற்பகா உவிதச்
சிகையணி முடியும் சீர்முடி பின்னல்
என்னும் வேணிகோ ஊரம் பின்னலும்"

வானப் பிரஸ்த ஆச்சிரமமும் அதில் பகுப்புற்றுக் காண முடியாத சிகையும் அலங்கார முடியும் சிறப்புற முடிந்த பின்னலாகிய வேணியும் கோஊரமாகிய சடைப் பின்னலும் ஆக

"அதனிற் சிரித்தல் ரசித்த லதட்டல்
ஓசையிற் கைக்கிளை யுந்துத்தந் தாரமும்"

நகைத்தல். சுவைத்தல். உறப்பல் ஆகிய ஒலியில் விளக்கம் தரும் வேத ஓசையும்

"கோசிகன் கோதமன் குளிர்கலை யோனும்
தோன்றத் திறவேணி தூயஆ வாகனம்

Koviloor Digital Library

தாவான மிம்மூன் றுகிய முதிரியை
வாங்கை காட்டல் அதனி லடங்கவும்''

அவ்வேத கர்த்தாவாக கௌசிக முனிவரும் கௌவுதம முனிவரும் சந்திரரும் தோற்றம் தர திறவேணி முத்திரையும் ஆவாகன முத்திரையும். தாவன முத்திரையும் ஆகிய மூன்று முத்திரையில் மேற்கூறிய எல்லாம் அடங்கிக் காணவும் ஆக கர்மபாகை நிறைவு பெறும்.

''இத்திறம் திரிஎன் னும்நான் கில்
எஞ்சும் காரண அணிஎச்சம் ஆன
பகாஉவி தமாம்பதம் ஒரு நான்கும்
சேர நூறுகித் திகழ்தர லாயபண்
தூலம் என்ன சொல்லும் பஞ்சு
திரிநூ றுஆச் சியமற ஆகுதீ
யதனுற் காரெனும் அடரிருள் ஊஃநூ
எங்குள தென்ன எரியும் வத்தியாய்
இயமெனுஞ் சொல்லொலி என்னப் பெறுாங்
காருக வத்தியக் கனலெனவும் இய
மெனுஞ் சொற்றூலத் தியைகா ரணம்என
இரண்டு விதத்தி லியங்கப் பெறலால்
இயக்காய உவிதம் இயக்ய உவிதம்
ஆகிய நூறும் ஆசமஅணி இயமும்
என்னத் துலங்கும் இயாகம் நூறுற்
சிறப்புற் றிந்திரன் தேவர் கோவாய்த்
திகழலுங் கனமுறச் செயச்சொற் றூலமாம்
ஆவிற் பவித்தலாம் அவிற் பவமும்
ஆவை வான அவியும் இயாகம்
துலங்கா குதியிற் சொரிந்து வேட்கைகொள்
ஐம்பொறி நுகர்உ விதமா கியகனம்
பத்தில் இயக்கயப் பசுநூ றுறவே
ஆயிர மாக ஆகுதி வேட்கவிக்
கனரக மாயிரங் கண்ணெனக் கொண்டு
இந்திரன் போகியாய் இலங்கத் தத்தெனத்
தோன்றுங் கனமெனச் சொல்பூ ரிப்புக்
கூட்ட வொலிஎனக் கூறுங் கனஇயம்
எனுந்தத் கனக்கண இயவெரி யோங்கிப்
படரவிவ் வியாகப் பசுவை ஆகுதீ
பூரண மாக்கும் பூரணு குதியில்
ஆசம அணிஇயம் ஆயிரம் நிறைவாய்
ஆயிரங் கதிருடை யருக்கனும் இயக்கயம்
கூறு செய்யுங் கூற்றனுஞ் சாமனும்

Koviloor Digital Library

அங்கியுந் தோன்றிவ் வருக்கிய பாத்திய
நிறைவிற் பண்ணவ ரிருடிக ளட்சதுர்த்
திரிகள் கஉலஞர்கள் தேவர் கோமான்
அஉனவருங் கமைகொண் டடங்கித் தேனராய்த்
திகழுங் காம தேனு வாக (உ௰)

"இத்திறம் திரி என்னும் நான்கில்
எஞ்சும் காரண அணிஎச்சம் ஆன
பகாஉ விதமாம் பதம்ஒரு நான்கும்"

தூலமாய் பார்க்கும் பொழுது ஈண்டு கூறப்பட்டவாறு முப்பத்திரண்டு கூறுபாடுகள் கொண்ட இயக்காயமும் அதில் தூல காரணமாய் தோன்றி நிற்கும் தூலம் ஒன்று அதில் துலங்கும் மூன்று நாடியும் ஆகிய திறம் திரியில் மிகுதிப் பாடாகக் காணும் காரண அணி எச்சம் என்னும் கரணியாசமும் ஆகிய பிரிக்க முடியாத தன்மையால் பாகவதம் என்னும் பகாஉவிதமாகிய உயிர்ப்பு, உயிர், பிரமம், சுத்தபிரமம் என்னும் நான்கும்

"சேர நூருகித் திகழ்தர லாயபண்
தூலம் என்ன சொல்லும் பஞ்சு
திரிநூ ருஆச் சியமுற ஆகுதீ"

முப்பத்திரண்டு கூறுபாடுகஉளயுடைய தூலம் திரி என்னும் காரண சரீரமாக நிற்கும் நிஉலயில் திறம் என்றும் திரி என்றும் பகுக்க முடியாத இரண்டாய் காணும் உயிர்ப்பு, உயிர், பிரமம், சுத்த பிரமம் ஆகிய நான்கும் திறம்திரி என்னும் தத்துவம் தொண்ணூற்றுருடன் கூட நூருகி விளங்கும் ஐவகை அடுக்காகிய தூல காரணம் எனச் சொல்லும் பூதிகம் தொண்ணூற்றுரும் நான்கும் கூடிய நூருக அமையப் பெறும். அச்சியம் என்னும் உயிர்ப்பு ஒலி தோற்றம் தரா நிற்க.

"ஆகுதீ
யதனுற் காரெனும் அடரிருள் ஊஃநூ
எங்குள தென்ன எரியம் வத்தியாய்"

பிரணயமத்தில் ஆகுதி என்னும் மூலாக்கினி சுடர்விட அதனல் சூரியஉன மறைக்கும் மேகம் போன்ற இருள் கூட்டம் என்ற சொல்லுக்கே இடமில்லாது இருள் எங்குள்ளதென்ன சுடர்விட்டு சுவாலிக்கும் காற்றுடன் இயைந்து காணும் தீயாய்

"இயமெனுஞ் சொல்லொலி என்னப் பெறாஉங்
காருக வத்தியக் கனலென வும்இய
மெனுஞ்சொற் றூலத் தியைகாரணம் என"

Koviloor Digital Library

வத்தி நெடிதாகிய ஒலியத் தரலால் வாத்தியம் என்னும் சொற்காரணம் கொண்டு விளங்கப் பெறும் காருக வத்தியம் என்னும் (கார் - இருள். உருதல் - சிதருண்டு அழிதல். வத்தி - காற்றேடு கூடிய நெருப்பு). மூலாக்கினியால் தூலமாகிய சரீரத்திர் இயைந்து நிற்கும் காரண சரீரம் என்ன

"இரண்டு விதத்தி லியங்கப் பெறலால்
இயக்காய உவிதம் இயக்ய உவிதம்
ஆகிய நூறும்"

தூல காரணத்தில் வாயு சஞ்சாரத்தால் ஏற்படும் ஒலியும் ஒலிக்கு காரணமான பௌதீகாதாரமும் ஆகி ஒலி மயமாகிய உடம்பில் இரு பொருளாய் தோன்றி நிற்றலால் இயக்காய உவிதம் என்னும் யக்ஞோபவீதமும் ஆகிய நூலும்

"ஆசம அணி இயமும்
என்னத் துலங்கும் இயாகம் நூறுற்
சிறப்புற் றிந்திரன் தேவர் கோவாய்த்
திகழலுங்"

நாடிகள் தோறும் உயிரானது சமம்சமமாய் தொகைப்பாடு கொண்டு நிற்கும் உள்அழுத்தம் பெறும் தன்மையும் பெற்று விளங்கும் நிலையில் காரண சூக்கும சரீரம் அங்கி தாரணையால் தத்துவம் தொண்ணூற்ருறில் மிகைப்பாடு கொண்டு தோன்றும் நான்கும் கூடிய நிலையில் காரண சரீரத்திற்கு முதன்மைத் தானம் பெற்றுள்ள பஞ்ச தன்மை திறங்கள் தத்துவ லயம் பெற்று காணும் நிலையில்

"கனமுறச் செயச்சொற் றூலமாம்
ஆவிற் பவித்தலாம் அவிற்பவமும்
ஆவை வான அவியும் இயாகம்
துலங்கா குதியிற் சொரிந்து வேட்கைகொள்
ஐம்பொறி நுகர்உ விதமா கியகனம்
பத்தில் இயக்காயப் பசுநா றுறவே
ஆயிர மாக ஆகுதி வேட்க"

மேலும் சிறப்பியல்கள் விளையுமாற செய்ய அதனுல் கனம் பெற்ற இந்திரன் தேவர்களுக்கு அரசனுக விளங்க அந்நிலையில் சொல்அகம் கொண்டு விளங்கும் பசுவினிடத்து தோன்றுகின்றபடியால் ஆவிற்பவம் என்னும்

Koviloor Digital Library

அவிற்பவம் 'ஆ' வினிடத்து தோன்றப் பெறும் தன்மையால் அவி எனப் பெறும் தேவர் புசிக்கும் அமுதமும் தோன்றப் பெற இய யாகம் என்னும் சொல்லொலி உடம்பில் அங்கிதாரஊண செய்யுங்கால் நடுவென அமுதாய் சொரியுங்கால் அதனிடத்து விருப்பம் கொண்டு ஐம்பொறி நுகர்ச்சியில் தோன்றும் இருவகைப்பட்ட கனம் என்னும் பத்தில் இயக்கய பசு என்னும் யாகப்பசு நூருகி அதனுல் அது சாகா திறம் பெற்று விளங்க

"இக்கன ரகமா யிரங்கண்ணெனக் கொண்டு
இந்திரன் போகியாய் இலங்கத் தத்தெனத்
தோன்றுங் கனமென சொல்பூ ரிப்புக்
கூட்ட வொலிஎன கூறுங் கனஇயம்
எனுந்தத் கனக்கண இயவெரி யோங்கிப் யடர"

ஈண்டு கூறப் பெற்ற வாசிக்கதிர் விரி ஆயிரம் ஒளி நோக்கு உடையதாகி அகத்துறைப் பொருள் தோற்றம் உடையதாக பரியங்கி யோகம் விளங்க அப்பரியங்கியானது தத்தம் செய்ய ஆற்றல் உடையதாகிய நெருப்பென விளைந்து பெருகி சூழ்ந்து நிற்கும் தன்மைத்தால் தத்கனக்கண அக்கினி என்னும் மூலாக்கினியானது படர்ச்சியுற இவ்வாரும் ஒலி உடம்பு கொண்ட யாகப் பசுவாம் பிராணஊன

"விவ்யாகப் பசுவை ஆகுதீ
பூரண மாக்கும் பூரணு ஆகுதியில்
ஆசம அணிஇயம் ஆயிரம் நிறைவாய்
ஆயிரங் கதிருடை யருக்கனும் இயக்கயம்
கூறு செய்யுங் கூற்றனுஞ் சாமனும்
அங்கியுங் தோன்றிவ் வருக்கிய பாத்திய நிறைவிற்"

நடுவஊன அங்கி நிறைவு பெறச் செய்யும் நடுநிறை சுடரில் உயிர்ஒலி கதிர்கற்றை ஆயிரம் ஆகி சாகத்திறம் கொண்டு நிறைவு பெற சததசத்தாகிய ஒளிக் கூறுபாடு உடைய பரிதியும் இயக்கயம் என்னும் யக்ஞமோ ஒலி உடல் கூறுபாடு கொளச் செய்யும் கூற்றையும் சாமனுகிய சமநிறைவு கொள்ளும் சாத வேதாவும் தோன்றி விளங்கும் அருக்கிய பாத்தியம் என்னும் ரவிஒளி கூறுபாட்டு இயக்க நிறைவில்

"பண்ணவ ரிருடி களட்சதுர்த்
திரிகள் கஉலஞர் கள்தேவர் கோமான்
அஊவரும் கமைகொன் டடங்கித் தேனராய்த்
திகழுங் காம தேனு வாக"

அண்டர்கள் யுகளப்பதத்தர்கள் சரச்சாயகர்கள் சரச்சோதியர்கள் சுரபதி ஆகியோர் அஊவரும் ஒன்று பட்டு அமைந்து தேனராய்த் திகழும்

Koviloor Digital Library

காமதேனுவாக என்னும் புரையொராய் மறைந்து காணப் பெறும் காமதேனுவாம் தெய்வப் பசுவாக என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

“இத்திறம் திரிஎன்னும் நான்கில்
எஞ்சும் காரண அணிஎச்சம் ஆன
பகாஉவி தமாம்பதம் ஒரு நான்கும்”

பண் முப்பத்திரண்டும் பண்ணின் திறம், திறத்திற்குரிய இராகம் பண்ணியல் இராகம் ஆகிய நான்கில் மிகுதிப்பட்டு காணும் வரிசைத் தொகுதியில் பிரிக்க முடியாததாக ஒன்றுபட்டுக் காணும் சந்தம் பதம் கானம் லயம் ஆக நான்கும் சேர

“சேர நூறுகித் திகழ்தர லாயபண்
தூலம் என்ன சொல்லும் பஞ்சு
திரிநூ றுஆச் சியமுற ஆகுதீ”

நான்கும் கூடி நூறுகி விளங்கும் தூலதாரமாகிய பண்ணும் பண்ணின் திணையும் பண் ஒன்று மூன்றுகி நூறுகியதில் உயிர் ஒலி பிறக்க அதில் தோன்றும் சுருதியில்

“யதனுற் காரெனும் அடரிருள் ஊஃநூ
எங்குள தென்ன எரியும் வத்தியாய்”

பண்ணிசையாகிய இராகத் துழநியாய் மயக்கற்ற தெளிவு ஏற்படும் ஒலி விளக்கத்தால்

“இயமெனுஞ் சொல்லொலி என்ன பெறுஉங்
காருக வத்தியக் கனலென வும்இய
மெனுஞ் சொற்றூலத் தியைகா ரணம்என”

காற்றினுடைய இயக்கத்தால் உண்டாகும் சொல்லொலி ஆகிய பேர் பெறும் ஒளிவிளக்கு சுடர் எனவும் சொல்லாகிய தூலத்தில் தூலம் காரணம் என

“இரண்டு விதத்தி லியங்கப் பெறலால்
இயக்காய உவிதம் இயக்ய உவிதம்”

எழுத்தொலியானது தூலமாகிய சொல்லும் காரணமாகிய சீரும் ஆகிய இரண்டும் ஆக விளங்கப் பெறலால் இயக்காய உவிதம் என்னும் யக்ஞோப விதமாகிய

Koviloor Digital Library

"ஆகிய	நூறும்	ஆசமஅணி	இயமும்
என்னத்	துலங்கும்	இயாகம்	நூருற்
சிறப்புற்	றிந்திரன்	தேவர்	கோவாய்த்
திகழலுங்	கனமுறச்	செயச்சொற்	றூலமாம்"

சொல்லொலி முதலாகத் தோன்றும் பத்து எழுத்தும் கூட்டு எழுத்தாகிய 'ஐ'கான் 'ஔ'கான் ஒழிந்த பத்து எழுத்தும் கூடிய பெருக்கம் நூறில் ஆசம அணி என்னும் ஆசமணீயமாகிய எழுத்து ஒலித்திரள் ஆகிய சொற்றூலமாகிய நூறு ஐந்திறத்தால் சிறப்புற்று இயயாகம் நூருய் முப்பத்து மூன்று எழுத்தொலிக் கோவைக்கு முதன்மையுற்று தோன்றும் தலைப்படு சொல் நூறும் யாத்துள்ள யாப்பை கனமுறச் செய்யல் என்னும் அணி, ஆடை, அன்னம், தண்ணீர், வாழ்வு, செயல், கல்வி, கேள்வி காணி, காட்சி ஆகிய மேன்மை பாட்டியல் பத்தாய் விளங்கும் அங்கி, அம்பரி, மூர்த்தி, ரஞ்சனி, ப்ரியா, கிரியா, காம்போதி, விசாவரி, வசந்தா, நாட்ட ஆகிய பண்வண்ணம், பண்முறை, பண், பண்ணீர்மை, பண்ணிசை, பண்ணியல், பண்வாய்மொழி, பண்நடை, பண்தார், பண்திறம் ஆகியனவாய் விளங்கும் பத்துடன் நூறும் கூட அயிரம் ஆகி

"சொற்றூலமாம்

ஆவிற்	பவித்தலாம்	அவிற்பவமும்	
ஆவை	வான	அவியும்	இயாகம்
துலங்கா	குதியிற்	சொரிந்து	வேட்கைகொள்
ஐம்பொறி	நுகர்உ	விதமா	கியகனம்
பத்தில்	இயக்கயப்	பசுநூ	றுறவே
ஆயிர	மாக	ஆகுதி	வேட்கவிக்
கனரக	மாயிரங்	கண்ணெனக்	கொண்டு
இந்திரன்	போகியாய்	இலங்கத்	தத்தெனத்"

சொல் அகமாகி உயிர்ப்பொலியாக உயிரால் தோன்றப் பெறும் பண்ணும் பண்ணில் தோன்றும் திறமும் திறத்தில் தோன்றும் திரியும் செரிவுற்றுக் காணுமாறு ஒத அதனுல் விழைபொறியில் தோன்றிய ஏற்றம் இறக்கம் என்னும் ஆரோகன அவரோகனமாகிய கனம் பத்தில் இயக்கய பசு என்னும் சொல் அக இசை நூறும் கூட ஆயிரம் ஆக சுருதியானது கவர்ச்சிகரங் கொண்டு தோன்ற அவ்வாறு தோன்றிய கனரகம் ஆயிரத்தையும் நாட்டம் ஆயிரமாகக் கொண்டு இசை பெறும் போகியாகிய இந்திரன் என்ன ஆயிரங் இராகங்கள் தோன்றி நிற்க

"தத்தெனத்	தோன்றுங்	கனமெனச்	சொல்பூரிப்புக்
கூட்ட	வொலி	எனக்கூறுங்	கனஇயம்
எனுந்தத்	கனக்கண	இயவெரி	யோங்கிப்படர"

ஈாஉமரு

Koviloor Digital Library

தத்தகாரச் சுருதியிற் தோன்றும் சொல் உறழ்ச்சிக் கூட்டமாகிய சுருதிஒலி ஆகிய இசையை பூவூடிய மறை தட்சிணுக்கினியம் என்று சொல்லி பரவ

"படரவிவ்	வியாகப்	பசுவை	ஆகுதீ
பூரண	மாக்கும்	பூரணு	குதியில்
ஆசம	அணிஇயம்	ஆயிரம்	நிறைவாய்
ஆயிரங்	கதிருடை	யருக்கனும்	இயக்கயம்
கூறு	செய்யுங்	கூற்றனுஞ்	சாமனும்
அங்கியுங்	தோன்றிவ்	வருக்கிய	பாத்தியநிறைவிற்"

இச்சொல் அகமாம் முழு இசையை சுருதி கூட்டு இசைத்து நிறைவு செய்யும் நிரல்நிறையில் காணப் பெறும் உயிர்ப் பொலி திரளுரு நிறைவு கொள்ள தோன்றலால் ஆயிரம் கதிர்களைத் தரும். அருக்கனுகிய சூரியனும் இயக்கயம் என்னும் மறைகாயத்தை திறங்கொள்ள செய்யும் தன்மையால் கூற்றனும் சமம் சமமாக வகுத்துக் காணும் தன்மையால் சாத வேதாவாகிய அழற் கடவுளும் தோன்றிக் காண இந்த வருக்கிய பாத்திய நிறைவு என்னும் ஆயிரங் கதிர்களையுடைய ரவி ஒளி கூறுபாட்டு கலை நிறைவில்

"பண்ணவ	ரிருடி	களட்	சதுர்த்
திரிகள்	கலைஞர்கள்	தேவர்	கோமான்
அனைவருங்	கமைகொண்	டடங்கித்	தேனராய்த்
திகழுங்	காம	தேனு	வாக".

தேவர்கள் ரிஷிகள், அப்சரஸ்கள், கலைஞர்கள், தேவேந்திரன் ஆகிய அனைவரும் ஒன்று கொண்டு அமைந்த தோற்றத்தைக் காட்டாமல் நிற்கும் கமைதேனுவாகிய தெய்வப் பசுவாம் காமதேனுவாக இப்பூவுடிய இசைத் தமிழ் தோன்றலாயிற்றென்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை விளக்கம் வருமாறு.

கர்மபாகை

"இத்திறம்	திரீ	என்னும்	நான்கில்
எஞ்சும்	காரண	அணிஎச்	சம்ஆன
பகாஉ	விதமாம்	பதம்ஒரு	நான்கும்"

இவ்வாறு திறம்பட தோன்றும் தேவர்களும் சுவைதா என விருப்பம் கொள்ளச் செய்யும் அப்சரஸ்களும் வேள்வித்தீயில் அவிசுஅட மெனும் அவ்அவிசுஅட சுவாகாய் செய்யப் படலாகிய இந்நான்கில் மிகுதிப்பட்டு காணும் கரணீயாசமும் நாமாவளியை நூருக ஆக்கும் பகாஉவித மொழி நான்கும் அதனுல் முன்னூலாகி விளங்க

Koviloor Digital Library

"சேர	நூறுகி	திகழ்தர	லாயபண்
நூலம்	என்னச்	சொல்லும்	பஞ்சு
திரிநூ	றுஅச்	சியமுற	ஆகுதீ"

செப்பம் செய்யும் பொழுது உருப்பெற்று விளங்கும் நூறு முந்நூலாகி அகர வரிசை பெற்று விளங்க அதனால் வேள்வி ஆகுதி செய்ய ஒளிபெற்று

"அதனுற்	காரெனும்	அடரிருள்	ஊஃநூ
எங்குள	தென்ன	எரியும்	வத்தியாய்"

இருள் அறும்படியாக உதாசனன் ஒளிபெற்று நாமாவளி மந்திரத்துடன்

"இயமெனும்	சொல்லொலி	என்ன	பெறூஉங்
காருக	வத்தியக்	கனலென	வும்இய
மெனுஞ்சொற்	றூலத்	தியைகா	ரணம்என
இரண்டு	விதத்தி	லியங்கப்	பெறலால்"

காருகபத்திய அக்கினியாகவும் பஞ்சால் விளங்கி காணப் பெறுவன வாகியதும் ஆக இருவகைத் தன்மையால் அமைவு பெற்று காணலால் அதாவது ஓம அக்கினியாலும் ஓம மந்திரத்தாலும் உருப்பெற்று விளங்கலால்

"இயக்காய	உவிதம்	இயக்ய	உவிதம்
ஆகிய	நூறும்	ஆசமஅணி	இயமும்"

இயக்காய உவிதம் என்னும் எக்ஞோபவீதமும்

"என்ன	துலங்கும்	இயாகம்	நூறுற்
சிறப்புற்	றிந்திரன்	தேவர்	கோவாய்
திகழலுங்"			

யக்ஞோபவீதமாகிய நூலும் ஆசம அணிஇயம் என்னும் ஆசமனமும் ஆக விளங்கும் யாகம் நூறு என்னும் காருகபத்திய ஓமா அக்கினி துலங்கும் யாகமும் அதில் தோன்றும் நூறும் கொண்டு சதமகன் என்னும் இந்திரன் கனம் பெற்று தேவர்களுக்கு அரசாய் விளங்க

"கனமுறச்	செயச்சொற்	றூலமாம்	
ஆவிற்	பவித்தலாம்	அவிற்பவமும்	
ஆவை	வான	அவியும்	இயாகம்"

Koviloor Digital Library

மறைஒலியை கனம்பட ஓதுதலில் வேத மந்திரம் உருப்பெற்று விளங்குங்கால் பசுவினிடத்து தோன்றிய அவிற்பவம் என்னும் நெய்யும் 'ஆ' வானது ஈயும் அவியாகிய பஞ்ச கவியமும்

"துலங்கா	குதியிற்	சொரிந்து	வேட்கைகொள்
ஐம்பொறி	நுகர்ஊ	விதமா	கியகனம்
பத்தில்	இயக்கயம்	பசுநூ	றுறவே
ஆயிர	மாக	ஆகுதி	வேட்க"

வேள்வியில் விளங்கிக் காணும் ஆகுதி சொரிந்து விரும்பப் பெறும் ஐம்பொறி நுகர்ச்சி இரண்டாகி விளங்கும் பத்தில் இயக்குபசு என்னும் வேத மந்திரம் நூறும் ஏ. ஐ. ஒ. ஔ. அஹ ஆகிய ஈரெழுத்தொன்ருகிய பத்தெழுத்தில் நூறும் கூட ஆயிரம் ஆக அமைந்து

"இக்கன	ரகமாயிரங்	கண்ணெனக்	கொண்டு
இந்திரன்	போகியாய்	இலங்கத்	தத்தெனத்
தோன்றுங்	கனமெனச்	சொல்பூ	ரிப்புக்
கூட்ட	வொலிஎனக்	கூறுங்	கனஇயம்
எனுந்தத்	கனக்கண	இயவெரி	யோங்கிப்
படர"			

இவ்வாறு அமைந்த ஓமாக்கினியில் ஆகுதி செய்ய அதில் முற்கூறிய கனராகங்கள் ஆயிரமும் நாட்டம் கொள்ளும் போகியாகிய இந்திரன் தோற்றம் தர விளங்கும் கனராகமாகிய சொற்பூரித ஸ்ருதி கூட்டமாகிய கனம் பாடுங்கால் தட்சிணுக்கினியமாக வேள்வித் எழும்பி சுடர்விட அவ் வேள்வியில் வேள்விப் பசுவை நிறைவு செய்யும்

"விவ்	வயாகப்	பசுவை	ஆகுதீ
பூரண	மாக்கும்	பூரணு	குதியில்
ஆசம	அணிஇயம்	ஆயிரம்	நிறைவாய்
ஆயிரங்	கதிருடை	யருக்கனும்	இயக்கயம்
கூறு	செய்யுங்	கூற்றனுஞ்	சாமனும்
அங்கியுங்	தோன்றிவிவ்	வருக்கிய	பாத்திய
நிறைவிற்"			

வேள்விப் பசுவை நிறைவு செய்யும் பூராணுகுதியில் ஆயிரம் நிறைவில் செய்யும் ஆசமணீயமும் கதிர்ஒளி ஆயிரம் வீசும் இரவியும் யக்ய கூறுபாடு அமையச் செய்யும் சமனுகிய கூற்றனும் சமம் நெடிதுடைய சாமனுகிய செந்திக் கடவுளும் காணப் பெறும் அர்க்கிய பாத்திய என்னும் நீர்வஊவிட்டு காணும் நிறைவில்

அரஉமசு

Koviloor Digital Library

"பண்ணவ ரிருடிக ளட்சதுர்த்
திரிகள் கலைஞர்கள் தேவர் கோமான்
அனைவருங் கமைகொண் டடங்கித் தேனராய்த்
திகழுங் காம தேனு வாக".

தேவர்கள் அப்சரஸ்திரிகள் கலைஞர்கள் தேவேந்திரன் ஆகிய அனைவரும் ஒருங்கே அமைந்து அடங்கி மறைவுற்று நின்று காணும் இயல்பால் காமதேனு என்னும் தெய்வப்பசு தோற்றம் தரக்காணும் எனக் கர்மபாகை நிறைவு பெறும்.

"இயக்கா யப்பசு எழிலுருக் கொண்டு
தெய்வப் பசுவாய் உய்வுப மாமிரு
பிறப்புற விவ்விரு பிறப்புடையப் புரோகித
ருக தேவேந்திரன் அரசுய் வுபமாம்
வேள்வி வேந்தாய் விளங்கிக் காணவிவ்
ஆசம அணிஇயம் ஆயிரத் துண்ணடு
வணிஇய மாம்பிர மணிஇய மாகியவ்
வாயிரத் துண்ணு முயிரம் கோடியாய்ச்
சமஇயத் தடங்காச் சாமப் பிரியனுய்க்
கடந்த மெய்பொருள் கலந்து தோன்றலால்".

என்னும் சூத்திரத்திற்கு ஞானபாகை வருமாறு.

"இயக்கா யப்பசு எழிலுருக் கொண்டு
தெய்வப் பசுவாய் உய்வுப மாமிரு
பிறப்புற"

மறையொலிக்கு ஆதாரமாய் விளங்கும் உயிர் மாசற்றதாகி விளக்கம் தரும் உருப்பெற்று தெய்வீகத் தன்மை வாய்ந்ததாய் விளங்கல் ஆகிய காரணத்தால் உயிர்தளிர்க்கச் செய்யும் சாவாகிய உயிர்உபம் என்னும் இருபிறப்பைப் பெற

"விவ்விரு பிறப்புடைப் புரோகித
ருக தேவேந்திரன் அரசுய் வுபமாம்"

இந்த இரு பிறப்பையுடைய அந்தணளருக காரண சூக்கும ஆதி தெய்வீகம் பெற்று விளங்க தெய்வீகத் தன்மை மறுமலர்ச்சி பெற்று விளங்க

Koviloor Digital Library

"வேள்வி வேந்தாய் விளங்கிக் காணவிவ்
ஆசம அணிஇயம் ஆயிரத் துண்ணடு
வணிஇய மாம்"

அதனுல் எதிச்சுரனுய் தோற்றங் கொண்டு காணப் பெறும் இந்த உயிர் அணுத்திரள் ஆயிரத்துள்ளும் நடுவனை யமுதமாம்

"பிரமணி இயமாகியவ்
வாயிரத் துண்ணு றுயிரம் கோடியாய்ச்
சமஇய் தடங்காச் சாமப் பிரியனுய்க்
கடந்த மெய்பொருள் கலந்து தோன்றலால்"

(பிரமணி இயமாகி) பிராமன்யமாகி காணும் அந்த சகத் தகத்துள் சதசகஸ்திர இலக்காரமாக அமைந்து நடுநிலைக் கூறபாடுகள் அனைத்திலும் நடுநிலை கொண்டு நடுநிலை பகுப்புக்குள் பிரிக்க பிரிக்க ஒவ்வொன்றிலும் நடுநிலை கொண்டு பிரித்தறிய முடியாததாய் எல்லையற்று கடந்து நிற்கும் உள்மெய்பொருள் விரவிக் காண பெறுதலால் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

"இயக்கா யப்பசு எழிலுருக் கொண்டு
தெய்வப் பசுவாய் உய்வுப மாமிரு
பிறப்புற"

காயமாகிய இவ்வுடம்பிற் றேன்றும் உயிர்ப்பு ஒலி அழகிய உருவங் கொண்டு தோற்றம் தராநிற்க காணும் இயலில் அது தேவ பாசை என்னும் வடமொழியாகவும் சித்தர் பாசை என்ன அகத்தியம் தந்த தென்மொழியாகவும் இருபிறப்புற: இரண்டு பிறப்புறத் தோன்றும் மொழியாக

"விவ்விரு பிறப்புடைப் புரோகித
ளுக தேவேந்திரன் அரசுய்வுபமாம்
வேள்வி வேந்தாய் விளங்கிக் காண"

அதில் முப்பத்தி மூன்று கோடி பெற்றதாகக் காணும் தேவர் குழாத்தின் அதிபனுக அமைவு பெறவும் அந்த தேவர் குழாத்தின் அரசு அழியாமல் நிலைபேறு கொள்ள செய்யச் செய்யும் வாய்மையுடையதாகி தேவேந்திர பதத்தை நிலைக்கச் செய்யும் அகத்தியம் தந்த மொழியாகிய சித்தர் மொழியாம் பதினெட்டு எழுத்துக்களை கொண்டதாகிய ராஜஜுய யாகம் என்னும் அரசு உய்வு உபம் தந்த சித்தராம் அகத்திய முனியாகிய சித்தர் தந்த சித்தர் மொழியாம் தமிழும் இய ஆக அரசு என்னும் படியாய் தோற்றம் தர

Koviloor Digital Library

"விவ் ஆசம அணிஇயம் ஆயிரத்துண்ணடு
வணி இயமாம் பிரமணி இயமாகி"

அதில் ஆசம அணி இயம் என்னும் உயிர்ப்பொலித் திரள் வரிசை ஆகிய சொல்லிசை ஆயிரமாகிய ஆயிரம் இராகத்துள்ளும் நடுநின்று ஒலிக்கும் சுருதி செரிவு கொண்டு விளங்கியும்

"யவ்வா யிரத்துண் ணூறுயிரம் கோடியாய்ச்
சமஇயத் தடங்காச் சாமப் பிரியனுய்க்
கடந்த மெய்பொருள் கலந்து தோன்றலால்"

அந்த இராகம் ஆயிரத்துள்ளும் நடுநிலை கொண்டு நூருயிரம் ஆகியும் அந்த நூருயிரத்துள்ளும் நடுநிலை கொண்டு கோடியாகி சுரம், அனுசுரம், சுரிதகம் ஆகி விளங்கலால் சமஇயமாம் சமயத்தில் அடங்கப் பெருத சாமப் பிரியன் என்ன சமம்சமம் எனப் பிரிப்பதில் பிரிக்க முடியாத சாமப் பிரியன் என்ன முற்கூறிய தவளாகரம் தத்தவுரியம் கடந்த மெய்பொருள் இவ்வாருக கலந்து நிறைவு பெற்று தோன்றலால் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

"இயக்காயப் பசு எழிலுருக் கொண்டு
தெய்வப்பசுவாய் உய்வுப மாமிரு பிறப்புற"

வேள்வித்தீயில் இடப்பட்ட யஞ்ய பசுவானது மீண்டும் அழகிய தோற்றம் பெற்று தெய்வீகப் பசுவாய் வருதலாகிய உய்வு உபம் என்னும் மாற்றிப் பிறப்புற

"விவ்விரு பிறப்புடைப் புரோகித
ளுக தேவேந் திரன்அர சுய்வுபமாம்
வேள்வி வேந்தாய் விளங்கிக் காண"

இருப்பிறப்பாலரென்னும் அந்தணாளனுகிய வேள்வி ஆச்சாரியனுய் அமரர்கட்கு அரசனுனவன் ராஜஜுய யாகம் என்னும் அரசு உய்வு உபவேள்வி கர்த்தாவாய் தோற்றம் தர

"விவ்ஆசம அணிஇயம் ஆயிரத் துண்ணடு
வணி இயமாம் பிரமணி இயமாகி"

ராஉமா

Koviloor Digital Library

வேள்வி ஆசமணியாம் செய்யுங்கால் அது சகஸ்திர மத்தியமான பிராமண்யமாய்

"யவ்வாயிரத் துண்ணூ ருயிரம் கோடியாய்ச்
சமஇயத் தடங்காச் சாமப் பிரியனுய்க்
கடந்த மெய்பொருள் கலந்து தோன்றலால்"

பிராமண்யத்துள் நூருயிரம் கோடி என்னும் சகத்திர நேர்த்திர கௌவிகமாய் சமநிலையில் அடங்காது ஒடுங்கி விரிவுற்றுக் காணும் சமநிலைப்பிரிவில் பிரிக்க முடியாத ஒருமைப்பாடு கொண்டு மேற்கொளக் காணும் கடவுளற்யியற்கை கலப்புற்று தோன்றுதலால் அமைவு பெறல் என்னும் ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகை ஆகத் தோன்றும் பூவூடிய தொகுதி விளக்கம் தரும் பொருள் திறம் வருமாறு.

ஆச்சீ ராய்முன் னமைபகு விதமும்
விவித மாகி விரிந்து தோன்றவவ்
வாச்சீர் விவதத் தநேகம் சிக்கியை
பாஞ்சடி லச்சடை யாகிய சிகையாம்
சிக்குக் கற்றைச் செழுஞ்சடை யாகி
யதனிற் சோம்ப னடுங்க லோசையாம்
குரலும் விளரியுங் கொண்டு தோன்றலும்
யோகினி மோகினி யாகிய முதிரியை
யாங்கை காட்டலில் அடக்கி யிவ்வாறும்
திறம்திரி நூற்கனத் திற்சிக் கியைபாஞ்
சிகையைம் பாலிற் றிகழும் பகாஉவிதப்
பண்சார் படியாம் பஞ்ச வடியும்
அதிலிசை ஏழும் அகம்படி நான்காம்
ஆய்ச்சீ ரமைவெனும் ஆச்ரமம் நான்கும்
ஆகிய சார்பு அந்நிய எச்சமாம்
சந்நியா சமதாக விந்நியா சமாய்
விளங்கு கோகனத விரிஇதழ் ஆயிரம்
சரிகம பதமெனச் சார்அளி முரல
பிசிதற் றேனப் பிழையிது பகாஉச்
சடையிற் முழ்மலர் சரிகம பதநி
என்று மலர்மிசை ஏகிச் சீனச்
சீகரம் வீசித்திகழ் தர விரியும்
அறஆழி யனுய் அந்தணன் றேன்றிச்
சொல்லறச் சொல்லும் சுசிகரக் கலையிற்

Koviloor Digital Library

பொய்ம்மல	ராகிப்	பூவிற்	றுழும்
பூவாய்ப்	பிரமஅன்	புவியில்	ஆலயம்
கொள்ளாக்	குசையாம்	புல்லெனத்	திகழவும்
கைக்கொண்	டுணர்ந்துவற்	கலையாய்த்	திகழும் (உ௰உ)

சி.

"ஆச்சீ	ராய்முன்	னமைபகு	விதமும்
விவித	மாகி	விரிந்து	தோன்றவவ்
வாச்சீர்	விவதத்	தநேகம்	சிக்கியை
பாஞ்சடி	லச்சடை	யாகிய	சிகையாம்
சிக்குக்	கற்றைச்	செழுஞ்சடை	யாகி
யதனிற்	சோம்ப	னடுங்க	லோசையாம்
குரலும்	விளரியுங்	கொண்டு	தோன்றலும்"

உய்வொலிப் பிரபயாய் பகுத்துக் காணும்படி முன்னர் அமையப் பெற்ற பகுப்பு வகையும் அப்பகுப்புக்குள் அடங்காமல் நானுவிதமாகி விரிவு பெற்றுக் காண அவ் உயிர்வொலி பிரபையில் பல்வகைப்பட்ட பிரிவுரு நிலை ஏற்பட்டு காணப் பெறும் சடலம் என்னும் பூதிகம் உருவதிரட்சி கொண்டு உளதாகியதாம் சிக்கல் நிறைந்த தொகுதி கூட்டம் கொண்ட உருவமாம் உடம்பை பெற்று அதனிடத்து ஆலசீய அதிர்வு காரணமாக தோன்றக் கூடிய ஒலியாம் குரலும் விளரி ஓசையும் கொண்டு காணப் பெறும்.

"யோகினி	மோகினி	யாகிய	முதிரியை
யாங்கை	காட்டலில்	அடக்கி	யிவ்வாறும்"

யோகினி முத்திரை மோகினி முத்திரை ஆகிய கைக் குறிப்பில் அடக்கி இவ்வாருகிய

"திறம்திரி	றூற்கனத்	திற்சிக்	கியைபாஞ்
சிகையைம்	பாலிற்	றிகழும்	பகாஉவிதப்"

தூல காரண சூக்குமத்தில் புகுந்து பிரிக்க முடியா இயற்கை கொண்டு உள்ள நிமிலி ஐந்தில் இடங் கொண்டு விளங்கும் கூறுபாடு செய்ய இயலாத தன்மை உடைய

"பண்சார்	படியாம்	பஞ்ச	வடியும்
அதிலிசை	ஏழும்	அகம்படி	நான்காம்
ய்சீரமைவெனும்	ஆச்ரமம்	நான்கும்"	

Koviloor Digital Library

பூதிகச் சார்பு படிவமாய் விளங்கும் பேர்திறமும் அதில் தோன்று நிற்கும் இசைவு கொண்டுள்ள எழுவகை நிறைவு அடுக்கு ஒரு நான்காகிய உயிர்நிலை அமைவு கொண்டுள்ள குடிலம் (கூடுலயம்) நாலும்

"ஆகிய	சார்பு	அந்நிய	எச்சமாம்
சந்நியா	சமதாக	விந்நி	யாசமாய்"

ஆன தொடர்பு நீக்க மிகுதிப் பாடுள்ள சந்நியாசம் என்னும் இந்நியாசமாகி (வேற்றுமைப்பாடு கொண்டதாகி)

"விளங்குஇக்	கோகனத	விரிஇதழ்	ஆயிரம்
சரிகம	பதமெனச்	சார்அளி	முரல"

விளங்குகின்ற இந்த சேதனவள படர்ச்சி கொண்டு விளங்கும் சகஸ்திரார கமலம் மலர்வுற்றுக் காண அதில் அறுபதம் சார்வு பெற்று ஒலிக்க

"பிசிதற்	றேனப்	பிழையிது	பகாஉச்
சடையிற்	றும்மலர்	சரிகம	பதநி
என்று	மலர்மிசை	ஏகிச்	சீஎனச்
சீகரம்	வீசித்	திகழ்தர	விரியும்"

தற்போதம் இழந்து பரபோதத்தால் காணப்படும் மாறுபாடாகிய ஓசை இது என நடுநிலை விரிவு கொண்டுள்ள சிக்கலில் தாழ்வுற்றுக் காணும் மலர்ச்சி ஒலியேயாகும் இது எனவும் அறுபதத் துழநி ஒலி நிறைவு காண முடியாதது என்று ஒலி மலர்ச்சியை எதிரிட்டு ஒறுத்து கைக்குறி காட்டி மறுக்கும்

"அறஆ	ழியனுய்	அந்தணன்	றேன்றிச்
சொல்லறச்	சொல்லும்	சுசிகரக்	கலையிற்
பொய்மல	ராகி	பூவிற்	றுழும்
பூவாய்ப்	பிரமஅன்	புவியில்	ஆலயம்
கொள்ளாக்	குசையாம்	புல்லெனத்	திகழவும்
கைக்கொண்	டுணர்த்துவற்	கலையாய்த்	திகழும்"

ஆரண வாருதியாய் குளிர்கலை நிறைவுறு தோன்றலால் விளங்கி சொல்லாமற் சொல்லும் பாவன யியற்கலையில் மலர் போலியாக மலரில் கீழ்மைப்பட்ட மலரென ஆகி நடுநிலையற்றவன் என்னபெற்று உலகில் பசு ஒடுங்கு நிலை கொள்ளா சரம்என படிவு கொள்ள விளங்கும் கைக்குறியில் அமைந்து வலிமைபெற்ற கலையாக விளங்கும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

ராஉமா

Koviloor Digital Library

அர்த்தபாகை

"ஆச்சீ ராய்முன் னமைபகு விதமும்
விவித மாகி விரிந்து தோன்றவவ்
வாச்சீர் விவதத் தநேகம் சிக்கியை
பாஞ்சடி லச்சடை யாகிய சிகையாம்
சிக்குக் கற்றை செழுஞ்சடை யாகி
யதனிற் சோம்ப னடுங்க லோசையாம்
குரலும் விளரியுங் கொண்டு தோன்றலும்"

உயிர்க்கலையாய் முன் அமைவுற்று தோன்றி பகுத்துக் காணும் செயற்பாடு பகுக்க முடியாத பலகூருகி படர்ச்சி பெபற்றுக்காண அவ்வுயிர்க்கலை விரியில் ஒன்றல்லாததாகி சிக்கும் இயற்கை கொண்டு திறம் திரி கணம் என்ன மயிற்கற்றை போன்று பின்னல் உடையதாகி சோம்பல் காரணமாகவும் நடுக்கம் காரணமாகவும் தோன்றும் குரலும் விளரியும் ஆகிய ஒலி பிறக்க

"யோகினி மோகினி யாகிய முதிரியை
யாங்கை காட்டலில் அடக்கி யிவ்வாறும்
திறம்திரி நூற்கனத் திற்சிக் கியைபாஞ்
சிகையைம் பாலிற் றிகழும் பகாஉவிதம்"

அவ்ஒலிக்குரிய கைகாட்டலாகிய யோகினி முத்திரை மோகினி முத்திரை ஆகிய பரத முத்திரையும் முற்கூறிய திறம்திரிகணம் என்னும் ஐந்தில் தோன்றிக் காணும் பாகவத மெய்வளமும்

"பண்சார் படியாம் பஞ்ச வடியும்
அதிலிசை ஏழும் அகம்படி நான்காம்
ஆய்சீ ரமைவெனும் ஆச்ரமம் நான்கும்"

ஐவகை பண்ணிற்குரிய அடிகளும் அதிற்ருேன்றும் ஏழு இசையும் அவ்வேழிசையில் தோன்றும் பாக்கள் நான்கும் அந்நான்கு சீரில் அமையும் ஆய்சீரமைவாகிய யாழ் நான்கும்

"ஆகிய சார்பு அந்நிய எச்சமாம்
சந்நியா சமதாக விந்நி யாசமாய்"

இவ்வகை சார்பில் தோன்றும் வேறுபாட்டின் மிகுதி கூட்டங்களாகிய மெய்வளம் என்னும் மேளம் அதற்குரிய கர்த்தா சன்னியம் என்னும் (உட்பிரிவு) ஆக

Koviloor Digital Library

"விளங்குஇக்	கோகனத	விரிஇதழ்	ஆயிரம்
சரிகம	பதமெனச்	சார்அளி	முரல
பிசிதற்	றேனைப்	பிழையிது	பகாஉச்
சடையிற்	றாழ்மலர்	சரிகம	பதநி
என்று	மலர்மிசை	ஏகிச்	சீஎனச்
சீகரம்	வீசித்	திகழ்தர	விரியும்
அறஆ	றியனுய்	அந்தணன்	றேன்றிச்
சொல்லறச்	சொல்லும்	சுசீகரக்	கலையிற்
பொய்மல	ராகி	பூவிற்	றாழும்
பூவாய்	பிரமஅன்	புவியில்	ஆலயம்
கொள்ளாக்	குசையாம்	புல்லெனத்	திகழவும்
கைக்கொண்	டுணர்த்துவற்	கலையாய்	திகழும்."

விளம்பிக் காணும் இந்த ஒலிக்கூட்ட கனரகம் என்னும் கனராகமாம் ஆயிரமும் மலர்ச்சி பெற்றுக்காண இதில் சரிகமபதமெனச் சரளியானது இசைக்க அவ்விசையானது மது அருந்திய வண்டு போன்று சொல்விளம்பக் காணும் இசை என்றும், அதனல் கூறியது கூறுலாகிய வழு ஏற்படுகின்றது. மேலும் பிரிக்க முடியாத திறம் திரிகனம் என்னும் சடையில் தாழ்வுற்றுக் காணும் மலர்ச்சியாக இருக்கின்றது. சொன்னதை சொல்லுவதேயல்லாது இசை ஒலிகளை அளக்கும் நிறைவு பெற்ற ஒலியாக சரிகமபதநி என்னும் ஒலி பெருது என்றதாக ஓசை பூவின்மீது எதிரிட்டுச் சென்று சீ என்று ஒறுத்து கைவீச்சுத் தரவீசி கரதலத்தால் ஒற்றறுத்து நிற்கும் ஆரவார மறைமுழங்கும் மறையவன் தோன்றி நின்று சொல்லாமற் சொல்லும் மாசற்ற கலையில் ஓசைப் பூவானது பொய்பூவாகி தாழும் பூவாக நடுநிலை இல்லாத சதுர்மறை முழக்கம் ஜுவலயம் கொள்ளாத நாணலாக காணும்படி கைக்குறியால் காட்டும் பேராற்றல் பெற்ற கலையாகவும் அக்கலை சருமமாகவும் காண முதற்பொருள் நிற்கும் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை விளக்கம் வருமாறு.

குறிப்பு :– தமிழ்மறையாகிய தேவாரத்திற்கு பண்ணிசை வகுக்குங்கால் பண்திறத்தில் தோன்றும் இராகம் இசைப்பதைத் தவிர சரிகமபதநி என்னும் சார்அளி இசைக்கப் பெருமைக்குக் காரணம் இதில் காணகிடைப்பதை நோக்குக.

"ஆச்சீ	ராய்முன்	னமைபகு	விதமும்
விவத	மாகி	விரிந்து	தோன்றவவ்
வாச்சீர்	விவதத்	தநேகம்	சிக்கியை
பாஞ்சடி	லச்சடை	யாகிய	சிகையாம்

Kovilpoor Digital Library

சிக்குக் கற்றைச் செழுஞ்சடை யாகி
யதனிற் சோம்பல் னடுங்க லோசையாம்
சூரலும் விளர்யும் கொண்டு தோன்றலும்"

மறைமொழி வாழ்த்தாக முன்பு அமைந்த பகுப்புக்கள் பலவகையாக விரிவு பெற்றும் திருவேடச் சிறப்புப் பொலிவைத் தரும் சடை முடியும் அதற்குரிய ஒலிச் சிறப்பும்

"யோகினி மோகினி யாகிய முதிரியை
யாங்கை காட்டலில் அடக்கி யிவ்வாறும்
திறம்திரி நூற்கனத் திற்சிக் கியைபாஞ்
சிகையைம் பாலிற் றிகழும் பகாஉவிதப்
பஞ்சார் படியாம் பஞ்ச வடியும்"

யோகினி மோகினி முத்திரையைக் காட்டும் கை குறிப்பும் முந்நூலும் சிகையும் பஞ்ச வடியும்

"அதிலிசை ஏழும் அகம்படி நான்காம்
ஆய்சி ரமைவெனும் ஆச்ரமம் நான்கும்
ஆகிய சார்பு அந்நிய எச்சமாம்
சந்நியா சமதாக விந்நி யாசமாய்"

மறையொலி முழக்கம் தரும் இசையை ஓதுதலும் நிறைவு பெற்ற பிரமச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு அடைவுநிலை ஒடுக்கமும் உலகியலில் வேறுபட்டு காட்டும் துறவுநெறி குறிச்சீர் அமைப்பும்

"விளங்குஇக் கோகனத விரிஇதழ் ஆயிரம்
சரிகம பதமெனச் சார்அளி முரல
பிசிதற் றேனப் பிழையிது பகாஉச்
சடையிற் றுழ்மலர் சரிகம பதநி
என்று மலர்மிசை ஏகிச் சீஎனச்
சீகரம் விசித்திகழ் தர விரியும்
அறஆ றியருய் அந்தணன் றேன்றிச்
சொல்லறச் சொல்லும் சுசீகரக் கலையிற்
பொய்மல ராகி பூவிற் றுழும்
பூவாய் பிரமஅன் புவியில் ஆலயம்
கொள்ளாக் குசையாம் புல்லெனத் திகழவும்
கைக்கொண் டுணர்த்துவற் கலையாய் திகழும்".

Koviloor Digital Library

இறைவன் திருநாமம் ஆயிரம் பாடித் துதிக்கும் பெரும் சிறப்பையும் கொண்டதாகி சரிகமபதம் என சரளிபாடுதல் சொல்விளம்பப் பெறல் சொல் விளம்பி கொண்டு பிழைபாடு என தவிர்த்து இறைவனுடைய திருமுடியில் இருந்து தாழ்ந்து வீழலுற்ற தாழும் மலர் சொல்லும் பொய்மொழியே சரிகமபதநி என்றும் இறைவன் பொய் சொல்லிய அந்த மலரின் எதிர்மறைப்பாடு கொண்டு நின்று கையால் சீ என்று ஒருத்து வீசிய இழி தகவுடையது தாழும் மலர் என்றும் தெய்வாரவாரமாம் தேவாரம் ஓதும் மறையொலி முழங்கு ஒலிகடலாக சொற்றுணை வேதியன் தோன்றி எழுதாக்கிளவியாகிய பரிசுத்தமான மறையை ஓதுதலில் மறையெனச் சொல்லும் மற்றவையெல்லாம் பொய் சொல்லும் பொய்மொழியாகி உலகில் இழிநிலை கொண்டு தாழ்வுற்றும் பொய் மறையை ஓதும் மறையவன் ஆலயம் புக்க தகுதியற்ற குசைபுல்லன் என கூறவும் கைக்குறி கொண்டு யாவற்றையும் உணர்த்தும் வலிமை வாய்ந்த கலையாக பூவூடியம் என்னும் சாமவேதம் நிறைவு பெறும்.

கரு உருவாகி வெளிநோக்கம் கொண்டு வெளிநோக்கிற்கு எட்டாமல் ஆக்கம் தரும் இயற்சீர் ஒன்று உண்டு என ஆராயுங்காலையில் அவ்வியற்சீரினின்றும் நடுநிலைத் தானம் தனித்து ஓர் உருப்பெருமல் யாவற்றிலும் நடுநிலை கொண்டு விளங்கக் கண்டு அருவம் அருஉருவம் இவற்றில்தோன்றி பொலிவு பெற்றுக் காணும் அகள சகளமாகிய பூஉருவத் தன்மை பொருந்திய இருவகை மலராம் பூவூடியத்துள் நடுநிலைத் தானம் கணிக்கப் பெறும் பொழுது அதனுடைய சார்கை ஆயிரமாக அதில் ஏழு கோடி மந்திரேஸ்வரர்களும் அணு சிதச் சிவனும் பூரியம் நிறைவு பெற்ற சகலரும், (ஆள்நவம் கனமம் மாயேயம்) ஆணவம் கன்மத்தில் மாயை ஐயம் பெற்று விளங்கும் மாயேயமும் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆயவை பொருந்திய சொல்லும் பதமும் தூலமும் கனமும் திரியும் ஆக தோன்றிய நூலும் மனோநிலை குறிப்பைக் காட்டும் சிகையும் பொருந்திய வித்தியா தத்துவத்தில் இசைஉருக் கொண்ட இராகமாம் பூருடமும் பிரித்தறியமுடியாத வல்லினமும் ஆக 'சி' காரம் தோன்றி நிற்றலில் பூவூடியம் என்னும் சாம வேதமாம் உருத்திரள் பாசுபத கைவல்லிய நவநீதம் விளங்கிக் காணும்.

சாமவேதம் நிறைவு

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Koviloor Digital Library

அதர்வண வேதம்

குறிஞ்சிப் பண்

பிரணவ வேதமாகிய துவித சித்தாந்தத்தில் கருப் பொருளாய் தோன்றும் நான்மறையாம் தவளாகரம் தத்தவுரியம் பூவூடியம் ஆகிய ரிக். யசூர். சாமவேதத்தின் தொடர்நிலைப் பொருளாய் அமைந்துள்ள அதர்வணவேதம் குறிஞ்சிப் பண்ணின் எழுதாக் கிளவியாக அமைந்து காணப் பெறுகிறது.

குறிஞ்சிப்	பண்ணெனக்	கூறும்	சங்கேதம்
ஆம்முது	மொழிச	அணுகிற	அகம்எனும்
நுதலிப்	புகுதலிற்	நுழைந்து	சிட்செயாம்
சூக்கம்	ஈறாறில்	தோன்றி	நிற்கும்
வியாகர	ணம்எனும்	மேற்கணக்	கொன்திற்
சார்ந்த	இசைவாம்	சந்தசு	என்னும்
எழுதாக்	கிளவி	மூன்று	இசைக்கும்
சுருதிமீச்	சுருதியில்	விளங்கும்	இயல்இசை
நாடகம்	மூன்றுய்	நவில்வதில்	இரண்டுள்
நிறுத்தம்	என்னும்	ஒடுக்கம்	ஐந்தில்
விவ்வித	மாக	விரிந்து	நிற்கும்
உபநிழ	லறமென	ஓதும்	நாடகம்
விளங்க	அமைத்து	விரிப்போம்	காண்க.

திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதற்றிருமுறையில் ஐந்தாவது பண்ணும் குறிஞ்சிப் பண்ணிற்குரிய கட்டளைத் திறங்கள் ஐந்து பதிகம் இருபத்தொன்பது. கட்டளைத்திறங்களாவன. (௧) நேர்மைத் திறம் (௨) ஆசான் திறம் (௩) நைவளத்திறம் (௪) செந்திறம் (௫) குறிச்சீர் திறம்.

குறிஞ்சிப் பண்ணிற்குரிய இலக்கணம்

ஒன்றுய்த்	தனித்த	உரிமையை	மேற்கொண்டு
அடங்கலுந்	தம்முள்	ளாக்குஞ்	சிறப்பஃ
துடமையாற்	கலியென்	றேதுங்	குறிச்சீர்
யாழ்சீர்	யாப்பொத்த	யாழிசைப்	பண்ணில்
யாழ்சீர்	யாப்பொன்	றுய்க்கவி	கவியில்
யாழ்சீர்	யாப்பிணை	யாங்குறட்	கவிதையில்
வியன்சீர்	கட்டல்	யாழ்மேவி	வந்த
யாப்பி	ணைக்குற	ளாகிய	கவிதையில்
யாழின்	மூய்விணை	யாப்பின்	வந்ததால்
குறிஞ்சிப்	பண்ணெனக்	கூறப்	பெற்றது.

Koviloor Digital Library

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த திருமுறைப் பெருநூல் விளக்கத்தில் ஐந்தாவது பண்ணுகிய குறிஞ்சிப் பண்ணில் எழுதாக்கிளவியாக வாமம் என்னும் அதர்வண வேதம் தோன்றும் சுருதியில் காணப்பெறும் கட்டளை ஐந்திற்குரிய விளக்கம்.

நேர்மைத் திறம்

இறைவனின் நேர்மையை எடுத்து இசைத்திட்ட
சீர்மையே நேர்மைத் திறமாய் விளங்கும்

ஆசான் திறம்

ஆசான் உரைக்கும் அருள்மொழி அதனை
மாணவன் கூறும் வாறுஆ சான்சொல்
தனதுரை யாகச் சாற்றும் அதுபோல்
எனதுரை தனதுரை என்ன இசைத்தது
ஆசான் திறமாய் அமைந்து காணும்.

நைவளத்திறம்

வளத்தில் மனது மகிழ்ந்து நெகிழ்ந்து
நேய நயவளம் நிகழ்த்தல் நைவளம்

செந்திறம்

வினைகரி சறுக்கும் நல்விளைவு செந்திறம்

குறிச்சீர் திறம்

இருப்பும் சிறப்பும் இசைத்தல் குறிச்சீர்

அற்புதப் பதிகம் விளக்கம்

வற்கடம் நீங்கும்படியாக படிக்காசு கொடுத்ததில் மாற்று குறைவான வாசி காணப்பெறுகின்றது என்பதை இசையில் சுதங்காண்போதி என்று இசையில் புகன்று அம்மாறு பாடை நீக்கும் செந்திறம் பகர்ந்து நிறைவன வேண்டி குறித்துக் கேட்கும் குறிஞ்சிப் பண்பாடி அவ்விசையில் குறிக்கோள் நிறைவுபெற கலிதீர் இருக்கு குறட் கவிதைபாடி அவ்வாருகிய பயனைப் பெற்றது வாசிதீரவே காசு நல்குவீர் என்னும் அற்புதப் பதிகம்

Koviloor Digital Library

அதற்குரிய விளக்க சூத்திரம் வருமாறு

பஞ்சம்	நீங்கும்	படிக்காசு	அளித்ததிற்
சுதங்காண்	போதி	துலங்குஞ்	செந்திறம்
அமைய	அருள்ளென்	றரனை	வேண்டி
குறிஞ்சி	பண்சீர்	கொள்ள	அமைந்த
கலிதீர்	இருக்கு	கவிதை	குறட்பண்
வாசி	தீரவே	காசு	நல்கென
வழுத்தியவ்	வாறறம்	வாய்க்கப்	பெற்ற
அருமை	யுடையது	விவ்வற்புதப்	பதிகம்.

மறைநூல் மரபிற்குரிய இலக்கண முறைப்படி ஒலிவழி பொருள் கோடலில் வேத அமைப்பை விளக்கும் பாஞ்சராத்திற வைகாநஸ விதியிற் கண்டவாறு சாமவேதத்திற்குரிய தாம்

"வேதம்	என்ன	விளங்கும்	தாளமும்
சந்தம்	பதமொடு	சார்தரு	கானமாக
நிற்பது	இந்த	குறிஞ்சிப்	பண்".

இது வைகாநசத்தில் ஏழாவது சூத்திரம். பாஞ்சரத்திறம் வைகாநஸத்தில் பனிரெண்டாவது சூத்திரம்.

குறிஞ்சிப் பண்ணின் எழுதாக்கிளவி
அதர்வண வேதம் என்னும் வாமநூற் சுருதி

சுருதி

குறிஞ்சிப்	பண்ணெக்	கூறும்	பெரும்பண்
வியன்சீ	ரென்னும்	வெளியும்	வெளியில்
இயங்கு	வளியெனும்	இயற்சீரும்	அதில்
மலர்நாள்	ஆக	வன்சீர்த்	தளைகொண்
டிலங்கும்	ஐந்துள்	ளியைந்தும்	அதீதமாய்
ஐந்தும்	தன்னுள்	ளடங்கத்	தனித்தும்
பூத நாதனும்	புண்ணியன்	என்னக்	
கலிச்சீர்	பெற்றுக்	கட்டளை	ஐந்தும்
சத்தியை	வுச்சிதம்	வாமம	தெய்வம்
அகஉரம்	தற்பூரீ	இடம்இசை	இணையமாய்
ஐம்முக	மாக	வமைந்த	பாணியாய்த்
துத்தம்	இளியதி	லொத்த	வோசையில்
குறிஞ்சிப்	பண்ணென	கூறும்	பெரும்பண்"

Koviloor Digital Library

குறிஞ்சிப் பண் எனப் பெயருடைத்தாக அமைந்த பெரிய பண்ணுனது வியன்சீ ரென்னும் வெளியும் வெளியில் இயங்கு வளியெனும் இயற்சீரும் ஆக காணப் பெறுகிறது. காரணம் முன்மொழிந்தது கோடல் என்னும் உந்தி. முன் மொழிந்தது ரிக்வேதம் என்னும் தவளாகரம் வெளியில் நாட்டம் கொள்ளும் இயல்புடைத்தாயிற்று. அதில் இஊத்து ஒய்ந்த காஜலயில் அதில் இயக்கம் கொள்ளும் இயற்சீராகிய சலனம் உடைத்தாம் வளியை தொகைப்படுத்தி தேடிப் பார்க்கும் பொழுது ஆன்மதத்துவத்தினின்றும் கஜலயாகிய வித்தியா தத்துவம் தோன்றிற்று அதைக் குறிப்பிடும் பொருட்டே இந்த குறிஞ்சிப் பண்ணில் வெளியிற் கால்கொண்டு எழுந்து அருவம் அரு உருவம் உருவத்தைக் கடந்து மலர்வுற்றுக் காணும் நாள்மலரும் பொலி உருமலரும் ஆகிய நேர்பூவாக தொகுக்கப் பெற்றிருக்கின்றது. அதுவே "வியன்சீர் என்னும் வெளியும் வெளியில் இயங்கு வளியென்னும் இயற்சீரும் அதில் மலர் நாள் ஆக வன்சீர் தஊக் கொண்டு இலங்குவது.அப்படி இலங்கும் வெண்சீர் இயற்சீர் மலர்நாள் ஆகிய நான்கில் வன்சீர் தஊயாம் வஞ்சிப்பாவாக யாத்து நிற்கும் ஐந்துள் அமைவு பெற்றும் அதில் அமையாமல் ஐந்தினும் மேம்பட்டு ஐந்தும் தன்னுள் அடங்கும் படியாக தனித்து நின்றும் விளங்கும் இயற்கை "மலர் நாள் ஆக வன்சீர் தஊ கொண்டிலங்கும் ஐந்துள்ளியைந்தும் அதீதமாய் ஐந்தும் தன்னுள்ளடங்கத் தனித்தும்" என்று கூறப் பெறும் காரணம் இப்பண்ணிற்குரிய தேவதையாம் அதிகார நாயகர் இறைவனுக இருக்கின்றபடியால் "பூத நாதனும் புண்ணியன் என்ன கலிச்சீர் பெற்று வந்தது. அதில் கட்டஊ ஐந்தும் விளங்கிக் காண்பது சத்தியை வுச்சிதம் என்னும் சத்த இயைவு சிதமாம் சத்தியோ ஜாதமும் வாமம் அது இயைந்த வாமம தேய்வம் ஆம் வாமதேவமும் அகஉரம் என்னும் அஹோரமும் தான்எனப் புரியும் இடமாகிய தற்புரீ இடமாம் தற்புரீஸமும் இசைந்து இஊயும் இசை இஊவாம் ஈசானியமும் ஆகிய ஐந்து முகங்களென முறையே பெயர் பெறும் செவி, கண், மார்பு, மெய், நாசி ஆகிய ஐம்முகங்கஊக் கொண்டு அமைந்தது எனக் கூறும் "சத்தியை வுச்சிதம் வாமம தேய்வம் அகஉரம் தற்புரீ இடம் இசை இஊயமாய் ஐம்முகமாக" என்றபடி பாவில் அமைவுறும் வரிசையாம் பாஅணியென்னும் பாணியாம் கரமாக "துத்தம் இளியதிலொத்த லோசையில்" காணும் சுருதிக்கு மீச்சுருதி விளக்கம் வருமாறு.

மீச்சுருதி

ஐம்முக	முடைய	ஆதி	பகவனும்
வெளிவளி	யங்கியில்	விளங்கும்	நாடகத்
தமிழுங்	கான்பொதிர்	தரச்செய்	யதர்வண

Koviloor Digital Library

வேதமும் வேதைய வித்தையவ் வைந்தவித்
தவர்வா வென்ன வழைத்த பாணி
யுருவமும் அதரவவ் வொலியுஞ் சீர்மைத்
தொழிலும் வகரந் தோன்ற நிற்கும்".

சந்தசு என்னும் சார்ந்த இசையில் தோன்றலுரும் எழுதாக் கிளவி மூன்றில் சுருதி என்னும் இயலிற் றேன்றிய மீச்சுருதி என்னும் இசையில் ஐம்முகம் என்னும் ஆதிபகவன் ஆகிய ஐம்முகச் சிவனும் வெளியாகிய தவளாகரத்திற் றேன்றும் வளியாம் தத்தவுரியம் ஆதாரமாய் தோன்றிய பூவூடியம் என்னும் சமநிலை பொருந்திய அங்கியில் தோன்றலுரும் நாடகத் தமிழுமாம் "வெளிவளி யங்கியில் விளங்கும் நாடகத் தமிழுங்" கானமும் அச்சமும் விளைவிக்கும் அதர்வண வேதமும் ஆம் "கான்பொதிர் தரச்செய் அதர்வண வேதமும்" அச்சத்தைத் தரும் மாறுபடுநிலை விளைவில்லாத விளைவாம் அவித்தையே அவ்வைந்தையும் அவித்தையாக்கியவர் வா என்ன அழைத்த பாணி ஆகிய உருவமும் என்னும் "வேதை யவித்தை யவ் வைந்தவித்தர்வா வென்ன அழைத்த பாணி உருவமும்"அகரம் தோன்ற செயல்படும் தன்மையால் அதரம் எனப் பெயருடைத்தாகிய உதட்டை வவ்வலாற் றேன்றுகின்ற ஓசையும் கொண்டு சிறப்பைத்தரும் தொழிலை உடையதாய் வகரம் தோன்றப்பெறும் "அதரவவ் வொலியுஞ் சீர்மைத் தொழிலும் வகரந் தோன்ற நிற்கும்."

இதிற்றேன்றப் பெறும் ஒடுக்கம் என்னும் நிறுத்தம் ஐந்தில் தெய்வம் என்னும் தேவர் ஐம்முகச் சிவன். ஒலி என்னும் சந்த உற்பவச்சீராம் சந்தோபவிசுதி துத்தம் இளியை ஒத்து நிற்பது. கலை என்னும் புராணம் வாமம் என்னும் அதர்வணம் உரு என்னும் காயத்திரி ஐந்தவித்தவர் வா என்று அழைத்த பாணியாம் கை. தொழில் என்னும் அநுட்டிப்பாம் அநுஷ்டிபு தீமைதீர் செம்மையாம் திரோபவம் இவைகளைக் கொண்டு திருஐந்தெழுத்தில் 'வ' கரம் தோன்றப் பெறும்.

ஈசோ வாச உபநிழலறம்

தோன்ற நிற்குஞ் சொருப விச்சுவத்
தூல காரணச் சூக்குமத் தொடுங்கித்
தேவர்கள் தேவ இந்திரனே டிருசிகள்
அட்சது ரத்திரி யவர்கள் கலைஞர்கள்
முதல்வர்கள் அனைவரும் முடிய எட்டா
அதீதமாய் நின்ற ஆதி பகவன்
வெளிவளி யங்கியில் விளங்கு பூவனனே
என்ன அதரவவ் விலக்காய்ச் சுராதிகள்
அதிர்ப்புறும் வாமமாம் அதர்வணச் சாலக
விபசு பாசமாய் விளங்கும் ஆன்எனும்

Koviloor Digital Library

மாவிலி	யைந்த	மாயையஞ்	சினத்திற்
காண்சீர்	கொண்டு	கணிக்க	முதற்பொருள்"

"தோன்ற	நிற்குஞ்	சொருப	விச்சுவத்
தூல	காரண	சூக்குமம்"	

விளங்கிக் காணும் உருவம் அவ்வுருவ விளைவைத் தரும் வித்து இயைபும் ஆகிய தூலம் காரணம் சூக்குமம் ஆயவற்றுள்

"ஒடுங்கித்	தேவர்கள்	தேவ	இந்திரனே
டிருசிகள்	அட்சது	ரத்திரி	யவர்கள்
கலைர்கள்	முதல்வர்கள்	அனைவரும்".	

பண்ணவர்களும் பண்ணவர் தலைவனும் ரிஷிகளும் அப்ஸரசுகளும், கலைஞர்களும், ஆகிய முதல்வர்கள் எல்லோரும் ஆகியோர்கள்

"முடியஎட்டா	அதீதமாய்	நின்ற	ஆதிபகவன்"

தோன்றிக் காணுப் பெருமல் நிலை கொணடுள்ள முதல்வனும் ஒன்ருகிய பொருள்

"வெளிவளி	யங்கியில்	விளங்கும்	பூவணனே
என்ன	அதரவவ்	விலக்காய்	சுராதிகள்
அதிப்புறும்	வாமமாம்	அதர்வணச்	சாகை"

வெளியும் வெளியினிடத்து உலவும் வளியாகிய காற்றும் அதனிடத்து தோன்றி நிலைபெறும் தீயும் ஆக விளங்குபவன் இதில் பூத்துக் காணும் பூவும் புட்கரமுமாகிய பூவணனே என்று உறுதிப்பாடு கொள்ளுங் காலை இதழ் அதுக்க தோன்றும் வகரத்திற்கு குறிக்கோளினராய் தேவர் முதலியனர் நடுக்கம் கொள்ள தோன்றும் வாமம் என்னும் அதர்வண வேத சாகையாம் சார்கை என்னும் சூத்திரத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

காணுப் பெரு நிற்கும் உருவமாகியும் அவ் உருவத்திற்கு முதல் காரணமான கருவாகியும் ஆகிய கரு உருவில் தோன்றிய தூலம் காரணம் இவைகட்கு முதலாய் உள்ள சூக்கும சரீரத்தில் ஒடுக்கம் கொண்டு தேவர்களாகிய அகக் கருவிகளும் அவ்வகக் கருவிகளுக்கு முதன்மை பெற்றுள்ள ஐந்திறமாகவும் தூல காரணமாகிய நாற்பத்தெட்டு இருசீர்களும் அட்சதுரத்திரியாகிய மூன்று முப்பத்திரண்டாகவும் பதினறு ஆருகிய

Koviloor Digital Library

தொண்ணூற்றுராய் முதன்மைப் பெற்று விளங்கும் எல்லோரும் நிறைவு காணற்கு இயலா வண்ணம் அது இது என்று திகைக்கும் படியாக முற்பட்டு நின்று முதல்வனுகிய இருகூர் ஒருவனும் முதல்வன் ஐம்பூதக் கூறுகிய பூவணனே என்று தீர்க்கம் கொள்ள அதனுல் அச்சுறுத்தப் பெறும் நடுக்கத்திற்கு இலக்காகிய தேவர்களாம் அகக்கருவிகள் ஒடுங்கும் படியாக தோற்றத்தைத் தரும் வாமமாகிய மந்திரமூர்த்திகர சாகை என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

'ஆ'வினமாகிய உயிர் இனத்தைக் கொண்டு விளங்கிக் காணும் உயிர்மெய் எழுத்தும் அவ்வெழுத்தில் தோன்றிய சொல்லும் அச்சொல்லில் தோன்றி நிற்கும் சீரும் இவற்றுள் பண்திறமாய் தோன்றி நிற்கும் பண்ணவர்களாகிய தேவர்களும் அத்தேவர்களுக்கு அரசாகிய மருதநிலத் தலைவன் என்னும் இருசீர்களும் அதில் அட்சரத்திரிபாய் தோன்றும் தாளமும் இவையாவற்றுக்கும் முதன்மைப்பாடு கொண்டுள்ள 'பா' இனங்கள் ஆறும் ஆகிய யாவற்றிற்கும் முடிவாய் நின்று எட்டாததாகி குழப்பத்தைத் தரும் முதல்வனுகிய ஓசையும் ஒலியுமாய்க் காணும் முதற் பொருள் வெளியில் தோன்றும் சலனமுடைத்தாகிய வளியும் அருஉருவத்தில் தோன்றிய உருவமாம் உதாசனனின் அவ்உதாசனனில் பூத்துக் காணும் புட்கர பூவணம் ஆயவைகளேயாம் சொல்மலரே யென்று நியதி கொள்ள அதனுல் பண் திறமாகிய பண்ணவர்கள் நிலைகுலையும்படி செய்யும் வாமம் என்னும் அதர்வண வேதசாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

சுக்கிலம் சோனிதம் என்னும் நாதவிந்துக்களால் தோற்றம் கொண்டு திகழும் தூலம் என்னும் மெய்யும தூலத்திற்கு காரணமாய் நிற்கும் உள்உடம்பாகிய நாடிக் கூட்டமாம் பூட்சி தொகுதியும் அதை இயக்குவிக்கும் நுண்பொருள் கூட்டமாகிய சூக்குமத்தில் ஒடுங்கிக் காணப்பெறும் தேவர்களாகிய அகக்கருவியும் தேவர்களுக்கு அரசாம் தேவேந்திரன் என்னும் விழைபொறி புணர்ப்பும் இருசீர்களாம் ரிசிகள் என்னும் பந்திப்பு நாடிகளும் அட்சதுரதிரிகள் என்னும் தத்துவக் கூட்டங்கள் தொண்ணூற்றுறும் குழவிப்பருவம், பாலப்பருவம், பாலியற்பருவம், யவ்வனப்பருவம், முதுமைப்பருவம், முடிவுறுநிலைப்பருவம் ஆகிய ஆருய் விளங்கும் இயற்கை உடம்பாகிய முதல்வர்களாம் கலைகளுர்களுக்கு எல்லாம் முடிவைத் தந்து எட்டாததாய் அது இது எனபேச நின்ற முதற்பொருளாம் பகவன் என்னும் பிரிக்க முடியாத இரண்டு என்பவற்றை விண், கால் தீ ஆயவற்றில் பூத்துக் காணும் பூவணமாகிய தொகுதியே முதற்பொருள் என்ன காணப்பெறும் காரணத்தால் மேற்கூறிய கருவிக்

Koviloor Digital Library

கூட்டமாம் வானோர்கள் பயம் கொள்ளும்படியாக இதழ் அதுக்கத் தோன்றும் அதர்வணம் என்னும் வாமமாம் சார்கையானது ஈண்டு கூறிய கர்பாகைக் குறிப்பைத் தரும்.

"விர்பசு	பாசமாய்	விளங்கும்	ஆன்எனும்
மாவில்	யைந்த	மாயையஞ்	சினத்திற்
காண்சிர்	கொண்டு	கணிக்க	முதற்பொருள்
எச்சம்	ஐந்துமே	விச்சுவ	ரூபமாய்த்
தன்னுள்	ளமைந்து	தலைப்படல்	கண்டு
விச்சுவே	டனருய்	வியந்து	சத்தியாம்
ஒலியைப்	பொறிவாய்	ஓரைந்	தாய
அஞ்சு	தலைகொண்	டறுக	வொருதலை"

என்னும் சூத்திரத்திற்கு ஞானபாகை விளக்கம் வருமாறு.

அதர்வண சாகை விரிவாகிய ஈசோ வாச உபநிழலற விளக்கத்திற்கு ஞாபாகை வருமாறு.

"விர்பசு	பாசமாய்	விளங்கும்	ஆன்எனும்
மாவிலி	யைந்த	மாயையஞ்	சினத்திற்
காண்சிர்	கொண்டு	கணிக்க	முதற்பொருள்"

படர்வுற்று பசுமை பொருந்தி ஒலி குன்றும்படியாகச் செய்யும் பாசத்தில் பொருந்திய ஆன் எனும் மாவாகிய ஆன்மாவைப் பற்றி நிற்கும் மாயை பொருந்தி அறியாமையால் அஞ்சினம் என்னும் காட்சிப் பொருளாய் காண்பதைக் கொண்டு கணிக்க முயற்சிக்கும் காலையில்.

"எச்சம்	ஐந்துமே	விச்சுவ	ரூபமாய்த்
தன்னுள்	ளமைந்து	தலைப்படல்	கண்டு"

முதற்பொருளாகிய உயிர்க்கு உயிராம் பிரமத்தின் எச்சம் என்னும் கழிவு பொருளாகிய ஐம்பூதங்களே பூதிகாதார தத்துவருபமாய் தன்னிடத்து உள்ளமைவு பெற்று தலைப்பட்டு விளங்குதலை கண்டு

"விச்சுவே டனருய் வியந்து சத்தியாம்"

விளைவைத்தரும் பொருளைத் தேடிக் காணும் வேட்கையாம் விச்சுவேடனையாளருய் தன்னைத் தானே வியந்து

/175.102

Koviloor Digital Library

"சத்தியாம் ஒலியைப் பொறிவாய் ஓரைந்தாய
அஞ்சுதலை கொண்டணுக"

சத்தி உருவமாம் நாதமாகிய ஒலியை பொறிவாய் ஓரைந்து ஆம் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து தலைப்புகளைக் கொண்டு நெருக்கம் கொள்ள என்னும் ஞானபாகைக்கு அர்த்த பாகை விளக்கம் வருமாறு.

"விரிபசு பாசமாய் விளங்கும் ஆன்எனும்
மாவிலி யைந்த மாயையஞ் சினத்திற்
காண்சீர் கொண்டு கணிக்க முதற்பொருள்
எச்சம் ஐந்துமெ விச்சுவ ரூபமாய்த்
தன்னுள் ளமைந்து தலைப்படல் கண்டு
விச்சுவே டனுறய் வியந்து சத்தியாம்
ஒலியைப் பொறிவாய் ஓரைந் தாய"

அர்த்தபாகை

எழுத்தும் சொற்பொருளுமாய் விளங்கிக் காணும் பாசியத்தில் இயைந்த பாசமாகிய மருட்சி குறில் ஐந்தைக் கொண்டு ஒலி பெருக்கத்தைக் கணக்கிட அக்கணக்கால் அளவிடப்படும் பொருள் கூட்டம் எல்லாவற்றையும் அளக்கும் அளவை குறில் ஐந்தும் ஒலி முதற் காரணப் பொருளின் கழிவுப் பொருளாகி பேருருவங் கொண்டு தன்உட் பொருளாகி எழுச்சி பெற்று நிற்பதைக் கண்டு முதற்பொருளை விரும்பி அதிசயமுற்று நாதவடிவாம் ஒலியை மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் பொறி ஐந்தாகிய ஐந்து தலைப்புக்களைக் கொண்டு நெருங்க என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

ஆசாபாசங்களில் தோய்ந்து விளங்கும் உயிர் கணங்களில் ஒன்றுகி மும்மலங்களின் பந்திப்பு பெற்று எல்லா வலிமையும் ஐம்பூத சேர்க்கையால் ஆம் என்றும் அவ்வைம்பூதம் தானுகவே உள்ளமையால் தான் வலியவன் என்றும் உறுதிப்பாடு கொண்டு தன்னைத் தானே வியந்து ஆக்கப் பொருள் தேட்டத்தில் நாட்டம் கொண்டு ஐம்பூதங்களுக்கும் ஆதியாக நாதம் அமைந்துள்ளது என்று ஐம்பொறி வாயிலாக தேடிக் காணப் பெறும் உலகாயதக் கொள்கையையே பிரமதேவன் தான் சிஷ்டி கர்த்தா என்று தன்னைத் தானே வியந்து தனக்கும் ஐந்து முகங்கள் உண்டு இறைவனுக்கும் ஐந்து முகங்களே உண்டு ஆகையால் நமக்கும் அவனுக்கும் பேதம் இல்லை என்று நாதவடிவினளாகிய உமாதேவியை நெருங்கியதாகக் கூறும் கர்பாகை சரியையாகிய புராணக்கூற்று.

Koviloor Digital Library

“அஞ்சு	தலைகொண்	டுறுக	வொருதலை
யறுதலை	யாகி	யடங்க	நான்முக
னெனநடு	வாம்மெய்	யில்லாத	வுருகவும்
ம்யாம்	ம்மோவ்	என்னமென்	றும்வாழ்
இகஅக	என்ன	ஒப்ப	மிட்டும்
ஐம்எனப்	பற்கடித்	ததட்டும்	வாயுடையதும்
அரோபோ	மாதோ	இருமென்	றலறி
உளறங்	ஃலீஎன்	றுருட்டு	நோக்குடையதும்
ஞச்சின்	இஃகும்	ம்அத்தி	ஙிஃகஎன்னபெருமூக்
கதனிற்	சௌம்என்	றதிருஞ்	சுவாசம்
உடையதும்	அம்ம	ஓடொடு	யோஔ
எனும்பே	ரொலியை	இரீச்சீரீ	என்பன
என்னெனக்	கூர்ந்து	கேட்கும்	பெருஞ்செவியதும்
ஆம்பேரு	ருவுமி	யார்ப்புங்	கொள்வன
வாயபூ	தங்களு	மதிக	விரசுடன்
ஏத்துகை	சிந்தலொ	டிந்தல	மண்டிலம்”

ஞானபாகை

அஞ்சு தலையாகிய பொறிபுலன் ஆதிய கருவிகருணுதிகளைக் கொண்டு முதற்பொருளை காணமுயலுங்கால் ஐந்து தலைப்பானது ஒன்றொழிந்த நான்காய் அமைய அவ்வாறு அமைதலால் நடுநிலைப்பாடாகிய உண்மை இல்லாமற் போக ஆகிய காரணத்தால் பொய் உணர்வு உடையோனுகி வாக்குச் சலன ஒலியும் வாக்கிற்கு ஆதாரமாய் நிற்கும் உரஉதரவாயாகிய அன்னமயகோச ஒலியும் பற்கடிப்பும் ஒலியும் கொண்டு அதட்டும் பொறியாகிய வாயும், நித்திரை புலம்பல் ஒலியும் அச்ச விளைவு ஒலியும் தந்து நிற்கும் பொறியாகிய மனோ மயகோசமாம் கண்ணின் ஒலியும், தும்மல் ஒலியும், முக்கல் ஒலியும், சிந்தல் ஒலியும் அடைப் பொலியும் கொண்டு விளங்கும் பிராணமய கோசத்தின் சௌம் என்ன ஒலி ஒலிக்கும் மூக்கின் ஒலியும், விம்மலும், கூவலும், தொடறலும், கேள்வி உணர்வும் கொண்டு விளங்கும் வியன்ஞாலமய சோகமாகிய செவிப் பொறி ஒலியும் ஆகிய பேருருவங் கொண்டு ஆர்ப்பரிக்கும் பூதமுழக்கங்களும் காணப் பெறுவனவாகக் குறிக்கும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

ஐந்து தலைப்புகளைக் கொண்டு விளங்கும் அ இ உ எ ஒ என்னும் பூத எழுத்தைக் கொண்டு ஒலிக் கூட்டத்தை பகுத்துணருங்கால் எஒ என்னும் ஈரிரண்டு எழுத்து ஒன்ருகிய தொகுதியில் எழுத்து நான்காக அமைந்து ஓரெழுத்து தனித்து ஒன்ருக இல்லாமல் ஏகமாகி விடலால்

Koviloor Digital Library

நடுநிலைப்பாடு தவிரப் பெற்று நான்கு எழுத்தே ஆகிக் காணும் நிலையில் ஓர் எழுத்து பொய் எழுத்தாக மறைய மியாமோ வாழி இக அக என்னும் முன்னிலை அசைச் சொல்லும் ஐம்எனச் சொல்லும் பற்கடிப் பொலியும் அரோபோ மாதோ இரும் என்னும் அசைச் சொல்லும் கிலி அடையும் படியாக நோக்கொலியும் இஞ்ச்சின். இஃக்கும். ம்அத்தி. ஙிஃக. நேர்படு அசைச்சொல்லும் கொண்ட சௌம் என்னும் ஒலியைத் தரும் சுவாசகதி ஒலியும் வியப்பொலியும் இணைப்பொலியும் உணர்ந்து ஒலியும் ஆகிய அம்ம ஒடு ஒடு யோஒள ஆகிய ஒலியும் கூர்ந்து கேட்கும் பொறியாகிய செவியும் கைக்கொண்டு பேருருவங் கொண்டு விளங்குவதாகிய பூதியத்திற்கு உரிய அர்த்தபாகைக்கு கர்பாகை வருமாறு.

கர்மபாகை

நாத சொரூபியாகிய சக்தியை பஞ்சமுக பிரமாவாகிய படைப்புத் தொழில் தலைவன் தொடர்பு கொள்ள விழையுங்கால் ஒருதலை வைரவமூர்த்தியால் கிள்ளப்பட்டு நடுத்தலை இல்லாத நான்முகனுகி ம்யாம் ம்மோவ் என்ன மென்றும் வாழி இக அக என்ன ஏப்பமிட்டும் ஐம் எனப் பற்கடித்தட்டும் வாயுடையதாகிய பெரும்பூதங்களும் அரோபோ மாதோ இருமென்றலறி உளறங்கிலீ என்றுருட்டு நோக்குடையதும் ஆகிய அச்ச உணர்வைத் தரும் பூதங்களும் ஞ்ச்சின் இஃகும் ம்அத்தி ஙிஃக என்ன பெருமூக்கதனிற் சௌம் என்று அதிரும் சுவாசம் உடையதுமாய உயிர்ப்பொலியைத் தரும் பேரொலிப் பூதங்களும் அம்ம ஒடொடு யோஒள எனும் பேரொலியை இரிச் ச்ரீச் என்பன என்னெனக் கூர்ந்து கேட்கும் பெருஞ்செவியுடையதாகி ஆர்ப்பரித்து எழும்பும் பெரும் பூதங்களும் ஆக தோன்றி உள்ளன என்பது மேற்கூறிய ஞானபாகை அர்த்தபாகைக்குரிய கர்பாகை.

"பண்ணிலக்கணச் சூக்கத்தில் கண்டுள்ள பூத பூதிகாகாரத்திற்கு இது வேருய் தோன்றுவது வேத இயல்"

மதிக விரசுடன்

எத்துகை	சிந்தலொ	டிந்நில	மண்டிலம்
எனவுழற்	றிப்பரிந்	தேகலம்	மாணையாய்த்
தாண்டல்	யடர்தலாந்	தன்மை	யுற்றெழு
அடிகொடு	நடந்து	நேராக	நிமிர்ந்தும்
நிரைநிரை	யாக	நிறைய	வடர்ந்தும்"

Koviloor Digital Library

ஞானபாகை

தூலாகாரமாய் தோன்றும் பூத உருவாகியயாக்கையில் விரைந்து எத்துகை கொண்டு செல்லுவதும் வீணுக சிந்திச் சிதருவதும் சுழன்று எழுந்து செல்வதும் அம்மாஊனயாய்த் தாண்டி படர்ந்து செல்லும் தன்மையுடையதும் தாவி எழும் அடி கொண்டு நடந்து செல்வதும் நேராக நிமிர்ந்து வரிசை வரிசையாக அடர்ந்து காணப் பெறுவதும் ஆய தன்மையுடையது ஆகிய அழிவுநிலைக் கூறுபாடு கொண்டுள்ள தன்மையுடையது வாசி எனக் கூறப் பெறுவது ஞானபாகை. ஞானபாகையில் தோன்றும் அர்த்தபாகை யாவன.

அர்த்தபாகை

ஓரடியாக காணப் பெறுவது அதிக விரசு என்னும் விலாசம் இரண்டு அடியாகக் காணப் பெறுவது எத்துகை என்னும் யாழ்தொகை மூன்று அடியாகக் காணப் பெறுவது நொண்டி என்றும் சிந்து நான்கு அடியாக காணப் பெறுவது நில மண்டலம் ஐந்து அடியாகக் காணப் பெறுவது பரிந்து செல்லும் வரி ஆறு அடியாகக் காணப் பெறுவது அம்மாஊன ஏழு அடியாகப் படர்ந்து காணப் பெறுவது பாடல். இது பூதாகாரமாகிய யாக்கையில் தோன்றி நிலைகொண்டு இயங்கும் வாசியின் இயல் என்று முற்கூறிய ஞானபாகையில் தோன்றும் அர்த்தபாகை. வாசியானது நிமிர்ந்து செல்லும் பொழுது நேர் என்றும் படர்ச்சி கொண்டு செல்லுங்கால் நிறை என்றும் பேசப்பெறும் இந்த நேர்நிறை கொண்டு வாசியானது அசைவு பெறலால் அதற்கு நேர் என்றும் நிறை என்றும் கூறப் பெறலாயிற்று என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

பிரமதேவன் சிவஅபராதம் செய்ததால் ஐந்து தலையில் ஒருதலைபோய் நான்முகன் ஆயினன். மேலும் சிவநிந்தனை கேள்வியும் செயலும் உள்ள தேவர்கள் பொருட்டு அவர்களைப் பங்கப்படுத்தும் பேருருவங் கொண்ட பூதங்களும் தோன்றிற்று. அதனுடைய செயற்பாடு விரைதல் ஆழ்ந்து நிறைந்த பொருளை காலால் எத்துகை நொண்டி என ஒருகாலை ஊண்டி உதைத்து சிந்துதலும் இப்பெரும் பூமியை செக்கு எள்ளை நசுங்க அரைப்பது போன்று காலால் உழற்றி சுழற்றுதலும், பரிபட்டு ஏகுதலும் அம்மாஊனயாய் தாண்டுதலும் தாண்டிப் படர்தலும் ஆகிய எழுச்சி கொண்டு அடிபெயர்ந்து நடத்தல் செய்து நேராக நிமிர்ந்தும் வரிசை வரிசையாக அயர்வு கொண்டும் காணப் பெறும் செயற்பாட்டை உடைய பெரும் பூதங்களும் தோன்றலாயிற்று என்பன முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகையில் தோன்றும் கர்மபாகையாம்.

Koviloor Digital Library

"மாவுரு	வாங்கொடு	வளர்ந்து	பருத்து
விளமாய்க்	காய்ந்தும்	வெம்மையிற்	கனிந்தும்
ஏனம்	பூத்தும்	இடரிரு	ணிழற்றியும்
காசு	பிறப்புறக்	கருவி	நெருங்கித்
திக்குத்	திசைபொலி	சீருடை	யதுவாய்
மாயியை	பாகி	மறத்தொழில்	புரியும்
மாய	மாமர	மாம்அசு	ராதிபன்"

ஞானபாகை

அறுகு நுனி பனியஊைய சிறியதுளி பெரியதொரு ஆகம் ஆகியோர் என்றவாறு மாவுருவாங் கொடு வளர்ந்து பருத்துக் காணும் தூலமானது காமக் குரோதிகளால் விடங் கொண்டாற் போன்று வெதும்பியும் வறுமை முதலிய கொடுமையாம் வெம்மையில் கசிந்துருகியும் மூப்பு எய்திய காலத்து பலரால் எள்ளி நகையாடப் பெற்றும்இடர்பாட்டு இருளால் தடுமாறியும் பிறவி துன்பத்தில் உழன்று கருவிகரணுதிகளால் நெருக்கப் பெற்றும் பொய்யை மெய்யாகக் கொண்டு தீச்செயலே தொழில் என புரியும் மாய மாமரம் போன்ற அசுராதிபன் என்னும் படியாக என குறிப்பிடப்படும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

தேமா புளிமா என்ற இரண்டாகி கடித்து சுவைக்கும் கருவிளமும் கடிக்காமல் விழுங்கும் கூ விளமும் ஆகிய கருவிளம் கூவிளம் ஆகியும் இரண்டு நான்காகி அது மேலும் வளர்ந்து பருமன் கொண்டதென்ன காயாகியும் கோடையில் கனியும் கனியாகியும் சிறுமையில் பூக்கும் பூவாகியும் வெம்மைக்கு இடர் செய்யும் நிழலாகியும் காசு பிறப்பு என பெற்றும் இவ்வாருகிய நெருக்கம் கொண்டு திக்கு திசை எங்கும் படர்ந்து பொலிவுபெறும் சீர் உடையது என்ன முப்பத்திரண்டு சீர்கொண்டும் மாமரத்தின் தன்மையை பொருந்தி மறத்தொழிலாம் நிறைந்து இருப்பதை இலையென்றும் உள்வைரம் வைத்து கபடு கொண்டும் சிறுமை பூத்தலில் உவகை கொண்டும் தன்னைச் சார்ந்தோர்க்கு ஒளியற்ற நிழலைத் தந்தும் வெம்மையிற் கனிவு கொண்டும் கானற்பாலாய் காய்ந்தும் நாற்றிசையிலும் எண்டிக்கும் படர்ச்சி பெற்றும் விளங்கும் மறத்தின் தன்மையுடைய மாயமாமரமாகி கானம் கொள்ளும் இயல்பையுடைய அசுராதிபன் என்னும் படியாக தேமா. புளிமா. கருவிளம். கூவிளம். தேமாங்காய். புளிமாங்காய். கருவிளங்காய். கூவிளங்காய். தேமாங்கனி. புளிமாங்கனி. கருவிளங்கனி. கூவிளங்கனி. தேமாதண்பூ. புளிமாந்தண்பூ. கருவிளந்தண்பூ. கூவிளந்தண்பூ. தேமாநறும்பூ. புளிமாநறும்பூ. கருவிளம்நறும்பூ. கூவிளம்நறும்பூ. தேமாதண்நிழல்.

Koviloor Digital Library

புளிமாதண்நிழல், கருவிளம்தன்நிழல், கூவிளம்தன்நிழல், தேமாநறுநிழல், புளிமாநறுநிழல், கருவிளந்நறுநிழல், கூவிளநறுநிழல், காசு, பிறப்பு, நாள், மலர் ஆகிய முப்பத்திரண்டு சீர்களைக் கொண்டு சொற்பெருக்கு அனைத்தையும் தம்முள்ளடங்கக் கொண்டுள்ள மாயமாமரம் என்னும் அசுராதிபன் என்ன கானமாகி அடர்வு கொள்ளும் இயலைக் கொண்டுள்ள அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

நேர் நேர்	-	தேமா
நிறை நேர்	-	புளிமா
நிறை நிறை	-	கருவிளம்
நேர் நிறை	-	கூவிளம்
நேர் நேர் நேர்	-	தேமாங்காய்
நிறை நேர் நேர்	-	புளிமாங்காய்
நிறை நிறை நேர்	-	கருவிளங்காய்
நேர் நிறை நேர்	-	கூவிளங்காய்
நேர் நேர் நிறை	-	தேமாங்கனி
நிறை நேர் நிறை	-	புளிமாங்கனி
நிறை நிறை நிறை	-	கருவிளங்கனி
நேர் நிறை நிறை	-	கூவிளங்கனி
நேர் நேர் நேர் நேர்	-	தேமாதண்பூ
நிறை நேர் நேர் நேர்	-	புளிமாதண்பூ
நேர் நிறை நேர் நேர்	-	கூவிளந்தண்பூ
நிறை நிறை நேர் நேர்	-	கருவிளந்தண்பூ
நேர் நேர் நிறை நிறை	-	தேமாநறுநிழல்
நிறை நேர் நிறை நிறை	-	புளிமாநறுநிழல்
நேர் நிறை நிறை நிறை	-	கூவிளம்நறுநிழல்

Koviloor Digital Library

நிறை நிறை நிறை நிறை	-	கருவிளம்நறுநிழல்
நேர் நேர் நிறை நேர்	-	தேமாநறும்பூ
நிறை நேர் நிறை நேர்	-	புளிமாநறும்பூ
நேர் நிறை நிறை நேர்	-	கூவிளம்நறும்பூ
நிறை நிறை நிறை நேர்	-	கருவிளம்நறும்பூ
நேர் நேர் நேர் நிறை	-	தேமாதண்நிழல்
நிறை நேர் நேர் நிறை	-	புளிமாதண்நிழல்
நிறை நிறை நேர் நிறை	-	கருவிளம்தண்நிழல்
நேர் நிறை நேர் நிறை	-	கூவிளம்தண்நிழல்
நேர்	-	நாள்
நிறை	-	மலர்
	-	காசு
	-	பிறப்பு

சிவநிந்தனையால் தண்டனைப் பெற்ற பிரமனைப் போல் சிவநிந்தனைக்கு ஆதரவு காட்டிய பார்வையாளராகியவர்களும், ஈடுபாடு கொண்டுள்ளவர்களும் ஆகிய தேவர் குழாத்தை கண்டிக்கும்படியாக இறைவனுடைய ஆணைப்படி தோற்றுவிக்கப்பெற்ற பூதபிரேதபைசாச உருவங் கொண்ட அரக்கர் குழாம் நிரம்பி வளர்ச்சி பெற்று பருத்து விளங்கும் உருவங் கொண்டு பற்கடித்து கோபித்தும் கொடுமை செய்தலில் மனம் கனிந்தும் களித்தும் எள்ளி நகையாடியும் மாய இருளால் மருட்டியும் பிறப்பு எடுத்ததே துன்பத்திற்கு இடமாயிற்று என்று கருதும்படியாக கறுவிக் கொண்டு நெருங்கியும் நாற்றிசையும் எண்டிக்கும் பரந்து விளங்கிக் காணும் கூட்டத்தையுடையதாகி எல்லையற்றதாய்ப் பெருகி கொடுந்தொழில் புரியும் அசுரர்களுக்கு அதிபன் மாய்கையால் மாமரவடிவங் கொண்டு விளங்கினன் என்பது முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகையில் காணப் பெறும் கர்மபாகையாம்.

"குழுவொடு நெருங்கிக் குலைகுலைத் திடவும்
கவித்தும் கவ்வியுங் கடித்திற் றுறத்தியும்
ஆழ்த்துஞ் சீறில கப்படச் செய்தும்
அடிப்பணி செய்ய வுள்ளாக்கி யம்போ

Koviloor Digital Library

தரங்க	மென்ன	வலற	வலைத்தும்
பட்டுல	ரச்செய்	பாட்டிற்	களித்தே
ழாழிச்	சீரா	யமைந்து	காணும்
அலகைகள்	கூட்டமு	மாகத்	தோன்றி
அவிற்ப்பவங்	கொண்ட	வெச்சன்	தேவர்மூவர்
இந்திரன்	அக்னிஎமன்	ரவி	பிரமன்
ஆதியோர்	மீதி	லதரவம்	புரியலிற்"

"குழுவொடு நெருங்கிக் குலைகுலைத் திடலாகிய தத்துவக் கூட்டங்களோடு நெருக்கம் கொண்டு கூடி திரோதாயியாம் மாயையால் குலைகுலைத்திடும் படியாக கவித்து மூடியும் கவித்தும் விரைந்து அச்சுறுத்தியும் வீழ்த்தி சிக்கச் செய்தும் மாயாவாத செயலில் செயற்பாடு கொள்ள செய்தும் நாளும் நாளும் என்றும் நிலைபேறு உருவது போன்று அலைப்புறச் செய்தும் பலவகைபாடு படுத்தியும் எல்லையற்றதாய் சூழும் ஆழிபோல் சூழ்ந்து அலக்கழிக்கும் ஆசாபாச இராக ஆதியென ஆகிய சூழல் கொண்டும் உயிருக்கு உறவு கொள்ளும் கரணங்கள் கருவிகள் திதி குண சலனங்கள் விழைபொறி நுகர்வுகள் வாதபித்த முதலிய நோய்கள் வாழ்நாள் அமைப்பு ஆதியெனவற்ருல் மாயாந்தகார மருட்டும் விளைவாம் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

சொற்கூட்டங்கள் எல்லாம் நெருக்கம் கொண்டு பலவாருக சிதறிவிடாமல் குலைகுலையாக திரண்டும் அது கவிதையாகியும் கவியாகியும் துறையாகியும் ஆழ்த்துஞ் சீரிலகப்படச் செய்தலாம் யாழ்சீர் இயம் எனும் ஆசிரியமாகவும் அடிகொண்டு நீளும் செய்யுளாகியும் அம்பு ஓத அரங்கம் என்ன நீரானது மேலெழும்பி பரவி அலைஅலையாய் காணப்பெறும் அம்போதரங்கமாகவும் சொற்ருெடரை அகப்படுத்தப்பட்டு ஒடுங்கச் செய்யும் பாட்டாகவும் கொம்பும் காலும் கூட்டும் விச்சும் குறிக்கொள் ஒற்றும் ஆகிய பசுவின் உருவத்தின் இயைவைக் கொண்டு விளங்கலால் பாசை என்றும் கூறப்படும் மொழியானது பாசையாகிய எழுத்தொலி கூட்டத்தில் எஞ்சிக் காணப் பெறுவதாகிய தனிநிலை என்னும் அஃகேனமும் தேவர்கள் என்று சொல்லற்குரிய முப்பத்து மூன்று உயிர்மெய்யும் மூவர் என்ன காணப் பெறும் இன எழுத்துக்கள் மூன்றும் இவைகளையெல்லாம் தொகைப்படுத்தி நிற்கும் ஐந்திரமாகிய குறில் ஐந்தும் அக்னி என்னும் சாரியையும் எமன் என்னும் வேற்றுமையும் ரவி என்னும் உயிர்க்கலை பனிரெண்டும் பிரமன் என்ன ஐந்தெழுத்தில் ஒரெழுத்து நீக்கம் பெற்ற வயனமும் ஆதியனவற்றில் சொல்லொலியானது செயல்படல் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

Koviloor Digital Library

கர்மபாகை

சிவநிந்தனை காரணமாக பூதவேதாள பிரேதபிசாச அரக்கர் கூட்டங்கள் நெருங்கி தேவர் குலாத்தை கவித்து வளைத்தும் கவர்தல் செய்தும் கண்காணுமல் துரத்தியும் தலை எடுக்க விடாமல் ஆழ்த்தியும் தனக்கு அடிமைத் தொழில் செய்யும்படியாக உள்ளாக்கியும் அலைஅலையாக அலைத்தும் அலரச் செய்தும் இரக்கம் இல்லாமல் பாடுபடுத்தியும் இவ்வாருகிய செயற்பாட்டினுல் எக்களிப்புக் கொண்டும் சத்த சமுத்திரங்களென்ன பெருகி நிறைந்தும் தேவர்களை அலைக்கைச் செய்யும் அலகைகள் கூட்டமுமாகத் தோன்றி நின்று அவிசாரா ஓமத்தில் அவிற்பவம் கொண்ட யாகத் தலைவனுகிய எச்சனையும் தேவர்கள் ரிஷிகள் முனிவர்கள் ஆகிய மூவரையும் இந்திரன் அக்னி எமன் ரவி பிரமன் ஆகியோர்கள் மீது கொடுமை புரிந்து பயங்கரம் விளைவித்தும் நிற்கக் காண்பதே ஞானபாகை அர்த்தபாகையில் தோன்றிய கர்மபாகையாம்.

"பங்கப்	பட்டும்	பலவுருக்	கொண்டும்
அடற்கரு	மத்தர்க்	காற்ரு	தவராய்
வானவர்	அனைவரும்	மறைந்து	திரிதர
விச்சுவ	ஏடனை	வேட்கை	முதலாம்
இராக	மகன்றஞ்	சினத்தி	னீங்கி
மாவுரு	வாக	வமைந்தந்	தரஞ்செயும்
மந்திர	வுருவே	வலரா	யடங்கி
தன்நிலை	குன்றித்	தாழுங்	காலை
யதரவ	மந்திர	மாயதேழ்	கோடியும்
அடங்க	விச்சுவமாம்	ஐந்து	முகத்தொடு
அதீதமாய்	நின்ற	அதோமுகந்	தோன்ற"

என்னும் உபநிழலற சூத்திரத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

நிறைவு அழிந்து பங்கப்பட்டும் பலவகைப்பட்ட உருவினதான பிறப்பை எடுத்தும் ஆன்மாவானது கன்மவசத்தின் அடர்த்தியால் ஆற்ருமை கொண்டு கருவி கரணுதிகள் எல்லாம் பிறப்புக்கு ஏற்றவாறு மறைந்து திரிபுற்று விளங்க மூவகை ஏடனையால் வரும் வேட்கையையும் எண்வகை இராகங்களையும் நீக்கி ஐம்பூத புணர்ப்பின் நீங்கி மாகையே ஓர் உருவாய் அமைந்து தீது விளைவிக்கும் மாயையின் நிலைபேருருவம் கொண்ட பணியாளராகி அமைந்து தன்னிலை குன்றி தாழுற்ற போது வாமமாகிய மந்திரங்கள் எழுகோடியும் அடங்கும் படியாக விச்சுவ ரூபங்கொண்டு வெளிப்படையாகக் காணும் ஐந்து முகத்தொடு அதீதமாய்

Koviloor Digital Library
நின்ற அதோ முகம் என்னும் பொறிவாயில் ஐந்தும் ஒன்று கூடும் பிரமரந்திரமாம் ஆருவது முகமாக அதோ ஒரு முகம் என்று சுட்டிக் காட்டப் பெறும் அதோ முகம் தோன்ற என்னும் ஞானபாகைக்கு அர்த்த பாகை வருமாறு.

அர்த்தபாகை

ஐம்பத்தொரு வகையாய் நின்ற எழுத்து சொல்லாக்கம் பெறும் பொழுது குறைவாகிய பங்கம் பெற்றும் பலவுருவாய் திரிந்தும் எண்வகை வேற்றுமைப் பாட்டால் ஆற்ருமை கொண்டும் அருஉருவாய் உள்ள சொற்கூட்டம் அனைத்தும் எழுத்தின் மறைந்து திரிபுடைத்தாக ஆகியும் உலகியலில் தேடிக் காணும்படியான இயலைப்பெற்றும் சொற்புணர்வாம் இசையாக விரிந்து எழுத்து சொற்பொருள் யாப்பு அணி என்னும் அஞ்சினத்தின் நின்று நீங்கி தேமா புளிமா என்னும் உருவம் பெற்றதாகி அசையும் சீரும் ஆகிய தந்திர மந்திர உருவங் கொண்டு செயல்படச் செலுத்தப் பெற்று இசை ஒலியாம் அந்நிலை கெட்டு தாழுங் இயலில் வாய்மொழியாகிய மந்திர எழுத்து ஐம்பத்தொன்றும் ஏழுகோடியுள் அடங்க விளைவைத் தரும் ஐந்து தலைப்புக்களுக்கும் எட்டாமல் நின்ற ஒரு முகமானது விளக்கம் பெற என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

சிவநிந்தனை காரணமாக தேவரிஷி முதலியோர்கள் தன்னியல்கெட்டு பங்கப்படும் படியாகவும் அசுரபூத பிரேத பைசாசங்களுக்கு அஞ்சி பலவுருவங்களை எடுத்தும் வசிகம் மோகனம் தம்பனம் பிரேதனம் உச்சாடனம் நித்துவேசனம் ஆக்கிருஷ்ணம் மாரணம் ஆகிய அட்ட கருமம் என்னும் எண்வகை மாயைத் தொழிலுக்கு ஆற்ருதவராகி தேவர்கள் கூட்டம் அனைத்தும் வேற்றுருக் கொண்டு மறைந்து திரியவும் விச்சுவ ஏடனை என்னும் வேட்கை முதலாகிய இராகாதி ஆகிய அச்சத்தைத் தரும் செயற்பாட்டிற்கு பயந்தும் கூட்டத்தினின்று நீங்கித் தனித்தும் மாயஉரு எடுத்து தீங்கு விளைவிக்கும் மந்திர தேவதைகளுக்கு ஏவல் செய்பவராய் பண்ணவர் கூட்டங்கள் எல்லாம் அடங்கி தன்னியல்பு இழந்து தாழ்வுற்ற நிலையில் வாமமந்திரமாகிய அதர்வண மந்திரங்கள் ஏழு கோடிக்குள் அடங்கி அல்லல் படும் போது இறைவன் என்றும் உள்ள ஐந்து முகத்தோடு தேவ ரிஷிகளுக்கு புலப்படாமல் இருந்த அதோ முகம் என்னும் ஆருவது முகம் ஆகிய அதோமுகம் தோற்றம் தரக் காட்டி நிற்க காண்பது என்பன ஞானபாகை அர்த்தபாகையில் காணப்பெறும் கர்மபாகையாம்.

Koviloor Digital Library

"அதனிடை ழறஃன எஒ என்ன
நாதந் துலங்க நாடகங் கொண்டு
விச்சக னாந்தமிழ் வித்தக னாகத்
துலங்கி யதரவந் துடைத்தடற் கருமமாம்
குற்ற மறுத்தெண் குணனாய் வீரம்
விளைத்து வீரட்ட விச்சுவ னாகியிவ்
வைம்பெரும் பூதத்தி யாப்பொலி நாலும்
அடிக்கதிப் பேழும் அடர்ந்த மாயைத்
திக்கு திசைப்பொலி சீரெண் ணான்கும்
அலகேய் வேழாம் யாழ்சீ ராக
ஐம்பது சாகை யாகி விரிந்த
பூத வுருவாய்ப் பொலிகா னத்தின்
மெல்லின மாமலர் விரிமுரு காகிக்
கமக மென்னுங் கந்தனாய் நிற்கும்.

வ.

என்னும் உபநிழலற சூத்திரத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

பொறி வாயில்களில் ஏற்படும் ஒலிகளுக்கு எல்லாம் தொகைப்பாடு கொள்ள காணப் பெறும் ஒலியாகிய ழறஃனஎஒ என்ன அமைவு பெறும் ஒலியானது துலங்கிக் காண வளிநிலைச் சாதனத்தில் நாடிதாரணை செய்யலால் தோன்றப் பெறும் உட்கிடக்கையை உணர்ந்து ஞானவித்தகனாக ஆகி விரிவு கொண்டுள்ள அனைத்தையும் பெரிய ஆல விருட்சத்தை அடக்கிக் கொண்டு காணப் பெறும் அதன் வித்து போன்று ஆன்மாவின் உறவின் கூட்டமாகிய ஆகாயத்தை அடங்கக் கொண்டுள்ள மெய்ஞான வித்தகனாக விளங்கி மௌனியாகி இராகம் என்னும் எண்வகை குற்றங்களிலும் நீங்கி எண்குணனாக ஞான வீரியனாய் அமையப் பெறும் வீரட்ட விச்சுவனாகி (வீரட்ட விச்சுவன் என்பதையே விராட்டு விஸ்வம் என்று வடநூலார் கூறுவர்) ஐம்பெரும் பூதத்தினுடைய ஆர்ப்பு ஒலி நான்கும் கொண்டு கதித்து எழும்பப் பெறும் வாசிநடை ஏழும் மாயா காரிய உருவமாகிய முப்பத்திரண்டு உறுப்புக்களைக் கொண்ட தூலமும் அதில் அமைந்துள்ள தாதுக்கள் ஏழும் ஆக உயிர் வளிநிலைச் சார்பு கொள்ளும் ஐம்பது வகையாகி செறிவு பெற்று பூதாதி கரணமாகிய தூலமாகி பொலிவு பெற்று விளங்கும் உடம்பகத்து ஞானாசிரியனுடைய உபதச காரண நிமித்தமாய் தோன்றும் மென்மை மிக்க விரிமலராய் விளங்கும் சுமனசத்தில் மெருகு கொண்டு

Koviloor Digital Library

கமகம் பெற்ற கந்தமாக முதற்பொருள் நிற்கும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

பொறிவாய் ஐந்தின் ஒருமைப்பாட்டு நிலையில் ழுறஊளஏ என்னும் ஒலியாக பூதாதிகம் விளங்க வேற்றுமை காட்டி விச்சு எழுத்து என்ன தமிழ் எழுத்து அனைத்திற்கும் வித்தெழுத்தாக மேற்கூறிய ஆறு எழுத்து நிற்க காணப் பெறும் நிலையில் அதரமாகிய உதட்டில் தோன்றும் எழுத்தாக அல்லாமல் குவித்து உட்செல்லும் எழுத்தாக அமைவு பெற்று காண நிற்றலால் மாயா காரியமாகிய எட்டும் நீங்கி எண்குணம் பெற்று எல்லா எழுத்தையும் தன்னுள் அடக்கும் வீரமிக்கதாகி அமைவுபெற்ற வித்தெழுத்தில் ஐம்பூதத்தினுடைய ஒலி இயக்கமாகிய யாப்பொலி நாலும் அடிக்கதிப்பாகிய அடி. (௧) விலாசம் (௨) யாழ்தொகை (௩) நொண்டி (௪) நிலமண்டிலம் (௫) வரி (௬) அம்மானை (௭) பாடல் ஆகிய ஏழு அடிகளும் மாயிையை ரூபமாகிய முப்பத்திரண்டு சீரும் சீரை அலகிட்டுக் காணும் ஏழல் தோன்றும் கவிதை, கவி, துறை, யாழ்சீர் யாப்பு, செய்யுள், அம்போதரங்கம், பாட்டு, என அலகிட்டுக் காணும் யாழ்சீர் ஏழும் ஆகக் கூடிய ஐம்பது சாகையாக விரிந்து பூத உருவாய் தோன்றும், ஆர்ப்பொலியைப் பெறும் அரண்யகமாம் கானத்தில் மெல்லினமாகி அமைவு பெறும் மென்மையுடைத்தாம் மலரில் முருகு என்னும் மணமாக கமகம் என்னும் உள்நிறைவு பெற்றதெனக் காணும் கந்தன் என்னும் கந்தனாக முற்கூறிய ஞானபாகையில் தோன்றும் அர்த்த பாகையில் கந்தன் என்னும் முருகக் கடவுள் நிற்பார் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

அகோரம், தற்புருஷம், ஈசானியம், வாமதேவம், சத்தியோஷதம் என்னும் ஐந்து முகங்களுடன் அதோ முகம் என்னும் ஆருவது முகத்தைக் கொண்டு இந்திராதி தேவர்களுக்கு இறைவன் காட்சி நல்கிய காலையில் ஒன்று மற்றென்ருய் தோன்றுதல் காரணமாக ஏது இதுவென நாடகங் கொள்ளும் நிலையில் தமிழ் கடவுளாகிய அறுமுகப் பெருமான் ஆக இறைவன் அமைந்து அசுர பயத்தை நீக்கி அவ்வசுரர்களால் உண்டாகும் வசியம் மோகனம் தம்பனம் மாரணம் ஆக்கிருஷ்ணம் வித்வேடனம் பேதனம் உச்சாடனம் என்னும் அட்ட கருமங்களாகிய மாயையின் அச்சுருத்தலை நீக்கி எண்குணனாக நின்று வீரம் விளைவித்து எண்வகை கொடுமைகளை நீக்கும் வீரட்ட விச்சுவனாக விளங்கி ஐம்பெரும்

Koviloor Digital Library

பூதத்தினுடைய ஆர்ப்பையும் எழுவகைப்பட்ட எழுச்சிகளையும் மாயா காரிய ரூபமாக படர்ந்து திக்கு திசைகள் எல்லாம் நிரம்பி நின்ற அலகை கூட்டங்களை எல்லாம் இல்லாமற் செய்து ஒன்று பத்தாக விளங்கிக் காணும் பூதாதி காரத்தை ஒழித்து முருகப் பெருமான் கந்தமூர்த்தியாக நிற்பார் என்பன அதர்வணமாகிய வாம மறையில் ஞானபாகை அர்த்தபாகையில் காணப்பெறும் கர்மபாகை என்று அறிக.

அடங்கன் முறையில் தோன்றும் உருத்திரள் பாசுபத கைவல்லிய நவநீத அமைப்பில் வாமம் என்னும் அதர்வண தேமானது வெளியும் வெளியினிடத்து தோன்றும் வளியும் அதில் பொலிவு பெற்று தோற்றம் ஒடுக்கமாக நிற்கும் சாதவேதாவைப் பற்றி தோன்றும் இருவகை மலர் இயலைக் கொண்டு முதற்பொருள் பூவணணே என கணிக்கும் காலையில் பூதாதி கரணங்கள் விளைவிக்கும் மாயையை வேதை கொண்டு சாரும் நிலையில் ஐம்பது சாகையாகவும் அட்ட வித்தியே சுரர்களாகவும் பெரும் விருத்தி கொண்ட சகலராகவும் ஆணவம் கன்மம் மாயை ஆய மூவகையால் கட்டுண்டு யாழ் யாப்பு கானம் துலங்க சாந்தம் குங்குமம் ஆகிய குறியீடும் வித்தை எச்ச சிவதத்துவ தோற்றமும் மாயை சுத்த வித்தை ஈச்சுரம் ஆகிய பொருளும் மெல்லினமாய் முடிவு கொள்ளும் தன்மையும் ஆகியவற்றை கடந்த நிலையில் திருஐந்தெழுத்தில் 'வ' காரம் தோன்ற வாமம் என்னும் அதர்வண வேதம் விளங்கிக் காணும்.

வேதாந்தம்

வியாழக் குறிஞ்சிப் பண்

திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த திருமுறைத் தொகுதியில் ஐந்தெழுத்தால் அமையப் பெற்ற துவித சித்தாந்தம் ஆதியாகத் தோன்றும் நான்மறைத் தொகுதியில் நான்மறையினுடைய தொகுதிப் பொருள் வடிவமாகக் காணப் பெறும் வேதாந்தம் என்னும் நான்மறைப் பொருள் வடிவமாக வியாழக் குறிஞ்சி அமைவு பெற்றுள்ளது. அதன் விளக்கம் வருமாறு.

குறித்து	சுட்டலால்	கூறப்	பெறும்
தேவர்	மொழியென	செப்பும்	சனுக்கிறக
தன்னின்	விர்வாம்	சங்கைக்கு	ஏதுவாய்
விரியும்	சங்கேத	விளக்கம்	கூறும்
சிட்சை	என்ன	செப்பும்	சூக்கம்
அதனில்	மேற்கணக்	காய	ஒன்பதில்

Koviloor Digital Library

சந்தசு ஆக சாற்றும் இயல்இசை
நாடகம் என நவிலும் மூன்றில்
ஒடுங்கிக் காணும் ஒடுக்கம் ஐந்துள்
வியாழக் குறிஞ்சியாய் விளம்பும் பண்ணில்
மறைப்பொருள் வடிவம் வழங்குதல் காட்டும்
வேதாந்த சூத்திர விரியாய் விளங்கும்
உபநிழ லறம்விரி உரைப்போம் காண்க.

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த வியாழக் குறிஞ்சி பண் பதிகம் (௨௰௫)க்கு குறிச்சீர்திறம், ஆற்றுத்திறம், படுகுறிச்சீர்திறம், செந்திறம், இயையாமைத்திறம், ஆற்றுச்செந்திறம், என்ன ஆறு கட்டளை திறங்கள் அமையும்.

வியாழக் குறிஞ்சிப் பண்ணின் இலக்கணம்

அண்ணம் அதில்நா அடையப் பிறக்கும்
அமிழ்தென அண்ணித் தடங்கும் ழகாரம்
என்ன வியன்சீ ரியைகுறிஞ் சிப்பண்
ஆகிய வியன்கலி யாழ்சீர் தூக்கில்
யாழ்சீர் யாப்பில் யாழ்சீர் கட்டலில்
பாவின் யாழ்த்தொகை யாகிய கட்டலில்
யாழ்சீர் வண்ண வொத்தாழிசைக் கவியில்
யாழ்சீர் தாழிசை யராகத் தரவிடைத்
தாளச் சதிப்பண் தன்னில் ஒத்தில்
அடிமறி மண்டல யாழ்சீர் யாப்புக்
குளகம் அதின்மேற் கொளலால் வியாழக்
குறிஞ்சிப் பண்ணெனக் கூறப் பெற்றது.

அற்புதப் பதிக விளக்கம்

விள்ச்சுர நோயிவ் விடம்பட ராத
செந்திறம் ஆற்றெனச் சேடனை வேண்டி
கட்டல் யாழ்வியன் கலித்துறை மந்திரம்
மேவி விளங்கும் வியாழக் குறிஞ்சிப்
பண்ணில் ஓங்காரம் பயிலும் பிரணவா
காரந் துலங்க ஆணை மொழியாய்த்
திருநீல கண்டம் செப்பி யவ்வாறே
என்றென்று மங்கண் இயைவுறு சிறப்பஃ
துற்ற நல்லறம் உடையது அவ்வினைக்
கிவ்வினை என்னும் அற்புதப் பதிகம்.

Koviloor Digital Library

திறங்களின் விளக்கம்

குறிச்சீர்திறம்

எப்பொரு ளுக்கும் இறைவனைச் சுட்டி
புகலி பதியது ஆம்எனக் கூறி
குறிக்கப் படுவது குறிச்சீர் திறமாம். (௧)

ஆற்றுத்திறம்

செயத்தக் கதுஇது எனச்செப்பல் ஆற்றுத்திறம் (௨)

படுகுறிச்சீர்திறம்

குறிக்கோள் படுவதை கூறப் பெறுவது
படுகுறிச் சீர்திறம் என்னப் பகரும். (௩)

செந்திறம்

செயலில் செம்மை செப்புவ செந்திறம். (௪)

ஆற்றுச்செந்திறம்

செயலில் இவ்வாறு செயநலம் விளைக்கும்
அருள்தரல் கூறுவது ஆற்றுச் செந்திறம். (௫)

இயையாமைத்திறம்

மொழி மாற்றுக மொழிந்து இயையாமை
அமையக் காட்டல் இயையா மைத்திறம். (௬)

நச்சுத் தன்மையால் உண்டாகும் வெப்புநோய் இவ்விடத்தில் பரவலாகாது என்று தீமை தீர்ந்து செம்மை விளையும் படியான செயல் ஆற்றுக என நச்சுத் தன்மைக்கு அதிபனுகிய ஆதிசேடனுகிய தெய்வப் பாம்பை வேண்டிக் கொண்டு வியாழக்குறிஞ்சிப் பண்ணில் ஆற்றுச் செந்திறம் அமையும் படியாகவும் அந்த பண் மந்திரமாகி ஆற்றல் பெற்று விளங்க கட்டல் யாழிலும் வியன்கலித்துறை பயில ஓங்கார ஒலி முழக்கம் காட்டும் பிரணவாகாரி ராகத்தில் நச்சுத் தன்மை தீர்த்தருளும் திருநீலகண்டம் ஆணைமொழியாய் துலங்க இசைத்து அதன் பயனுக என்றென்றும் கொடி மாடச் செங்குன்றூர் பகுதியில் நச்சு நோய் வெப்பு (திருச்செங்கோடு) அன்றும் இன்றும் என்றும் இல்லாதிருக்கும்படியாக அறம்பாடப் பெற்றது அவ்வினைக் கிவ்வினை எனத் தொடங்கும் அற்புத பதிகம் ஆகும்.

திருமுறைப் பெருநூல் விளக்கத்திற் ரேன்றும் நான்மறைத் தொகுதியில் துவித சித்தாந்த நான்மறை நிறைவில் வேதாந்தம் என்னும்

Koviloor Digital Library

மறைப்பொருள் உருவ விளக்கத்தைக் காட்டப் பெறும் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் எழுதாக் கிளவியாய்த் தோன்றும் வேத வேதாந்தம் மொழியப் பெறும் கருக்கிடை நூலாகிய வைணவ ஆகமத்தில் வைகாநேய ஆகமச் சூத்திரம்

"வேற்றுமை ஐந்தாய் விளங்கப் பெற்றதால்
வேதம் நான்கொடு வேதாந்தம் ஒன்றும்
ஆகிய ஐந்தாய் அமைவு பெற்றது"

என்னும் பத்தாவது சூத்திரத்தில் கண்டவாறு வியாழக்குறிஞ்சிப் பண்ணின் விளக்கம் வருமாறு.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிச் செய்த திருமுறைப் பெருநூல் விளக்கத்தில் ஆருவது வியாழக் குறிஞ்சிப் பண்ணின் எழுதாக் கிளவி.

வேதாந்தம் என்னும் அறவண்ணச் சுருதி

வியாழக் குறிஞ்சியாய் விளம்பப் படும்பண்
விச்சாம் ஐந்தின் மேற்கொள் சேடமொன்
ருய்க்கட் டளையா றமையப் பெற்று
வெளிமுத லந்தாய் விரிந்த வியந்தரம்
ஒன்றி லயப்பட் டொடுங்குமே காந்தம்
துலங்கு பாணியு மிலங்கு பதமும்
இளையுழை விளரியி லிசையு மோசையும் (உமசா)

வியாழக் குறிஞ்சி என்று சொல்லப் பெறும் பண் விச்சாம் ஐந்தின் மேற்கொள் சேடம்ஒன்ருய்'

விளைவைத்தரும் ஐம்பூதங்களின் மிகுதிப்பாடு கொண்ட ஒன்ருய்

"கட்டளை யாறு அமையப் பெற்று"

ஆறு கட்டளைகள் அமைந்து காண

"வெளிமுத லந்தாய் விரிந்த வியந்தரம்
ஒன்றி லயப்பட் டொடுங்கு மேகாந்தம்"

ஆகாய முதலாய் விரிந்த ஐம்பூதங்களும் ஒன்றி லயப்பட்டு ஒடுங்கி நிற்கும் ஏகாந்தம் என்னும் ஒருமைப்பாட்டு உருவம்

Koviloor Digital Library

"துலங்கு பாணியு மிலங்கு பதமும்"

துலக்கம் பெற்றுக் காணும் கரமும் அவ்வாருகிய பதமும்

"இஊயுழை விளரி யிலிசையு மோசையும்"

அண்ணுக்கிலும் சிரத்திலும் தோன்றும் இஊயுழை விளரியைப் பெற்று நிற்கும் ஒலியும் என்னும் அறவண்ணச் சுருதிக்கு மீச்சுருதி விளக்கம் வருமாறு.

மீச்சுருதி விளக்கம்

விளங்கச் சேட விசேடதி சேடனும்
மொய்யல கையுரு முரிய மிதித்து
வேதை தவிர்த்தருள் வேத அந்தமாம்
அறவண மோரு ருவாய தோற்றம்
வயங்க நின்ற வியன்கர வுருவம்
வரியளி கவரும் மண்டலப் பதமுமாய்
அஞ்ச லென்ன வருடரு தொழிலும்
ஒன்றி லயப்பட நின்றநட் பொலியும்
திகழ யகாறம் சிறந்து நிற்கும். (உமா)

"விளங்கச் சேட விசேடதி சேடனும்"

துலக்கம் உற்றுக் காண மிகுதிப்பாட்டில் மேலும் மிகுதிப்பாடு கொள்ளும் அதிசேடனும் ஆதிசேடனும்

"மொய்யல கையுரு முரிய மிதித்து
வேதை தவிர்த்தருள் வேத அந்தமாம்"

ஒன்றல்லாமல் பற்பல கூறுகொண்டு மொய்த்துக் காணும் பூதாகாரமான மொய்யலகை உருவும் அதை முரியும் படியாக இடுப்பில் மிதித்து மொய்யலகையால் ஏற்படும் வேறுபாடாகிய வேதனையை தவிர்த்து அருளும் வேத அந்தமாம் மெய்ப் பொருள் உருவமாகிய

"அறவண மோரு ருவாய தோற்றம்
வயங்க நின்ற வியன்கர வுருவும்"

வேதம் ஓர் உருக் கொண்ட தோற்றமும் அத்தோற்றம் மிளிரும்படியாக நின்ற மேற்படு கைத்தல உருவமும்

"வரியளி கவரும் மண்டலப் பதமுமாய்"

இசை முரலும் வண்டை வசீகரிக்கும் ஊன்றிய திருவடியாகவும்

Koviloor Digital Library

"அஞ்ச லென்ன வருட்ரு தொழிலும்"

அச்சத்தை நீக்கும் அன்பைத் தரும் தொழிலும்

"ஒன்றி லயப்பட நின்றநட் பொலியும்
திகழ யகாரம் சிறந்து நிற்கும்"

வேற்றுமை யின்றி ஒருமைப்பாடு கொள்ள நின்ற விளைவு தரும் ஒலியும் விளங்குமாறு திருஐந்தெழுத்தில் நிறைவு பெற்றுக் காணும் 'ய' காரம் சிறப்புற நிற்கும்.

இந்த மீச்சுருதியில் காணும் தெய்வம் என்னும் தேவர் ஆதிசேடன். சந்தவுற்பவச்சீர் என்னும் சந்தோப விசுதியாம் ஒலி கைக்கிளை உழை ஆகிய ஓசை விளரியைச் சார்ந்து காணப் பெறுவது ஆகிய வராளி இராகம் இதற்குரிய கலை என்னும் புராணம் வேதாந்தம் காயத்திரி என்னும் உருவம் மேற்கொளக் காணும் 'ய' கார வடிவமாகிய ஏந்திய இருகை உருவம். அநுஷ்டிபு என்னும் தொழில் அஞ்சேல் என்று பயம் அகற்றி கருணை காட்டி நட்புக் கொள்ளல்.

ஐதரேய உபநிழலறம்

"சிறந்து நின்று திகழ்பொருள் விச்சுவம்
தூலங் காரணம் சூக்குமம் பூவணம்
எனவே தைப்பட் டிடைஞ்சலு றும்பசு
வேதைதீர் தலாம் வேதாந்த பாகை
அஞ்சினத் திற்படர்ந் தனேக வுருப்பெற்
றகில புவன மதிற்புணர்ப் பாகியவ்
வைந்தின் மேலொன் றும்சுட ராகி
இயங்க செய்யி யமானநு னென்ன
எக்களிப் பெய்தி இருடிக டேவர்க
ளாதியோர் பதமென் பாநென் றுயிர்க்கண"

என்னும் ஐதரேய உபநிழலறத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

நலம் சிறந்து நிலைபெற்று நின்று விளங்கும் முதற்பொருளானது வித்தெனத் தோன்றி பேருருவங் கொண்டு விளங்கும் தூல காரண சூக்குமம் பூவணம் ஆகிய பூதிகமே என எண்ணி பூதாதிகளாய் அல்லல்பட்டு நெருக்கடிக்குள்ளாம் உயிர் வருத்தத்தைத் தரும் வேதனையை கடந்து நிற்றலாகிய வேதாந்தப் பகுப்பாகிய வேதாந்த பாகையானது ஐம்பூத

Koviloor Digital Library

இனமாகிய அஞ்சினத்தால் விரிவு பெற்று ஒன்றல்லாத பலவுருவங்களைக் கொண்டு அகண்டா காரமாகிய உலகங்களில் சார்வு பெற்று பூத பூதிகமாகிய பூதத்தின் மேற்பட்ட சடலமாகி இயங்கச் செய்யும் இயமானன் நானேயாம் என்று இறுமாப்பெய்தி இருடிகள் தேவர்கள் ஆகியோர்களின் பதம் எண்பான்னொன்றும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

பொலிவு பெற்றுச் சிறந்து நின்று விளங்கிக் காணும் பொருளானது வித்தாகி விளைவைத்தரும் வித்தையாம் கலையானது தூல காரண சூக்குமம் என்ன சொல்லும் சீரும் இசையும் ஆகி அதில் பூத்துக் காணும் தன்மையுடையதே என ஆரணமாய் (இடைஞ்சலுக்குள்ளாம) இடற்பாட்டுக்குள்ளாம் பசுவின் இயைவாம் பாசையானது அவ்விடற்பாட்டினின்று நீங்கப் பெறும் மறைப்பொருள் உருவப் பகுப்பானது பூதபூதிகச் சொற்பொருளாகி இயங்கச் செய்யக் கூடிய ஒலிப்பொருளாளன் தான் என ஆம் நணம் கொண்டு இருசீர்களாகவும் பண்ணவர்களாகவும் அமையப் பெற்று. எண்பத்தொரு பதமாய் ஆகி நிற்கும் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

முதற்பொருளானது சிறந்து விளங்கும் விச்சுவாம் தூல காரண சூக்குமமாகிப் பூவணமாகப் பூத்துக் காணும் நிலையே தனது என எண்ணி இருவினை மும்மலங்களால் இடர்பாட்டை அநுபவிக்கும் உயிரினம் அத்துன்பத்தினின்று நீங்குதலாகிய வேதாந்தம் பாகையாம் பகுப்பில் ஐம்பூதத்திறுல் அநேக சரீரம் எடுத்து அகில புவனங்களிலும் சார்வு பெற்று அவ்வைந்தால் மேலென ஒன்று கூடிய சடமாகி இயக்கம் கொள்ளச் செய்யும் இயமானனும் சீவனே தான் என இறுமாப்பு எய்தி தேவர் இருடிகள் ஆகியோருடைய எண்பத்து ஒரு பதங்களைப் பெற்று விளங்கும் என்பது ஐதரேய உபநிழலறத்தில் சிறந்து நின்று எனத் தொடங்கி பதம் எண்பான் ஒன்று என முடியும் வரையிலும் உள்ள ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகை ஆகும்.

"ஆதியோர் பதமெண் பானென் றுயிர்க்கண
நெடிதே சாரியை நிலமேழ் பெருஞ்சுரர்
சகபத மேழொன் றுயதொண் ணூற்ற
றதனிற் சந்தித் தனேக விகாரத்
திடைநிலை கொண்டாங் கிடைஞ்சல் பலயட்
டல்லல்சேர் சாக்கிரத் தனந்த லருளி
வேதை தீர்க்கும் வேதஅந்தப் பொருள்
சகஅடை வான சகடை நடத்தித்

Koviloor Digital Library

திரிபு உரமும் தேஅர் சடஇயை
பான சடைவும் அறிந்தெரிச் சல்கொள"

என்னும் ஐதரேய உபநிழலறத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

"உயிர்க் கணநெடிதே சாரியை நிலமேழ்" என்னும் உயிர்க் கூட்டங்கள் நிலெபெற்றுச் சாரும் இயைபுள்ள மூலம் முதல் நாதாந்தம் ஈருக உள்ள ஏழ்நிலெயங்களிலும்

"பெருஞ்சுரர் சபகத மேமொன் ருயதொண் ணூற்ரு" பெருங்கூட்டமாய் உள்ள சுரர் என்னும் அகக் கருவி ஏழும் ஒன்ருகிய தொண்ணூற்றி ஆறு தத்துவக் கூட்டங்களாய் என்பனவாய முன் கூறப்பெற்ற எண்பத்தொரு பதமும் சாரியை நிலெ ஏழும் அகக் கருவிக் கூட்டம் அமைந்துள்ள சகபதம் ஏழும்கூடி ஒன்ருகிய தொண்ணூற்ருறில்

" அதனிற் சந்தித் தனேக விகாரத்
திடைநிலெ கொண்டாங் கிடைஞ்சல் பலபட்"

தொண்ணூற்ருறு தத்துவ கூட்டங்களேச் சந்தித்ததால் அநேக வேறுபாடு எய்தி அவ்வேறு பாட்டு இடைநிலெயில் பல சஞ்சலத்துக்கு உட்பட்டு

"அல்லல்சேர் சாக்கிரத் தனந்த லருளி
வேதை தீர்க்கும் வேதஅந்தப் பொருள்"

இவ்வாருன துன்பங்களுக்கு இடமாய் உள்ள சாக்கிர நிலெயினின்று அனத்தல் அருளி வேதைதீர்த்தலாம் சொற்பண அவித்தையை தந்து வேதையை தவிர்க்கச் செய்யும் காரணத்தால் வேதாந்தப் பொருள் என்று சொல்லப் பெறும் முதற் பொருளானது

"சகஅடை வான சகடை நடத்தலாம்"

சகத்தின் தன்மை வாய்ந்த சஅகஅடு என்னும் சகடையாம் இச்சரீரத்தை செயல்படச் செய்து அருளுங்கால்

"திரிபு உரமும் தேஅர் சடஇயை
பான சடையும் அறிந்தெரிச் சல்கொள"

மாயா காரியமாகிய திரிபு உரமாம் வலிமையும் அகக் கருவி ஆகிய தேவர்கள் சட இயைபாம் உடம்பின் தன்மையைப் பெற்று உள்ளதான சடைவும் உணர்ந்து எரிச்சல் உண்டாக என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

Koviloor Digital Library

அர்த்தபாகை

உயிர்க் கூட்டங்களாகிய எழுத்துக்கள் எல்லாம் நெடிது இயைந்து சாரும் சார்வாகிய சாரியையும் சாரியை நிலவும் சுரபதமாகிய சகபதமென ஆகி இரி மனித நிலையை ஏற்று இத்துடன் ஏழொன்ருகிய தொண்ணூற்ருறு பகுப்புக்களைக் கொண்டு விளங்கி அதனல் சந்தி விகாரம் இடைநிலை சாரியை யாதியன பெற்று நெருக்கம் கொண்டு சாக்கிரம் என்னும் பதிருன்கில் தலைப்பட்டு குறைபாடு நீக்கம் என்னும் அனந்தல் உடையதாய் தூய்மை பெற்று விளங்கும் மறைக்காயப் பொருள் சக அடைவான சகடை என்னும் எழுத்து சொற்பொருள் காண நடத்துவதில் திரிபின் வலிமையும் (௩௰௩) முப்பத்து மூன்று பகுப்பாகிய தேவர்மொழி அறுவகைக்குள் வன்மை மென்மை இடைமை பெற்று சடத்தின் இயைவாம் மெய் என்றும் உயிர் என்றும் உயிர்மெய் என்றும் ஆதலை உணர்ந்து எரிச்சல் கொளலாம் தூய்மெய் பெற என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

ஈரேழ் பதிருன்கு லோகங்களும் அதில் அமைந்து கிடக்கும் ரிஷிகள் தேவர்கள் ஆகியோருடைய பதம் எண்பத்தி ஒன்றும் இதில் உயிர்க் கணங்கள் நிலைபெறும் ஏழுலோகங்கள் தேவர்கள் விளங்கும் நிலையம் எட்டும் ஆகிய தொண்ணூற்றி ஆறும் கொண்ட அகில பதங்களும் ஓர் உருவாகி அமைந்து ஒரு தேராக விளங்கி நிற்கும் காலையில் தேரில் விளங்கும் அச்சு மச்சு குச்சு கொடுங்கை முதலியன வெல்லாம் அமைந்த தேவர்களே தேராக திரிபுராதிகளின் வலிமையை குலைத்து அழிக்க உருப்பெற்றுள்ளதென்று ஒவ்வொன்றின் முதன்மைக் கூறுபாட்டை ஒவ்வொருவரும் எண்ணி தன்வலிமையை தானே உணர்ந்து செறுக்குற்ற காலையில் அதை அறிந்து மனதில் எரிச்சல் உண்டாக சிரித்தார் என்பது முன்கூறிய ஞானபாகை அர்த்தபாகையில் தோன்றிய கர்மபாகையாகும்.

ந்தஅஃ	தென்னும்	தத்திற்	றுவமெனத்	
தோன்றிய	வதுதன	துயநிழ	லாம்என	
எள்ளி	நகைக்கும்	அசிபத	மான	
தத்துவ	மசிய	தாம்தந்து	வந்தம்	
அனந்தந்	தொந்த	மெனக்கொடு	கொட்டி	
ஆடல்	புரிய	அனந்தற்	சொற்பண	
விரியிற்	றிளைத்து	வேதை	தீர்ந்துமுன்	
வேதச்	சாகை	விரியையும்	அஞ்சினத்	
தோற்ற	மாய	தொடர்தொண்	ணூற்று	
றதனிற்	றுரியல்	செய்தறியுங்	காலே.	(உயஅ)

என்னும் ஐதரேய உபநிடதத்திற்கு ஞானபாகை வருமாறு.

௱௨௰௯

Koviloor Digital Library

ஞானபாகை

"ந்தஅஃ தென்னும் தத்திற் றுவமெனத்"

இது அதுவாய் தோன்றும் தாதில் சுட்டியியற் பொருளாய் தோன்றி நிற்கும் தத்துவம் எனப் பெறும் தோற்றமானது ஆய்

"தோன்றிய வதுதன துபநிழ லாம்என"

தோற்றமானது தனது உபரியாகிய நிழலேயாம் என

"எள்ளி நகைக்கும் அசிபத மான"

உபரியாகிய நிழலை மெய்ப்பொருள் எனக் கருதும் போலி உணர்வைக் கண்டு ஏளனம் செய்து சிரிக்கப் பெறும் அவமதிச் சிரிப்பாகிய அசி என்னும் சொல்லானது

"தத்துவ மசியதாம் தந்து வந்தம்"

தத்துவமசியாகியது தனது உருவப் போலியாகிய நிழலே ஆம் என

"அனந்தம் தொந்தம் எனகொடு கொட்டி"

அந்த நிழல் ஒவ்வொன்றிலும் எதிர்மறைப்பாடு கொண்டு எல்லையற்றதாய் விளங்கும் என்று கொடு கொட்டி காட்டி

"ஆடல் புரிய அனந்தற் சொற்பண"

களித்து நடஞ் செய்ய குறைவற்று நிறைவாய் அமையும் நித்திரையில் காணப் பெறும் மாற்றமானது படம் என திகழ

"விரியிற் றிளைத்து வேதை தீர்ந்துமுன்"

அதன் படர்ச்சியில் தோய்ந்து துன்பம் நீங்கப் பெற்று

"முன்வேதச் சாகை விரியையும் அஞ்சினத்தோற்றமாய"

முன்பு வேற்றுமைப் பாட்டில் சார்பு கொண்டு விரிவுற்ற தொகுதிப் பாட்டை ஐவகைத் தோற்றமாக

"தொடர் தொண்ணூற் றுறதனிற் றுரியல்செய்
தறியுங் காலை"

இயலில் அடங்கும் தொடர்பு கொண்ட தொண்ணூற்றுறில் பிரித்து அறியும் போது என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

Koviloor Digital Library

அர்த்தபாகை

தாது என்னும் மூலச் சொல்லாகிய குறியீட்டில் தோன்றிக் காண்பதால் அத்தோற்றமானது மெய்ப்புள்ளி மறையப் பெற்ற உயிர்மெய் மெய்யின் உபரித் தோற்றமாகிய உபநிழல் என்னும் உபநிழலறமே என அவமதிச்சிரிப்பு பெயர் குறிப்பாம் அதுவே தத்துவமசி என்னும் மகாவாக்கியமான அமைவு பெற்று காணும் நிலையில் தந்தொந்தம் அனந்தத் தொந்தமாய் சொற்பெருங் கூட்டமாகி காண்பது என கைகொட்டி விளையாடல் புரிய அகரமாகிய உயிர் இனங்கள் அமைவு பெற்றுக் காணும் சொல்லாகிய பணம் என்னும் சொற்பணம் ஆகிய எழுத்து கூட்டத்தில் பலவாருய் அமைவு பெற்று திளைக்கும் வேதையாகிய தவளாகரம், தத்தவுரியம், ஆயவையினுடைய வேதச் சார்கையின் விரியாகிய அஞ்சினத் தோற்றத்தில் தோன்றும் தொடர்பு தொண்ணூற்றுரையும் பகுத்து அறியும் போழ்தில் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

அகில பூமண்டலத்தைத் தேராக்கி அதில் அச்சு மச்சு கொடுங்கை தூணுட்டு சிகரம் தேர்சீலை ஆயவைகள் எல்லாம் தேராக அமைய நான்முகன் சாரதியாக அமைய பெற்றதால் தேஅர் எனப் பெறும் ஊர்தியின் மீது மலையை வில்லாகவும் பாம்பை நாணுகவும் திருமாலை அம்பாகவும் கோர்த்து திரிபுராதிகள் எதிர் நிற்கும் வேலையில் தேரும் யுத்த சாதனப் பெருளாய் அமைந்த நான்முகனுதியாய சராசர சாதனங்களும் நம்மால்த் தான் திரிபுராதிகளை வெற்றி கொள்ள போகிருர் இறைவன் என்று ஒவ்வொன்றும் நினைத்த காலையில் இவ்வனைத்தும் தன்னுடைய நிழலே என்று அறியாது யான் எனது என்னும் செறுக்கடைந்த செயற்பாட்டை நினைத்து சிரித்த செயற் குறிப்புச் சொல்லே தத்துவமசி. தத்-அது, துவம்-தோன்றி நிற்றல் ஆகிய தத்துவம் என்பதை அறியாது அவமதிப்புச் சிரிப்பாக அசி எனச் சிரிக்க இவைகள் அனைத்தும் செயற்பாடு ஒன்றும் தேவைப்படாது முப்புரங்களும் எரியலுற்றது. இதைக் குறிக்கும் சொல்லாக தத்துவமசி என்னும் வாக்கியம் எழுந்தது. இவ்வாருய் திரிபுரம் எரியும் போது தந்தொந்தமே அனந்தம் துவஅந்தம் என்னும் தொந்தாம் தோற்றம் என்று அறியாமல் யான் எனது என்ற நிலைமையை கொண்ட இழிதகவை அறிந்து முப்புரத்தில் மூண்டு எரியும் பெருந்தீயின் கொடுமையைக் கண்டு கைகொட்டி ஆடல் புரியும் கொடுகொட்டி என்னும் சிவ நிறுத்தம் தோன்றிற்று. அந்நிலையிலும்இறைவனை எண்ணியதால் அழியாநிலை எய்திய திரிபுராதிகள் பொய்மை மயக்கற்று வேதனையினின்று நீங்கி வேதனையைத் தரா நின்ற ஐவகையான பூதாதி கூட்டங்களை தொகுத்து ஒதுக்கி

Koviloor Digital Library

மெய்ப்பொருளை உணரும் போது என்பனவே "ந்தஅஃதென்னும் சூத்திரம் முதலாக றதனிற் றுரியல் செய்தறியுங் காலை" என்ற வரையிலும் உள்ள தொகுதியில் காணப் பெறும் ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகை ஆகிய உபநிழலற வாக்கிய விளக்கம் ஆகும்.

"பண்ணல் லாத பணமெனுஞ் சொற்பணப்
பண்ணக மான படர்விரி நாகம்
ஆறுரென் றுகவிவ் வாறறி வொன்றும்
ஏழ்வகைத் தோற்றம் எடுத்து நிற்கும்
அதற்கும் பிரக்ஞை யளித்து நின்று
பிரக்ஞை ஞானமாம் பிரக்ஞானம் பிரமம்
ஏலல அல்லேலல தேஉலயாம் எனப்
பழையமன் றுடும் யாண்ட ரங்கஞ
யாடல் காட்டி நின்றுட்டு மெய்ப்பொருள்
துரியத் தோன்றுச் சுழுத்தி நல்கலும்" (உபகூ)

என்னும் உபநிழலறத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

"பண்ணல் லாத பணமெனுஞ் சொற்பணப்
பண்ணக மான படர்விரி நாகம்"

பண் என்னும் சொல்லிற்கு எதிர்மறையான அகரம் கூடிய பணம் என்னும் சொற்பணமாகிய பண்அகமாம் விரித்த படத்தையுடைய நாகத்தின் அமைவைக் கொண்ட சொற்பணம் என்னும் அவித்தை அனந்தல் என்னும் நித்திரையாக

"ஆறுரென் றுகவிவ் வாறறி வொன்றும்
ஏழ்வகைத் தோற்றம் எடுத்து நிற்கும்"

இவ்வாறுன மெய்அறிவு உடைய பொருளாம் ஆன்மா ஆறு ஒன்று கூடிய சடாதார நிலையத்தில் ஏழ்வகைத் தோற்றமாய் தலைப்பட நிற்குங்கால்

"அதற்கும் பிரக்ஞை யளித்து நின்று
பிரக்ஞை ஞானமாம் பிரக்ஞானம் பிரமம்"

அனந்தல் என்னும் நித்திரையில் தன்இயல் குன்றி மயங்கும் நிலையில் அதற்கும் மெய் உணர்வைத் தந்து நிற்றலால் பிரக்ஞையைத் தரும் ஞானமாம் பிரக்ஞானமே பிரமமாகும் என்று

Koviloor Digital Library

"ஏலல அல்லேலல தேஜையாம் எனப்"

ஏல் என்னும் சூரியன் அல்ல அல்லேல் இரவில் ஒளிரும் சந்திரனும் அல்ல தேவையாம் என இவ்விரண்டு எல்லிற்கும் தலைவன் நானே என

"பழைய மன்றுடும் பாண்ட ரங்கனுய்"

மூலாதாரமாம் பெருவெளியில் நின்று நடஞ் செய்யும் பாண்டரங்கன் என. (இவ்விடத்தில் கீழ்மூலாதாரம் முன்னர் தோன்றியுள்ளதாலும் சிற்றம்பலமாகிய மேல்மூலம் பின்னர் தோன்றியதாகையாலும் பேரம்பலமாகிய கீழ்மூலாதாரத்தை பழைய மன்று எனக் கூறப் பெற்றது.)

"ஆடல் காட்டி நின்ருட்டு மெய்ப்பொருள்
துரியந் தோன்ரு சுழுத்தி நல்கலும்"

ஆன்மாவிற்கு நடன தரிசனம் காட்டி நடத்தக் கூடிய மெய்ப்பொருளாம் உயிருக்கு உயிராம் பிரமம் துரியம் என்னும் உறுவது அறியும் அறிவாம் உற்றறிவும் காண முடியாத சுழுத்தி என்னும் அவித்தையை தந்து நிற்றலும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

பண்ணல்லாத வாக்கியமாம் சொல் என்னும் இடுகுறியாய் பண்ணின் அகத்தில் உள்ள பண்ணகம் என்னும் குறியீட்டு எழுத்து நாவின் அகத்தில் பயிலும் நாகம் என்னும் ஆறுென்ருகிய ஏழு அத்துக்களைக் கொண்ட எழுத்தாய் அரியத்தக்க விளக்கப் பொருளாய் ஏழ்வகைத் தோற்றத்தை எடுத்து நிலைபெற நிற்கும் அதற்கு உணர்வு நல்கி அவ்வுணர்வுக்கும் நடுவாகிய பொருளாய் நின்று ஏலல சூரியன் ஆகிய தமிழ் அல்ல அல்லேலல இரவில் கதிர் பரப்பும் சந்திரனும் அல்ல தேஜையாம் என இரண்டிற்கும் ஆதாரமாய் உள்ள உணர்வு மயமே தாம் என மூலத்திற்ருேன்றி நடஞ் செய்யும் பண்டு நெடிதுடைய அரங்கமாம் சபையின் கண் இயக்கம் தரா நிற்கும் பாண்டரங்கன் என உரையாடல் காட்டி ஞானத்தைத் தரும் மெய்ப்பொருள் சொற் பொருளுக்கு எட்டாத சுழுத்தி நிலையைத் தரலும் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

சிற்சில போதில் மட்டும் விரிந்து காணப் பெறுவதால் பணம் என்று சொல்லப் பெற்ற பணகமாம் படத்தை விரித்த நாகமானது சத்த நாகங்களாக இவ்வாறு அரியப்படும் சத்த நாகங்களுக்கும் உணர்வு நல்கி

Kovilqor Digital Library

அவ்வுணர்வே தானாய் அனந்தல் செய்யும் அனந்தனம் மற்றைய நாகங்களும் அனந்தல் கொள்ளாமல் பிரக்ஞையை தந்து உதவும் பொருள் ஆகம் நிற்கும் ஒன்று விழிப்பைத் தரும் சூரியன் அல்ல துயிலைத் தரும் சந்திரனும் அல்ல இரண்டிற்கும் நடுவாய் உள்ள பொருள் ஆகும் என ஏலேலோ பாடி பாண்டரங்கன் நடனஞ் செய்யும் பாண்டரங்கனாய் ஆடல் காட்டி நின்று ஆட்டுகின்ற மெய்ப்பொருள் பிரித்தரியும் உணர்வுக்கு எட்டாத சுழுத்தியை அருளிய காலையில் என்பனவே பண்ணல்லா என்று தொடங்கி சுழுத்தி நல்கலும் என முடியும் உபநிழலறத்திற்கு உரிய ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகை யாம்.

அனந்தலில் லாழ்ந்த வான்மா மேற்கொள்
லரவுரி இணைதொட ரடுக்கொடு றைகொள்
யோனி நால்வகை யோவொரு பேதமாம்
ஐந்து திராவிட மாகி யாழ்த்த
ஆழ்வா ருகிய ஆன்ம நடுவாய்
அவித்தை கெடநின் றுதன தாய்க்கொள்
ஆய னும்அயம் ஆத்மா பிரமம்
தில்லஆ அல்லல்கடி யாகூ ஐயாகூவாய்க்
காவல் செய்பாலன னுங்கா பாலனாய்
ஆடல் செய்து நின்றருளுந் திறத்தால் (நடம்)

“அனந்தலில் லாழ்ந்த வான்மா மேற்கொள்
லரவுரி இணைதொட ரடுக்கொடு றைகொள்
யோனி நால்வகை யோவொரு பேதமாம்”

துயிலில் அழுந்திய ஆன்மாவை மேற்கொண்டுள்ள குண்டலி சத்தி இணைந்தும் தொடர்ந்தும் அடுக்காகவும் தனித்தும் ஆகிய நால்வகை யோனி பேதங்களில்

“ஐந்து திராவிட மாகி யாழ்த்த
ஆழ்வா ருகிய ஆன்ம நடுவாய்
அவித்த கெடநின் றுதன தாய்க்கொள்”

மயக்கருத பஞ்ச சாக்கிர அவத்தையாகி ஆழ்த்திய காலையில் ஆழ்வுற்ற ஆன்மாவிற்கு நடுநிலைப் பொருளாய் நின்று அவ்அவித்தை கெட ஆண்டு கொள்ளும் ஆவாகிய உயிரை தன்னதாய்க் கொள்ளும்

“ஆயனும் அயம் ஆத்மா பிரமம்
தில்லஆ அல்லல்கடி யாகூ ஐயாகூவாய்க்
காவல்செய் பாலன னுங்கா பாலனாய்
ஆடல் செய்து நின்றருளுந் திறத்தால்”

Koviloor Digital Library

தன்மையால் ஆவுக்கு அயலாகிய ஆயன்என ஆம் உயிருக்கு உயிராகி நடுநிற்கும் பிரமமே தில்லஆ அல்லல்கடி யாகூ காட்டு பசுவிற்கு நேரும் அல்லலாகிய துன்பத்தை கடியும் நீக்கும் ஆகூ நடுநிற்பவன் ஐயாகூ உயிருக்கு அயலாய் உயிருக்கு உயிராய் காவல் செய்கின்ற பாலனனும் காபாலன் ஆகி ஆட்டுவித்து அருள்புரியும் ஆற்றலால் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

குறைவு அற நின்ற அனந்தல் என்னும் மெய்யெழுத்தில் அழுந்திய ஆன்மா என்னும் உயிர்க்கலை உயிர்மெய்யாகி மேற்கொள்ளலாகிய எழுத்து கூடுதல் பெறும்போது உரிச்சொல் இணைச்சொல் தொடர்ச்சொல் அடுக்குச் சொல் எனப்பெறும் வகையில் நால்வகை யோனி என நின்று அவற்றின் பேதமாகிய பஞ்ச திராவிடம் என்னும் ஐந்து ஐவகை மொழியாகி ஒலிக்க அவ்வொலிப் பொருளாகி பதிவுற்றுக் காணும் எழுத்திற்கும் சொல்லிற்கும் காரணமாகிய பொருளாய் மயக்கற நின்று பொருட் பேறுகொள் அகரப் பொருளாகி நின்ற உயிர்க்கலையில் எழுத்திற்கும் சொல்லிற்கும் அப்பாற்பட்டு நின்ற மெய்ப்பொருள் எழுத்து சொல்லுக்கு காரணமாய் நிலைபெற்றிருக்கும் தன்மையால் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

அனந்தன் எனும் பாம்பில் துயில் கொள்ளும் திருமால் அவனைத் தாங்கி நிற்கும் பாம்பானது அழகாய் சட்டை கழற்றியும் இணைந்தும் தொடர்ந்தும் அடுக்கடுக்காக சுற்றி வளைந்தும் துயிலும்படியாக இடம் கொடுத்து நிற்க அவ்வியல்பால் ஐந்தலை நாகம் துயிலினின்று நீங்காத இடத்தை தந்து அவனை துயிலில் ஆழ்த்த அவன் ஆழ்வானாகி நின்ற காலையில் அவனுக்கு துயிலில் ஆளும் தன்மையைக் கெடுத்து உணர்வு வரச் செய்து அக்காரணத்தினால் அந்த ஆழ்வானாகிய மயக்கத்தை நீக்கி காத்தல் புரியும் காபாலனாகி முதற்பொருள் ஆடல் காட்டி நின்று அருளும் செயற்பாட்டால் என்பன அனந்தலில் எனத் தொடங்கி நின்றருளுந் திறத்தால் என நிறைவு பெறும் வேதாந்த பாகைக்குரிய உபநிழலறைத்திற்கு ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகையாக அமைவன காண்க.

வேதை தீர்ந்துமுன் வேதச் சாகையில்
பூதிக மாகப் புகல்தொண் ணூற்று
றதனிற் பன்னிரண் டாகிய பாகையும்
ஆக நூற்றெட் டடர்திறத் தின்மன
துன்மெய் யருகி யோதி யோதுவித்
ததகுற் பொய்ச்சார் பாம்மறந் தீர்ந்து
[illegible]

Koviloor Digital Library

அறந்தரு பதமும் இதந்தரு பாணியும்
தற்பணத் திற்படர் சாயையிற் றேன்றவச்
சாயா புருடன் தானவ னென்ன

ஞானபாகை

பஞ்ச சாக்கிர அவத்தையாகிய வேதையினின்று நீங்கப் பெற்று அவ்வேதையின் சார்கையில் பௌதிகாரமாய் அமைந்த தத்துவம் தொண்ணூற்ருரையும் அதில் அமைவு பெற்ற பனிரெண்டு பகுப்பையும் ஆகிய நூற்றிஎட்டாகி அடர்ந்து நிற்கும் திறத்தில் மனதின் மெய்ப்பொருளாகி ஓதியும் ஓதிவித்தும் அதனுல் பொய்மாயை கொடுமை நீங்கி மாறுபாடற்ற வாக்கும் அமைதியைத் தரும் சொற்றொடர்பாம் பாணியாகிய இசையும் தன்நிழலாகி ய தற்பணத்தில் காணும் சாயையில் தோற்றம் தர அச்சாயா புருடனே தானுகிய அவன் என்ன மயக்கெய்தி என்னும் உபநிழலறத்திற்குரிய ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

மறைக்காயமாய்த் தோன்றும் எழுத்து முப்பத்திரண்டு சீர் முப்பத்திரண்டு திறம் முப்பத்திரண்டு ஆகிய தொண்ணூற்ருரில் திணை ஐந்து பாலை ஏழு ஆகிய பனிரெண்டும் கூட ஆகிய நூற்றெட்டில் அமைந்து நிற்கும் அடர்திறத்தில் மனஒருமைப்பாட்டுடன் மறையை ஓதியும் ஓதிவித்தும் அதனுல் மாயா மயக்கம் தீர்ந்து வாக்கு பலிதமும் இசைமொழியும் பாட்டத்தில் தோன்ற அத்தோற்றமாம் மெய்ப்பொருள் நிழலைக் கண்டு தானே அவன் என்ன மயக்கம் கொள்ளல் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

ஆன்மாவானது வேதித்துக் காட்டும் வேதையாகிய வேதச் சாகையாம் பூதிகாதாரமான சரீர தத்துவம் தொண்ணூற்ருரில் கலை பனிரெண்டும் பொருந்த நூற்றி எட்டாகி அடர்ந்த பிரிவுகளாய் உள்ள கூட்டத்தில் சஞ்சரிக்கும் அறிவுக்கு அறிவாய் நின்று கற்றல் கேட்டல் ஆதியாய் மனேமயக்கம் தீர்ந்து புனிதம் பெற்று வேதம் தேடா நின்ற பதமும் பயம் தீர்க்கும் கரமும் மனத்தெளிவால் காணும் உருவகத்தில் கண்டு அதைத் தான் என அபிமானித்தல் ஆய தன்மையால் அவனே தான் எனச் சொல்ல என்பது எனக் கூறும் உபநிழலறத்தில் தோன்றும் ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகையாகும்.

வேதச் சாகை விரியிற் றூரிய
அதீதமாய் நின்றவை யஞ்சி லுழல்தலிற்
றீர்வருள் செய்து தீர்த்தன் துலங்க
பூதிகம் பாகை யாதியாம் நூற்றெட்

Koviloor Digital Library

டதிலவ	னுபநிழ	லாகி	யான்மா
தானவ	னென்னத்	தான	வருகித்
திதிபுத்	திரராய்த்	திரிந்து	கடவுள
றென்ன	எஒறன	மோகினி	யமிதங்கொள
நீள்கலா	திபர்கள்	நெடிதே	சுட்டிக்
காட்டலால்	உறுபுஅறு	வேற்றுமைப்	பட்டு

என்னும் ஐதரேய உபநிழலற தொடர்பிற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

வேறுபாடு கொண்டுள்ள சார்பின் விரிவில் ஆய்ந்து அறிவதற்கு எட்டாமல் நின்ற சாக்கிரா அவத்தை உறழ்ச்சியாகிய இருபத்தைந்தில் அன்மாவானது உழலுங் காலையில் அதில் தீர்வு காணும் படியாக தீர்த்தனும் இறைவன் அருள் செய்யலில் பூத பூதிக பகுப்பு ஆதியாகிய பாகை நூற்றெட்டில் முதற்பொருளின் எதிர்நிலைப் பிரதிபலிப்பைக் கண்டு ஆன்மாவானது அந்த உபநிழலையே தான் என்று அபிமானித்து யான் எனது என்ற நிலையில் நிலைபேறு கெட்டு நிலைபேறு அளிக்கும் தோன்றலாய் திரிபுற்று ஒன்ருகிய அடைவு உள்ளவரென உயிர்மெய் கொண்டு மாயா மயக்குற்ற காலையில் இரவிமதியாகிய கலாதி நெடிது அமைந்து குறிக்கோள் கொள்ள ஆயதன்மையால் அறுவகை வேற்றுமை ஏற்பட என்பது வேதச்சாகை விரியிற்றுரிய முதல் வேற்றுமை பட்டு வரை உள்ள உபநிழலற சூத்திரத்தில் தோன்றப் பெறும் ஞானபாகை. இந்த ஞாபாகைக்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

வேதித்து விரிந்து சார்புற்றனவாகிய க ச ட த ப என்னும் எழுத்து ஐந்தும் ஐஐந்தாகி ஒடுங்கு நிலையில் பூதபூதிய பகுப்பு ஆதியாக உள்ள தொகை ஒன்றித்து நூற்றி எட்டாய் விளங்கி திரிபு அறும் நிலையில் அமைவு பெறும் உபநிழலறம் தோன்ற அந்நிழலாகிய உபநிழலறமே உயிர் மெய் என்னவும் அகப்பொருள் புறப்பொருள் என்னவும் பெற்று தான்அவம் என்னும் நிலைபேறு நீங்க உடற்சக்ர அமைப்பில் பூர்வம் அமரம் ஆகிய இருவகைப்பட்டு திரிபுற்று 'க' கர வருக்கத்தின் அடைவுளதாக எ ஒ ற ன எனப் பெறும் மாயா பீஜமாக அமைவு பெற்ற நிலையில் கலாதியாகிய இருமொழி நெடிற் சுட்டு ஆகிய ஐ ஒ ஔ ஆயவற்ருல் அவற்றிற்குரிய உருபு ஆகிய வாயில்களில் அறுவகை வேற்றுமை உண்டாகி காணப் பெறுவது முற்கூறிய ஞானபாகையில் விளங்கும் அர்த்தபாகையாம் இதற்குரிய கர்மபாகை வருமாறு.

Koviloor Digital Library

மாயா கற்பிதமாகிய பூதாதி கரணத்தில் ஜனனம் எடுத்து உழலுங் காலத்தில் அத்தொகைப் பாடாம் யாக்கையை ஆட்டுவிக்கும் மெய்ப்பொருள் ஒன்று உண்டு என உணராது தானே அவன் என்று அபிமானித்ததால் நிலைபேறு தேடி அசுரர்களும் சுரர்களும் கடல் கடைந்து அமுதுண்ண தொடங்குங்கால் சூரிய சந்திரர் இருவரும் மோகன அவதாரங் கொண்டு அமிதம் பகிரும் மோகினியாகிய அரியை ஏமாற்றி அசுரன் ஒருவன் அமிதம் புசிப்பதை சுட்டிக் காட்ட அதன் காரணமாக அமிதம் பகிர்ந்த சட்டுவத்தால் ஓங்கி வெட்டிய காலையில் தலைவேறு முண்டம் வேருன அற்றுவிழ அவ்வாறு அற்று விழுந்த உடலம் அமிதம் புசித்துள்ளபடியால் உடம்பும் தலையும் வேறுவேருன நிலையில் அமைவுற்றன என்பது முற்கூறிய உபநிழலறத்திற்குரிய கர்மபாகையாம்.

மெய்யுயிர் வேறாய் விடவ மிதத்தால்
ஆகம் நிறைவுகொள் ஆக மருகிக்
காட்டிக் கொடுத்த கலைஞர் களிருவரைத்
தெற்கும் வடக்கும் திரியத் துறத்தி
விடவரி தங்கொள் மெய்ய னுருவப்
பிரதி பலிப்பைப் பெற்றகி லாண்ட
பூதலம் யாவையும் பூவெனக் கொண்ட
பூசெய னென்னப் புகல நெடிற்சுட்
டாம்பொருள் நாமென வாய நமோநமௌ
வெனுந்திரி சதமென் றெண்ணித் திரிதல்
அடங்கி வழிபா டாகப் புனிதம்

"மெய்யுயிர் வேறாய் விடவ மிதத்தால்
ஆகம் நிறைவுகொள் ஆக மருகி"

மெய்யையும் உயிரையும் வேதித்து உணராமல் சரீரமே தான் என்று எண்ணியிருந்த நிலைதெளிவுற்று 'அ' அகம் உயிரே தான் என்ற நிறைவு உண்டாகப் பெற்று அதனுல் தூல காரணம் கடந்ததும் தூல காரணத்தில் நிறைவு பெற்று மெய்யெனச் சொல்லப் பெறுவதுமான ஒன்றே தான் என்ற ஞானம் உண்டாகி

"காட்டிக் கொடுத்த கலைஞர் களிருவரைத்
தெற்கும் வடக்கும் திரியத் துறத்தி"

ஞானசிரியனுல் சுட்டிக் காட்டி உணர்த்தப் பெற்ற கலைகள் இரண்டாகிய சூரிய சந்திர கலையை கீழ் சூக்கும சடாதாரமாகிய மேல்மூல நிலையத்திற்கும் திரிந்து நடைகொள்ளும் படியாக ஓடச் செய்து

/ITJOL

Koviloor Digital Library

"விடவமி தங்கொள் மெய்ய னுருவப்
பிரதி பலிப்பைப் பெற்று"

வாசியின் சீற்றத்தை ஒழித்து அளவளவாக நடத்தி அதனுல் பசுவுருவாகிய ஆன்மா முதற்பொருளின் எதிர் நிலைப்பாட்டு தோற்றத்தை அடையலால்

"அகிலாண்ட பூதலம் யாவையும் பூவெனக்
கொண்ட பூசெய னென்ன"

பூதிகமாகிய உடலத்தில் பூத்துக் காணப் பெறும் வாசி மலரை நிறைவுற கொண்டோன் என

"பூசெய னென்னப் புகல நெடிற்சுட்
டாம்பொருள் நாமென வாய நமோநமௌ"

சொல்லப் பெறும் தகுதி வாய்க்கப் பெற்று குறிக்கப் பெறும் பேராளனுய் விளங்கி நாமும் நமதும் என

"வெனுந்திரி சதமென் றெண்ணித் திரிதல்
அடங்கி வழியா பாகப் புனிதம்"

திரிபுற்ற மெய்யை நிலைபேருயது என்று நினைத்து மாறுபாடு கொள்ளல் நீங்கப் பெற்று செம்மையிற் செல்லும் போக்குண்டாக புனிதம் பெறல் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

எழுத்தானது மெய் எழுத்து என்றும் உயிர் எழுத்து என்றும் இதினின்றும் வேருன உயிர்மெய் எழுத்து என்றும் உயிர்மெய்யில் அமிர்த எழுத்து என்றும் நச்சு எழுத்து என்றும், முப்பத்திரண்டு உறுப்புக் கொண்டுள்ள உடம்பென்ன அமைத்து இருகூருய் பகுத்துப் பார்க்கும் பொழுது அமிர்த எழுத்தால் நிறைவு பெற்ற கலையாகி சுட்டிக் காட்டும் எழுத்தாம் சுட்டெழுத்தென்ன விளங்கும் ஆரியமும் தமிழும் ஆகி தென்மொழி என்றும் வடமொழி என்றும் பேசப் பெற்று திராவிடம் என்னும் திராவிடமாம் ஆரியமும் அமிர்தமயமாம் தமிழும் ஆகிய இரண்டும் மெய்ப்பொருளாகிய சுருதியில் பிரதிபலிப்பை உருவாகக் கொண்டு தோன்றப் பெறும் உருவமே தானதாய் கொண்டு உள்ள இருநூற்றி இருபத்தி நாலு எழுத்தாய் அவ்வெழுத்து எல்லாவற்றையும் மலர்ச்சிவுறச் செய்யும் நாதபிந்துக்களாய் வேத மந்திரங்களால் சுட்டிக் காட்டப் பெறும் பொருள் நாமே என அமையும் நமோ நமௌ என்னும் திரிசத எல்லையில் அடங்கி வழிபாடு செய்யும் சுத்த வித்தியா தத்துவமாக அமையப் பெறல் முற்கூறிய ஞானபாகைக்குரிய அர்த்தபாகை இதற்குரிய கர்மபாகை வருமாறு.

Koviloor Digital Library

க்ர்மபாகை

தேவதேவனுகிய அரி அமிர்தம் பகிரும் சட்டுவத்தால் மாருருக்கொண்டு அமிதம் புசித்த அசுரனை வெட்டிய போது அவ்வசுரன் தலைவேறு உடல் வேருகத் துண்டிக்கப் பெற்று அமிதம் புசித்த காரணத்தால் உயிர் போகாமல் தலைஓர் உருவும் உடம்பு ஓர் உருவமுமாய் இருகூருகி அமையப் பெற்ற ஒருசீர் உள்ள உடம்பினனுகி தன்னை காட்டிக் கொடுத்த சந்திராதித்தர்களை தெற்கும் வடக்கும் திரியும்படியாக துரத்தி விடத்தை அமிர்தமாகக் கொண்ட இறைவனுடைய உருவ நீழலில் வாழும் தன்மையைப் பெற்று அகிலாண்ட புவனங்களையும் சிரத்தில் சூடும் பூவென சூடி நிற்கும் வலிமை பெற்று நின்று நீண்ட உருவமும் விரித்த படமும் கொண்டவனுகி எல்லாமும் யானும் எனதுமே என எண்ணச் செய்யும் திரிபுற்ற மனோநிலை மாயா காரணத்தில் அலையப் பெறும்நிலை அடங்கப் பெற்று வழிபாடாகிய தொண்டு செய்யும் புனிதன் என்பது மேற்கூறிய உபநிழலறத்திற்கான ஞானபாகை அர்த்தபாகை க்ர்மபாகையாம்.

வேட்டல்	வேட்பித்தல்	செய்விர	தீயனுகி
அதனுல்	இன்மை	யகன்று	மெய்ப்பொருள்
வாகாய்	வாய்க்கும்	வாக்காம்	அறத்திற்
காதி	நலனுடைத்	தாகத்	தன்னுள்
ஆவெனும்	பசுல	யமாகும்	ஆலயமாய்த்
தூல	வுருவம்	தோன்றக்	கண்டு
வாழ்க	வாழிய	வெல்க	போற்றி
காண்க	வென்னக்	கழறும்	அஸ்துத
தாஸ்து	ஜயவிஜ	யிபவ	வென்ன
ஒன்றிரண்	டாமுப	சார	மொழிபத்
ததிற்றிரி	யாமச்	சதந்தலைக்	கொண்டு
அருத்தனை	புரியு	மதிவி	சேடத்தால்

ஞானபாகை

மூலக்கினியை எழுப்புதல் எழுப்பித்தல் ஆகிய செயலாம் அங்கி தாரணையைச் செய்யும் தவத்தோன் ஆகி அவ்வாருய தவத்தைச் செய்தலால் மெஞ்ஞானம் பெற்று மெய்ப் பொருளானது வாகாக வாக்கில் அமைவு பெற அவ்வாக்கில் தோன்றும் அறம் என்னும் மறைமொழிக்கு முதலானது நலம் பெற்று விளங்க தன்னகத்துள் விளங்கும் 'ஆ' என்னும் பசுவானது லயம் பெறலால் ஆலயம் என்னும் காரணப் பெயர் கொண்டுள்ளதாய் பௌதீகாதாரமான தூல உருவம் விளங்கக் காணும் நிலையில் வாழ்க வாழிய வெல்க போற்றி காண்க என்று சொல்லப் பெறும் நற்றமிழ் அஸ்து ததாஸ்து ஜய விஜயிபவ என்ன கூறும் வடமொழியாய்

Koviloor Digital Library

ஒன்று இரண்டாகப் பெற்றதால் உபம் சாரம் என்னும் உபசாரம் ஆகிய பத்துச் சொற்களைக் கொண்டதாக அதில் மூன்று எழுத்துக்களை சதமாய் கொண்டு அமையலால் திரிசதம் என்னும் அருத்தனை என்னும் இரண்டு ஒன்ருய் கூடிய செயற்பாடு புரிதலாம் அர்ச்சனையாகி அதில் மிகைப்பாடு கொண்டு தோன்றும் விசேட காரணத்தால் 'வ' காரமாகிய வாசி மூலாதாரத்தில் ஆழ்கவும் அப்படி ஆழ்ந்தது 'வ' காரமாகிய வாசி இழியப் பெருமல் வா ஆழும் இயலைத் தந்து மீளாத கதி என்னும் தன்மை வாய்ந்ததாய் தத்துவக் கூட்டங்களை வெல்லும் இயற்கை பெற்று கற்ப சாதன சித்தியைத் தரும் தன்மை உடைத்தாய் காலத்தை வெல்ல காண்கும் செயற்பாட்டுடைத்தாக சொல்லப் பெறும் ஆழ்தல் ஆழ்த்துதல் செயம் பெறல் செய விசயம் பெறல் ஆகிய ரவிமதியென்ன காணும் இரண்டு ஒன்ருகிய ஒன்றிரண்டு இணையும் தன்மை வாய்க்கப் பெற்று திரியுங் கலையானது நூலாகி தலைப்பட விளங்கும் நிலையில் பகுப்புற்றுக் காணும் இரண்டொன்ருய் அமைந்த விசேடம் மிக்குடைத்தாதலால் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

"வேட்டல் வேட்பித்தல்"

பசுவின் இயைவு பெற்ற பாசையை வளமுறச் செய்தல் ஆகிய செயற்பாடு உள்ள

"செய்விரதியருகி அதனுல் இன்மை யகன்று"

உயிர்மெய்யாகிய பூதபூதிகாகார கலையை ஓம்பும் தன்மையால் சொற்பொருளிற்கு இசைவின்மை என்ற ஒலிக் கூட்டம் ஏதும் இல்லை என்ற வளத்தைப் பெற்று

"மெய்ப் பொருள் வாகாய் வாய்க்கும் அறத்திற் காதி நலனுடைத்தாக"

அந்த வளத்தால் பொய்யாமை யாகிய சொல் வாய்க்கப் பெறும் நலமுடைத்தாகிய மறைப் பொருள் ஆகிய முதல்

"நலனுடைத்தாக தன்னுள் ஆவெனும் பசுலயமாகும் ஆலயமாய்த்தூல உருவம் தோன்றக் கண்டு"

சிறப்புப் பெற தன் அகத்துள் உயிர் ஒடுங்கு நிலைபெற்று நிற்கும் இயலில் உயிர் நாத விந்து கலை கலாதி பூத பூதகம் ஆயவையெல்லாம் சரீர அமைப்பில் காணப் பெறும் வாய்ப்பை அமைவு பெறக் கண்டு

ஈரசுக.

Koviloor Digital Library

வாழ்க	வாழிய	வெல்க	போற்றி
காண்க	வென்னக்	கழறும்	அஸ்துத
தாஸ்து	ஜயவிஜ	யிபவ	வென்ன
ஒன்றிரண்	டாமுப	சார	மொழிபத்
ததிற்			

வாக்காலும் வாக்கியத்தாலும் இசையாலும் இசைப்பதாலும் இசைத்துக் காட்டுவதாலும் முறையே வாய், வாய்மெய், நாசி, காது, கண் ஆகிய பொறிவாயில்களில் அமைவு பெற்றுக் காணும் வாழ்க வாழிய வெல்க போற்றி காண்க என்னும் ஐந்தும் ஒலித்தலிற் பிறக்கும் அஸ்து ததாஸ்து ஜய விஜயிபவ எனக் கூறும் வட சொல்லும் தென்சொல்லும் ஒன்றிரண்டாக உள்ளது மீண்டும் ஒன்றுபட்டு காணப் பெறும் பத்தில்

"திரீயா	மச்சதந்	தலைக்	கொண்டு
அருத்தனை	புரீயு	மதிவி	சேடத்தால்"

'அ'காரம் 'உ'காரம் 'ம'காரமாகிய ஓங்காரமும் உரிமைப் பாட்டைக் குறிக்கும் சதம் என்னும் நம என்ற சொல்லும் கூட திரிசதமாகி அருத்தம் என்னும் பாதியானது தனது மறுபாதியுடன் ஒன்று சேர்த்தல் புரிந்து செயல்படும் மேன்மைச் சிறப்பால் என்பன மேற்கூறிய ஞானபாகையில் தோன்றும் அர்த்தபாகை. இந்த அர்த்தபாகையில் காணப் பெறும் கர்மபாகை விளக்கம் வருமாறு.

கர்மபாகை

வேள்வி செய்தல் வேள்வி செய்வித்தல் ஆய கிரியை விளைவிக்கும் பரிசுத்தமாகி அக்காரணத்தினுல் வறுமைப்பாடு இல்லாமை ஆக ஆக்கி நிலைபேறு ஆய பொருள் தேவைக்கு ஏற்பக் கிடைக்கும் நல்ல அறத்திற்கு முதலாய் நின்ற நற்பொருள் பேறு உண்டாகப் பெற்று பாசம் நீங்கிய பசு பதியைக் கூடப் பெறும் தன்மையால் ஆலயம் என்னும் கோவிலே ஞானசாதன விளைவின் வெளிப்பாட்டுருவ இயைபால் காணப் பெறும் தோற்றமாக காணப் பெற்று அம்மூர்த்தி கரத்தை வழிபாடு செய்யும் நிலையில் வாழ்க வாழிய வெல்க போற்றி காண்க என்று கூறும் நற்றிமிழும் அஸ்து தாஸ்து ஜய விஜயிபவ எனக் கூறும் ஆரியமும் ஆகிய இரண்டும் ஒன்றுபட்டு இறைவன் திருவடியை சாரலால் உபசாரம் என்று பெயர் பெற்ற மொழியானது பத்து நூறு ஆயிரமாக நாமாவளியாக்கி அருத்தனை செய்யும் சிறப்பு மிக உடைத்தாக என்பன முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகையில் தோன்றப் பெறும் கர்மபாகையாம்.

Koviloor Digital Library

ஆயிரந்	தலையுடை	யாதி	சேடனுய்ச்
சகந்திரம்	பெற்றிடத்	தாங்கும்	வலிமையில்
அஃதனுட்	டானம்	ஆகித்	துலங்க
அனந்த	பதந்தன	தாகக்	கோவில்
என்ன	மேற்கொண்	டிலங்கு	பூதியன்
நிற்கக்	கோவின்	நிலைஇனி	தாக
அகத்திற்	பிரமமா	யண்மி	நின்று
நானன	நன்ன	நானன	நன்னவென்
றனந்தத்	திருக்கூத்	தாடல்	செய்ய

என்னும் உபநிழலறத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

மூலாதாரத்தில் ஆறுநூருகவும் மேன்மூலமாகிய தலைப்புப் பகுதியில் ஆயிரமாகவும் பிரிவு பெற்று விளங்கும் தலைப்பை உடையதாகி சரீரத்திற்கு ஆணிவேராக முதலிற் றேன்றி அநேகம் பிரிவுகளைக் கொண்டதாய் உள்ள ஆதிசேடனும் குண்டலி சத்தியானது சகம் ஆகிய உடலம் நிலைபேறு கொண்டு விளங்கலால் சகத்திரம் என்று பேசப் பெறும் வலிமை மிக்கதாகி அவ்வலிமையால் சகமாகிய பெரும் பூதியத்தை அணுவெனத் தாங்கும் வலிமை பெற்று விளங்கும் இயலில் முடிவில்லாத பதத்தை தனதாகக் கொண்டு உயிருக்கு அடக்கமுற்று வதியும் நிலைபேறு கொண்டு உள்ளதான கோயிலாய் உள்ளதாக உள்ள நிலையில் பூதிகம் என்னும் பெயர்பெற்று நிற்க உயிர்நிலை இனியதாக ஆக்குதற் பொருட்டு உயிருக்கு உயிராகி கலந்து நிற்கும் நிலையில் நானே நடுவனுய் இருக்கின்றேன். நன்மைக்கு காரணன் நானேயாகும் என்று பெருவெளி ஆகிய அனந்தத்தில் ஆனந்த கூத்து காட்டி நின்று அருளுகின்ற போது என்பன அயிரந் முதல் ஆடல் செய்ய வரையுள்ள ஞானபாகையாம். அதற்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

ஒலி பிறத்தற்கு ஆதாரமாய் உள்ள வெளியும் வளியும் துலங்குமிடமாகிய மேன்மைப் பேறும் மிகுதிப்பாடு உள்ள தன்மையும் கொண்டுள்ள சிரத்தைச் சார்ந்து சலனமின்றி நிற்கும் இடமாகிய ஆருதாரத்தைச் சார்ந்து அதை மேற்கொண்டுள்ள வலிமைச் சிறப்புடைத்தாகி அது உயிர்வளி நிலைபெறும் தானமாகி முடிவில்லாத அளவு சொற்களைத் தனதாய் கொண்டு உயிருக்கு உறைவிடமாகி பூதாதி கரணம் கொண்டு நிற்கும் நிலையாம் உத்தமாங்கத்தில் நலம் சிறக்க உயிர்வளிக்கு ஆதாரமாய் நடுவாய் நின்று ஒலித்திரள் எல்லாவற்றிற்கும் காரணன் நானேயென்று எல்லையற்ற சொற்கூட்டங்களை நடைபெறச் செய்யும் நடனப் பெருளாய் விளங்கும்

Koviloor Digital Library

சொற்கூட்டத்திற்கும் ஒலி கூட்டத்திற்கும் சொல்லொலியாகிய தொடர் விரிவிற்கும் ஆதியாய் நிற்பது இசைஒலிச் சுருதி கூறுபாடு எனல் ஞானபாகையில் தோன்றும் அர்த்தபாகை. இதற்குரிய கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

ஆயிரம் தலைகளை உடையவனாகி ஆதிசேடன் எனப்பேர் பெறும் பாம்பானது சகம் எனப் பெறும் உலகம் நிலைபேருக நிற்க தாங்கும் வலிமையுடையவனாகி இச்சகமானது அவ்வாதி சேடனின் சிரத்தில் படிந்த தூசு போன்று உணரப் பெறும் தன்மையுடைய வலிமை பெற்று விளங்க எப்பதாங்களும் தத்பதம் என்ன திருமாலை தன்மேற் கொள்ளும் சிறப்பையுடையவனாகி அத்திருமால் அனந்த சயனம் செய்யும் படியாக நிற்கும் நிலையில் அவனுக்கு உள் உணர்வாகி நின்று அனந்தலாகி துயில் மேற்கொள்ளவும் விலகவும் ஆகிய இரு நிலையிலும் உயிர் உள் உணர்வாய் ஆனந்த நடனஞ் செய்ய என்பது ஞானபாகை அர்த்தபாகையில் தோன்றிய கர்மபாகையாம்.

"பூதிகஞ்	சார்தரு	வேதனை	பலவும்
தீர்ந்துள்	ளன்புச்	செறிவால்	ஈதல்
ஏற்றல்	உடைத்தாம்	நோற்றல்	புரியத்
தோன்றும்	ஓமத்	துலங்கத்	துலங்கிப்
படிந்தும்	வசித்தும்	பட்டும்	ஒற்றியும்
அத்தியை	யயன	மாகச்	சார்ந்தும்
இன்பந்	துய்க்கும்	இயல்பு	ளதாகிப்"

இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

பூதிகாகாரமாகிய உடலத்தைச் சார்ந்துள்ளதால் விளைந்த துன்பம் யாவும் நீங்கப் பெற்று உள்ளன்பு நிறைவு பெறுதலால் ஈதலும் ஏற்றலும் உடைய தன்மை வாய்க்கப் பெற்று உயிருக்கு ஆக்கம் தரும் விரதாதிகளை நோற்று அதனால் மூலாக்கினியானது மேற்கொண்டு விளங்க குண்டலினி நாடியானது வசப்பட்டும் எங்கும் சஞ்சாரம் உடைத்தாகியும் ஒன்றுபட நின்றும் இரண்டற கலந்தும் சார்பு கொண்டு எக்களிப்பைத் தரும் வாய்ப்புள்ளதாகி என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

பூதபூதிக ஆதி விளங்கும் உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் உயிர்மெய் எழுத்தும் உறழ்தர ஏற்பட்ட வேற்றுமைப் பாடுகள் பலவும் நீங்கப் பெற்று

Koviloor Digital Library
நல்லிசை தோன்றலால் மெய் உணர்வு உண்டாக்கவும் மெய் உணர்வு அமையப் பெறவும் செய்யும் இனிமைப்பாடு தோன்ற சுருதி லயம் சுத்தம் ஆயவைகள் ஒன்றியும் சஞ்சரித்தும் ஒற்றியும் ஒத்து நின்றும் அதில் லயம் உண்டாக பெறச் செய்யும் சார்பினுல் அந்நல்லிசையில் இன்பத்தை அனுபவிக்கும் இயல்புடைத்தாகியும் என்பது மேற்கூறிய ஞானபாகையில் தோன்றும் அர்த்தபாகை. கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

பூ மண்டலத்தை சுமத்தலால் ஏற்படக் கூடிய மாறுபாடுகள் அனைத்தும் நீங்கப் பெற்று அன்பு நிறைவினுல் ஈதலும் ஏற்றலும் ஆன பாயலாகிய உடம்பை ஈந்தும் தன்மீது சயனிக்க திருமாலை ஏற்றுக் கொண்டு பொறுப்பு ஆற்றுதல் செய்யும் விளைவால் ஓங்கார வடிவமாய் தன் உடலம் சுருண்டு விளங்கு நிலையில் அவ்வுடலத்து திருமாலானவர் படிந்தும் வசித்தும் பட்டும் ஒற்றி அதன் இயைபாக சார்ந்தும் இன்பம் தூய்க்கும் இயல்பைத் தந்து நிற்பது மேற்கூறிய ஞானபாகை அர்த்தபாகையில் தோன்றும் கர்மபாகையாம்.

பொருட்பத	மனைத்தும்	புற்கல	மான
காயத்	தின்பங்	கனிய	சித்துரு
வாகிக்	கலந்தை	யைத்தையு	மின்யமாய்ச்
சித்தனு	பவிக்கக்	சீர்பத	நல்கியக்
கால	பறம்பர	கதிதர	முடியில்
ஊன்றி	யருளி	வியோமா	திபனுய்
அஃகே	னங்கலை	யாக	வணிந்து
அகில	பதங்களும்	அஃகும்	ஆயுத
பாணி	யனுகிப்	பகுதி	விகுதியாம்
வேதை	நீறு	விளைக்கும்	வீபூதி
மெய்ய	ருகி	விளங்கும்	சித்திறம்
கூத்தா	டச்செய்	கூத்தனிவ்	வாறும்
ஆயிரத்	தொடுநூற்	றெண்ப	தாகிய

இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

முதற்பொருளாகிய உயிருக்கு உயிர் உயிரைச் சார்ந்து கருவி கரணுதிகள் அனைத்தையும் புல்லப் பெறுகின்ற படியால் புற்கலமென்னும் பெயருடையதும் முற்று பெறுதலால் முத்தி என்னும் பேரின்பத்தை அடையாமல் இருக்கின்ற படியால் காய் என்னும் தன்மையுடைய காயம்

Koviloor Digital Library

என்னும் சரீரத்தில் இன்பம் கனியும் படியாக சித்துருவாகி கலந்து சாக்கிராதி யாகிய ஐஐந்து அவத்தையையும் சித்தாகிய பிராணன் நுகரும் படியாக விளங்கும் திருப்பாதத்தை கொடுத்து அப்பாதமாகிய கால் பரமும் பராபரமும் ஆகிய நற்கதி தர சிரத்தின் உச்சியில் பதித்தருளி வியோமம் என்னும் அமித கதியை அளித்து சரமானது அச்சரமாகி குறைந்து முப்புள்ளியாய் சுடரும் நிலைபேருன கலையாகக் கொண்டு எப்பாதங்களும் அஃகுதலாகிய குறைவைக் கொள்ளும் ஆயுத பாணியன் என்ன பகுதிகள் அனைத்தும் விபகுதியாகிய விபூதியாய் தத்துவக் கூட்டம் தொண்ணூற்ருரையும் விளையச் செய்யும் மெய்ப்பொருளாம் தன்மையுடைமையால் சித்திர கூத்து என்னும் பொய்யை மெய்யாக ஆட்டி வைக்கும் சித்திர கூத்தன் இவ்வாருகிய ஆயிரத்து நூற்றி எண்பதாகிய சார்கையை என்னும் ஞானபாகைக்கு அர்த்த பாகை வருமாறு.

அர்த்தபாகை

பொருளைத் தரும் பதங்கள் அத்தனையும் அணிஅணியாக புல்லி நிற்கும் இயக்காயத்தில் இனிமை துலங்க சித்தியைத் தரும் உருவமாகி ஐந்திறங்களையும் இன்பமயமாக மனம் வாக்கு கடந்த சித்துப் பொருள் நுகரும் படியாக மேலாகிய பதத்தை தந்து தாளம் தந்தம் பதம் ஆதியெனவற்றில் இசை பயிலும் படியாக எடுத்தல் ஓசையாய் துலங்கி சுழன்று சஞ்சரித்து சொற்பதம் கடந்த இசைமயமாக அனைத்து பதங்களையும் அடக்கி இசைமயமாகி பகுதி விகுதிகள் அனைத்தும் தோன்ரு நிலையினதாக ஆக்கிவித்து மெய்ப்பொருளாகி அசையாத பொருளையும் அசையச் செய்யும் இசை நடன கூறுபாடுகளைக் கொண்டு ஆயிரமும் நூறும் எண்பதும் கொண்டதாகி விளங்கும் என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

புறத்தோற்றத்தில் காணப்பெறும் அனைத்தும் புல்லுதல் செய்யும் கலமான புற்கலமென்னும் உடம்பினிடத்து இன்பம் கனியச் செய்யும் உயிர் அணுவானது கலந்து சாக்கிர ஆதியாம் ஐஐந்தையும் உயிரானது நுகரும் படியாக இறைவனுடைய திருப்பாதத்தை ஞானசிரியன் அளித்து காலத்தையும் காலத்தின் எல்லை தொடர்பையும் கடந்து நிற்கும் படியாக உச்சியில் சடாரீயாகிய திருவடியைப் பதித்து அருள் செய்யப் பெற்ற நலத்தால் தத்துவக் கூட்டங்கள் அனைத்தும் நீருகச் செய்யும் திருநீறு புனைந்த சரீரத்தை உடையவனுய் விளங்கும் நிலையில் பொய் மெய்யாக நடைபெறச் செய்யும் நடனக் கூத்தன் ஆயிரமும் நூற்றி எட்டும் பத்தும் ஆகிய நாமாவளித் தொகையைச் சாதிப்பதனுல் என எடுத்து இயம்புவது முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகைக்குரிய கர்மபாகையாம்.

Koviloor Digital Library

வேதச்	சாகை	விரியைப்	பூதியம்
தொண்ணூற்	றுரும்	தொகையுட்	பகுக்கும்
பன்னிரண்	டான	பாகையுங்	கூடிய
நூற்றெட்	டதற்கப்	பாற்பட்	டெஞ்சும்
ஐந்திரம்	செய்யும்	அவித்தை	யையைந்துள்
ளாழா	நின்ற	ஆழ்வான்	வாழ
வருளுங்	கால	பரம்ப	வியோமமும்

இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

தசவித நாத ஒலிக்கதிர் தொகுதி ஆயித்தி நூற்றி எண்பதில் தத்துவம் தொண்ணூற்றுரைக் கொண்டு பகுக்கவரும் பன்னிரண்டு பாகையையும் தொண்ணூற்றுருடன் சேர்க்க ஆகிய நூற்றி எட்டு அதில் எஞ்சிக் காணும் இருபத்தெட்டிற்கு அவித்தை ஐந்திரமாக பகுத்துக் காணுமிடத்து அவ்ஐந்திரமாகிய இருபத்தைந்துள் ஆழ்ந்து கிடக்கப் பெறும் ஆழ்வான் ஆகிய ஆன்மா வாழ்வு பெற அருளிச் செய்யும் திருப்பாதமாகிய பராபர வெளியும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

தேவர் இருடிபதம் எண்பத்தி ஒன்று சாரியை நிலம் ஏழு சுரசகபதம் ஏழு தனிநிலை ஒன்று ஆக பூதியம் தொண்ணூற்றுரில் வேதச் சாகை ஆயிரத்து நூற்றி எண்பதை திராவிடம் ஐந்து பாசை தோற்றம் ஏழில் ஆக பனிரெண்டில் வகுக்க மிகுதி இருபத்தெட்டு ஐந்திரம் இருபத்தைந்து திரஇயல் மூன்று ஆக இருபத்தெட்டு வேதாந்த தத்துவம். இதில் உபநிழலறம் பூதிய பாகை நூற்றி எட்டு அகப்பொருள் இருபத்தைந்து ஆக நூற்றி முப்பத்து மூன்று லயம். இதன் அதிகார விரி ஆயிரத்து முந்நூற்றி முப்பது. இதில் தேவர் இருடிகள் எண்பத்தி ஒன்று என்பது தேவ பதம் க ச ட த ப இருபது மற்ற எழுத்தோடு புணரும் பொழுது மொத்தம் முப்பத்தி மூன்றும் (அதில் அஃகேனமும் கூட) இந்த முப்பத்தி மூன்றும் உயிர்க்கலை பதினாறுடன் கூட நாற்பத்தி எட்டு ரிஷி பதம். இவைகள் சாரியை நிலம் ஏழு சுரசக பதம் என்னும் சரிகமபதநி ஏழு சகபதமாக பிரியுங்கால் தனிநிலை கூட எட்டாகி ஆக பூதியம் தொண்ணூற்றுராயிற்று. இதில் உயிரும் அதைச் சார்ந்த உயிர்க்கலையும் உயிர்மெய்யும் சொற் சாரியை நிலை ஆகிய இயல் ஏழும் சுரசகபதமாகிய இசை தனி நிலையுடன் கூட எட்டும் ஆக எழுத்தும் சொல்லும் இசையும் தோன்றுவன காண்க. இது அர்த்தபாகையாகத் தோன்றும் பூதீகாதாரம் தொண்ணூற்றுரு. இதை வேதித்துக் காணும் சாகையாக பார்க்கும் போது ஆயிரத்து நூற்றி எண்பதாம். அதை

Koviloor Digital Library

உரிச்சொல் இணைச்சொல் தொடர்சொல் அடுக்குச்சொல் உரைச்சொல் என்ற திராவிடம் ஐந்தாகவும் அதன் தோற்றம் ஏழாகவும் காணும் இடத்து வரும் பனிரெண்டில் வேதச் சாகை பகுத்துப் பார்க்க மிகுதி கொள்வன இருபத்தெட்டு அதை ஐந்திரமாகக் கண்டு திறஇயல் மூன்றையும் சேர்க்க இருபத்தெட்டாக நிறைவு பெறும் இது வேதாந்த அர்த்தபாகை. இதன் உபநிழலறம் ஆகிய பூதியப் பாகை நூற்றி எட்டாகவும் அதன் அகப்பொருள் இருபத்தைந்தாகவும் காணும் போது நூற்றி முப்பத்தி மூன்ருன லயம் கொண்டு ஆயிரத்து முந்நூற்றி முப்பதாக விரியும். இதுவே வேதாந்த உபநிழலற அதிகார விரி. இது ஞானபாகையில் வேதச் சாகை முதல் பரம்பர வியோமமும் வரை என்பனவற்றில் காணும் அர்த்தபாகையாம். இதன் கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

தொண்ணூற்ருறு தத்துவக் கூட்டம் கொண்ட பூதிகாரமாகிய சரீரத்தில் ஒன்றெற்கொன்று மாறுபட்டுக் காணும் வேதச் சாகைப் பரப்பை தொண்ணூற்ருறில் பகுக்கக் கண்ட பன்னிரெண்டான பாகையால் சுவாசகதி கூட நூற்றெட்டாயது நூற்றிஎட்டு உபநிழலறமாம். அதற்கு அப்பாற்பட்டு நிற்கப் பெறும் சாக்கிராதியாம் அவத்தை இருபத்தைந்து இவை இரண்டும் நட்சத்திர பாதங்கள் நூற்றி எட்டாகவும் (ராசி பனிரெண்டாகவும்) நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் ஆகிய தொழில்கள் இருபத்தைந்தாகவும் ஆக நிற்பதில் இருவினைக்கு ஈடாக பிறப்பு எடுத்து மாய்கையில் ஆழ்ந்து கிடக்கும் ஆழ்வான் வாழும் படியாக இறைவனுடைய திருவடியை பரம் அபரம் வியோமம் என்ற வேதாந்த ஞானத் திர்க்கையால் வாழும் படியாக அருள் செய்து நிற்றல் மேற்கூறிய ஞானபாகை அர்த்தபாகைக்குரிய கர்மபாகையாம்.

ஆகிய	சத்த	நாலதின்	வேதாந்தமோ
டறுவகைத்	தொழிலும்	ஆள்வினைக்	குறிக்கோள்
என்னும்	அறம்பொரு	ளின்பம்	மூன்றும்
தோன்ற	லாகிய	தொகை	திர்சதமுப்
பானிற்	பழம்பொருள்	யடர்தரு	சாயை
பதியும்	புதுமை	யதினுற்	சேட
மிகுமதி	சேடவிரி	யதிலா	யிரங்
கூடு	தலையாய்	கொண்ட	திகாரக்
குறுந்தாட்	பூதக்	குறளதை	நாண்மலர்த்
தொடை	யலாக	வுடைவிர	தியனும்

என்னும் உபநிழலறத்திற்கு ஞானபாகை வருமாறு.

Koviloor Digital Library

ஞானபாகை

இது காறும் சொல்லி வந்த துவித சித்தாந்தம் தவளாகர தவுத்திரிய பூவூடிய வாமம் ஆயவற்றுள் அகச்சும் சார்கையும் ஆக வகுக்கப் பெற்று வந்துள்ளது. ஈண்டு கூறிய வேதாந்தத்தில் வகுக்கப் பெறும் தொகைப்பாட்டிற்கு பாகை என்று பெயர். மேலும் இதில் ஒரு சிறப்பியல் என்னவென்ருல் வேதாந்தம் எனக் கூறப் பெறுவது உயிர் மெய்யாகிய காயத்திற்கு தத்துவங்கள் தொண்ணூற்ருறு என்று வகுக்கப் பெற்றிருப்பது போல வேதாந்தத்திற்கு இருபத்தெட்டு தத்துவங்கள் என்றும் சித்தாந்தத்திற்கு முப்பத்தி ஆறு தத்துவங்கள் என்றும், வைணவத்திற்கு இருபத்தி நான்கு தத்துவங்கள் என்றும், மாயாவாதிகளுக்கு இருபத்தைந்து தத்துவங்கள் என்றும் ஆகமம் வகைப்படுத்திக் கூறகின்றது. தொண்ணூற்ருறு தத்துவம் என்பது உயிர்மெய்ப் பொருள் விளங்கும் சரீர தத்துவக் கூட்டம் இச்சரீர தத்துவம் யாராயிருந்தாலும் மாறுபாடின்றிக் காணும் பொதுப்படையாக உள்ளது. அப்படியாயின் வேதாந்த கொள்கையையோ சித்தாந்த கொள்கையையோ வைணவத்தையோ மாயாவாதத்தையோ மேற்கொண்டு ஒழுகுபவர்களுக்கு பொதுப்படையாகவுள்ள தொண்ணூற்ருறு தத்துவமே தான் என்பது மறுக்க முடியாத ஒன்று. அவ்வாருயின் வேதாந்த சித்தாந்த வைணவ மாயாவாதிகளுக்குத் தத்துவம் வேறுபாடாக வரையறுத்துக் கூறுவது நோக்கற்பாலது. சரீர தத்துவம் போன்று மேற்கூறியவைகளுக்கு தத்துவம் வகுக்கப் பெற்றிருப்பதால் அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சரீரியாக வகுக்கப் பெற்றிருப்பது என்பதை உணரலாம். வேதாந்த சித்தாந்த வைணவ மாயாவாதிகள் தத்துவ வேற்றுமை கொண்டு விளங்கப் பெறுவதைக் காட்டுகின்ருேம் காண்க.

சுவாச கதியானது பனிரெண்டங்குலம் பாய்ந்து எட்டு அங்குலமாக மீள்வதால் பனிரெண்டு எட்டு தொண்ணூற்ருறு தத்துவங்கள் ஆகின என்று சரீர சூக்கும கலைவல்ல ஞானியர்கள் கூறுகின்ருர்கள். அப்படியாயின் குருமுகமாக வாசிவித்தையைக் கற்று சுவாசகதி செல்வது போன்று மீளவும் செய்யில் பனிரெண்டு பனிரெண்டு நூற்றி நாற்பத்தி நான்காகுமன்ருே. அதில் தத்துவம் தொண்ணூற்ருருடன் வேதாந்த தத்துவம் இருபத்தெட்டு சேர ஆகிய நூற்றி இருபத்தி நான்கில் உட்பொருளாய் விளங்கும் தத்துவம் இருபதுக்கு விபரம் வருமாறு. வரவேண்டிய இருபது தத்துவங்களுக்கு ஞானபாகை விளக்கம் வருமாறு.

சரசாதனம் நான்கு = நாடிதாரணை. வாசிதாரணை.
அங்கிதாரணை. அமிர்த தாரணை.

சரவண்ணம் ஆறு = ஆதார நிலைய நடையும் தோற்றமும்.

Koviloor Digital Library

சரம் மூன்று	=	சரம் திறம் உபயம் ஆகிய சூரிய சந்திர அங்கி.
அகத்துறை நான்கு	=	சாக்கிராதி அவத்தை நாலில் ஓடும் கலை.
பூரணநீள் சுவாசம் ஒன்று பூரணஉள் சுவாசம் ஒன்று	=	இவைகள் சாதன இயலுக்குரியன
சூனியம் ஒன்று	=	சூனியம் நிலைபேருகக் காண்பது: ஆக இருபது

இவைகள் வேதாந்த சொரூபத்தில் காணும் ஞானபாகை இதற்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

கண்டம் நாலு பார்வை ஆறு கோணம் மூன்று மறைவு நான்கு உதயம் ஒன்று வக்கிரம் ஒன்று அத்தமனம் ஒன்று ஆக இருபதும் அர்த்தபாகை

கண்டம் நாலு	=	உதயம், உச்சம், பாடு, நீர்க்கீழ்
பார்வை ஆறு	=	கோள்களின் நோக்கம்
கோணம் மூன்று	=	ஒன்று ஐந்து ஒன்பது
மறைவு நான்கு	=	மூன்று ஆறு எட்டு பணிரெண்டு
உதயம் ஒன்று	=	லக்கினம் ஒன்று
வக்கிரம் ஒன்று		
அத்தமனம் ஒன்று	-	ஆக இருபதும் அர்த்தபாகை இதற்குரிய

கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

பேருரை என்னும் மகாவாக்கியம் நான்கு அவையாவன தத்துவமசி, பிரக்ஞானம் பிரமம், அயம் ஆத்மா பிரமம், அகம் பிரமாஸ் மீ என்பனவாம். இதற்குரிய தமிழ்வாக்கியம் நூலுள் காண்க

தொழில் ஆறு = ஓதல், ஓதுவித்தல, வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். ஆள்வினை குறிக்கோள் மூன்று புருஷார்த்தம் என்னும் அறம்பொருள் இன்பம் இதில் இன்பத்தில் வீட்டின் இயலும் அமையும் ஆகலான் மூன்றேயாம்.

சடங்கு நான்கு = அகமரீயன, புறம் அண்மையன, புறம், அப்புறம். இதை வடமொழியில் முறையே அகமர்ஷணம், பிராம்மண்யம், பரம், அபரம் என்று கூறுவர். ஒவ்வொன்றிற்கும் பதினாறு ஆக கூடிய அறுபத்து நான்கில்

ஆராமா

Koviloor Digital Library

ஆண்பால் பெண்பால் என்ற பகுப்பு இரண்டும் சேர அறுபத்தி ஆருகிலும் நாலுவகைக்குள் அடங்கும். சைவம் ஒன்று, வைணவம் ஒன்று, அத்துவிதம் ஒன்று ஆக இருபது வேதாந்தத்திற்குரிய கர்மபாகை.

தோன்ற	லாகிய	தொகைதிரி	சதமுப்	
பானிற்	பழம்பொருள்	படர்தரு	சாயை	
பதியும்	புதுமை	யதிறுற்	சேட	
மிகுமதி	சேட	விரியதி	லாயிரங்	
கூடு	தலையாய்	கொண்ட	திகாரக்	
குறுந்தாட்	பூத	குறளதை	நாண்மலர்த்	
தொடை	யலாக	வுடைவிர	தியனும்	
அரஹர	வென்னவா	ராதனை	கொள்ளும்	
அடர்திரி	சதமும்	ஆயிர	நாமமும்	
ஆகமத்	தோற்றமும்	ஆலயப்	பாடும்	
உபநிழ	லறங்க	ளொருநூற்	றெட்டும்	
முப்பாழ்	பாழாய்	முடிந்த	வெண்ணீறு	
விளங்கு	களாமுக	வேத	அந்தப்	
பதமும்	லயப்படு	பாணியும்	அகம்புறம்	
உருவ	நின்ற	வுருவும்	வலிமெலி	
யனைத்தினும்	இடையின	மாகிய	பொதுவும்	
சித்திரக்	கூத்தும்	சிறந்து	துலங்கி	
விளங்க	விச்சுவ	வீரட்	டானன்	
பரப்பிர	மமாய்ப்	பதிதர	நிற்கும்.	(௱௰௨)

ய

ஆயவற்றுள் தோன்றும் நூற்றி முப்பத்தி மூன்றில் முற்படு பொருள் தோன்றலால் சாயை பதிவுபெற்ற பதியாகி அமையும் புதுமையால் சேடமாக மிகுதிப்பாடு கொண்ட அதிசேடமாம் ஆதிசேடன் என்ன விரிந்து காணும் இயலால் ஆயிரத்துமுந்நூற்றி முப்பதாகி அதிகார விரியாகிக் காணும் என்பனவற்றிற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

முற்கூறியபடி தத்துவ உபதச சாக்கிராதி தத்துவங்கள் நீறுபடும் படியாக அபரம் பரமாக திருவடி தீர்க்கை தரலால் மாயா விகார கூட்டங்கள் அனைத்தையும் நீறுபடச் செய்யும் நலத்தால் மனம் ஆன்மாவைக் கூட அதனல் மனே மாயையாகிய வேதை தீரும் வேதாந்தச் சிறப்பும் அதனல் ரேசகம் பூரகம் கும்பகம் என்னும் மூவகை செயற்பாட்டில்

Koviloor Digital Library

மூவகைக் கலையும் தோன்றுதலால் எற்படப் பெறும் சாபம் சாபநீக்கம் வாழ்த்துதல் தாழ்த்துதல் அனுக்கிரகம் நிக்கிரகம் ஆகிய ஆறுவகைத் தொழிலும் மனே வாக்குக் காயத்தால் தோன்றப் பெறும் பெற உறுதவம் ஆகும் அமையம் செயும் சித்தம் என்னும் பிரார்த்தம் ஆஹாமீயம். சஞ்சிதம் ஆய மூன்றும் கூடிய தொகுதி நூற்றி முப்பத்தி மூன்றில் முதற்பொருள் ஆகியபதி தோன்றி நிற்குங் காலையில் அதன் சாயையானது பதியப் பெறலாய தன்மையால் தத்துவக் கூட்டத்தில் மிகுதிப்பாடு கொண்டு சேடமாய்க் காணப் பெறும் உயிர்ப்பு, மனம், உயிர், பிரமம் ஆகிய நாலும் கூடிய நூறில் விசேட தத்துவமாய்த் தோன்றும் பதிப் பொருளின் தோற்றத்தால் அது ஆயிரமாகி அதிகாரமாம் பேறு பெற்று கால் குறைந்து காணும் பூதமாய் குறுகிக் காணும் தொடுத்த மலர் தொடையாக கொண்டு நிற்கும் தவசியாம் செவ்வியனும் உயிரும் உயிர்ப்பும் ஒன்று கூடி அஃகிக் காணும் ஆராதனைக் கொள்ளும் அடர்வின் வலிமையும் வாசிநிலை பேறும் சாகாத்திரமும் உயிர் நிறைவும் யேகாந்தமும் தத்துவ உபதசமும் மும்மூலதானத்தில் தத்துவக் கூட்டங்கள் எல்லாம் பாழ்பட்டு காணும் தலைப்பாடு கொண்ட மூர்த்திகரமும் மறைமுடிந்த இடமாகிய நற்பதமும் ஒடுக்கமும் ஞானமுத்திரையும் அகிலமும் தனது அகமும் புறமுகமாக காணும் உருவத் தோற்றமும் வன்மை மென்மை அனைத்திலும் நடுநிலைப்பாடு கொள்ளும் சபையும் பொய்யை மெய்யாகக் காட்டும் நாடகமும் மிகுதிப்பாடு கொண்டு விளங்கிக் காண வித்தின்றி விளைவு செய்யும் வீறு அட்ட நிலையை உடையவன் ஆன வீரட்டானன் ஆகிய பரப்பிரமம் வீடுபேறு தர அமைவு கொண்டு நிற்கும் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

பதம் நிலம் இசையொலிபதம் சுருதி ஆகிய பூதாதிகாரத்தில் பகுத்துக் காணும் உயிர்க்கலை பனிரெண்டும் பனிரெண்டால் பாகுபாடு பெறும் எச்சம் இருபத்து எட்டில் வேதித்துக் காணும் இருபத்தைந்தும் அதன் பகுப்பு மூன்றும் நூற்றி எட்டொடு அகப்பொருள் இருபத்தைந்தும் கூட நூற்றி முப்பத்தி மூன்ருகி லயம் பெற்று அதிகார விரியில் ஆயிரத்து முந்நூற்றி முப்பதாக விரிந்து நிற்பதில் கற்றல் கற்பித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் தெளிதல் என்னும் ஆறும் சேரும் வண்ணம் மனனம் நியதி அத்தியையயன வசனம் என்னும் சிரவண மனன நிதித்தியாசனம் இவற்றுள் வேதாந்தப் பொருள் சரியை பெற்று நிற்க அதனல் மிகுதிப்பாடு கொண்டு ஒன்று பத்தாகவும் அப்பத்து லயங்கொண்டு காணும் பொழுது நூற்றி முப்பத்து மூன்ருகவும் அதன்விரி ஆயிரத்து முந்நூற்றி முப்பதாகவும் அதிகார பகுப்புக் கொண்டுள்ள குறுந்தாட் பூத குறளாக

Koviloor Digital Library

அமைவதில் நாள்மலர் தலைகொண்டு விளங்க செம்மை பெற்று உயிர்ப்பு ஒலி தோன்றப் பெறும் வெண்சீர் கொண்டு நூற்றி எட்டும் பிரணவாகாரம் பொருந்திய நமோத்து கொண்ட கவச மந்திரமும் நாமாவளி ஆயிரமும் ஆகம அமைப்பும் ஆலய வழிபாட்டு இசையாகிய வேத முழக்கமும் அவ்வேதத்தின் உட்பொருளாகிய உபநிழலறங்கள் ஒரு நூற்றி எட்டும் அதில் பாகுபாடு கொண்டுள்ள அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாழும் இம்முப்பாழும் பாழ்பட முடிந்த வீடு பேறும் மாசற்ற தெளிவும் நிறைமொழி விளங்கு சொல்லும் மந்திரத் தோற்றமும் பாடல் திறமும் அகம்புறம் கொண்டு விளங்கும் வடிவுடை உருவகமும் எவ்வகை மொழியையும் தன்னிடை காட்டும் நிறைவுரு பொதுவும் மாயை அகற்றும் இருளறு சொல்லும் விளங்கக் காண அட்ட குணங்களைக் கொண்டு இராகத் துவேசத்தை அறுக்கும் வீரட்டன் என்ன முதன்மை பெற்று நடுநிலையாளனாக பதிவு பெற்று உள்ள பரம் பொருளென்ன முத்தமிழ் துலங்கும். முற்கூறிய ஞானபாகையில் தோன்றும் அர்த்தபாகை. இற்றகுரிய கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

வேதாந்த சொரூபம் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலும் புருஷார்த்தம் என்னும் ஆள்வினை குறிக்கோளாகிய அறம் பொருள் இன்பம் மூன்றும் அது அமைந்து காணும் நூற்றி முப்பத்தி மூன்று தொகுப்பும் அது பதி அகம் என்னும் பதிகம் ஆதலால் புதுமை பெற்று விரிந்து காணும் அதிகாரத் தலைப்பையுடையதாகிய குறுந்தாட் பூத குறளாம் முயலகனும் நாள்மலர் தொடையல் என தொடுத்த பிரமகபால மாலையுடைய சைவ வேதியனும் ஆடல் வல்லவனும் அரவு என அச்சத்தைத் தரும் அரவை அனைத்துக் கொள்ளும் தன்மைத் தோற்றங் கொண்ட பூதமாம் முயலகனும் அரஃகர என்ன தோத்திரம் செய்யும் அன்பர் குழாமும் அடர்திறம் திரிசதம் ஆயிரம் நாமாவளியாய் அமையும் அஷ்டோத்திரம் திரிசதை சகஸ்திர நாமம் என்னும் நாமாவளித் தொகையும் ஆகமத்தினுடைய தோற்றத்தைக் கொண்ட ஆலயமும் அதன் வழிபாடும் வேதத்தின் உட்பொருளாய் விளங்கும் உபநிஷத் என்னும் உபநிழலறங்கள் நூற்றி எட்டும் மூன்று பகுப்பாய் விளங்கும் முப்பாழ் முடிந்த இடமாய்க் காணும் திருவெண்ணீறும் அத்திரு வெண்ணீறு தரித்துக் காணும் களாமுகமும் வேத அந்தப் பதமாகிய திருஐந்தெழுத்தும் பாடற்றெடையும் புறத்திற் பூத்துக் காணும் வெண்ணீறு போன்று அகமும் தூய்மை உடைத்தாக நின்ற உருவமும் ஏற்றத் தாழ்வு காணுத நடுநிலைப் பேறு உள்ள பொது நோக்கும் அது அமைந்த பொதுப்படை கொள்கையும் பொய்யை மெய்யாய் ஆட்டுவிக்கும் சித்திரக் கூத்தும் துலங்கிக் காண விளைவைத் தரா நின்ற

Koviloor Digital Library
எண்வகை இராகங்களும் உயிர் தோற்றமாம் எண்வகை வீறு கொண்ட கொடுமையாளர்களின் வீரினை அழித்து ஒழிக்கும் அட்ட வீரட்டனுகி பரப்பிரமமாகிய முதற்ப் பொருள் பதியைத்தர கால் ஊன்றி நடஞ் செய்யா நிற்கும். இதுவே முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகைக்குரிய கர்மபாகையாம்.

துவித சித்தாந்தத்தை வித்தாகக் கொண்டு விரிந்த ரிக் யசூர் சாமம் அதர்வணம் என்னும் தவளாகர தத்தவுரிய பூவூடிய வாமமாதியாம் நான்மறையின் முடிவிடத் தோற்றமாக அமைந்து துலங்கலால் வேதாந்தம் என்றும் மறைமுடிவு என்றும் கூறப் பெறும் எழுதாக் கிளவி தொகை முடிவிற்கு உரிய உருத்திரள் பாசுபத கைவல்லிய நவநீத விளக்கம். ஆன்மாவின் சாயைப் படிம உருவாகிய எதிர்நிலை உருவமாக தோன்றி நின்று வேற்றுமையைத் தரும் மனமானது ஆன்மாவோடு ஒன்றி நின்று வேற்றுமையாகிய வேதை தீர்தலால் வேதாந்தம் என்று பெயர் பெறும். அக அச்சு நிலையினின்று சார்பு கொண்டு திரிதலுற்ற சாகை ஆயிரத்து நூற்றி எண்பதும் தத்துவம் தொண்ணூற்ருறு உபதசம் பனிரெண்டு இவையால் தீர்வுறும் வேதை இருபத்தைந்தும் ஆகிய நூற்றி முப்பத்து மூன்றும் பாகை பனிரெண்டில் அடங்குவதால் அதற்குரிய பாகை பனிரெண்டு என்றும் இதில் விரிந்து காணும் உபநிழலறம் ஒன்றிற்குப் பத்தாகி நூற்றிப் பத்து ஆயிரமாக விரிந்து காண்பதால் படம் விரித்த நாகமாகிய அனந்த தேவதை யென்றும் இதற்குரிமை பெற்ற பெத்தரே மும்மைச் சுத்தர் என்றும் வழங்கப் பெறும். இம்மும்மைச் சுத்தரே திரிபுற்று வடமொழியாளரால் மும்மூச்சுக்கள் என்று கூறப் பெறுகிறது. ஆதியில் அமலனுய் இருந்த ஆன்மா ஆழ் நவமலத்தாலும் ஆழ்நவ கன்ம மலத்தாலும் ஆழ்நவ கன்மாய மலத்தாலும் ஆணவ கன்ம மாயா மலத்தாலும் ஆழ்வுற்று ஆழ்வானுகிய தன்மை நீங்கி செவ்வியனுகிய நிமலனுய் திரிபின்றி லயங்கொண்டு விளங்கும் மெயும் அதனுல் தத்துவக் கூட்டங்கள் எல்லாம் வீய்ந்து வீபூதியாகிய திருநீறு காப்பும் ஆன்மாவானது தத்துவத் தொடுங்கி வித்தியா தத்துவமாய் திரிபு நிலை கொண்டு வித்தை எச்ச சிவதத்துவம் அமையப் பெற்று சிவதத்துவமேயாய் அமைவுற்று கருவி கரணுதிகளை (சாதா ஆக்கிய சாதாக்கியமும்) கட்டுப் படுத்தும் காலம் நியதி கலை வித்தை இராகம் புருடம் மாயை சுத்த வித்தியேச்சுரம் ஆயவைகளை சாதா ஆக்கிய சாதாக்கியமும் கூடுலயம் கொண்ட குடிலையின் இடையில் நிற்கும் இடையினமுமாக மறைமுடிந்த இடத்தில் பிறழ்நவத்தை ஆதியாகக் கொண்டு திருஐந்தெழுத்தாகிய நமசிவய என்ற ஐந்து ஆடல்வல்லான் உருவமாகத் தோன்றும். இது உருத்திரள் பாசுபத கைவல்லிய நவநீதமாக அமைவு பெறும்.

Koviloor Digital Library

- வேதாந்தம் நிறைவடைந்தது -

அத்துவித சித்தாந்தம்

மேகராகக் குறிஞ்சிப் பண்

சங்கேத	மொழியாய்	சாற்றும்	மேக
இராக	குறிஞ்சி	யெனஇசைக்கும்	பண்ணிற்கு
விளக்கம்	செய்ய	இசையும்	சனுகிறகம் ஆகிய
நுதலி	புகுதலின்	நுழைந்து	சித்செய்
என்னும்	ஈராறில்	இயைந்து	நிற்கும்
வியாகரணம்	என்னும்	மேற்கணக்	கொன்பதிற்
சந்த	இசைவாம்	சார்ந்த	இசைவில்
எழுதாக்	கிளவி	என்னும்	மூன்றில்
சுருதி	மீச்சுருதியில்	துலங்கும்	இயல்இசை
நாடகம்	மூன்றய்	நவில்வதில்	இரண்டுள்
நிறுத்தம்	என்னும்	நிலையாம்	ஒடுக்கம்
ஐந்தில்	விவதமாய்	அமைந்து	நிற்கும்
உபநிழ	லறமென	ஓதும்	நாடகம்
சமைந்து	நிற்பதை	சாற்றுவோம்	காண்க.

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதற்றிருமுறையில் முற்ருய் விளங்கும் மேகராகக் குறிஞ்சியென்னும் பெயர்க்குறிப்பையுடைய பண் இரண்டு கட்டளைகளைக் கொண்டு விளங்குவது. அவைகள் பதிகம் எட்டிற்கு குறிச்சீர்த்திறம் குறிச்சீர் செந்திறம் என்ற இரண்டு கட்டளைகளைக் கொண்டதாம். அதில் சிறப்பியல் பண்ணுக அமைந்து காணப் பெறுவது யாழ்முரிப்பண். அந்த யாழ்முரிப் பண்ணிற்குரிய ஜதி டட்டட டட்டட டட்டட டட்டட டட்டட டடுண்டடுண் டடுண்டடுண் டடுண்டடுண் டடுடுண் என்ன அமையும். இது யாழில் அமைக்க இயலாத இடிஒலி ஜதியாம்.

மேகஇராக குறிஞ்சிப் பண்ணின் இலக்கணம்

யாப்புத்	திறத்தில்	யாழ்சீர்த்	திறத்தில்
அடியின்	திறத்தில்	அமைசதிச்	சீர்திறம்
தன்னில்	மேகம்	தழுவும்	வெளியென
வியன்சீ	ருறுகலி	மேவலான்	மேக
இராகக்	குறிஞ்சி	யென்றிசைக்கப் பெற்றது.	

மாதர் மடப்பிடி பதிக அமைப்பின் விளக்கம்

Koviloor Digital Library

இயம்பொலி எவையும் இத்லாழ் வெற்றதே
என்ன விளிதெடுத் திசைத்தலால் யாழ்எனும்
சிரப்பெயர் பெற்ற சிறந்த கருவியும்
தமிழ்மறை முழக்காஞ் சாற்றும் அளவில்
எழுதாக் கிளவி என்பது மட்டுமோ
இசைக்காக் கிளவியும் இதுவென வுடைபட்
டியாழ் முரியாக எண்டிசை யதிர
விண்டலம் பிளக்கும் இடியொலிச் சதியில்
டட்ட டட்ட டட்ட டட்டடட்
டடுண்டுண் டடுண்டுண் டடுண்டுண் டடுடுண்னென்னல்
கொண்டீர்த் தாழிசை கொச்சக அம்போ
தரங்க வொத்த யாழிசைக் கலிப்பா
யாப்பில் மேக ராகக் குறிஞ்சி
யாழ்முரி யாக வமையும் வண்ணம்
வழுத்தி இசைத்தது மாதர் மடப்பிடி
என்னத் தொடங்கும் வன்மைப் பதிகம்.

திருமுறைப் பெருநூலில் துவக்கம் துவித சித்தாந்தமாகிய பிரணவாகாரமாக தோன்றிற்று. மேகராக குறிஞ்சிப் பண்ணில் தோன்றும் அத்துவித சித்தாந்தமும் பிரணவாகாரமாகவே காணப் பெறுகிறது. இவ்வியற்கைத் தோற்றம் முடிவின்றி புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் செல்வதைக் காட்டுகிறது. முதலிற் தோன்றிய ஓங்காரம் அகார உகாரமகாரம். அதன் நிறைவில் தோன்றுகின்ற ஓங்காரம் உகார அகார மகாரம். இத்தோற்றமானது சென்று சென்று மீண்டும் மீண்டும் சுழன்று திரிவதையே குறிக்கின்றபடியால் நான்மறையென்னும் வேதமானது தேடித்தேடி காணாமையால் இன்னும் தேடிக் கொண்டே யிருக்கின்றது என்பதைக் காட்டும். இது

ஐந்தெழுத் தோருரு வாகிய மோன
பூரண மாக பொலியும் ஒன்றின்
அடிக்கி ழாய்ச்சித் தாந்த பீடமாய்
வேதச் சுருதியாய் வேத முடியிலும்
வேத முடிவிலும் விளங்கும் பிரணவம்

என்ற வைகாநஸ சூத்திரம் பதினாறு கூறியவாறு இது அமைவு பெறுகின்றது. மேலும் இதில் சென்ற வழி மீளும் தோற்றமாக அகார உகாரமாய் தோன்றியது உகார அகாரமாய் தோன்றி ஒலியில் ஒன்றாகியும் அக்கரப் புணர்ச்சியில் வேறாகியும் இருப்பது நோக்கத் தக்கது.

இந்தப்பண் மேகராகக் குறிஞ்சியாக அமைவு பெற்று காண்பது மீண்டும் தோன்றுவதற்காக முடிவெய்துவதையும் முதலிற் தோன்றிய நட்டபாடை

Kovilam Digital Library

பண்ணிற்குரிய துவித சித்தாந்தம் முழுவதற்கமைய தோன்றுவதையும் காட்டா நிற்கின்றது.

துவித சித்தாந்த அமைவு பிரணவமும் திரு ஐந்தெழுத்தும் அவ்வைந்தெழுத்தின் வைப்பு முறை மண் நீர் அனல் வளி வான் என்ற ஒடுங்கு நிலையையும் இது வான் வளி அனல் நீர் மண் ஆகிய தோற்ற நிலையைக் காட்டுவதாகவும் உள்ளது. மேலும் கூர்ந்து நோக்கின் இதில் நாதமாகிய இடி ஒலி ஜதியும் அந்நாதத்தில் இயக்கம் பெறும் தோற்றத்தைத் தரும் விந்துவாகிய நாதபிந்து எனும் மேகராகமும் அதில் தோன்றும் கலைகலாதி பூதபௌதீகாதாரமாகவும் குறிச்சீர் திறம், குறிச்சீர் செந்திறம் இரண்டு அமைவுற்று காண்பதை நோக்குக.

திறத்தின் விளக்கம் குறிச்சீர் திறம்

இறைவன்	வதியும்	இடத்தை	குறித்து
கூறப்	படுதல்	குறிச்சீர்	திறமாம்

குறிச்சீர் செந்திறம்

இடத்தைக்	குறிப்பிட்டு	இசைத்து	பின்னும்
இடர்கெடும்	தன்மை	இசைத்தல்	குறிச்சீர்
செந்திறம்	என்ன	செப்பப்	பெற்றது.

அற்புத பதிக விளக்கம்

இசை வழங்கப் பெறும் கருவி யாழ் ஆம். அதனால் யாழ் என்று பெயர்வரப் பெற்றது. இயம் என்றால் ஒலி. அவ்வொலியை அழுத்தம் திருத்தமாக செய்யும் செயலில் இசைத்தலால் யாழ் எனப் பெற்றது. அவ்வாறான சிறப்பு பெயர் பெற்ற யாழும் எழுதாக் கிளவியாய் தோன்றும் மறைமுழக்கத்தை இசைக்காக் கருவியாய் காணப் பெறும், என்பதை காட்ட மேகம் தழுவும் வெளியில் தோன்றும் இடி முழக்க ஜதியில் பண்ணில் அமைத்து பாடப் பெறும் பொழுது அது யாழ் இசைக்கு எதிர்மறையாய் முரிவைத் தரும் யாழ்முரியாக அமைந்து அதை இசைக்கப் பெறின் யாழ் உடைபடும் செயல் விளைவைக் காட்டலால் அதற்கு யாழ் முரிப்பண் என்று பெயர் வந்தது. யாழை இனிமையாக இசைக்கின் கானகத்தில் வசிக்கும் கானப் பறவையாகிய அசுனபட்சி வான் வெளியில் வந்து கூடி செறிந்து வட்டமிடும். அது காலையில் அசுனப் பறவைகளைப் பிடிக்க விரும்பும் கானகர்கள் பறையை அடித்து கோரமாகிய இடி முழக்கத்தை எழுப்ப அப்பறவைகள் அந்த ஒலியை கேட்கச் சகிக்காமல் கீழே விழுந்து விடும். வேடர்கள் எளிமையாக அதை கவரந்து சென்று விடுவார்கள். ஆகவே யாழ் இசைக்கு முரியாக உள்ளது. "டட்டட டட்டட" என இசைக்கும் பறையொலி. பறை ஒலியே யாழ்முரி என்பது இதில் விளங்குகின்றது.

Koviloor Digital Library

அத்துவித சித்தாந்தம் என்றும் இறைவண்ண நிறைவென்னியச் சுருதி

குளிர்மேக	ராகக்	குறிஞ்சிப்	பெயர்ப்பண்
விண்ணே	றுடைத்தாம்	மேகம்	என்ன
வியன்கலிச்	சீரும்	மேக	இராகக்
குறிக்கோ	ளுடைய	கோமான்	இருவர்
என்னக்	கட்டளை	இரண்டும்	அவர்களை
விண்முக	டதிர	வேற்றிப்	பாரத
மாகப்	படர்ந்த	ஆழியொக்	கத்தாழ்ந்
திறைஞ்ச	லென்ன	இளைஇளி	உழைகொளும்
ஓசையுங்	கொண்டு	ஓங்கி	யொடுங்கும். (நடமாடா)

சீதளத்தைத் தரும் மேகமானது விருப்பமுற்று தழுவும் குறிப்பையுடையதாய் காட்டப் பெறும் இயல்பையுடையதாய் இப்பண் அமையப் பெறுவதால் மேகஇராக குறிஞ்சியென்று கூறப் பெறுகிறது. விண்ணேறு என்னும் இடிமுழக்கத்தைத் தரும் இயற்பாட்டை வுடையது மேகம். அதுவியன்தரம் என்னும் வான மண்டலத்தில் மேவி ஒலித்தல் போன்று வெண்சீரும் மேகத்தை விரும்பி வாகனமாகக் கொண்டவனும் மேகத்திற்குரிய குறிக்கோள் நிறைவை அளிப்பவனுமான தலைவர்களாம் இந்திரன் வருணன் ஆகிய இருவர்கள் என்ன இரண்டு கட்டளைகளும் அவர்களை வான மண்டலம் அதிரும் படியாக ஏற்றியும் வான மண்டலத்திற்கு எதிர்மறையாய் உள்ள நில மண்டலத்தில் படர்ச்சி பெற்றுள்ள ஆழ்கடலை ஒக்க தாழ்வுற்று இறைஞ்சி நிற்கும் ஆர்ப்பொலி என்னும் படியாய் இளைஇளி உழை கொள்ளும் ஓசை உடைத்தாகி ஓங்கியும் ஒடுங்கியும் காணப் பெறும் என்னும் சுருதிக்கு மீச்சுருதி வருமாறு.

மீச்சுருதி

உருவ	முடைஐந்	தொன்றுஞ்	சடத்திற்
றேன்றி	யமையத்	துவிதசித்	தாந்தமாய்
இசைகொள்	மேகம்	இறைஞ்சி	நிற்கவும்
சிந்தி	லமர்ந்தார்த்	திடவும்	ஆட்சிகொள்
இந்திரன்	வருணன்	இருவரும்	எடுத்தல்
படுத்தல்	ஓசை	பயிலும்	ஆழி
சங்க	முழக்கம்	தருபா	ரதமும்
ஓங்கா	ரத்திரு	வுருவுந்	துலங்க
இதுஇக	எச்சமென்	றெடுத்துக்	காட்டிப்

Koviloor Digital Library

பாசம்	அறுக்கும்	பாசு	பதமாம்
உணர்வில்	அஉஉடைப்	பசு	பதியக்
கொண்டுயர்	ஊழிக்	கூத்தும்	அனைத்தையும்
முடித்த	லோசை	முழக்கமும்	நிறைந்த
இலிங்கா	காரம்	இலங்க	நிற்கும் (ரு.107)

சுருதியில் காணப் பெறும் வடிவையுடைய ஐம்பூத கலவையாம் சடலத்தில் விளங்கி நிலவும் ஒருமைப்பாடு கொண்டுள்ள இரண்டாம் இறை வண்ணம் என்னும் அத்துவித சித்தாந்தமாக ஒலியைத் தரும் மேகம் இறைஞ்சி நிற்பதால் காணப் பெறும் மேக இரஞ்சினி சிந்தென்னும் வாருதியினிடத்து அமைவு பெற்று ஆர்ப்பொலி செய்யும் சிந்து மந்தாரியாகவும் ஆளுகைக் கொள்ளப் பெறும் இந்திரன் வருணன் ஆகி இருவரும் எடுத்தல் படுத்தல் ஓசையாய் அமையப் பெறும் ஆழி ஒலியும் சங்க நாதமும் தரவல்லதாகிய பாரதமும் ஓங்காரமாய் பிரணவத்திரு உருவும் துலங்கிக் காண இவ்வாருயதெல்லாம் பூதாதி கரண ஆகிய இக எச்சம் என்னும் இதிகாசமேயாம் என எடுத்துக்காட்டி மயக்கறுக்கும் பாசு உபஅதம் எனப் பெறும் பாசுபதமாம் உணர்வைத் தூண்டி அகார உகாரம் ஆயவற்றிற்குரிய பசுவை பதியும் படியாக தன் அகத்தில் கொண்டு விளங்கும் பசுபதியாம் மெய்ப் பொருள் இடண்டற செய்வதால் ஊழி என்னும் பெயரையுடைய ஊழி நடனமாம் ஊழிக் கூத்தும் அடங்கஉளயும் முடிக்கும் ஒலி முழக்கமுமாய் நிறைவு பெற்றுக் காணும் இலிங்காகாரம் தோன்ற நிற்கப் பெறும்.

மேகஇராகக் குறிஞ்சிப் பண் என்னும் அத்துவித சித்தாந்த சந்தசு என்னும் எழுதாக் கிளவியில் தோன்றும் சுருதி மீச்சுருதி என்னும் இயல் இசையில் தோன்றும் நாடகம் என்னும் உபநிழலறத்தில் ஒடுங்கிக் காணப் பெறும் ஒடுக்கமாகிய ஐந்தாவன. இதற்குரிய தெய்வம் என்னும் தேவர் இந்திரன் வருணன் ஒலி என்னும் சந்தோப விசுதியாம் சந்த உற்பவச்சீர் இஊ இளி உழை கொள பிறக்கும் ஓசை. கல்ல என்னும் புராணம் அத்துவித சித்தாந்தம். உரு என்னும் காயத்திரி அ.உ உடைய லிங்கம். தொழில் என்னும் அனுஷ்டிப்பாம் அனுஷ்டுபு பாசம் அறுக்கும் பாசுபதமாகிய ஊழிக்கூத்து. இதற்குரிய உபநிழலறம் வருமாறு.

பாசுபதப் பிரம உபநிழலறம்

இலிங்கா	காரமா	யிலங்கும்	பதியை
வெளியிற்	சொருப	விச்சுவ	மென்றும்
தூலங்	காரணம்	சூக்குமம்	என்ன
அகத்திற்	றேடி	யலுத்தும்	அஞ்சின

Koviloor Digital Library

விதத்திற்	பார்த்தும்	வேதை	பலபட்	
டடங்கிச்	சாகையில்	அவித்தை	தீர்தலாம்	
வேதாந்தப்	பாகையின்	விளங்குஞ்	சடத்திற்	
சித்தென	ஆழ்வான்	செவ்விய	ருகி	
ஆயிர	முகத்து	ஆராதனை	கொண்டு	
தெளிந்து	நடன	தெரிசனங்	காணும்	
பதஞ்சலி	வியாக்கிர	பாத	னென்னும்	
மென்மை	வன்மைப்பத	மென்னும்	இரண்டிற்கு	
அன்னி	யனும்உப	மன்னிய	னருளால்	
அஞ்செழுத்	தோதிநீ	றணிந்து	தீர்க்கைபெற்	
றனைத்தினுண்	மெய்கண்	டருட்சிவ	ஞான	
போதஞ்	சித்தி	பொருந்தும்	வகையிற்	
றேடி	முடிந்த	சித்தாந்த	துருவம்.	(௩௰௫)

பாசுபதப் பிரம உபநிழலறத்திற்கு ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

அண்டமென்றும் பிண்டம் என்றும் அகார உகாரம் என்றும் இல்லை என்றும் உண்டு என்றும் விளங்கா நின்ற முதற்பொருளாம் பதியை உரு என்றும் விச்சுவ காரணம் என்றும் காண முயற்சித்து எட்டாமையால் தூல காரண சூக்குமம் என்று புறநிலையை விட்டு அகநிலையிற்றேடி அதிலும் காணுமையால் அலுப்புற்று பூதாதி கரணம் என்று பார்க்குங்கால் பல்வகைப்பட்ட வேதையாம் வேறுபாடுகளுக்கு உட்பட்டு தன்னியல் குன்றிச் சாகையில் அவித்தை தீர்தல் என்னும் தீர்க்கையாகிய வேதாந்த பாகை என்னும் மனோநிலை பகுப்பின் விடுபட்டு காணப் பெறும் சடத்திற் சித்தென ஆழ்ந்து நின்ற ஆழ்வானுகிய உயிர் செம்மை பெற்று உள்ள செவ்வியனுக அமைந்து ஆயிரந் தலைப்புக்களை உடைய நிறைவழி இயற் செயற்பாட்டை மேற்கொண்டு அதனுற் தெளிவு பெற்று வாசி நடன தெரிசன காட்சியைக் கண்டு வேகாத தலை சாகாத கால் என்னும் இரண்டிற்கும் நடுவாய் நிற்கும் பரப்பிரமமாம் பரிபூரண அனந்தனின் அருளால் பஞ்ச கலையும் பயின்று தத்துவக் கூட்டங்களை நீருக்கி தீர்க்கை பெற்று அதனுல் மெய் கண்டானுகி சிவஞான போத முத்தியாகிய சித்து பொருந்தியவனுய் ஆகும் இயலில் தேடி நிறைவு பெற்ற சித்துருவாக நிலைபேறு காட்டும் சிவஞானபோத சித்தியர் ஆக அமைவு பெறும் மெய்நிலை விளக்கம் என்னும் ஞானபாகைக்கு அர்த்தபாகை வருமாறு.

Koviloor Digital Library

அர்த்தபாகை

விரிதலும் குவிதலுமாய் உள்ள ஒலியைத் தரும் நாதநாதாந்தத்தை வெளிப்படையாகக் காணுமிடத்து மெய் என்றும் உயிர் என்றும் உயிர்மெய் என்றும் உருவகப்படுத்தி ஒலிக்குங்கால் குறில் நெடிலாக விரிந்து காணும் எல்லையில் சொற்பொருட் பெருக்கம் எல்லையற்றதாகி விரியுங் போதில் ஒய்வுற்று மேலும் வரையறை செய்யும் பொருட்டு ஐவகைப்படுத்தி பார்க்குமிடத்து வேற்றுமைகள் பலவாகி சார்வு பெறும் நிலையில் மெய்யுணர்வுற்று வேற்றுமைப். பகுப்பின் உருப் பெறும் பதத்தில் ஆழ்வுற்று தோன்றும் நாமாவளியாகிய மந்திரமாகி செம்மை பெற்று ஆயிரம் முகத்து ஆராதனையாகிய சகத்திர நாமாவளியாய் கூடி தெளிவைத் தந்து இயல் இசை நாடகத்தைக் காட்டி ஆரோகண அவரோகண என்னும் ஏற்ற இறக்க சுருதியாய் ஒலி எழுத்து அனைத்திற்கும் பிறப்பிடமாகிய திருஐந்தெழுத்தாய் லயங் கொண்டு மெய்யுணர்வாகிய ஞானத்தை நல்கி தெளிவைத் தந்து சத்தபிரமத்தில் லகிக்கும்படியாக காணப் பெறுவது தாளம் சந்தம் பதம் கானம் லயம் ஆகியனவாகிய தவளாகரம் தத்தவுரியம் பூவூடியம் வாமம் ஆகிய நான்மறையும் ஆறங்கமும் நான்மறை பொதுவாகிய சாகையும் ஒருங்கே அமையப் பெற்ற வேத வேதாந்தம் என்னும் இறைவண்ணச் சுருதியாம் மெய்கண்ட சிவஞானபோத சித்தியாகி நிலைபெற்ற சைவசித்தாந்தமாக அமைவுறக் காண்பது அர்த்தபாகை.

கர்மபாகை

நான்மறையும் தேடித்தேடி அலுத்து இல்லையென்று முடிந்த நிலையில் இல் என்று சொல்வது இங்கு உளதாம் எனலால் லிங்கம் என்னும் பெயர் கொண்டிலங்கும் முதற்பொருளாம் பதியை உருவமா.ப் காணும் பொருட்டு வெளியிற்றேடியும் அதில் அமையாமையால் தூல காரணம் ஒன்று உண்டு என்றும் சூக்குமம் என்றும் அகத்திற் (உள்நிலைப் பாட்டில்) தேடி அலுப்புற்று பூதாதி கரண விதத்தில்ப் பார்க்குங்கால் ஊறுபாடுகள் ஆகிய வேதை பலவகைப்பட விரிய அதில் ஆழ்வுற்று சார்கையில் பொய் மயக்காகி அலுத்து அவித்தை தீர்க்கை பெறலாம் மறைமுடிவுப் பகுப்பில் விளங்கிக் காணப் பெறும் பௌதீகாதாரத்தில் சித்தென ஆழ்ந்து காணப் பெறும் ஆழ்வான் என்னும் தாழ்நிலை கொண்டவன் செவ்வியன் என்னும் சைவனுகி சகத்திர நாமம் என்னும் ஆயிரம் முகத்தை உடைய அரவதனை நெடிதாம் ஆராதனை செய்துஅதனல் தெளிவு பெற்று திரு நடனக் காட்சி காணப் பெறும் பதஞ்சலி வியாக்கிர பாதமென்னும் பாம்புக் கால்முனி புலிக்கால்முனி ஆகிய இருவரின் பதங்கடந்த சிறப்புற்றவன் ஆகிய உபமன்னிய மாமுனிவர் அருளால் திருஐந்தெழுத்தும் திருவெண்ணீறும்

Koviloor Digital Library

பெற்று சிவமாக தீர்க்கை உடையவனுய் எல்லாவற்றிலும் மெய்ப் பொருளைக் கண்டு சிவஞான போதம் சித்தி பெறும் வகையில் புருடோத்தமனுனவன் தேடி முடிந்த முடிவாகக் காணப் பெறும் சைவ சித்தாந்த துருவம் எனக் காணும் இயல்பைக் கொண்டு நிற்பது முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகைக்குரிய கர்மபாகையாம்.

துருவித்	தேடிய	தொகுதிகள்	யாவும்
பூதம்	பூதியம்	ஆதியாம்	சடம்அது
தந்நுச்	சத்தத்திற்	றரிக்கும்	சித்துயாம்
எமது	உயிர்ப்பின்	இயங்குவ	தோன்றும்
அதனில்	நாத	விந்ததிற்	சந்தத்தனு
சந்தத்	தனுவிற்	றரிக்கும்	விசமஃ
நாதி	யாக	அகிலம்	விளங்களம்
சங்கம்	ஆர்ப்புத்	தந்து	நிற்கும்
சுழல்முனை	யுடைத்தாய்த்	தோற்றம்	தெரிதராக்
கதிர்கொள்	நேமிதன்	எதிரிடை	கலையாய்
அதன்பின்	கலையாய்	அமையும்	இருகதிர்
யாண்டன	வெள்ளொலி	பரப்ப	விது
உறம்பெறச்	சண்டனுக்கு	ஒளியை	யுதவிடு
சக்கரம்	எந்தன்	நற்கரத்	துள்ளது
உள்ளஅச்	சக்கரத்	தொளியால்	ஒளிரும்
கதிர்மதி	யுதவும்	கலையைந்	திரத்தில்
அஞ்சு	உருவாம்	பஞ்ச	கலையும்
சுயலை	தனம்அது	துர்லை	தனமாய்
அமைந்த	ஓதனம்	ஐம்பதிற்	றிரட்டியும்
துருவப்	பதியிற்	றேரன்றி	யெழுந்த
வாக்கொரு	நான்கும்	மலர்எனச்	சுபத்திரம்
இயைகோ	டனையஃ	தேமும்	ஆய
நூற்றுப்	பதினெட்டு	ருத்திரட்	கணமும்
கலை	யாதி	யாக	நிலவலுற்றன.

இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

தேடித்தேடி காணப் பெரு நிற்கும் சித்தாந்த துருவமாம் தொகுதிகள் அனைத்தும் பூதம் பூதியம் ஆதியாய் விளங்கும் சடமேயென்றும் அது தன்னிடத்தில் தோன்றிய சத்தேயென்றும் அதில்நிலைபேறு கொள்ளும் சித்துப் பொருளாம் மெய்ப் பொருள் தானே என்றும் கருதி என்னுடைய அசைவாம் இயக்கத்தால் எப்பொருளும் அசைவுறுவதென்றும்

Koviloor Digital Library
அச்சலனத்தால் நாதம் தோன்ற அந்த நாதத்தில் விந்துவும் அவ்விந்துவில் சந்ததனு என்னும் உடம்பும் அவ்வுடம்பில் நிலைபேறு கொள்ளும் வீசம் என்னும் தாதுவும் ஆதியாக அனைத்தும் விளக்கம் பெற எனது சங்கமாகிய மூலாதாரம் ஆர்ப்பு ஒலியை எழுப்பி நிற்கும் சுழல் கூறுடையதாய் தோற்றம் கொண்டு அச்சுழற்சி காரணமாக வெளிநிலைப் பாட்டில் அமையா ஆழியின் முன்னிலைப்பாடு கொண்டு இடையும் தன்மையால் இடகலை என்றும் அதன் பின்கலையாய் அமையும் ரவிமதி ஆதியாம் வெள்ளொளி பரப்பும் விது உரம் தோன்ற ரவிக்கும் ஒளியைத் தரா நிற்கும் சுழற்சிக் கூறுடைய சக்கிராகாரமாய் விளங்கும் ஒளிவட்டம் என்கையகத்துள் உள்ளது அவ்ஒளி வட்டத்தால் ஒளிரும் ரவிமதி ஆதி கலை ஐந்து கூறுபாடுகளை கொண்டு விளங்க உருப் பெற்றுக் காணும் பஞ்ச கலையும் அப்பஞ்ச கலை தன்னிச்சை கொண்டு விளங்கும் இயல்குன்றி உள்ள காரணத்தால் சுயோதனமானது துர்ஓதனமாய் அமையப் பெற்ற ஓதனம் நூறும் அசைவற்ற நிலையாகிய துருவம் என்னும் மூலாதாரத்தில் விளங்கி நிலைபெறும் வாக்கு நான்கும் ஆகிய மலர் சுபகரம் நிலைபேறு கொள்ளும் சுபத்திரம் விளங்கும் ஆராவாரிப்பு ஏழும் ஆகிய நூற்றிபதினெட்டு உருத்திரள் கணம் என்னும் உயிர்த் தொகுதிகள் யாவும் கலையை ஆதியாகக் கொண்டு நிலைபேறு பெற்றன என்னும் ஞானபாகைக்குரிய அர்த்தபாகை வருமாறு.

அர்த்தபாகை

ஒலி உருவாய் மேலும் கீழுமாகி ஆராய்ந்து ஆராய்ந்து தேடிப் பார்த்தால் அவ்வளவையும் தொகுத்து காணும் பொழுது ஐம்பூதமாகவும் ஐம்பூதம் தன்னினும் மேற்கொண்டுள்ளதாகிய பூதிகமாய் ஒருரூவாய்க் காணும் சட அக்கரமாய் விளங்கப் பெறும் அவைகள் தத்த காரத்தில் அமைவுற்றுக் காணும் ஒலியே. அவ்ஒலியில் நிலைபேறு கொள்ளும் சொல்லும் பொருளும் உயிர்ப்பூவில் தோன்றுவனவே. உயிர்ப்பூவின் இயக்கமே இயலில் தோன்றும் இசையாகும். அவ்வியக்கத்தில் ஒலி புள்ளி ஆகிய உயிரும் மெய்யுமாகவும் சந்தமாகவும் அச்சந்தத்தில் தோன்றிக் காணும் புரியட்ட காயமாகவும் விந்தெழுத்தாகவும் அவ்விந்தெழுத்தாகிய அக்கர விஞ்சையில் முதன்மை பெற்று தோன்றி அனைத்துமாய் விளங்கி நிற்க சுழற்சியில் விளங்கும் சுழி கொம்பு சுழற்சி கொண்டு முனைப்புள்ளதாகி அமைந்து காணும் கதிர்வடிவாகிய சுழல் கூறு எழுத்தின் நேர்மாறு கொண்டு இடைந்து நிற்கும் இடைகலை எழுத்தாகிய நாதவடிவுள்ள எழுத்தாகவும் அதற்கு பிற்பட்டு தோன்றும் பின்கலையாம் விந்தின் வடிவமாகவும் அமையும் விந்தெழுத்தும் இந்த இரண்டு எழுத்தையும் கலாதி பரான இரவிமதிக்கு ஆதியாய் நின்று விள்ளல் ஓசை கொள்ளுமாறு ஒலிக்கும் மலர்ச்சியைத் தரும் எழுத்திற்கும் ஆதியாய் நிற்கும் ‘ஓ’ கரமும்

Koviloor Digital Library

அந்த 'ஓ' கரத்தின் ஒலிச் சிறப்பால் அமைவுபெறச் செய்யும் நாதவிந்தெழுத்துக்களால் தோன்றப் பெறும் ஐந்தெழுத்தாகிய சாந்தி கலையும் சாந்தி அதீத கலையும் வித்தியா கலையும். பிரதிஷ்டா கலையும் நிவர்த்தி கலையும் அன்னத்துவம் கொள்ளும் கசடதப என்னும் ஐந்தெழுத்தில் அமைவு பெற்றுக் காணும் இருபதெழுத்திலும் விரவி நிற்கும் ஐந்தெழுத்தும் கூடி நூருகிய அன்னுத்துவா சிதைவு பெற்றுக் காண்பனவாகிய திரிபு பேதங்களும் ஆக அமைவு பெறும் நூறில் மூலாதாரத்தில் தோன்றி எழுந்த பைசந்தி என்னும் பேச இயைந்ததும் அப்பேச்சு இயைவிற்கு வாக்காக இடம் தந்து நிற்கும் நடுநிலைப்பாடு கொண்டுள்ள தன்மையால் மத்திமை என்னும் வளி வழங்கு நிலையும் இந்த பேச இயநைந்த வாக்கிற்கும் வாக்கு வலிமைக்கும் ஆதாரமாய் சாட்சிப் பொருளாய் வைகும் வைகரித் தானமும் பைசந்தி மத்திமை வைகரி என்னும் மூவகையாகிய இயல் ஒலியை தன்னிடத்தில் கொள்ளும் சொற் கொள் மெய் என்னும் சூக்குமையும் ஆகிய நான்கு வாக்கும் அமைவு பெற்றுக் காண வலிமை தந்து உணர்வை எழுப்பும் ஓசை ஏழும் ஆகிய நூற்றி பதினெட்டு வகையால் உருத்திரள் கொண்டு விளங்கும் கலை கலாதி ஆக நிலவப் பெற்றுள்ளன என்னும் அர்த்தபாகைக்கு கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

துருவி துருவித் தேடி ஆராய்ந்த தொகுப்புக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் பொழுது பூதமாகவும் பூதத்தால் ஒருங்கிணைந்து காணும் பூதிகமாகிய சரீரமாகவும் பூத பூதிகமாம் சடமானது தத்துவக் கூட்டங்களால் ஆனது அத்தத்துவக் கூட்டங்களுக்கு ஆதாரமாகிய தத்தின் சத்தாய் விளங்குவதில் நிலைபேறு கொள்ளும் சித்துப் பொருளாக யான் இருக்கின்றேன் எமது உயிர்ப்பாகிய சுவாசத்தால் இயங்குவன எல்லாம் தோன்றுகின்றது. அவ்வுயிர்ப்பில் ஒலியும் அவ்ஒலியில் அசைந்தாடும் அணுவும் ஆகிய இரண்டாய் அழகிய தணு என்னும் சந்தத்தணு தோன்றுகின்றது. அந்த சந்தத்தணுவில் நிலைபேறு கொள்ளும் வீசமாம் வித்தை ஆதியாகக் கொண்ட அகிலமும் விளங்கா நிற்கின்றதில் அவ்வாறு விளங்க என் கரத்தில் உள்ள சங்கம் ஒலித்து நிற்கும் சுழலும் தன்மை யுடைத்தாகி அதனுல் நிலைபேருன தோற்றம் இன்னதென காண முடியாத கதிர்ஒளி பிரபை வீசும் சுதரிசன சக்கரத்திற்கு நேர் நில்லாது மதியாயும் ரவியாயும் தோன்றப் பெறும் இருகதிர்கள் ஒளிவீச விளக்கம் பெறும் ஒளியாகிய நடுவாகிய சூரியனுக்கே ஒளியைத் தரும் சக்கராயுதம் என்கைத்தலத்து உள்ளது. அச்சக்கரத்தின் ஒளியால் ஒளி வீசும் ரவிமதி இரண்டால் தோற்றம் தரும் பஞ்சகலைகளும் அன்னத்துவா சிதைவுறுவதால் தோன்றிய ஒரு நூறு பகுதியும் நிலைபேறு கொண்டுள்ள இடத்தில் தோன்றிய நான்கு வாக்கும் நிலைபேருன சுபத்தைத் தரும்

Koviloor Digital Library

ஒலிக்கூட்டம் ஏழும் ஆகிய நூற்றி பதினெட்டு ருத்திரக் கணங்களும் எனது கலையில் தோன்றியதே என்னும் கர்மபாகைச் சரியையே பூதபூதிகமாய் சரீரமாம் சந்ததனுவும் அச்சந்ததனுவால் தோன்றிய பீஷ்மனும் எனது சங்க நாதத்தினுல் அமைந்தவையேயாம் சுழற்சி கொண்டு விளங்கும் ஒளிவட்டமாகிய எனது சக்கரத்தின் அமைவு பெற்றதே பாண்டு எனப்படும் பாண்டுவில் தொடர்பாய் ஈது உரம் பெறும் பிதுரனும் தோன்றுவதற்கு ஆதாரமாக உள்ள சக்கரம் என்னுடையது. ஐந்து உருவாய் தோன்றிய ஐவரும் நூறு உருவாய் தோன்றிய சுயோதனனும் துரியோதனனும் ஆகிய நூற்றி ஐவரும் துருவப் பதியிற் றேன்றிய துரோபதை துஷ்ட தூய்மன் சிகண்டி சுபத்திரை ஆய நால்வரும் யாதவர்களாகிய எழுவரும் ஆகிய நூற்றி பதினெட்டு கூட்டமும் என்னுடைய கலையால் தோன்றுவனவே என கண்ணன் கூறுவது மேற்கூறிய ஞானபாகை அர்த்தபாகை கர்மபாகையில் தோன்றும் இதிகாச சரியை.

கலாதி நான்கிற் காணும் ஐந்தாம்
பப்புரு வாகமாய்ப் பரவும் வெளியும்
அதனிற் றேன்றும் அரவமாம் வளியும்
வளியிற் சேர்ந்த விமன்னும் அனலும்
அனலி லிளம்பாண் பாகிய புனலும்
புனலிற் கடர்க்கயம் பொருந்து நிலனும்
ஆயவைம் பூதம் அமைந்து தோன்றின. (சய)

இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

கலைகலாதியாகத் தோன்றப் பெறும் நான்கை முதலாகக் கொண்டு தோன்றப் பெறும் ஐந்தில் பரந்து காணப்படும் உருவாய் பரவும் அருவமாகிய வெளியும் அவ்வெளியினிடத்து கால் கொண்டு தோன்றும் சலனமுகிய காற்றும் அக்காற்றைச் சார்ந்து உயிருக்கு உறுதி தரும் உண்டி கொள்ளும் தீயும் அத்தீயினிடத்து மென்மை கொண்டு விளரி உடையதாய்க் காணும் நீரும் அந்நீரினிடத்து எல்லையற்ற வலிமை பெற்று கடினமாய் தோன்றும் மண்ணும் முற்கூறியவாறு கலை கலாதியை ஆதாரமாகக் கொண்டு ஐம்பூதமென தோன்றிக் காணும் என்னும் ஞானபாகைக்குரிய அர்த்தபாகை வருமாறு.

Koviloor Digital Library

அர்த்தபாகை

ஒலி தோன்றுவதற்கு இடமாய் காணும் பரவெளியும் அவ்வெளியில் ஒலித்தலை செய்து நிற்கும் காற்றும் இவை இரண்டும் கூட சமை கிருதமாய் தோன்றும் மொழியும் அம்மொழியில் தோன்றும் மொழிப் பொருளும் பொருளின் மொழிப் பொருள் கோவையும் ஆகக் காண்பது முற்கூறிய ஞானபாகைக்குரிய அர்த்தபாகை. இதற்குரிய கர்மபாகை வருமாறு.

கர்மபாகை

விஜயம் சேயாகிய பப்புருவாகனும் மேலும் அவனுடைய புதல்வனுமாகிய நல்லரவானும் சுபத்திரம் தரு தேவியாகிய சுபத்திராதேவி மகன் அபிமன்யனும் அவனோடும் நல்இளவளாய் தோன்றும் இளம் பஞ்ச பாண்டவர்களும் பீமனின் சேயாகிய கடோற்கஜனும் ஆகக் காண்பது முற்கூறிய ஞானபாகை அர்த்தபாகைக்குரிய கர்மபாகையாம் யோக ஞான இதிகாசாதி சரியை.

தோன்றி	பூதத்	துறுபூ	திகமாய்	
மாயச்	சகுனி	யாய	மூலமும்	
வியன்ஞா	லக்கலர்	விழைகீழ்	உருவாய்ச்	
சொல்லு	கின்ற	சுகவதீட்	டானமும்	
பிரளயக்	கலர்எனப்	பெறற்கரு	அணம்அது	
மணிநூல்	எனமறை	மணிபூ	ரகமும்	
சகலருங்	கலராய்த்	தாழ	தாழ்ந்தெழு	
துரோணம்	என்னச்	சொல்லனற்	கதமும்	
ஆள்நவ	மாகி	யடங்கி	யடங்க	
அச்சு	வத்தம்	ஆய	விசுத்தியும்	
கன்ம	வினைவாற்	காணும்	சல்லியம்	
அகலச்	செய்யும்	ஆக்ஞையும்	ஆயவை	
எனதுசா	ரங்கத்	தியைவு	கொண்டன.	(சயக)

KOVILOOR A
LIBRARY,

இதற்குரிய ஞானபாகை வருமாறு.

ஞானபாகை

ஐம்பூதத்தின் ஒருமைப்பாடு கொண்டுள்ள பூதீகாதாரமாகிய யாக்கையுள் மாயா மயக்கத்தைத் தரும் சகுன ரூபமாகிய மூலமும் வியன் ஞாலமாய் விளங்கும் பெருவெளி கவரத்தக்கதாய் கீழ்நிலைத் தானத்தில் உள்ள ஓர் உருவாய் சொல்லப் பெறுகின்ற சுக அதீதத் தானமும் பெறுலயம் கொண்டு

Koviloor Digital Library

காணும் இயல்புடையதாய் கீழ்நிலைத்தானத்தில் உள்ளதும் கருவாசலுக்கு நெருக்கம் உள்ளதாய் இருந்தும் அதனோடு தொடர்பு பெறுமல் மணி கொண்ட கோவையில் மறைகின்றவாறு நிலவுவன போன்று வாசியை கவரும் இயல்புடைய மணிபூரகமும் கருவிகரணுதிகள் எல்லாம் தாழ்வுறும் படியாக தாழ்ந்து நிமிர்தல் கொள்ளும் தன்மை வாய்ந்தமையால் துரோணம் என்னும் தணுஎன சொல்லப் பெறும் அனற்கதத் தானமாகிய அனுகதமும் எல்லாவற்றையும் ஆட்சி செய்யும் திறமை பெற்று அனைத்தும் தன்னுள் அடங்கச் செய்யும் ஆள்நவம் என்னும் அச்சுவத்தத்தைத் தரும் விசுத்தியும் செயற்பாட்டின் பயனைத் தந்து அழைக்கும் சல்லியமும் பொருந்திய ஆக்கையானது எனது சாரங்கம் என்னும் தணுவாய் அமைந்துள்ளது ஞானபாகையாகும்.

இறையருளும் குருவருளும் சேர்ந்து உலகிற்கு கிடைக்க வேண்டிய சூத்திரம் வரை கிடைத்துள்ளது. மேலும் உள்ள இருபத்தி ஒரு சூத்திரம் இறையருளும் குருவருளும் கூட்டுவிக்கும் பொழுது இப்பூவுலகிற்கு கிடைக்கும் என்பதை எழுதி நிறைவு செய்கிறேம்.

உ.அ.ம.

ANDAVAR 46466 KOVILOOR

ஓ

ஸ்ரீ கைலாச மலை



வசிட்டர் விசுவாமித்திரர் கஉல விளக்கம்

Rovilour Digital Library

இவ்வத்தியாயத் தொகுப்பில் கூறப்பெற்ற வசிட்ட விசுவாமித்திர முனிவர்களின் அத்தியாயம் யோகாந்தச் சிவரகசியச் சரியையாக மட்டும் கூறியதை மேலும் விரித்துக் காக்கப்படும் இனிய கஉல விளக்கமாக வுள்ளதையுங் காட்டுகிறோம் காண்க.

உத்திராடம் ஒன்றில் சூரியன் அதுவே லக்கினம். அதில் வியாழன்; நாலிற் சனி; ஏழிற் செவ்வாய் ராகு. பத்தாமிடம் சித்திரை நட்சத்திரத்தில் சந்திரன். பன்னிரண்டாமிடம் கேட்டை நட்சத்திரத்தில் புதன். தனுசில் மூலநட்சத்திரத்தில் கேது. பூராட நட்சத்திரத்தில் சுக்கிரன் இவ்வாறு நவக்கோள் நிஉலமையைப் பொருந்தித் தோன்றியமையைக் குறிக்கவே இவருடைய பெயரை விசுவாமத்திர முனிவர் என்றும் நான்கு திக்கினும் சென்று தவம் செய்தவர் என்றும். முதற்றிக்கில் திலோத்தமை யாளாற்றவம் பங்கப்பட. அவஉளப் பூலோகமாதாய்ப் பிறக்கும்படி சபித்து மறுதிக்கிற் றவஞ்செய்யுங் காஉலயில் குருவின் கோபத்திற்காளாய் நீச்சத் தன்மை யடைந்த திரிசங்கிஉனச் சுவர்க்கம் புகச் செய்து தடைப்பட்ட காஉலயில் தன் தவ வலிமையால் அந்தர சுவர்க்கத்தின் நிற்கச் செய்து அதனுல் தன் தவ வலிமை குன்றியவராய் மறுதிக்கிற் சென்று தவம் ஞற்றிய காஉலயில் அம்பரீடனின் நாமேதத்திற்கு யாகப் பசுவாய்ச் சென்றவனின் வேண்டுகோளுக்கிரங்கி தனது தவ வலிமையால் மந்திரசித்தீந்து உயிர்ப்பயம் நீக்கி ரட்சித்து மறுதிக்கிற் சென்று தவஞ் செய்து முத்தேவரும் புகழப் பிரமரிஷியாயினுர் என்றும். வசிட்டரைக் கொக்காகும்படிச் சபித்தார் என்றும் அவரிடம் உள்ள தெய்வப் பசுவை வேண்டிப் போரிட்டுத் தோற்ருர் என்றும் வசிட்டரைப் பகைவனுகவே கருதினுர் என்றும் கூறப் பெறுகிறது. எவ்வாறெனின் விச்சுவ நாள் என்பது உத்திராட மீன். மித்திரன் என்பது சூரியன். உத்திராட மீனிற் சூரியன் நின்றமையால் விச்சுவமித்திரன் என்றும். உத்திராடம் முதற்காலில் நின்றமையைக் குறிக்கவே காதிமைந்தன் என்றும் (க. என்பது ஒன்று அதை ஆதியாகக் கொண்டதே காதியாம்) தவப் பேறளிக்கும் கோள் வியாழன். அது லக்கின மீனில் நின்றமையால் விசுவாமித்திர முனிவர் என்றும். நாலாமிடமாகிய மீனத்தில் சனி நின்றதஉனயே திலம் ஒத்த மெய்யாளம் திலோத்துமையாள் என்றும். அவளால் தவம் பங்கப்பட்டதென்றும். திலம் ஒத்த மெய்யையுடையவனுன சநி நின்ற ராசி பெண் ராசி ஆகையால் திலோத்தமையாள் எனப் பெற்றது. சநி அவ்விடத்தினின்று செல்லுமிடம் நிலமகனுன செவ்வாய் வீடாகவும் அவ்வீடு சநி நீச்சத் தானமாகையால் அவஉளப் பூலோகப் பெண்ணுகும் படி சபித்தார் என்றும் செவ்வாய் குரு உச்சம் பெறும் இடத்தில் நீச்சம் பெறுமாகையால் செவ்வாய் நீச்சத் தானத்தை நோக்கிச் செல்லும் மிதுனத்தில் நிற்பதைக் குறிக்கவே திரிசங்கு

Koviloor Digital Library

சண்டாளத் தன்மையெய்தி இவர் தவம் செய்யும் திக்கிற்கு வந்து சார்ந்தானென்றும் தவம் என்பது ஒருமைப்பாடு. இவருக்கு ஒன்று நாலு. ஏழு. பத்து ஆகிய நாலு திக்கிலும் சென்று தவஞ் செய்தார் என்றும் சங்கினைக் கண்டால் திரிபுறும் தன்மையுடையது சே யாகையால் செவ்வாயைத் திரிசங்கு என்றும். செவ்வாய் ராகுவுடன் கூடியதையே அந்தர சொர்க்கம் என்றும். இராகு மற்ற கோள்களுக்கு எதிர்த்திக்கிற் செல்லுந் தன்மையுடையதாகையால் அச்சுவர்க்கம் தலைகீழாகியது என்றும். அம்பரம் என்னும் ஆகாயத்தில் இடம் பெற்றுத் தலைமையாய் விளங்கும் சந்திரன் பத்தில் நிற்பதைக் குறிக்கவே மறுதிக்கிற்றவம் செய்யும் போது அம்பரீடன் வந்தானென்றும் அவ்வம்பரீசனுகிய சந்திரன் அடுத்தபடியாக நீச்சம் பெற்றும் பின்னர் கலையிழந்தும் போவதைக் குறிக்கவே அவன் நரபேதம் செய்யப் புக்கனன் என்றும். அம்பரீசன் நரமேதம் செய்தல் என்னும் நீச்சமும்; கலையழிவும் எய்தினுலும் மீண்டும் கலை வளர்ச்சியும் உச்சமும் சஞ்சார கதியால் ஏற்படுமாகையால் அவனுடைய யாகப் பசுவாய் அவனுக்கு உயிர்ப் பயத்தை நீக்கினுனென்றும். கௌசிகம் என்பது சித்திரை நட்சத்திரத்திற்குப் பெயராகையால் அதிற் சந்திரா லக்கினம் கொண்டு பிறந்தவர்க்குக் கௌசிகர் என்றும் ஞானகாரகனுகிய கேது மூலத்தின் நின்றதைக் குறிக்கவே வசிட்டரைக் கொக்காகும் படி சபித்தாரென்றும் (கொக்கு என்பது மூலம்) கேதுவிற்கும். சூரியனுக்கும் எப்போதும் பகையே யாகையால் வசிட்டருக்கும் இவருக்கும் எப்போதும் பகைமை இருந்து கொண்டே இருந்ததென்றும். நிருதித்த நாளாகிய பூராடத்திற் சுக்கிரனிருக்க அதை இவர் லக்கினமாய்க் கொண்டவர் என்பதைக் குறிக்கவே இவர்தன் பெயரால் ஒருநதியுண்டாம்படி செய்தாரென்றும். இந்திர நாளாகிய கேட்டை மீனிற் புதன் நின்றமையைக் குறிக்கவே இந்திரனுடைய பசுவாகிய காமதேனு என்னும் பசு தனக்கு வசப்படாமல் போயிற்றென்றும் கூறப் பெற்றதென்றுணர்க. இதில் கேந்திரத்தில் நிற்பதால் ஏற்படும் பயன் இன்னதென்றும். கேந்திரத்தான மென்னுங் கண்டங்களில் நிற்பினும் அடுத்து நீசமுள்ளதாயின் அதன்பயன் இன்னதென்றும். அப்படிக் கண்டங்களில் நின்ற கோட்கள் கெடினும். இலக்கினத்தில் நின்ற கோட்களும் அதன் தொடர்புள்ள கோள்களும் அதன் அதன் நட்சத்திரங்களில் நின்ருல் அதன் பயன் என்னவாம் என்பதையும் நடைமுறை நிகழ்ச்சியிற் காட்டியுணர்த்திய சரித்திரத்தை யுணர்த்திய காக்க பாடினீயம் இது. இதை நன்கு உணர்பவர்கள் "உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" எனக் கூறியவாறு இதில் உடுக்கை யென்னுங் கௌசிகத்தையும். அதை இழப்பதை நீக்கும் கையின் இயலையுங் காட்டும் கேந்திரமென்னும் கையின் தரமாம் கெடியையும் இத்தன்மைப் பேற்ருல் உலகத்திற்கே மித்திரனுக விளங்கும் விச்சுவாமித்திரத் தத்துவத்தையும் காணலாம்.

Koviloor Digital Library

இதே போன்று வசிட்டருக்குப் பார்க்கும் போது இலக்கினம் மிதுனம். அதில் வியாழன், கேது, சுக்கிரன், சூரியன், நாலிற் சநி; ஏழிற் செவ்வாய்; பன்னிரண்டிற் புதன் நின்றுள்ளன. இதைக் குறிப்பிடவே தான் இவரைப் பிரம்ம ருசி யென்றும், காமதேனுவென்னும் தெய்வப் பசுவையுடையவர் என்றும், விச்சுவாமித்திரனுற் பகைக்கப் பெற்றவர் என்றும், தவமுதல்வர் என்றும், கற்பின் மேம்பட்டவளான அருந்ததியை மனைவியாகக் கொண்டவர் என்றும், கூறப் பெறுகிறது. எவ்வாறெனின் விச்சுவாமித்திரருக்கு எதிரியென்றும், பகைவர் என்றும் கூறப் பெற்றது அவருக்குள்ள கோள் நிலைக்கு ஏழாமிடத்தில் இவருடைய கோள்களெல்லாம் நிற்பதே எதிரியாயிருப்பதாம். அவ்வாறமைத்துப் பார்க்க மேற்காட்டியவாறு கோள்நிலையமைப்பு அமைவதைக் காணலாம். அதில் லக்கினுதிபதியாகிய புதன் ரோகிணி நட்சத்திரமாகிய பிரமனுளில் நின்றதால் பிரமருசி யென்றும், அந்த ராசி கோ என்னும் இடபமாகையால் தெய்வப் பசுவை உடையவர் என்றும்

"அங்கி மதிகூட வாகும் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகும் மதியொளி
அங்கி சிவத்தினிற் கூட வத்தாரகை
தங்கி யதுவே சகலமுமாமே"

என்றபடி எல்லாமும் தானுகி தானுக வேருென்றும் ஆகாத இயல்புள்ள அழலோனுகிய செவ்வாய் களத்திரத் தானத்தினின்று உச்சத் தானத்தை எட்டுந் தன்மை பெற்றிருப்பதால் மனைவி அருந்ததியாம் கற்பரசியென்றும் கூறப் பெறுவதுடன் சித்தராக இருந்து உலகியல் வாழ்க்கையை நடத்தும் வாழ் சித்துத்துவம் பெற்றவராகையால் வசிட்ட மாமுனிவர் என்றும் கூறப் பெற்றதெனவுணர்க. இதை நன்குணர்பவர்கள் கோட்கள் கேடில் தானமாகிய ஒன்று, நாலு, ஏழு பத்தில் உச்சத்தை நோக்கி நெருங்கும் வண்ணம் நிற்கப் பெற்ருல் என்ன தன்மை வாய்க்கும் என்பதை யுணர்த்துவதற்காக வமைத்த காக்கப்படு மினியனவாம் இது என்பதையும், மெய்ஞான வாழ்க்கையும், ஞானுசிரியத் தன்மையும் அடையும் வாய்ப்பைத் தரும் கோணிலை எவ்வாருய தென்பன வாதியவற்றினையும் உணரலாம்.

– சுபம் –

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

எம் ஞானத் தெளிவு குருவின் திருவடி உச்சிமேற் கொண்டு திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை - நூலைப் பற்றி ரத்தினச் சுருக்கமாக.......

தவமுதல்வர் திருஞானசம்பந்தர் நமக்கு ஆக்கி தந்த நூல் முதல் மூன்று திருமுறைகள். சுமார் ஐயாயிரத்து அறுபது ஆண்டுகளுக்குப் பின் சேடகலியின் தீங்கு நீங்கவும் உலக மக்கள் ஒளி பெற்று உய்வு பெறவும் இறைவன் கருணை கூர்ந்து எம் ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளையை தேவகோட்டையில் பிறப்பித்து சிறுபிராயம் தொட்டு இயமநியமம் கைவரப் பெற்று சிவனடியே சிந்திக்கும் திருவருளை கொடுத்து திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத்தின் சூட்சமங்களை எடுத்து இயம்பிய நூல் தான் திருமுறைப் பெருநூல் விளக்கம் ஆகும். அறம் பொருள் இன்பம் வீடுபேறடைய ஆக்கிய நூல். மீண்டும் மீண்டும் இம் மண்ணுலகில் பிறவாமல் இருக்க அதாவது பிறவிப் பெருங்கடலை நீந்த ஆக்கிய உயர்ந்த ஒப்பற்ற ஞான நூல். இந்நூல் அகில உலக கலைகள் அனைத்தையும் கோத்து நிற்கும் ஆதிநூல். நாத்திகத்தை வேரறச் செய்யும் நடுவாகிய நேரான ஞான நூல். இறைவனடி சேர ஆக்கிய இறைநூல். சோராத சுகம் காண வழி வகுக்கும் நல்வழி நூல். இறைவனை உணர வைக்கும் இறை நூல். இந்நூலின் பெருமையை எழுத என்னால் ஆகாது எனவே இந்நூலை என் சிரசின் மீது வைத்து வணங்குகின்றேன்.

ஆதிநூல், இருக்கு, அடங்கன்முறை, சுருதிநூல் என பல பெயர்களில் அழைக்கப்படும் தேவாரம் தான் திருமுறைப் பெருநூல் ஆகும். தேவாரம் என்றால் என்ன, அடங்கன்முறை என்றால் என்ன, பண் என்றால் என்ன, திருச்சிற்றம்பலம் என்றால் என்ன, பதிகம் என்றால் என்ன, ஏன் பத்து பாடல் பாட வேண்டும், கட்டளைத் திறங்கள் என்றால் என்ன, வேதம் என்றால் என்ன, துவித சித்தாந்தம் என்றால் என்ன, ரிக் வேதம் என்றால் என்ன, யசூர் வேதம் என்றால் என்ன, சாமவேதம் என்றால் என்ன, அதர்வண வேதம் என்றால் என்ன, வேதாந்தம் என்றால் என்ன, அத்துவித சித்தாந்தம் என்றால் என்ன, வேத அங்கம் ஆறு என்றால் என்ன, பண்ணிடை ஒன்பது என்றால் என்ன, வியாகரணம் என்றால் என்ன, அற்புத பதிகம் என்றால் என்ன, இயக்காய வர்க்கம் என்றால் என்ன, நாலயணம் என்றால் என்ன, வியாதர் என்றால் என்ன, மாணுக்கர்கள் விசும்பயணர் என்றால் என்ன, பயிலர் என்றால் என்ன, இசைமேனி என்றால் என்ன, சுகர் என்றால் என்ன, சுமந்து என்றால் என்ன, நிவர்த்தி கலை என்றால் என்ன, சாந்தி அதீத கலை என்றால் என்ன, சாந்தி கலை என்றால் என்ன, பிரதிஷ்டா கலை என்றால் என்ன, வித்தியா கலை என்றால் என்ன, சார்கை என்றால் என்ன, பாகை என்றால் என்ன, வேத உரு என்றால் என்ன, இயற்றமிழ் என்றால் என்ன, இசைத்தமிழ் என்றால் என்ன, நாடகத் தமிழ் என்றால் என்ன, பாஞ்சராத் திறம் என்றால் என்ன, வைகாநேயம் என்றால் என்ன, அர்த்த பாகை என்றால் என்ன, ஞானபாகை என்றால் என்ன, கர்மபாகை என்றால் என்ன, ஜோதிடம் என்றால் என்ன, அனைத்தும் தோற்றமாகிய அரா உமா அயணமாகிய இராமாயணம் என்றால் என்ன அனைத்தும் ஒடுக்கமாகிய மகாபார்அதம் ஆகிய மகாபாரதம் என்றால் என்ன, அஉம(ஓம்) என்றால் என்ன, உஅம(ஓம்) என்றால் என்ன 'ந' காரம் என்றால் என்ன, 'ம' காரம் என்றால் என்ன, 'சி' காரம் என்றால் என்ன, 'வ' காரம் என்றால் என்ன, 'ய' காரம் என்றால் என்ன, பண்தார் என்றால் என்ன, மேலும் அகில கலைகளையும் கோத்து இருக்கும் நூல் தான் தேவாரம் ஆகிய எழு தாத புத்தகத்தின் ஏட்டின் பொருளைதெருளாத கன்னி தெளிந்து இருந்து நமக்கு ஆக்கித் தந்த நூல் தான் திருமுறைப் பெருநூல் விளக்கம். தமிழ் அமிழ்தம் என்பதும் உயிருக்கு நேர் என்பதும், நாம் இசையின் உருவமதைப் பெற்று முறையாக ஐம்பூதத்தினாலும் தசவித நாதத்தாலும் ஆக்கிய கலைவை என்பதை உணர வைக்கும் உன்னத நூல். கலியின் கொடுமை தீரவும் பெரியோர்கள் ஆகிய சிவபுண்ணிய சீல மெய்யன்பர்கள் விருப்பம் நிறைவேறவும் இப்பெருநூல் இது சமயம் வெளிவர இறையருள் கூட்டி வைத்திருக்கிறது. சோதிடக் கலையை விளக்கி இருக்கும் தன்மை பகுத்து அறியும் அறிவாளிகளுக்கு சிந்தையை அடக்கி சும்மா இருந்து அம்மா பொருளை அறிய தொடங்கும் ஆரம்பமாக அமையும் இந்நூல்.

வேத வேதாந்தமாகிய ஒருவன் இறைவனை தேட முற்படும் பொழுது அவன் சிவ ராஜயோக தன்னில் நிலைத்து அனுபவிக்கும் அனுபவங்களையும் அதனால் அவன் பெறும் விளைவுகளையும் சொல்லாத சொல்லின் தன்மையை உணரும் போது ஏற்படும் விளைவுகளைகண்டு விளக்கும் அற்புத ஒப்பற்ற உன்னத உயர்ந்த ஞான நூல் தான் திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை.

புறக்கண்ணால் கண்டு விஞ்ஞானம் ஒவ்வொரு நாளும் உயர்ந்த கண்டு பிடிப்புக்களை கண்டு அனுபவித்து 'சி' என்று உதறி மேலும் மேலும் புதிய புதியவற்றைக் கண்டு அனுபவிக்கும் இந்த வேளையில் அந்த கண்டுபிடிப்புக்களால் மனிதன் அடைய வேண்டியவற்றை அடைந்து இன்பமாக இனிமையாக வாழ்கின்றானா என்றால் அது உங்களுக்கே வெளிச்சம். விஞ்ஞான வளர்ச்சியால் மனிதன் இலைமறை காய்மறை என்று நம் முன்னோர்கள் பின்பற்றிய பண்பாட்டை விட்டு விட்டு இயற்கை போதிக்கும் பாடத்தை அறிய முடியாதவனாய் அந்த அந்த பருவத்தில் அடைய வேண்டிய அடைவுகளை அடைய முடியாமல் விஞ்ஞான வளர்ச்சியால் பார்க்க கூடாதவற்றை பார்த்து பேசக் கூடாதவற்றை பேசி தன் வாழ்நாளில் பூவாகி பிஞ்சாகி காயாகி கனியாமல் காயில் வெம்பி விழுந்து நொந்து வாழ முடியாமல் ஏங்கித் தவிக்கின்றான் இன்றைய இளைஞன். பெரியோர்கள் நம் பண்பாட்டை புகுத்தவும் கடைபிடிக்கவும் மறந்தும் மறுத்தும் போகிறார்கள். அதன் விளைவு தான் இன்றைய இளைய சமுதாயம் சிந்திக்க ஆற்றல் இல்லாமல் எதை எதையோ சாதித்து விட்டோம் என ஏமாந்து நிற்கிறது. சிந்திக்க வேண்டியது என்ன மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டிய வழி எது அதற்கு துணையாக இருப்பது எது. எதை துணையாக கொள்ள வேண்டும். 'அ'ன என்ற சொல்லில் 'ன' வாக இறைவன் சொற்றுணை வேதியனாக காட்சி அளிக்கின்றார். இறைவன் நம்மிடம் உள்ளூறு சோதியாக இருப்பதை அறியத்தான் ஆக்கிய உன்னத உயர்வான மெய்ஞான நூல் திருமுறைப் பெருநூல் விளக்கம். அகக் கண்ணால் ஆராய முற்பட்டு அதன் விளைவாக ஏற்படும் ஆகாயத்தை அறியச் செய்யும் அற்புத நூல்.

நூலின் முன்னுரை கந்தர் சஷ்டி முதல் நாள் தொடங்கி கந்தர் சஷ்டி சூர சம்ஹாரம் நடந்து நிறைவான நன்னாளின் சற்குரு முருகன் திருஅருளால் நூலைப் பற்றியும் எழுதி நிறைவு செய்யும் பாக்கியத்தை எனக்கு அருளியதை எண்ணி எண்ணி அக மகிழ்கின்றேன்.

நம் மூல முதல் குரு திருமூலர்

நான் பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடி
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே

என்கிறார். மூல முதல் குரு வழிவந்த எம் ஞானத் தெளிவு குரு உலக மக்கள் அனைவரும் பேரின்ப பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற கருணையினால் திருமுறைப் பெருநூல் ஆக்கி தந்திருக்கிறார்கள். இந்நூலை ஓதினால் உயர்நலங்களைஇம்மையில் பெற்று மறுமையில் பேரின்ப பெருவாழ்வு அடைவார்கள் என்பது திண்ணம் என எழுதி நிறைவு செய்கின்றோம்.

இங்ஙனம்

அடியார்க்கு அடியேன் **இராம. ஆதிரெத்தினம்**

முத்தமிழ் வேதத் திருச்சபை இணைச் செயலாளர்